


# பெரியார் களஞ்சியம்





# பெரியார் களஞ்சியம்

## முதல் தொகுதி

தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்களது
கட்டுரைகள், பேச்சுகளின் தொகுப்பு

# கடவுள்

## (1)

*தொகுப்பாசிரியர்:*

**கி. வீரமணி** எம்.ஏ.,பி.எல்.,

கீழைக்காற்று வெளியீட்டகம்
10, ஔலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை-600 002.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு
சென்னை - 600 007.

முதற் பதிப்பு - 1977
அய்ந்தாம் பதிப்பு - 1998
© பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்

SELECTIONS FROM THE
SPEECHES AND WRITINGS OF
**Thanthai Periyar E.V. Ramasami**

**Volume One**
**On God-1**

Compiled by:
***K. Veeramani*** M.A., B.L.,

Publicatoin of
**The Periyar Self-Respect Propaganda Institution**
"Periyar Thidal"
50, E.V.K. Sampath Salai, Vepery,
Chennai - 600 007

*நன்கொடை (குறைந்த அளவு)* ரூ. 45/-

*ஒளி அச்சு:*
பெரியார் கணினி ஆய்வுக் கல்வியகம்
*அச்சிட்டோர்*
'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,
'பெரியார் திடல்'
50, ஈ.வெ.கி. சம்பத் சாலை,
சென்னை - 600 007.

# பொருளடக்கம்


1. கும்பாபிஷேகத்தின் ரகசியம் .......... 3
2. சுவாமிகளும் தேவடியாள்களும் .......... 6
3. பார்வதிக்கும் பரமசிவனுக்கும் .......... 10
4. சாமியும், சமயமும் .......... 12
5. பிள்ளையார் .......... 22
6. சுப்பிரமணியனது பிறப்பு .......... 27
7. புண்ணிய ஸ்தலங்கள் .......... 30
8. காந்தியும் கடவுளும் .......... 42
9. கடவுள் .......... 50
10. பெண்களை விபசாரிகளாய் படைத்த கடவுள் .......... 57
11. விரதப்புரட்டு .......... 60
12. தமிழனுக்கு கடவுள் உண்டா? .......... 63
13. கடவுள் கருணை .......... 68
14. அர்ச்சகர்-ஜோசியர் சம்பாஷணை .......... 75
15. இலங்கை உபன்யாசம் .......... 78
16. சுயமரியாதைக்காரனுக்கும், புராண .......... 86
17. கடவுள் .......... 91
18. கடவுள் என்ன சமாதானம்? .......... 93
19. சுயமரியாதைக்காரன் கடவுளைப்பற்றி பேசுவதேன? .......... 97
20. கடவுள் சக்தி விதண்டாவாதம் .......... 102
21. பிரார்த்தனை .......... 104
22. மிருகமும், பட்சியும், மலமும் கடவுளா? .......... 107
23. கடவுள் .......... 111
24. கடவுளால் என்ன பயன்? .......... 120
25. கடவுளால் ஏற்பட்ட பலன் .......... 125
26. ஆரியர் கடவுள்கள் .......... 134
27. ஒரு யுக்தி ஆராய்ச்சி .......... 139
28. அறிஞர்களே, ஆராய்ந்து பாருங்கள்! .......... 141
29. நாம் விரும்பும் தன்மை .......... 143
30. கடவுளை மறுக்கத் துணியவேண்டும் .......... 148
31. எது நாஸ்திகம்? .......... 152

32. ஆத்மா நம்பிக்கை ஒழிந்தால்........................ 160
33. வேதமும், தெய்வங்களும் ........................ 163
34. பிள்ளையார் உடைப்பு........................ 168
35. ஒழுக்கமில்லாக் கடவுள்கள் ........................ 171
36. கடவுள்கள் யோக்கியதை........................ 175
37. கடவுளை ஒழிக்கவேண்டுமானால்........................ 178
38. அறிவுக்கு ஒவ்வாத கடவுள் ஏன்? ........................ 183
39. கடவுளை நம்ப முட்டாளே போதும் ........................ 187
40. கடவுள், மதம், சாதி- ........................ 191
41. சிவன், பிரம்மா, விஷ்ணு........................ 196
42. கடவுளை மறுக்க அறிவு ஆராய்ச்சி தேவை ........................ 202
43. நமது கடவுள்கள் இறக்குமதி சரக்கே ........................ 206
44. சாதியை ஒழிக்க கடவுளை ஒழி!........................ 215
45. கடவுள் குழப்பம் ........................ 217
46. நம் கடவுள்-மதம் எதற்கு? ........................ 221
47. கடவுளும், கடவுள் தன்மையும் ........................ 225
48. எல்லாம் கடவுள் செயலா? ........................ 232
49. பக்தி ........................ 235
50. இது காட்டுமிராண்டிகளின் கடவுள்கள் ........................ 238
51. இறப்பும்-பிறப்பும் மனிதர் செயலா? ........................ 240
52. பகுத்தறிவின் முதல் எதிரி கடவுள் ........................ 242
53. கடவுள் நம்பிக்கை உண்டாக்கப்பட்ட விதம்........................ 251
54. மனிதனே சிந்தித்துப் பார்!........................ 259
55. கடவுள் நெறி ........................ 261
56. கடவுள் என்பது ஒரு பொருளா? ........................ 264
57. இன்றைய கடவுள் பட பிரச்சினை ........................ 268
58. இந்து மதத்திற்கு கடவுள் உண்டா? ........................ 269
59. மனிதன் எதற்காக கடவுளை வணங்குகிறான்........................ 271
60. கடவுளும், அரசனும், ஜனநாயகமும் ........................ 275
61. கடவுள் நம்பிக்கைக்காரர்கள்பற்றிய என் கருத்து........................ 278
62. கடவுள்களின் நாச வேலைகள் ........................ 281
63. ஒன்றை மனத்தில் வையுங்கள் ........................ 284
64. பகுத்தறிவுவாதியின் கொள்கை ........................ 287

# புகுமுன்...!

இருபதாம் நூற்றாண்டு கண்ட இணையற்ற சுயசிந்தனையாளர் (Original thinker) தந்தை பெரியார் அவர்கள் என்ற மகத்தான உண்மையைப் புரிந்து கொள்ளாத படித்த பாமரர்கள் இன்னமும் ஏராளம் இருக்கின்றனர்!

தந்தை பெரியார் அவர்களை 'தமிழகத்தின் முதல் பேராசிரியர்' என்று மிகப் பொருத்தமாகக் குறிப்பிட்டார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

'உயர் எண்ணங்கள் மலரும் சோலை' என்று குறிப்பிட்டதோடு நிற்காமல், (அய்யா) 'மண்டைச்சுரப்பை உலகு தொழும்' என்றும் தெளிவாக அறிவித்தார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்!

உலகம் எத்தனையோ தத்துவ வித்தகர்களையும், உயர்ந்த சிந்தனையாளர்களையும் கண்டு இருக்கிறது என்றாலும், தந்தை பெரியார் அவர்களது சிந்தனை, 'மின்மினிப் பூச்சி' அல்ல! பட்டை தீட்டப்பட்ட செயற்கை வைரம் அல்ல! வைரம் பாய்ந்த சிந்தனை!

ஒருமுறை, காலஞ் சென்ற ஜஸ்டிஸ் ஏ.எஸ்.பி. அய்யர் I.C.S., தந்தை பெரியார் அவர்களது கூட்டத்திற்கு சட்டக் கல்லூரியில் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார். "ஆசியாவில் உள்ளவர்கள் மேற்கோள் காட்டித்தான் எழுதுவர், பேசுவர் என்று சொன்னார் பெர்ட்ரண்ட் ரசல். எனக்குத் தெரிந்தவரை, மேற்கோள் என்ற 'சாய்காலில்' நிற்காமல், சொந்தமாக கருத்துகளை எடுத்துச் சொல்லுவது பெரியார் ஒருவர்தான்" என்று நூற்றுக்கு நூறு எவரும் மறுக்க முடியாத உண்மை அது!

நூற்றுக்கு நூறு எவரும் மறுக்க முடியாத உண்மை அது!

தந்தை பெரியார் அவர்கள் கூட்டங்களில் குறளைச் சுட்டிக் காட்டும் போதுகூட, "திருக்குறளில் இருக்கிறது என்பதற்காக நான் இதைக் கூறவில்லை; நான் கூறுகிற கருத்து திருக்குறளிலும் இருக்கிறது என்ற ஒப்புவமைக்காகத்தான் கூறினேனே தவிர வேறில்லை" என்பார்கள்!

தந்தை பெரியார் அவர்களது கடல் போன்ற சிந்தனையை இவ்வையம் தெளிவாகப் புரிந்து கொள்ளும் நாள் எந்த நாளோ என்று ஏங்கினால் மட்டும் போதாது; அதற்கு நாம் துணிந்து ஆக்கரீதியாக பணிபுரிய வேண்டும் என்ற எண்ணத்துடன் "பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்" என்ற தந்தை பெரியார் அறக்கட்டளை செயல்பட்டதன் விளைவே "பெரியார் களஞ்சியம்" என்ற, காலவெள்ளத்தால் கவர்ந்து செல்லப்பட முடியாத கருத்துக் கருவூலமாக இந்நூல் மலர்ந்துள்ளது!

தந்தை பெரியார் அவர்கள் சிந்தனை நுழையாத துறைகளே இல்லை. எனவே தான், அவர்கள் மனித சமுதாயத்திற்கு சிந்தனை செல்வத்தை மாரி என வாரி வாரி வழங்குவதில் தமது வாழ்நாளைச் செலவிட்டார்கள்!

பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி என்ற வாய்ப்புகள் தந்தை பெரியார் அவர்களுக்குக் கிட்டாதது மனித குலத்திற்கு ஒரு மாபெரும் வாய்ப்பாக அமைந்தது! அதனால்தான் அய்யா அவர்கள் பகுத்தறிவுப் பகலவனாக விளங்க முடிந்தது!

அவர்களுக்கே உரிய தன்னடக்கத்துடன் ஒரு முறை, 'நான் பேச்சாளனும் அல்ல, எழுத்தாளனும் அல்ல, கருத்தாளன்' என்று குறிப்பிட்டார்கள்!

அய்யாவின் சிந்தனைகள், இனிவரும் உலகம் எப்படி இருக்கும் என்பதை தனது சிந்தனையில் அளந்து காட்டிய அற்புதம்,

தமிழ் மொழி - எழுத்துச் சீர்திருத்தம் பற்றி கூறிய அரிய அறிவுரை,

பெண் ஏன் அடிமையானாள்? என்று கேள்வி போட்டு விடை தொகுத்த முறை.

திருமணம் என்பது இனி எதிர்காலத்தில் கிரிமினல் குற்றமாகும் என்று ஆய்ந்து தேர்ந்து கூறிய கருத்துகள், அய்யாவின் சிந்தனைக் களஞ்சியத்தின் சில பொறுக்குமணிகள்தான்!

ஒய்வறியாத உழைப்பு - ஒப்புவமை இலாத சிந்தனை - உண்மைகளை அஞ்சாது வெளியிடும் துணிவு - தன்னலம் புகாத தன்னேரிலாத பொதுத் தொண்டு - இந்நான்கின் பெயர்தான் 'பெரியார்' என்பது!

அத்தகைய அறிவுக் கருவூலம் தந்த அறிவு ஆசானின் அரிய கருத்துகள் உங்கள் கரங்களில் களஞ்சியமாகத் திகழுகிறது!

மற்ற களஞ்சியங்கள் எடுக்க எடுக்கக் குறையும்; இந்தக் களஞ்சியமோ படிக்க படிக்க நம் அறிவை வளர்க்கும்.

இது முதல் தொகுதி; இன்னும் வர வேண்டிய தொகுதிகள் எத்தனை எத்தனையோ!

தந்தை பெரியார் அவர்களின் பேச்சுகள், கட்டுரைகள் இடம் பெற்ற 'குடிஅரசு', 'பகுத்தறிவு', 'விடுதலை', 'உண்மை' ஆகிய ஏடுகளிலிருந்து கால வரிசைப்படி (Chronologically) 'கடவுள்' என்ற தலைப்புக்குப் பொருத்தமானவை மட்டும் திரட்டித் தரப்பட்டுள்ளது.

குழப்பத்தின் குழந்தையாம் கடவுள் என்ற கற்பனை, உலகம் தோன்றிய பின்னர் பிறந்த மூத்த மூடநம்பிக்கையாகும். அந்த அறியாமைக் குப்பையை தனது அறிவுச்சுடரால் எப்படி சுட்டெரிக்கிறார் தந்தை பெரியார் என்பதை இத்தொகுதி விளக்குவதாக அமைந்துள்ளது.

சென்னை
20.12.77

கி. வீரமணி
தொகுப்பாசிரியர்

# 1. கும்பாபிஷேகத்தின் ரகசியம்

(குருக்கள், பார்ப்பனர்கள் சம்பாஷணை)

**நடேசக் குருக்கள்:** ஏண்டா சுப்பா, இந்த 4, 5 மாதமாய் நம்ம கோயிலுக்கு அபிஷேகம் வர்றதில்லை; பிரார்த்தனை வர்றதில்லை; முன்னைப்போல அதிக ஜனங்கள் அர்ச்சனை செய்ய வர்றதில்லையே, என்ன சங்கதி?

**சுப்புக் குருக்கள்:** சங்கதியா! சங்கதி ஈரோட்டிலே ராமசாமி நாயக்கன் இருக்கான் அல்ல, அவன் 'குடிஅரசு' எண்ணு ஒரு பேப்பர் போட்றான்; அதில் சும்மா இதையே எழுதுறான். பாப்பானுக்கு பணம் கொடுக்காதே; பாப்பான் காலில் விழாதே; பாப்பானைக் கொண்டு சடங்கு செய்யாதே; கோயிலுக்குப் போனால் நீயாகவே சாமி கும்பிட்டு விட்டு வந்துடு; பாப்பானை தேய்காய் பழம் ஒடைக்கச் சொல்லாதே; அவன் தீ பார்த்தனை காட்ட நீ கும்பிடாதே; அவன்கிட்ட பிரசாதம் வாங்காதே என்று இப்படியெல்லாம் எழுதியும், போற பக்கம் எல்லாம் பேசியும் நம்ம தலையில் கைவெச்சுகிட்டு வர்றான். அவன் பேச்சைக் கேட்டுக்கிட்டு இந்த சூத்திரன்கள் தானே வர்றது; தானே கும்பிடறது; பேசாமல் போயிடறது, இப்படி பண்ணுராங்கடான்னா.

**நடேசக் குருக்கள்:** அப்படியா! அடடா! அவனுக்கு என்ன கேடு வந்தது? அவப்பா ரொம்ப பிராமண விசுவாசியாச்சுதே! எத்தனை சமாராதனை, எத்தனை கோயில், எத்தனை சத்திரம், சாவிடி, தண்ணிப் பந்தல், உச்சவம், உபநயனம், கல்யாணம் இதெல்லாம் செய்திருக்க, அப்படிப்பட்ட வயிற்றில் இப்படி பிள்ளையா பிறக்கனும்? அய்யய்யோ! கர்மம் உடுமா? அவன் இன்னம் கொஞ்சநாளில் என்ன கெதி ஆகப் போறான் எண்ணு பாரு. முன்னே மூணு நாலு தரம் ஜெயிலுக்குப் போயிம் அவனுக்குப் புத்தி வல்ல; இப்ப சீக்கிரத்தில் ஜெயிலுக்குப் போகப் போறானா இல்லையா எண்ணு பார்த்துகிட்டு இரு. ராஜத்து வேஷம், பிராமண துவேஷம் யாரை



சும்மா விட்டது, இவனை விடுறதுக்கு? ஆனாலும், இதனாலே இப்ப நமக்கு இந்த 2, 3 மாசமாய் சுத்தமா வரும்படி இல்லையே; அதுக்கென்ன பண்ணறது? இப்ப வரவர தெவசத்துக்குக்கூட எந்த சூத்திரனும் நம்மைக் கூப்பிடறது இல்லை; நமக்கு முன்னையெல்லாம் ஒரு இடை இழுத்துவிட்டு அரிசி, பருப்பு, காசு எவ்வளவு தாராளமாகக் குடுப்பாங்கோ, இப்ப அதுகூட இல்லையே; இதென்ன சங்கதி? இந்த வருஷம் பிராமணன் மேலே சங்கராந்தி வந்துட்டதா என்ன? ஒண்ணும் தெரியவில்லையே!

***சுப்புக் குருக்கள்:*** வரும்படியைப் பத்தி கவலைப்படாதே, நான் ஒரு வழி சொல்லுறேன்; அப்படிக் கேக்கறையா?

***நடேசக் குருக்கள்:*** சொல்லித் தொலையப்பா! சோத்துக்கில்லாத பார்ப்பான் சொன்னபடி எல்லாங் கேப்பான் எண்ணு நீ கேட்ட தில்லையா? சொல்லு, சொல்லு!

***சுப்புக் குருக்கள்:*** சொல்லுகிறேன், வெளியில் சொல்லாதே!

***நடேசக் குருக்கள்:*** இது வேறே கர்மமா? நான்தான் சுத்த சுத்தமா சோத்துக்கு சாகறேன்; இன்ன இதை வெளியில் சொல்றது வேறையா? கொஞ்சம் சொல்லப்பா சட்டுண்ணு!

***சுப்புக் குருக்கள்:*** சுத்தியுமுத்தியும் பார்த்துக்கோ, ஆராவது வந்து டப் போறாங்கோ!

***நடேசக் குருக்கள்:*** ஒருத்தரும் இல்லை; சொல்லித் தொலை!

***சுப்புக் குருக்கள்:*** அது என்னான்னாக்கா, கோயிலில் சாமி இருக்குதல்ல, அதை ஆட்டிப் பிடுங்கி, கீழே தள்ளி படுக்க வெச்சிடு; காத்தாலெ கோயிலைப் போய் நீ பாத்ததாகவும், 'கோயில் கதவு ஒடச்சி எவனோ உள்ளே போயி சாமியை ஆட்டி கீழே தள்ளிப் போட்டு, அதிலே இருந்த தங்கம்,



வெள்ளி, நவரத்னமெல்லாம் எவனோ எடுத்துக்கிட்டுப் போயிட்டான்; கும்பாபிஷேகம் பண்ணவேணும், இல்லாவிட்டால் ஊருக்கு ஆகாது; தர்மகர்த்தாவுக்கு தோஷம்; கமிட்டியாருக்கு பாவம்!'' அப்படிண்ணு சொல்லிப் போடு; கமிட்டியார் கும்பாபிஷேகம் பண்ற வரைக்கும் சாமிக்குக் கீழே போட்டு இருந்த தங்கம், வெள்ளிக்காசு, நவரத்னம்

இதை வித்து சாப்பிட்டுகிட்டு இரு; இது தெரியாத உனக்கு?

**நடேசக் குருக்கள்:** இது நல்ல யோசனை தான்! நானும் இதற்கு முன்னாலேயே சாமியை ஆட்டித் தள்ளி, அதுக்குக் கீழே இருந்ததை எடுத்துக்கிட்டு, சாமியை சும்மாதான் நிக்கவச்சி இருக்கிறேன்; அர்ச்சனை பண்ற பூ பெலமா சாமி மேலே பட்டாலே சாமி ஆடும்! அது மாத்தரமா? எங்க கோயிலில் இருக்கிற எந்த சாமியைத் தொட்டாலும் சட்டுண்ணு படுத்துக்கும்! எல்லாம் ஆட்டிப் பிடுங்கி, அதிலிருந்ததை முன்னையே எடுத்துத் திண்ணு போட்டோம். ஆனதினாலே சாமியை பாடுபட்டு ஆட்டி கீழே தள்ள வேண்டியதில்லை; தொட்டால் போதும், தானே கீழே விளுந்துடும்!

**சுப்புக் குருக்கள்:** அப்படியானாக்கா, இன்னைக்கு ராத்திரியே சாமியை தள்ளிப்போடு; இருட்டு காலம் தானே, யாரு பாப்பாங்கோ! கும்பாபிஷேகம் பண்ணினாக்க உனக்கும் கிடைக்கும், எனக்கும் கிடைக்கும், இன்னம் மத்த பிராமணாளுக்கும் தச்சனை, வேட்டி, சமாராதனை இதெல்லாம் கிடைக்கும். ஒரு வாரம் எப்படியும் தாட்டிக்கிலாம். தச்சனை, வேட்டி, குடம், சொம்பு முதலானதும் மாசக்கணக்கா வரும். அப்பரம் இதை மாதிரி ஒவ்வொரு ஊரிலேயும் பண்ணச் சொன்னாக்க இந்த வருஷத்து சங்கதி முடிஞ்சுபோகும்; மேலைக்கு பாத்துக்கலாம். அதுக்குள்ளே அவனும் ஜெயிலுக்கு போய்ட்டாக்க மத்தவனுங்கொ இந்த புத்தி வுட்டுடுவானுங்கோ.

**நடேசக் குருக்கள்:** சரி சரி, ராத்திரிக்குப் போய் தள்ளிப் போட்டே வந்துடுறேன்; நீ எங்கயும் போயிடாதே; தருமகர்த்தா கிட்ட சொன்ன உடனே அவன் ஒரு முட்டாளு ஆனதினாலே கும்பாபிஷேகம் உடனே பண்ண வேணும் எண்ணு சொல்ற தர்மகர்த்தா, அவன் உடனே ஏற்பாடு பண்ணராப்லெ இருந்தா உடனே உன்னை வந்து கூப்பிடுறேன் தெரியுமா!



**சுப்புக் குருக்கள்:** ஆமா, ஆமா, உங்க தர்ம கர்த்தாகூட ஒரு பயித்தியக்காரன்

தான். அவனுக்கு சும்மா மேலும் கீழும் சாம்பலைப் பூசத்தான் தெரியும். அரகரா சிவசிவ எங்கத்தான் தெரியும். மத்தபடி நீ சொல்லரதுதான் வேதவாக்கு. உடனே செய் வான். நானும் சத்திரத்திலேயே படுத்திருக்கிறேன். காலமே நேரத்திலேயே வந்து சொல்லு தெரியுமா!

**நடேசக் குருக்கள்:** சரி போயிட்டு வா; நீ நல்லா இருக்கணும். நல்ல கஷ்ட காலத்திலே சரியான யோசனை சொன்னே; சரி, சரி.

*(சித்திரபுத்திரன் எனும் புனைபெயரில் 29.5.1927 ''குடிஅரசு'' இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது).*

# 2. சுவாமிகளும் தேவடியாள்களும்

நமது நாட்டில் உள்ள எல்லா கெட்ட காரியங்களுக்கும் ''நமது நாட்டு கடவுள்''களே வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். அதாவது சூது, வாது, வஞ்சகம், பொய், புரட்டு, திருட்டு, விபச்சாரம், குடி, கூத்தி, கொலை, ஜீவ இம்சை முதலிய எந்த கெட்ட தொழிலை எடுத்துக் கொண்டாலும் சில கடவுள்களிடத் தில் இவை யாவும் மொத்தமாகவும், சில சில கடவுள்களிடத்தில் தனித்தனியாகவும், சில்லறையாகவும் ஏற்படுத்தப்பட்டிருப்ப தைப் பார்த்து வருகிறோம். இதே குணங்கள் நமது கடவுள்க ளுக்கு இருப்பதாக நாமே தினப்படியும், மாதப்படியும், வருஷப் படியும் காலக்ஷேப மூலமாகவும், நடிப்பு மூலமாகவும், பூஜை மூலமாகவும், பஜனை மூலமாகவும், திருவிழாக்கள் மூலமாகவும் நடத்திக் காட்டிக் கொண்டும் வருகிறோம். இவைகளுக்காகவே நமது பெரியவர்களும் ஏராளமான சொத்துக்களையும் விட்டு இவைகள் தவறாமல் நடந்துவரச் செய்திருக்கிறார்கள். தற்கால தர்ம பரிபாலனம் என்பதும் பெரும்பாலும் இக்காரியங்களைப் பரிபாலனம் பண்ணுகிறவைகளாகவே இருக் கின்றன.



இந்த நிலையில் ஏற்படுத்திய கடவுளை வணங்கும் மக்களுக்கு ஒழுக்கம் எப்படி உண்டாகக் கூடும்? இம்மாதிரியான தர்மங் களை பரிபாலனம் செய்யும் மக்கள் எப்படி ஒழுக்கமாக இருக்க முடியும்? கடவுள்களும், கடவுள்களைப்பற்றிய கதைகளும், புராணங்

களும் மற்றும் அது சம்பந்தமான நடவடிக்கைகளும் மக்களுக்கு அறிவையும் ஒழுக்கத்தையும் உண்டாக்குவ தற்கு உண்டாக்கப்பட்டனவேயன்றி இம்மாதிரி பலன்க ளுக்கு உண்டாக்கப்பட்டதாக யாரும் ஒப்புக் கொள்ள முடியாது.

மேற்கண்ட அநேகவிதமான ஒழுக்கக் குறைவுகள் கடவுள் பெயரால் நடப்பவைகளுள் இதுசமயம் சுவாமி யின் பெயரால் பெண்களுக்கு விபசாரித்தனத்திற்கு அனு மதிச் சீட்டு (பொட்டுக் கட்டுதல்) என்னும் லைசென்ஸ் கொடுக்கப்படுவதைப்பற்றி மாத்திரம் இவ்வியாசத்தில் எடுத்துக் கொள்ளுவோம். கோயில்களுக்கு தாசிகள் என் னும் விலைமாதர்கள் எதற்காக வேண்டும்? மேளமடித் தல், மணியடித்தல் முதலிய காரியங்கள் எதற்காக பூசைக்கு உபயோகப்படுகிறது என்று யாராவது கேட் டால், சுவாமிக்கு தீ பாராதனை ஆகும்போது வேறு சப்தங்கள் காதில் விழாமல் இருக்கும் பொருட்டு மணிச் சப்தங்களும் மேளவாத்தியங்களும் செய்யப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியோ, தப்போ அதைப்பற்றி நாம் இப்போது விவரிக்க வரவில்லை. வேறு சப்தங்கள் காதில் படாமல் இருப்பதற்கு மணியும் மேளமும் வைத்திருப்பதானால் விலைமாதர்களான விபச் சார ஸ்திரீகளை கோயிலில் நிறுத்தி இருப்பதன் காரணம் என்ன? என்று இந்த முறையில் யோசிப்போமானால் சுவாமி தீபாராதனையின்போது பக்தர்களுக்கு வேறு சாமான் கண்களில் படாமல் இருப்பதற்கு இந்த சாமான் களை (விபச்சாரிகளை) நிறுத்தி வைத்திருப்பதாகத்தான் கொள்ள வேண்டும். இதை யாராவது அறிவாளிகளின் வேலையென்று சொல்லக் கூடுமா?

நமது நாட்டில் விபச்சாரத்திற்காக பொட்டுக் கட்டிக் கொள்ளும் தாசிகள் எல்லோரும் ஒவ் வொரு சுவாமியின் பெயரால்தான் தங்களைப் பொதுமகள் என்று முடிவு கட்டி விளம்பரப்படுத்திக் கொள்ளுகி றார்களேயல்லாமல், வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வழி இல்லாததால் இந்த வியாபாரத்திற்குப் போகிறேன் என்று யாரும் சொல்வதே இல்லை.



இந்த மாதிரி அனுமதிச்சீட்டு கொடுக்கும் கடவுள் வேறு எந்த மதத்திலாவது இருக்கிறதா என்பதை யோசித்துப் பார்த்தால் நமது அறியாமையும் நமது கடவுள்களுக்கு நாம் செய்யும் இழிவும் புலப்படாமல் போகாது.

தவிர, வேறு விவகார முறையில் பேசுவதானாலும் அதாவது, கடவுளுக்குப் பணி செய்ய இவர்கள் கோயிலில் நியமிக்கப்படுகிறார்கள் என்று சொல்வதானாலும், இருந்திருந்து கடவுளுக்கு பணி செய்ய இந்த வியாபாரத்தில் ஈடுபட்டவர்களைத்தானா நியமிக்க வேண்டும்; வேறு யோக்கியமான தொழிலில் உள்ள பெண் மக்கள் உங்கள் சமூகத்தில் இல்லையா என்று யாராவது கேட்டால் அதற்கு இவர்கள் என்ன பதில் சொல்லக்கூடும்? இம்மாதிரி ஒவ்வொரு முக்கிய கோயிலிலும் பூசை காலத்தில் 10, 20, 30, சில கோயில்களில் 100, 150 வீதம் விபச்சாரப் பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொண்டு, கோயிலுக்குத் தரிசனத்திற்காக வரும் பக்தர்கள் முன்னிலையில் நடமாடினால் அந்த பக்தர்களின் கதி என்ன ஆவது? கிராமாந்தரங்களில் எந்தக் கோயிலில் பார்த்தாலும் உள்ளதுக்குள் நன்றாய் கொஞ்சம் அழகாய் இருக்கிற தாசிகள் முதலாவது தர்மகர்த்தாவுக்கு அல்லது அவர்கள் மக்களுக்கு, அதற்கடுத்ததுதான் கோயிலுக்கு வரும் ப்க்தர்களுக்கு என்பதாக்வே வழக்கமாயிருக்கிறது.

கிராமாந்தரங்களில் உள்ள கோயில்களின் கதி இப்படியென்றால் சில பெரிய பட்டணங்களிலும், முக்கிய ஸ்தலங்களிலும் உள்ள கோயில்களின் சங்கதி கேட்க வேண்டியதில்லை. விசேஷ ஸ்தலங்களில் உள்ள கோயில்களின் தாசிக்கு பெரும்பான்மையும் அந்தந்த கோயில் அர்ச்சகர்கள் முதலியவர்களே தரகர்களாகி விடுகிறார்கள். அவர்கள், சுவாமிக்கும் நமக்கும் இடையில் எப்படி தரகர்களாயிருக்கின்றார்களோ அதுபோலவே இந்த 'அம்மன்'களுக்கும் நமக்கும் தரகர்களாயிருந்து கொண்டு யாத்திரைக்கார வாலிபர்களைப் பாழாக்கி விடுகிறார்கள். சுவாமி



பக்திக்காக கோயில்களுக்குப் போகும் பக்தர்கள் நாளா வட்டமாய் பழகி தாசி பக்தர்களாகி விடுவதை நாம் எத்தனையோ பார்த்திருக்கிறோம்.

இந்த அநாகரிகமும் கெடுதியுமான காரியங்கள் மதத்தின் பெயராலும், சுவாமியின் பெயராலும் நடைபெறுவதானது நமது சமூகத்திற்கே இழிவு என்று சொல்லாமலிருக்க

முடியவில்லை. ''சாஸ்திரங்களிலிருக்கிறது, அதற்கு நாம் என்ன செய்வது'' என்று சிலர் சொல்லலாம். 'வெகு காலமாய் வழக்கத்தில் வந்துவிட்டது. அதற்கு நாம் என்ன செய்வது'' என்று சிலர் சொல்லலாம். இதெல்லாம் முட்டாள்தனமான சமாதானமாகுமே தவிர அறிவுள்ள சமாதானமாகாது. நம்மு டைய சாஸ்திரத்தில் இல்லாத அயோக்கியத்தனம் உலகத்தில் ஒன்றுகூட இல்லை என்பதாக நம்மால் மெய்ப்பிக்கலாம். அதையெல்லாம் இன்றைய தினம் நாம் செய்வதென்றால் நம்மைப் போல மூடர்கள் உலகத்திலிருக்கவே முடியாது. அந்த சாஸ்திரங்கள் என்பவைகளை எழுதினவர்கள் யார்? அவர்களுக் கும் நமக்கும் என்ன சம்பந்தம்? எதற்காக இப்படியெல்லாம் எழுதினார்கள்? இம்மாதிரி வேறு தேசத்தில், வேறு மதத்தில், வேறு சாஸ்திரத்தில் எங்கேயாவது இருக்கிறதா? என்பவைகளை யோசித்துப் பார்த்து பிறகு இவற்றை கவனிக்க வேண்டுமேயல் லாமல், எவனோ தனக்கு தொழில் வேண்டும். வயிற்றுப் பிழைப்பு நடக்க வேண்டும் என்பதாக ஏதாவது ஒன்றை எழுதி வைத்து நமக்குக் காட்டினால் அதுவே நமக்கு கடவுள் வாக்காகி விடுமா அல்லது ஆதாரமாகி விடுமா? மனிதனுக்கு பகுத்தறிவு எதற்காக இருக்கிறது? இப்பொழுது வர வர அநேக கோயில்க ளில் இந்த தாசி வழக்கத்தை எடுத்தாகி விட்டது.

உதாரணமாக, மைசூர் கவர்ன்மெண்டார் தங்கள் ஆட்சிக்குட் பட்ட கோயில்களுக்கு எங்கும் தாசி உத்தியோகம் இருக்கக் கூடாது என்பதாக ஒரு உத்தரவு போட்டு தங்கள் சாமிகளை விபச்சாரத்தனத்திலிருந்து மீட்டு விட்டார்கள். அதன் மூலம் அந்த சமஸ்தானத்துக் கோயில் தாசிகள் எல்லாம் நீக்கப்பட்டாய் விட்டது. மைசூர் சமஸ்தானத்து சுவாமிகளுக்கு வெட்கம் வந்து தங்களுக்கு இனிமேல் தாசிகள் வேண்டியதில்லை என்று அந்த கவர்ன்மெண்டுக்கு சொல்லிவிட்டதுபோல நமது நாட்டு சுவாமி களுக்கும் என்றைக்காவது வெட்கம் வந்தோ அல்லது கிழப்பரு வம் வந்தோ, இனிமேல் தங்களுக்கு தாசிகள் வேண்டியதில்லை என்று தேவஸ்தான போர்டாரிடமாவது, கமிட்டியாரிடமாவது, தர்மகர்த்தாக்களிடமாவது சொல்லிவிடக் கூடாதா என்பதாக நமது நாட்டு சாமிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.



*(சித்திரபுத்திரன் எனும் புனைபெயரில் 4.9.1927 'குடி அரசு' இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது)*

# 3. பார்வதிக்கும் பரமசிவனுக்கும் சம்பாஷணை

*பார்வதி:* எனது பிராணநாதனாகிய ஓ, சிவபெருமானே! ஆகாயத்தில் பறக்கின்ற கெருடன் என்கின்ற பட்சியைப் பார்த்து பலர் காலையிலும் மாலையிலும் கன்னங்கன்னமாய்ப் போட்டுக் கொள்ளுகின்றார்களே; அது எதற்காக நாதா?

*பரமசிவன்:* கண்மணி! இது உனக்குத் தெரியாதா? கருடன் நமது அடிமையாகிய மகாவிஷ்ணுவுக்கு வாகனமல்லவா? அதனால் விஷ்ணு பக்தர்களில் சிலர் கருடனைக் கண்டால் கன்னத்திலடித்துக் கொள்ளுகிறார்கள்.

*பார்:* ஓஹோ அப்படியா சங்கதி! சரி, அப்படியானால் நமது அடிமை வாகனத்திற்கு இவ்வளவு மதிப்பு இருக்கும்போது நம்முடைய வாகனமாகிய காளை மாட்டைக் கண்டால் ஏன் யாரும் கன்னத்திலடித்துக் கொள்வதில்லை? அன்றியும் வண்டியில் கட்டி ஓட்டுகிறார்கள்; ஓட ஓட அடிக்கிறார்கள்; செக்கில் கட்டி ஆட்டுகிறார்கள்; அடித்துக்கூட தின்று விடுகிறார்களே, அது ஏன்?

*பரம:* நம்முடைய பக்தர்களுக்கு அவ்வளவு பக்தி இல்லை; நன்றாக சாம்பலை பூசிக் கொள்ளத்தான் தெரியும். நமது வாகனத்தினிடத்தில் பக்தி காட்டத் தெரியாது.

*பார்:* அதுதான் போகட்டும்; நமது குமாரனாகிய கணபதியின் வாகனமாகிய பெருச்சாளியைக் கண்டால் ஏன் கன்னங் கன்னமாய் அடித்துக் கொள்ளாமல் தடி எடுத்து அடித்துக் கொன்று விடுகிறார்கள்? அய்யோ பாவம்!

*பரம:* கணபதியின் பக்தர்களுக்கும் போதுமான பக்தி கிடையாது. ஏனென்றால், கணபதிக்கு அபிஷேகம் செய்யும்போது அவனது வாகனமாகிய கல்லுப் பெருச்சாளிக்கும் அபிஷேகம் செய்வார்கள். அதற்கும் பால், நெய், தயிர் ஊற்றி கொழுக்கட்டையை வைப்பார்கள். உயிருடன் காணும்போது ஓடி ஓடி அடிப்பார்கள். நம் பக்தர்கள் யோக்யதையே இப்படித்தானே! இந்த வெட்கக்கேட்டை யாருடன் சொல்லுவது!



*பார்:* அதுதான் போகட்டும்; தங்களுடைய மற்றொரு வாகனமாகிய நாயைக் கண்டால் ஒருவரும் கன்னத்தில் அடித்துக் கொள்ளாமல் எல்லோரும் சோடு! சோடு! என்று விரட்டுகின்றார்களே, அது என்ன காரணம் நாதா?

*பரம:* கண்மணி, அதுவும் பக்தர்களில் அறியாத்தனம்தான்; ஆனாலும், அது மலம் சாப்பிடுகின்றதல்லவா! அதனால் அதன்மீது சிலர் அசுசிப்படுகின்றார்கள்போல் இருக்கின்றது.

*பார்:* என்ன நாதா, வைரவக் கடவுள் வாகனம் மலம் சாப்பிட்டால், மகாவிஷ்ணுவின் வாகனம் அதிலுள்ள பூச்சி, புழு, நத்தை, நண்டு முதலிய அசுசியமான வஸ்துக்களையெல்லாம் சாப்பிடுகின்றதே; அதையெல்லாம் அந்த பக்தர்கள் மன்னிக்கும்போது, மலம் சாப்பிடுவதை மாத்திரம் ஏன் நமது பக்தர்கள் மன்னிக்கக் கூடாது? அதுதான் போகட்டும். நமது குமாரன் வாகனமாகிய மயிலைக் கண்டால் ஏன் முருக பக்தர்கள் கன்னங் கன்னமாய்ப் போட்டுக் கொள்வதில்லை? அன்றியும், ஆட்டைக் கண்டால் அடித்துத் தின்று விடுகிறார்களே! அவன் கொடியாகிய சேவலைக் கண்டால் அறுத்துத் தின்றுவிடுகிறார்கள்! இது என்ன அநியாயம்!

*பரம:* அது அந்த பக்தர்களின் பக்திக் குறைவு. அதற்கு நாம் என்ன செய்யலாம்?

*பார்:* நாதா! சரி சரி, இதையெல்லாம் பார்க்கும்போது தான் எனக்கு மிகவும் வெட்கக் கேடாயிருக்கின்றது. நமக்குக் கீழ்ப்பட்ட விஷ்ணுவின் வாகனத்திற்கு மாத்திரம் உலகத்தில் இவ்வளவு கவுரவமும் அவர் பக்தர்களுக்கு மாத்திரம் இவ்வளவு பக்தியும் இருப்பதும், நமது வாகனங்களுக்கு இவ்வளவு மரியாதைக் குறைவும் நமது பக்தர்களுக்கு இவ்வளவு பக்திக் குறைவும் இருப்பதும் எனக்கு வெளியில் தலை நீட்ட முடியவில்லையே; தவிர, விஷ்ணுவின் பெண் ஜாதியான மகாலட்சுமிகூட இதனாலேயே அடிக்கடி என்னைப் பார்த்து பரிகாசம் பண்ணுகின்றாள். தவிர, நம்முடைய பக்தர்களிலும் பலர் அறிவில்லாமல் நம்ம வாகனத்தை மரியாதை செய்யாமல் இப்படியோடல்லாமல் விஷ்ணு வாகனத்திற்கு விஷ்ணு பக்தர்களைப் போலலே கன்னங் கன்னமாய்ப் போட்டுக் கொண்டு மரியாதை



செய்கிறார்களே, இது என்ன மானக்கேடு! தாங்களே யோசித்துப் பாருங்கள்.

*பரம:* என்ன செய்யலாம் சகி? நம் தலையில் பிரம்மன் இப்படி அவமானப்படும்படியாக விதித்து விட்டான். விதியாரைவிட்டது, சொல் பார்ப்போம்! என் கண்மணி, நீ இதற்காக அழ வேண்டாம்; உன்னைப் பார்த்தால் எனக்கும் அழுகை வருகிறது.

*பார்:* சரி, சரி, இதற்காக நான் ஒருத்தி அழுவது போதாதாக்கும். இனி நீங்கள் வேறா அழுக வேண்டும்! போனால் போகட்டும். இம்மாதிரி நம் தலையில் எழுதிய அந்த பிரம்மாவை பேசிக் கொள்ளலாம். வாருங்கள் நம்ம வேலையைப் பார்க்க நாம் போவோம்.

*(சித்திரபுத்திரன் எனும் புனைபெயரில் 17.6.1928 "குடிஅரசு" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது.)*

# 4. சாமியும், சமயமும், சமயாச்சாரியார்களும்

தேவர்கள் என்றும், தெய்வங்கள் என்றும், அவதாரமென்றும், ரூபமென்றும் அதற்காக மதமென்றும் சமயமென்றும் அதற்காக மதாச்சாரியார்கள் என்றும், அதற்கு சமயாச்சாரியார்கள் என்றும் கட்டியழுபவர்கள் ஒன்று வயிற்றுப் பிழைப்புப் புரட்டர்களாயிருக்க வேண்டும் அல்லது பகுத்தறிவில்லாதவர்களாகவாவது இருக்க வேண்டும் என்பதே நமது அபிப்பிராயம் என்பதாக பல தடவைகளில் வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

அதுபோலவே, சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரம்மா என்றோ சொல்லப்படுபவையும் ஒரு "சாமி" என்றோ, அல்லது ஒரு ஆசாமி என்றோ, அல்லது ஒரு உருவமென்றோ கொள்ளுவதும் ஞானமற்றவர்களின் கொள்கையென்றே சொல்லுவோம்.



உலகத் தோற்றமும், அதில் நடைபெறும் உற்பத்தி, வாழ்வு, அழிவு என்பவைகளான மூவகைத் தன்மைகளையும், மேற்படி

''சாமி''களோ, ஆசாமிகளோ, ஒவ்வொரு தன்மையை ஒவ்வொரு ஆசாமி நடத்துகிறான் என்றோ அல்லது ஒவ்வொரு தன்மைக்கு ஒவ்வொரு ஆசாமி பொறுப்பாளியாய் இருக்கின்றான் என்றோ நினைத்துக் கொண்டிருப்பவர்களும் விசார ஞானமற்றவர்கள் என்றே சொல்லுவோம்.

மற்றபடி மேல்கண்ட ஒவ்வொரு தன்மைக்கு மேல் கண்ட ஒவ்வொரு பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது என்றும், அது ஒரு உருவமல்ல, ஒரு உருப்படி அல்ல என்றும், உற்பத்தி வாழ்வு, அழிவு என்னும் தன்மையையும், அத்தன்மைக்கு ஆதாரமான தோற்றங்களைத்தான் கடவுள் என்றோ, தெய்வம் என்றோ, சாமி என்றோ, ஆண்டவன் என்றோ கருதுகிறோம் என்பதாகவும், தானாகத் தோன்றிற்று. தானாக வாழ்ந்தது, தானாக அழிகின்றது என்கின்ற யாவும் இயற்கைதான் என்றும், அவ்வியற்கைக்குத்தான் கடவுள், ஆண்டவன், சாமி, தெய்வம் என்று சொல்லுகின்றோம் என்பதாகவும், மற்றும் இவ்வியற்கைத் தோற்றங்களுக்கு ஏதாவது ஒரு காரணமோ அல்லது ஒரு சக்தியோ இருக்க வேண்டுமே என்றும், அந்தக் காரணத்திற்கோ, சக்திக்கோதான் கடவுள், சாமி, ஆண்டவன், தெய்வம் என்கின்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதாகவும் சொல்லிக் கொண்டு மாத்திரம் இருப்பவர்களிடத்தில் நமக்கு இப்போது அவ்வளவாக தகராறு இல்லை என்று சொல்லிக் கொள்ளுகின்றோம்.

ஆனால், அந்தக் கடவுளுக்கு கண், மூக்கு, வாய், கை, கால், தலை, பெயர், ஆண், பெண் தன்மை, பெண் ஜாதி - புருஷன், குழந்தை - குட்டி, தாய் - தகப்பன் முதலியவைகளைக் கற்பித்து, அதனிடத்தில் பக்தி செய்ய வேண்டும் என்றும், அதற்கு கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்து தினம் பல வேளை பூஜை செய்ய வேண்டுமென்றும், அச்சாமிகளுக்குக் கல்யாணம் முதலியவைகள் செய்வதோடு, அந்தக் கடவுள் அப்படிச் செய்தார், இந்தக் கடவுள் இப்படிச் செய்தார் என்பதான திருவிளையாடல்கள் முதலியவைகள் செய்து காட்ட வருஷா வருஷம் உற்சவம் செய்ய வேண்டும் என்றும், அக்கடவுள்களின் பெருமையைப் பற்றியும், திருவிளையாடல்களைப் பற்றியும் பாட வேண்டும் என்றும், அப்பாடல்களை 'வேதமாக', 'திருமுறையாக', 'பிரபந்தமாக', கடவுள் உண்டு என்பதற்கு ஆதாரமாகக்



கொள்ளவேண்டும் என்றும், அப்பாடல்களைப் பாடினவர்களை 'சமயாச்சாரியர்'களாக, 'ஆழ்வார்'களாக, 'சமயகுரவர்'களாக, 'நாயன்மார்'களாக, பல அற்புதங்கள் செய்தவர்களாகக் கொள்ள வேண்டும் என்றும், இதுபோன்ற இன்னும் பல செய்தால் அக்கடவுள்கள் நமது இச்சைகளை நிறைவேற்றுவார்கள் என்றும், மற்றும் நாம் செய்த - செய்கின்ற - செய்யப் போகின்ற எவ்வித அக்கிரமங்களையும், அயோக்கியத்தனங்களையும், கொடுமைகளையும் மன்னிப்பார் என்றும் சொல்லப்படுபவைகளான மூட நம்பிக்கையும், வயிற்றுப் பிழைப்பு சுயநலப் பிரச்சாரமும் ஒழிய வேண்டுமென்பதுதான் நமது கவலை.

ஏனெனில், இந்நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கும், மக்களை மக்கள் ஏமாற்றிக் கொடுமைப்படுத்துவதற்கும், மற்ற நாட்டார்கள்போல், நம் நாட்டு மக்களுக்கு பகுத்தறிவு விசாலப்பட்டு, மற்ற நாட்டார்களைப் போல விஞ்ஞான (சயன்ஸ்) சாஸ்திரத்திலே முன்னேற்றமடையாமல் இருப்பதற்கும், அன்னிய ஆட்சிக் கொடுமையிலிருந்து தப்ப முடியாமல், வைத்த பளுவைச் சுமக்க முதுகைக் குனிந்து கொடுத்துக் கொண்டிருப்பதற்கும், இம்மூட நம்பிக்கையும், சில சுயநலமிகளின் வயிற்றுச் சோற்றுப் பிரச்சாரமும், இவைகளினால் ஏற்பட்ட கண்மூடி வழக்கங்களும் செலவுகளுமேதான் காரணங்கள் என்பதாக நாம் முடிவு செய்து கொண்டிருக்கின்றோம். நாமும் நமது நாடும் அடிமைப்பட்டுக் கிடப்பதற்கும், ஒரு வரையொருவர் உயர்வு - தாழ்வு கற்பித்து கொடுமைப்படுத்தி, ஒற்றுமையில்லாமல் செய்திருப்பதற்கும், மக்கள் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பொருள்கள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படாமல் பாழாவதற்கும், மக்களின் அறிவு வளர்ச்சி கட்டுப்பட்டுக் கிடப்பதற்கும், சிறப்பான மக்களின் ஒழுக்கங்கள் குன்றி, மக்களிடத்தில் மக்களுக்கு அன்பும், உபகாரமும் இல்லாமல் இருப்பதற்கும், மேல்கண்ட கொள்கைகள் கொண்ட கடவுள் என்பதும், அதன் சமயமும், சமயாச்சாரியர்கள் என்பவர்களும், அவர்களது பாடல்களும், நெறிகளுமே முக்கிய காரணம் என்பதைத் தூக்கு மேடையிலிருந்தும் சொல்லத் தயாராயிருக்கின்றோம்.



நிற்க; இக்கடவுள்களின் பொருட்டாக நம் நாட்டில் பூசைக்கும், அபிஷேகத்திற்கும், அவற்றின் கல்யாணம் முதலிய உற்சவத்திற்கும், பஜனை முதலிய காலட்சேபத்திற்கும்,

இக்கடவுள்களைப்பற்றிய சமயங்களுக்காக மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மூர்த்தி ஸ்தலம், தீர்த்த ஸ்தலம் முதலிய யாத்திரைகளுக்கும், இக்கடவுள்களின் அவதார மகிமைகளையும், திருவிளையாடல்களையும், இக்கடவுள்களைப்பற்றிப் பாடின பாட்டுக்களையும் அச்சடித்து விற்கும் புத்தகங்களை வாங்குவதற்கும், மற்றும் இவைகளுக்காகச் செலவாகும் பொருள்களிலும் நேரங்களிலும் நம் ஒரு நாட்டில் மாத்திரம் - சுமார் இருபது கோடி ரூபாய்களுக்குக் குறைவில்லாமல் வருஷா வருஷம் பாழாகிக் கொண்டு வருகின்றது என்று சொல்லுவது மிகையாகாது.

இவ்விருபது கோடி ரூபாய்கள், இம்மாதிரியாக பாழுக்கிறைக்காமல், மக்களின் கல்விக்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, விஞ்ஞான (சயின்ஸ்) வளர்ச்சிக்கோ, தொழில் வளர்ச்சிக்கோ செலவாக்கப்பட்டு வருமானால், நம் நாட்டில் மாத்திரம் வாரம் லட்சக்கணக்கான மக்களை நாட்டைவிட்டு அன்னிய நாட்டிற்கு கூலிகளாக ஏற்றுமதி செய்ய முடியுமா? அன்றியும், தொழிலாளர்கள் கஷ்டங்கள் என்பது ஏற்படுமா? தீண்டக் கூடாத நெருங்கக் கூடாத - பார்க்கக்கூடாத மக்கள் என்போர்கள் கோடிக் கணக்காய் பூச்சி, புழு, மிருகங்களுக்கும் கேவலமாயிருந்து கொண்டிருக்க முடியுமா? 100-க்கு மூன்று பேர்களாயிருக்கும் பார்ப்பனர்கள் மற்ற 100-க்கு 97 பேர்களை சண்டாளர், மிலேச்சர், சூத்திரர், வேசிமக்கள், தாசி மக்கள், அடிமைப் பிறப்பு என்று சொல்லிக் கொண்டு, அட்டை இரத்தத்தை உறிஞ்சுவது போல் உறிஞ்சிக் கொண்டும், நம்மையும் நம் நாட்டையும் அன்னியனுக்குக் காட்டிக் கொடுத்து நிரந்தர அடிமைகளாக இருக்கும்படி செய்து கொண்டும் இருக்க முடியுமா என்று கேட்கின்றோம். நமக்குக் கல்வி இல்லாததற்கு சர்க்கார்மீது குற்றம் சொல்லுவதில் கவலை கொள்ளுகின்றோமே யல்லாமல், நம் சாமியும், பூதமும், சமயமும் நம் செல்வத்தையும் அறிவையும் கொள்ளை கொண்டிருப்பதைப்பற்றி யாராவது கவலைகொள்ளுகின்றோமா என்று கேட்கின்றோம்.



நிற்க; "அன்பையோ அருளையோ, ஒழுக்கத்தையோ, உபசாரத்தையோ மாறு பெயரால் கடவுள் என்று கூப்பிடுகின்றேன். அதனால் உனக்கு என்ன தடை?" என்று யாராவது சொல்ல வருவார்களானால், அதையும் (அதாவது அக்குணங்கள் என்று

சொல்லப்பட்ட கடவுள் என்பதையும்) பின்பற்றும்படியான குணங்களாகவோ, "கடவுள்"களாகவோதான் இருக்க வேண்டும் என்று சொல்லுகின்றோமே ஒழிய, வணங்கும்படியான கடவுளாக இருக்க நியாயம் இல்லை என்றே சொல்லுவோம்.

இதுபோலவேதான், "மதம் என்பதும், சமயம் என்பதும், சமயநெறி என்பதும், மற்ற ஜீவன்களிடத்தில் மனிதன் நடந்து கொள்ள வேண்டிய நடையைப்பற்றிய கொள்கைகளைக் கொண்டது" என்பவர்களிடத்திலும் நமக்கு அவ்வளவாகத் தகராறு இல்லை. "அன்பே சிவம், சிவமே அன்பு" என்பதான சிவனிடத்தில் நமக்கு சண்டையில்லை. "அன்பு என்னும் குணம்தான் சிவம்; அந்த அன்பைக் கைக்கொண்டு ஜீவன்களிடத்தில் அன்பு செலுத்துவது தான் சைவம்" என்பதானால் நாமும் ஒரு சைவனாகவும், அதன்மூலம் நாமும் ஒரு சைவன் என்று சொல்லிக் கொள்ளவும் ஆசைப்படுகின்றோம்.

அதுபோலவே, "ஜீவன்களிடத்தில் இரக்கம் காட்டுவது, ஜீவன்களுக்கும் உதவி செய்வது ஆகிய குணங்கள்தான் விஷ்ணு; அக்குணங்களைக் கைக் கொண்டு ஒழுகுவதுதான் வைணவம்" என்பதான விஷ்ணு விடத்திலும் வைணவனிடத்திலும் நமக்கு அவ்வளவாக தகராறில்லை என்று சொல்லுவதோடு, நாமும் நம்மை ஒரு வைணவன் என்று சொல்லிக் கொள்ளும் நிலைமை ஏற்பட வேண்டும் என்றே ஆசைப்படுகின்றோம். நமக்கு மற்றும் மற்றும் உள்ள மக்களுக்கும் அச் "சைவத்தன்மை", "வைணவத்தன்மை"யும் ஏற்படவேண்டும் என்றும் தவங்கிடக்கின்றோம்.

அப்படிக்கில்லாமல், இன்னமாதிரி உருவம் கொண்ட அல்லது குணம் கொண்டதுதான் கடவுள் என்றும், அதை வணங்குகிறவன்தான் சைவன் என்றும், அப்படி வணங்குகிறவன் இன்னமாதிரியான உடைபாவனை கொண்டவனாகவும், இன்ன மாதிரி குறி இடுகிறவனாகவும் இருப்பதுதான் சைவம் என்றும், இன்ன பேருள்ள கடவுள்களைப்பற்றிப் பாடின, எழுதின ஆசாமிகளையும், புஸ்தகத்தையும் வணங்குவதும் மரியாதை செய்வதும்தான் சைவம் என்றும், மற்றபடி வேறு இன்ன உருவமோ பேரோ உள்ள "கடவுள்" என்பதை வணங்குகிறவர்களையும், வேறு குறி இடுகின்றவர்களையும், யாதொரு குறியும் இடாதவர்களையும்



சைவரல்லாதவர் என்று சொல்லுவதுமான கொள்கைக்காரரிடமே நமக்குப் பெரிதும் தகராறு இருக்கின்றது என்று சொல்லுவதுடன், அக்கொள்கைகளையும், அச்சமயங்களையும், அக்கடவுள்களையும் சுட்டுப்பொசுக்க வேண்டும் என்றும் சொல்லுகின்றோம்.

அன்றியும், பல சமயப் புரட்டர்கள் இம்மாதிரி விவகாரம் வரும்போது ''நான், கடவுள் என்பதாக ஒரு தனி வஸ்துமோ ஒரு குணமோ இருப்பதாகச் சொல்லவில்லை'' என்றும், ''மலைதான் கடவுள், ஆறுதான் கடவுள், சமுத்திரந்தான் கடவுள், மரம் செடிதான் கடவுள், புஷ்பம்தான் கடவுள், அதன் மணம்தான் கடவுள், அழகுதான் கடவுள், பெண்தான் கடவுள், அதன் இன்பம்தான் கடவுள், இயற்கைதான் கடவுள், அத்தோற்றம் தான் கடவுள்'' என்பதாக தமக்கே புரியாமல் உளறுவதும், மறுபடியும் ''சிவன்தான் முழுமுதற் கடவுள், மற்றபடி விஷ்ணுவும் பிரம்மாவும், அவரது பரிவார தேவதைகள்; சைவ சமயம் தான் உண்மைச் சமயம்; அதுதான் முக்தி அளிக்கவல்லது'' என்பதும், அல்லது ''விஷ்ணுதான் முழு முதற் கடவுள், அதுதான் பரத்துவம் கொண்டது, மற்றவைகள் விஷ்ணுவின் பரிவார தேவதைகள்'' என்பதும், ''வைஷ்ணவ சமயம்தான் உண்மைச் சமயம்; அதில்தான் பரத்திற்கு மார்க்கம் உண்டு'' என்பதும், ''அச்சிவனையோ, விஷ்ணுவையோ முழுமுதற் கடவுளாகக் கொண்டு அக்கடவுள்களையும், அச்சமயங்களையும் பாடினவர்கள்தான் கடவுள் நெறியையும், நிலைமையையும் உணர்த்திய பெரியார்கள் - சமயாச்சாரியார்கள்'' என்பதுமாக மக்கள்முன் உளறிக் கொட்டி அவர்களது மனதை குழப்பச் சேற்றில் அழுத்துகின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களது புரட்டையும், பித்தலாட்டங்களையும் வெளியாக்கி, மக்களை குழப்பச் சேற்றிலிருந்து விடுவிக்க வேண்டுமென்றுதான் சொல்லுகின்றோம்.



உலகத்தில் கடவுள் என்பது இன்னது என்பதாக மனதில் விவரப்படுத்திக் கொள்ளாமலே கடவுளைப்பற்றிய தர்க்கங்களும், தகராறுகளும் தினமும் நடைபெற்று வருகின்றன. இது இன்று நேற்று ஏற்பட்ட விவகாரம் அல்ல என்றுங்கூட சொல்லுவோம்.

எனவே, மக்களின் பாரம்பரியமானதும், எங்கும் பரவியிருக்கும்படியானதுமான மட

மைக்கு இதைவிட வேறு உதாரணம் கிடையாது என்பது நமது அபிப்பிராயம். ஏனெனில், இந்த விவகாரம் பாமர மக்களிடை யில் மாத்திரம் நடைபெற்று வருகின்றது என்று சொல்லுவதற் கில்லை. இது பெரும்பாலும் படித்தவன், ஆராய்ச்சிக்காரன், பண்டிதன், பக்திமான் என்கின்ற கூட்டத்தாரிடையேதான் பெரி தும் (இவ்வறியாமை) இடம் பெற்று உரம் பெற்றிருக்கின்றது.

நிற்க; சர்வ வல்லமையுள்ள என்று சொல்லப்படுவதான ஒரு "கடவுள்" இருக்கின்றார் என்பதை (அது இன்னது என்று புரியா விட்டாலும்) விவகாரமில்லாமல் ஒப்புக் கொள்ளுவதா கவே வைத்துக் கொண்டாலும், மனிதனின் வாழ்க்கைக்கு அக்கடவுளின் சம்பந்தமோ, வழிபாடோ அவசியமா? அல்லது மனிதனுக்கு சில குணங்களைக் கைக் கொண்டு அதன்படி ஒழுகும் தன்மை அவசியமா என்பதே நமது கேள்வி. அன்றி யும், அப்படிப்பட்ட ஒரு "கடவுள்" தன்னை மக்கள் வழிபட வேண்டும் என்றாவது, தனக்கு கோயில்கட்ட வேண்டுமென்றா வது, பூசை, அபிஷேகம், தேர், திருவிழா, உற்சவம் முதலிய வைகள் செய்ய வேண்டுமென்றாவது ஆசைப்படுமா? அல்லது மக்கள் சில குணங்களைக் கைக் கொண்டு, மற்ற ஜீவன்களிடத் தில் இன்ன இன்ன விதமாய் நடந்து கொள்ள வேண்டும் என்பதை விரும்புமா? என்பதை யோசித்துப் பார்த்தால், "கடவுள்" என்பது வாழ்க்கைக்கு வேண்டுமா வேண்டாமா என்பது விளங்காமல் போகாது. அன்றியும், அச்சர்வ வல்லமை யுள்ள சாமிகளை மக்களுக்கு அறிமுகப்படுத்த இவ்வளவு ஆசாமிகளும், சமயங்களும் வேண்டுமா என்றும், அந்தச் சாமிகளை இல்லை என்பவர்களுக்கு ருஜூப்படுத்த இவ்வளவு வக்கீல்கள் வேண்டுமா என்றும் கேட்கின்றோம்.

இதுபோலவே ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொருவிதமாக உலகத்திற்கும், மக்களுக்கும், கடவுளுக்கும் சம்பந்தம் கற்பிக்கப் பட்டிருந்தாலும், புத்தமதம் என்பதில் மனிதன் நடந்து கொள்ள



வேண்டிய ஒழுக்கங்களைத்தவிர, வணக்கம் என்பதை அம்மதத் தலைவர் ஒரு சிறிதும் வலியுறுத்தியிருப்பதாகக் காணப்பட வில்லை.

அன்றியும், அவர் கடவுளைப்பற்றியோ, கடவுளை வணங்குவதைப்பற்றியோ, கட வுள் நெறி உணர்த்திய பெரியார்களை மரி யாதை செய்வதைப் பற்றியோ கவலை

கொண்டு ஒரு கடுகளவு நேரமாவது செலவழித்திருப்பதாகவும் காணக் கிடக்கவில்லை. அன்றியும், அதைப்பற்றிய வார்த்தைக ளையாவது அவர் எங்காவது உபயோகித்திருப்பதாகச் சொல்லு பவர்களும் காணக் கிடக்கவில்லை. அப்படிப்பட்ட ஒருவரை மதத் தலைவராகவும், அக்கொள்கையை, அம்மதத்தை, அச்சம யத்தை இன்றைய தினம் உலகத்திலுள்ள மொத்த ஜனத்தொகை யில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் அதாவது 50 கோடி மக்களுக்குமேல் தம் மதமாகவும் ஏற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அன்றியும், அப்படிப்பட்ட புத்தரை தங்கள் கடவுள் அவதார மென்றும், தீர்க்கதரிசியென்றும், பகவான் என்றும் சொல்லிக் கொண்டிருக்கின்ற ஜனங்கள் இந்துமதம் என்பதிலே, சைவ மதம் என்பதிலே, வைணவ மதம் என்பதிலே பல கோடிக்கணக் கானவர்கள் இருப்பதோடு, அதற்கு பல ஆதாரங்களும் வைத் துக் கொண்டிருக்கின்றார்கள். இதை யாராவது மறுக்க முன்வரு கின்றார்களா?

''மனிதனுக்கு ஏதாவது ஒரு மதமோ சமயமோ வேண்டியது அவசியம்'' என்று யாராவது சொல்ல வருவார்களானால், புத்த மதம் என்பதும், உலகாயத மதம் என்பதும், சூன்ய மதம் என்பதும், இயற்கை மதம் என்பதும் மதங்கள் என்றுதானே சொல்லப்படுகின்றது. அப்படி இருக்கையில், அம்மதங்களில் ஏதாவது ஒன்றைக் கொண்டவர்கள் பலர் இருக்கலாம். எனவே, அது எப்படி குற்றமுடையதாகும்? எப்படி பல மதங்களுக்கும் சமயங்களுக்கும் தலைவரும் காலமும் இல்லாமலிருக்கின்றதோ அது போலவே இம்மதங்களில் சிலவற்றிற்கும் காலமோ தலை வரோ இல்லாமல் இருக்கலாம்.

ஆகவே, ஒரு மனிதன் இன்ன மதக்காரனாகவோ, இன்ன சமயக்காரனாகவோ, இன்ன கடவுளை வணங்குகிறவனாகவோ இருக்க வேண்டும் என்பதாகக் கட்டளையி டவும், இன்ன மதக்காரனாக இருக்கக் கூடாது என்று நிர்ப்பந்திக்கவும் யாருக்கு உரிமை உண்டு? என்று கேட்கின்றோம்.



மனிதனுக்கு மதம் வேண்டும் என்பது அந்தந்த மனிதனின் தனி இஷ்டத்தைப் பொறுத்ததா? அல்லது மற்றொருவனுடைய நிர்ப்பந்தமா? என்று கேட்கின்றோம்.

''துறவி''க்கு மதம் ஏது? ''ஞானி''க்கு சமயம் ஏது? கடவுள் ஏது? ''வேதாந்தி''க்கு மதம் ஏது? கடவுள் ஏது? சகலத்தையும் துறந்தவர்தானே ''துறவி''? சகலத்தையும் சரி என்று எண்ணுகின்றவர்கள்தானே ''ஞானி''?

''சகலமும் மித்தை, பொய், மாய்கை'' என்று எண்ணுகின்றவன்தானே ''வேதாந்தி'' என்பவன்? இவைகளை உலகம் ஒப்புக் கொள்ளுகின்றதா இல்லையா?

அங்ஙனமாயின், இம்மூவர்களும் நாஸ்திகர்களா என்று கேட்கின்றோம்.

உலகத்தில் 'துறவி' ஆவதற்கோ, 'ஞானி' ஆவதற்கோ, 'வேதாந்தி' ஆவதற்கோ எவனுக்கு உரிமையில்லை என்று கேட்பதோடு, எந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டு, யாரிடம் உபதேசம் பெற்று அல்லது எந்த சமயத்தை ஏற்று, எந்தக் கடவுளைத் தொழுது 'துறவி'யாகவோ, 'வேதாந்தி'யாகவோ ஆக வேண்டும் என்கின்ற நிர்ப்பந்தம் உண்டா என்று கேட்கின்றோம்.

இவ்விஷயங்களை நாம் வலியுறுத்துவதால் பல நண்பர்களுக்கு சற்று மனக்கசப்பு ஏற்படலாம் என்பது நமக்குத் தெரியும். ஆனாலும், நம் நாட்டின் விடுதலை கண்டிப்பாய் இந்த விஷயங்கள் விளக்கமாவதில்தான் இருக்கின்றதே ஒழிய, வெள்ளைக்காரரிடமும், பார்ப்பனர்களிடமும் நேரில் முட்டிக் கொள்வதால் ஒரு பயனும் இல்லை என்றே சொல்லுவோம்.

வெள்ளைக்கார அரசாங்க முறையும், பார்ப்பனர்களின் ஆதிக்கமும் நமது மானத்திற்கும், அடிமைத்தனத்திற்கும், தரித்திரத்திற்கும் ஆதாரமாயிருக்கின்றது என்பது சத்தியமானாலும், அவ்வக்கிரமமும், ஆட்சியும், ஆதிக்கமும் இந்து மதம், கடவுள், சமயம் என்பவைகளான மூடக் கொள்கைகளின் பேரில்தான் கட்டப்பட்டிருக்கின்றது என்பது நமது முடிவு. இம் மூடக் கொள்கைகளை வைத்துக் கொண்டு, வெள்ளைக்காரர்களையும், பார்ப்பனர்களையும் பூண்டோடு அழிக்க நம்மால் முடிந்து விட்டாலும், மறுபடியும் 'வெள்ளைக்காரர்களும்', 'பார்ப்பனர்களும்' வேறு எங்காவதிருந்தோ அல்லது நமக்காகவே உற்பத்தியாகியோ நம்மை அடிமைகளாக்கி ஆதிக்கம் செலுத்திக் கொண்டுதான் வருவார்கள் என்பதை



ஒவ்வொருவரும் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதாக தெரிவித்துக் கொள்ளுகின்றாம்.

வெள்ளைக்கார அரசாங்கமோ அல்லது வேறு அன்னிய அரசாங்கமோ இல்லாமல், நம் நாட்டார்கள் என்போர்கள் அரசாண்டு வந்த காலத்திலேயே நாம் அடிமைகளாக, தற்குறிக ளாக, தாசி மக்களாக, தீண்டாதார்களாக இருந்து வந்திருக்கின் றோம் என்பதை தயவுசெய்து நம்புங்கள் என்று வேண்டிக் கொள்ளுகின்றோம்.

நம்புவதற்கு ஏதாவது கஷ்டமாயிருந்தால், நம் நாட்டு நம் மக்களால் 'சாமுண்டீஸ்வரி', பேராலும், 'பத்மநாபசாமி' பேரா லும், 'கிருஷ்ணசாமி' பேராலும் ஆளப்படும் மைசூரையும், திருவாங்கூரையும், கொச்சியையும் தயவு செய்து சற்று திரும் பிப் பாருங்கள் என்று வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஆட்சி முறைக் கொடுமையும், பார்ப்பன ஆதிக்கமும், வெள் ளைக்கார அன்னிய அரசாங்கத்தைவிட, உள்நாட்டு மக்களால் ஆளப்படும் சுயராஜ்ய அரசாங்கத்தில் அதிகமா? கொஞ்சமா? என்பதைக் கவனித்தால், வெள்ளைக்காரரும், பார்ப்பனர்களும் தாங்களாகவே தங்கள் பலத்தால் அக்கிரமங்களைச் செய்கின்றார் களா? அல்லது இந்த மதமும் கடவுளும் மதநெறியும் இவ்வித அக்கிரமங்கள் செய்ய இடங் கொடுக்கின்றதா என்பது சுலபத் தில் விளங்காமற் போகாது என்றே எண்ணுகின்றோம்.

எனவே, நம் நாட்டிற்கு இப்போது அவசியமாக வேண்டியது என்ன வென்றால், மூட நம்பிக்கை ஒழிய வேண்டும்; அறிவுக் குச் சுதந்திரமும் விடுதலையும் ஏற்பட்டு அது வளர்ச்சி பெற வேண்டும் சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட வேண்டும்.

இம்மூன்றும் ஏற்படவேண்டுமானால் மதமும், சாமியும், சமயாச்சாரியர்களும் சந்திக்கு வந்தே தீர வேண்டுமேயல்லாமல் இதற்கு வேறு பார்த்தியோ ராஜியோ இல்லை என்றே சொல்லி இதை முடிக்கின்றோம்.

***(1.7.1928 'குடிஅரசு' இதழில்***
***தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)***



# 5. பிள்ளையார்

இந்து மதம் என்பதில் உள்ள கடவுள்களின் எண்ணிக்கை "எண்ணித் தொலையாது, ஏட்டிலடங்காது" என்பதுபோல், எண்ணிக்கைக்கு அடங்காத கடவுள்கள் சொல்லப்பட்டிருப்ப தும், அத்தனை கடவுள்களுக்கும் புராணம், கோயில், குளம், பூஜை, உற்சவம், பஜனை பாட்டு - முதலியதுகள் ஏற்படுத்தி இருப்பவை, அவைகளுக்காக நமது இந்திய நாட்டில் வருடம் ஒன்றுக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்களும், பல கோடி ரூபாய் பெறும்படியான நேரங்களும், பல கோடி ரூபாய் பெறும்படியான அறிவுகளும் வெகுகாலமாய் பாழாய்க் கொண்டு வருவதும் எவராலும் சுலபத்தில் மறுக்கக் கூடிய காரியமல்ல.

இக்கடவுள்களில் முதன்மை பெற்றதும், மக்களிடம் மிகவும் செல்வாக்குப் பெற்றதும், இந்துக்கள் என்போர்களில் ஏறக்கு றைய எல்லோராலும் ஒப்புக் கொண்டு வணங்கப்படுவதுமான கடவுள் பிள்ளையார் என்பது. இதனை கணபதி என்றும், விநாயகன் என்றும், விக்கினேஸ்வரன் என்றும் இன்னும் இதுபோன்ற பல நூற்றுக்கணக்கான பெயர்களைச் சொல்லி அழைப்பதும் உண்டு.

நிற்க; இந்த பிள்ளையார் என்னும் கடவுளை இந்துக்கள் என்பவர்கள் தங்களுடைய எந்தக் காரியத்திற்கும் முதன்மை யாய் வைத்து வணங்குவதும், கடவுள்களுக்கெல்லாம் முதல் கடவுளாக வணங்குவதுமாக இப்போது அமுலில் இருக்கும் வழக்கத்தை எந்த இந்து என்பவனாலும் மறுக்க முடியாது.

ஆகவே, இப்படிப்பட்டதான யாவராலும் ஒப்புக் கொள்ளக் கூடியதும், அதி செல்வாக்குள்ளதும், முதற் கடவுள் என்பது மான பிள்ளையாரின் சங்கதியைப்பற்றிச் சற்று கவனிப்போம்.



ஏனெனில், கடவுள்களின் சங்கதி தெரிய வேண்டுமானால் முதல் முதலாக முதற் கடவு ளைப்பற்றித் தெரிவதுதான் நன்மையானதா கும். ஏனெனில், முதல் கடவுள் என்று சொல்லப்படுவதின் சங்கதி இன்ன மாதிரி என்பதாகத் தெரிந்தால், மற்ற கடவுள்கள் சங்கதி தானாகவே விளங்க ஏதுவாகயிருக்க லாம். அன்றியும், எந்தக் காரியம்

ஆரம்பித்தாலும் முதலில் பிள்ளையார் காரியத்தைக் கவனிக்க வேண்டியது முறையென்று சொல்லப்படுவதால், நாமும் கட வுள்களின் கதைகளைப்பற்றி விளக்கப் போவதில் முதல் கடவுளைப்பற்றி ஆரம்பிக்க வேண்டியதும் முறையாகு மன்றோ! இல்லாவிட்டால் "அக்கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேரிட்டு, எடுத்த இக்காரியத்திற்கு லிக்கினம் ஏற்பட்டா லும் ஏற்படக் கூடும்"

*1.* ஒரு நாள் சிவனின் பெண்சாதியான பார்வதிதேவி, தான் குளிக்கப் போகையில் குளிக்குமிடத்திற்கு வேறு ஒருவரும் வராமல் இருக்கும்படியாக ஒரு காவல் ஏற்படுத்துவதற்காக தனது சரீரத்தில் உள்ள அழுக்குகளைத் திரட்டி உருட்டி அதை ஒரு ஆண் பிள்ளையாகும்படி கீழே போட்டதாகவும், அது உடனே ஒரு ஆண் குழந்தை ஆகிவிட்டதாகவும், அந்த ஆண் குழந்தை ஆகிவிட்டதாகவும், அந்த ஆண் குழந்தையைப் பார்த்து - "நான் குளித்துவிட்டு வெளியில் வரும்வரை வேறு யாரையும் உள்ளே விடாதே!" என்று சொல்லி அதை வீட்டு வாயிற்படியில் உட்கார வைத்திருந்ததாகவும், அந்த சமயத்தில் பார்வதியின் புருஷனான பரமசிவன் வீட்டிற்குள் புகுந்ததாக வும், அழுக்குருண்டையான வாயில்காக்கும் பிள்ளையார் அந்த பரமசிவனைப் பார்த்து, "பார்வதி குளித்துக் கொண்டிருப்பதால் உள்ளே போகக் கூடாது" என்று தடுத்ததாகவும், அதனால் பரம சிவக் கடவுளுக்கு கோபம் ஏற்பட்டு தன் கையிலிருந்த வாளாயுதத்தால் ஒரே வீச்சாக அந்தப் பிள்ளையார் தலையை வெட்டிக் கீழே தள்ளிவிட்டு குளிக்குமிடத்திற்குள் போனதாக வும், பார்வதி சிவனைப் பார்த்து, "காவல் வைத்திருந்தும் எப்படி உள்ளே வந்தாய்?" என்று கேட்டதாகவும், அதற்கு சிவன், "காவற்காரன் தலையை வெட்டி உருட்டிவிட்டு வந் தேன்" என்று சொன்னதாகவும், இது கேட்ட பார்வதி, தான் உண்டாக்கின குழந்தை வெட்டுண்டதற்காகப் புரண்டு புரண்டு அழுததாகவும், சிவன் பார்வதியின் துக்கத் தைத் தணிக்க வேண்டி, வெட்டுண்டு கீழே விழுந்த தலையை எடுத்து மறுபடியும் ஒட்ட வைத்து உயிர்கொடுக்கலாம் எனக் கருதி வெட்டுண்ட தலை காணாமல் போன தால், அருகிலிருந்த ஒரு யானையின் தலையை வெட்டி, முண்டமாகக் கிடந்த குழந்தையின் கழுத்தில் ஒட்ட வைத்து,



அதற்கு உயிரைக் கொடுத்து, பார்வதியைத் திருப்தி செய்ததாக வும் கதை சொல்லப்படுகின்றது. இக்கதைக்கு சிவபுராணத்தி லும், கந்தபுராணத்திலும் ஆதாரங்களும் இருக்கின்றனவாம்.

2. ஒரு காட்டில் ஆண் - பெண் யானைகள் கலவி செய்யும்போது சிவனும் பார்வதியும் கண்டு கலவி ஞாபகம் ஏற்பட்டுக் கலந்ததால் யானை முகத்துடன் குழந்தை பிறந்தது என்றும் பிள்ளையார் கதையில் கூறுகின்றதாம்.

3. பார்வதி கர்ப்பத்தில் ஒரு கருவுற்றிருக்கையில் ஒரு அசுரன் அக்கருப்பைக்குள் காற்று வடிவமாகச் சென்று அக்கருச்சிசுவின் தலையை வெட்டிவிட்ட வந்ததாகவும், அதற்குப் பரிகாரமாக பார்வதி யானையின் தலையை வைத்து உயிர் உண்டாக்கி குழந்தையாகப் பெற்றுக் கொண்டதாகவும் விநாயகர் புராணம் கூறுகின்றதாம்.

4. தக்கனுடைய யாகத்தை அழிப்பதற்காக சிவன் தனது மூத்த குமாரனாகிய கணபதியை அனுப்பியதாகவும், தக்கன் அக்கண பதி தலையை வெட்டி விட்டதாகவும், சிவன் தனது இரண்டா வது பிள்ளையாகிய சுப்பிரமணியனை அனுப்பினதாகவும், அவன் போய்ப் பார்த்ததில் தலை காணப்படாமல் வெறும் முண்டமாய் கிடந்ததாகவும், உடனே ஒரு யானையின் தலையை வெட்டி வைத்து உயிர்ப்பித்ததாகவும் மற்றொரு கதை சொல்லப்படுகின்றது. இது தக்கயாக பரணி என்னும் புஸ்தகத்தில் இருக்கின்றதாம்.

எனவே, பிள்ளையார் என்னும் கடவுள் சிவனுக்கோ பார்வ திக்கோ மகனாகப் பாவிக்கப்பட்டவர் என்பதும், அந்தப் பிள்ளையாருக்கு யானைத் தலை செயற்கையால் ஏற்பட்ட தென்பதும் ஒப்புக் கொள்ள வேண்டிய விஷயமாகும்.

கடவுள் கூட்டத்தில் முதல்வரான பிள்ளையார் சங்கதியே இப்படிப் பலவிதமாகச் சொல்லப்படுவதும், அவைகளிலும்



எல்லா விதத்திலும் அவர் பிறரால் உண்டாக் கப்பட்டதாகவும், பிறப்பு, வளர்ப்பு உடை யவராகவும் ஏற்படுவதுமானதாயிருந்தால், மற்றக் கடவுள்கள் சங்கதியைப்பற்றி யோசிக்கவும் வேண்டுமா? நிற்க; ஒரு கடவு ளுக்குத் தாய் தகப்பன் ஏற்பட்டால், அந்தத் தாய் தகப்பன்களான கடவுள்களுக்கும் தாய் தகப்பன்கள் ஏற்பட்டுத்தானே தீரும்?

(இவைகளைப் பார்க்கும்போது, கடவுள்கள் தாமாக ஏற்பட்ட வர்கள் என்றால் எப்படி ஒப்புக் கொள்ளமுடியும்? ஆகவே, இந்தக் கடவுள்களும் உலகமும் ஏற்பட்டதற்கு வேறு ஆதாரங்க ளைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிருக்கின்றது.)

கடவுளைப்பற்றிய விவகாரங்களோ, சந்தேகங்களோ ஏற்ப டும்போது மாத்திரம் ''கடவுள் ஒருவர்தான்; அவர் நாம, ரூப, குணமற்றவர்; ஆதி அந்தமற்றவர்; பிறப்பு இறப்பு அற்றவர்.; தானாயுண்டானவர்'' என்று சொல்லுவதும், மற்றும் ''அது ஒரு சக்தி'' என்றும் பேசி அந்தச் சமயத்தில் மாத்திரம் தப்பித்துக் கொண்டு பிறகு இம்மாதிரி கடவுள்களைக் கோடிகோடியாய் உண்டாக்கி அவைகளுக்கு இதுபோன்ற பல ஆபாசக் கதை களை வண்டி வண்டியாய்க் கற்பித்து, அவற்றையெல்லாம் மக்களை நம்பவும், வணங்கவும், பூசை செய்யவும், உற்சவம் முதலியன செய்யவும் செய்வதில் எவ்வளவு அறியாமையும், புரட்டும், கஷ்டமும், நஷ்டமும் இருக்கின்றது என்பதை வாசகர் கள்தான் உணர வேண்டும்.

உதாரணமாக, ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகின்றோம். சிதம்ப ரக் கோயிலில் யானை முகங்கொண்ட ஒரு பிள்ளையார் சிலை செய்து, அதன் தும்பிக்கையை மற்றொரு பெண் சிலையின் பெண் குறிக்குள் புகவிட்டு, இக்காட்சியை யாவருக்கும் தெரி யும்படியாகச் செய்திருப்பதுடன், இந்தக் காட்சிக்குத் தினமும் முறைப்படி பூசையும் நடந்து வருகின்றது. பல ஆண் - பெண் பக்தர்கள் அதைத் தரிசித்து கும்பிட்டும் வருகின்றார்கள்.

சில தேர்களிலும், ஒரு பிள்ளையார் உருவம் தனது துதிக் கையை ஒரு பெண் உருவத்தின் பெண் குறியில் புகுத்தி அப்பெண்ணைத் தூக்கிக் கொண்டிருப்பது போலவும், அந்தப் பெண் இரண்டு காலையும் அகட்டிக் கொண்டு அந்தரத்தில் நிற்பதுபோலவும் செதுக்கப்பட்டிருக்கின்றது.



இவைகளைப் பார்த்த யாராவது இது என்ன ஆபாசம் என்று கேட்டால், இவைக ளுக்கு ஒரு கதையும் புராணமும் இருப்பதாக வும் சொல்லப்படுகின்றது.

அதாவது, ஏதோ ஒரு அசுரனுடன் மற் றொரு கடவுள் யுத்தம் செய்ததாகவும், அந்த யுத்தத்தில் தோன்றிய அசுரர்களையெல்லாம் அந்தக் கடவுள் கொன்றுகொண்டே வந்தும்,

தன்னால் முடியாத அளவு சூரர்கள் ஒரு அசுர ஸ்திரீயின் பெண் குறியிலிருந்து, ஈசல் புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல பல லட்சக்கணக்காய் வந்துகொண்டே இருந்ததாகவும், இதையறிந்த அந்தக் கடவுள் பிள்ளையார் கடவுளின் உதவியை வேண்டிய தாகவும், உடனே பிள்ளையாரானவர், ஈசல் புற்றிலிருந்து கரடி ஈசல்களை உறிஞ்சுவதுபோல் தனது தும்பிக்கையை அந்த ஸ்திரீயின் பெண் குறிக்குள் விட்டு அங்கிருந்த அசுரர்களையெல் லாம் ஒரே உறிஞ்சாக உறிஞ்சிவிட்டதாகச் சொல்லப்படுகின்றது. எனவே, இம்மாதிரியான காட்டுமிராண்டித்தன்மையான ஆபா சங்களுக்கு, கண்டவைகளையெல்லாம் கடவுள் என்று சொல் லும் "ஆஸ்திகர்கள்" என்ன பதில் சொல்லக்கூடும் என்று கேட்கின்றோம்.

"எவனோ ஒருவன் ஒரு காலத்தில் இப்படி எழுதி விட்டான்" என்று பொறுப்பில்லாமல் சொல்லிவிட்டால் போதுமா? இன் றைய தினமும் அவ்வெழுத்துக் கொண்ட ஆதாரங்கள் போற்றப் படவில்லையா? அன்றியும், பல கோயில்களில் உருவாரங்களா கத் தோன்றவில்லையா? இதை "எவனோ ஒருவன் செய்து விட்டான்" என்று சொல்வதானால், இவைகளுக்குத் தினமும் பெண்டு பிள்ளை வாகனம் முதலியவைகளுடன் பூஜைகள் நடக்கவில்லையா? என்பது போன்றவைகளைச் சற்று யோசித் துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

சீர்திருத்தக்காரர்கள் "அப்படி இருக்க வேண்டும்", "இப்படி இருக்க வேண்டும்" என்றும், "மதத்திற்கு ஆபத்து; சமயத்திற்கு ஆபத்து; கடவுள்களுக்கு ஆபத்து" என்றும் கூப்பாடு போட்டு மதத்தையும் கடவுளையும் காப்பாற்றவென்று அவைகளிடம் "வக்காலத்து" பெற்று மற்ற மக்கள் துணையைக் கோரும் வீரர்கள் யாராவது இதுவரை இந்த ஆபாசங்களை விலக்க முன்வந்தார்களா? என்றும் கேட்கின்றோம்.



இவற்றையெல்லாம்பற்றி எந்த ஆஸ்திக சிகாமணிகளுக்கும் ஒரு சிறிதும் கவலையில் லாவிட்டாலும், பிள்ளையார் சதுர்த்தி என் கின்ற உற்சவம் என்றைக்கு என்பதில் மாத்தி ரம் வாதத்திற்கும் ஆராய்ச்சிக்கும் குறை வில்லை என்று சொல்வதோடு, இந்த ஆபா சங்களையெல்லாம் ஒழிக்க முயற்சிக்காமல், சும்மா இருந்து கொண்டும், இவ்வாபாசங்க ளைப் பிரசங்கம் பண்ணிக் கொண்டும்

இருந்துவிட்டு, இதை எடுத்துச் சொல்பவர்களை நாஸ்திகர்கள் என்று சொல்லிவிடுவதாலேயே எந்தக் கடவுளையும் எந்த சமயத்தையும் காப்பாற்றிவிட முடியாது என்றே சொல்லுவோம்.


*(சித்திரபுத்திரன் என்ற புனைபெயரில் தந்தை பெரியார் அவர்கள் 26.8.1928 "குடி அரசு" இதழில் எழுதியது*

# 6. சுப்பிரமணியனது பிறப்பு

விஸ்வாமித்திரன், சுப்பிரமண்யனது பிறப்பைப்பற்றி ராமனுக்குக் கூறியது:-

*1.* சிவபெருமான் உமாதேவியைத் திருக்கலியாணம் செய்து, மோகங்கொண்டு, அவளுடன் 100 தேவ வருஷம் (மனித வருஷத்தில் பல யுகம்) புணர்ந்து கொண்டிருந்தனர். அவ்வளவு காலம் கழிந்தும் பார்வதி கர்ப்பம் அடையவில்லை. அது கண்டு நான்முகன் முதலிய தேவர்கள் சிவனிடத்தில் வந்து, "இவ்வளவு காலம் புணர்ந்த உம்முடைய தேஜஸ்ஸாகிய விந்து வெளிப்படுமானால் உலகம் பொறுக்கமாட்டாது. உம்முடைய விந்துவை தயவு செய்து விடாமல் நிறுத்திக் கொள்ளும்" என்று வேண்டவும், அதற்கிசைந்த சிவன் தனது விந்துவை மற்றபடி யார் தரிப்பது? எங்கு விடுவது? என்று கேட்க, தேவர்கள் பூமியில் விடும்படி சொல்ல, அந்தப்படியே சிவன் பூமியின்மீது விட்டு விட்டார்.

பூமி அதை தாங்கமாட்டாமல் பூமி முழுதும் கொதி கொண்டு எழ, தேவர்கள் அந்த வீரியத்தை பூமி தரிக்க முடியாது எனக் கருதி அக்கினியிடம் சென்று வேண்ட, அக்கினி வாயுவின் உதவியால் அவ்வீரியத்திற்குள் பிரவேசித்து, பிரம்மதேவன் கட்டளைப்படி அதை கங்கையில் கொண்டு சேர்ந்து, அவ்வீரியத்தைப் பெற்று ஒரு குழந்தை பெற வேண்டுமென்று கங்கையை வேண்ட, கங்கையும் அதற்குச் சம்மதித்து அவ்வீரியத்தைப் பெற, அவ்வீரியமானது கங்கை முழுவதும் பரவி நிறைந்துவிட, கங்கை அதை தாங்க மாட்டாமல் மறுபடியும் அக்கினியை வேண்ட, அக்கினி மனமிரங்கி கங்கையை நோக்கி, "ஏ, கங்கையே! நீ அடைந்த



சிவனின் வீரியத்தை தாங்க முடியாவிட்டால் பனிமலை அருகில் விட்டு விடு'' என்று சொல்ல, கங்கையும் அவ்வாறே அவ்வீரியத்தை பனிமலையின் அருகில்விட, அங்கு அது குழந்தையாகத் தோன்ற, அதை இந்திரன் பார்த்து அக்குழந்தைக்கு பால் கொடுதது வளர்க்க கிருத்திகா தேவிகளை ஏவ, அவர்கள் அதற்கு பால் கொடுத்து வளர்ந்து வரலானார்கள். பல இடத்தில் சிவனது வீரியம் ஸ்கலிதமானதன் பலனாக அக்குழந்தை உற்பத்தியானதால் அக்குழந்தைக்கு ஸ்கந்தன் என்றும், கிருத்திகா தேவிகள் ஆறு பேர்களுடைய பால் சாப்பிட்டதால் கார்த்திகேயன் என்றும், மேற்கண்ட ஆறுபேரின் முலையிலும் ஆறுமுகம் கொண்டு ஏககாலத்தில் பால் குடித்ததால் ஷண்முகன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

இவ்வாறு வால்மீகி இராமாயணத்தில் ''சிவன் பார்வதியை புணர்ந்தது'' என்று தலைப்பெயர் கொண்ட 36-ஆவது சருக்கத்திலும், ''குமாரசாமி உற்பத்தி'' என்கின்ற 37 ஆவது சருக்கத்திலும் காணப்படுகின்றது.

இரண்டாவது வரலாறு, தேவர்கள் சிவனிடம் சென்று அசுரர்களை அழிப்பதற்கு தகுந்த சக்திகொண்ட ஒரு குழந்தையைப் பெற்றுத் தர வேண்டுமென்று வேண்ட, சிவன் அருள்கூர்ந்து தனது அய்ந்து முகங்களுடன் மற்றும் ஒரு முகத்தையும் சேர்த்துக் கொண்டு தோன்ற, அவ்வாறு முகங்களின் உள்ள நெற்றிக்கண் ஆறிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் வெளியாக, அப்பொறிகளைக் கண்டு தேவர்களும், மனிதர்களும் நடுங்கி பரமனை வேண்ட, பரமன் அப்பொறிகளை கங்கையில் விடும்படி சொல்ல, அவர்கள் அப்படியே செய்ய, கங்கை அது தாங்க மாட்டாமல் அவைகளைக் கொண்டு சரவணத்தில் செலுத்த, அங்கு ஆறு குழந்தைகள் தோன்ற, அந்த ஆறு குழந்தைகளையும் கிருத்திகைப் பெண்கள் அறுவர்களும் பால் கொடுத்து வளர்த்து வந்தார்கள்.



பிறகு, சிவன் பெண் ஜாதி பார்வதிதேவி இந்த ஆறு குழந்தைகளையும் சேர்த்துக் கட்டி அணைத்து முத்தமிட்டுப் பாலூட்டு கையில் அவ்வாறு குழந்தைகளும், ஆறுமுகமும், பன்னிரண்டு கைகளும் கொண்ட ஒரே குழந்தையாக ஆகிவிட்டது. இதற்கு ஆறுமுகமுடையதால் ஆறுமுகன் என்றும், கங்கையாறு ஏந்திச் சென்றதால் காங்கேயன்

என்றும், சரவணப் பொய்கையில் தோன்றியதால் சரவணபவன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இது கந்தபுராணத்திலும், முருகன் கதையிலும் உள்ளது.

குறிப்பு: சுப்பிரமணியன் பிறப்புக்கு மேல்கண்டபடி இரண்டு கதைகள் காணப்பட்டாலும், கந்த புராணத்தின் கதைப்படி பார்த்தாலுமே, வால்மீகி இராமாயணத்தில் விஸ்வாமித்திரர் ராமருக்குச் சொன்னதாகச் சொல்லப்படும் மேற்கண்ட கதைதான் உறுதியாகின்றது. ஏனெனில், கந்தபுராணத்திலும் பார்வதியான வள் தன் மூலியமாய் பிள்ளை பெறுவதை தடுத்ததற்காக தேவர்கள்மீது கோபித்து தேவர்களை, "பிள்ளையில்லாமல் போகக்கடவது" என்று சபிக்கின்றாள் என்று காணப்படுகின் றது. சிவனது நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறி வெளியாகி அதிலிருந்து பிள்ளை உண்டாகியிருக்கும் பட்சத்தில், பார்வ திக்கு தேவர்களிடத்தில் கோபம் உண்டாகக் காரணம் ஏற்பட நியாயம் இல்லை.

இந்தக் கோபம் உண்டாவதற்குக் காரணம், வால்மீகி இராமாய ணத்தில் சொல்வதுபோல், அதாவது 100 தேவ வருஷம் சிவன் பார்வதியைப் புணர்ந்து கடைசியாக வீரியம் வெளிப்பட்டு கருத்தரிக்கும் சமயத்தில் தேவர்கள் குறுக்கிட்டு சிவனை தனது வீரியத்தை பார்வதி கர்ப்பத்திற்குள் விடாமல் நிறுத்திக் கொள் ளும்படி வேண்டினதால் சிவன் அதை எடுத்துக் கொண்டதற்கு பார்வதி கோபித்து, வீரியம் ஸ்கலிதமாகும் சமயத்தில் கொடுமை செய்ததற்காக அவர்களைச் சபித்தது, அதாவது தன்னைப்போ லவே தேவர்களுடைய பெண் சாதிகள் எல்லோரும் பிள்ளை யில்லாமல் மலடிகளாக வேண்டுமென்று சபித்ததாகக் காணப்ப டுவது நியாயமாக இருக்கின்றது.

அன்றியும், பார்வதி தனது கர்ப்பத்தில் விழ வேண்டிய வீரியத்தை பூமி பெற்றுக் கொண்டதால் பூமியையும் பார்வதி தனது சக்களத்திபோல் பாவித்து அவளையும் (பூமியையும்) பல பேர் ஆள வேண்டுமென்று சபித்ததாக வும், அதனாலேயே பூமிக்கு அடிக்கடி அரசர்கள் மாறுகிறார்கள் என்றும் வால்மீகி யில் காணப்படுகின்றதும் பொருத்தமாயிருக் கின்றது.



கந்த புராணமோ, மேல்கண்ட சிவன் 100 வருஷம் புணர்ந்த விஷயம் ஒன்றைத் தவிர மற்றவைகளையெல்லாம் ஒப்புக் கொள்ளு கின்றது.

ஆகவே, சுப்பிரமணியன் என்றும், சண்முகன் என்றும், கார்த்திகேயன் என்றும், ஸ்கந்தன் என்றும் சொல்லப்படும் சாமியானது மேல்கண்ட மாதிரி ஒரு பிறப்பு வளர்ப்புக்கு உள்பட்டது என்பது வைணவப் புராணங்களிலும் சைவப் புராணங்களிலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

*(சித்திரபுத்திரன் என்ற புனை பெயரில் தந்தை பெரியார் அவர்கள் 2.9.1928 'குடிஅரசு' இதழில் எழுதியது).*

# 7. ''புண்ணிய ஸ்தலங்கள்''

இதிகாசங்களைப் பற்றியும், புராணங்களைப் பற்றியும், கடவுள்களைப் பற்றியும் தனித்தனி மகுடமிட்டு ''குடி அரசில்'' எழுதிக் கொண்டு வருவதை வாசகர்கள் கூர்ந்து கவனித்து வாசித்து வருகின்றார்கள் என்றே எண்ணுகின்றேன். அவற்றை எழுதி வருவதன் நோக்கமெல்லாம், ஒரு சில சுய நலக்காரர்கள் தங்கள் நன்மையின் பொருட்டு எவ்வளவு ஆபாசமானவைகளையும், அசம்பாவிதமானவைகளையும் வெகு சாதாரணமானவைகளையும் எழுதி வைத்துக் கொண்டு பிரமாதப்படுத்தி, அவற்றையே மதம் என்றும், பக்தி என்றும், மோட்சத்திற்கு மார்க்கம் என்றும் பாமர மக்களை நம்பும்படியாகச் செய்து, மக்கள் அறிவையும், சுதந்திரத்தையும், சுயமரியாதையையும், ஒற்றுமையையும் கெடுத்து வருகின்றார்கள் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டி, மக்கள் யாவரும் சமம் என்பதையுணர்ந்து சுயமரியாதையோடு வாழ வேண்டுமென்பதுதான்.

மேற்படி சுயநலக்காரர்கள் சிற்சில இடங்களைப் பெரிய புண்ணிய ஸ்தலம் என்பதாக பெயர் கொடுத்து, அவற்றிற்கு ஏராளமான யோக்கியதைகளைக் கற்பித்திருப்பதை, பகுத்தறிவற்ற மூட ஜனங்கள் புண்ணிய ஸ்தல யாத்திரை என்பதாகக் கருதி வெகு பணங்களைச் செலவு செய்து கொண்டு அந்தந்த ஊர்களுக்குப் போய் புத்தியையும், தங்கள் காலத்தையும் பணத்தையும் வீணில் பறி கொடுத்து விட்டு வருவதுடன், தாங்கள் இதுவரை செய்த அக்கிரமங்களும், அயோக்கியத்தனங்களும் இந்த யாத்திரையில் மன்னிக்கப்பட்டுவிட்டதாகக் கருதி, மேலும் மேலும் புதிய அக்கிரமங்களையும், அயோக்கியத்தனங்களையும்



செய்ய தைரியமுடையவர்களாக ஆக இடம் கொடுத்து வருகிறது.

ஸ்தல யாத்திரை என்று சொல்லப்பட்டு வந்ததானது ஒரு காலத்தில் மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கும் உலக அனுபவப் பயிற்சிக்கும் அனுகூலமாகத் தக்கினதாய் இருந்திருக்கலாம். எப்படியெனில், ரயிலும் போக்குவரத்து வசதியும் இல்லாத காலத்தில் மக்கள் ஒரே இடத்தில் இருந்து கொண்டிருந்ததால், உலக அனுபவம் தெரிந்து கொள்வதன் பொருட்டு வெளியிடங்களைச் சுற்றிப் பார்த்து வருவதற்காக ஸ்தல யாத்திரை என்பதின் பேரால் போய் வரும் வழக்கம் அனுகூலத்தைக் கொடுத்திருக்கலாம்.

ஆனால், இப்போது ரயில் வசதி ஏற்பட்டுவிட்டதாலும், சுலபத்தில் ஒவ்வொரு இடத்து சங்கதிகளும் தன்மைகளும் பத்திரிகைகளின் மூலமாய் தெரிந்து கொள்வதற்கு அனுகூலமாய் இருப்பதாலும், இப்போது புண்ணிய ஸ்தல யாத்திரை என்பதின்பேரால் அனாவசியமாக மக்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை என்றே சொல்லுவோம். தற்காலத்திய புண்ணிய ஸ்தல யாத்திரைகளின் யோக்கியதைகளைப்பற்றியும், யாத்திரைக்காரர்களின் யோக்கியதைகளைப்பற்றியும், புண்ணிய ஸ்தலங்களிலுள்ள பண்டாரங்கள், பூசாரிகள், குருக்கள் முதலியவர்கள் யோக்கியதைகளைப்பற்றியும், அதனால் மக்களுக்கு ஏற்படும் கஷ்ட, நஷ்டங்களைப்பற்றியும் நாம் அதிகமாக விவரிக்க வேண்டியதில்லை. ஏனெனில், அது பல தடவை ''குடி அரசி''லேயே பல தலைப்பின்கீழ் வந்திருக்கின்றது. ஆதலால், அந்த ஸ்தலங்களின் பெருமைகள் என்பவைகளைப்பற்றி மாத்திரம் எழுதலாம் என்று இந்த வியாசம் தொடங்குகின்றேன்.

## பண்டரிபுரம்

முதல் முதல் பண்டரிபுரம் என்பதின் யோக்கியதையைப்பற்றி எழுதத் துணிகின்றேன்.



பதும புராணத்தில் உமாதேவியின் அறிவு பிரகாசிக்கும் பொருட்டு சிவபெருமான் சொல்லியருளிய பண்டரிபுரத்தைப் பற்றிய கதையை ஸ்ரீதரர் விஸ்தரிக்கிறார்.

கைலாச பர்வதத்தில் ஓர் காலத்தில் எழுந்தருளியிருந்த போது உமாதேவியார் சிவபெரு

மானை நோக்கி ''நிலவுலகில் பண்டரிபுரத்தில் திருமால் நித்யவாசம் செய்வது யாது காரணத்தால்?'' என்று கேட்டதாகவும், அதற்கு சிவபெருமான் சொல்வதாகவும் கதை ஆரம்பிக்கப்படுகிறது.

*1.* கொடி போல்பவளே! திருமாலானவர் வைகுந்தத்தில் வீற்றிருக்கும் காலத்தில் இந்திராணி அவரைக் கண்டு மோகித்து ''இறைவனே! நான் உமது மடியிலிருக்க வேண்டுமென்று அபேட்சிக்கிறேன்'' என்று பிரார்த்திக்க, திருமால் இரக்கங் கொண்டு, ''நீ பூலோகத்திற்குப் போய் 60,000 வருடம் தவம் செய்தால் நான் துவாரகாபுரியில் கிருஷ்ணாவதாரம் செய்து உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்வேன்'' என்று சொல்ல, இந்திராணி அப்படியே நிலவுலகில் சென்று 60,000 வருடம் தவம் செய்து, கோகுலத்தில் ராதையாகப் பிறந்து வளர்ந்து, திருமால் கிருஷ்ணனாக அவதரித்து எழுந்தருளியிருக்கும் துவாரகாபுரிக்குச் சென்று அவரை வணங்க, கிருஷ்ணன் ராதையை இன்னாளென்று அறிந்து வாரியெடுத்து தன் மடிமீது வைத்துக் கொள்ள, இதைக் கண்ட கிருஷ்ணனின் மனைவியான ருக்மணி கோபங்கொள்ள, அதைக் கண்டு ராதை கிருஷ்ணனை விட்டு நீங்கி திண்டீரவனத்திற்குப் போய் கிருஷ்ணன் தனக்கு கணவனாக வேண்டுமென்று தவம் செய்ய, கிருஷ்ணன் ருக்மணியைவிட்டு விட்டு துறவி வேடம் பூண்டு ராதையைத் தேடித் திரிந்து கடைசியாக திண்டீரவனம் என்கின்ற ஓர் வனத்தில் அவளைக் கண்டு ''பிராணநாயகி! என்னைத் தனியேவிட்டு இக்கொடிய வனத்திற்கெவ்வாறு வந்தனை?'' என்று கேட்க, ராதையானவள் கிருஷ்ணனைப் பார்த்து, ''உன்னைப் பார்த்தாலே நீ ஒரு வஞ்சகனென்று தோன்றுகிறது; ஆதலால், நீ இங்கு நில்லாமல் ஓடிப் போ'' என்று சொல்ல, கிருஷ்ணன் மதிமயங்கி தன் கைத்தடியை முழங்கால்களினால் இடுக்கிக் கொண்டு, இடுப்பில் கையை வைத்து, மூக்கின் முனையில் தன் பார்வையை வைத்து விருப்பத்தோடு இன்றைய வரையும் அதாவது *28* துவாபரயுக காலம் ராதையின் முன் நிற்கின்றான்.



*மேலும் பார்வதி!*

*2.* திண்டீரனென்ற கொடிய அசுரன், சூரியனைத் தன் தேர்மீது ஏறிச் செல்ல வொட்டாமல் தடுத்து, தொந்தரவு செய்து கொண்டிருந்தான். ஆகவே, தேவர்கள் திரு

மாலையடைந்து இந்தச் செய்தியை விண்ணப்பஞ் செய்ய, திருமால் மல்லிகார்ஜுனனாக் சந்திரன் என்னும் அரசனிடம் பிறந்து வளர்ந்து வேட்டையாட, மேற்படி திண்டீரனென்னும் அசுரன் வசித்த திண்டீரவனம் சென்று அவனோடு ஆயிரம் வருஷம் போர் செய்தும் அவன் தோற்காமலிருக்க, கடைசியாக லோக தண்டம் என்னும் கதாயுதத்தைக் கைக் கொண்டு அவனையடித்து பூமியில் வீழ்த்தினார். அவன் உயிர்விடும் போது ''ஸ்ரீஹரி'' என்று உச்சரிக்க மல்லிகார்ஜுனன் உடனே திருமாலாக மாறி அவ்வசுரனை நோக்கி, ''உன்னை வேண்டிய வரங்களைக் கேட்டுக் கொள்'' என்று அருள, அவ்வசுரன் ''இவ்வனம் லோகதண்டமென்று விளங்கவும், இதில் அழகிய நகர் ஒன்று உண்டாக்கி, நான் இறந்த இடத்தில் என் பேரால் ஒரு தீர்த்தமுண்டாக்கி, அதனிடத்தில் உன் கதாயுதத்தை நிறுத்தி, அந்தத் தீர்த்தத்தில் மூழ்கி, அக்கதாயுதத்தை ஆலிங்கனம் செய்வோர்களுடைய பாபங்களை நிவர்த்திக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொள்ள, திருமாலும் அவ்வரத்தைக் கொடுத்து அசுரனுக்கு வைகுண்டு லோகத்தை அளித்தார். அன்றுமுதல் அந்த வனமானது ''லோகதண்டம்'' எனவும் பெயர் பூண்டு விளங்கிக் கொண்டிருக்கிறது.

மேலும், கேளும் பார்வதி!

3. அவ்வனத்தில் ஜன்ஹு என்ற ஒரு வேதியர் ஸாத்யகி என்பவளோடு இல்லறம் செய்து கொண்டு வருங்காலத்தில், புத்திரரில்லாமையால் நெடுங்காலம் தவம் செய்து ''புண்டலீகா'' என்ற ஒரு அழகிய மைந்தனைப் பெற்றார். புண்டலீகன் வயதடைந்தபின் அவனுக்கு மணம் செய்வித்து மகிழ்ந்திருந்த னர். புண்டலீகனோ வெகு துஷ்டனாகி தாய் தந்தையரை வைது, அடித்து, துரத்தி விட்டு தன் மனைவியோடு தனியே வாழ்ந்திருந்தனன். துரத்தப்பட்ட தாய் தந்தையர் காசிக்குப் போக எண்ணிப் புறப்பட்டனர். புண்டலீக னும் அவனது மனைவியும் குதிரை மீதேறிக் கொண்டு பின் தொடர்ந்தனர். தாய் தந்தை யர் நடக்கமாட்டாமல் தள்ளாடிக் கொண்டு போவதைப் பார்த்தும் புண்டலீகனுக்கு மன மிரங்காமல் பார்த்துக் கொண்டே போய் காசிக்கருவில் ஒரு சோலையில் குக்குடர் என்னும் ஓர் முனிவரது ஆசிரமத்தின் அரு கில் இறங்கினான்.



அந்தக் குக்குட முனிவர், தம் தாய் தந்தையரையன்றி வேறு தெய்வமில்லை என்று துணிந்து, இரவும் பகலும் அவர்களுக்கு சேவை செய்பவர். இப்படிப்பட்ட அவரது ஆசிரமத்தில் புண்ட லீகன் அன்றிரவு தங்கியிருந்தான். அப்படியிருக்கையில், கோரரூ பங் கொண்ட மூன்று பெண்கள் நள்ளிரவில் அவ்வாசிரமத்திற் குள் புகுந்து, அதிலுள்ள குப்பைகளைக் கூட்டி தரையை மெழுகி கோலமிட்டு, அலங்கரித்து, ஒரு கணத்தில் தம் கோரரூ பம் நங்கி சவுந்தர்யவதிகளாய் வெளி வந்தனர்.

இதைக்கண்ட புண்டலீகர் இவர்களை பேய்களோ, தேவதை களோ என எண்ணி ஆச்சரியமும் பயமும் கொண்டு, கடைசி யாக ஒருவாறு பயந்தெளிந்து அம்மாதர்களிடம் அணுகி "நீங் கள் யாவர்?" என்று கேட்க, அவர்களில் ஒரு மாது "அடா பாவி! நீ முற்பிறவிகளில் செய்த நல்வினைப் பயனே உன்னை இம்முனிவரிடம் கொண்டு வந்து விட்டது. அவரைக் கண்ட புண்ணியத்தால் எங்களையும் கண்டாய். இனி நீ எந்தப் பாவமும் தொடரப் பெறாதவனாய் பரிசுத்தனாகக் கடவை! நாங்கள் கங்கை, காளிந்தி, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகள் இந்த உருக்கொண்டு வந்திருக்கின்றோம். எங்களிடத்தில் மூழ்கு வோருடைய பாவங்களையெல்லாம் நாங்கள் ஏற்று அதனால் கோர ரூபங்கொண்டு, அந்த ரூபத்தை, பரிசுத்த ஆத்மாவாகிய இந்த குக்குட முனிவருக்கு ஊழியம் செய்வதனால் மாற்றி நல்ல ரூபங்கொண்டு போகிறோம். இவர் தமது தாய் தந்தையரை வழிபடுகிற புண்ணியமே எங்கள் பாவத்தை போக்கிற்று" என்று சொல்லிச் சென்று விட்டனர்.

பின்பு புண்டலீகர் குக்குடரிடம் விடை பெற்றுக் கொண்டு தாய் தந்தையரைத் தேடினார். தேடிக் கண்டு அவர்களைத் தமது குதிரை மீதில் ஏற்றிக் கொண்டு, புண்ணிய தீர்த்தங்களில் மூழ்குவித்து, தம் ஊருக்கு வந்து தாமும் தம் மனைவியும் அத்தாய் தந்தையருக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தார்கள்.



இப்படியிருக்க, பூர்வயுகத்தில் 'விருத்தி ரன்' என்பவன் தேவராஜனாகிய இந்திர னைக் கொல்ல நினைத்து பாதாள லோகத் தில் தவம் செய்து கொண்டிருந்தான். இதை யறிந்த இந்திரன் பாதாள லோகம் சென்று தன் வஜ்ராயுதத்தால் அவன் தலையைச் சேதித்து வீழ்த்தினான். அப்பொழுது

விருத்திரன் ''தவம் செய்யும்போது தலையை அறுத்த பாவத்தால் நீ செங்கல்லாய்ப் பூமியில் விழக் கடவை'' என்றான்.

இந்திரன் செங்கல்லாய் விழுமுன்னே திருமால் மகிழும்படி தோத்திரம் செய்ய, திருமால் மகிழ்ந்து, ''தேவராஜனே, நான் புண்டலீகாஸ்மரத்தில் வந்து செங்கல்லுருவாய்க் கிடக்கிற உன் மேல் அடிவைத்து உன்னைப் பூர்வரூபமாய்ச் செய்கிறேன். அஞ்சவேண்டாம்'' என்றனர். அன்று முதல் இந்திரன் புண்டலீகர் வசிக்கும் திண்டீரவனத்தில் செங்கல்லுருவாய்க் கிடந்தான்.

இப்படியிருக்க, திருமால், புண்டலீகர் தாய் தந்தையரை வழிபட்டுக் கொண்டிருக்குஞ் சமயம் அவருக்குப் பின்புறம் வந்து நின்றார். அப்போது திருமாலின் ஒளி புண்டலீகரின் தந்தையாரின் பாதத்தில் படவே, புண்டலீகன் திரும்பிப் பார்த்து அருகிற்கிடந்த ஒரு செங்கல்லை எடுத்தெறிந்து ''இதன்மீது சற்று நேரம் நில்; என் வேலையை முடித்து வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு, தாய் தந்தையருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்துவிட்டு திருமாலிடம் வந்து வணங்கினான். திருமால், ''உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று புண்டலீகனைக் கேட்க, அவன் ''தேவரீர்! இந்த இடத்தை என் பெயர்ச் சார்பினால் பண்டரிபுரமென்ற பெயருடையதாய்ச் செய்து, இத்தலத்தில் எல்லாவற்றிலும் சிறந்த தீர்த்தமொன்றையுமுண்டாக்கி, அதில் மூழ்கி உன்னை வணங்குவோர் யாவரும் பாவ விமோசனம் அடைந்து, பரிசுத்தராகும்படி இத்தலத்தில் தேவரீரும் பாண்டுரங்கன் என்னும் நாமத்துடன் நித்யவாசம் செய்ய வேண்டும்'' என்று வேண்ட, திருமாலும் அவ்வரத்தையருளினார்.

திருமாலின் அடியில் செங்கல்லாகக் கிடந்த இந்திரன் நற்பதவியடைந்து தேவதச்சனை வரவழைத்து அத்தலத்தில் ஒரு அழகிய நகரமும், விமானமும் செய்யச் செய்து திருமாலை மகிழ்வித்தான். அந்நகரமே இப்பண்டரிபுரம்; திருமாலே இப்பண்டரிநாதன். சந்திரபாகை என்னும் நதியே இத்தீர்த்தம் என்று சிவபெருமான் சொன்னாராம்.



மேல்கண்ட வரலாறுகளிலிருந்து, திண்டீரவனமென்ற ஒரு வனம் எப்படி லோகதண்டமென்றும், பண்டரிபுரமென்றும் பேர் பெற்றன என்பதும், திருமால் பாண்டுரங்கன்

என்று பேர் பெற்றனர் என்பதும் காணக்கிடக்கின்றதுடன், திருமால், தேவராஜனாகிய இந்திரன், இந்திராணி முதலிய நம் இந்து தெய்வங்களெனப்படுபவைகளின் யோக்கியதையும் வெளியாகின்றது. ''தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய இந்திர' னுடைய மனைவி இந்திராணி தன் கணவனை அலட்சியம் செய்து விட்டு திருமாலைக் கண்டு மோகிக்கிறாள். 'லோக ரட்சகராகிய திருமாலும்'' தமது மனைவி லட்சுமியை அலட்சி யம் செய்து விட்டு, பிறன் மனையாளாகிய இந்திராணியைத் தம் மடிமீது எடுத்து வைத்துக் கொள்கிறார். அவளுக்காக மாறுவேடம் பூண்டு காமப்பித்தேறி அலைகிறார். அப்பித்தால் 28 துவாபர யுக காலம் இந்திராணியின் முன்னிலையில் மதிமயங்கி நிற்கிறார். என்னே ''பரம்பொருளாகிய திருமால்'', ''தேவராஜன் மனைவி இந்திராணி'' இவர்களின் ஒழுக்கம்!

கேவலம் ஒரு அசுரனைக் கொல்ல திருமால் ஆயிரம் வருடம் போர் செய்தும் வெல்ல முடியாமல், கடைசியாக சூழ்ச்சியாக தம்மிடமுள்ள லோக தண்டத்தால் அவனைக் கொன்றார் என் றால் ''எல்லாம் வல்ல திருமாலின்'' சக்தியும் நேர்மையுந்தான் என்னே!

ஆயிரம் வருடம் போர் செய்தும் தம்மால் வெல்ல முடியாத ஒருவருக்கு திருமால் வைகுண்டபதவி அளித்தார் என்பது கொஞ்சமும் பொருந்தாது என்பதை நாம் வாசகர்களுக்கு எடுத் துச் சொல்ல வேண்டியதில்லை.

கங்கை, காளிந்தி, சரஸ்வதி ஆகிய நதிகளில் குளித்தவர்களு டைய பாவங்களையெல்லாம் அந்நதிகள் ஏற்றுக் கொள்கின்றன வென்பதும், அப்படி குளித்து தம்மை புகழ்ந்தவர்களுக்கெல் லாம் திருமால் முக்தி அளித்தனர் என்பதும் உண்மையென்று நம்பினவர்கள், என்ன பாவம் செய்தாலும், கங்கையில் மூழ்கி திருமாலைப் புகழ்ந்துவிட்டால் அப்பாவங்களெல்லாம் ரத்தாகி முக்தி வந்துவிடும் என்று மேலும் மேலும் அக்கிரமங்கள் செய்வார்களா, மாட்டார்களா?



நிற்க; தேவராஜனாகிய இந்திரனுடைய யோக்கியதையைப் பாருங்கள். அவன், விருத்திரன் கண்ணை மூடிக் கொண்டு தவம் செய்து கொண்டிருக்கிறபோது அவனை வஜ்ராயுதத்தால் அடித்துக் கொல்கிறான்.

இப்படிப்பட்ட கொடும்பாதகன் திருமாலைப் புகழ்ந்து, விருத்திரன் கொடுத்த சாபத்தைப் போக்கிக் கொள்கிறான்!

ஆச்சர்யம்! பாவமன்னிப்பு டிக்கட்டும் மோட்சலோக டிக்கட்டும் இவ்விந்து மதத்தில் கிடைப்பதுபோல வேறு எந்த மதத்திலும் இவ்வளவு சுலபமாகக் கிடைப்பதில்லை. செங்கல், நதி முதலியவைகள் மனிதர்களாகவும், மனிதர்கள் நதி, கல் முதலியவைகளாகவும் திடீர் திடீரென்று மாறுகின்றனர். இவைகளெல்லாம் ஆதாரமாகக் காட்டப்படும் இந்துமத கடவுள்கள், புராணங்கள் - முதலியவைகளையெல்லாம் நம்பாவிட்டால் நாத்திகமாம்! மேற்கண்ட கதைகளை ஆதாரமாகக் கொண்ட பண்டரிபுரத்திற்குத்தான் நம் பாமர மக்கள் - பகுத்தறிவில்லா மக்கள், லட்சக்கணக்கான ஒவ்வொரு வருடமும் பிச்சையெடுத்துக் கொண்டாவது போய் விடுகிறார்கள். இப்படிப் போய் வருவதில் இவர்கள் செலவிடும் காலமும் பணமும் கணக்கிடப்பட முடியாது. அரிய காலத்தையும் பொருளையும் செலவிடுவதன்றி, ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளலாகிய ஒழுக்கக் குறைவுகளுக்கும் உட்பட்டு, சீதோஷ்ண மாறுதலினாலும், ஆகார மாறுதலினாலும் நோய் வாய்ப்பட்டு, ரயிலில் இடிபட்டு, எல்லா உணர்ச்சியுமற்று, கோவிந்தா! கோவிந்தா! என்ற வாய் வார்த்தையோடு ஊர் வந்து சேருகிறார்கள்.

அந்தோ! இப்பண்டரிபுர யாத்திரைக்குச் செலவிடும் காலத்தையும் பணத்தையும் ஏழை மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்குமான கல்விக்குச் செலவழித்தால் பண்டரிநாதன் நம் கண்ணைக் குத்திவிடுவானா? பகுத்தறிவைக் கொண்டு யோசித்துப் பாருங்கள்.

பண்டரிபுரம் வைணவர்களுக்கு மிகவும் முக்கியமான ஸ்தலம். அந்த ஸ்தல புராணத்தில் ஒரு சமயம் அந்த முக்கியத்துவத்திற்கு ஏற்ற காரணம் ஏதாவது குறிப்பிட்டிருக்கக் கூடுமோ என்பதாக சந்தேகப்படக் கூடுமானாலும், வைணவ பக்தர்களின் சரித்திரத்தைப்பற்றிச் சொல்லும் பக்த விஜயம் என்னும் புஸ்தகத்தின் சுருக்கமாகிய பக்த லீலாமிர்தம் என்னும் புத்தகமானது, சைவர்களுக்கு எப்படி சைவ பக்தர்களின் சரித்திரத்தைச் சொல்லக்கூடியதான சைவ புராணமாகிய பெரிய புராணமோ, அதுபோல் - ஏன்,



ஒரு விதத்தில் அதைவிட முக்கியமானதென்றுகூட சொல்லலாம். எப்படி எனில், பெரிய புராணம் என்பது சுந்தரமூர்த்தி சுவாமி என்கிற ஒருவர் பாடிய ஒரு பாட்டிலிருந்த பக்தர்களின் பெயரைத் தெரிந்து அதற்கு ஆதாரமாக நம்பியாண்டார் நம்பி என்பவர் பாடிய ஒரு சில - அதாவது ஒரு நூறு பாட்டைக் கொண்டு நாலாயிரத்துச் சில்லறைப் பாட்டுகளாக்கி, அவற்றிற்கு வேண்டிய சங்கதிகளை தமது சொந்த அபிப்பிராயமாக நுழைத்துப் பாடிய புஸ்தகமாகும். அதுவும், சமணர்களுக்கு விரோதமாய் அவர்கள்மீதும் அவர்களது குற்றமற்ற நூல்களின்மீதும் உள்ள துவேஷத்தாலும் தமது சமயவெறியாலும் கற்பிக்கப்பட்டது என்றுகூடச் சொல்ல இடமுள்ளதாகிய நூல். பக்த விஜயமோ அப்படிக்கில்லாமல், ஏதோ ஒரு முனிவர் ஏதோ ஒரு ஆசாமிக்கு எல்லா சங்கதிகளும் சொன்னதாகவும், சிவன் பார்வதிக்குச் சொன்னதாகவும் எழுதிய புஸ்தகம். ஆனதால், சேக்கிழார் என்கின்ற ஒரு மனிதன் சொன்னதைவிட, சிவன், முனிவர் என்கின்றவர்கள் சொன்னது என்பது உயர்ந்தது என்பதில் இவற்றை நம்பும் பக்தர்களுக்கு சிறிதும் சந்தேகமிருக்க நியாயமில்லை.

எனவே, இப்பேர்ப்பட்ட புஸ்தகத்தில் உள்ளதையே தான் எடுத்து எழுதி இருக்கிறதே ஒழிய மற்றப்டி நமதபிப்பிராயம் என்பதல்ல.

ஜகநாதம்

ஜகநாதம் என்பதைப்பற்றி சிறிது ஆராயலாம்.

ஜகநாதம் என்பது இந்தியாவில் உள்ள புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் மிக முக்கியமானது என்று சொல்லப்படுவது - இந்துக்கள் என்போர்களில் தென்னாட்டில் உள்ள சைவர்களில் யாரோ ஒரு சிலரால் மதத்துவேஷம் காரணமாக ஜகநாதம் ஒரு சமயம் அலட்சியமாகக் கருதப்பட்டாலும், இந்தியாவில் உள்ள



பெரும்பாலோரான இந்துக்கள் என்பவர்கள் எல்லோராலுமே முக்கிய ஸ்தலமாகக் கருதப்படுவது. அந்த ஸ்தலத்தின் முக்கியத்துவத்திற்கு உதாரணம் என்னவென்றால், அந்த ஜகநாதம் என்கின்ற ஊரின் எல்லைக்குள் ஜாதி வித்தியாசம் பார்க்கக் கூடாது என்று சொல்லுவார்கள். அதற்கு உதாரணமாக அந்தக் கோயில் பூஜை பண்ணுகின்றவர்கள்

அந்தப் பக்கத்திய நாவிதர்கள். அவர்கள் குளத்தருகில் அடைப் பத்துடன் நின்று கொண்டு க்ஷவரம் செய்வார்கள். பிறகு கோயிலில் பூசாரியாகவும் இருப்பார்கள். அந்தக் கோயிலில் பூசை செய்யும் உரிமையே அந்த ஊரிலுள்ள நாவித வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குத்தான் உண்டு என்கின்றார்கள். அங்கு சுவா மிக்கு முன்னால் சாப்பாட்டை மலைபோல் குவித்து ஆராதனை செய்வார்கள். அந்தச் சாதத்தை பூசாரிகள் பங்கு பிரித்து எடுத்துக் கொண்டு வெளியில் வந்து விற்பார்கள். யாத்திரைக்கா ரர்கள் யாராயிருந்தாலும் அதை வாங்கிச் சாப்பிட வேண்டும். மற்றபடி கடையிலும் சாதத்தை சட்டியில் வைத்து விற்பார்கள். ஜாதி வித்தியாசம் என்பதில்லாமல் யாரும் வாங்கிச் சாப்பிடுவார் கள். தவிர, அந்த ஸ்தல எல்லைக்குள் எச்சில் வித்தியாசம் பார்க்கக் கூடாது என்பார்கள். இலையில் உள்ள சாப்பிட்ட மீதியை எடுத்து திரும்பவும் சட்டிக்குள் போட்டுக் கொள்ளுவார் கள். கடைகளில் விற்பனைக்காக வைத்திருக்கும் சாதச்சட்டியில் யாரும் கைவிட்டு சாதத்தை எடுத்து வாயில் போட்டுப் பார்த்து மீதியை சட்டியிலேயே போட்டுவிடலாம் அதை யாரும ஆட்சே பிக்க மாட்டார்கள்.

ஜெகநாதத்திலுள்ள அந்த ஜெகநாதர் கோயிலுக்குள் யாரும் போகலாம்; சாமியைத் தொடலாம்; சாமியைச் சுற்றலாம்; காலைத் தொட்டுக் கும்பிடலாம். இது மாத்திரமல்லாமல், அந்த எல்லைக்குள் யாரும் திதி, விரதம், தர்ப்பணம் முதலிய அனுஷ் டானங்கள் ஒன்றும் செய்யக்கூடாதாம். செய்தால் பாவமாம். அன்றியும், அங்குள்ள சாமிகள் கிருஷ்ணன், பலராமன், சுபத் திரை ஆகிய மூவர்கள். அதாவது மற்ற இடங்களைப் போல் சாமி புருஷன் பெண் ஜாதியுடன் இல்லாமல் அண்ணன், தம்பி, தங்கை ஆகிய மூன்று பேர்களும் தங்கையாகிய சுபத்திரையை நடுவில் வைத்து அண்ணன் மார் இருவர்களும் இரு பக்கத்தில் நிற்கின்றார்கள். இதுவும் மரக்கட்டையில் அரைகுறையாய் செய்த உருவங்கள்தான், விக்கிரகங்கள்.



இந்த ஊரைப்பற்றிச் சொல்லும்போது 'சர் வம் ஜகநாதம்' என்று சொல்லுவது ஒரு வழக்கம். அதாவது, எந்தவிதமான வித்தியா சமும், அதாவது ஜாதி, மதம், எச்சில், விரதம், முறை முதலிய வித்தியாசம் அந்த எல்லைக்குள் இல்லை என்பதைக் காட்டுவ தற்காகச் சொல்லுவது. இதற்கு ஆதாரமாக

இரண்டு விதமான கதைகள் சொல்லப்படுவதுண்டு. ஒன்று, இப்படி விஷ்ணு என்னும் முழுமுதற் கடவுளின் அவதாரமாகிய கிருஷ்ணன் என்னும் கடவுள் இறந்த பிறகு அந்தக் கடவுளின் பிணத்தை துவாரகைச் சுடுகாட்டில் வைத்து தகனம் செய்து அது எரிந்து கொண்டிருக்கையில் திடீரென்று சமுத்திரம் பொங்கி யதால் துவாரகை முழுவதும் தண்ணீருக்குள் ஆழ்ந்துவிட்ட போது இந்தக் கடவுளின் பிணமும், எரிந்து கொண்டிருந்த சுடுகாடும் தண்ணீருக்குள் மூழ்க நேரிட்டதால், அரைகுறையாய் வெந்த பிணக்கட்டையானது தண்ணீரில் மிதந்து கரை ஓரமாய் ஒதுங்கியதாகவும், அந்த ஊருக்கு ஜகநாதம் என்று சொல்லப் பட்டதாகவும், அநத ஊரார் அந்தக் குறை பிணத்தை எடுத்து அதன் சக்தியை ஒரு மரக்கட்டையில் ஏற்றி அம்மரக்கட்டையில் இருந்து குறை பிணம் போலவே ஒரு உருவம் செய்து அதை வைத்து பூசித்து வருவதாகவும், அந்த ஸ்தலத்தின் சரித்திரம் சொல்லுகின்றது.

மற்றொன்று, கிருஷ்ணபகவானின் லீலா விநோதங்களில் ஒன்றாகிய கோபிகைகளுடன் கூடி குலாவி வருவதை கிருஷ்ண பகவானின் தங்கையாகிய சுபத்திரை பார்த்து பொறாமைப் பட்டு, ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் சென்று "ஓ அண்ணாவே! நீ எவ்வளவோ அழகாகவும், பெருமை உள்ளவனாகவும் இருக்கின்றாய். உன்னுடன் கூடி அனுபவிக்கும் பெருமை கோபிமார்கள் எல்லோரும் பெற்று அனுபவித்து வருகின்றார் கள். ஆனால், நானோ உனக்கு தங்கையாகப் பிறந்துவிட்ட காரணத்தினால் அந்த சுக போகத்தை அடைய யோக்கியதை யில்லாதவளாய்ப் போய் விட்டேனே" என்று துக்கப்பட்டதாக வும், கிருஷ்ணபகவான் பார்த்து, "உலகத்திலேயே மிகவும் புண்ணிய பூமியாகிய ஜகநாதம் என்கின்றதாக ஒரு ஸ்தலம் இருக்கின்றது. அங்கு எந்தவிதமான வித்தியாசமும் கிடையாது; எந்தவிதமான செய்கைக்கும் பாவம் கிடையாது; ஆதலால் அந்த



ஜகநாதத்திற்குப் போய் எல்லாவிதமான சுகங்களையும் அனுபவிக்கலாம்" என்பதா கச் சொல்லி ஜக நாதத்திற்கு வந்து கிருஷ் ணன், சுபத்திரை, பலராமர் ஆகிய சகோதர சகோதரிகள் ஒன்று சேர்ந்து இருப்பதாகவும் ஒரு கதையை ஜெகநாத பண்டாக்கள் ஸ்தல மகிமையைச் சொல்லும் முறையில் சொல்வ துண்டு.

எனவே, இந்தக் கதையும் பொருத்தமானதாகயிருக்கலாம் என்கின்ற மாதிரியில்தான் அங்கு மற்ற விஷயங்களும் இருக்கின்றன. அதாவது, தீட்டு இல்லை; ஜாதி வித்தியாசமில்லை; விரதாதி அனுஷ்டானம் இல்லை; எச்சில் வித்தியாசமில்லை என்பது போன்ற பல விஷயங்கள் இருப்பதுடன், அண்ணன் மாரும் தங்கையும் ஒன்றாய் இருந்தாலும் இருக்கலாமாம். அன்றியும், அந்த ஸ்தலத்திற்கு அதிகமான யோக்கியதை கொடுக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தின்பேரில் இப்படி ஒரு கற்பனை செய்து இருந்தாலும் இருக்கலாம். சாதாரணமாக சைவ சமயத்திலும், ஒரு ஸ்தலத்தையோ தீர்த்தத்தையோ ஒரு சாமியையோ பெருமைப்படுத்துவதில் இதுபோன்ற அல்லது இந்த தத்துவம் கொண்ட கதைகள் சொல்லப்படுவதையும் பார்க்கின்றோம். அதாவது, திருவிளையாடல் புராணத்தில் ஒருவன் தன் தாயைப் புணர்ந்ததுடன், தகப்பன் கண்டு கோபித்ததற்கு தகப்பனையும் கொன்றுவிட்ட பாவத்தை சிவன் போக்கியிருப்பதாகவும், அந்த ஸ்தலத்திற்கும் தீர்த்தத்திற்கும் அந்தக் கடவுளுக்கும் இன்னமும் அந்த சக்திகள் இருப்பதாகவும் கருதும்படி சொல்லப்படுகிறது. ஆதலால், இப்படிப்பட்ட கதைகள் கட்டுவது ஒரு அதிசயமல்ல. எனவே, இந்தக் கதை எப்படி இருந்தாலும் முதல் கதையைப்பற்றி யோசிப்போம்.

கடவுள் அவதாரமாகிய கிருஷ்ண பகவான் எவ்வளவோ அற்புதங்களைச் செய்தவர். கடவுளான அவர் செத்துப் போனார் என்பதும், அவர் பிணம் கொளுத்தப்பட்டது என்பதும், நெருப்பில் வெந்து கொண்டிருக்கும்போது ஜலப்பிரளய மேற்பட்டு அந்தப் பிணம் சரியாய் வேகமாமல் தண்ணீரில் மிதந்து கொண்டு வந்து ஜகநாதத்தைச் சேர்ந்த கடற்கரையில் ஒதுங்கியது என்பதும் ஆகிய விஷயங்களை யோசித்துப் பார்த்தால், கிருஷ்ணனிடத்தில் கடவுள் தன்மை இருந்திருக்கும் என்று நம்ப இடமுண்டா? நம்புவதானாலும், செத்தபிறகு அந்தப் பிணத்திற்கு அதுவும் நெருப்பில் கருக்கப்பட்ட அரைகுறைப் பிணத்திற்கு ஏதாவது சக்தி இருந்திருக்குமா? அந்த சக்தியை மரக்கட்டையில் ஏற்ற முடியுமா? அந்த மரக்கட்டையும் அடிக்கடி மாற்றப்பட்டு வருகின்றபோதெல்லாம் அந்த சக்தி மாறி மாறி அதில் வருமா?



தவிர, மற்றும் ஒரு அதிசயம் சொல்லுகிறார்கள். அதாவது, கோயிலில் இருக்கும் மரக்கட்டைக்கு சக்தி குறைந்து போனால், அந்த சமயம் அதாவது 10 அல்லது 20 வருஷத்திற்கு ஒரு முறை மறுபடியும் சமுத்திரத்தில் ஒரு கட்டை முன்பு பிணம் மிதந்து வந்ததுபோல் மிதந்து வருமாம். அதை எடுத்து மறுபடியும் விக்கிரகம் செய்து வைத்துவிடுவதாம். இதன் யோக்கியதைகளை வாசகர்கள்தான் யோசித்துப் பார்க்க வேண்டும். முன்பு வந்த குறைப்பிணம் ஜலப்பிரளயத்தால் வந்தது என்று சொல்லப்படுகிறது. அதுபோல், இப்போது வந்து கொண்டிருக்கும் மரக்கட்டைக்கும் ஏதாவது ஜலப்பிரளயம் கற்பிக்கப்படுகிறதா? எனவே, புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் சிறந்த ஜகநாதத்தின் நிலையை அந்த ஸ்தல சரித்திரப்படியே யோசித்துப் பாருங்கள்.

இவ்வளவையும் ஒப்புக் கொண்டு அந்த ஸ்தலத்திற்கு யாத்திரை போகின்றவர்களுக்கு ஏதாவது விசேஷ ஞானம் ஏற்படுகிறதா? அல்லது அந்த ஸ்தல சரித்திரத்தின் யோக்கியமான கற்பனையையாவது மதித்து ஏதாவது ஒழுக்கத்தைப் பெறுகின்றார்களா? ஒன்றுமேயில்லாமல் ரயில் சார்ஜு செலவும், பூசாரி, பார்ப்பான் முதலியவர்களுக்கு செலவும் செய்ததல்லாமல் வேறு பலன் என்ன என்பதுதான் இது எழுதியதின் கருத்து.

*(சித்திரபுத்திரன் எனும் புனைபெயரில் 16.9.1928. 30.9.1928 "குடிஅரசு" இதழ்களில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது.)*

# 8. காந்தியும் கடவுளும்

திரு காந்தியவர்கள் சென்ற வாரத்திய தமது 'யங் இந்தியா'வில், தம்மை ஒரு நண்பர் கடவுளைப்பற்றிக் கேட்ட சில கேள்விகளைப் பிரசுரித்து, அவைகளுக்கு தமது அபிப்பிராயத்தையும் எழுதியிருக்கின்றார்.



கேள்விகளின் சுருக்கம் யாதெனில்:-

"கடவுளைத் தவிர மற்றதெல்லாம் நிச்சயமற்றதென்றும்,

சத்தியம்தான் கடவுள் என்றும்

துன்பத்தைச் சகித்துக் கொண்டு பொறுமையாயிருப்பதே கடவுள் என்றும்,

அயோக்கியர்களை எச்சரிக்கை செய்து அவர்கள் தமக்குத் தாமே கேடு விளைவித்துக் கொள்ளும்படி செய்து விடுகிறார் என்றும் 'யங் இந்தியா'வில் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள்.

ஆனால், கடவுள் இருக்கின்றார் என்கின்ற உறுதி எனக்கு இல்லை.

ஏனெனில், அப்படி கடவுள் என்பதாக ஒன்று இருக்கும் பட்சத்தில் உலகத்தில் சத்தியத்தை நிலைநிறுத்துவதே அவரது லட்சியமாகவல்லவா இருக்க வேண்டும்.

ஆனால், உலகம் எங்கு பார்த்தாலும் பலவிதமான அயோக்கியர்களாலும் கொடுமைக்காரர்களாலும் நிரப்பப்பட்டிருப்பதுடன், ஒழுக்க நடவடிக்கைகளைப்பற்றிச் சிறிதும் கவலையே எடுத்துக் கொள்ளாத அயோக்கியர்களான அவர்கள் சவுகரியமாகவும் க்ஷேமமாகவும் வாழ்கின்றார்கள்.

அயோக்கியத்தனம் என்பது ஒருவித தொத்துவியாதிபோல் உலகில் தாராளமாய்ப் பரவிக் கொண்டும் வருகிறது.

இது இப்போதிருக்கும் மனிதவர்க்கத்துடன் மறைந்து போவதாக இல்லாமல், இனி வரப்போகும் பின்சந்ததியர்களும் ஒழுக்கமற்றவர்களாகவும், நாணயமற்றவர்களாகவும் நடக்கும்படி செய்கின்றது.

கடவுள் சகலத்தையும் தெரிந்தவரும், சர்வ வல்லமையும் உள்ளவரல்லவா!

அப்படியிருந்தால், தனது சகலத்தையும் அறியும் சக்தியைக் கொண்டு கெடுதியும் கொடுமையும் எங்கெங்கிருக்கின்றது என்பதை அறிந்து, தனது சர்வ வல்லமையைக் கொண்டு அவைகளை ஒழித்து, அயோக்கியர்களை வளரவிடாமல் ஏன் செய்யக்கூடாது?

அன்றியும், கடவுள் ஏன் கஷ்டங்களை அனுமதித்துக் கொண்டு பொறுமையாய் இருக்கும்படி செய்யவேண்டும்?



அயோக்கியத்தனத்துடனும் நாணயக் குறைவுடனும் மகாக் கொடுமையுடனும் உலகம் நடந்து கொண்டே இருப்பதை அனுமதித்துக் கொண்டே இருப்பாரானால் பிறகு கடவுளுக்கு என்னதான் யோக்கியதை இருக்கின்றது?

தாங்கள் சொல்வதுபோல், கொடுமை செய்கின்றவர்கள் தாங்களாகவே கெட்டுப் போகவும், தங்களுக்குத் தாங்களாகவே குழி வெட்டிக் கொள்ளவும் கடவுள் செய்வது உண்மையானால், அவர் ஏன் அக்கொடியவர்களை, கொடுமை செய்வதிலிருந்து விலக்கி, கொடுமைகளை முளையிலேயே கிள்ளி எறிந்து விடக்கூடாது?

அப்படிக்கில்லாமல், ஒருவனுக்கு கெட்ட காரியம் செய்யத் தாராளமாய் இடம் கொடுத்துவிட்டு, அக்கெட்ட காரியத்தால் உலகமும் பதினாயிரக்கணக்கான மக்களும் துன்பமும் அடையும்படி செய்துவிட்டு, அதன் பிறகு கேடு செய்தவனைத் தானாக கெட்டுப் போகும்படி செய்து கொண்டிருப்பது எதற்காக?

உலகம் நாளுக்குநாள் கெட்ட தன்மையிலேயே போய் கொண்டிருக்கின்றது. ஆதலால் உலகத்தை யோக்கியமாகவும், அயோக்கியர்களை அழித்து யோக்கியர்களை உண்டாக்கவும் செய்வதற்கு தனது சக்தியை உபயோகிக்காத ஒரு கடவுளிடத்தில் மனிதன் ஏன் நம்பிக்கை வைக்க வேண்டும்?

அயோக்கியர்கள் தாங்கள் அயோக்கியத்தனத்துடன் சவுக்கியமாகத் தீர்க்காயுளுடன் வாழ்வது எனக்கு நன்றாகத் தெரியும். அப்போப்பட்டவர்களால் மக்களுக்குத் துன்பம் இல்லாமலிருப்பதை முன்னிட்டாவது அவர்கள் ஏன் சீக்கிரம் அழிந்து போகக் கூடாது?

எனக்குக் கடவுளை நம்ப வேண்டும் என்கின்ற ஆசை உண்டு. ஆனால், நம்புவதற்குக் கொஞ்சமும் ஆதாரம் இல்லவே இல்லை. தயவு செய்து தங்களுடைய 'யங் இந்தியா' பத்திரிகை மூலம் இவற்றிற்குச் சமாதானம் சொல்லி எனக்கு நம்பிக்கை உண்டாக்க வேணுமாய்க் கோருகிறேன்.''

இக்கேள்விகளுக்கு திரு காந்தியின் சமாதானமாவது:



''இந்தக் கேள்விகள் மிகப் பழைய கேள்விகள். இந்தக் கேள்விகளுக்கு நான் சொல்லக்கூடிய பதில் ஒன்றும் இல்லை. ஆனால், நான் ஏன் கடவுளை நம்புகிறேன் என்பதற்கு மாத்திரம் சமாதானம் சொல்லக்கூடும்.

அதாவது, விவரித்துச் சொல்ல முடியாத ஒரு மறைவான சக்தி இருக்கிறது என்பதை

நான் காண முடிவதில்லை. ஆனாலும், ஒருவாறு உணருகி றேன். ஆனால், அதை எந்த விதத்திலும் மற்றவர்களுக்கு ருஜூப்பித்துக் காட்ட முடியாத தாயிருக்கிறது. ஏனென்றால் அது எனது புலன்களின் சக்திக்கு மீறினதாய் இருக்கின்றது.

வேண்டுமானால் ஒரு அளவுக்கு கடவுள் இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் காட்டலாம்.

அதாவது, ஒரு சாதாரண மனிதனுக்கு தன்னை ஆளுகிற அரசன் யார் என்பது தெரியாதபோதிலும், ஒரு அரசன் இருந்து ஆண்டுகொண்டுதான் இருக்க வேண்டும் என்பது மாத்திரம் அவனுக்குத் தெரியும். எனவே, ஒரு சாதாரண மனிதனுக்கு சாதாரண சங்கதிகூட தெரியாமலிருக்கின்றதுபோல், நம் போன்றவர்களுக்கு மகா பெரிய சங்கதியான கடவுள் விஷயம் புலப்படுவது என்பது சாத்தியமான காரியமல்ல. ஆனாலும், இந்த பிரம்மாண்டமான உலகத்தைப் படைத்து ஆட்சி செலுத்தும் சட்டம் ஒன்று இருக்கின்றதாக நான் அறிகிறேன். அந்தச் சட்டம் தான் கடவுள்; அதை நான் மறுக்க முடியாது. ஆனால், அந்தச் சட்டத்தைப் பற்றியாவது, அச்சட்டத்தை வழங்குபவரைப் பற்றியாவது எனக்கு ஒன்றுமே தெரியாது.

ஒரு ராஜ்ஜியத்தை ஆளும் அரசனை மறுப்பதால் அந்த ராஜ்ஜியத்தில் உள்ளவன் எப்படி அந்த ஆட்சியில் இருந்து விடுதலை பெற முடியாதோ, அதைப்போல், கடவுளை மறுப்பதால் கடவுள் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுவிட முடியாது.

மொத்தத்தில், தெய்வீகமான சட்டம் ஒன்று இருக்கின்றது என்பதை மறுக்காமல் ஏற்றுக் கொண்டு அதற்குப் பணிந்து நடந்துவந்தால் வாழ்வு சுலபமாக நடைபெறும்.

கடவுளை உணர விரும்புபவன் உறுதியான நம்பிக்கை கொண்டால்தான் முடியும். அந்நம்பிக்கைக்கு வெளி ஆதாரங்கள் தேடப் புறப்பட்டால் அது முடியாத காரியமாகிவிடும்.



கடைசியாக, மேற்கூறிய கேள்விகளுக்கு ஒழுங்கு முறையில் காரணங்கள் காட்டி, மேல்கண்ட கேள்விகள் கேட்டவரை திருப்தி செய்யத்தக்க நியாயங்கள் ஒன்றும் என்னிடம் இல்லை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

கடவுள் நம்பிக்கை காரணகாரிய ஆராய்ச்சிக்கு எட்டாதது ஆனதினால், நான் இக்கேள்விகள் கேட்பவருக்கு கடைசியாகச் சொல்லுவதென்னவென்றால், சாத்தியப்படாத காரியத்தில் பிர வேசிக்க வேண்டாம் என்பதுதான்.

உலகத்தில் இருக்கும் கெடுதிகளுக்கும், கொடுமைகளுக்கும் அறிவினால் காரணம் காட்ட முடியாது. ஆனால், கெடுதிகள் இருப்பதையும் அதன் தன்மை அறிய முடியாதது என்பதையும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

கடவுள் பொறுமை உள்ளவர் என்பதற்குக் காரணமே அவர் கொடுத்த உலகத்தில் நடக்க அனுமதிக்கிறதினால்தான். கடவுளி டத்தில் கெட்ட குணம் இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆனாலும், உலகில் ஏதாவது கெடுதியிருந்தால் அதற்கு அவரே கர்த்தா. ஆனால், அவருக்கு அதில் சம்பந்தமில்லை. (இதற்கு அவருடைய இங்கிலீஷ் வாசகமாவது:)

I Call God long suffering and patient precisely because He permits evil in the world. I know that He has no evil in Him, and yet if there is evil. He is the author of it and yet untouched by it..'' என்று எழுதி இருக்கின்றார்.

எனவே, அவர் சொன்ன பதில்களிலிருந்தாவது, அவர் காட்டியிருக்கும் நியாயங்களிலிருந்தாவது, கேள்வி கேட்ட நண்பருக்கு ஏதாவது பதில் இருக்கின்றதா என்பதைக் கவனித் துப் பார்க்கும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இக்கேள்விகளை எப்படி திரு காந்தி பழைய கேள்விகள் என்று சொன்னாரோ அதே போல் அவருடைய சமாதானங்க ளும் பழைய கதைகள் என்றுதான் சொல்லவேண்டும்.

என்னவென்றால், "கடவுளை அறிவது அசாத்தியம்."

"அசாத்தியமான காரியத்தில் பிரவேசிக்காமல் இருப்பது நல்லது."



"கடவுள் நம்பினால்தான் உண்டு."

"அதுவும் உறுதியான நம்பிக்கையாக இருந்தால்தான் முடியும்" என்பன போன்ற சமாதானங்கள்.

ஆனால் ஒரு புதிய உதாரணம் காட்டியி ருக்கிறார். அது என்னவென்றால்:-

சாதாரண மனிதனுக்கு தங்கள் அரசர்கள் யார் என்பது தெரியாதாம். அதுபோல் தங்களுக்குக் கடவுள் என்பதும் தெரியவில்லையாம். இது எவ்வளவு அசட்டுத்தனமான சமாதானம் என்பதை வாசகர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஏனெனில், அரசன், எல்லோரும் தன்னை அறியும்படி செய்து கொள்ளத் தக்க சக்தி உடையவன் அல்ல. கடவுள் என்பவரோ சர்வசக்தி உள்ளவர் என்பதை கேள்வி கேட்ட நண்பர் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறார்.

தவிர, மற்றொரு புதிய விஷயம் கண்டுபிடித்திருக்கிறார். அதாவது,

கடவுள் இருக்கிறார் என்பது விளங்காமல் போனாலும், இருக்கிறார் என்று வைத்துக் கொண்டால் வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் முடியுமாம். வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் முடிகின்றதற்காக ஒரு விஷயத்தை - தனக்கு எட்டாததை - தெரியாததை நம்ப வேண்டும் என்று சொல்வதானால், வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் நடைபெற வேண்டியதற்குச் சவுகரியமான வேறு அநேக காரியங்கள் செய்யக்கூடுமானால் அவைகளையும் செய்யச் சொல்லுகிறாரா என்பது விளங்கவில்லை.

ஏனெனில், பலவிதமான புரட்டு, பித்தலாட்டம், திருட்டு முதலிய காரியங்கள் செய்து ஏராளமான பணம் சம்பாதித்தவர்களின் வாழ்க்கைப் பிரயாணம் சுலபமாக இருப்பதை நாம் பார்க்கிறோம்.

தனக்குத் தெரியாததான கடவுளை நம்பாமல், நிறைய கள்ளையும் சாராயத்தையும் குடித்துப் போதை ஏற்றிக் கொண்டு, வாய் குளறிப் பாடிக் கொண்டு, தள்ளாடி நடந்து போகிறவனுக்கு இதைவிட வாழ்க்கை யாத்திரை சுகமாகவும், சுலபமாகவும் கழிகின்றதை நாம் நேரில் பார்க்கிறோம். வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் கழிவதே முக்கியமானால் நாம் ஏன் இவனை பின்பற்றக்கூடாது? இந்த மாதிரி போதையில் மூழ்கியிருக்கும்போது எவ்வித இன்ப துன்பமும் தோன்றாமல் வாழ்க்கை கழிந்து விடுகிறதா? இல்லையா?



தீமைகளும், கொடுமைகளும் கடவுளால் அனுமதிக்கப்படுகிறதென்றும், அதானலேயே அவர் பொறுமைசாலியாகிறார் என்றும் சொல்லுவதை கவனித்தால் இது

எவ்வளவு கவலையற்ற பதில் என்பது விளங்காமல் போகாது.

ஏனெனில், கடவுள் பொறுமையால் மற்ற ஜீவன்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கின்றது என்பதை உணர்ந்து பார்த்தால் விளங்கும்.

மற்றும், கொடுமைகளும், கெடுதிகளும் கடவுளிடம் இல்லை என்றும், ஆனாலும் அக்கெடுதிகளை கடவுளே உண்டாக்குகிறார் என்றும், ஆனால், அவைகளில் கடவுளுக்குச் சிறிதும் சம்பந்தமில்லை என்றும் சொல்லுவது அறியாமையால் சொல்லும் வாக்கியமா, அல்லது ஏதாவது ஒரு சமாதானம் சொல்லி கேள்வி கேட்பவர்களை ஏமாற்றிவிடலாம் என்பதாகக் கருதிச் சொன்ன வாக்கியமா என்பது நமக்கே விளங்கவில்லை.

உலகில் மிகப் பெரியக் கூட்டத்திலும், மேதாவிகள் கூட்டத்திலும் சேர்ந்த ஒருவரும், சதா சர்வகாலம் கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டிருப்பவரும், கடவுள் செயலை அடிக்கடி உணர்ந்து அதன் பயனை அனுபவித்துக் கொண்டே இருப்பதாகச் சொல்லுபவருமான ஒருவரே கடவுளைப் பற்றிச் சொல்லுவது இதுவானால், மற்றவர்களிடம், அதாவது கடவுள் பெயரையும் சமயத்தின் பெயரையும் சொல்லிக் கொண்டு வயிறு வளர்ப்பவர்களிடம் இருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

அன்றியும், கடவுளைப்பற்றிப் பேசுகின்ற ஒவ்வொருவர்களும் ''கடவுள் பெயரற்றவர் ரூபமற்றவர், குணமற்றவர்'' என்பதையும், ''அவர் மனதிற்கெட்டாதவர், இந்திரியங்களுக்கு அகப்படாதவர்'' என்பதையும் அவருக்கு லட்சணமாகச் சொல்லும்போது, அதற்குமேல், கடவுள் உண்டா இல்லையா என்கின்றது போன்ற கேள்விகளே அனாவசியமானதும் பலனற்றதும் என்பது நமது முடிவு.

ஏனெனில், இது, ஆகாயத்தில் ஒரு கோட்டை இருப்பதாக வைத்துக் கொண்டு, அதற்கு ஜன்னல் எவ்வளவு, கதவு எவ்வளவு என்று சண்டை போடுவது போன்றது. அன்றியும், அவ்வேலையில் ஈடுபடுவது போன்ற முட்டாள்தனமும் அசட்டுத்தனமுமாகிய காரியம் வேறு இல்லை என்பதும் நமது முடிவு.



அல்லாமலும், அப்படிப்பட்ட ஒரு கடவுள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும்

சரி, அதைப்பற்றி நமக்குக் கவலை வேண்டுவதில்லை என்பதும் நமது முடிவு.

ஆனால், கடவுளைப்பற்றிய விஷயங்கள் வரும்போது நாம் கவலைப்படுவது எதைப் பொறுத்தவரையில் என்றால், கடவுள் இருக்கிறார் என்று ஒருவன் ஒப்புக் கொள்ளுவதின்மூலம் அவனுடைய அறிவு வளர்ச்சியும், முயற்சியும் கெட்டு சோம்பேறித்தனம் உண்டாகக் கூடாது என்பதைப் பொறுத்தவரையில் தானே ஒழிய வேறில்லை.

உதாரணமாக, பாதாள லோகம் என்று ஒரு லோகம் இருக்கின்றது என்றும், அதில் நாகராஜன் என்கிற ஒரு அரசன் இருக்கின்றான் என்றும் ஒருவன் சொல்லிக் கொண்டு திரிவானானால், அந்த லோகம் எங்கே? அந்த அரசன் வீடு எங்கே? என்று கேட்டுக்கொண்டு திரியவேண்டியது ஒவ்வொருவனுடையவும் வேலை அல்ல.

அதுபோலவே, இல்லாத பட்டணம் என்று ஒரு பட்டணம் ஆகாயத்தில் இருக்கின்றது என்றும், அதற்கு அருபி என்கின்ற ஒரு அரசன் இருக்கின்றான் என்றும், அவனுக்கு அனங்கள் என்கின்ற பூஜ்ஜியம் (0-சைபர்) பெண்கள் இருக்கின்றார்கள் என்றும் ஒருவன் சொல்லிக் கொண்டு திரிவானானால், அதைக் காட்டு என்று கேட்டுக் கொண்டு திரிய வேண்டியதும் ஒவ்வொருவனுடைய வேலையல்ல.

மற்றென்னவென்றால்,

இம்மாதிரி அரசர்களையும், பெண்களையும்பற்றி எல்லா மக்களும் நம்பாவிட்டால் அதற்காக தண்டனை என்று நிபந்தனை ஏற்படுத்தி, ''அந்த நாகராஜாவே உனக்குச் சோறு போட்டு விடுவார்; ஆகாய கன்னிகையே உனக்கு பெண் ஜாதியாய் இருந்து விடுவாள்; மற்றபடி நீ ஒன்றுக்கும் கவலைப் படாதே'' என்று சொல்வதை ஏற்றுக் கொள்ளச் செய்து, மக்களது அறிவையும் நேரத்தையும் பொருளையும் பாழாக்கி, அவர்களை வெறும் அர்த்தமற்ற அடிமைப்படுத்தி, பட்டினி போட்டுவதைப்பதில்தான் கவலையே ஒழிய வேறில்லை.



ஒரு மனிதன், கடவுள் இல்லையென்று சொல்லுவானேயானால், அவன் உலகம் முழவதும் ''அதற்கு அப்பாலும் இப்பாலும்

" என்பவைகளெல்லாம் அறிந்து, நேரில் தேடித் தேடிப் பார்த்து காணாவிட்டால்தான் சொல்ல வேண்டும் என்பதும் முழுதும் தப்பல்ல. ஆதலால் அதைப்பற்றிய முடிவைப்பற்றி நமக்கு இப்பொழுது ஒன்றும் அவசரம் இல்லை. ஆனால், அதற்கும் மனிதன் வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தம் எவ்வளவு? அதற்காக மனிதனின் அறிவையும் நேரத்தையும் பொருளையும் ஏன் செலவு செய்து கொண்டே இருக்க வேண்டும்? இதுவரையில் அநேகர் அப்படிச் செய்துவந்ததின் மூலம் அடைந்த நன்மைகள் என்ன? அப்படிச் செய்யாததின் மூலம் ஏற்பட்ட அல்லது ஏற்படப் போகும் கெடுதி என்ன? என்பன போன்றவைகளே இந்நிலையில் முக்கியமாக ஆராயத் தகுந்த விஷயமாகும்.

இந்த சந்தர்ப்பத்தில் வாசகர்கள் தயவு செய்து கடவுளைப்பற்றிய நம்பிக்கையும், கவலையுமில்லாத புத்தர் நடந்து கொண்டதையும், கடவுளிடத்தில் நம்பிக்கை வைத்து அவரது அருள் பெற்றவர் என்பவரான சம்பந்தருடைய நடவடிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், கடவுளை நம்பினால்தான் யோக்கியனாக இருக்க முடியுமா? என்பதும், நம்பாதவன் எல்லாம் அயோக்கியனா என்பதும் விளங்காமல் போகாது.

இதை ஏன் வலியுறுத்த நேரிடுகிறது என்றால், நம்மைச் சுற்றியுள்ள மக்கள் படும் கஷ்டங்களும், நமக்கு வெளியில் உள்ள நாடுகளில் உள்ள மக்கள் நிலையும், நடவடிக்கையும், அவர் கண்ட அற்புதக் காட்சியையும் அறிந்து, அந்நிலைபெற்று கஷ்டப்படுகிறவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்கின்ற கருத்துக் கொண்டே ஒழிய வேறில்லை.

இந்த நிலையில் குட்டிச் சமயக்காரர்கள் தங்கள் நிலை என்ன? அவைகளின் அவசியம் என்ன? அதனால் ஏற்பட்ட நன்மை என்ன? என்பவைகளை தாங்களே சற்று தங்களது நடுநிலைமை அறிவைக் கொண்டு யோசிப்பார்களானால், அவர்களது மடமையும், இதுவரை தங்கள் வாழ்வு வீணானதும் ஒரு சிறிதாவது அவர்களுக்குப் புலப்படாமல் போகாது.



*(28.10.1928 'குடிஅரசு' இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)*

# 9. கடவுள்

முதலாவது, மக்களுக்குக் கடவுள் எப்பொழுது, எப்படி ஏற்பட்டது என்பதைப்பற்றி ஆராய்வோம். மனிதன் பிறந்து வளர்ந்து நினைக்கத் தலைப்பட்ட பிறகுதான் கடவுள் என்கின்ற ஒரு வஸ்து நிச்சயம் ஏற்பட்டு இருக்கவேண்டும். அதை யாரும் மறுக்க முடியாது. ஏனெனில், இப்போதுகூட மக்களுக்கு பிறர் சொல்லிக் கொடுத்த பிறகுதான் கடவுள் என்கின்ற பேச்சும், நினைப்பும் ஏற்படுகின்றதே தவிர தானாக ஏற்படுவதில்லை.

எப்படி எனில், சிறு குழந்தைகளை நாம் கட்கத்தில் இடுக்கிக் கொண்டு ஒரு உருவத்தையோ, வஸ்துவையோ காட்டிசாமி என்றும் அதைக் கைகூப்பி கும்பிடு என்றும் சொல்லிக் கொடுத்த பிறகே குழந்தை சாமியையும் கும்பிடவும் அறிகின்றது. அது போல ஆதியிலும் மனிதன் பிறந்த பிறகுதான் அவன் மனதிற்குக் கடவுள் நினைப்பு தோன்றியிருக்க வேண்டும். அது எப்படி என்றும், எப்போதென்றும் பார்ப்போமானால், சாதாரணமாக மனிதனுக்கு அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சி வளர்ச்சியும் இல்லாத காலத்தில்தான் கடவுள் நினைப்பு தோன்றியிருக்க வேண்டும்.

கடவுள் என்பது - கடவுள், தெய்வம், அல்லா, காட் என்ற தமிழ், சமஸ்கிருதம், துலுக்கு, ஆங்கிலம் முதலிய பல பாஷைகளில் பல சொற்களாக இருந்தாலும் குறியில் அர்த்தத்தில் உலகத் தோற்றத்திற்கும் நடப்பிற்கும் அழிவிற்கும் காரணமாகிய ஒரு சக்தியையே குறிப்பிடுவதாகவும், அதாவது சிலரால் இயற்கை என்று சொல்லப்படுமானால், அவ்வியற்கையின் இயங்குதலுக்கும், பஞ்சபூத கூட்டு என்று சொல்லப்படுமானால், அக்கூட்டின் சேர்க்கைக்கும், ஏதாவது ஒரு சக்தி இருந்து தானே ஆக வேண்டும் என்பதுவும், அந்த சக்திதான் கடவுள், எல்லாம் வல்ல ஆண்டவன் அல்லா, காட் என்று சொல்லப்படுகிறதென்று சொல்வதானாலும், அந்த சக்தி என்னும் கடவுளே எப்படி மக்கள் மனதிற்கு வந்தார் என்பதுதான் இங்கு விசாரிக்கத்தக்கதாயிருக்கின்றது.



ஆகவே, அந்த சக்தி மனிதனுக்குத் தோன்றிய காலம் எது என்பதாகவும், அது நம் நாட்டைப் பொறுத்தவரை எப்படியிருந்தது

என்பதாகவும் பார்க்க வேண்டுமானால், நம் நாட்டிலுள்ள கடவுள்களைக் கொண்டுதான் அதைத் தாராளமாக உணர முடியும். அதாவது, இப்போது நமது நாட்டிலுள்ள கடவுள்கள் எவையென்றால், பூமி, மலை, காற்று, நெருப்பு, நதி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், மழை, இடி, மின்னல், மேகம், நோய்கள், அவை தீர்க்க வேண்டியவைகள் முதலிய அதே விஷயங்கள் கடவுளாகக் கருதப்படுகின்றன. இவைகளெல்லாம் இவற்றின் உண்மையை அறிய ஆற்றல் இல்லாத காலத்தில் கடவுளென்று ஒப்புக் கொள்ளப்பட்டவைகள்.

அதிலும், இமயமலையே கைலையங்கிரியாகவும், அதுவும் வெள்ளி மலையாகவும், அங்கு கடவுள் இருப்பதாகவும், அங்கிருந்து வரும் நீர் அம்மலையிலுள்ள கடவுளின் தலையிலிருந்து வருவதாகவும் கருதப்பட்டு, இமயமலைக்கு அப்பால் ஒரு நாடும் கண்டுபிடிக்க முடியாதிருந்ததும், மேல்நாட்டை மேல்லோகமென்றும், கீழ் நாட்டை பாதாள லோகம், நாகலோகமென்றும் இப்படிப் பலவாறாக கடவுள் தன்மையைச் சொன்னதற்குக் காரணமென்னவென்று பார்க்கும்போது அவற்றின் உண்மையை அறிய முடியாததாலேயே அவை கடவுளென்றும், அவற்றின் இயக்குதல் கடவுள் சக்தி என்றும் சொல்ல வேண்டிய அவசியம் தானாக ஏற்பட்டது.

இப்போதும் மனிதன் தன்னால் முடிந்தவைகள் போக முடியாதவைகளுக்கே கடவுள் சக்தி என்று சொல்லி விடுகின்றான். உதாரணமாக, சிறு குழந்தைகள் ஒரு ஜால வேடிக்கைக்காரனுடைய செய்கையை மந்திரசக்தி என்றும், தெய்வ சக்தி என்றும், உபாசனா சக்தி என்றும், குட்டிச்சாத்தான் சக்தி என்றும் கருதுகிறார்கள். அப்பையனாயிருந்து அப்படியே கருதியிருந்த நாம் இப்போது அறிவு வளர்ச்சி பெற்றபின் அந்த ஜால வேடிக்கைகளை மந்திர சக்தி என்று எண்ணாமல், தந்திரம், கைத்திறம் என்று சொல்லுகின்றோம். மற்றும் அந்த ஜால வேடிக்கைக்காரன் செய்யும் ஜாலத்தின் வழி இன்னதென்று நமக்குத் தெரியாவிட்டாலும் கூட நாம் அவற்றை ஒரு காலமும் மந்திர சக்தி என்றோ, தெய்வ சக்தி என்றோ சொல்லாமல், "இது ஏதோ தந்திரம்தானே ஒழிய வேறில்லை; ஆனால், அது இன்னது என்று கண்டுபிடிக்க முடியவில்லை" என்று சொல்லி விடுகின்றோம்.



எனவே, ஒரே காரியம் நமக்கே ஒரு காலத்தில் மந்திரமாகவும், தெய்வ சக்தியாகவும் தோன்றியது; பிறகு அது தந்திரம் என்று தோன்றக் காரணம் என்னவென்றால், அது அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சிப் பலனுமேயாகும். அதுபோலவே நமக்கு இப்போது தெய்வசக்தி, கடவுள் சக்தி என்று தோன்றுகின்ற காரியமெல்லாம் மேல் நாட்டாருக்கு கடவுள் சக்தியாகத் தோன்றுவதில்லை. உதாரணமாக, சூரிய, சந்திர கிரகணம் இன்னது என்று கண்டுபிடிக்க முடியாத காலத்தில் நாம் அவைகளுக்கு ஒரு தெய்வ சக்தியைக் கண்டுபிடித்து, சூரியன் என்கின்ற தெய்வத்தை ராகு என்கின்ற பாம்பு பிடிப்பதாகவும், அது சூரியன் என்கின்ற கடவுளுக்கு ஏற்பட்ட சாபம் என்றும் சொல்லி அச்சாபம் தீர நாம் மந்திரங்கள் ஜெபித்து அத்தோஷம் தீர ஸ்நானமும் செய்து வருகின்றோம். இது வானசாஸ்திரம் தெரியாத காலத்தில் ஏற்படுத்திக் கொண்ட கருத்தாகும்.

இப்போது வான சாஸ்திரம் தெரிந்தவர்கள் பூமி, சூரியன், இவற்றின் இயங்குதல், அதன் கால அளவு ஆகியவைகளைக் கண்டுபிடித்தபின், சூரியனைப் பாம்பு கடிப்பதில்லை என்பதையும் ஒருவாறு நன்றாய் உணருகின்றோம். அதுபோலவே எங்கிருந்து, எப்படி தண்ணீர் வருகின்றதென்பது தெரிந்தவுடன் நதிக் கடவுளும், மேகக் கடவுளும், வர்ண பகவானும் சிறிது சிறிதாக நம் மனதில் மறையத் தொடங்கிவிட்டன. அதுபோலவே வியாதிகள் எப்படி வருகின்றன என்கின்றதான சுகாதார ஆராய்ச்சியும், உடற்கூறு ஆராய்ச்சியும் நமக்குத் தெரியத் தொடங்கிய பின்பு பேதி, மாரியம்மை முதலிய தெய்வங்களின் உணர்ச்சியும் மதிப்பும் சிறிது சிறிதாக மறையத் தலைப்பட்டன.

இதுபோலவே காற்று, கருப்பு, பேய் முதலியவைகளும் மறைந்து வருகின்றன. இந்த முறையில் இனியும் நமக்குள் மீதி இருக்கும் கடவுள் உணர்ச்சிகள் எவை என்று பார்ப்போமானால், காரண காரியம் முதலிய விவரங்கள் கண்டுபிடிக்க முடியாதவைகளையே கடவுள் செயல் என்றும், கடவுள் சக்தி என்றும் சொல்லி வருகின்றோம். இவைகளும், நாளுக்கு நாள் மனிதன் அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சியும் முதிர முதிர மறைந்து கொண்டேதான் வரும். மேலும் இப்போது ஒருவருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றப்படும் காரியங்கள் மற்றொருவருக்குக் கடவுள் சக்தி என்று



தோன்றப்படாமலிருப்பதையும் பார்க்கின்றோம். அது அவ்விரு வருடைய அறிவு, ஆராய்ச்சி ஆகியவற்றின் வித்தியாசமே ஆகும்.

இப்போதும் நம் மனத்திற்கு எட்டாத காரியங்களை மேனாட்டார் செய்யும்போது நாம் அதிசயப்பட்டாலும் அதை மந்திர சக்தி என்று நாம் சொல்லத் துணிவதில்லை. இந்த அளவுக்கு நாம் தைரியமாக வந்து விட்டோம் என்றாலும் நமக்கு பூரண அறிவும் ஆராய்ச்சி முடிவும் ஏற்படும்வரை கடவுள் உணர்ச்சி நம்மைவிட்டு விலக முடியாது அன்றியும், வாழ்க்கையில் பக்குவமடையாதவர்களுக்கு கடவுள் உணர்ச்சி இருந்தே தீர வேண்டியதாயும் இருக்கின்றது. அதாவது கடவுள் கஷ்டப் பட்டு ஏமாற்ற மடைந்தவனுக்கும், ஈடுசெய்ய முடியாத நஷ்டம டைந்தவனுக்கும், கடவுள் செயல் என்பதைச் சொல்லித்தான் ஆறுதலையும், திருப்தியையும் அடையச் செய்ய வேண்டியதி ருக்கின்றது.

நல்ல அறிவும், ஆராய்ச்சியும் உடையவர்களும் தங்களுக்கு காரண காரியம் எட்டாத இடத்திலும், ஈடு செய்ய முடியாத இடத்திலும், கடவுள் செயல் என்பதைக் கொண்டு தான் திருப்தி அடைகின்றார்கள். அப்போது தங்கள் அறிவுக்கு மேல் ஒன்று இருப்பதை எண்ணித் தீர வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், உறுதியான பக்குவமடைந்தவர்கள் எந்த விசயத்திற் கும் தங்களுக்குத் தெரிந்த காரணத்தைக் கொண்டு சமாதானம் அடைவதும், தெரியாததாய் இருந்தால் நமக்கு எட்டவில்லை என்றோ, அல்லது இதுதான் இயற்கையென்றோ கருதி திருப்தி அடைவதுமாய் இருக்கின்றார்கள். எனவே, சாதாரண மக்கள் கடவுளுக்கும், சற்று அறிவு உடைய மக்கள் கடவுளுக்கும், ஆராய்ச்சிக்காரர்கள் கடவுளுக்கும், பக்குவமடைந்தவர்கள் எண் ணத்திற்கும் அநேக வித்தியாசமுண்டு. ஒருவருக்கொருவர் கட வுள் வணக்கத்திலும், கடவுள்மீது சுமத்தும் பொறுப்பிலும் அநேக வித்தியாசம் உண்டு.



மனிதன், உலகத் தோற்றத்திற்கும், நடப் பிற்கும் சம்பவங்களுக்கும் காரணம் கண்டுபி டிக்க முடியாத நிலையில் கடவுள் சக்தி என்றும், கடவுள் செயல் என்றும் நினைத் துக் கொள்வதும், உதாரணமாக, அவற்றிற்கு காரணகாரியம் தோன்றியபின்பு அந்நி னைப்பு கொஞ்சம் கொஞ்சமாக மாறி விடுவ

தும் சகஜம், இந்த முறையிலேயே கொஞ்ச காலத்திற்கு முன் அநேக விசயங்களை கடவுள் செயல் என்று எண்ணியிருந்த மக்கள், விஞ்ஞான (சைன்ஸ்) ஆராய்ச்சி ஏற்பட்ட பிறகு அவ்வெண்ணத்தை மாற்றிக் கொண்டு அநேக விசயங்களை மனிதன் செயல் என்று சொல்லத் தைரியம் கொண்டு விட்டார் கள்.

உதாரணமாக, கம்பியில்லாத் தந்தி விசயத்தை எடுத்துக் கொள் வோம். கம்பியில்லாத் தந்தி ஏற்படுத்தியிருக்கும் விசயமும் அது எப்படிச் செய்யப்படுவது என்கின்ற சைன்ஸ் உணர்ச்சியும் நமக்குத் தெரியாமல் இருக்குமானால் நாம் இன்னமும் அதை "ஒரு தெய்வீக சக்தி" என்றும், பழைய காலத்து ரிஷிகள் பேசிக் கொண்டிருந்ததாய் சொல்லப்படும் "ஞான திருஷ்டி சம்பாஷணை" என்றுமே சொல்லித் தீருவோம். ஆதலால், மக்களுக்கு அறிவும், ஆராய்ச்சியும் வளர வளர கடவுள் உணர்ச்சியின் அளவு குறைந்து கொண்டே போகும் என்பது திண்ணம். அதுபோலவே அறிவும், ஆராய்ச்சியும் குறையக் குறைய கடவுள் உணர்ச்சி வளர்ந்து கொண்டே வரும் என்ப தும் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

இப்போதும் பகுத்தறிவு குறைந்த மக்களிடமேதான் அநேக மாக தொட்டதற்கெல்லாம் கடவுளும், அவர்தம் செயல்களும் தாண்டவமாடுவதைப் பார்க்கின்றோம். அவர்கள் மேலேயே "கடவுள் வருவதை"க்கூடப் பார்க்கின்றோம். காட்டுமிராண்டி பக்குவமுடையவர்களிடமே அநேகமாக கடவுளைப்பற்றிய கதைகள் என்பவைகளும், புராணங்கள் என்பவைகளும் மதிப் புப் பெற்று இருப்பதையும் பார்க்கின்றோம்.

கொஞ்ச காலத்திற்கு முன் அக்கதைகளை அப்படியே அதா வது கடவுள் சக்தியில் நடைபெற்றது என்று நம்பிக் கொண்டி ருந்தவர்கள்கூட இப்போது அப்படியே நம்புவதற்கு வெட்கப் பட்டுக் கொண்டு, தங்களுக்குள்ள அறிவு வளர்ச்சியில்லாத் தன்மையை மறைத்துக் கொண்டு, சயன்ஸின் மூலம் அக்கதைகளை மெய்ப்பிக்க முயற்சி எடுத்துக் கொண்டு கஷ்டப்படுகின்றார்கள்.



இதிலிருந்து என்ன ஏற்படுகின்றதென் றால், மக்கள் வரவர இப்போது சயின்சுக்கு பொருத்தமில்லாததை ஏற்க மறுக்கக் கூடிய

நிலைமைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்குகின்றது. மழையை வரச் செய்வதும், செத்தவனை மறுபடியும் பிழைக்கச் செய்வதும், பேச்சுக்களையும், நாட்டியங்களையும் எந்திரங்களில் பிடித்துக் காட்டுவதும் போன்ற காரியங்கள் மனிதனால் செய்யக் கூடும் என்கின்ற நிலை ஏற்பட்ட பிறகு, மிக்க பாமர ஜனங்களுக்குக்கூட இவையெல்லாம் கடவுள் செயல் என்கின்ற குருட்டு நம்பிக்கை மறைந்து வருவதில் ஆச்சர்யமொன்றுமில்லை. எனவே, ஒரு காலத்தில் அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சிக் கவலையும் இல்லாதபோது ஏற்பட்ட கடவுள் சம்பந்தமான எண்ணங்கள் இனியும் இருந்துதான் தீர வேண்டுமா என்றால், எப்படியும் அது ஓர் அளவுக்காவது இருந்துதான் தீரும் என்று சொல்லுவோம்.

ஏனெனில், மனிதன் தான் எல்லாம் அறிந்தவன் என்கின்ற ஆணவத்தை உடையவனானதால் தன் புத்திக்கு எட்டாததை தனக்கு தெரியவில்லை என்று கண்ணியமாய் ஒப்புக் கொள்ள சுலபத்தில் சம்மதிக்க இஷ்டப்பட மாட்டான். ஆகையால், அங்கு அதாவது தனக்கு அறிவு கட்டையாய்ப் போனபோது அவனுக்கு கடவுள் நம்பிக்கையும், கடவுள் செயலும் வந்து தான் தீரும். இதை மாற்றுவது சுலபமான காரியம் அல்ல. பூரண அறிவு வளர்ச்சி பெற்றால்தான் முடியும். அன்றியும், சிலர் உண்மை அறிந்திருந்தாலும் சுயநலமோ, முடப் பிடிவாதமோ காரணமாக தங்களுக்கே புரியாதவற்றைப் பேசி பாமர மக்களை மயக்கிக் கொண்டும் இருப்பார்கள். ஏனெனில், மக்களுக்கு கடவுள் நம்பிக்கை இருப்பதாலேயே அவர்கள் பிழைக்கக் கூடியவர்களாய் இருப்பதால்தான்.

எது எப்படியிருந்த போதிலும் உலகத்தில் கடவுள் சம்பந்தமான குருட்டு நம்பிக்கைக்கு இருந்த மதிப்பு குறைந்துவிட்டதால் கடவுள் உணர்ச்சியும் எப்படியும் மக்களுக்கு வர வர குறைந்து கொண்டுதான் போகும் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக வருத்தப்படுவதிலோ, யார் மீதாவது குற்றம் சொல்வதிலோ



பயனில்லை. ஆனால், அவ்வித குருட்டு நம்பிக்கையும் முடப் பிடிவாதமும், ஒழிந்த காலத்தில்தான் உலகத்தில் ஒழுக்கமும் சமத்துவமும் நிலைபெறும் என்பது மாத்திரம் உறுதி.

*("கடவுளும் மதமும்" என்ற தலைப்பில் தந்தை பெரியார் அவர்கள் 28.7.1929, 11.8.1929 ஆகிய இரண்டு "குடி அரசு" இதழ்களில் எழுதியுள்ள தலையங்கப் பகுதிகளிலிருந்து இக்கட்டுரை தரப்பட்டுள்ளது)*

# 10. பெண்களை விபசாரிகளாய் படைத்த கடவுள்

**ஆஸ்திகப் பெண்:** என்ன அய்யா, நாஸ்திகரே! மனுதர்ம சாஸ்திரத்தில் மற்ற விஷயங்களைப்பற்றிய ஆட்சேபணைகள் எப்படி இருந்தாலும், பெண்களை கடவுளே விபசாரிகளாய் பிறப்பித்து விட்டார்; ஆதலால் அவர்கள் விஷயத்தில் ஆண்கள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமென்று சொல்லி இருப்பது மாத்திரம் பெரிய அயோக்கியத்தனம் என்பதே எனது அபிப்பிராயம். அது விஷயத்தில் நான் உங்களுடன் சேர்ந்து கொள்ளுகிறேன்.

**நாஸ்திகன்:** அம்மா, அப்படி தாங்கள் சொல்லக்கூடாது. மனுதர்ம சாஸ்திரத்தில் மற்ற எந்த விஷயங்கள் அயோக்கியத்தனமாக இருந்தாலும், இந்த விஷயத்தில் மனுதர்ம சாஸ்திரம் சொல்லுவதை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

**ஆ.பெண்:** அதென்ன அய்யா, நீங்கள்கூட அப்படிச் சொல்லுகின்றீர்கள்! இதுதானா உங்கள் அறிவு இயக்கத்தின் யோக்கியதை? எல்லாப் பெண்களுமா விபசாரிகள்?

**நா:** ஆம் அம்மா! எல்லோருமேதான் "விபசாரிகள்", இதற்காக நீங்கள் கோபித்துக் கொள்வதில் பயனில்லை.

**ஆ.பெண்:** என்ன அய்யா, உலகத்தில் உள்ள பெண்கள் எல்லோரையுமா நீங்கள் விபசாரிகள் என்று நினைக்கிறீர்கள்?

**நா:** ஆம். ஆம். ஆம். இந்த உலகத்தில் உள்ள பெண்கள் மாத்திரமல்ல; மேல் உலகத்தில் உள்ள பெண்களையும்கூடத்தான் நான் "கற்பு உள்ளவர்கள்" என்று சொல்லுவதில்லை.

**ஆ.பெண்:** இப்படிச் சொல்லுவது தர்மமாகுமா?



**நா:** கடவுளால் உண்டாக்கப்பட்ட வேதத்தின் சாரமான மனுதர்ம சாஸ்திரம் சொல்லுவது எப்படி பொய்யாகும், அதர்மமாகும், சொல்லுங்கள் பார்ப்போம். வேண்டுமானால் அது சரியென்று நான் ருஜுப்படுத்தவும் தயாராயிருக்கிறேன்.

***ஆ.பெண்:*** என்ன ருஜு, நாசமாய்ப் போன ருஜு; சற்று காட்டுங்கள் பார்ப்போம்.

***நா:*** நமது பெரியவர்கள் கற்பைப் பரீட்சிக்கத் தக்க பரீட்சைகள் வைத்திருக்கின்றார்கள். ஆதலால் அவர்களை நாம் சுலபத்தில் ஏமாற்றிவிட முடியாது.

***ஆ.பெண்:*** என்ன பரீட்சை அய்யா அது?

***நா:*** சொல்லட்டுமா; கோபித்துக் கொள்ளக்கூடாது!

***ஆ.பெண்:*** கோபமென்ன அய்யா! மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்! தாராளமாய்ச் சொல்லுங்கள்.

***நா:*** தெய்வம் தொழாள் கொழுநனைத் தொழுவாள் பெய்யெனப் பெய்யுமழை என்கின்ற பொய்யாமொழிப் புலவரின் வேதவாக்கைக் கேட்டிருக்கிறீர்களா?

***ஆ.பெண்:*** ஆம்; கேட்டிருக்கின்றேன்.

***நா:*** கற்புடைய மங்கையர்கள் மழை பெய்யென்றால் பெய்யும் என்கின்ற வேதவாக்கையும் கேட்டிருக்கின்றீர்களா?

***ஆ.பெண்:*** ஆம்; கேட்டிருக்கின்றேன்.

***நா:*** சரி... ஊரில் மழை பெய்து மூன்று வருஷமாச்சுது; குடிக்கத் தண்ணீர் கிடையாது. தயவு செய்து ஒரு இரண்டு உழவு (2 அங்குலம்) மழை பெய்யச் சொல்லுங்கள் பார்ப்போம்.

***ஆ.பெண்:*** இது நம்மாலாகின்ற காரியமா? தெய்வத்திற்கு இஷ்டமிருந்தாலல்லவா முடியும். இந்த ஊர்க்காரர்கள் என்ன அக்கிரமம் பண்ணினார்களோ! அதனால் இந்த பாவிகள் மழை இல்லாமல் தவிக்கின்றார்கள்.



***நா:*** எந்தப் பாவி எப்படித் தவித்தாலும், நீங்கள் கற்புள்ளவர்களாயிருந்தால் மழை பெய்யென்றால் பெய்துதானே ஆக வேண்டும் அல்லது இந்த ஊரில் ஒரு கற்புள்ள பெண்ணாவது இருந்தால் மழை பெய்துதானே தீர வேண்டும். எப்போது பெண்கள் சொன்னால் மழை பெய்வதில்லையோ, அப்போதே, பெண்கள் எல்லாம் கற்புள்ளவர்கள் அல்ல, ''விபசாரிகள்'' என்று ருஜுவாகவில்லையா? பொறுமை

யாய் யோசித்துப் பாருங்கள். ஆகையால் இனிமேல் சாஸ்திரங்களைப்பற்றி சந்தேகப்படாதீர்கள்! அதிலும் ரிஷி களும், முனிவர்களும் சொன்ன வாக்கியமும், கடவுள் சொன்ன வேதத்தின் சத்தாகியதும், இந்து மதத்திற்கு ஆதாரமானதும், மோட்சத்திற்கு சாதனமானதுமான மனு தர்ம சாஸ்திரம் பொய்யாகுமா அம்மா! அதனால்தானே நான்கூட கல்யாணமே செய்து கொள்ளவில்லை!

**ஆ.பெண்:** எதினால்தான்?

**நா:** பெண்களைக் கல்யாணம் செய்து கொண்டால் புருஷன்மார் கள், அவர்கள் விபசாரித்தனம் செய்யாமல் ஜாக்கிரதை யாய்க் காப்பாற்ற வேண்டுமென்றிருக்கிறதினால்தான்.

**ஆ.பெண்:** பின்னை என்ன செய்கின்றீர்கள்?

**நா:** கடவுளோ பிறவியிலேயே பெண்களை விபசாரிகளாய்ப் பிறப்புவித்து விட்டார். யார் காப்பாற்றிப் பார்த்தும் முடியாமல் போய் விட்டது. ஒரு சொட்டு மழைக்கும் வழியில்லை. ஆதலால், எவனோ கட்டிக் கொண்டு காப்பாற்றட்டும்; கடவுள் செயல் பிரகாரம் நமக்குக் கிடைப்பது கிடைக்கட்டும் என்பதாகக் கருதி சிவனே என்று உட்கார்ந்து கொண்டிருக்கின்றேன். மரம் வைத்த வன் தண்ணீர் ஊற்ற மாட்டானா என்கின்ற தைரியம் உண்டு.

**ஆ.பெண்:** அப்படியானால் நீங்கள் முன் சொல்லிக் கொண் டிருந்ததில் ஒன்றும் குற்றமில்லை இந்த மனுதர்ம சாஸ்திர மும், வேதமும், பொய்யாமொழியும், நீதியும், இவற்றை உண்டாக்கியதோ அல்லது ஒப்புக்கொண்டதோ ஆன கடவுள்களும் நாசமாய்ப் போகட்டும். இனிமேல் இந்த ஆஸ்திகம் நமக்கு வேண்டவே வேண்டாம். நமது எதிரி கள் நாட்டுக்கும் வேண்டாம்.

*(சித்திரபுத்திரன் எனும் புனைபெயரில் 2.3.1930 "குடிஅரசு" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது)*



# 11. விரதப்புரட்டு

## உமாமகேஸ்வர பூஜை விரதம்

### "நைமிசாரண்யவாசிகளுக்கு சூதபுராணிகர் சொன்னது"

"ஆனந்த தேசத்தில் வேத விரதன் என்னும் பிராமணனுக்கு சாரதை என்று ஒரு பெண் இருந்தாள். அந்த ஊரில் மனைவியை இழந்த பத்மநாபன் என்னும் கிழப்பார்ப்பான் அந்தப் பெண்ணின் தகப்பனுக்கு நிறைய பணம் கொடுத்து, தனக்கு அந்தப் பெண்ணை இரண்டாவது பெண் ஜாதியாக விவாகம் செய்து கொண்டான். அந்தக் கிழப்பார்ப்பான் மணக்கோலம் முடியும் முன்பே விஷம் தீண்டி இறந்து போனான். பிறகு அந்தப் பெண் தகப்பன் வீட்டிலேயே இருந்தாள்.

சில நாள் பொறுத்து ஒரு முனிவர் சாரதையின் வீட்டிற்கு வந்தார். சாரதை அவருக்கு மரியாதை செய்தாள். உடனே அந்த முனிவர் சாரதையை "நீ புருஷனுடன் இன்பமாய் வாழ்ந்து நல்ல பிள்ளைகளைப் பெறக் கடவாய்" என்று ஆசீர்வாதம் செய்தார். அதற்கு சாரதை, "பூர்வஜென்ம கருமத்தின் பலனாய் நான் விதவையாகி விட்டதால் தங்களின் ஆசீர்வாதம் பலியாமல் வீணாய் போய்விட்டதே" என்றாள்.

அதற்கு அந்த ரிஷி, "நான் கண் தெரியாத குருடனானதால் அறியாமல் அந்தப்படி ஆசீர்வாதம் செய்ய நேரிட்டு விட்டது. ஆனாலும், அது பலிக்கும்படி செய்கிறேன் பார்" என்று சொன்னார். "என் புருஷன் இறந்து வெகுநாளாய் விட்டதே; இனி அது எப்படி பலிக்கும்?" என்று சாரதை கேட்க, அதற்கு அவர், 'நீ உமாமகேஸ்வர விரதம் அனுஷ்டித்து வந்தால் கண்டிப்பாய் நீ உத்தேசித்த காரியம் கைகூடும்" என்று கூறினார். "அவ்விரதம் அனுஷ்டிப்பதெப்படி?" என்று சாரதை கேட்டாள். அதற்கு முனி சொல்லுவதாவது:



"சித்திரை அல்லது மார்கழி மாதத்தில் ஒரு பிராமணனை அவன் மனைவியுடன் நல்ல பீடத்தில் உட்கார வைத்து அவர்களைப் பார்வதி பரமசிவனாகப் பாவித்து, மலர்களால் அர்ச்சித்து, தினமும் அன்ன ஆகார

மிட்டு வருஷக்கணக்காய் பூசை செய்து, பார்வதி பரமசிவ உருவத்தை மனதில் நினைத்து அதற்கு விரத அபிஷேகம் செய்து ஆராதித்து பஞ்சாட்சரத்தை தியானித்துக் கொண்டிருந் தால் நினைத்த காரியமெல்லாம் கைகூடும்'' என்றார்.

அது கேட்ட சாரதையானவள் அந்தப்படியே அதுமுதல் தனக்கு முனிவரின் ஆசீர்வாதம் பலிக்க வேண்டுமென்று கருத்தில் கொண்டு, முனிவர் சொன்னபடி உமாமகேஸ்வர விரதத்தை சிரமமாய் அனுஷ்டித்து வந்தாள். உடனே பார்வதி தேவி சாரதைக்கு பிரத்தியட்சமாகி "உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்டாள். சாரதை "எனக்கு புருஷன் வேண்டும்'' என்றாள்.

பார்வதி, "அப்படியே உன்னை ஒரு புருஷன் தினமும் வந்து சொர்ப்பனத்தில் புணருவான்; அதனால் நல்ல ஒரு குழந்தை பிறக்கும்'' என்று வரம் கொடுத்தாள். அது முதல் சாரதையின் சொர்ப்பணத்தில் தினமும் ஒரு புருஷன் வந்து புணர்ந்து கொண்டே இருந்தான். அதனால் சாரதைக்கு கர்ப்பமும் உண்டா யிற்று. அதைக் கண்ட அவ்வூரார் எல்லோரும், சாரதை சோரம் போய் கர்ப்பம் ஆய்விட்டாள் என்று பழித்தார்கள். இதைக் கண்டு சாரதை துக்கப்பட்டாள். பிறகு பழித்தவர்கள் வாய் அழுகி அதில் புழு உதிரும்படி பார்வதி செய்து விட்டாள்.

10 மாதம் பொறுத்து சாரதை ஒரு புத்திரனைப் பெற்றாள். அதற்கு சாரதேயன் என்று பெயர் சூட்டி, மகாமகிமை பொருந் திய சிவராத்திரியன்று தாயும் பிள்ளையும் கோகர்ணத்திற்கு யாத்திரை சென்றார்கள். செல்லும் வழியில், சொர்ப்பனத்தில் வந்து புருஷன் நேரில் வந்து சாரதையுடன் கலந்து கொண்டான். பிறகு கொஞ்ச காலம் சாரதையும் புருஷனும் சந்தோஷமாய் வாழ்ந்து இன்பமனுபவித்து புருஷன் இறந்து போனான். புருஷன் இறந்துதும் உடனே சாரதை உடன்கட்டையேறி இருவரும் சிவபதமடைந்தார்கள்'' என்று நைமிசாரண்யவாசிகளுக்கு சூதக முனிவர், வியாசரிடம் கேட்டு தெரிந்ததை சொல்லுகி றேன் என்று சொன்னார்.



இந்த சரிதை பிரமோத்திர புராணத்தில், 'உமாமகேஸ்வர விரத மகிமையும், விரதத் தின் பலனும்' என்கின்ற தலைப்பில் சொல் லப்பட்டிருக்கிறது. இதை கவனிப்போம்.

இந்தக் கதையின் ஆபாசம் எவ்வளவு மோசமாயிருக்கிறது என்பதை வாசகர்களே யோசித்துப் பாருங்கள். ஒரு சிறு பெண்ணை ஒரு கிழவன் அந்தக் காலத்திலும் கட்டிக் கொள்ளு கின்ற வழக்கமும், தகப்பன் பணம் வாங்கிக் கொண்டு சாகப் போகும் கிழவனுக்கு தனது சிறு பெண்ணை கட்டிக் கொடுக்கும் வழக்கமும் பார்ப்பனர்களுக்குள் இருந்ததாக வைத்துக் கொண் டாலும், புருஷன் இறந்தவுடன் உடன்கட்டையேறாமல் பெண் ஜாதியான (சாரதை) சிறு பெண் இருந்திருக்க முடியுமா? என்பதை நினைத்துப் பாருங்கள்.

ஒரு சமயம் உடன்கட்டை ஏறாமல் இருந்திருந்தாலும், ஒரு ரிஷிகள் இந்தப் பெண் விதவை என்ற சங்கதி தெரியாமல் போகுமா? ரிஷிக்கு ஒரு சமயம் அந்தப்படி தெரியாமல் போயிருந்தாலும், ஒரு குருட்டு ரிஷி தெரியாமல் சொல்லிவிட்ட காரியம், ஒரு விரதம் அனுஷ்டிப்பதால் கைகூடி விடுமா? அந்தப்படி கூடுமானாலும், பார்ப்பனனையும் அவன் பெண் ஜாதியையும் பார்வதி பரமசிவன் போல் எண்ணி பூசை செய்தால் பார்வதி வந்துவிடுவாளா?

அப்படி வருவதாயிருந்தாலும், பார்வதி நேரில் புருஷனைக் கொடுக்காமல், தூக்கத்தின்போது கனவில் வந்து வந்து புணர்ந்து விட்டுப் போகும்படி கட்டுளையிடுவாளா? அப்படி கட்டளையி டுவதானாலும், கனவில் புணர்ந்ததற்கு கனவில் கர்ப்பமுண்டு பண்ணாமல், விழித்த பிறகுங்கூட அந்த கர்ப்பம் இருக்கும்படி செய்வாளா?

அப்படித்தான் செய்தாலும், அதன் காரணத்தை பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்தாமல் இரகசிமாய் இருக்கச் செய்து, இந்த இரகசியம் தெரியாத பொது ஜனங்கள் சாரதை யின் கர்ப்பத்தைபற்றி சந்தேகப்பட்டால் அதற்கு பார்வதி திருப்தி அடையும்படி சமாதானம் சொல்லாமல் சந்தேகப்பட்ட வர்கள் வாய் அழுகிப் புழு தள்ளும்படி செய்வது யோக்கியமாகுமா?



அன்றியும், கோகர்ணத்திற்குப் போகும் வழியில் அந்த சொர்ப்பனப் புருஷனை வரும்படி செய்த பார்வதியும் பரமசிவனும், பொது ஜனங்கள் சந்தேகப்படும்போது வரும்படி செய்திருக்கப்படாதா? அன்றியும், அந்தப் புருஷனும் சாவானேன்?

அப்படியே காலம் வந்து செத்து இருந்தாலும், முன்னைய கிழப்புருஷனுக்கு உடன்கட்டை ஏமாத குமரி சாரதை, இந்தப் புருஷனுக்கு ஏன் கிழவி ஆனபின் உடன்கட்டை ஏறினாள்?

வாசகர்களே! வேதப்புரட்டு, இதிகாசப்புரட்டு, புராணப் புரட்டு என்பதுபோல் இந்த விரதப் புரட்டும் எவ்வளவு முட்டாள்தனமானதும் அயோக்கித்தனமானதும் சுயநல சூழ்ச்சி கொண்டதுமாய் இருக்கின்றது என்பதை நன்றாய் கவனித்துப் பாருங்கள். விரதம் என்றால் ஒரு பார்ப்பனனையும், பார்ப்பனத் தியையும் பார்வதி பரமசிவன்போல் பாவித்து, அபிஷேகம் பூசை ஆராதனை செய்தால், விதவைகளுக்கு புருஷன் சொர்ப்ப னத்தில் வருவான் என்பது எவ்வளவு அயோக்கியத்தனமான கதை?

இப்படித்தானே இப்போதுள்ள விதவைகள் புருஷ ஆசைக்கு விரதமிருந்து "சொர்ப்பனத்தில்" புருஷருடன் புணர்ந்து கொண் டிருப்பார்கள். சாரதையைப் போல் அநேக விதவைகள் இப்போ தும் கர்ப்பமானாலும், பழி சொல்லுகின்றவர்கள் வாயில் பார்வதி புழுக்கள் தள்ளச் செய்யாததால்தான் அந்த விரதமிருக் கும் விதவைகளெல்லாம் கர்ப்பங்களை தாங்களாகவே அழித்து விடுகின்றார்கள் போலும்.

பார்ப்பன சூழ்ச்சி எவ்வளவு மோசமானது என்பதை இதிலி ருந்தாவது விரதமிருக்கும் வைதீகர்களும், விரதமிருக்கும் பெண் களும், புருஷர்களும் அறிந்து கொள்ளுங்கள்.

*(சித்திரபுத்திரன் எனும் புனை பெயரில் 6.4.1930 'குடிஅரசு' இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது)*

# 12. தமிழனுக்கு கடவுள் உண்டா?



உலகத்தில் மற்ற மதக்காரர்களுடைய கடவுளைப்பற்றிக் கவனித்துப் பார்த்தாலும், இவ்வளவு ஆபாச மாக இல்லா விட்டாலும், யுக்திக்கோ, வாதத் திற்கோ நிற்க முடியாமல் அவைகளும் பெரி தும் பரிகசிக்கத்தக்கதாய்த் தானிருக்கின்றது. அதாவது, உலக சிருஷ்டிக்கு கடவுளைப் பொறுப்பாக்கி அதனோடு கடவுளைப் பொருத்துகிறபோது எல்லாக் கடவுள்களின் யோக்கியதைகளும் ஒரே மாதிரியாகத் தானி ருக்கின்றன.

உதாரணமாக, இந்துமதத்தில் உலக சிருஷ்டிக்கும் கடவுளுக்கும் சம்பந்தம் சொல்லுகிறபோது, கடவுள் முதலில் தண்ணீரை உண்டாக்கி, அதன்மீது இருந்து கொண்டு அதில் ஒரு விதையைப் போட்டு. அந்த வித்திலிருந்து உலகத்தை உண்டாக்கி அவ்வுலகத்திலிருந்து பிர்மாவை சிருஷ்டித்து, அந்த பிர்மா அந்த உலகத்தை இரண்டாக்கி ஒன்றை சுவர்க்கமாகவும், மற்றொன்றை பூலோகமாகவும் செய்து, அந்த பூலோகத்தில் பஞ்ச பூதங் களையுண்டாக்கி, பிறகு மனிதர், மிருகம், பட்சி முதலிய ஜாதிகளை சிருஷ்டித்து என்று ஆரம்பித்து மற்றும் இவைபோல அடுக்கடுக்காக எப்படி சொல்லிக் கொண்டே போகின்றதோ, அதுபோலவே தான் கிறிஸ்து முதலிய இதர மதங்களிலும் கடவுள் முதல்நாள் ஒன்றை சிருஷ்டித்தார், இரண்டாவது நாள் மற்றொன்றைச் சிருஷ்டித்தார், மூன்றாவது நாள் வேறொன்றைச் சிருஷ்டித்தார் என்பதுபோலவே சொல்லிக் கொண்டு போகப் படுகின்றன.

ஆகவே, அஸ்திவாரத்தில் கடவுள் சிருஷ்டியைப்பற்றிச் சொல்லுகிற விஷயம் எல்லா மதத்திலும் ஒன்று போலவேதானிருக்கின்றன. இவை ஏன் இப்படியிருக்கின்றன என்று பார்ப்போமேயானால், கடவுள் உண்டு என்பதற்கு சமாதானம் சொல்லும் போது, உலக உற்பத்திக்கு ஒரு ஆதாரம் வேண்டாமா? என்று கேட்டுவிட்டு, அதற்காக கடவுள் உலகத்தை உண்டாக்கினார் என்று ஆரம்பித்து, அந்த உண்டாக்கப்பட்டவைகளென்பதை முதலில் இன்னதையுண்டாக்கினார் இன்னார் என்பதாகச் சில மதமும், முதல் நாள் இன்னதை யுண்டாக்கினார், இரண்டாவது நாள் இன்னதையுண்டாக்கினாரென்பதாகச் சில மதமும் சொல்லுகின்றன. ஆகவே, இந்த இடம் மாத்திரம் எல்லாம் ஒன்றுபோலாகவேதானிருக்கின்றன. இதில் ஏதாவது தகராறு ஏற்படுமானால் எல்லா மதக் கடவுளுக்கும் ஒரே கதிதான் நேரும்.

கடவுள் ஸ்தாபனத்திற்கு ஒரே மாதிரி அஸ்திவாரம் ஏற்படுவதற்குக் காரணமென்னவென்று பார்ப்போமானால், முதன் முதலாக ஆரிய மதத்திலிருந்து சீர்திருத்தமாக கிறிஸ்தவ மதமேற்பட்டதும், அதிலிருந்து சீர்திருத்தமாக மகம்மதிய மதமேற்பட்டதும் நமக்குக் காணப்படுகிறபடியால், எல்லா மதமும் அதையே பின்பற்றிக்கொண்டு வருவதாயிற்றே தவிர வேறில்லை என்றே தோன்றுகிறது.



ஆனால், நாம் ஒரு தமிழர் என்கின்ற முறையில் கடவுள் என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்வோமானால், ''கடவுள்'' என்கின்ற பதமே கட+உள்= (கடவுள்) என்பதான இரண்டு சொற்கள் சேர்ந்த பகுபதமாக இருக்கின்றதே தவிர, வட மொழியிலும், ஆங்கில மொழியிலும் இருப்பது போன்ற பகவான் காட் (God) அல்லா என்பது போன்ற ஒரு தனி வார்த்தையோ அல்லது அந்த விதங்களான அர்த்தத்தைக் கற்பிக்கக் கூடியதான வாக்கியமோ, தமிழில் இல்லையென்பதை உணர வேண்டும். தமிழர்களுக்கு பாஷை தோன்றிய காலத்தில் ''கடவுள்'' உணர்ச்சி இருந்து இருக்குமானால் அதற்கு ஒரு தனி வார்த்தை இருந்திருக்கும்.

அது மாத்திரமல்லாமல், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் 'கடவுள் இல்லை' என்று சொல்லப்படுவதை உணர்த்துவதற்கு எப்படி எத்தீசம், எத்தீஸ்ட், நாஸ்திகம், நாஸ்திகன் என்கின்ற வார்த்தைகள் இருக்கின்றனவோ அவைபோலவே தமிழிலும் ''கடவுள் இல்லை'' என்று சொல்லுவதை உணர்த்துவதற்கும், ''கடவுள் இல்லை என்று சொல்லுபவனை''க் குறிப்பிடுவதற்கும் அப்பொருள்கள் கொண்ட ஏதாவது ஒரு வார்த்தை இருந்திருக்கும். ஆகவே, அவைகளிலிருந்தே தமிழர்களுக்கும் (அதாவது தமிழ் நாட்டாருக்கும்) கடவுளுக்கும் ஆதியில் எவ்வித சம்பந்தமுமிருந்ததில்லை என்பது ஒருவாறு புலப்படும்.

இறைவன் என்கின்ற பதத்தை கடவுளுக்கு உள்ள தமிழ்ப் பதம் என்று பண்டிதர்கள் சொல்லக் கூடுமானாலும் அது அரசனுக்கும், தலைவனுக்கும் ஏற்பட்டதே தவிர, கடவுளுக்காக ஏற்பட்ட தனிப் பொருளமைந்த சொல் அல்லவென்றே சொல்லுவோம். ஆனால், ''கடவுள்'' என்பது எப்பொருளுக்கும் தலைவன் என்கின்ற முறையில் வேண்டுமானால் இறைவன், பெரியவன் எனினும் பொருந்தும் என்று சப்புக் கட்டலாமே யொழிய அது அதற்கே ஏற்பட்ட தனி வார்த்தை ஆகாது.



நிற்க; தமிழ்நாட்டில் பலர் காலம்சென்ற பிதுர்க்களையும், செல்வாக்குள்ள பெரியார் களையும் அன்பினாலும், வீரர்களை கீர்த்தி யாலும் வழிபட நினைத்து அவர்களை உருவகப்படுத்த என்று ஒரு கல் நட்டு அக்கல்லை வணங்கி வந்ததாக மாத்திரம் சொல்லப்படுவதை நான் கேட்டிருக்கிறேன். மற்றபடி இப்போதைய கடவுள்களான

சிவன், விஷ்ணு, பிரமன், பிள்ளையார், சுப்பிரமணியன் முதலிய கடவுள்களையோ மற்றும் அது சம்பந்தமான குட்டிக் கடவுள்களையோ தமிழ் மக்கள் வணங்கி வந்தார்கள் அல்லது நம்பி இருந்தார்கள் என்றாவது சொல்லுவதற்குக்கூட இடமில்லை என்று கருதுகிறேன். இதற்கெனக்குத் தோன்றும் ஆதாரம் என்னவென்றால், இப்போது உள்ள கருப்பன், காத்தான் முதலிய பேர்கள்கொண்ட "நீச்சக் கடவுள்கள்" தவிர மற்ற "கடவுள்"கள் பெயர்களெல்லாம் வடமொழியிலேயே இருக்கின்றதென்பதே போதுமானதாகும்.

ஆனால், வடமொழிப் பெயருள்ள சில "கடவுள்"களின் பெயர்களை தமிழில் மொழிபெயர்த்து அந்தக் கடவுள்களை தமிழில் அழைப்பதைப் பார்க்கின்றோம். என்றாலும், இவை தமிழர்களுக்குள்ளும் ஆதியில் இருந்தது என்பதற்குத் தக்க சமாதானம் சொல்ல யாரும் முன் வருவதை நான் பார்க்கவில்லை.

இத மாத்திரமல்லாமல், சைவம், வைணவம் என்று சொல்லப்படும் சமயங்களாகிய தமிழ் மக்களைப் பிடித்த நோய்களான சைவ, வைணவ மதக் கடவுள்கள் எல்லாம் வட மொழிப் பெயர்கள் உடையதாகவும், அவைகளின் ஆதாரங்கள் முழுவதும் வடமொழி வேத சாஸ்திர புராண இதிகாசங்களாகவும்தானே இருக்கின்றதே அல்லாமல், தமிழ் ஆதாரத்தால் ஏற்பட்டதாகச் சொல்லக்கூடிய கடவுள் ஒன்றையுமே நான் கண்டதும் கேட்டதும் இல்லை. இவைகளுக்கு செய்யப்படும் பூசை முதலியவைகளும், வடமொழி நூல்கள் ஆதாரப்படி, வடமொழிப் பெயர்கள் கொண்ட வஸ்துக்களும் செய்கைகளுமாகவே இருப்பதையும் காணலாம். அதாவது அருச்சனை, அபிஷேகம், பலி, கற்பூரம், சாம்பிராணி, காணிக்கை முதலியவைகளாகும்.



தவிரவும், மேற்கண்ட இரண்டு சமயங்களின் பேரால் சொல்லப்படும் நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலிய சமயாச்சாரியார்களும், பக்தர்மார்களும் கும்பிட்டதும், தேவாரம், திருவாசகம், திருத்தாண்டகம், பிரபந்தம் முதலியவைகள் பாடினதும், மற்ற மக்கள் வாழ்க்கையில் உபயோகப்படுத்துவதும், ஆகிய எல்லாம் வடமொழிப் பேர் கொண்ட கடவுள்களைப் பற்றியும், அவர்களது செய்கைகளைப் பற்றிச் சொல்லப்பட்ட வடமொழிப் புராண

இதிகாசங்களிலுள்ள கதைகளைப் பற்றியுமே இருக்கின்றனவே அல்லாமல் மற்றபடி அவைகள் தமிழர்களோ அல்லது தமிழ் பண்டிதர்களோ தமிழர்களுக்கு ஆதியில் இருந்தது என்று சொல்லத்தக்கதாக ஒன்றையுமே, ஒருவர் வாக்கையுமே நான் பார்த்ததும் இல்லை; பிறர் சொல்லக் கேட்டதும் இல்லை.

மற்றும், சமயக் குறிகள் என்று சொல்லப்படும் விபூதி, நாமம் முதலிய சின்னங்களின் பெயர்கள்கூட வடமொழியில் உள்ளதே தவிர, தமிழில் உள்ளவையல்ல என்பதே எனது அபிப்பிராயம். வேண்டுமானால் அதை தமிழில் - விபூதியை திருநீறு என்றும், திருமண் என்றும் சொல்லிக் கொள்ளுகிறோம். ஆனாலும், அது சரியான மொழி பெயர்ப்பல்லவென்று சொல்வதோடு, விபூதி, நாமம் என்கின்ற பெயர்கள் எந்தக் கருத்துடன் சொல்லப்படுகின்றனவோ அந்தக் கருத்தும், பொருளும் அவற்றில் இல்லை என்றே சொல்லுவேன். விபூதி என்றும், நாமம் என்றும் சொல்லப்படும் வஸ்துக்கள் சாம்பலும், மண்ணுமாய் இருப்பதால் அந்தப் பெயரையே அதாவது, சாம்பலுக்குள்ள மாறுபெயராகிய நீறு என்றும், மண்ணை மண் என்றும் திரு என்பதை முன்னால் வைத்து திருநீறு, திருநாமம் என்று சொல்லப்படுகின்றதே ஒழிய வேறில்லை என்றே தோன்றுகின்றது.

ஆகவே, தமிழில் காட், அல்லா, பகவான் என்பவைகளைக் குறிப்பதற்கு ஒரே வார்த்தையாக ஒன்றுமே இல்லை என்பதும், அதன் சின்னங்களையும் குறிப்பிடுவதற்கு தமிழில் வார்த்தைகள் இல்லை என்பதும், அனுபவத்திலுள்ள கடவுள்களும், பெயர்களும் அவற்றின் நடவடிக்கைகளும்கூட தமிழில் இல்லை என்பதும், மற்றபடி இப்போது இருப்பவைகள் எல்லாம் வடமொழியில் இருந்து தமிழர்கள் எடுத்துக்கொண்டு தங்களுடையனவாக்கிக் கொண்ட மயக்கமே என்றும் எனக்குப் பட்டதை உங்களுக்குச் சொன்னேன்.

*(கண்ணனூர் செவ்வாய் தரும சமாஜ ஆண்டு விழாவில் தந்தை பெரியார் அவர்களின் தலைமை முடிவுரை- "குடிஅரசு" - 29.6.1930)*



# 13. கடவுள் கருணை

இந்த இரண்டு நூற்றாண்டுகளில் பூகம்பத்தால் கடவுள் தன்னடி சோதிக்குச் சேர்த்துக் கொண்ட மக்கள் கணக்கு:

| | |
|---|---|
| பெக்கிங் (சீனா) | 1,00,000 |
| கெய்ரோ | 40,000 |
| காஷான் | 40,000 |
| லிஸ்பன் | 50,000 |
| மொராக்கோ | 12,000 |
| தென் அமெரிக்கா | 50,000 |
| அலப்போ | 20,000 |
| தென் இத்தாலி | 14,000 |
| மென்சோடா | 12,000 |
| பெருஎக்வாடா | 25,000 |
| கராகாடோ | 37,000 |
| ஜப்பான் | 30,000 |
| இந்தியா | 20,000 |
| பிரான்சிஸ்கோ, சிசிலி | 77,000 |
| மத்திய இத்தாலி | 30,000 |
| கான்சுசினா | 3,00,000 |
| ஜப்பான் | 2,20,000 |

சில்லறையாக பல இடங்களில் 1,00,000; ஆக மொத்தம் சுமார் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட ஜனங்களாகும்.



இது தவிர இடியாலும், மின்னலாலும், எரிமலை நெருப்பாலும், வெள்ளத்தாலும், புயல் காற்றாலும், தன்னடி சேர்த்துக் கொண்ட மக்களின் அளவு இதைப்போல் பல மடங்குகள் இருக்கும். இவ்வளவு ஜீவ காருண்யமுள்ள கடவுளின் கருணையை

எப்படி புகழ்வது என்பது நமக்கு விளங்கவில்லை. ஆதலால் இதைப் பண்டிதர்களுக்கே விட்டு விடுவோம். ஏனெனில், அவர்கள் அதற்கே பிறந்தவர்கள் நிற்க;

## வினா - விடை

**வினா:** நாம் பாடுபட்டாலும் வயிற்றுக்குப் போதும்படியான ஆகாரம்கூட கிடைப்பதில்லை. ஆனால், பார்ப்பனர்கள் பாடுபடாவிட்டாலும் அவர்களுக்கு வயிறு புடைக்கக் கிடைக்கின்றது. இதற்கு என்ன காரணம்?

**விடை:** நமது மதமும் ஜாதியும்

***

**வினா:** நாம் பாடுபட்டு சம்பாதித்தும் நம்ம பிள்ளைகள் படிக்க முடியாமல் நம்மில் 100-க்கு 90 பேருக்கு மேலாக தற்குறியாயிருக்கிறோம்.

ஆனால், பாடுபட்டு சம்பாதிக்காமல் பிச்சை எடுக்கும் பார்ப்பனர்களில் 100-க்கு 100 பேர் படித்திருக்கிறார்கள். இதன் காரணம் என்ன?

**விடை:** மதமும் ஜாதியும்

***

**வினா:** நமது பணக்காரக் குடும்பங்கள் வர வர பாப்பராய்க் கொண்டே வருவதற்குக் காரணமென்ன?

**விடை:** வினையின் பயன். அதாவது, நம்மவர்கள் தங்கள் சமூகத்தார் பட்டினி கிடப்பதையும், கல்வி அறிவு இல்லாமல் இருப்பதையும் சிறிதும் கவனியாமல் பார்ப்பானுக்கே போட்டு அவர்களுக்கே படிப்புக்கு பணமும் கொடுத்து வந்த ''பாவமானது'' அந்தப் பார்ப்பனர்களே வக்கீலாகவும், ஜட்ஜுகளாகவும் வந்து மேல்படி பார்ப்பனரல்லாதவர்களைப் பாப்பராக்குகிறார்கள்.

அதற்கு யார் என்ன செய்யலாம்!

***



**வினா:** எந்தவிதமான விபச்சாரம் குற்றம் சொல்லத் தகுந்ததாகும்?

**விடை:** வெளியார்க்குத் தெரியும்படியாகச் செய்த விபச்சாரம் குற்றம் சொல்லத் தகுந்ததாகும்.

***

**வினா:** கிருஸ்தவனாகப் போவதில் என்ன கெடுதி?

**விடை:** ஒரு கெடுதியும் இல்லை. ஆனால், மதத்தின்பேரால் குடிக்க வேண்டாம்.

***

**வினா:** மகமதியனாவதில் என்ன கெடுதி?

**விடை:** ஒரு கெடுதியுமில்லை. ஆனால், பெண்களுக்கு மூடி போடாதே.

***

**வினா:** உண்மையான கற்பு எது?

**விடை:** தனக்கு இஷ்டப்பட்டவனிடம் இணங்கி இருப்பதே உண்மையான கற்பு.

**வினா:** போலி கற்பு என்றால் எது?

**விடை:** ஊரார்க்கோ, சாமிக்கோ, நரகத்திற்கோ, அடிக்கோ, உதைக்கோ, பணத்திற்கோ பயந்து மனத்திற்குப் பிடித்த மில்லாதவனுடன் தனக்கு இஷ்டமில்லாதபோது இணங்கி இருப்பதே போலி கற்பு.

***

**வினா:** மதம் என்றால் என்ன?

**விடை:** இயற்கையுடன் போராடுவதும், அதைக் கட்டுப்படுத்துவதும்தான் மதம்.

***

**வினா:** நாட்டுக்கோட்டையார் சமூகத்தில் உள்ள சுயமரியாதை என்ன?

**விடை:** பெண்ணுக்கு மாப்பிள்ளை தாலி கட்டுவது இல்லை என்பதாகும்.

***



**வினா:** தொழிலாளர்களுக்கு பண்டிகை நாள்களில் ஏன் ஓய்வு (லீவு) கொடுக்கப்படுகின்றது?

**விடை:** பாடுபட்டு சம்பாதித்து மீதி வைத்ததை பாழாக்குவதற்காக.

***

**வினா:** பெண்களை படிக்கக்கூடாது என்று ஏன் கட்டுப்பாடு ஏற்படுத்தினார்கள்?

**விடை:** அவர்களுக்கு அறிவில்லை; ஆற்றல் இல்லை என்று சொல்லி சுதந்திரம் கொடாமல் அடிமையாக்குவதற்காக.

***

**வினா:** மனிதனுக்கு கவலையும் பொறுப்பும் குறைய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

**விடை:** பெண் அடிமையை ஒழித்து அவர்களுக்கு முழுச் சுதந்திரம் கொடுத்து விட்டால் ஆண்களுக்கு அநேக தொல்லைகள் ஒழிந்துபோகும்.

***

**வினா:** பெண்களுக்கு நேரம் மீதியாக வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

**விடை:** தலை மயிரை வெட்டிவிட்டால் அதிக நேரம் மீதியாகும்

***

**வினா:** பெண்கள் கைக்கு ஒய்வு கொடுக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

**விடை:** அவர்களுக்கு ஒரு குப்பாயம் (மேல் சட்டை) போட்டு விட்டால் கைக்கு ஒய்வு கிடைத்துவிடும் (இல்லா விட்டால் அடிக்கடி மார்பு சீலையை இழுத்து இழுத்துப் போடுவதே வேலையாகும்.)

***

**வினா:** எல்லோருக்கும் போதுமான அளவு ஆகாரம் இருக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

**விடை:** ஒருவனும் தன் தேவைக்கு மேல் எடுத்துக் கொள்ளாவிட்டால் எல்லோருக்கும் வேண்டிய அளவு கிடைத்து விடும்.

***

**வினா:** பெரிய மூடன் யார்?

**விடை:** தனது புத்திக்கும், பிரத்தியட்ச அனுபவத்திற்கும் தோன்றுவதை நம்பாமல், எவனோ ஒருவன் எப்போதோ சொன்னதை நம்பி வாழ்வை நடத்துபவன் பெரிய மூடன்.



***

**வினா:** ஒழுக்கம் என்பது என்ன?

விடை: ஒழுக்கம் என்பது தனக்கும், அன்னியனுக்கும் துன்பம் தராமல் நடந்து கொள்ளுவதாகும்.

***

வினா: சமயக் கட்டுப்பாடு, சாதிக் கட்டுப்பாடு என்றால் என்ன?

விடை: மனிதனை தன் மனச்சாட்சிக்கும், உண்மைக்கும் நேராய் நடக்க முடியாமல் கட்டுப்படுத்துவதுதான் சாதி, சமயக் கட்டுப்பாடாய் இருக்கின்றது.

***

வினா: உண்மையான கடவுள் நம்பிக்கை என்றால் என்ன?

விடை: கடவுள் எங்கு மறைந்து போவாரோ என்று பயந்து அவரைக் காக்க பிரயத்தனம் செய்வதுதான் உண்மை யான கடவுள் நம்பிக்கையாகக் காணப்படுகிறது.

***

வினா: இந்தியாவுக்கு ஏன் ஜனநாயக ஆட்சி கூடாது?

விடை: இந்தியர்கள் 100-க்கு 90 பேர் கல்வி அறிவில்லாத - எழுத்து வாசனைகூடத் தெரியாத பாமர மக்களாய் இருப்பதை முன்னிட்டு, அவர்கள் நன்மை தீமை இன்ன தென்று அறிய முடியாதவர்களாய் இருப்பதால் தான்.

***

வினா: ஜனநாயக ஆட்சி என்றால் என்ன?

விடை: தடி எடுத்தவன் தண்டல்காரனென்பதுதான் ஜனநாயக ஆட்சி.

***

வினா: இந்தியாவுக்கு நல்ல ஜனசங்கை பெருக வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

விடை: அதிகமாகப் பிள்ளை பெறுவதை நிறுத்தி, விதவைக ளுக்கு மறுமணம் செய்தால் நல்ல திடகாத்திர முள்ள ஜனசங்கை பெருகும்.



***

வினா: இந்தியா சீர்பட என்ன வேண்டும்?

விடை: இந்தியா சீர்பட்டு இந்தியர்களும் மனி தர்கள் என்று உலகத்தோர் முன்னிலையில் சிறந்து நிற்க வேண்டுமானால், நாஸ்திகமும், நிபந்தனையற்ற பெண்கள் விடுதலையும் வேண்டியதாகும்.

**வினா:** இந்தியா அடிமையானதற்குக் காரணம் என்ன?

**விடை:** இந்தியா கெட்டு நாசமாய் என்றும் விடுபட முடியாத அடிமையாய்ப் போனதற்குக் காரணம் அவர்கள் மதமும் கடவுள்களுமேயாகும்.

**வினா:** கிருஸ்தவ மதத்தில் சில ஆபாசக் கொள்கைகள் இருந்தும் அவர்கள் எப்படி உலகை ஆளுகிறார்கள்?

**விடை:** கிருஸ்தவ மதத்தில் எவ்வளவு ஆபாசமும் முட்டாள்தன மான கொள்கைகளும் இருந்தபோதிலும் அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. ஏனெனில், அவர்கள் பெரும் பாலும் பகுத்தறிவுக்கு மதிப்பு கொடுப்பவர்களாகி விட் டார்கள். அவர்கள் வாழ்க்கைக்கோ, மன உணர்ச்சிக்கோ சிறிதும் மதத்தை லட்சியம் செய்வதில்லை. ஆதலால் அவர்கள் மதத்தைப்பற்றி நாம் பேசுவது பயனற்றதும் முட்டாள்தனமும் ஆகும்.

***

**வினா:** பார்ப்பான் மாத்திரம் எப்படி இவ்வளவு பெரிய பதவிக்கு வர முடிந்தது?

**விடை:** மத விஷயத்தில் அவர்களுக்குக் கிடைத்துள்ள உயர்ந்த நிலையால் அவர்கள் (பார்ப்பனர்கள்) எல்லோரையும் விட முன்னேறியிருக்க முடிந்தது. மத விஷயத்தில் பார்ப்பனர்களுக்குள்ள பெருமை போய் விட்டால் அவர் கள் இழிவான மனிதர்களுக்கும் இழிவான மனிதர்களாகி விடுவார்கள். ஏனெனில், அவர்களுக்குப் பாடுபடத் தெரி யாது. ஆகவே, சோம்பேறிகளின் கதியே அடைய வேண்டியவர்களாவார்கள்.

***

**வினா:** ஆண் விபசாரகர்கள் விபூதி பூசுவதின் மூலம் மோட்சத்திற் குப் போக நேர்ந்து விட்டால் அங்கு போய் விபச்சாரத்திற்கு என்ன செய் வார்கள்?



**விடை:** அதற்காக எந்த விபசாரகனும் விபூதி பூசுபவரும் பயப்பட வேண்டியது இல்லை. ஏனென்றால், அங்கு இந்த விபூதி பக்தர்களுக்கென்றே ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலிய

தேவ ரம்பையர்கள் இருக்கிறார்கள். அன்றியும், சமையல் செய்ய வேண்டிய வேலைகூட இல்லாமல் இதே வேலையாய் இருக்கலாம். ஏனென்றால், காமதேனு, கற்பகவிருட்சம் கேட்டதெல்லாம் கொடுத்து விடும்.

***

*வினா:* பார்ப்பனர்களில் ஒரு வகையாருக்கு ஏன் முகம் சூப்பையாய் இருக்கிறது?

*விடை:* அவர்கள் அனுமந்ததேவரை பூஜிக்கிறார்கள்; படுக்கை வீட்டில் அனுமார் படம் வைத்திருக்கின்றார்கள். அதனால் அவர்கள் முகம் சூப்பையாய் இருக்கின்றது.

***

*வினா:* பெண் விபசாரிகள் விபூதி பூசியதன் மூலம் மோட்சத்திற்குப் போய்விட்டால் அங்கு அவர்களுக்கு வழி என்ன?

*விடை:* கடவுள் இருக்கிறார்; போதாக்குறைக்கு அங்குள்ள மற்ற தேவர்களைக் கொண்டு சரிப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்.

***

### சும்மா சொன்னேன்

*வினா:* கடவுள் ஏன் காண முடியாதவராய் இருக்கிறார் தெரியுமோ?

*விடை:* அவர் பண்ணும் அக்கிரமத்திற்கு யார் கைக்காவது கிடைத்தால் நல்ல உதை கிடைக்குமென்றுதான். என்ன அக்கிரமம் என்றா கேட்கிறீர்கள். மூட்டை, கொசு இரண்டையும் அவர் உற்பத்தி செய்த அக்கிரமம் ஒன்றே போகாதா?

### கார்த்திகை தீபம்



பாலர் பாலுக்கழ
பட்டினியால் பலர் மடிய
எத்திசையோரும் இகழும்படி
வெண்ணெயும் நெய்யும் கொண்டு
கல்லிலும் நெருப்பிலும் கொட்டும்
கயமையே கார்த்திகை தீபமாகும்.

நமது மதமும், தெய்வமும், உற்சவமும், முட்டாள்தனமான தென்றும், அது செல்வத்தைப் பாழாக்குகின்றதென்றும், மக்க ளுக்கு யாதொரு பலனையுமளிக்கின்றதில்லை என்றும் சொல் லப்பட்டு வருவதற்கு உதாரணம், சமீபத்தில் திருவண்ணாமலை யிலும், திருச்செங்கோடு முதலிய ஊர்களிலும் கார்த்திகை தீபம் (கூம்பு-சொக்கப் பனை) என்கின்ற உற்சவத்தின்போது குடம் குடமாய், டின் டின்னாய் நெய்யையும் வெண்ணெயையும் கொண்டு போய் நெருப்பில் கொட்டப் போகும் முட்டாள்தன மும், வீண் செலவும், அதனால் செல்வம் பாழாவதும் போதாதா என்று கேட்கின்றோம். இதற்கு பார்ப்பன - தேசியப் பத்திரிகை கள் என்ன சமாதானம் சொல்லப் போகின்றன என்பதை கவனிப்போம்.

*(சித்திரபுத்திரன் எனும் புனைபெயரில் 16.11.1930 "குடி அரசு" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது)*

# 14. அர்ச்சகர் - ஜோசியர் சம்பாஷணை

***அர்ச்சகர்:*** என்ன ஜோசியரே, கோயிலுக்கு முன்போல் ஆளுகள் வருவதே இல்லையே! குடும்ப நிர்வாகம் கஷ்டமாகவல் லவா இருக்கிறது.

***ஜோசியர்:*** என்ன காரணம்?

***அர்:*** இந்த எழவு எடுத்த சுயமரியாதைதான்.

***ஜோ:*** சுயமரியாதை காரணம் என்றால், சுயமரியாதைக்காரர்கள் சாமி இல்லை பூதம் இல்லை என்று சொல்லி மக்களைக் கோயிலுக்குள் போகக் கூடாது என்று பிரச்சாரம் செய்கின் றார்களே, அதனாலா?

***அர்:*** இல்லை இல்லை. அதற்கெல்லாம் நமக்கு பயமில்லை. இன்னமும் ஆயி ரந்தடவை வேண்டுமானாலும் சாமி யில்லை, பூதமில்லை என்று சொல் லட்டும்; கோயிலை வேண்டுமானா லும் இடிக்க வேண்டுமென்று சொல் லட்டும். அதனால் நமக்கு ஒன்றும் கெட்டுப் போகாது.



**ஜோ:** மற்றென்ன காரணம் என்ன சொல்லுகிறீர்கள்?

**அர்:** கோயில்களுக்கு தேவதாசிகள் வருகின்றதான முக்கிய கைங்கரியத்தைப்பற்றி கண்டபடி பேசி அதை நிறுத்தி விட்டார்களல்லவா, அதனால்தான்.

**ஜோ:** இதற்கும் பக்திக்கும் சம்பந்தமென்ன? இதனால் எல்லாம் மக்களுக்குக் கடவுள் பக்தி குறைந்து விடுமா?

**அர்:** கடவுள் பக்தி என்றால் என்ன என்கிறீர்! கடவுள் தான் எங்கும் நிறைந்தவராயிற்றே; இதற்காக ஒரு மனிதன் கோயிலுக்கு வர வேண்டுமா?

**ஜோ:** மற்றெதற்காக வருகிறார்கள்?

**அர்:** இரண்டு காரியத்திற்காகத்தானே கோயிலுக்கு வருகின்றார்கள்:

1) தன்னை பக்திமான் என்று பிறர் மதிக்க வேண்டும்.

2) அங்கு வரும் நல்ல பெண்களை ஆண்கள் பார்க்கவும், ஆண்களைப் பெண்கள் பார்க்கவுமான காரியங்களுக்கு என்றாலும், இரண்டாவது விஷயத்திற்குத்தான் அதிகம் பேர் வாலிபர்கள் சற்று ஷோக் பேர் வழிகள் சிறிது வ்யதானவர்களாயிருந்தாலும் சபலமுடையவர்க்ள் ஆகிய வர்கள் வருவது. இப்படிப்பட்ட ஆண்கள் தாராளமாய் - வராவிட்டால் குடும்பப் பெண்களும் வருவதில்லை. ஆக, இப்படிப்பட்ட இரண்டு கூட்டம் வந்தால்தானே காணிக்கை, கட்டளை, இணைப்புத் தரகு ஆகியவைகள் கிடைக்கும். ஆகவே, நமக்குக் கோயிலில் மணியடிப்பதில் என்ன பிரயோசனம்? கோயில் சம்பளமாகிய மாதம் 1-12-0 ரூபாய் சம்பளமா நமக்குக்கட்டும்?

**ஜோ:** அப்படியா சங்கதி, அவர்கள் இப்படிச் செய்தால் நமக்கு வேறு கிடைக்காதோ?



**அர்:** என்ன வழி?

**ஜோ:** நம்ம ஆளுகளே ஒன்று சேர்ந்து நாம் ஆளுக்கு இரண்டு மூன்று வீதம் பெண்டாட்டிகள் கட்டி, நன்றாய் அலங்கரித்து தினம் காலை, மாலையில் கோயிலுக்கு வரும்படி செய்தால் என்ன?

**அர்:** அப்படிச் செய்வது சாத்தியமாகுமா? அவர்களுக்கு நகை, புடவை, மினுக்கு,

கண்ட கண்ட இடங்களுக்கு எல்லாம் சென்று அறிமுகம் செய்து கொள்ளுவது முதலாகிய இதெல்லாம் செய்ய வேண்டாமா? பிறகு நமது வீடுகளிலும் போதிய சவுகரியம் - வீடு, வாசல், கட்டில், படுக்கை முதலிய சவுகரியம் ஆகியவைகள் வேண்டாமா? இவற்றிற்கெல்லாம் பணத்திற்கு எங்கே போவது?

நாம் ஏதோ தாசிகள் செல்வாக்கினால் கோயிலுக்கு வருகின்றவர்களில் ஒன்று இரண்டு ஆள்களைப் பிடித்து சரி பண்ணி, அதுவும் இரகசியம் என்றும் அவசரமென்றும் பயப்படுத்தி 10, 5 பெற்றுக் கொண்டு கஷ்டமில்லாமல் நஷ்டமில்லாமல் சம்பாதிப்பது நலமா? அப்படிக்கின்றி, நம்ம பெண்களையே தாசிபோல் நடக்க ஏற்பாடு செய்து கொள்ள முடியுமா?

**ஜோ:** என்னமோ கஷ்டகாலம் உங்களுக்கு மாத்திரமல்ல; நமக்கும்கூடத்தான் வந்துவிட்டது.

**அர்:** உங்களுக்கு என்ன வந்தது?

**ஜோ:** இப்போது எந்தத் 'தேவடியா' மகன் நம்மிடம் ஜோசியம் பார்க்க வருகிறான்? பிள்ளைக்கும் பெண்ணுக்கும் பொருத்தம் பார்க்கின்ற வேலையே மிகவும் குறைந்து போய் விட்டது.

**அர்:** ஏன்?

**ஜோ:** ஏன் என்ன! அத்துகளே - பெண்ணும் மாப்பிள்ளையுமே பொருத்தம் பார்த்துக் கொள்ளுகின்றன.

**அர்:** இருந்தாலும் கிரகதோஷம் பார்க்கவாவது வருவார்களே?

**ஜோ:** அதாவது வந்தாலும் பரவாயில்லை. அதற்குத்தான் எங்கு வருகின்றார்கள்! "திருட்டுத் தேவடியா பிள்ளைகள்" காய்ச்சல் வந்தால் - தலைவலி வந்தால் உடனே டாக்டர்கள் இடம் போய் விடுகின்றார்கள். நம்மிடம் வருவதே இல்லை. நம்மைக் கண்டால் சிரிக்கின்றார்கள்; என்னடா என்று கேட்டால், சுயமரியாதையடா என்கின்றார்கள்.



**அர்:** சரி, இவ்வளவு ஆனதற்கப்புறம் எனக்கு ஒன்று தோன்றுகிறது.

**ஜோ:** என்ன?

**அர்:** நாமும் சுயமரியாதைப் பிரச்சாரம் செய்வதாகச் சொல்லி ஏமாற்றி மெள்ள மெள்ள உள்ளே இருந்தே அதை ஒழித்து விடுவது! எப்படி என்றால், இப்பொழுது எத்தனையோ தமிழ்ப் பண்டிதர்கள் அப்படித்தான்; அதாவது, நானும் சுயமரியாதைக்காரன் என்று சொல்லிக் கொண்டு அதற்குள் பிரவேசித்து அதை ஒழிக்கப் பார்க்கின்றார்களே அதுபோல்.

**ஜோ:** அது நல்லவழிதான். நம்முடைய பெரியவாள் பவுத்தர்கள் காலத்திலும் இப்படித்தான் செய்தார்கள். ஆனால், இந்த சு.ம. பயல்கள் (சுயமரியாதைக்காரர்கள்) இது தெரிந்து தான் பு.ம. பயல்களை (புராண மரியாதைக்காரர்களை) அதாவது, பிராமணர்களைச் சேர்ப்பதில்லை என்று தீர்மானித்து விட்டார்களே!

**அர்:** அதுவும் அப்படியா! அப்படியானால் இந்தப்படி ஏழைகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் இந்த சு.ம.காரன்கள் நாசமாய் நிர்மூலமாய்ப் போகட்டும். நாம் போய் இனி காங்கிரசில் சேர்ந்து கொள்ளுவோம்.

*(சித்திரபுத்திரன் எனும் புனைபெயரில் 10.5.1931 "குடிஅரசு" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது)*

# 15. இலங்கை உபன்யாசம்

தோழர்களே! கடவுள், மதம், ஜாதியம், தேசீயம், தேசாபிமானம் என்பவைகள் எல்லாம் மக்களுக்கு இயற்கையாக தானாக ஏற்பட்ட உணர்ச்சிகள் அல்ல. சகல துறைகளிலும் மேல்படியிலுள்ளவர்கள் தங்கள் நிலை நிரந்தரமாயிருக்க ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கட்டுப்பாடான ஸ்தாபனங்களின் மூலம் பாமர மக்களுக்குள் புகுத்தப்பட்ட உணர்ச்சிகளேயாகும். இந்தப்படி



புகுத்தப்பட வேண்டிய அவசியமும், காரணமும் என்னவென்று பார்த்தால், அவை முற்றும் பொருளாதார உள் எண்ணத்தையும், அன்னியர் உழைப்பாலேயே வாழ வேண்டும் என்கின்ற உள் எண்ணத்தையும் கொண்ட பேராசையும், .சோம்பேறி வாழ்க்கைப் பிரியமுமேயாகும்.

ஆதியில், மனிதர்கள் காடுகளில் தனிமையாய் - சுயேச்சையாய்த் திரிந்த - இயற்கை

வாழ்க்கையிலிருந்து சமூகக் கூட்டு வாழ்க்கைக்கு வரும்போது அவனவன் தன் தனக்கு வேண்டிய சகல காரியங்களையும் தானே செய்துகொண்டும், ஒரே சமூகமாய் சமத்துவமாய் வாழலாம் என்று எண்ணியே ஒழிய, மற்றபடி மற்றொருவனை அடிமைப்படுத்தி அவனிடம் தனக்கு வேண்டிய எல்லா வேலையையும் வாங்கிக் கொண்டு ஏய்த்து, அவனை உலக சுகபோகங்களில் பட்டினிபோட்டு, தான் மாத்திரம் சோம்பேறியாய் இருந்து வாழ்ந்து கொண்டு, எல்லா சுகபோகங்களையும் தானே அனுபவித்துக் கொண்டு, இருப்பதற்கோ, அல்லது மற்றவனுக்கு அடிமையாய் இருந்து கஷ்டப்பட்டு உழைத்து, அவ்வுழைப்பின் பெரும்பயனை மற்றவன் அனுபவிக்க விட்டு விட்டு, தான் பட்டினி கிடப்பதற்கோ அல்ல என்பது நேர்மையுள்ள மனிதர் யாவரும் ஒப்புக் கொள்ளத்தக்க விஷயமாகும்.

ஆனால், நாள் ஏற ஏற, மக்களுக்குள் சிலருக்கு பேராசையும், பொறாமையும், சோம்பேறித்தனமும் வலுக்க வலுக்க அவற்றிலிருந்து செல்வவானும், அரசனுக்கு குருவும் ஏற்பட்டு, பிறகு அவற்றை நிலைநிறுத்த ஆத்மா, கடவுள், வேதம், ரிஷிகள், மகாத்மாக்கள் ஆகியவைகளைக் கற்பித்து, பிறகு அவைகள் மூலம் கடவுள் செயல், முன்ஜென்மம், பின் ஜென்மம், கர்மம், பாவம் புண்ணியம், மேல் உலகம், கீழ் உலகம், தீர்ப்பு நாள், மோட்சம், நரகம் ஆகியவைகளும் கற்பிக்க வேண்டியதாய்விட்டது.

இந்தக் கற்பனைகளின் பயன்தான் பெரும்பான்மையான மக்கள் பாமரர்களாகவும், ஏமாற்றப்படவும், கொடுமைக்குள்ளாகவும், மற்றவர்களுக்கு அடிமையாகி உழைக்கவும், உழைத்தும் சரியான கூலி கிடைக்காமல் பட்டினி கிடந்து உழல்வதை பொறுமையுடன் பொறுத்துக் கொள்ளவுமான காரியங்கள் நடந்து வருவதுடன், அவை எங்கும், என்றும் நிலைத்தும் நிற்கின்றன. எப்படியாயினும், இந்த நிலை அடியோடு அழிபட வேண்டும். அதற்காக அதன் காப்புகளான மேற்குறிப்பிட்ட கடவுள், மதம், தேசியம், ஜாதியம் என்பவைகளும், அவற்றின் பேறுகளான ஆத்மா, முன்ஜென்மம், கர்மம், தீர்ப்பு, மோட்ச நரகம் பாவ புண்ணியம் ஆகியவைகளாகிய போலி உணர்ச்சிகளும் அவற்றின் ஸ்தாபனங்களும் உடைத்தெறியப்பட வேண்டும்.



கஷ்டப்படுகிற மனிதர்கள் தாங்கள் பாடுபட்டும் பட்டினி இருக்க நேருவதையும், 'யோக்கியமாய்', 'நாணயமாய்' நடந்தும் இழிவாய்', 'கீழ்மக்களாய்' கருதப்படுவதுமான தங்களது கொடுமையின் நிலைமைக்கு மற்றவர்களால் தாங்கள் ஏமாற்றப் படுவதுதான் காரணம் என்பதை உணராமல், தங்களுடைய முன்ஜென்ம கர்மபலன் - தலைவிதி - கடவுள் செயல் என்பதாகக் கருதிக் கொண்டு, சிறிதும் முன்னேறுவதும் முயற்சி செய்யாமலும், சூழ்ச்சியின் தன்மையை உணராமலும் இருப்பதோடு, தங்கள் நிலைமையைப்பற்றி சிறிதும் அதிருப்திகூட அடையக்கூடாதென்று கருதி தங்கள் நிலையைப்பற்றி தாங்களே சமாதானமும் சாந்தமும் அடைந்து கொள்ளுகிறார்கள்; வெளியில் சொல்லிக் கொள்ளக்கூட வெட்கப்படுகிறார்கள். ஏனெனில், கஷ்டப்படுகின்ற மக்களுக்கு கடவுள் உணர்ச்சியும் மதமும் இதைத்தான் போதிக்கின்றது. எப்படி என்றால்:-

"ஓ கஷ்டப்படுகின்ற மனிதனே! கஷ்டப்பட்டும் பட்டினி கிடக்கின்ற இளைத்த ஏழை மனிதனே!! நீ உனது முன்ஜென்ம பாபகர்ம பலத்தினால் - தலைவிதியால் - கடவுள் சித்தத்தால் இம்மாதிரி துன்பத்தை அனுபவிக்கின்றாய். இந்த ஜென்மத்தில் நீ உனக்கேற்பட்ட இந்த நிலைமையைப் பொறுமையுடன் ஏற்று சமாதானமும், சாந்தமும் அடைந்து இருப்பாயாகில், அடுத்த ஜன்மத்தில் சுகப்படுவாய் - மேலான பிறவி பெறுவாய் - அல்லது மேல் உலகில் மோட்சம் என்னும் மேன்மையை அடைவாய் - கடவுள் சன்மானம் அருளுவார்"

என்கின்ற உபதேசமுமேயாகும். இந்தப் பொறுமை உபதேசமும் சாந்த உபதேசமும் சமாதான உபதேசமும், சமாதான உபதேசமும், மக்களைக் கோழைகளாகவும், முற்போக்கற்றவர்களாகவும் செய்து அவர்களது கஷ்டத்திலிருந்தும் இழிவிலிருந்தும் முன்னேற முடியாமலும் விடுபட முடியாமலும் சுயமரியாதை உணர்ச்சி பெறாமலும் இருந்து உயிர் வாழும்படி செய்து வந்திருக்கிறது.



இவ்வாறு மாத்திரம்தானா? இந்தக் கடவுள் உணர்ச்சியும், மதமும் செல்வந்தர்களுக்கும், மிராசுதாரர்களுக்கும், மற்றும் உத்தியோகம், வியாபாரம், லேவாதேவி என்னும் பேர்களால் ஏழைகளிடமிருந்து பெரும்பணம் கொள்ளை கொண்டு மற்றவர்களைப் பட்டினிபோட்டுப் பெரும் பணம் சேர்க்கும்

பணக்காரர்களுக்கும் போதிப்பது என்ன என்பதைப் பார்த்தாலோ, அது,

"ஓ பிரபுக்களே! செல்வவான்களே!! ஏராளமாக மேலும் மேலும் பணம் சேர்க்கும் பணக்காரர்களே!! லட்சுமி புத்திரர்களே!! நீங்கள் முன் ஜென்மத்தில் செய்த புண்ணிய கர்மங்களால் - கடவுள் உங்கள்மீது வைத்த கருணையினால் இவ்வுயர் நிலையை அடைந்திருக்கிறீர்கள். இவ்வேராளமான பண வருவாய்கள், உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இச்சுகபோகம் உங்களுக்குக் கிடைத்ததற்கும் காரணம் கடவுள் சித்தமேயாகும். ஆதலால், நீங்கள் கடவுள் பக்தி உள்ளவர்களாக இருந்து கடவுளுக்குக் காணிக்கை செலுத்துவதன் மூலமும், கடவுளுக்கு கோயில் கட்டுவதன் மூலமும், கடவுள் பக்தர்களான பாதிரி, குரு, பிராமணர் முதலியவர்களுக்கு மரியாதை செய்து சத்திரம், மடம் முதலிய உதவி அளிப்பதன் மூலமும் நன்றி செலுத்தி இந்நிலையை நிலைநிறுத்திக் கொள்ளுவதுடன், மோட்ச லோகத்திலும் சுலபமாக இடம் சம்பாதித்துக் கொள்ளுங்கள்."

என்பதேயாகும். ஆகவே தோழர்களே! இந்தக் காரணங்களாலேயே மக்களில் உயர்வு - தாழ்வும், எஜமான் - அடிமையும், முதலாளி - தொழிலாளியும், அரசன் - குடிகளும், குரு - சிஷ்யனும் ஏற்பட்டிருக்கின்ற என்பதை இப்போதாவது உணருகிறீர்களா?

உலகிற்கு அரசன் அரசாட்சி என்பதாக ஒரு வகை இருந்து வருவதின் காரணமெல்லாம்கூட செல்வவான்களின் செல்வங்களைக் காப்பாற்றவும், சோம்பேறி வாழ்க்கைகளையும் அவர்களது தத்துவங்களையும் பிறர் இகழாமல் இருக்கவுமே ஒழிய, மற்றபடி மக்கள் சமூகம் துன்பப்படாமலோ, மற்றவர்களால் கொடுமைப்படுத்தப்படாமலோ, சகல துறைகளிலும் உயர்வு - தாழ்வு கொடுமை இல்லாமலோ இருப்பதற்காக அல்லவே அல்ல என்பதை நீங்கள் உறுதியாய் நம்புங்கள்.

இதுபோலவேதான் முன் குறிப்பிட்ட கடவுள், மத உணர்ச்சி கற்பிக்கப்படுவதும், ஏழைகள் தாங்கள் படும் கஷ்டங்களுக்குக் காரணம் முதலாளிகளின் சூழ்ச்சியும், சோம்பேறிகளின் தத்துவங்களும் என்பதை உணராமல் இருப்பதற்காகவே ஒழிய வேறில்லை.



உதாரணம் வேண்டுமானால், இன்றைய தினம் கஷ்டப்படுவதாகவும், இழிவுபடுத்தப்பட்டதாகவும், பட்டினி கிடந்து துன்பப்படுவதாகவும், ஏழைகளாகவும் காணப்படும் மக்களில் அநேகரை அணுகி அவர்களது இவ்வித கஷ்ட நிலைக்குக் காரணம் என்ன என்று கேட்டுப் பாருங்கள். உடனே அவர்கள் சற்றும் தயக்கமின்றி தங்களின் கஷ்டநிலைக்குக் காரணம் தங்கள் ''தலைவிதி'' என்றும், 'முன்ஜென்ம கர்மபலன்'' என்றும், ''கடவுள் சித்தம்'' என்றும், ''ஆண்டவன் கட்டளை'' என்றும் தான் பதில் சொல்லுவார்களேயொழிய, பிற மனிதர்களால் அரசாங்க சட்டத்தால் - செல்வவான்களின் சூழ்ச்சியால் சோம்பேறிகளின் தந்திரத்தால் தாங்கள் ஏமாற்றப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு அவதிப்படுவதாக ஒரு நாளும் சொல்ல மாட்டார்கள். ஆதலால் தான், ஏழைகளின் கஷ்டங்களை விலக்க வேண்டுமென்பவர்கள் முதலில் அதற்கு அஸ்திவாரமான காரண காரியங்களைக் கண்டுபிடித்து அழித்தெறிய வேண்டுமென்று சொல்ல வேண்டி இருக்கின்றது.

கடவுள் என்பது அர்த்தமும் குறிப்பும் அற்ற வார்த்தையாய் இருந்து வந்தபோதிலும் அது மனித சமூகத்தில் 100-க்கு 99 மக்களைப் பிடித்து தன் வயப்படுத்தி மடமையாக்கி ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. கடவுள் என்ற வார்த்தை கற்பிக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆகியிருந்தபோதிலும்கூட, கடவுள் என்பது இன்னது என்று குறிப்பாக குளறுபடி இல்லாமல் தெளிவுபட உணர்த்தியவர்களோ, உணர்ந்தவர்களோ இதுவரையில் காணக்கிடைக்கவில்லை. பொதுவாக, அந்தப்படி ஒரு உணர்ச்சியை மக்களுக்குள் எப்படியாவது புகுத்தி அவர்களைப் பயப்படுத்தி வைக்க வேண்டும் என்கின்ற அவசியத்தினால் அதற்கு என்று வேறு ஒரு (மானச) உலகத்தையும், பாவ புண்ணிய பயனையும், மோட்ச நரகத்தையும் கற்பித்து, அதைப் பரப்ப பலவித ஸ்தாபனங்களை உண்டாக்கி, அதன் பிரச்சாரத்தின் பேரால் பிழைக்க ஒரு கூட்டத்தையும் ஏற்பாடு செய்து, அக்கூட்டத்திற்கு அதிலேயே பிழைத்துத் தீர வேண்டியதான நிலைமையையும் ஏற்படுத்தி விட்டதால் வெகு சுலபமாகவும் செல்வாக்காகவும் அதன் பிரச்சாரம் நடக்கவும், மக்களை தன்வயப்படுத்தவுமான காரியங்கள் நடந்து கொண்டே வருகின்றன. கடவுள் என்றால்



என்ன? என்றாலும் கடவுள் என்றால் என்ன? என்பதை உணர்வதற்கில்லாமலும், உணர வேண்டும் என்று நினைப்பதற் கில்லாமலும் இருந்து வருகிறது.

யாராவது கடவுளைப்பற்றி நெருக்கிப் பிடித்துக் கேட்டால், அது முழுவதும் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களையும், செய்கைகளையும் கொண்டிருப்பதும், ஆளுக்கு ஒருவித வியாக்கியானம் கூறுவதுமாய் இருப்பதோடல்லாமல், வேறுவி தமாய் குறிப்பாக பதில் கிடைப்பது என்பது அரிதாகவே இருக்கிறது.

கடவுள் என்பது சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும், சர்வ சக்தியும் கொண்ட ஒரு ஒப்பற்ற தனிப் பொருளென்று சொல்லப்பட்டு விடும், உடனேயே அது கண்ணுக்குத் தெரியா தது என்றும், மனத்திற்குத் தோன்றாதது என்றும் சொல்லப்படு வதோட்டாமல், அதற்கு உருவம் இல்லையென்றும், குணம் இல்லையென்றும், இன்ன தன்மையது என்று விளக்க முடியா தது என்றும் சொல்லப்பட்டு விடுகின்றது.

இவற்றுள் மற்றொரு வேடிக்கை என்னவென்றால், இப்படிப் பட்ட ஒரு கடவுள் தன்மையை அதாவது ''சர்வ சக்தியும் சர்வ வியாபகமும் உடையதும், கண்ணுக்கும் மனதிற்கும் தென்படாததும், குணமும் உருவமும் இன்ன தன்மையென்று குறிப்பிடக்கூடிய தன்மையும் இல்லாதது''மான ஒரு கடவுளை நிலை நிறுத்தவும், அதைப்பற்றி மக்கள் நம்பிக்கைகொள்ளவும் ''கடவுளால் உண்டாக்கப்பட்ட'' மக்களிலேயே பலர் வக்கா லத்து பெற்று கடவுளை நிரூபிக்க ஒழுங்கற்ற முறையிலும் ஒழுக்கயீனமான முறையிலும் எவ்வளவோ பாடுபட வேண்டி யிருப்பதுமேயாகும்.

மற்றும், அப்படிப்பட்ட வக்காலத்துக்காரர் தங்கள் சொந்த நிலையில் தங்களால் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்தையும் தாங்களே செய்வதாகவும், தங்களால் சொல் லப்படும் ஒவ்வொரு விஷயமும் தாங்களே அறிந்து சொல்வதாகவும் நினைத்தே பேசி யும் நடந்தும் வருகிறார்கள். அது மாத்திரமல் லாமல், மற்றவர்களால் செய்யப்படும் சொல் லப்படும் ஒவ்வொரு விஷயத்தையும் மற்ற வர்கள் தங்களுக்குச் செய்வதாகவும், சொல் லுவதாகவும், எழுதுவதாகவும் கருதுவது



டன், மற்றவர்கள்மீது துவேஷமும் வெறுப்பும் விருப்பும் கொண்டு அவர்களை இன்ன இன்னபடி நடவுங்கள் என்றும், தங்களுக்கு இன்ன இன்ன காரியங்களைச் செய்து கொடுங்கள் என்றும் கோருகிறார்களேயல்லாமல், "இவை எல்லாம் சர்வ வல்லமையுள்ள கடவுள்" செயலால் சர்வ வல்லமையுள்ள கடவுள்" செயலால்தான் நடக்கின்றது - நடந்து விடும் என்ற நம்பிக்கையும் உறுதியும் தைரியமும் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

மற்றொரு சாரார், "கடவுளைப் பார்க்காவிட்டாலும், உணரா விட்டாலும், உலகப் படைப்புக்கும் நடப்புக்கும் ஏதாவது ஒரு கர்த்தாவோ, காரணமோ இருக்க வேண்டாமா? அப்படிப்பட்ட கர்த்தாவோ காரணமோதான் கடவுள்" என்று சொல்லுகிறார்கள்.

மற்றொரு சாரார், "உலகத் தோற்றத்திற்கும் நடப்புக்கும் ஏதாவது ஒரு சக்தியாவது இருக்குமல்லவா! அதுதான் கடவுள்" என்கிறார்கள்.

மற்றொரு சாரார், "இயற்கையே - அழகே, அன்பே - சத்தியமே கடவுள்" என்றும், இன்னும் பலவாறாக சொல்லுகிறார்கள். ஆனால், நமது நாட்டைப் பொறுத்த மக்கள் கடவுளுக்கு மனித உருவம் கற்பித்து, சாதாரண மனித வாழ்க்கையிலுள்ள பெண்டு பிள்ளை முதலியவைகளைக் கற்பித்து, செல்வவானுக்குள்ள குணங்களையும், சுகபோகங்களையும் கற்பித்து, அதற்குக் கோயில், பூசை, உற்சவம், கலியாணம், சாந்திமுகூர்த்தம் முதலியவைகளைக் கற்பித்து, வணக்கத்திற்காக என்று கோடானு கோடி ரூபாய்களை செலவு செய்யச் செய்து மக்களை அதுவும் ஏழை மக்களை வாட்டி வளைவெடுத்து தொல்லைப்படுத்தியும் வருகிறார்கள். இப்படியாக கடவுளைப் பற்றி இன்னும் பல விதமாய் அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டும் காரியத்திலும் பல செய்யப்பட்டும் வருகின்றன. இந்தவிதமான கடவுளைப்பற்றி அர்த்தமற்ற - குறிப்பற்ற - பரிகாசத்திற்கும் முட்டாள்தனத்திற்கும் இடமான அபிப்பிராயங்களும், மற்றும் பாமர மக்களை தந்திரக்காரர்கள் ஏமாற்றுவதற்கான முறைகள் கொண்ட கருத்துகளும் விவகாரங்களும் இன்றோ நேற்றோ அல்லாமல் வெகு காலமாகவே இருந்து வருகின்றன. அன்றியும், இக்கருத்துக்கள் மதக் கொள்கைகள் என்பவற்றின் மூலமாகவும்



அரசாங்க சட்டங்களின் மூலமாகவும் மறுத்துப் பேச இடங் கொடுக்கப்படாமலும், மீறிப் பேசினால் தண்டித்தும், மதவெறி யால் என்றும் கொடுக்கப்படுத்தியும்தான் காப்பாற்றப்பட்டும் நிலை நிறுத்தப்பட்டும் வந்திருக்கின்றது.

இன்றும்கூட நமது இயக்கப் பிரச்சாரங்களில் அவற்றின் கொள்கைகளைப் பற்றி ஆட்சேபிக்கக்கூடிய வகை சுலபத்தில் இல்லாமல் இருப்பதால் வேறு வழியில் தந்திரமாய் அதாவது 'சு-ம. இயக்கக் கொள்கைள் எல்லாம் சரி. அது ஏழை மக்களுக்குத்தான் பாடுபடுகின்றது. ஏழை - பணக்காரன் என் கின்ற வித்தியாசம் கூடாதென்கின்றது. ஆனால், அது கடவுள் இல்லை என்று சொல்லுகின்றது. மதத்தை அழிக்கின்றது. மக்களை நாஸ்திகராக்குகின்றது. அதுதான் எமக்குப் பிடிக்க வில்லை. ஆதலால், அதை வளரவிடக் கூடாது'' என்று சொல்லுவதன் மூலம் நமக்கு எதிர்ப் பிரச்சாரம் செய்கின்றார்கள். மற்றும் பல இடங்களில் நாம் போகுமுன்பே, நாஸ்திகன் வந்துவிட்டான், மதத் துரோகி வந்துவிட்டான் என்று விஷமப் பிரச்சாரம் செய்து மக்களை நமது பிரசங்கத்தை - நான் என்ன சொல்லுகிறேன் என்பதைக் கேட்க அனுமதிக்கக்கூட மறுக்கின் றார்கள், மற்றும் சில இடங்களில் பலாத்கார முறையில் - காலித்தனமான முறையில் நமது பிரச்சாரத்தைக் கலைக்க முயற்சிக்கிறார்கள்.

இதன் காரணம் என்னவென்று பார்க்கப் போனால் கண்டுபி டிப்பது மிகவும் சாதாரணமான விஷயமேயாகும். அதாவது, அவர்களது ''எங்கும் நிறைந்த'', ''எல்லாம் வல்ல'', ''அவ னன்றி ஓரணுவும் அசையாததான'' கடவுள் நம்பிக்கையும், அப்படிப்பட்ட கடவுளின் அவதாரங்களாலும், கடவுள் அம்சம் பெற்றவர்களாலும், கடவுள் குமாரராலும் உண்டாக்கப்பட்ட மத நம்பிக்கையுமேயொழிய வேறில்லை என்று சொல்லப்படுகி றது. ஆகவே, அதன் கருத்து என்னவென்றால், எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த கடவுள் உணர்ச்சியும், தத்துவமும் ஒரு சாதாரண மனிதனால் அழிக் கப்பட்டு விடும் என்றும், கடவுள், அவதா ரம், அம்சம், குமாரன், தூதன் ஆகியவர்கள் மூலம் உபதேசிக்கப்பட்ட மதமானது ஒரு சாதாரண மனிதனின் முயற்சியால் அழிக்கப் பட்டு விடும் என்றும், இதனால் மனித சமூகத்தின் மேன்மை போய்விடுமென்றும்



பயந்தே இம்மாதிரி விஷமப் பிரச்சாரம் செய்வதாயும், பலாத்கா ரச் செயல்கள்கூட செய்ய வேண்டி இருப்பதாயும் தீர்மானிக்க வேண்டி இருக்கிறது.

இவ்விதமாக கடவுள் நம்பிக்கையின் பேரால், மத நம்பிக்கை யின் பேரால், பலாத்காரச் செயல் - எதிர்ப்பிரச்சாரம் விஷமப் பிரச்சாரம் ஆகியவைகள் செய்யப்படுவது பெரிதும் அறியாமை யால் என்றோ, மதத்தையும், கடவுள் தன்மையையும் சரிவர உணராததினால் என்றோ, அல்லது மதவெறி, கடவுள் வெறி என்றோ சொல்லிட முடியாது. ஏனெனில், கடவுளும் மதமும் உள்ள உலகில் மக்கள் தோன்றிய காலமுதலே அவற்றுக்கு எதிரிடையான கருத்துடையவர்களையும், அவற்றை ஒப்புக் கொள்ளாதவர்களையும், அரசாங்கமும், மதஸ்தாபனக்காரர்க ளும் கொன்றும் சித்திரவதை செய்தும் தண்டித்தும் கொடுமை செய்தும் வந்திருப்பதானது, கடவுள் மதம் சம்பந்தமான சரித்தி ரங்களாலும், பிரச்சார முறைகளாலும் நன்றாய் உணரலாம். இக்கொள்கையை, முறையை இன்றும் சில சமயக்காரர்கள் கையாண்டு வருவதையும் நம் போன்றவர்கள் கடவுள், மத நம்பிக்கைக்காரர்கள் என்பவர்களால் நடத்தப்படுவதையும் கொண்டு உணரலாம். ஆகவே, இதன் கருத்து, சுயநலமும், சோம்பேறி வாழ்க்கைப் பிரியமுமே ஒழிய வேறில்லை.

*(அய்ரோப்பா, ஆப்பிரிக்கா, ரஷ்யா முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு, இலங்கை வழியாக இந்தியாவுக்குத் திரும்புகையில் 1932 ஆம் வருடம் அக்டோபர் 17-ந் தேதி கொழும்பு வந்திறங்கிய தந்தை பெரியார் அவர்களுக்கு இலங்கையில் கொழும்பு, கண்டி, நாவல்பட்டி, ஹட்டன், யாழ்ப்பாணம், பருத்தித் துறை முதலிய இடங்களிலும், இந்தியாவில் தூத்துக்குடி, மதுரை முதலாிய இடங்களிலும் பல நிறுவனங்களின் பேரால் அளித்த பல வரவேற்பு நிகழ்ச்சிகளிலும், பொது கூட்டங்களிலும் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரைகளிலிருந்து ''கடவுள்''பற்றி இரட்டியது - ''குடிஅரசு'' 20.11.1932)*

# 16. சுயமரியாதைக்காரனுக்கும் புராண மரியாதைக்காரனுக்கும் சம்பாஷணை



***சுயமரியாதைக் காரன்:*** ஒரு மனிதன் உயர்தரப் படிப்பு அதாவது பி.ஏ., எம்.ஏ., அய்.சி.எஸ்., முத லிய படிப்புப் படித்து பட்டதாரியாயிருப்ப தற்கும் மற்றும் தொழில் சம்பந்தமான

படிப்பில் நிபுணத்துவம் பெற்று இருப்பதற்கும், மற்றொரு மனிதன் அவற்றை அடையாமல் தன் கையெழுத்துப் போடக் கூடத் தகுதியில்லாமல் இருப்பதற்கும் என்ன காரணம் சொல்லுகிறாய்?

*புராண மரியாதைக்காரன்:* அவனுக்கு போதிய அறிவு இல்லாமல் இருக்கலாம். ஆதலால் அவன் அவற்றை கற்க முடியாமல் போயிருக்கும்.

*சு.ம.:* அப்படிச் சொல்ல முடியாது. இதோ பார் இந்த மனிதனை; அவன் எவ்வளவு சுறுசுறுப்பாகவும், புத்திசாலித்தனமாய் பேசக் கூடியவனாகவும், மண் வெட்டுவதிலும், பாரம் சுமப்பதிலும், கோடரியால் விறகை வெட்டுவதிலும் எவ்வளவு புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறான். நாம் நான்கு பேர் சேர்ந்தால்கூட செய்ய முடியாத வேலையை அவன் ஒருவனே செய்வது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது பார். இப்படிப்பட்டவனை, புத்தியில்லாதவன் என்று சொல்லிவிட முடியுமா? ஆதலால், இவனுக்கு அறிவு இருக்கிறதே, இவன் ஏன் பட்டதாரி ஆகவில்லை?

*பு.ம.:* அப்படியானால், அவன் தாய், தந்தையார்கள் இவனைப் படிக்கப் போதிய கவலை எடுத்துக் கொள்ளாமலிருக்கலாம்.

*சு.மா.:* இதோ, அவன் தகப்பனார் வந்துவிட்டார். அவரைக் கேட்டுப் பார். அவர் தன் மகன் படிக்கவேண்டுமென்ற ஆசையுடன் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பார்த்ததாகத் தானே சொல்லுகிறார். அப்படி இருந்தும் ஏன் அவர் குமாரன் படிக்கவில்லை?

*பு.மா.:* ஒரு சமயம் அவர் குமாரனுக்குப் படிக்கவேண்டுமென்ற கவலை இல்லாமலிருந்திருக்கலாம்.

*சு.மா.:* அப்படியும் சொல்ல முடியவில்லையே. அவர் மகனைக் கூப்பிட்டுக் கேட்டுப் பார். அவன்தான் படிக்க வேண்டுமென்று எவ்வளவோ ஆசைப்பட்டு அலைந்து திரிந்து பார்த்ததாகவும், காரியம் கைகூடாமல் போய்விட்டதாகவும் சொல்லுகிறானே, இதற்கென்ன சமாதானம் சொல்லுகிறாய்?



*பு.மா.:* அப்படியானால், அதாவது, மகனும் புத்திசாலியாயி ருந்து, தகப்பனுக்கும் தன் மகன் படிக்கவேண்டுமென் கின்ற ஆசையும் இருந்து, பிள்ளையும் படிக்க ஆவலுள் ளவனாய் இருந்து, படிக்காதவனாயிருக்கிறான் என்றால் ஒரு சமயம் அவன் தகப்பனுக்கு தன் பிள்ளையைப் படிக்க வைக்கப் பணம் இல்லாமலிருந்திருக்கலாம்.

*சு.மா.:* இதுதான் சரியான பதிலாகும். அப்படியானால் அவன் தகப்பனுக்கு ஏன் பணமில்லாமல் போய்விட்டது?

*பு.மா.:* இது ஒரு கேள்வியாகுமா? பணம் என்பது அவனவன் பாடுபட்டுச் சம்பாதித்திருக்க வேண்டியதாகும்.

*சு.மா.:* சரி என்றே ஒப்புக்கொள்ளுகிறேன். இந்த மனிதன் பாடுபடவில்லை என்று நீ சொல்லுகிறாயா? இந்த மனி தன் கல் உடைக்கிறார்; இவர் சம்சாரம் விறகு கொண்டு வந்து விற்கிறார். வெளியில் வேலைக்குப் போய் வந்த நேரம் போக மீதி நேரத்தில் பெரிய கட்டைகளை வீட்டில் போட்டு கோடரி கொண்டு பிறந்து சிறுசிறு சுமையாக அழகாகக் கட்டி வைக்கிறார். போதாக் குறைக்கு இவரின் தாயார், வயது சென்ற கூன் விழுந்த கிழவியம்மாள், புட்டும் முறுக்கும் சுட்டு வீட்டுக்கு முன்னால் இருந்து விற்றுக் கொண்டே இருக்கிறார்கள். இரவில் 4 மணி நேரம் மாமியும், மருமகளும் தினம் ராட்டினத்தில் நூல் நூற்றுக் கொண்டே இருக்கிறார்கள். இப்படியெல்லாம் இருக்க இவர்கள் பாடுபடவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

*பு.மா.:* இதெல்லாம் சரிதான். என்ன பாடுபட்டாலும் பணம் சேருவதற்கு பிராப்தம் வேண்டாமா? ஜன்மாந்தர கர்மப லன் அதற்கு அனுசரணையாக இருக்கவேண்டாமா? பையனுக்கும் அவன் தலையெழுத்து பலமாயிருக்க வேண்டாமா? இவ்வளவும் இருந்தாலும் பக வானுடைய அனுக்கிரகமும் தாராளமாய் இருக்கவேண்டாமா? இவ்வளவு சங்கதிகள் தேவை இருக்கும்போது, "பையன் கெட் டிக்காரன், புத்திசாலி, தகப்பனுக்கும் படிப் பிக்க ஆசையிருந்தது. குடும்பத்திலும் பெற் றோர்கள் ஆளுக்கொரு கஷ்டப்பட்டார் களே, இப்படியெல்லாமிருந்தும் பையன்



ஏன் படிக்கவில்லை?'' என்றால் இது என்ன கேள்வி? இவை எல்லாம் என்ன நம்முடைய இச்சையா? அப்படியானால் நான் ஆகாயத்தில் பறக்கவேண்டும் என்றால் பறந்துவிட முடியுமா? நான் ராஜா ஆகவேண்டுமென்றால் ஆகிவிட முடியுமா? நான் மகாத்மா ஆகவேணும் என்று ஆசைப்பட்டால் ஆகிவிட முடியுமா? நமக்கெல்லாம் மேலாக ஒன்று இருந்துகொண்டு நம்மை நடத்துகின்றது என்கின்ற ஆஸ்திக ஞானத்தை உணர்ந்தோமேயானால் இப்படிப்பட்ட நாஸ்திக உணர்ச்சிக் கேள்விக்கெல்லாம் இடமே இருக்காது.

*சு.மா.:* அப்படியா சங்கதி, சரி உன் கடையைக் கட்டு. நான் சொல்லுவதை சற்று கவனமாய்க் கேள். பிறகு உன்னுடைய ஆஸ்திக ஞானத்தின் யோக்கியதையைப் பார்ப்போம்.

*பு.மா.:* சரி, சொல்லு பார்க்கலாம்.

*சு.மா.:* ஒரு ஆயிரம் ஏக்கரா பூமியும், 250 வீடுகளும், 1000 ஜனங்களும் உள்ள ஒரு கிராமத்தை எடுத்துக் கொள்ளுவோம். அந்தப் பூமியும் அந்த வீடுகளும் அங்குள்ள மற்ற செல்வங்களையும், வியாபாரங்களையும் அந்த ஒரு ஆயிரம் ஜனங்களுக்கும் பொதுவாக்கிவிடுவோம். அந்த ஆயிரம் பேர்களுடைய வாழ்க்கைக்கும் அனுபவங்களுக்கும் வேண்டிய சாதனங்கள் என்ன என்ன என்பதாக ஒரு கணக்குப் போட்டு பார்த்து அவைகளையெல்லாம் அங்கேயே உற்பத்தி செய்ய ஒரு திட்டம் போட்டுக் கொள்ளுவோம்.

அதற்கு ஏற்ற தொழிற்சாலைகளைக் கட்டி, அத்தொழிற்சாலையில் வயது வந்த எல்லா மக்களையும் ஆண், பெண் அடங்கலும் எவ்வளவு நேரம் வேலை செய்தால் போதுமோ அவ்வளவு நேரம் வேலை செய்தால் போதுமோ அவ்வளவு நேரம் வேலை செய்தாக வேண்டும் என்று ஒரு ஏற்பாடு செய்துகொள்ளுவோம்.



அவர்களுடைய குழந்தைகளை எல்லாம் ஒரு இடத்தில் கொண்டு வந்து சேர்த்து, அவர்கள் எல்லோரையும் ஒரே மாதிரியாக ஆகாரம், துணி முதலியவைகள் கொடுத்து,

ஒரே மாதிரி போஷித்து, எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட வயதுவரை ஒரே மாதிரியான கல்வியைக் கொடுத்து, கடவுள், கடவுள் செயல், மதம், முன்ஜன்ம பலன், தலைவிதி, தலையெழுத்து முதலிய வார்த்தைகள் அவர்கள் காதில் விழாமலும், அப்படிப்பட்ட எண்ணங்கள் அவர்கள் மனதில் உதிக்காமலும் இருக்கும்படி ஜாக்கிரதையாய் காவல் வைப்போம். பிறகு அவர்களுக்கு 14 அல்லது 15 வயது ஆனவுடன் அவர்களுடைய இயற்கை ருசிக்கும், மனப்போக்குக்கும் ஏற்ற தொழிலையும், வித்தையையும் கற்றுக்கொடுப் போம். அவற்றில் அவர்கள் 18, 19 வயதுவரை அனுபோகம் பெற்ற பிறகு அவரர்களுக்கு ஏற்ற வேலை செய்யும்படி தொழிற்சாலைகளுக்கு அனுப்பிக் கொடுப்போம்.

இதன் பயனாய் உண்டாகும் பயனை அந்தக் கிராமத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் சரி பங்கு கிடைக்கும்படிக்கும், இந்தக் கொள்கை கொண்ட அந்த கிராம பஞ்சாயத்து நிர்வாகம் நடக்கும்படிக்கும் ஏற்பாடு செய்வதோடு, ஒவ்வொரு மனிதனும் தன் பங்குக்குக் கிடைக்குக் கூடிய சாதனத்தை அவனவன் அனுபவித்தே தீரவேண்டுமே ஒழிய, எவனும் சீதி வைக்கக் கூடாதென்றும் திட்டம் செய்வோம்.

மற்றும் நொண்டி, முடம், வேலைக்கு லாயக்கற்றது, வயது சென்றது ஆகியவர்களை போஷிக்க ஒரு திட்டம் போட்டு அதற்கு வேண்டிய அளவு சாதனங்களையும், தனித்தனியாக எடுத்து ஒதுக்கி வைத்துக் கொள்ளுவோம். பிறகு இந்த கிராமத்தில் உள்ள ஆயிரம் பேருக்கும் ஏதாவது அவசர காலங்களில் எதிரிகளால் தொல்லை ஏற்பட்டால் அதை சமாளிக்க பயிற்சி கொடுத்து அது மறந்து போகாமல் இருக்கும்படி அடிக்கடி பரீட்சை செய்து வருகிறோம்.

இந்த கிராமத்தில் உள்ள 1000 பேருக்கும் வசிப்பதற்கும் ஒரே அளவான இடம்கொண்ட வீடுகள் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கிவிடுவோம். இந்த கிராமத்து ஜனங்கள் பூராவும் சந்தோஷம் அனுபவிக்கவும், நேரப் போக்கு உண்டாகவும், சுகாதார சவுக்கியமும், உலாவ நந்தவனமும் முதலிய போக போக்கியங்களுக்கு ஏற்பட்ட சாதனங்களை கூடியவரையில் பொதுவிலேயே உற்பத்தி செய்து வைத்து இலவசமாகவே அனுபவிக்க உதவுவோம்.



ஆண், பெண் சேர்க்கை துணை விஷயங்களுக்கு அவரவர்களுக்கு இஷ்டப்பட்டவர்களுடன் மாத்திரம், இஷ்டம் உள்ளவரையில் மாத்திரம் துணைவர்களாயிருக்க ஏற்பாடு செய்வோம். ஆக, இவை முதலிய காரியங்களை ஒழுங்காக பாரபட்சமில்லாமல் நடத்தி வருவதாயிருந்தால், நீ மேலே சொன்ன பிராப்தம், ஜென்மாந்திர கர்மபலன், தலையெழுத்து, பகவானுடைய அனுக்கிரகம், நமக்கு எல்லாம் மேலாக ஒன்று இருந்துகொண்டு நம்மை நடத்துகிறது என்கின்றதான வார்த்தைகளுக்கும், கொள்கைகளுக்கும், எண்ணங்களுக்கும் இடமுண்டா என்று யோசித்துப் பார்.

குறிப்பு: இந்த சம்பாஷணையானது, தனிவுடைமைத் தத்துவத்தில்தான் கடவுள், கடவுள் செயல் முதலியவைகள் உண்டு என்றும், பொதுவுடைமைத் தத்துவத்தில் அவைகளுக்கு வேலையில்லை என்றும், தனிவுடைமைத் தத்துவத்தை நிலை நிறுத்தவே மேல்கண்ட கடவுள், கடவுள் செயல் முதலிய கற்பனைகள் ஏற்படுத்தப்பட்டு அது நிலை நிறுத்தப்பட்டு வருகின்றது என்பதையும் குறிப்பிடவே ஏற்பட்டதாகும்.

*(சித்திரபுத்திரன் எனும் புனை பெயரில் 13.8.1933 "குடிஅரசு" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது.)*

# 17. கடவுள்

**கேள்வி:** கடவுள் நன்மையே உருவாய்க் கொண்டவர் என்பதற்கு உதாரணம் சொல்லு!

**பதில்:** நல்ல காற்று, நல்ல தண்ணீர், வாசனை உள்ள புஷ்பம், ருசியுள்ள ஆகாரம், சத்துள்ள பழவகை, மழை, நதி, நந்தவனம், பால் பசு, நல்ல பெண்கள், சந்திரன், சூரியன் முதலிய அநேக அருமையான வஸ்துக்கள் உற்பத்தி செய்து நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆதலால் கடவுள் நன்மையே உருவாகக் கொண்டவர்.



**கேள்வி:** கடவுள் கெடுதியையே உருவாய்க் கொண்டவர் என்பதற்கு உதாரணம் சொல்லு!

**பதில்:** கெட்ட காற்று, விஷப்புகை, நோய்க் கிருமிகள் உள்ள தண்ணீர்,

துர்வாடையுள்ள மலம், கசப்பான ஆகாரம், உபயோக மற்றதும் நோயை உண்டாக்குவதுமான பழம், துஷ்டமி ருங்கங்கள், விஷ ஐந்துக்கள், கொடிய வியாதி, கடும் வெய்யில், இடி, பூகம்பம், முரட்டு வெள்ளம், இருட்டு, நோய் உள்ள பெண்கள், தரித்திரம் முள்ளுள்ள புதர்க்காடு கள் முதலானவைகளை எல்லாம் கடவுள் உற்பத்தி செய்திருக்கிறார். ஆதலால் கடவுள் கெடுதியையே உரு வாய்க் கொண்டவர்.

*கேள்வி:* இந்தக் கெடுதிகளையெல்லாம் கடவுள்தான் உற்பத்தி செய்தார் என்பதற்கு என்ன ருஜு?

*பதில்:* முன் செய்யப்பட்ட நன்மைகளை எல்லாம் கடவுள்தான் உற்பத்தி செய்தார் என்பதற்கு என்ன ருஜுவோ அந்த ருஜுவைத்தான் கெடுதிகளையும் கடவுள்தான் உண்டாக் கினார் என்று சொல்வதற்கும் ருஜுவாக ஏற்றுக் கொள்ளக் கோருகிறேன்.

### கடவுள்

படைத்தான் படைப்பெல்லாம் மனிதனுக்காகவே;

மனிதனைப் படைத்தான் தன்னை வணங்க என்று ஒரு மதம் சொல்லுகிறது.

ஆகவே, கடவுளை வணங்குவதற்கு என்று கடவுளாலேயே மனிதன் படைக்கப்பட்டிருப்பானேயானால், கடவுளின் இழி தன்மைக்கு வேறு என்ன சாட்சியம் வேண்டும்?

தன்னை வேறு ஒரு மனிதன் வணங்க வேண்டும் என்று ஒரு மனிதன் நினைத்தானேயானால், அவனை நாம் எவ்வளவு அயோக்கியன் என்றும், ஆணவக்காரனென்றும், இழிகுணம் படைத்தவனென்றும், ஈனன் என்றும் சொல்லுகின்றோமா இல்லையா?



அப்படியிருக்க, ஒரு கடவுள் என்று சொல்லப்பட்டவர் தன்னை வணங்குவதற் கென்று பல கோடி மக்களை படைப்பித்து, அவர்களை பலவிதமான கஷ்டங்களும் குறைகளும் அனுபவிக்க விட்டு வேடிக்கை பார்த்தால், அப்படிப்பட்ட கடவுள் நல்ல வர், பெருந்நன்மை உள்ளவர், தயாபரர், கருணாமூர்த்தி, விருப்பு வெறுப்பு

தற்பெருமை இல்லாதவர் என்றெல்லாம் அறிவுள்ள மனிதனால் சொல்ல முடியுமா?

அன்றியும், கடவுள் மனிதனைப் படைத்தது உண்மையாய் இருக்குமானால், அந்த ஒரு காரியமே பெரியதொரு அயோக்கியத்தனமும் அக்கிரமுமானதென்றுதான் சொல்ல வேண்டும்.

ஏனெனில், மனிதனால் மற்ற மனிதர்களுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் எவ்வளவு துன்பங்கள் நிகழ்கின்றன? மனிதன் எவராவது யோக்கியமாய் இருக்க முடிகின்றதா?

இவைகளெல்லாம் மனிதனைப் படைப்பதற்கு முன் கடவுளுக்குத் தெரியாதா?

மனிதனுக்குக் கொடுத்திருக்கும் புத்தி, அறிவு என்பதை அவன் எப்படி உபயோகிப்பான் என்பதை கடவுளுக்கு ஆரம்பத்தில் அறிய முடியவில்லையா? அல்லது அறியும் சக்தி இருந்தும் கவலையீனமாய் இருந்து விட்டாரா?

இவைகளையெல்லாம் பார்த்தால் கடவுளின் யோக்கியதையும், அவர் இருக்கும் லட்சணமும் நன்றாய் விளங்கவில்லையா?

*(சித்திரபுத்திரன் எனும் புனைபெயரில் 12.5.1935 "குடிஅரசு" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது)*

# 18. கடவுள் என்ன சமாதானம்?

கடவுள் என்ற வார்த்தை ஒரு குறிப்பற்றதாய் இருந்து வருகிறது.

கடவுள் என்ற வார்த்தை தோன்றி எவ்வளவு காலம் இருக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது.

அப்படியிருந்தும், கடவுள் என்றால் என்ன? என்று இன்று எப்படிப்பட்ட ஆஸ்திகராலும் சொல்ல முடிவதில்லை. ஆகவே, ஒவ்வொரு ஆஸ்திகனும், தனக்குப் புரியாத ஒன்றையே- தன்னால் தெரிந்து கொள்ள முடியாததும், பிறருக்கு விளக்க முடியாததுமான ஒன்றையே குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டு கடவுள் கடவுள் என்று கட்டி அழுகிறான்.



கடவுளுக்கு லட்சணமோ, இலக்கியமோ, குறிப்போ ஏதாவதொன்று விளக்கமாய்ச் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருந்தால், இவ்வளவு காலத்துக்குள்ளாகக் கடவுள் சங்கதியில் இவ்வளவு காலத்துக்குள்ளாகக் கடவுள் சங்கதியில் இரண்டிலொன்று அதாவது, உண்டு, இல்லை என்கின்ற ஏதாவது ஒரு முடிவுக்கு உலக மக்கள் வந்திருப்பார்கள். கம்பர்கூட சீதையின் இடையை வர்ணிக்கும்போது, ''சீதையின் இடையானது கடவுள்போல் இருந்தது'' என்று வர்ணிக்கிறார். அதாவது, கடவுள் எப்படி ''உண்டோ இல்லையோ'' என்பதாகச் சந்தேகப்படக்கூடியதாய் இருக்கின்றதோ, அதுபோல் சீதையின் இடையானது கண்டுபிடிக்க முடியாத அவ்வளவு நுண்ணியதாய் இருக்கிறது என்று கூறினார்.

கம்பரை நாஸ்திகர் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.

மக்களுள் பெரும்பாலோரும், ஆஸ்திகர்கள் எல்லோரும் தங்கள் குற்றங்களுக்கும், தங்கள் துர்க்குணங்களுக்கும், தங்கள் தரித்திரத்துக்கும், துன்பத்துக்கும் தாங்களே காரணமென்று வருந்தி அவற்றைப் போக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள்.

இந்துக்கள், கடவுளை ஒரு மனிதனைப் போலவே கற்பித்துக் கொண்டு, அதிலும் ஒரு செல்வம் பொருந்திய மனிதனாய்க் கற்பித்துக் கொண்டு, அதற்கு மனிதனைப் போலவே வீடு, வாசல், ஆகாரம், வாகனம் ஆகியவைகளைக் கொடுத்து வருகிறார்கள்.

மற்ற கிருஸ்து, முஸ்லீம் ஆகிய மதஸ்தர்களும், கடவுளை மனிதன் போலவே கற்பித்து, அக்கடவுளுக்கு நன்மை, தீமை, விருப்பு, வெறுப்பு, சந்தோஷம், கோபம் ஆகிய குணங்களைக் கற்பித்து, தன்னை வணங்கினவனுக்கும், தன் இஷ்டப்படி நடந்தவனுக்கும் நன்மையளிப்பதும்; தன்னை வணங்காதவனுக்கும், தன் இஷ்டப்படி நடக்காதவனுக்கும் தீமையளிப்பதுமான குணத்தைக் கற்பித்திருக்கிறார்கள்.



சர்வ சக்தியுடைய பூர்ணத்தன்மை பெற்று எங்கும் நிறைந்திருக்கிற ஒரு கடவுளுக்கு மோட்சம், நரகம் எதற்கு?

கடவுள் இஷ்டத்துக்கு விரோதமாய் நடக்கும்படியான சந்தர்ப்பம் மனிதனுக்கு எப்படி வரும்?

உலகத்தில் தீமை எப்படி உண்டாயிற்று? அதை யார் கற்பித்தார்கள்? தீய குணம் மனிதனை அடையக் காரண மென்ன?

தீயதைச் செய்துவிட்டு கடவுளை வணங்குவதாலோ, பிரார்த் திப்பதாலோ அதன் பயன் எப்படி அகற்றப்பட்டுவிடும்! தீமையினால் துன்பம் அடைந்தவனுக்குப் பரிகாரம் எப்படி ஏற்படும்? தீமை செய்தவர்கள் கடவுளை வணங்கிப் பிரார்த்திப் பதின் மூலம், தீமைக்குண்டான பலனை அனுபவிக்க முடியா மல் போய் விடுவார்கள் என்றால், தீமை எப்படி எப்பொழுது உலகைவிட்டு அகல்வது?

எத்தனையோ கோடிக்கணக்கான வருடங்களாக கோடிக்க ணக்கான மக்கள் தீமைக்காக மன்னிக்கப்பட்டும் தீமைக்காகத் தண்டிக்கப்பட்டும், உலகில் இன்றும் நாளையும் இனியும் வெகு காலத்துக்கும் தீமை இருந்து கொண்டே வருகிறது. என்றால், இதுவரையும் தண்டனையும் மன்னிப்பும் என்ன பலனைக் கொடுத்து வந்திருக்கின்றன?

தீமையின் கொடுமையை - மக்கள் அனுபவிக்காமல் இருப்ப தற்கு என்னதான் வழி?

தீமையைச் செய்தவன் மன்னிப்புப் பெற்றோ, தண்டனை அடைந்தோ தன் செய்கைக்குப் பரிகாரம் பெற்றுக் கொள்ளுகி றான் என்றே வைத்துக் கொள்வோம். தீமையை அடைந்தவ னுக்கு இந்தக் கடவுள்என்ன பரிகாரம் செய்கிறார் என்பது விளங்கவில்லை. தீமையை அடைகின்ற மனிதன் கடவுள் சித்தத்தால்தான் தீமை அடைகிறான் என்றுதானே சொல்ல வேண்டும். அப்படியில்லாவிட்டால், கடவுளின் காவலை மீறி ஒரு மனிதனுக்கு ஒரு மனிதன் தீமை செய்துவிட முடியுமா?

ஆகவே, கடவுள் சித்தத்தால் ஒரு மனிதன் தீமையை அடைகிறான் என்றால், பிறகு, தீமை செய்தவனுக்கு தண்டனை எப்படி வரும்? அவன் எதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டும்?



கடவுள் சித்தமில்லாமல் தனிப்பட்ட முறையில் தன் சொந்தத்தில் ஒரு மனிதன் ஒரு காரியத்தை ஒருவருக்குச் செய்துவிட முடியுமா?

கடவுள், மனிதன் மூலமாகவே தன்னு டைய ஆட்சியை நடத்துகிறார் என்பதே

பெரும்பாலான ஆஸ்திகர்கள் முடிவு. அதனாலேயே, பிச்சை பெற்றவனும், கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறான்; உத்தியோகம் பெற்றவனும், கடவுள் கொடுத்தார் என்று சொல் லுகிறான்; உதவி பெற்றவனும், கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறான்; ஏதாவது ஒரு கூட்டத்தில் நெருக்கடியில் இருந்து தப்பித்துக் கொண்டவனும், கடவுள் தப்பித்துவிட்டார் என்று சொல்லுகிறான்.

ஆகவே, எந்த நன்மைக்கும் தீமைக்கும் மனிதன்மீது பொறுப் பைச் சுமத்துவது எப்படி முடியும்?

அன்றியும், கடவுள் சர்வ வியாபியாய் இருக்கும்போதும், மனிதனுடைய ஒவ்வொரு. எண்ணங்களையும், காரியங்களை யும் கவனித்து வருகின்றவராய் இருக்கும்போதும், மனிதனுக்கு தனிப்பட்ட பிரார்த்தனை எதற்கு? அதற்காக இடம், பொருள், நேரம் எதற்காகச் செலவு செய்யவேண்டும்?

அவர் தெரிந்துகொள்ள முடியாத எந்த காரியத்தை பிரார்த்த னையினாலும், ஜபத்தினாலும், தொழுகையினாலும் அவருக்கு அறிவிக்க முடியும்? பிரார்த்தனைக்கும் ஜபத்துக்கும் இரங்குகிற வர் என்றால், கடவுள் தற்பெருமைக்காரரா - அல்லது பிரதியோ ஜனம் பெறும் வியாபாரம் முறைக்காரரா?

இவ்வளவு காலப் பிரார்த்தனையும், ஜபமும், தொழுகையும் மனிதனை ஏதாவது ஒரு வழியில் யோக்கியமாய் நடப்பதற்குப் பயன்பட்டிருக்கின்றதா?

நன்மைக்கும், தீமைக்கும் கடவுளே கர்த்தராய் இருக்கும் போது, உலகில் தீமைகளே இல்லாமல் இருக்கச் செய்ய முடியாதா? அதை எவராவது சில மக்கள் அடைந்துதான் தீரவேண்டுமா?

அன்றியும், நமது பிரார்த்தனையும், தொழுகையுமாவது நமக்குத் தீமை அணுகாமல் செய்ய முடியுமா? அப்படி செய்தாலும், அத்தீமை உலகில் உள்ளவரை ஏதாவது ஒரு மனிதனையாவது அணுகித் தானே தீரவேண்டும்?



ஆகவே, மனித சமூகம், பொதுவில் தீமை யில் இருந்து எப்படித் தப்ப முடியும்? தீமையினால் மக்கள் கஷ்டப்படுவார்கள், துன்பப்படுவார்கள் என்பதை கடவுள் அறிந் திருக்க மாட்டார் என்று யாராவது நம்ப முடியுமா?

அப்படி இருக்கும்போது, சர்வ சக்தியும், சர்வ தயாபரத் தன்மையும் கொண்ட கடவுள் உலகத்துக்கு தீமையை ஏன் சிருஷ்டித்தார்?

விஷப் பூச்சி, விஷக் கிருமி, விஷரோகம், தரித்திரம், துன்பம், கொலைத் தொழில், கொள்ளைத் தொழில், திருட்டு, பொய், வஞ்சகம், விபச்சாரம், கஷ்டமான வேலை, அடிமைத்தனம், கொடுங்கோல் ஆட்சி, ராஜத் துரோகப் பிரஜைகள் கடவுளை மறுப்பது, கடவுளை வைவது முதலாகிய தீமை என்னும் விஷயங்களையெல்லாம் கடவுள் ஏன் சிருஷ்டித்தார்?

இவற்றால் யாராவது ஒருவர் கஷ்டப்படுகிறாரா - இல்லையா? இவற்றால் கடவுளுக்கு என்ன லாபம்?

பூகம்பம், எரிமலை வெடிப்பு, புயல் காற்று, கடுமழை ஆகிய காரியங்களை ஏன் சிருஷ்டித்தார்?

கெட்ட மனிதர்கள் துன்பமனுபவிக்க என்று சொல்லப்படுமானால், கெட்ட மனிதர்களை ஏன் சிருஷ்டித்தார்?

நல்ல மனிதன், கெட்ட மனிதன் என்று சொல்ல முடியாத குழந்தைகள், மற்ற ஜீவன்கள் ஆகியவைகளுக்கும், துன்பம் அடையும்படி ஏன் செய்தார்? இவைகளுக்கெல்லாம், சர்வ சக்தியும், சர்வ வியாபகமும், சர்வ தயாபரத் தத்துவமும் உடைய ஒரு கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்து நடத்தி வருகிறார் என்று சொல்லும் ஆஸ்திகன் என்ன சமாதானம், பதில் சொல்லக் கூடும்?

இந்தக் கேள்விகள் வெகுகாலமாகவே இருந்து வருகின்றன என்று பதில் சொல்லிவிட்டால் போதுமா?

*(1.7.1935 "பகுத்தறிவு" இதழில்
தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*

# 19. சுயமரியாதைக்காரன் கடவுளைப்பற்றி பேசுவதேன்?



இன்றுள்ள இந்நாட்டு மக்கள் நிலையையும், உலக நிலையையும் உணர்ந்து பார்த்து, இன்று நடைமுறையில் உள்ள

மதம், ஜாதி, கடவுள் முதலியவைகள் ஒழியாமல் மனித சமூகத்துக்கு விமோசனமும், சாந்தியும் இல்லை.

என்னைப் பொறுத்தவரை நான் அவைகள் ஒழியப்படவேண்டும் என்று சொல்வதோடு, அவற்றையெல்லாம் ஆதரிக்கும் அரசியல் கிளர்ச்சிகளும், அரசியல்களும் ஒழியவேண்டும் என்றும் சொல்லுபவன். ஏனெனில், அரசியலும், அரசியல் கிளர்ச்சிகளுமே மேற்கண்டதான கெடுதிகளை ஆதரித்துக் காப்பாற்றி வருகின்றன.

இந்தப்படி சொல்லுவதற்காக நீங்கள் வருத்தப்படக் கூடாது.

இந்த தேசத்து கடவுள்களின் யோக்கியதைகளை நீங்கள் சிறிது யோசித்துப் பாருங்கள். அவையும் தானாகவே உண்டானவைகளாக இருந்தாலும் சரி, மனிதர்களாலேயே உண்டாக்கப்பட்டவைகளாகவே இருந்தாலும் சரி, அவைகளால் நமது நாட்டுக்கும், மனித சமூகத்துக்கும் எவ்வளவு கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் கவனியுங்கள்.

இந்த நாட்டுப் பொருளாதாரக் கேட்டுக்கும், கல்வி அறிவற்ற தன்மைக்கும் யார் ஜவாப்தாரி என்பதை யோசியுங்கள்.

இந்தக் கடவுள்கள் நம் நாட்டு செல்வங்கள் எவ்வளவை பாழ்படுத்துகின்றன?

தென்னாட்டுக் கோயில்களுக்கு வருஷம் இரண்டரை கோடி ரூபாய் வருமானம். இது சர்க்கார் கணக்கு. அதற்காக மக்களுடைய பணம் செலவாவது மேற்கண்டு 4, 5 கோடி ரூபாயாக இருக்கலாம். உங்கள் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், தஞ்சை ஆகிய ஜில்லாக்களை மாத்திரம் எடுத்துக்கொள்ளுங்கள். அதன் வரும்படிகளும், அதற்காக மக்கள் செய்யும் செலவுகளும் என்ன பயன் அடைகின்றன?

இவ்வளவு பணம் பாழாகியும் இந்த நாட்டில் 100-க்கு 8 பேர்தானே கையெழுத்துப் போடத் தெரிந்தவர்களாய் இருக்கிறார்கள்.



100-க்கு 75 பேருக்கு மெய் உழைப்பாளிகள், தரித்திரர்களாய் இருக்கிறார்கள். இத்தனை கோடி ரூபாய் பாழாகும்படியாக இருந்துகொண்டு, அனாவசியமான போக யோக்கியத்தை அனுபவித்து வரும் கடவுள்கள், இந்த நாட்டு மக்களில் 100-க்கு 92

பேர்களை தற்குறிகளாக வைத்து இருக்கின்றன என்று சொல்லப் படுமானால், இக்கடவுள்கள் நன்றி கெட்டவைகள் அல்லவா என்று கேட்கின்றேன்.

கல்விக்கும், கடவுளுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லப்ப டுமானால், இக்கடவுள்களுக்காக இவ்வளவு கோடி ரூபாய் செலவாகும்படி ஏன் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும் என் பதை யோசித்துப் பாருங்கள்.

வீணாக பகுத்தறியும் யோசனையும் இல்லாமல், "சுயமரியா தைக்காரர்கள் கடவுளை வைகிறார்கள்" என்று சொல்லுவதில் பயன் என்ன?

இந்திய நாட்டையே இந்தக் கடவுள்கள்தானே இக்கதியாக்கி இருக்கின்றன.

கடவுள்களுக்கு பெண்டு, பிள்ளை, வீடு, வாசல், சொத்துக் கள், நகைகள், தாசி, வேசிகள், வைப்பாட்டிகள் எல்லாம் எதற்கு? இதைப் பார்த்துதானே ஒவ்வொரு மனிதனும் நடந்து கொள்ளுகிறான்.

நமது கடவுள்களுக்கு உற்சவம் என்பெதல்லாம் பெரிதும் வருஷம்தோறும் கல்யாணம் செய்வது என்பதற்கு ஆகவே நடைபெறுகின்றன. கடவுளுக்கு கல்யாணம் எதற்கு? சென்ற வருஷம் செய்த கல்யாணம் என்ன ஆயிற்று?

ஏதாவது தவறிவிட்டதா? அல்லது எந்தக் கோர்ட்டின் மூலமா வது கல்யாண ரத்து ஆகிவிட்டதா? இது சிரிப்புக்கிடமான கல்யாணமல்லவா? இந்தக் கல்யாணங்கள் சுயமரியாதை முறைப்படி நடப்பதாயிருந்தால் நமக்கு கவலை இல்லை. அப்படிக்கில்லாமல், எவ்வளவு செலவு, எத்தனை காலமெனக் கீடு, எத்தனை பேர்களுக்கு கஷ்டம்! பெரிய ராஜா வீட்டுக் கல்யாணத்துக்குமேல் நடக்கின்றன. இவற்றையெல்லாம் பார்த் தால், இந்தக் கடவுள்கள் எல்லாம் ஒழியா மல் எப்படி மனிதன் சீர்பட முடியும்? எப்படி அறிவு பெற முடியும்? எப்படி இந்த நாட்டு செல்வமும், நேரமும் பயனுள்ள காரியத்துக்கு உபயோகப்படுத்தப்பட முடி யும்?



கோபிப்பதில் பயன் என்ன? எங்களை நாஸ்திகர்கள் என்று சுலபமாகச் சொல்லி

விடலாம். மற்ற நாட்டார்கள், மற்ற மதக்காரர்கள், இந்துக்களையும், இந்துக் கடவுள்களையும் பார்த்து, நாஸ்திகர்கள், அஞ்ஞானிகள் என்று சொல்வதோடு மாத்திரமல்லாமல், காட்டுமிராண்டிப் பிராயமுள்ளவர்கள் என்று சொல்லுகிறார்களே, யாருக்காவது மானமோ, வெட்கமோ இருக்கின்றதா? எந்தக் கடவுளாவது இதற்காக நாக்கைப் பிடுங்கிக் கொண்டு செத்துவிட்டதா? அல்லது அவர்களை இப்படிச் சொல்ல வேண்டாம் என்றாவது சொல்லி வைத்ததா?

ஒன்றும் இல்லையே. ஆஸ்திகம், நாஸ்திகம் என்றால் அதற்கு அர்த்தமே இல்லாமல் கையில் வலுத்தவன் கதையாகத்தானே இருக்கின்றது.

ஆஸ்திகன் என்றால் முழு மூடன், அயோக்கியன், பித்தலாட்டக்காரன், எண்ணத்துக்கும், பேச்சுக்கும், நடவடிக்கைக்கும் சம்பந்தமில்லாத திருட்டுப் பயல் என்றெல்லாம் சொல்லும்படியாகத்தானே மக்கள் நடந்து காட்டுகின்றார்கள்.

ஆதலால், தோழர்களே! கடவுளையும், இந்த ஆஸ்திகத் தன்மையையும் ஒழிக்காமல் மனிதன் மனிதத் தன்மையை அடைய முடியாது என்பது எங்களது அபிப்பிராயமாகும்.

மற்றும், மனிதனுடைய இழிவும், தரித்திரமும், அதாவது ஒரு மனிதனை மற்றொரு மனிதன் இழிவாய் நடத்துவதும், ஒரு மனிதனது உழைப்பை மற்றொரு மனிதன் அனுபவித்துக் கொண்டு, உழைத்தவனை தரித்திரனாய், நோயாளியாய், அடிமையாய் வைத்திருப்பதும் கடவுள் செயல் என்று சொல்லப்படுமானால், அப்படிப்பட்ட கடவுளையாவது ஒழிக்கவேண்டாமா? என்று உங்களைக் கேட்கின்றேன்.

ஆகவே, நீங்கள், சுயமரியாதைக்காரர்கள் ஏன் கடவுளைப்பற்றிப் பேசுகின்றார்கள் என்பதை இப்போதாவது உணர்ந்து பாருங்கள் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.



அனாவசியமாய், உங்களுக்கே புரியாத வார்த்தையாகிய கடவுள் என்கின்ற வார்த்தையைக் கட்டி அழுதுகொண்டு ''எல்லாம் இருக்கட்டும், கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா? இல்லையா?'' என்கின்ற அசட்டுத்தனமும், முட்டாள்தனமுமான கேள்வியைக் கேட்பதில் உங்கள் புத்தியை செலவழிக்காதீர்கள்.

அதனால் எங்களை மடக்கிவிடலாம் என்றோ, எங்களை பழிப்புக்கு உள்ளாக்கிவிடலாம் என்றோ கருதி விடாதீர்கள்.

உலகம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும் அதைப்பற்றி உங்களுக்கு என்ன கவலை?

நீங்கள் எப்படி பிறந்திருந்தால்தான் அதைப்பற்றி உங்களுக்கு என்ன வேலை?

உலகில் உள்ள வஸ்துக்கள், உலகில் நடக்கும் செய்கைகள் எல்லாம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டது, எப்படி நடைபெறுகின்றது என்பதை எந்த மனிதனாவது அறிந்திருக்கின்றான் என்று நீங்கள் சொல்லிவிட முடியுமா? அது யாரால், எப்படி நடந்தால் என்ன?

உங்களுக்கும் எனக்கும் தெரியாத விஷயம் எவ்வளவோ இருக்கிறது. இன்று பாடுபட்டாலும் தெரிந்துகொள்ள முடியாத விஷயங்களும் எவ்வளவோ இருக்கின்றன.

அவற்றைப்பற்றியெல்லாம் கேட்டுக் கொண்டும், தெரிய வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டும் இருக்கின்றவர்கள், சமுத்திரத்து அலைகளையும், மணலையும், மழைத் துளிகளையும் எண்ண ஆசைப்படும் மூடசிகாமணிகளுக்கே ஒப்பாவார்கள்.

மக்கள் படும் கஷ்டங்கள் நமது கண்களுக்குத் தெரிகின்றன.

மற்ற மக்களால் நாம் இழிவும், துன்பமும் அனுபவிப்பதை நாம் உணர்கின்றோம். இதுவே முதலில் ஒழிக்கப்படவேண்டும்.

எந்தக் காரணத்தாலானாலும் சரி, இவற்றிற்கு ஆதாரமாய் இருக்கும் கடவுள் உள்பட எல்லாம் அழிக்கப்படவேண்டும் என்றுதான் நாங்கள் சொல்லுகின்றோம்.

இது சரியா, தப்பா என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள்.

*(6.8.1935 அன்று குற்றாலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய தலைமை உரையில் ஒரு பகுதி - "குடிஅரசு", 11.8.1935)*



# 20. கடவுள் சக்தி விதண்டாவாதம்

நமது கடவுள்கள் சக்தி மிகவும் அதிசயமானதாகும். அதாவது, நமது கடவுள்கள் உலகில் மக்களை அக்கிரமங்கள் செய்ய வொட்டாமல் தடுக்க முடியாதாம்.

ஆனால், மக்கள் சந்து பொந்துகளிலும், மூலை முடுக்குகளிலும் யாருக்கும் தெரியாமல் செய்த குற்றங்களையும், மனதினால் நினைத்த அக்கிரமங்களையும் பார்த்தும் ஒன்றுகூட விடாமல் பதிய வைத்தும், அதற்குத் தகுந்தபடி தீர்ப்புக்கூறி, தண்டனை கண்டனை கொடுக்கவும், அதற்காக நரகத்தில் ஆழ்த்தி வைக்கவும், மற்றும் பல ஜன்மங்கள் கொடுத்து, அவைகளில் கஷ்டப்படுத்தி வைக்கவும் முடியுமாம்.

நமது கடவுள்கள் சக்தி எவ்வளவு அதிசயமானது! அதிலும் மகமதியர்களுடைய கடவுளும், கிறிஸ்தவர்களுடைய கடவுளும் மனிதன் செத்த பிறகு, எல்லார் குற்றங் குறைகளையும் ஒன்றாய் பதிய வைத்திருந்து, ஏதோ அதற்கு இஷ்டப்பட்ட நாளில் அதாவது, ஒரு குறிப்பிட்ட நாளில் எல்லா மக்களையும் அவர்கள் புதைக்கப்பட்ட புதை குழியிலிருந்து எழுப்பிக் கணக்குப் பார்த்து ஒரே அடியாய் தீர்ப்புச் சொல்லி விடுமாம்.

இந்துக்களுடைய கடவுள்கள் அதாவது, சைவர்கள் கடவுள்களும், வைணவர்களுடைய கடவுள்களும், ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனியாகவே அவ்வப்போது அவனைச் சுட்டு எரித்தபின் கண்களுக்குத் தெரியாத அவனுடைய ஆத்மாவைப் பிடித்து வைத்து, அதற்கு ஒரு சூட்சம சரீரமும் கொடுத்து, அந்த சரீரத்திற்கு அதற்குத் தக்க தண்டனை கொடுக்குமாம். அது பெரிதும் அடுத்த ஜென்மத்தில் இன்னின்ன ஜந்துவாய் பிறந்து, இன்னின்ன பலன் அனுபவிக்கவேண்டும் என்று கட்டளையிடுமாம்.



கிறிஸ்தவ சமயத்தில் உள்ள கடவுள் சக்திப்படி எல்லா மனிதனும் பாவம் செய்தேதான் தீருவானாம். அந்தப் பாவம் ஏசு கிறிஸ்துமூலம்தான் மன்னிக்கப்படுமாம். மகம்மதிய மார்க்கப்படி மகம்மது நபிகள் மூலமாகத்தான் மன்னிக்கப்படுமாம். சைவ சமயப்படி சிவன் மூலமாகத்தான் மன்னிக்கப்படுமாம். அவருக்குத் தான் பரத்துவம்

உண்டாம். வைணவ சமயப்படி விஷ்ணு மூலமாகத்தான் முடியுமாம். விஷ்ணுவுக்குத்தான் பரத்துவம் உண்டாம்.

ஆனால், சைவ, வைணவ சமயங்கள்படி மக்கள் பாவமே செய்வது மாத்திரமல்லாமல் புண்ணியமும் செய்யக் கூடுமாம். அதற்காக சொர்க்கம், வைகுண்டம், கைலாசம் என்கின்ற பதவிகள் உண்டாம். அப்புறம் ஒவ்வொரு மனிதனுக்கும், ஜன்மங்களும் உண்டாம். இந்த அபிப்பிராயங்கள் எவ்வளவு குழப்பமானதாய் இருந்தாலும், பார்ப்பானுக்கு அழுதால் மேற் கண்ட மோக்ஷங்களோ அல்லது நல்ல ஜன்மமோ எது வேண் டுமோ அது கிடைத்துவிடுமாம்.

ஆகவே, பொதுவாக கடவுள்களுடைய சக்திகள் அளவிட முடியாதது என்பதோடு, அறிந்துகொள்ள முடியாதது என்பது மாத்திரமல்லாமல், அதைப்பற்றியெல்லாம் நாம் சிந்திப்பதோ சிந்திக்க முயற்சிப்பதோ மகாமகா பெரிய பெரிய பாவமாம்.

அதாவது, எந்தப் பாவத்தைச் செய்தாலும், எவ்வளவு பாவத்தைச் செய்தாலும், அவைகளுக்கெல்லாம் பிராயச்சித்த மும், மன்னிப்பும் உண்டாம். ஆனால், கடவுளைப்பற்றியோ, அவரது சக்தியைப்பற்றியோ ஏதாவது, எவனாவது சந்தேகப் பட்டுவிட்டானோ பிடித்தது மீளாத சனியன். அவனுக்கு மன்னிப்பே கிடையாது. கிறிஸ்துநாதரைப் பிடித்தாலும் சரி, மகம்மது நபி பெருமானைப் பிடித்தாலும் சரி, அல்லது சிவன், விஷ்ணு, மகேசன் ஆகிய எவரைப் பிடித்தாலும் சரி, ஒரு நாளும் அந்தக் குற்றம் (எந்தக் குற்றம்? கடவுளை சந்தேகிக்கப்பட்ட குற்றம்) மன்னிக்கப்படவே மாட்டாது.

ஆனால், இந்த எல்லாக் கடவுள்களுக்கும் அவர்களால் அனுப்பப்பட்ட பெரியார்களுக்கும், அவருடைய அவதாரங்க ளுக்கும், கடவுளைப்பற்றியும், அவர்களுடைய சக்தியின் பெரு மைகளைப்பற்றியும் மக்களை சந்தேகப்படாமல் இருக்கும்ப டிக்கோ, அல்லது அவநம்பிக்கைப்படாமல் இருக்கும்படிக்கோ செய்விக்க முடியாதாம்.



ஏனென்றால், அவ்வளவு நல்ல சாது வான, சாந்தமான, கருணையுள்ள, சர்வ சக்தி பொருந்திய, சர்வியாபகமுள்ள கடவுள் களாம். பாவம், நாம் ஏன் அவற்றை தொந்த ரவு செய்யவேண்டும்? எல்லாம் கடவுள் செயல் என்று சும்மா இருந்துவிடுவோம்.

*(1.9.1935 ''பகுத்தறிவு'' இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*

# 21. பிரார்த்தனை

பிரார்த்தனை என்பது இன்று உலகில் மக்கள் சமூகம் எல்லோரிடத்திலும், அதாவது கடவுளால் மக்கள் நடத்தப்படுகிறார்கள் என்று நம்பும் எல்லோரிடத்திலும் இருந்துவருகிறது. இது எல்லா நாட்டிலும், எல்லா மதக்காரர்களிடத்திலும் இருந்து வருகிறது.

பிரார்த்தனை என்பதற்கு ஜபம், தபம், வணக்கம், பூசனை, தொழுகை முதலிய காரியங்களும், பெயர்களும் சொல்லுவதுண்டு.

இவையெல்லாம், கடவுளை வணங்கி தங்களுக்கு நன்மை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதேயாகும்.

தனக்கு வேண்டியவற்றையெல்லாம், அதாவது இம்மையில் இவ்வுலகில் யுக்தி, செல்வம், சுகம், இன்பம், ஆயுள், கீர்த்தி முதலியவைகளும், மறுமையில் மேல் லோகத்தில் பாவ மன்னிப்பு, மோட்சம், நல்ல ஜென்மம் முதலியவைகளும் கிடைக்க வேண்டும் என்கின்ற ஆசையே பிரார்த்தனையின் முக்கிய நோக்கமாக இருந்து வருகிறது.

இந்த பிரார்த்தனையின் அஸ்திவாரம், உலகத்தைப் படைத்துக் காத்துவரும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதும், அவர் சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும், சர்வமும் அறியும் ஞானமும் உடையவர் என்பதும், அப்படிப்பட்ட அக்கடவுளை வணங்குவதால் ஒருவனுக்கு வேண்டிய சகல காரியத்திலும் சித்தி பெறலாம் என்பதுமானவைகள்தான் பிரார்த்தனைக்காரர்களின் கருத்தாயிருக்கிறது. இப்படிப்பட்ட பிரார்த்தனைக்கு அக்கடவுளை வணங்குவது, தோத்திரம் செய்வது, புகழ்வது, பஜனை செய்வது முதலிய காரியங்கள் ஒருபுறமிருக்க,



பொருள்களைக் கொண்டும் கடவுளைத் திருப்தி செய்து அவற்றால் பயன் பெறலாம் என்பதும் இந்தப் பிரார்த்தனையில் சேர்ந்ததாகும். அதாவது, கடவுளுக்கு இன்ன இன்னது செய்வதாக நேர்ந்து கொள்ளுவது, ஜீவ பலி கொடுப்பது, கோயில் கட்டுவது, உற்சவம் செய்வது முதலிய காரியங்கள் செய்யப்படுவனவாகும்.

ஆகவே, இப்படிப்பட்ட பிரார்த்தனை என்பதற்கு வேறு வார்த்தையில் ஒரு மாறுபெயர் சொல்லவேண்டுமானால் பேராசை என்றுதான் சொல்லவேண்டும். பேராசை என்றால், தகுதிக்குமேல் விரும்புவது, வேலை செய்யாமல் கூலி பெறுவது, படித்துப் பாஸ் செய்ய வேண்டியவன் பிரார்த்தனையில் பாஸ் செய்வது என்றால், பணம் வேண்டியவன் பிரார்த்தனையில் பணம் சம்பாதிக்க வேண்டுமென்றால், ''மோட்சத்துக்கு'' போகவேண்டும் என்கின்றவன் பிரார்த்தனையில் மோட்சத்துக்குப் போகவேண்டும் என்றால், இவைகளுக்கெல்லாம் பேராசை என்று சொல்லுவதோடு, வேலை செய்யாமல் கூலி கேட்கும் பெரும் சோம்பேறித்தனமும், மோசடியும் என்றும் சொல்லுவதுதான் மிகப் பொருத்தமாம். பேராசையும், சோம்பேறித்தனமும், ஏமாற்றும் தன்மையும் இல்லாவிட்டால் பிரார்த்தனைக்கு இடமே இல்லை.

மற்றும், முன் குறிப்பிட்ட தேவைகளுக்காக பிரார்த்தனை செய்வதும், பிரார்த்தனையில் அவைகளை அடையப் பார்ப்பதும், முன் குறிப்பிட்ட சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ள கடவுளை சுத்த முட்டாள் என்று கருதி அதை ஏமாற்றச் செய்யும் சூழ்ச்சி என்று கூடச் சொல்லி ஆகவேண்டி இருக்கிறது.

எந்த மனிதனும் தகுதியானால் எதையும் அடையலாம். அதற்கு வேண்டிய காரியங்கள் செய்து தகுதியாக்கிக் கொண்டு பலனையடைய எதிர்பாராமல், காரியத்தைச் செய்யாது, பிரார்த்தனையில் பலன் அனுபவிக்கவேண்டும் என்று கருதினால், கடவுள், வேலை செய்யாமல் கூலி கொடுக்கும் ஒரு அறிவாளி என்றும், தன்னைப் புகழ்வதாலேயே வேண்டியதைக் கொடுக்கும் ஒரு தற்புகழ்ச்சிக்காரனென்றும்தானே சொல்லவேண்டும்.

தவிர, இந்தப் பிரார்த்தனையின் தத்துவமானது மனிதனைச் சோம்பேறியாக்குவதோடு, சகலவித அயோக்கியத்தனமான காரியங்களுக்கும் லைசென்சு - அனுமதிச் சீட்டு கொடுப்பதுபோலாகிறது. விதை நட்டு தண்ணீர் பாய்ச்சாமல் அறுப்பு அறுக்கக் கத்தி எடுத்துக்கொண்டு போகிறவனுக்கும், யோக்கியமான காரியங்களைச் செய்யாமல் கடவுள் கருணையை எதிர்பார்ப்பவனுக்கும் என்ன வித்தியாசம் என்பது விளங்கவில்லை. கடவுள் சகலத்தையும் உணர்ந்து அதற்குத் தகுந்தபடி பலன் கொடுக்கக்



கூடிய சர்வஞ்த்துவம் உள்ளவர் என்று ஒருவன் கருதி இருப்பானேயானால், அவன் கடவுளைப் பிரார்த்தனை செய்யும் வேலையில் ஈடுபடவோ, அதற்காக நேரத்தைச் செலவு செய்யவோ ஒருபொழுதும் துணியமாட்டான்.

ஏனென்றால், சகல காரியமும் கடவுளால்தான் ஆகும் என்று நினைத்துக் கொண்டு கடவுள், யாருடைய முயற்சியும் கோரிக்கையும் இல்லாமல் அவனவன் செய்கைக்கும், எண்ணத்துக்கும், தகுதிக்கும் தகுந்தபடி பலன் கொடுப்பதற்குத் தகுந்த ஏற்பாடும் செய்துவிட்டார் என்றும் (அதாவது விதியின்படிதான் முடியும் என்றும்) தெரிந்திருந்த ஒருவன், அந்த தெளிவில் நம்பிக்கை இருந்தால் பிரார்த்தனை செய்வானா என்று யோசித்துப் பார்க்கவேண்டுகிறோம்.

சாதாரணமாக மக்களில் 100-க்கு 90 பேர்களிடம் பிரார்த்தனை வெகு கேவலமான - அறிவற்ற - வியாபாரத்தனமான முறையில் இருந்து வருகிறது. அதாவது, எனக்கு இன்ன பலன் ஏற்பட்டால் உனக்கு நான் இன்ன காரியம் செய்கின்றேன்; அல்லது உனக்கு இன்ன காரியம் செய்கிறேன், அதற்குப் பதிலாக நீ இன்ன காரியம் எனக்குச் செய் என்கின்ற முறையிலேயே பிரார்த்தனை இருந்து வருகின்றது. இவர்கள் எல்லோரும் அதாவது இந்த பிரார்த்தனைக்காரர்கள் எல்லோரும் கடவுளை புத்திசாலி என்றோ, சர்வசக்தி உள்ளவன் என்றோ, பெரிய மனிதத் தன்மை உடையவன் என்றோ கருதவில்லை என்றுதான் சொல்லி ஆகவேண்டும். சிலர் சொல்லுகிறார்கள், மனிதன் பாபி, அவன் பாப கர்மத்தைச் செய்துதான் தீருவான்; ஆதலால் மன்னிப்பு கேட்டுத்தான் தீரவேண்டும் என்கின்றார்கள்.

நான் பாபம் செய்துதான் தீருவேன்; நீ மன்னித்துத்தான் ஆகவேண்டும் என்று பிரார்த்திப்பதை கடவுள் ஏற்றுக்கொள்வதானால், மனிதன் எந்தப் பாபத்தைச் செய்வதற்கும் ஏன் பயப்படவேண்டும் என்பது நமக்குப் புலப்படவில்லை. பாபத்துக்கு எல்லாம் மன்னிப்பு இருக்குமானால், புண்ணியம் என்பதற்கு அர்த்தம் என்ன? ஆகவே, கடவுள் கற்பனையைவிட இந்த பிரார்த்தனைக் கற்பனையானது, மிகமிக மோசமானது என்றுதான் சொல்லவேண்டும். பிரார்த்தனைக் கற்பனை இல்லாவிட்டால் கடவுள் கற்பனை ஒரு பிரயோஜனத்தையும் கொடுக்காமல் போய்விடும்.



மனிதன் பூஜையும், பிரார்த்தனையும் செய்வதற்குத்தான் கடவுள் ஏற்படுத்தப்பட்டதே ஒழிய, கடவுளுக்காக பூசையும், பிரார்த்தனையும் ஏற்படுத்தப்படவில்லை. குரு (பாதிரி), புரோகிதன் (பார்ப்பனர்) ஆகியவர்கள் பிழைப்புக்காகவே பிரார்த்தனையும், கடவுள் மன்னிப்பும் ஏற்படுத்தப்படவேண்டியதாய் விட்டது. இந்த இரண்டு காரியமும் இல்லாவிட்டால் பாதிரிக்கோ, முல்லாவுக்கோ, புரோகிதனுக்கோ ஏதாவது வேலை உண்டா என்பதை யோசித்துப் பாருங்கள். ஆஸ்திகர்கள் கொள்கைப் படி, மனிதனுடைய செய்கையும், எண்ணமும் "சித்திர புத்திரனுக்கோ, கடவுளுக்கோ தெரியாமல் இருக்கவே முடியாது." இதற்காக பலன் கொடுக்க தீர்ப்பு நாளும் எமதர்ம ராஜாவும் இருந்தே இருக்கிறான். மத்தியில் பிரார்த்தனை, பூசனை என்பது மேல்கண்ட இரண்டையும் ஏமாற்றவா அல்லது குருவும் புரோகிதனும் பிழைக்கவா என்பது யோசித்தால் விளங்காமல் போகாது.

பிரார்த்தனையில் செலவாகும் நேரத்தைப்போல் மனிதன் வீணாய்க் கழிக்கும் நேரம் வேறு இல்லை என்றே சொல்லுவோம். சில சோம்பேறிகள் பிழைப்பதற்காக மக்கள் புத்தி எவ்வளவு கெடுகிறது? மக்களுக்கு அயோக்கியத்தனம் செய்ய எவ்வளவு தைரியம் ஏற்பட்டு விடுகிறது? பொருள்கள் எவ்வளவு நாசமாகிறது? என்பவைகளையெல்லாம் யோசித்துப் பார்த்தால் பிரார்த்தனை என்பது ஒரு புரட்டான காரியம் என்றோ, பயனற்ற காரியம் என்றோ, அறிவீனமான காரியம் என்றோ விளங்காமல் போகாது.

*(1.1.1936 "பகுத்தறிவு" இதழில்*
*தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*

# 22. மிருகமும், பட்சியும், மலமும் கடவுளா?



நமது கேவல நிலைமையும், முட்டாள்தனத்தையும், நம்மை பார்ப்பனர்கள் எப்படி ஏமாற்றினார்கள் என்பதையும் விளக்கும் போது, நமக்கு உண்மையான சுயமரியாதை உணர்ச்சி இருந்தால் சிரிப்பு வருமா? ஆத்திரமும், வெட்கமும் அல்லவா வரும்?

நமது இழிவானது நேற்று, இன்று என்று இல்லாமல், ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்து வருவதால், நமது ரத்தம் வெட்கப்படுவதற்கில்லாமல் இழிவிலேயே உறைந்து போய்விட்டது.

மனிதனுக்கு வெட்கமும் ரோஷமும் ஏற்படுவதற்கு ஆகவே சுயமரியாதை இயக்கம் ஏற்படுத்தப்பட்டது. சுயமரியாதை இயக்கம் மனித சமூகத்தையே மாற்றி அமைக்க ஏற்பட்டதாகும். இந்தக் காரியம் ஒரு பெரும் சமூகப் புரட்சியால் ஏற்பட வேண்டியதே ஒழிய, சிரிப்பு விளையாட்டில் ஏற்படக்கூடிய தல்ல. இதற்காக அநேக தொல்லைகளை அனுபவிக்க வேண்டி வரும்.

அநேக காரியங்களில் மற்றவர்களால் நாம் துன்பமும், இழிவும் அடையாமல், நம்மாலேயே நாம் இழிவுக்கும், கீழ்நிலைமைக்கும், ஆளாகி வருகிறோம். நம்மை நாம் திருத்திக் கொள்ளாமல், நமக்குள் ஒரு பெரிய மன மாறுதல் ஏற்படாமல் நமது சமூகம் மாறுதலடைவதென்பது ஒரு நாளும் முடியாத காரியமாகும்.

சமூகத்தில் மேல்ஜாதி, கீழ்ஜாதி, அடிமை ஜாதி என்பவைகள் இருப்பதோடு, ஆண் - பெண் தன்மைகளில் உயர்வு தாழ்வும் இருந்து வருகிறது. இவை தவிர, ஏழை - பணக்காரன், முதலாளி - தொழிலாளி தன்மையும் இருந்துவருகிறது.

இவற்றுள் சில இயற்கையாக ஏற்பட்டதாகவும், சில முயற்சியால் செயற்கையாக ஏற்பட்டதாகவும், இவ்வளவுக்கும் காரணம் மனிதன் அல்லவென்றும், சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும் பொருந்திய கடவுளால் ஏற்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. இவற்றையே மேல்நிலையில் உள்ளவனும், கீழ்நிலையில் உள்ளவனும் நம்பிக்கொண்டு இருக்கிறான்.

இந்த மூட நம்பிக்கைதான் வெகுகாலமாக மனித சமூகத்தில்



எவ்வித மாறுதலும் ஏற்படுவதற்கில்லாமல் தடுத்துக்கொண்டு வருகிறது. சாதாரணமாக, மனிதப் பிறவியில் கீழ்ஜாதி, மேல்ஜாதி, அடிமை (பறை) ஜாதி என்பவை இன்று நேற்று ஏற்பட்டதல்ல; பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்து வருகிறது. இதற்கு ஆக நாளது வரை யாரும் எவ்வித முயற்சியும் செய்யவில்லை. ஏனெனில்,

செய்ய முடியாதபடி அவனவன் நம்பிக்கையைச் செய்து கொண்டான்.

ஜாதி வித்தியாசங்களுக்கும் ஜாதிக் கொடுமைக்கும் கடவுள் காரணம் என்று எண்ணிய பிறகு யாரால்தான் பரிகாரம் செய்ய முடியும்? எந்த மனிதனும் மற்ற ஜாதியைப்பற்றி சந்தேகப்பட்டாலும், தன் ஜாதியைப்பற்றி நம்பிக்கையாகவும், மேன்மையாகவும் கற்பித்துக் கொண்டு, மற்றவர்களைத் தாழ்த்தி பெருமையடைகிறான்; சாஸ்திரங்களில், மதங்களில் அவற்றிற்கு ஆதாரங்கள் கண்டுபிடிக்கிறான்; புராணங்கள் எழுதி வைத்துப் பெருமையடைகிறான். இந்தக் குணம் பார்ப்பானிடம் மாத்திரமல்ல; எல்லா ஜாதியாரிடமும் இருந்து வருகிறது. ஜாதி பேதம் ஒழிவதை இழிவாய்க் கருதுகிறான். ஜாதிக் கலப்பை விபசாரித்தனமாக எண்ணுகிறான். இந்த மனப்பான்மை ஜாதி ஒழிப்புக்கு எமனாய் இருக்கிறது.

அஸ்திவாரத்தில் கையை வைத்து ஜாதிகளை ஒழிப்பதற்கு இன்று இந்த நாட்டில் சுயமரியாதை இயக்கம் தவிர வேறு எந்த இயக்கமும் இல்லை என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள்.

திருவள்ளுவர், கபிலர், ராமானுஜர் முதலிய புராணக்காரர்களும், பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் முதலிய மத சம்பந்தமான சில புது முயற்சிகளும், மற்றும் எத்தனையோ சீர்திருத்த முயற்சிகளும் எல்லாம், உண்மையறியாமலும், உலகமெப்புக்கும், தனிப்பட்ட சமூக சுயநலத்தை முன்னிட்டும் செய்யப்பட்ட காரியங்களே தவிர, மனித சமூகத்தில் பிறவியின் பேரால் உள்ள ஜாதி பேதம் அடியோடு ஒழியத்தக்க மாதிரிக்கோ, ஒழியும்படியாகவோ செய்த காரியங்கள் அல்ல.

கடவுளும், மதமும் உலகில் ஆயிரம் வருஷத்துக்கு முன் இருந்ததைவிட எவ்வளவோ மறைந்தும் மாறுதலடைந்தும் சீர்திருத்தம் பெற்று இருக்கிறது. கடவுளால், மதத்தினால் பிழைக்கும்படி வாழ்க்கை ஏற்படுத்திக் கொண்ட கூட்டம் தவிர - சமூகம் தவிர, மற்ற இடங்களில் கடவுளும், மதமும் எவ்வளவோ குறைவடைந்து வருகின்றன. உருவமில்லாத, பெயரில்லாத கடவுள்கள் தோன்றிவிட்டன. மத சின்னமில்லாத மதங்கள் தோன்றுவிட்டன. இரண்டையும்பற்றி



கவலைப்படாமல் தங்கள் தங்கள் வேலையை கவனிக்கும்படி யான உணர்ச்சிகளும் தோன்றிவிட்டன.

தங்களுக்கு அதைப்பற்றிய கவலையில்லாமல் மற்றவனை ஏய்க்கவும், கட்டுப்படுத்தவும், அடிமையாக்கவும் மாத்திரமே இன்று கடவுளும், மதமும் வெகு மக்களால் கையாளப்படுகின் றதே ஒழிய வேறில்லை.

சகல துறைகளிலும் உலகம் முற்போக்கடைவதுபோலவே கடவுளிலும் மதத்திலும்கூட உலகம் முற்போக்கடைந்து வருகி றது. சுயமரியாதை இயக்கம் இந்த க்ஷணமே எல்லோரையுமே கடவுள், மத நம்பிக்கையை விட்டுவிடும்படி கட்டாயப்படுத்த வில்லை. நமக்கு புரியாததும், நம்மால் அறிய முடியாததும், குணம், உருவம், சலனம் இல்லாததும் ஆன கடவுளைப்பற்றி சுயமரியாதை இயக்கத்துக்கும் கவலையில்லை.

மற்றபடி, கடவுளைப்பற்றி தெரிந்துவிட்டதாகச் சொல்லுவ தும், அதற்கு உருவம், பெயர், குணம், சலனம் ஏற்படுத்துவ தும், அதன்மீது பொறுப்பைச் சுமத்துவதும், மனிதன் மற்றவர்க ளால் அடையும் கொடுமைக்கும், இழிவுக்கும் பொறுப்பாக்குவ துமான கடவுள் உணர்ச்சியையே சுயமரியாதை இயக்கம் குறை கூறுகிறது. மற்றும், கண்டதெல்லாம், நினைத்ததெல்லாம் கட வுள் என்கின்ற உணர்ச்சியையும், ஆயிரக்கணக்கான கடவுள் கள் உணர்ச்சியையும் ஒழிக்கவேண்டும் என்கின்றது.

இன்று ஒரு இந்துவால் எவை எவை எல்லாம் கடவுள் என்பதாக மதிக்கப்படுகிறது என்றால், மரத்தில் ஒரு கூட்டம் கடவுளாக மதிக்கப்படுகிறது; புல் பூண்டுகளில் ஒரு கூட்டம் கடவுளாக மதிக்கப்படுகிறது; மலத்தில் ஒரு கூட்டமும்; பூச்சி புழுக்களில் ஒரு கூட்டமும்; மிருகங்களில் பன்றி, நாய், கழுதை, மாடு முதலிய ஒரு கூட்ட மிருகமும்; பட்சியில் கருடன். காக்காய். கோழி முதலிய ஒரு கூட்டமும்; கல்லுகளிலும், மண்களிலும் ஒரு கூட்டமும்; காகிதங்களி லும், எழுத்துக்களிலும் ஒரு கூட்டமும்; மனிதர்களில் ஒரு கூட்டமும் இன்று மனித னால் கடவுளாகப் பாவிக்கப்பட்டு பூசை, வணக்கம், பலி முதலியவை செய்து, ஏராள மான பொருள்கள் நாசமாக்கப்பட்டு வரப்ப டுகின்றன.



இந்த முட்டாள்தனங்களையும், மோசக் கருத்துகளையும் முதலில் ஒழிக்கவேண்டுமென்றுதான் சுயமரியாதை இயக்கம் சொல்லுகிறது. இதை தைரியமாய் எடுத்துச் சொல்ல இன்று இந்நாட்டில் சுயமரியரதை இயக்கம் ஒன்றுதான் இருக்கிறது. அது, இந்த மாதிரியான கடவுள் உணர்ச்சிகளை ஒழித்துத் தீருவதென்றே கங்கணம் கட்டிக்கொண்டு உயிர் வாழுகின்றது.

நாஸ்திக இயக்கம் என்று சொல்வதாலேயே அது பயந்து கொள்ளப் போவதில்லை. கடைசிவரை அது உழைத்துத்தான் தீரும். மத விஷயத்திலும் இப்படித்தான் இருந்து வருகிறது. ஆகவே, சுயமரியாதை இயக்கம் இன்னது என்றும், காங்கிரஸ் இயக்கம் இன்னது என்றும் உணர்ந்து, உங்கள் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து, பிறகு உங்கள் இஷ்டப்படி நடவுங்கள். விஷமப் பிரச்சாரத்துக்கும், ஏமாற்றுப் பிரச்சாரத்துக்கும் ஆளாகாதீர்கள்.

*(23.3.1936 அன்று பட்டுக்கோட்டையிலும், 24.3.1936 அன்று புத்தகரத்திலும் (முத்துப்பேட்டை) தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி - "குடிஅரசு" 5.4.1936)*

# 23. கடவுள்

**வினா:** கடவுளைப்பற்றிப் பொதுவாக ஜனங்கள் கொண்டிருக்கும் கருத்துகளை விளக்கிக் கூறு.

**விடை:** கடவுள் வான மண்டலத்தையும், பூமியையும், அதிலுள்ள சகல சராசரங்களையும் படைத்தவன் என்று மக்களில் பெரும்பாலோர் நம்புகிறார்கள்.

**வினா:** அப்புறம்?

**விடை:** கடவுள் சர்வ ஞானம் உடையவனாம்; யாவற்றையும் பார்க்கிறானாம்; பிரபஞ்ச முழுதும் அவனது உடமையாம்; சர்வ வியாபியாம்.



**வினா:** கடவுள் ஒழுக்கத்தைப்பற்றி ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள்?

**விடை:** அவன் நீதிமானாம்; புனிதனாம்.

**வினா:** வேறு என்ன?

**விடை:** அவன் அன்புமயமானவனாம்

**வினா:** கடவுள் அன்புமயமானவன் என்று ஜனங்கள் எப்பொழுதும் நம்புகிறார்களா?

**விடை:** இல்லை. மக்கள் அறிவும் ஒழுக்கமும் உயர உயர, கடவுள் யோக்கியதையும் விருத்தியடைந்து கொண்டே போகிறது.

**வினா:** உன் கருத்தை நன்கு விளக்கிக் கூறு.

**விடை:** காட்டாளன் கடவுள் ஒரு காட்டாளனாகவும், திருடனாகவும் இருந்தான். அராபித் தலைவன் கடவுளான ஜாப் ஒரு கீழ்நாட்டு யதேச்சாதிகாரியாக இருந்தான். யூதர்கள் கடவுள் போர் வெறியனாயும், பழிக்குப் பழி வாங்கும் குணமுடையவனாகவும் இருந்தான். கிறிஸ்தவர் கடவுளோ அற்பாயுளுடைய மக்கள் செய்யும் குற்றங்களுக்கு நித்திய நரக தண்டனை வழங்கக் கூடியவனாக இருக்கிறான்.

**வினா:** கடவுளைப்பற்றியே வேறு அபிப்பிராயங்கள் என்ன?

**விடை:** மக்கள் மனோ வாக்குக் காயங்களினால் செய்யும் காரியங்களில் அவன் சிரத்தையுடையவனாக இருக்கின்றானாம்.

**வினா:** ஏன்?

**விடை:** அவனுக்கு விருப்பமான காரியங்களை நாம் செய்தால் பரிசளிக்கவும், விருப்பமில்லாத காரியங்களைச் செய்தால் தண்டனையளிக்கவும்.

**வினா:** கடவுளுக்கு என்ன என்ன பெயர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன?

**விடை:** ஒவ்வொரு தேசத்தாரும் கடவுளை ஒவ்வொரு பெயரால் அழைக்கிறார்கள். கிரேக்கர்கள் 'ஜீயூயஸ்' என்றும், ரோமர்கள் 'ஜோவ்' என்றும், பார்சிகள் 'ஆர்முஸ்ஜித்' என்றும், இந்துக்கள் 'பிரம்மம்' என்றும், யூதர்களும், கிறிஸ்தவர்களும் 'ஜிஹோவா' என்றும், முகம்மதியர் 'அல்லா' என்றும் கடவுளை அழைக்கிறார்கள்.



**வினா:** கடவுளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேறு பெயர்கள் எவை?

**விடை:** பரம்பொருள், அனந்தன், மூலகாரணன், பரமாத்மா, நித்தியசக்தி, பிரபஞ்சம், இயற்கை, மனம், ஒழுங்கு முதலியன.

**வினா:** ஆனால், ஜனங்கள் சொல்லும் கடவுள் ஒரே பொருளைத் தானா குறிக்கிறது?

**விடை:** இல்லை. சிலர் கடவுளை ஒரு ஆளாக பாவனை செய்கிறார்கள். சிலர் ஒரு கருத்தெனக் கூறுகிறார்கள். வேறு சிலர் சட்டம் என்கிறார்கள். மற்றும், அறிய முடியாத ஒரு சக்தி என்கிறார்கள். ஒரு கூட்டத்தார், கடவுள் பூரணன் என்கிறார்கள். பின்னும் சிலர், ஜடப் பொருளும் மனமும் அய்க்கியப்படும் நிலையே கடவுள் என நம்புகிறார்கள்.

**வினா:** மக்கள் எப்பொழுதும் ஒரே கடவுளில் நம்பிக்கை வைத்து வந்திருக்கிறார்களா?

**விடை:** மக்களில் பெரும்பாலோர் ஒரு கடவுள் அல்லது பல கடவுள்கள் இருப்பதாக நம்பியே வந்திருக்கிறார்கள்.

**வினா:** ஒன்றுக்கு மேற்பட்ட கடவுளுண்டா?

**விடை:** பல கடவுள்கள் உண்டென்றே பொதுவாக நம்பப்படுகிறது.

**வினா:** பல கடவுள்களை நம்புகிறவர்களுக்கு என்ன பெயர் அளிக்கப்படுகிறது?

**விடை:** பல கடவுள்களை நம்புவோர் பல தெய்வவாதிகள்; ஒரே கடவுளை நம்புவோர் ஏக தெய்வவாதிகள்.

**வினா:** சில, பல தெய்வவாதிகளின் பெயர் சொல்லு.

**விடை:** எகிப்தியர், இந்துக்கள், கிரேக்கர், ரோமர்.

**வினா:** ஏக தெய்வவாதிகள் யார்?

**விடை:** யூதர்கள், கிறிஸ்தவர்கள், முகமதியர்.



**வினா:** இவர்கள் எல்லாம் எப்பொழுதுமே ஏக தெய்வவாதிகளாக இருந்தார்களா?

**விடை:** இல்லை. ஆதியில் எல்லா ஜாதியாரும் பல தெய்வங்களையே வணங்கி வந்தார்கள்.

**வினா:** பல தெய்வவாதிகளின் கடவுள்கள் எவை?

விடை: சூரியன், சந்திரன், ஆவிகள், நிழல்கள், பூதங்கள், பேய் பிசாசுகள், மிருகங்கள், மலைகள், மரங்கள், பாறைகள், நதிகள் முதலியன.

வினா: இவைகள் எல்லாம் கடவுளாக நம்பப்பட்டதாய் உனக்கு எப்படித் தெரியும்?

விடை: எப்படியெனில், ஜனங்கள் அவற்றை வணங்குகிறார்கள்; அவற்றிற்கு ஆலயங்கள் கட்டினார்கள்; விக்கிரகங்கள் உண்டு பண்ணினார்கள்; அவற்றிற்கு பூஜைகள் நடத்தினார்கள்.

வினா: இந்த தெய்வங்கள் எல்லாம் ஒரே மாதிரி மகிமையுடையன என்று ஜனங்கள் நம்பினார்களா?

விடை: எல்லா கடவுள்களுக்கும் மேலான ஒரு கடவுளுக்கு அவை அடிமைகள் அல்லது சின்னங்கள் என்று அறிவாளிகளான சொற்பப்போர் நம்பினார்கள்.

வினா: அறிவில்லாதவர்களோ?

விடை: அவைகளில் சில அதிக சக்தியுடையவை என்றும், சில கருணையுடையவை என்றும், சில அழகானவை என்றும், சில அதிக புத்தியுடையவை என்றும் நம்பினார்கள்.

வினா: கடவுள் உற்பத்திக்கு அவர்கள் என்ன காரணம் கூறுகிறார்கள்?

விடை: கடவுள் உற்பத்திக்குப் பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன.

வினா: அவற்றுள் சிலவற்றை விளக்கு.

விடை: முதற்காரணம்: ஆதிகால மக்கள் அறிவில்லாதவர்களாயும், குழந்தைகளைப்போல் பயங்காளிகளாயும் இருந்தார்கள். எனவே, தனக்கு அறிய முடியாதவைகள்மீது அவர்களுக்குப் பயமுண்டாயிற்று. கண்ணால் காண முடியாத ஏதோ ஒன்றே பயத்தை உண்டு பண்ணுகிறதென்று நம்பினார்கள்.



இரண்டாவது: மக்கள் பலவீனராயும், உதவியற்றவராயும் இருப்பதினால், அவர்களுக்கு உதவியளிக்கக் கூடிய சர்வ சக்தியுடைய ஒன்று இருக்கவேண்டுமென்று நம்பினார்கள்.

மூன்றாவது: மனிதன் இயல்பாக நேசமனப்பான்மையுடைய வன். பிறருடன் கலந்து பழகவே அவன் எப்பொழுதும் விரும்புகிறான். எனவே, தன்னைச் சூழ்ந்திருக்கும் அறிய முடியாத சக்திகளை அறியவும், அவற்றுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளவும் விரும்புகிறான். இறுதியில், அறிய முடியாத சக்திகளை கடவுளாக உருவகப்படுத்திக் கொள்கிறான்.

நான்காவது: தெய்வ நம்பிக்கைக்கு மரணமே முக்கிய காரணம்.

**வினா:** அது எப்படி?

**விடை:** நமக்கு உலகத்தில் சிரஞ்சீவியாக வாழ முடியுமானால், தெய்வங்களைப்பற்றியோ, தெய்வீக சக்திகளைப்பற்றியோ நினைக்கத் தேவையே உண்டாகாது. மரணம் உண்டு என்ற உணர்ச்சியினாலேயே மறு ஜென்மத்தைப் பற்றியும், பிறப்புக்கும், இறப்புக்கும் காரணமாக இருக்கும் ஒன்றைப்பற்றியும் யோசிக்க வேண்டியதாக ஏற்படுகிறது. பிராணிகளுக்கு மரணத்தைப்பற்றிய சிந்தனையே இல்லாததினால் கடவுளும் இல்லை.

**வினா:** தெய்வங்களின் தொகை பெருகிக் கொண்டே இருக்கிறதா?

**விடை:** இல்லை. அது குறைத்துகொண்டே போகிறது.

**வினா:** ஏன்?

**விடை:** மக்களது அறிவும், சக்தியும் வளர வளர, தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கை விருத்தியடைகிறது.

**வினா:** அறிவில்லாதவர் கடவுளைவிட அறிவுடையோர் கடவுள் குறைவா?

**விடை:** ஆம். நாகரிகமில்லாதவர்களே பல தெய்வங்களை வணங்குகிறார்கள்.

**வினா:** ஏக தெய்வவாதிகள் நிலைமை என்ன?

**விடை:** இப்பொழுதும் பெரும்பாலார் ஏக தெய்வ நம்பிக்கையுடையவர்களாகவே இருக்கிறார்கள்.

**வினா:** கடவுள் நம்பிக்கையே இல்லாதவர்களும் இருக்கிறார்களா?

**விடை:** ஆம். அதிகம் பேர் இருக்கிறார்கள்.



**வினா:** அவர்கள் ஏன் கடவுளை நம்பவில்லை?

**விடை:** பொது ஜனங்கள் சங்கற்பப்படியுள்ள கடவுள் நமது அறிவுக்கு அதீதமானதென்று அவர்கள் கூறுகிறார்கள்.

**வினா:** கடவுள் உண்மையை நிரூபித்துக் காட்ட முடியாதா?

**விடை:** சிலர் முடியும் என்கிறார்கள்; சிலர் முடியாது என்கிறார்கள்.

**வினா:** கடவுள் உண்மைக்கு கூறப்படும் ஆதாரங்கள் எவை?

**விடை:** முதல் ஆதாரம் காரண காரிய வாதம்.

**வினா:** அதை விளக்கிக் கூறு.

**விடை:** எதற்கும் ஒரு காரணம் இருக்கவேண்டும். எனவே, பிரபஞ்சத்துக்கும் ஒரு கர்த்தா இருக்கவேண்டும். அந்த கர்த்தாவே கடவுள்.

**வினா:** இது ஒரு பலமான வாதமல்லவா?

**விடை:** பலமான வாதந்தான்; ஆனால், முடிவானதல்ல.

**வினா:** ஏன்?

**விடை:** யாவற்றிற்கும் ஒரு காரணமிருக்க வேண்டுமானால், கடவுளுக்கும் ஒரு காரணமிருக்கவேண்டுமே.

**வினா:** கடவுள் அனாதியாக இருக்கக் கூடாதா?

**விடை:** காரணமில்லாமலே கடவுளுக்கு இயங்க முடியுமானால், காரணமில்லாமல் காரியமில்லை என்ற வாதமே அடியற்று வீழ்ந்து விடுகிறது.

**வினா:** அப்புறம்?

**விடை:** காரணமின்றி அனாதிகாலமாக கடவுள் இயங்க முடியுமானால், பிரபஞ்சமும் எக்காரணமுமின்றி அனாதிகாலமாக இயங்க முடியும்.



**வினா:** கடவுளுக்கும் ஒரு காரணமுண்டு என சம்மதித்தால் என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது?

**விடை:** அப்படியானால், அந்தக் காரணத்துக்கு மூல காரணம் என்ன என்று ஆராய வேண்டியதாக ஏற்படும். அவ்வாறு ஆராயத் தொடங்கினால் முடிவே ஏற்படாது.

**வினா:** வேறு வாதம் என்ன?

**விடை:** பூரணத்துவ வாதம்.

**வினா:** அது என்ன? விளக்கிக் கூறு.

**விடை:** அதாவது, நாம் அபூரணராக இருந்தாலும் (குறைபாடுடையவர்களாக இருந்தாலும்) பூரணமான ஒரு பொருள் உண்டென்ற உணர்ச்சி நமக்கு இருந்துகொண்டு இருக்கிறது. அந்த உணர்ச்சி அந்த பூரணப் பொருளின் சாயல் என்று நம்பப்படுகிறது.

**வினா:** அதனால் நாம் ஊகிக்க வேண்டியதென்ன?

**விடை:** அந்த உணர்ச்சி நமது உள்ளத்து இருந்துகொண்டு இருப்பதினால், அதற்கு ஆதாரமாக ஒன்று இருக்கவேண்டுமென்றும், அதுவே கடவுள் என்றும் ஊகிக்க இடமிருக்கிறது.

**வினா:** அதனால் நாம் ஊகிக்க வேண்டியதென்ன?

**விடை:** அந்த உணர்ச்சி நமது உள்ளத்து இருந்துகொண்டு இருப்பதினால், அதற்கு ஆதாரமாக ஒன்று இருக்கவேண்டுமென்றும், அதுவே கடவுள் என்றும் ஊகிக்க இடமிருக்கிறது.

**வினா:** மேலும் கொஞ்சம் விளக்குக.

**விடை:** ஒரு பூரண வஸ்துவின் பிரதிபிம்பம் நமது உள்ளத்துத் தோன்ற வேண்டுமானால் அது உள் பொருளாக இருக்க வேண்டும். அது உள் பொருளாக இல்லையானால், பூரணமாக இருக்க முடியாது.

**வினா:** அப்படியானால் முடிவு என்ன?

**விடை:** கடவுளைப்பற்றிய உணர்ச்சி நமக்கு இருப்பதினால், கடவுள் ஒன்று இருக்கவேண்டும்; அப்படி ஒன்று இல்லையானால் நமக்கு அந்த உணர்ச்சி ஏற்பட்டிருக்கவே செய்யாது என்பதுதான் முடிவு.



**வினா:** இந்த வாதம் சரியானது தானா?

**விடை:** முதல் வாதத்தைப்போல இது அவ்வளவு உறுதியானதல்ல.

**வினா:** ஏன்?

**விடை:** பூரணத்துவம் ஒரு குணம். உண்மை ஒரு நிலைமை. அவை இரண்டும் சம்பந்தமற்றவை. ஒரு பெரிய

பட்டணம் கடலில் ஆழ்ந்து கிடப்பதாகவோ, மேக மண்டலத்தில் மிதந்து கொண்டிருப்பதாகவோ நமது உள்ளத்து ஒரு உணர்ச்சி ஏற்படலாம். ஆனால், அப்பேர்ப்பட்ட ஒரு பட்டணம் இருக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அதுபோல, ஒரு பூரண வஸ்துவைப்பற்றிய உணர்ச்சி நமக்கு இருப்பதினால், ஒரு பூரண வஸ்து இருக்கவேண்டுமென்ற கட்டாயமும் இல்லை.

*வினா:* வேறொரு உதாரணத்தினால் விளக்கிக் காட்டு.

*விடை:* பூமி பரந்திருப்பதாக வெகுகாலம் மக்கள் நம்பி வந்தார்கள். அந்த உணர்ச்சி உலகத்தின் பிரதி பிம்பமாக இருக்க முடியாது. ஏனெனில், பரபரப்பான பூமி இல்லவே இல்லை.

*வினா:* அப்படியானால், பூரண வஸ்துக்களும், அபூரண வஸ்துக்களும் நமது மனோ கற்பிதம்தானா?

*விடை:* ஆம்.

*வினா:* அடுத்த வாதம் என்ன?

*விடை:* அடுத்தது உருவக வாதம்.

*வினா:* அதை விளக்கு.

*விடை:* வினாடி, நிமிஷம், மணி காட்டும் முறையில் ஒரு கடிகாரம் உருப்படுத்தப்பட்டிருப்பதினால் அது ஒரு நோக்கத்துடன் உண்டு பண்ணப்பட்டிருக்கின்றதென்றும், அதற்கு ஒரு கர்த்தா இருக்கவேண்டுமென்றும் நாம் அறிகிறோம். அதுபோல, உலகமும் ஒரு நோக்கத்தோடு சிருஷ்டிக்கப்பட்டிருப்பதினால் அதற்கு ஒரு கர்த்தா இருக்கவேண்டும் அந்த கர்த்தாவே கடவுள்.

*வினா:* இந்த வாதம் எப்பேர்ப்பட்டது?



*விடை:* கடிகாரத்தை உலகத்துக்கு உவமையாகக் கூற முடியாது. கடிகாரம் எதற்காக உண்டு பண்ணப்பட்டதென்று கூறிவிடலாம். ஆனால், உலகம் எதற்காக உண்டு பண்ணப்பட்டதென்று கூறுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

*வினா:* பிரபஞ்ச அமைப்பு, கடிகார அமைப்புப்போல அவ்வளவு தெளிவானதல்லவா?

**விடை:** தெளிவாக இருந்தால் இரகசியங்களுக்கு இடமே இல்லை.

**வினா:** கடிகாரத்தைப்பற்றி நாம் பூரணமாக அறிந்திருப்பதுபோல, பிரபஞ்சத்தைப்பற்றி நாம் பூரணமாக அறியவில்லையென்று நீ கூறுகிறாயா?

**விடை:** ஆம். கடிகாரத்தின் அமைப்பை நமக்குத் தெளிவாக விளக்கிக் கூற முடியும். பிரபஞ்ச அமைப்பை தெளிவாக விளக்கிக் கூற முடியாது.

**வினா:** இந்த வாதத்தைப்பற்றி வேறு ஏதாவது சொல்ல வேண்டியதுண்டா?

**விடை:** கடிகாரத்தைப் பார்த்தவுடன், அதை உண்டு பண்ணியவன் ஒருவன் இருக்கவேண்டுமென்று அறியலாமேயன்றி, கடிகார உற்பத்திக்குக் காரணமான பொருள்களை உண்டு பண்ணியவன் ஒருவன் இருக்க வேண்டுமென்றும் சொல்ல முடியாது.

**வினா:** வேறு என்ன?

**விடை:** உலகத்தை உண்டு பண்ணியவன் ஒருவன் உண்டென்று ஒப்புக்கொண்டாலும், உலகத்தை சிருஷ்டித்தவன் ஒருவன் இருப்பதாக நமக்கு ருசுப்படுத்த முடியாது.

**வினா:** இம்மாதிரியான சங்கடங்கள் பல இருப்பதினால் பிரஸ்தாப விஷயத்தில் நாம் கைக்கொள்ளவேண்டிய நிலை என்ன?

**விடை:** நாம் அந்தரங்க சுத்தியோடு ஆராயவேண்டும். பிடிவாதமாக எதையும் நம்பக்கூடாது. திறந்த மனத்தோடு உண்மையை அறிய முயலவேண்டும்!

**வினா:** கடவுள் என்ற பெயரை நாம் எந்தப் பொருளில் வழங்கவேண்டும்?

**விடை:** ஜீவகோடிகளின் உயர்ந்த லட்சியத்தை குறிக்கும் பொருளாகவே நாம் வழங்கவேண்டும்.



**வினா:** அப்படியானால், சிலரின் தெய்வங்கள் உத்தமமானவை என்றும், சிலரின் தெய்வங்கள் மோசமானவை என்றும் ஏற்படாதா?

**விடை:** ஆம், நிச்சயமாக ஏற்படும். ஒவ்வொரு மனிதனும் அவனவன்

லட்சியத்துக்கும், கடவுளுக்கும் அளவுகோலாக இருக்கிறான்.

**வினா:** மேலும் கொஞ்சம் விளக்கு.

**விடை:** நமது கண் பார்வை எட்டும் அளவுக்கே நமக்குப் பார்க்க முடியும். அதுபோல, நமது மனோ சக்திக்கு இயன்ற அளவிலேயே நமக்கு சிந்திக்கவும், விரும்பவும் முடியும்.

**வினா:** அப்படியானால் கடவுளை சிருஷ்டித்தது யார்?

**விடை:** ஒவ்வொருவனும் தன் கடவுளை சிருஷ்டித்துக் கொண்டான்.

*(3.5.1936 "குடிஅரசு" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது)*

# 24. கடவுள்களால் என்ன பயன்?

விஞ்ஞானப் பெருக்கமுள்ள நாளில் நாம் இன்னமும் கடவுள்களைப்பற்றியும், பேசிக் கொண்டிருப்பது உண்மையிலேயே ஒரு காட்டுமிராண்டித்தனமேயாகும். என்றாலும், நமது எதிரிகள் நம்மீது வேறு எவ்வித குற்றமும் சுமத்த யோக்கியதையற்றுப் போனதால், நம்மை நாஸ்திகர்கள் என்று விஷமத்தனமாய் கெட்ட எண்ணத்துடன் பிரச்சாரம் செய்து வருவதால் அதைப் பற்றியும் பேசியாக வேண்டியிருக்கிறது.

கடவுள்களைப்பற்றிய அபிப்பிராயத்தில் பழைய கால அதாவது காட்டுமனிதன் காலத்தைவிட கிறிஸ்தவர்களில் ஒரு சாராரும், முகமதியர்களும் எவ்வளவோ சீர்திருத்தத்திற்கு வந்து விட்டார்கள். அவர்கள், ஒரே ஒரு கடவுள்தான் இருக்க முடியும் என்றும், அக்கடவுள் வாக்குக்கும், மனதுக்கும் எட்டாதது என்றும், அது, பெயரும் குணமும், உருவமும் இணையும் இல்லாதது என்றும், மனிதரில் நன்மையான காரியங்கள்



செய்தவர்களுக்கு நன்மையும், தீமையான காரியம் செய்தவர்களுக்கு தீமையும் அளிக்கக் கூடியது என்றும், சொல்லி குணம் கற்பிக்கிறார்கள். அப்படிப்பட்ட கடவுளைப் பற்றி இப்பொழுது நாம் விவகாரம் பேச வேண்டிய அவசியம் இல்லை. இக்கருத்துடன் உணர்ந்திருக்கும் கடவுளால் மனிதன் தீமை செய்யப் பயப்படுவான் என்றும்,

நன்மை செய்ய ஆசைப்படுவான் என்றும், பல அறிஞர்களும் அதை ஒப்புக் கொண்டு காரணம் சொல்லுகிறார்கள். ஆகையால், இன்றைய தினம் இந்துக்கள் என்பவர்களுடைய, சிறப்பாக பார்ப்பனர்களால் கற்பிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கடவுள்களை எடுத்துக்கொள்ளுவோம்.

இந்துக்களுக்கு இத்தனை கடவுள்கள் ஏன்? அவை எப்படி வந்தன? பல்லாயிரக் கடவுள்கள் தவிர மற்றும் என்னவெல்லாம் கடவுள்களாகி இருக்கின்றன பாருங்கள். மாட்டு மலம் முதல் மாடு, குதிரை, எருமை, குரங்கு, பெருச்சாளி, கழுகு, காக்காய், பாம்பு, மரம், செடி, கல், மண், உலோகம், காகிதம் முதலியவைகளும் மற்றும் பல ஆபாச உருவங்களும் கடவுளாக வணங்கப்படுகின்றன. காசியில் ஒரு கோயிலில் 2 உயிருள்ள நாய்கள் படுத்திருக்கின்றன. அவைகளுக்கும் பூஜை போட்டு வணங்குவதை நேரில் பார்த்தேன். இப்படிச் செய்வதற்கு பண்டிதர்களால் தத்துவார்த்தம் சொல்லப்படுகிறது. இவ்வளவோடு இல்லாமல், இக்கடவுள்களுக்கு பெண்டு, பிள்ளை, வைப்பாட்டி, தாசி விபசாரித்தனம், ஆகாரம், உறக்கம், புணர்ச்சி முதலியவைகளும் கற்பிக்கப்படுகின்றன. மற்றும், இக்கடவுளுக்கு கல்யாணம், சாவு முதலியனவும்கூட கற்பிக்கப்படுகின்றன.

கற்பிக்கப்படுவதோடு தொலைந்து போனாலும் பரவாயில்லை; செய்கையில் செய்து காட்டி, அதாவது கடவுள் விபசாரித்தனம் செய்வதாகவும், தாசி வீட்டுக்குப் போவதாகவும், மற்றவர்கள் வீட்டுப் பெண்களை அடித்துக்கொண்டு போவதாகவும் உற்சவங்கள் செய்து காட்டி, அவைகளுக்காக பல கோடிக் கணக்கான ரூபாய்களும், மனிதனின் விலை உயர்ந்த நேரமும், ஊக்கமும் உணர்ச்சியும் பாழாக்கப்படுகின்றன. இக்காரியங்கள் இந்த 20 ஆவது நூற்றாண்டில் செய்யக் கூடியதா என்பதை யோசித்துப் பாருங்கள். இம்மாதிரி கடவுள்களை கற்பித்துக் கொண்டு அவைகள் மேல்கண்ட மாதிரியான காரியங்கள் செய்ததாக புராணங்களையும், இதிகாசங்களையும் கற்பித்துக் கொண்டு, அக்காரியங்களை நாமும் கடவுள்கள் பேரால் செய்துகொண்டு திரிவதுபற்றி மனிதனுக்கு வெட்கம் வரவேண்டாமா என்று கேட்கின்றேன். இதைச் சொன்னால் எங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லுவது யோக்கியமும் நாணயமுமான பேச்சாகுமா என்று கேட்கின்றேன்.



கடவுள் இருந்தால் இப்படித்தான் இருக்கவேண்டுமா? இப் படி இருப்பதை கடவுள் என்று அறிவுடையவன் ஒப்புக்கொள் வானா? இன்று நாம் இம்மாதிரி கடவுள்களுக்காக செய்கிற பூஜையும், படையல்களும், கல்யாணம் முதலிய உற்சவங்க ளும் கடவுளுக்கு எதற்கு? எந்தக் கடவுளாவது ஏற்றுக்கொள்கி றதா?

கடவுள்களை பொம்மைகள் மாதிரி வைத்து வருஷா வருஷ மும், சில கடவுள்களுக்கு வருஷத்தில் இரண்டு தரம் மூன்று தரமும் கல்யாணங்கள் செய்கின்றோமே, அவை எதற்கு? சாமிக்கு உண்மையிலேயே பெண் ஜாதி வேண்டியிருந்தால், போன வருஷம் செய்த கல்யாணம் என்ன ஆயிற்று என்று கேட்கவேண்டாமா? விவாக விடுதலை ஆகிவிட்டதா, அல்லது தள்ளி வைக்கப்பட்டு விட்டதா, அல்லது ஓடிப்போய் விட்டதா, அல்லது முடிவெய்தி விட்டதா என்று நாமாவது யோசிக்க வேண்டாமா?

எதற்காக வருஷா வருஷம் கல்யாணம்? அக்கல்யாணத்துக்கு கொட்டு முழக்கு ஆடம்பரம், பணச்செலவு ஏன்? சாமி கல்யாண சமாராத சாப்பாட்டை எந்த ஜாதியார் சாப்பிடுகிறார்கள் தெரி யுமா? கண்டபடி பதார்த்தங்களை பாழாக்குவதேன்? இந்தப் படி வருஷம் எத்தனை உற்சவம்? எங்கெங்கு உற்சவம்? இவைகளால் இதுவரை அடைந்த பலன் என்ன? நம் மக்கள் படிப்பு விஷயத்தில் 100-க்கு 95 பேர்கள் தற்குறி; நமது நாடும் உலகத்திலேயே மிக்க ஏழ்மை நாடு என்கின்றோம். ஒரு மனிதனுக்கு தினம் சராசரி 2 அணா வரும்படிகூட இல்லை என்று சொல்லுகிறோம். இப்படிப்பட்ட நாம் கடவுள்களுக்கு என்று எவ்வளவு செல்வங்களை பாழாக்குகிறோம் என்று யோசிக்கின்றோமே?

ஒரு கடவுளுக்கு தினம் எத்தனை தடவை பூஜை படையல்? ஒவ்வொரு பூஜை படையலுக்கு எத்தனை படி அரிசி பருப்பு



சாமான்கள்? இவைகள் எல்லாம் யார் வயிற் றில் அறுத்து வைக்கப்படுகின்றன? மக்க ளுக்கு கல்வி இல்லை, தொழில் இல்லை, சாப்பாடு இல்லை என்று ஒருபுறம் சொல்லிக் கொண்டு, மற்றொருபுறம் இம்மாதிரி செல் வம் பாழாக்கப்படுவதென்றால், யோக்கியன் எப்படி சகித்திருக்க முடியும்? தயவு செய்து நீங்களே யோசித்துப் பாருங்கள்.

வைகுண்ட ஏகாதசிக்கும், ஆருத்திரா தரிசனத்துக்கும், தைப் பூசத்துக்கும், கார்த்திகை தீபத்துக்கும், திருப்பதிக் குடைக்கும், திருச்செந்தூர், ராமேஸ்வர ஸ்நானத்துக்கும் என்று வருஷா வருஷம் எத்தனை கோடி ரூபாய் பாழாகிறது? மக்கள் போக்குவ ரத்துச் செலவு, மெனக்கேடு செலவு, உடல் கேடு, ஒழுக்கக் கேடு ஆகிய காரியம் எல்லாம் சேர்த்துப் பார்த்தால், இக்கடவுள் களால் மக்களுக்கு நம்மையா, தீமையா என்று கேட்கிறேன். இச்செலவுகளைத் தடுத்து அச்செல்வங்களை வேறு வழிக்குப் பயன்படுத்த முயற்சி செய்தால், வரியே இல்லாமல் அரசாங் கத்தை நடத்தக் கூடிய பணம் மீதியாகாதா?

நம் நாட்டில் கடவுள்களுக்கு இருக்கும் செல்வங்களைக் கைப்பற்றி தொழிற்சாலைகள், பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தி னால், வேலையில்லாத் திண்டாட்டமும், தற்குறித் தன்மையும், அன்னிய நாட்டார் வியாபாரத்தின்பேரால் சுரண்டுதலும் இந் நாட்டில் அரை நிமிஷமாவது இருக்க முடியுமா என்று கேட்கி றேன். ஏதோ ஒரு கூட்டங்கள் சோம்பேறியாய் இருந்து வயிறு வளர்க்க வேண்டி மற்ற மக்கள் தாங்கள் பாடுபட்டுத் தேடிய செல்வத்தை பாழாக்கி இவ்வளவு முட்டாள்தனமாய் நடந்து கொள்வதா என்று கேட்கிறேன்.

மற்றும், கடவுள் பேரைச் சொல்லிக் கொண்டு, பக்தியை காரணம் காட்டிக் கொண்டு எவ்வளவு முட்டாள்தனமாய் நடந்துகொள்ளுகிறோம் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். காவடி எடுத்துக்கொண்டு கூத்தாடுவதும், மக்கள் துணி கட்டிக் கொண்டு வீதியில் கிடந்து புரளுவதும், மொட்டை அடித்துக் கொள்ளுவதும், பட்டை பட்டையாய் மண்ணையும், சாம்பலை யும் அடித்துக் கொள்ளுவதும், உடம்பில் கம்பிகளையும் கத்திகளையும் குத்திக் கொள்ளுவதும், அழுக்குத் தண்ணீரில் குளிப்பதும் ஆன காரியங்கள் எதற்கு என்று சிந்திக்கிறோமா?

மற்றும் மக்கள் சாப்பிடக் கூடிய பால், நெய், தயிர், தேன், பழச்சத்து முதலியவைகளை கல்லின் தலை யில் குடம் குடமாய்க் கொட்டி சாக்கடைக் குப் போகும்படி செய்து வேடிக்கை பார்ப் பது எதற்கு? இந்தச் சாமிகளுக்கு கோடிக்க ணக்கான ரூபாய் பெறும்படியான நகைகள் எதற்கு? பட்டு பீதாம்பரத் துணிகள் எதற்கு? லட்சம், பத்து லட்சம், கோடி பெறும்படி யான ஆறு மதில், ஏழு மதில்கள் உள்ள



பெரும் மதில்கள், கட்டடங்கள், கோபுரங்கள் எதற்கு? தங்கம், வெள்ளி வாகனங்கள் எதற்கு? இவைகள் எல்லாம் நாட்டு பொதுச் செல்வங்கள் அல்லவா? இவைகளை கல்லுகளுக்கு அழுதுவிட்டு, சோம்பேறி சூழ்ச்சிக்காரன் பார்ப்பான் வயிற்றை நிரப்பி, அவன் மக்களை அய்.சி.அய்., அய்கோர்ட் ஜட்ஜ், திவான்களாக ஆக்கிவிட்டு, இதுதான் கடவுள் தொண்டு என்றால், இந்தக் கடவுள்கள் இருக்கவேண்டுமா என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். இப்படிப்பட்ட கடவுள்களையும் கடவுள் தொண்டுகளையும் முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா? கிறிஸ்தவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா? அல்லது இந்து பகுத்தறிவுவாதிகளாவது ஒப்புக்கொள்ளுகிறார்களா? என்று கேட்கிறேன்.

இனி எப்பொழுதுதான் நமக்குப் புத்தி வருவது? இதைச் சொன்னால் பார்ப்பான் நம்மை நாஸ்திகன் என்கிறான். அவன் பேச்சையும், அவனது எரிச்சலைத் தின்று வயிறு வளர்க்கும் கூலிகள் பேச்சையும் கேட்டுக்கொண்டு முட்டாள் ஜனங்கள், மதம் போச்சு, கடவுள் போச்சு என்று கூப்பாடு போடுகிறார்கள்.

அப்படியானால், இந்தக் கடவுள்களை ஒப்புக்கொண்டு இம்மாதிரி காட்டுமிராண்டித்தனமாய்க் கூத்தாடுவதுதானா ஆஸ்திகம்? இல்லாவிட்டால் நாஸ்திகமா? அப்படியானால், அப்படிப்பட்ட நாஸ்திகத்தைப்பற்றி எங்களுக்கு சிறிதும் கவலை இல்லை. இந்த பூச்சாண்டிக்கு நாங்கள் பயப்பட மாட்டோம். ஏதோ எங்களுக்குத் தோன்றியதை - நாங்கள் சரி என்று நம்புவதை, அதாவது, நம் நாட்டுக்கு மேற்கூறிய மதமும், கடவுள்களும் கொடிய வியாதியாய் இருக்கின்றன என்றும், இவை ஒழிந்தாலொழிய நாடும் மனித சமூகமும் அறிவும், ஆற்றலும் முற்போக்கடையாது என்றும் கருதுவதை உங்களிடம் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

பொறுமையாய்க் கேட்டு, பிறகு உங்கள் இஷ்டப்படி நடவுங்கள் என்றுதான் சொல்லுகிறோமே ஒழிய, பார்ப்பனர்கள்போல், நாங்கள் சொல்வதை எல்லாம் நம்புங்கள் என்றோ, நம்பினால்தான் மோட்சம், நம்பாவிட்டால் நரகம் என்றோ சொல்லுவதில்லை.



*(12.12.1937 அன்று சேலம், நாமக்கல் வட்ட சுயமரியாதை மாநாட்டிலும், அன்று மாலை அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி "குடிஅரசு" 19.12.1937)*

# 25. கடவுளால் ஏற்பட்ட பலன்

மனித சமூகத்திலே எங்கு பார்த்தாலும் கடவுள், மத உணர்ச்சி இருந்து வருவதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், சமூக வாழ்விற்கு இந்தக் கடவுள், மதங்கள் அல்லாமல் - தேவை இல்லாமல், இயற்கையே பெரிதும் படிப்பினையாகவும், மனிதனை நடத்துவதாகவும் இருந்து வருகிறது. கால தேச வர்த்தமானத்திற்கு ஏற்றபடியும், சமூக வாழ்வின் சவுகரியங்களை மனிதன் அமைத்துக் கொள்கிறான். இக்காரியங்களுக்குக் கடவுள், மத தத்துவங்களைப்பற்றியோ, அவைகளைப்பற்றிய கற்பனைகளைப்பற்றியோ மனிதன் சிந்திப்பதில்லை; சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதுமில்லை.

ஆனால், பயமும், சந்தேகமும், பேராசையும், பழக்கவழக்கங்களும், மற்றவர்களின் படிப்பினைகளும், சுற்றுப்புறமும் மனிதனுக்கு கடவுள், மத உணர்ச்சியை உண்டாக்கிவிடுகின்றன. அவை எப்படி இருந்தபோதிலும், எங்களுக்கு அவைகளைப் பற்றி கவலை இல்லை. அந்த ஆராய்ச்சியிலும் நாங்கள் சிறிதும் காலத்தையோ, புத்தியையோ செலவழிப்பதில்லை.

ஆனால், மனித சமூகத்துக்கு தேவையான தொண்டு என்று நாங்கள் கருதிவரும் தொண்டுகளைச் செய்துவரும்போது, மனித சமூக சுதந்திர சுகவாழ்வுக்கு பிறவியிலேயே எதிரிகளாக உள்ள புரோகிதக் கூட்டத்தார் - மதத்தின் பேரால், கடவுள் பேரால் தங்கள் வாழ்க்கையை நிச்சயித்துக் கொண்ட சோம்பேறி மக்கள் - எங்கள் தொண்டிற்கு, கொள்கைகளுக்கு சமாதானம் சொல்லி எதிர்த்து நிற்க சக்தியற்ற கோழைகள், கடவுளையும், மதத்தையும்பற்றிக் குழப்பமாய்ப் பேசி அவைகளைக் குறுக்கே கொண்டு வந்து போட்டுவிடுகிறார்கள்.

கடவுளைப்பற்றி விளக்க இதுவரை எத்தனையோ ஆத்ம ஞானிகள், சித்தர்கள், முத்தர்கள் என்போரும், நாயன்மார்கள், ஆழ்வார்கள், அவதாரங்கள், கடவுள்களால் அனுப்பப்பட்டவர்கள் என்பவர்கள் எவ்வளவோ அரும்பாடு பட்டிருக்கின்றனர். ஆனால் முடிந்ததா? முடிவு இதுதான் எனச் சொல்லப்பட்டதா? அல்லது இவர்களைப் பின்பற்றியவர்களுக்கு ஆவது புரிந்ததா? புரிய வைக்க முடிந்ததா?



''கடவுள் ஆதி இல்லாதது, அந்தமில்லாதது, உருவமில்லாதது, அது இல்லாதது, இது இல்லாதது, புரியப்பட்ட அறியப்பட்ட சங்கதி எதுவும் இல்லாதது'' என அடுக்கிக் கொண்டே போய், அப்படிப்பட்ட ஒன்று இருப்பதாக அல்லது இருக்கும் என்பதாக அல்லது இருந்துதானே தீரவேண்டும் என்பதாக அல்லது இருக்கிறதாக எண்ணிக் கொண்டுதான் ஆகவேண்டும் என்பதாக சொல்லிவிடுகிறார்கள்.

இன்று இந்நாட்டினரால் மனித ஆத்மாவுக்கு மீறிய ஒரு ஆத்மா உடையவர் என்று கருதி மகாத்மா என்று சொல்லப்படுபவராகிய தோழர் காந்தியார் ''சத்தியம்தான் கடவுள்'' என்கிறார்.

சைவசமயிகள் (அன்பே சிவம்) ''அன்புதான் கடவுள்'' என்கின்றனர். ராமலிங்க ஸ்வாமிகள் என்று சொல்லப்பட்ட பெரியார் ''அறிவுதான் கடவுள்'' (அறிவான தெய்வமே) எனக் கூறினதுடன் அன்றி, ஜாதி, சமயம், மோட்சம், நரகம், மோட்ச நரகங்களைக் கொடுக்கும்.

கடவுள்கள் ஆகியவைகள் எல்லாம் வெறும் பித்தலாட்டங்கள் என பச்சையாகச் சொல்லிவிட்டார்.

தோழர்களே! உங்களை - ஆஸ்திகர்களை நான் கேட்கிறேன், இவர்கள் எல்லாம் நாஸ்திகர்களா?

ஒரு மனிதன், கடவுள் உண்டா இல்லையா என்ற விஷயத்திலே கவலை செலுத்தாது, அதை அறிவதற்கு மெனக்கெட்டு, குழப்பமடையாது இருப்பதற்கு ஆகவே மனித சமூக வாழ்வுக்கு நன்மையும், அவசியமுமான காரியங்கள், குணங்கள் எவை எவையோ அவைகளைத்தான் கடவுள் என பெரியார்கள் சொன்னார்கள். இதைப் பார்த்தாவது மனிதனுக்கு அறிவு வந்து உண்மையுணர்ந்து பேசாமல் இருக்கவேண்டாமா என்கிறேன்.

ஒரு மனிதன் அறிவுடையவனாகி, உண்மையுடையவனாகி, மக்களிடம் அன்பு காட்டி, மனம், வாக்கு, காயங்களால் அவைகளைக் கொண்டு தொண்டு செய்து, அவைகளின்படி நடப்பானேயானால், அவன் கடவுள் துரோகியாகக் கருதப்படுவானா என இங்கு ஆஸ்திகர்கள் யார் இருப்பினும் சொல்லட்டுமே என்றுதான் கேட்கிறேன். அன்பு, அறிவு, உண்மை இவை தவிர வேறு கடவுள் ஒன்று இருந்தாலும்கூட, அக்கடவுள் தன்னை இல்லை



என்று சொன்னதற்கும், தன்னை விழுந்து கும்பிடாததற்கும் அப்படிப்பட்டவனை தண்டிப்பாரா என்று கேட்கிறேன்.

உண்மையில் யாரும் அறிய முடியாத ஒரு கடவுள் இருந்தால், அவரை அறிந்து, அவருக்கே பக்தி செய்து வணங்கி வந்தவனை விட, கடவுளைப்பற்றி கவலைப்படாமல், கடவுளுக்குப் பக்தி செய்யாமல், அன்பு, அறிவு உண்மை ஆகியவைகளுடன் நடந்து வந்தவனுக்கேதான் கருணை காட்டுவார் என்று உறுதி கூறுவேன். இந்த உணர்ச்சியினாலேயேதான் நான் கடவுளைப் பற்றிய விவாதத்தில் இறங்கிக் காலங்கழிக்காமல், நான் மனித சமுதாயத்திற்கு என்னாலான தொண்டை - நான் அறிவு, உண்மை, அன்பு ஆகியவைகளைக் கொண்டு செய்துவருகி றேன்.

நான் கூறின மேல்கண்ட தத்தவங்கள், மதத் தலைவர்கள், அதிலே நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் ஆகியவர்கள் வாக்கு ஆகும்.

மற்றும், சித்தர்களும், வேதாந்திகளும் உலகமும் தோற்றமும், எண்ணங்களும் மனிதனுட்பட எல்லாம் மாயை என்று சொல்லி விட்டனர். ஆகவே, ஒரு மனிதன் தன்னை நிஜ உரு என்று கருதி, கடவுள் உண்டு என்று கண்டுபிடித்தாலும், முடிவு கொண்டாலும் அதுவும் மாயை தானே ஒழிய உண்மையாய் இருக்க இடமில்லையே!

மகா அறிவாளியான சங்கராச்சாரியார் அஹம்பிரம்மம், நானே கடவுள் என்று கூறினார். அதற்காக சைவர்கள் அவரை ''தானே கடவுளெனும் பாதகத்தவர்'' என்று தண்டிப்பதும் உண்டு.

இதைப்போன்றே, சுமார் 10 வருஷங்களுக்கு முன்பு சைவர்க ளிடம் விவாதம் வந்த காலையில், சைவர்களுக்காக வக்காலத்து வாங்கிய சென்னை திரு.வி. கலியாணசுந்தர முதலியார் அவர் கள் கடைசியில் ''இயற்கையே கடவுள்'' எனக் கூறி விவா தத்தை முடித்துக்கொண்டார். அது கண்ட சைவர்கள் அவர்களைச் சீறவே, பிறகு அவர், ''அழகே கடவுள்; அழகு என்றால் முருகு; தமிழர் தெய்வம் முருகன்; ஆதலால் கடவுள் என்றால் அழகுதான், வேறு கிடை யாது'' என்று சொல்லிவிட்டார். அதற்கேற் றார்போல் அவர் அடிக்கடி ''என் இயற்கை அன்னை; என் இயற்கை கடவுள்'' என்று பிரசங்கத்திலும் சொல்லுவார்.



இவை இப்படியிருக்க, சிலர் உலக நடத்தையைப் பார்த்து அதற்கு விவரம் புரியாமல், ''இதற்கு ஏதோ ஒரு சக்தி இருக்க வேண்டாமா'' என்று கேட்கின்றனர். ஏதோ ஒரு சக்தி இருக்கட்டும். இருக்கவேண்டியவற்றையெல்லாம் நாம் கண்டுவிட்டோமா? இல்லாதவற்றையெல்லாம் உணர்ந்து முடிவு செய்து விட்டோமா? அதைப்பற்றிய விவாதம் ஏன் நமக்கு? என்றுதான் நான் கேட்கிறேன்.

மேலும், ''மனித சமுதாயம் ஒற்றுமையாக, ஒழுக்கத்துடன், சமத்துவத்துடன் வாழ, சாந்தியாய் இருக்க ஏதாவது ஒரு விதமான கடவுள் உணர்ச்சி மனதனுக்கு வேண்டாமா?'' என்று கேட்கிறார்கள். வேண்டுமென்றே வைத்துக் கொள்வதானால், அப்படிப்பட்ட உணர்ச்சியானது, மக்கள் சமூகத்தில் ஒழுக்கம், ஒற்றுமை, சமத்துவம், சாந்தி அளிக்கிறதா என்பதை முதலில் கவனிக்கவேண்டாமா? ஏனெனில், எந்த உணர்ச்சி காரணமாக மனிதனின் வாழ்க்கையில் ஒழுக்கம் ஏற்படுமெனச் சொல்லப்படுகிறதோ, வாழ்க்கையில் நீதி, அன்பு நிலவ மேற்படி உணர்ச்சி தூண்டுகோலாய் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறதோ, அந்தக் கடவுள் உணர்ச்சிக்கும், அந்த உணர்ச்சிக் கொண்ட மனிதனுடைய நடத்தைக்கும் ஒருவித சம்பந்தமுமின்றிச் செய்து விட்டனர்.

மற்றும், நமது கடவுளைக் கண்ட பெரியார்கள் என்பவர்கள், உலகத்திலே கேடு, கூடா ஒழுக்கம், வஞ்சனை, பொய் முதலியன செய்பவர்களை, இந்த மாதிரியான ஒரு கடவுள் உணர்ச்சியை தங்களின் மேல்கண்ட காரியத்துக்கு உபயோகப் படுத்திக் கொள்ளும்படி செய்துவிட்டார்கள். உதாரணமாக ஆயிரத்தில், பத்தாயிரத்தில் ஒருவரையாவது கடவுள் உணர்ச்சியின் அவசியத்திற்கேற்றபடி அவர்களது வாழ்க்கையிலே நீதி, நேர்மை, ஒற்றுமை, அன்பு நிலவும்படி நடப்பதை நாம் பார்க்கிறோமா? பெரும்பான்மையோருக்கு அவ்வுணர்ச்சி அப்படி பயன்பட்டிருந்தால், உலகிலே துன்பத்துக்கு, வஞ்சனைக்கு இடமேது? எவ்வளவு அக்ரமம் செய்தபோதிலும் பிரார்த்தனை, கடவுள் பெயர் உச்சரிப்பு, புண்ய ஸ்தல யாத்திரை, புண்ய ஸ்தல ஸ்பரிசம் செய்த மாத்திரத்தில் மன்னிப்பும் பாப விமோசனமும் கிடைக்கும் - ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு, அதனால் மக்களுக்கு



அக்ரமம் செய்யவே தைரியம் தருகிறதேயல்லாமல், யோக்கிய னாக, அன்பனாக நடக்க கட்டாயப்படுத்துகிறதா?

இன்று சிறையிலுள்ள 2 லட்சம் கைதிகளில் சம்சயவாதி களோ, நாஸ்திகர்களோ விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே இருப்பார்கள். மற்றையோர் யாவரும் கடவுள் உணர்ச்சியிலே ஒருவித சந்தேகமும் கொள்ளாத ஆஸ்திகர்களேயாகும். ஆகவே, அவர்கள் சொல்லும் கடவுள் உணர்ச்சியை மனிதனு டைய நடத்தையுடன் ஒப்பிட்டுப் பார்த்து, வரவு - செலவு கணக்கு போட்டு லாப நஷ்டப்படி இறக்கிப் பார்க்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

''இந்து'' மத ஆள்களின் கடவுள் உணர்ச்சியைச் சற்று கவனிப்போம். ''இந்து'' மதக்காரர்கள் இந்தக் கடவுள் உணர்ச் சியை எப்படி வெளிப்படுத்துகிறார்கள்! மத உணர்ச்சியை எவ்விதம் காட்டிக் கொள்ளுகிறார்கள்! என்று பாருங்கள். மக்களைக் காப்பாற்ற இருக்கும் கடவுளை இவர்கள் காப்பாற்ற முற்பட்டு அதற்காக ஒவ்வொரு கடவுளுக்கு இரண்டு மூன்று லட்சம் ரூபாய்கள் செலவில் கோயில்களும், ஒரு லட்சம் செலவில் கோபுரமும், கலசமும் வைத்து, அரை லட்சத்தில் கும்பாபிஷேகங்கள் செய்து, பூசைக்கும் திருவிழாக்களுக்குமா கப் பாடுபடும் மக்களின் கணக்கற்ற பணத்தைப் பாழாக்கிவிடுகி றார்கள்.

மனிதனில் இலட்சக்கணக்கான பேர் வீடின்றி வாடி வதை படுவது இவர்களுக்குத் தெரியாதா? இந்த மனிதர்களைக் கவனியாது, இவர்களுக்கு வீடு வாசல் வேண்டாமா என்பதை கவனியாது, கடவுள் ஆலயங்களின் திருப்பணி பேரால் எவ்வ ளவோ பணத்தை விரயம் செய்கிறார்கள். பாலின்றி வாடும் பச்சைக் குழந்தைகள் லட்சக்கணக்கில் இருக்க, நெய் என்பதைக் கண்ணில் கண்டறியாத குடும்பங்கள் எவ்வளவோ லட்சம் இருக்க, பழனி, திருவண்ணாமலை, ஸ்ரீரங் கம் முதலிய இடங்களில் ஆயிரக்கணக்கான குடம் பாலையும் கொட்டி சாக்கடை போய்ச் சேரும்படி பாழாக்குவதும், ஆயிரக்கணக் கான டின் நெய்யை நெருப்பை எரித்தும், நெருப்பில் கொட்டியும் வீணாக்குவதும் சரியா? கடவுள் உணர்ச்சியை இப்படித்தான் காட்டுவதா? பாலும், நெய்யும் மக்களுக்கு உண்ண ஏற்பட்டதா? கல்லிலும்,



நெருப்பிலும் கொட்ட ஏற்பட்டதா? ஏ, ஆஸ்திர்களே! உங்களைத்தான் கேட்கின்றேன்.

இந்த முட்டாள்தனத்தையும், கொடுமையையும் ஒழிக்க இதுவரை என்ன செய்தீர்கள்? பச்சை வெண்ணெயை டின் டின்னாகக் கொண்டு போய் களிமண் மாதிரி வாரி வாரி நெருப்பில் எறிகிறதைப் பார்த்து ஆனந்தப்படுகிறாயே! கடவுளும் ஆனந்தப்படும் என்று எண்ணுகிறாயே!! ஏ, ஆஸ்திகனே! நீ உன்னை மனிதன் என்று எண்ணிக் கொண்டுதானே இருக்கிறாய்?

ஒழுக்கத்துக்காக - மனிதனின் நல் வாழ்க்கைக்கு ஆக கற்பிக்கப்பட்ட கடவுளை தாசி வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகிறாயே, மற்றொருவன் பெண்ணை தூக்கிக் கொண்டு வருகிற உற்சவம் நடத்துகிறாயே, குறத்தியையும், துலுக்கச்சியையும் கூட்டி வந்ததாக அதற்கு ஒரு கோயிலும் கட்டி பொம்மை வைத்து விளையாடுகிறாயே, இதுவா கடவுள் ஒழுக்கம்?

அஹிம்சை, அன்பு, கருணை ஆகிய குணங்களைக் கொண்டது கடவுள் என்று சொல்லிவிட்டு, கழுவேற்றுவதும், கழுத்தை வெட்டுவதும், வயிற்றை கிழிப்பதும் இப்படிப்பட்ட கடவுள்கள் கைகளில் கத்தி, ஈட்டி, சூலாயுதம், வில்லு, வேல், தண்டாயுதம் கொடுத்திருப்பதும் யோக்கியமா? இவற்றிற்கு வேலை கொடுப்பதும் உற்சவம் செய்வதுமான காரியத்தால் மனிதனுக்கு ஒழுக்கம், அஹிம்சை, அன்பு ஏற்படுமா? ஏ, ஆஸ்திகர்களே, சிந்தித்துப் பாருங்கள்.

கடவுளுக்கு என்று ஒரு காசுதான் ஏன் செலவழிக்கவேண்டும்? செங்கல்பட்டு மாகாண சுயமரியாதை மாநாட்டில், கடவுளுக்கு ஒரு காசுகூட செலவழிக்கப்படாது என்று சகல ஹிந்து மத ஆஸ்திகர்களும் வந்திருந்து தீர்மானம் செய்தார்கள். அது சிறிதாவது கவனிக்கப்படுகிறதா? கடவுளுக்கு ஆக செலவழிக்கப்படும் பணம், காசு, செலவுகள் யார் வயிற்றை நிரப்புகிறது? பாடுபடாது வயிறு வளர்க்கும் பார்ப்பனர்களுக்கும், ரயில்காரனுக்கும்தான் பெரிதும் இப்பணம் போய்ச் சேருகிறது. இப்படிச் சேரும் பணம் வருஷம் பல கோடி என்பது உங்களுக்குத் தெரியாதா?



இருக்கும் ஸ்தலங்கள் போதாதென்று, இருக்கும் புண்ணிய ஸ்தலங்களும், தீர்த்தங்களும் போதாதென்றும் ஒரு புதிய ஸ்தலத்தை புண்ணிய ஸ்நான கரையை பார்ப்பனரும், ரயில் வேக்காரரும் ஒப்பந்தம் செய்துகொண்டு பிரமாதமாக விளம்ப ரப்படுத்துகிறார்கள். அதாவது, கோடிக்கரை என்ற இடத்து உப்புத்தண்ணரில் ஒரு முழுக்குப் போட்டுவிட்டால் எப்படிப் பட்ட பாபமும், முன்னோர் செய்த பாபமும், இனிமேல் செய்யும் பாபமும் போய்விடுமெனவும், அவ்வளவு மகிமை உடையதெனவும் ''மித்திரன்'' விளம்பரப்படுத்துகிறது. இதற்கு மஹோதய புண்ணியகால ஸ்நானம் எனப் பெயராம். ரயில் வேக்காரரும், பார்ப்பனரும் சேர்ந்து செய்யும் இச்சூழ்ச்சியில் எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்கள் சிக்கி அங்கு சென்று தங்கள் பணம், மானம், சுகாதாரம் ஆகியவற்றைப் பாழாக்கிக் கொண்டு, திரும்பி வரும்போது கூடவே காலராவையும் அழைத் துக் கொண்டுதான் வீடு திரும்பப் போகிறார்கள். இது என்ன நியாயம் என்று கேட்கிறேன். ''கோடிக்கரை'' சென்று குளிக்க வேண்டிய அவ்வளவு பாபம் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கிறேன்.

காலை முதல் மாலைவரை பாடுபட்டு உழைத்து, பணத்தை முதலாளிக்கும், பார்ப்பானுக்கும் கொடுத்துவிட்டு, கையைத் தலையின்கீழ் வைத்துக்கொண்டு படுக்கிற நீங்கள், கோடிக்கரை செல்லவேண்டிய அவ்வளவு பாபம் நீங்கள் எப்படிச் செய்தீர் கள்? தொழிலாளியின் வாழ்வே இதனால் பாழாகிறது. முதலாளி யுடன் போட்டியிட்டு, தன் நிலைமையை உயர்த்திக் கொள்ள வேண்டிய சக்தியை இழந்து, இதனால் பணம், நேரம், புத்தி ஆகியவை இழந்து அவன் தவிக்கிறான். இதற்குத்தானே இந்தக் கடவுள் திருவிழாவும், புண்ணிய ஸ்நானங்களும் உதவுகின்றன.

இந்துமத ஊழல்களை திருத்தப்பாடு செய்த புது மதக் கொள்கைகளே இன்று கிறிஸ்து மார்க்கம், முஸ்லிம் மார்க்கம் முதலிய பல புதிய மார்க்கங்களாக தோன்ற லாயின. இந்துமத கொடுமை தாங்கமாட்டா மலேதான் பல கோடிப்பேர்கள் முஸ்லிம்க ளாகவும், கிருஸ்துவர்களாகவும் ஆனார்கள். இன்றும் இந்துக்கள்தான் பிற மதம் புகுகிறார் கள். என்றாலும், முஸ்லிம் மார்க்கம் தவிர, வேறு எந்த மார்க்கத்துக்கு மனிதன் போனா லும் அவன் பின்னாலேயே ஜாதிச் சனியன்



தொடர்ந்துகொண்டே போகிறது. உதாரணமாக, ஒருவர் கிறிஸ்துவனான பிறகும், பார்ப்பனக் கிறிஸ்துவன், பள்ளக் கிறிஸ்துவன், பறை கிறிஸ்துவன், நாயுடு கிறிஸ்துவன், ஆசாரி கிறிஸ்துவன், நாடார் கிறிஸ்துவன் என்கின்ற பாகுபாடும், சடங்கு ஆச்சார அனுஷ்டானமும் எந்தக் கிறிஸ்துவனையும் விட்டு தொலைவதில்லை. பிரார்த்தனை ஸ்தலங்களிலும் இந்துக் கோயில்கள்போல் பேதங்கள் பல இருந்து வருகின்றன.

ஆனால், இந்த இழிவு ஆபாசம் முஸ்லிம் மார்க்கத்திலே காண முடிவதில்லை. ஒரு தீண்டாதான், முஸ்லிம் மதத்தை தழுவிவிட்டால், உடனே தீண்டாமை பறந்துபோகிறது. அவன், அந்த சமூகத்தில் மனித சுதந்திரத்தை, சமத்துவத்தைப் பெறுகிறான். அங்கு பற முஸ்லிம் என்று யாரோனும் சொல்லி, தங்கள் பற்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. ஏன்? அவர்கள் தங்கள் மதத்தினிடை சமத்துவம் நிலவ வேண்டுமென்ற உணர்ச்சியை அவ்வளவு அதிகமாகக் கொண்டுள்ளார்கள். அதனாலேயே தீண்டாமையை விலக்கிக் கொள்ளவேண்டுமென்கிறவர்களை முஸ்லிம் மார்க்கத்தை தஞ்சமடையும்படி இந்த 10 வருஷமாய் சொல்லி வருகிறேன்.

இந்த மாபெரும் சனியான ஜாதி மத பேத தொல்லைகள் மனித சமூகத்தைவிட்டு தொலையவேண்டுமானால் மனிதனுக்கு விஞ்ஞான ஞானமும், நாட்டில் விஞ்ஞான வளர்ச்சியும் தேவை. தொழில் காரணமாகத்தான், தொழில்கள் ஆதாரமாகத்தான் ஜாதிகளோ ஜாதிக் கொடுமைகளோ ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தோட்டி என ஒரு ஜாதியும், அவனுக்கு இழிவும் தீண்டாமையும் எப்படி ஏற்பட்டது? மலம் எடுக்கும் தொழிலை, நாற்றமுள்ள தொழிலை அவன் ஏற்றுக்கொண்டதால்தான். இப்படியே கஷ்டமானதும், இழிவானதுமான வேலை செய்பவர்கள் எல்லாம் கீழ் ஜாதியாகவும், சுகமாகவும், மேன்மையாகவும் உள்ள வேலை செய்கிறவர்கள் மேல் ஜாதியாகவும், ஒரு வேலையும் செய்யாமல் ஊரார் உழைப்பில் வயிறு வளர்த்துக்கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டு வஞ்சித்துத் திரிகிறவர்கள் மகாமகா மேல்ஜாதியாகவும் ஏற்பட்டதற்குக் காரணம் விஞ்ஞான ஞானமில்லாமையே. மேனாட்டிலே இம்மாதிரியான தொல்லை அநேகமாக தீர்ந்துவிட்டது.



விஞ்ஞான வளர்ச்சி காரணமாக, சமத்துவம் அந்த சமூகத்திலே உண்டாக மார்க்கம் ஏற்பட்டுவிட்டது. நாம் என்ன கூறினாலும், இனிமேல் நமது பின் சந்ததியார்கள், பழைய தொழில்முறை, ஜாதிமுறை திட்டத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது உறுதி. உலகம் இன்று புதிய பாடத்தைக் கற்பித்துக் கொண்டு வருகிறது. விஞ்ஞான வளர்ச்சி மூலமாகவே விமோசனம் ஏற்படும் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டிருக்கிறது. பழமையான சகல முறைகளும் மாறி சகல துறைகளிலும் புதுமை தோன்றியி ருக்கிறது. வெகு சீக்கிரத்தில் புதிய உலகம் காணப் போகிறோம்.

மக்கள் பிறப்பதுகூட இனி அருமையாகத்தான் போய்விடும். அதுபோலவே, சாவும் இனி குறைந்துவிடும். மனிதன் வெகு வெகு சுலபமாக நூறு ஆண்டு வாழ முடியும். யாரும் சராசரி ஒன்று இரண்டு பிள்ளைகளுக்குமேல் பெற மாட்டார்கள். ஆண், பெண் புணர்ச்சிக்கும், பிள்ளைப் பேற்றுக்கும் சம்பந்த மில்லாமலே போய்விடும். வேலை செய்கிற குதிரைகள் வேறு, குட்டி போடுகிற - போடச் செய்கிற குதிரை வேறு என்கிற மாதிரி, மனித சமூகத்தில் இருக்கும் பிள்ளை பெறும் தொல்லை, வளர்க்கும் தொல்லை, அதற்குச் சொத்து சுகம் தேடும் தொல்லை ஒழிந்துபோகும் என்கின்ற நம்பிக்கை எனக்கு உண்டு. மனிதன் அறிவு பெற்றதற்குக் காரணம் சாமி விளை யாட்டும், பிள்ளைகள் உண்டாக்கும் விவசாயப் பண்ணையும் தானா? மனித அறிவின் எல்லையைக் காண வேண்டாமா? செல்வம் - தரித்திரம், சுகம் - கஷ்டம், கவலை, தொல்லை இதுதானா மனிதனின் கதி மோட்சம்?

பெண்களை ஆண்கள் நடத்துகிற மாதிரியும், படுத்துகிற பாடும்போல் உலகத்தில் வேறு எந்த ஜீவனாவது செய்கிறதா? பெண்களிடம் சக்தி சொருபத்தையும், தெய்வத்தன்மையை யும், காதல் களஞ்சியத்தையும், தாய்மையையும், அன்பபை யும் கண்ட ''பெரியார்கள்'' என்னும் மிருக சிகாமணிகள் பெண்களைப்பற்றி எப்படி எழுதி வைத்தி ருக்கிறார்கள்; எப்படி நடத்தும்படி எழுதி வைத்திருக்கிறார்கள் என்று பார்த்தால், உல கில் சுயமரியாதை உள்ள பெண்கள் குழந் தைகள் பெறவே மாட்டார்கள். அப்படி பெற நேர்ந்தாலும், பிறந்தது ஆண் குழந்தை என்று கண்டால் கழுத்தை திருகிவிடுவார் கள். இது விஷயத்தில் மனிதன் திருத்தப்பட



முடியாவிட்டால் எந்த மனிதனும் மனிதத்தன்மைக்கு அருகதை யற்றவன் என்றே சொல்லுவேன். பெண்ணுக்குச் சொத்து கூடாதாம், காதல் சுதந்திரம் கூடாதாம். அப்படியானால், மனி தன் தன் தேவைக்கு பயன்படுத்திக்கொள்ளும் ரப்பர் பொம் மையா, அடிமை உருவா அது என்று கேட்கிறேன்.

பெண்களில் விதவைகள் என்று ஒரு நிலைமை ஏன் இருக்க வேண்டும்? கல்யாணம் செய்துகொண்டதால்தானே இந்தக் கொடுமை? கல்யாணம் செய்துகொள்ளாவிட்டால் பெண் எப் படி விதவையாக முடியும்? கல்யாணம் செய்துகொள்ளாமல் இருப்பதில் பெண்களுக்கு இரண்டுவித லாபம் இருக்கிறது. குழந்தை பிறக்காது என்பதுடன், விதவையும் ஆக முடியாது; அடிமை நிலையும், சொத்து வைத்திருக்க உரிமையற்ற நிலை யும் இருக்க முடியாது. உலகில் உள்ள சகல கொடுமைகளிலும் விதவைக் கொடுமையே அதிகமானது.

மற்றும், விபச்சாரம் பெருகுவதற்கு விதவைத் தன்மையே காரணம். ஒவ்வொரு பெற்றோர்களும் பெரிதும் தங்கள் குழந்தை, சகோதரி விதவைகளை "இலை மறைவு காய்மறைவாய்" கலவி உணர்ச்சியை தீர்த்துக் கொள்ள சம்மதிக்கிறார்களே ஒழிய, ஒரு புருஷனுடன் சுதந்திரத்துடன் வாழ இடம் கொடுப்பதில்லை. இதுதானா கடவுள், மதத்தன்மை ஏற்பட்ட பலன் என்று கேட்கின்றேன்.

***(23.1.1938 அன்று ஆயக்கவுண்டன் பாளையத்தில் நடைபெற்ற மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் கடவுள் பற்றிய பகுதி - "குடிஅரசு" 30.1.1938)***

# 26. ஆரியர் கடவுள்கள்

## மாரியின் தன்மை



ஆரியர் கடவுள்களுக்கு விபசாரித்தனத் தைக் கற்பிக்காவிட்டால் அவைகளுக்குப் பெருமை இல்லை என்று ஆரியர்கள் கருதி வந்திருக்கிறார்கள் போலும். ஆண் கடவுள்க ளுக்கு விபச்சாரித்தனம் கற்பித்துக் கொண்டி ருப்பதில் நாம் ஆச்சரியப்படவில்லை. ஏனெ னில், தேவ தாசிகளுக்கு விபச்சாரித்தனம் எப்படி குற்றமற்றதும் குறை கூறப்படாதது

மாய் இருக்கிறதோ, அதுபோல் ஆண்களுக்கும் விபச்சாரித்தனம் குற்றமற்றதும் குறைகூறக் கூடாததுமாய் இருக்கின்றது. அது போலவே, ஆண் கடவுள்களின் விபச்சாரித்தனம் எப்படி போற்றி மகிழக் கூடியத்தாகவும், அதன் பேரால் உற்சவம், திருநாள் கொண்டாடும்படியான பெருமை அளிக்கத்தக்கதாக வும் இருக்கிறதோ, அதுபோல் ஆண்களின் விபச்சாரித்தனமும் ஆண்களுக்கு ஒரு பெருமையாகவே இருக்கிறது. அப்படி இல்லாவிட்டால், பல ஆண்கள் தங்கள் நடத்தையால் தங்களது மனைவிமார் தப்பாக நடக்க நேருமே, சில இடங்களில் தப்பாக நடந்து அடையாளங்கள் கூடத் தெரிந்து உலகம் இகழுகின்றதே என்று தெரிந்தும் அதைப்பற்றிக் கவலை இல்லாமல், பெயர் பெற்ற சில விபச்சாரிகளை தாங்கள் வைத்துக் கொண்டிருப்பதா கப் பிறர் கருதும்படி நடந்துகொள்ளுவார்களா?

சில கிராமாந்தரங்களிலே "பண்ணையாருக்கு பிறந்தது பள் ளுப்பாடிப் பிழைக்குது; பண்டாரத்துக்குப் பிறந்தது (அதாவது தவசிப்பிள்ளை அல்லது சமையல்காரருக்குப் பிறந்தது) பட்டா மணியம் செய்யிது" என்று ஒரு பழமொழி உண்டு.

அதாவது, எஜமானனின் சொந்த மனைவி, சமையல்காரன் சம்மந்தத்தால் பெற்ற பிள்ளை எஜமானனது சொத்துக்கு உரிமையாகிவிட்டது என்றும், எஜமானனின் தாசியினிடம் எஜமானனுக்கே பிறந்த பிள்ளை கீழான தொழில் செய்து இழிவான நிலையில் இருக்கிறது என்றும் அருத்தமாகும். இதிலி ருந்து, ஆண்கள் விபச்சாரித்தனத்தால் இழிவடைவதில்லை என்பது தெரிகிறது. இது எப்படியோ போகட்டும். எடுத்துக் கொண்ட விஷயத்திற்குப் போவோம். ஆனால், ஆரியர்கள், பெண் தெய்வங்களுக்கும் விபச்சாரித்தனக் குற்றத்தைச் சுமத்து வதற்குப் பின்வாங்குவதில்லை. இது மிகவும் இழித்துக் கூறத் தக்கதாகும்.

துரவுபதை, சீதை, அகலிகை, தாரை முதலி யவர்கள்மீது சுமத்தப்பட்ட விபச்சாரக் குற் றங்களை ஆரியர்கள் குற்றமாகப் பாவிக்க வில்லை என்பதோடு, இப்பெண்களைப் பதிவிரதைகளுடனும் சேர்த்துவிட்டார்கள் என்றாலும், பாமர மக்கள் கடவுள்களான மாரியம்மன் முதலிய கடவுள்களுக்கும், விபச்சாரித்தனத்தைப் புகுத்தியது மிகவும் வெறுக்கத்தக்கதாகும்.



நம் கிராம தேவதையான மாரியம்மன், ஜமதக்கினி என்னும் ஒரு முனிவனுடைய மனைவியாய் ரேணுகை என்னும் பெயருடன் இருந்தவள். இவள், சித்திரசேனன் என்பவரின் நிழலைக் கண்டு மோகித்து மனம் கெட்டு கற்புக்குலைந்தாள். இது தெரிந்த கணவன் தன் மகனை அழைத்து இவளைக் கொலை புரியும்படி செய்தான். பிறகு, மகன் துக்கப்பட்டதின் பேரில் அவளை எழுப்ப மந்திர நீர் தெளித்தான். மகன், தலையை அடையாளம் கண்டுபிடித்தானே ஒழிய, உடலை அடையாளம் கண்டுபிடிக்கவில்லை. ஆதலால் அவள் தலையை வேறு ஏதோ ஒரு உடலில் ஒட்டவைத்து அவளை உயிர்ப்பித்தான். அவள் எழுந்து கணவனை மன்னிக்கும்படி வேண்டினாள்.

கணவன் மன்னித்து, நீ ஊருக்கு வெளியே கிராமங்களுக்குப் போய் வாழ்ந்து கொண்டு இரு என்று சொன்னான். அந்தப்படியே மாரி கிராமங்களுக்குப் போய் கிராம தேவதையாக ஆகிவிட்டாள். ஆனால், கிராமத்திலுள்ளவர்கள், இவளுடைய தலை மாத்திரம் இவளுக்குச் சொந்தமாகவும், உடல் வேறு ஒருவருடையதாகவும் இருந்ததால், இவளுடைய உடலை தள்ளிவிட்டு தலையை மாத்திரம் வைத்து வணங்குகிறார்கள். (அதனாலதான் சென்னை முதலிய இடங்களிலும் மாரி கோயில்களில் இன்றும் தலை உருவம் மாத்திரமே வைத்து வணங்கப்படுகிறது. கிராம மக்களும் பலர் தலை உருவம் மாத்திரம் வாங்கி வைக்கிறார்கள்.)

இந்த அம்மையை வணங்குவோர் வேப்பிலையும், மாவும், இளநீரும் பயன்படுத்துவதின் காரணம் என்னவென்றால், இந்த அம்மை கொல்லப்பட்டபின் சுடுகாட்டில் வேகும்போது உயிர் பெற்று எழுந்ததும், நேராக வீட்டுக்கு வர முடியாமல் நிர்வாணத்துடன் வேப்பிலைகளால் தன் மானத்தை மறைத்து கொண்டு பக்கத்தில் இருந்த பறச்சேரிக்குள் போய்ப் புகுந்தாள். அங்குள்ள பற ஜனங்கள், இந்த அம்மை பார்ப்பனப் பெண் ஆதலால் சாப்பாடு போட்டால், தங்களுக்குப் பாபம் வரும் என்று அஞ்சி, அரிசி மாவையும், பழத்தையும், இளநீரையும் தந்து உதவினார்கள். அதனால், அவைகளே அந்த அம்மைக்கு அதாவது வேப்பந்தழையும், மாவும், உடையும் ஆகாரமுமாக ஆகிவிட்டன.



அந்த அம்மைக்கு தண்ணீர் ஏன் குடம் குடமாய் ஊற்றுகிறார்கள் என்றால், அந்தம்மையை சுடுகாட்டில் வைத்துக் கொளுத்தும்போது தண்ணீர் தெளித்து எழுப்பியதால் உடலில் கொப்புளங்களோடு போய் சேரியில் புகுந்ததால், உடல் குளிருவதற்கு ஆக தண்ணீர் ஊற்றப்பட்டதாம். இந்தப்படியாக மாரியம்மன் கதை இருந்துவருகிறது.

மற்ற விஷயம் எப்படியோ போனாலும், இந்தம்மை கற்பழிந்தாள்; அதனால் சாபம் பெற்று மாரியம்மை ஆனாள் என்றால், கற்பு கெடாத பெண் தெய்வமே நமக்கு இல்லை என்றல்லவா ஆகிறது. இதிலிருந்து, ஆரியர்களுடைய கற்புக்கு அர்த்தம் என்ன என்பது விளங்குகிறது.

பிசாசைப்பற்றி ஆரியர்களும், இஸ்லாமியர்களில் பலரும் நம்புகிறார்கள். இது மிகவும் மதிஈனமான காரியம். கடவுளை எந்த ரூபத்தில் எந்தக் குணத்தில் மனிதன் நம்பினாலும், அது எவ்வளவு முட்டாள்தனமானாலும், ''மனிதன் ஒழுக்கமாக நடப்பதற்கு அந்த நம்பிக்கை ஒரு சாதனம்'' என்றாவது சொல்லுகிறார்கள். ஆனால், பிசாசை நம்புவது எதற்கு அனுகூலம் என்று கேட்கிறேன்.

பிசாசை நம்புவதிலும், அதிலுள்ள ஆபசம் என்னவென்றால், ஒருவன் தன் பெண்ஜாதிக்குப் பிசாசு பிடித்து இருக்கிறது என்று நம்புகிறான் என்றால், அதன் அர்த்தமென்ன? ஒரு பிசாசு தன் மனைவியை கலவி செய்துகொண்டு வருகிறது என்றுதானே கருதி அப்படிச் சொல்கிறான். ஒரு பெண்ணை ''1 பிசாசு முதல் 15, 20 பிசாசுகள்'' பிடித்து இருக்கின்றன என்றுகூட புருஷன்மார்கள் சொல்லக் கேட்டு இருக்கிறேன். அதுவும் பல ஜாதிப் பிசாசுகள்; அதிலும், ''கீழ்சாதி''ப் பிசாசுகள் என்றுகூட சொல்லுகிறார்கள்.

இது மானமுள்ள பேச்சாகுமா? ஒருவன் மனைவியை 10 பிசாசுகள், 20 பிசாசுகள் கலவி செய்வதும், பிறகு இன்னும் கணவன் அவளை மனைவியாகக் கொள்ளுவதும் பார்த்தால் இந்தக் கணவனுக்கு சுயமரியாதை இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா? இது என்ன மடத்தனம் என்பது எனக்கு விளங்கவில்லை. தன் மனைவியை வேறு மனிதன் எவனாவது திரும்பிப் பார்த்துவிட்டால்



ஆகாயத்திற்கும், பூமிக்கும் குதிக்கும் சிப்பாய், 10, 20 பேய்கள் சேர்ந்து கலவி செய்த பெண்ணை சேர்த்துக்கொண்டு தன்னை எப்படி ''ஆண் பிள்ளை சிங்கம்'' என்று சொல்லிக் கொள்ளமுடியும்?

மனிதனைவிட பேய் பிசாசு உயர்வு என்று அர்த்தமா? அல்லது கையாலாகவில்லை; ஆனதால் எப்படியோ போய்த் தொலையட்டும் என்கிற வீரப்பிரதாபமா? என்று கேட்கிறேன்.

முஸ்லிம்களுக்கும்கூட சிலருக்கு இந்தப் பேய் உணர்ச்சி பிடித்திருப்பது பார்த்தால் அவர்கள் வேஷத்தில் முஸ்லிம்களே தவிர, உள்ளத்தில் இந்துக்களை (ஆரியர்களை)விட மோசமானவர்கள் என்றுதான் கருதவேண்டி இருக்கிறது.

''கடவுள் நினைப்புக்கும், பேய் நினைப்புக்கும் ஒரு மயிர் இழை அளவுதான் வித்தியாசம்'' என்று ஒரு பகுத்தறிவுவாதி சொல்லி இருக்கிறார். ஆனால், தங்கள் மனைவிமார்களிடம் பேய் கலவி செய்கிறது என்று கருதுகிற முஸ்லிம்கள், தங்கள் கடவுளைவிட பேய் எத்தனையோ கோடி மயிர் இழை அளவு பெரியது என்று கருதுகிறவர்களாவார்கள் என்று சொல்லுவேன். கடவுள் ஒருவன் மனைவியை இப்படிச் செய்வதில்லை. இந்துக்கள் கடவுள்களும் பேயைப்போல் 10, 15 கடவுள்கள் ஒன்றாக சேர்ந்துகொண்டு மற்றவன் மனைவியை கலவி செய்வதில்லை. ஆகையால், இரண்டு கூட்டத்தாருக்கும் இப்படிப்பட்ட புத்தி இருப்பது மிகவும் வேகலமானதேயாகும்.

நபி அவர்கள் குர்ஆனில் எங்காவது பேய் இருப்பதாகச் சொல்லி இருக்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. இப்படிச் சொல்லியிருந்தால், அவர் பகுத்தறிவுவாதிகளின் கூட்டத்தில் சேர்க்கப்பட முடியாதவர் என்று ஆகிவிடாதா?

*(சித்திரபுத்திரன் எனும் புனை பெயரில் 18.3.1944 ''குடிஅரசு'' இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*



# 27. ஒரு யுக்தி ஆராய்ச்சி

மனுதர்ம சாஸ்திரக் கொள்கைகளையும், ஆரிய ஆதிக்கக் கொள்ககளையும் கதை ரூபமாகவும், பக்தி ரூபமாகவும், கடவுள் செய்கை, கடவுள் வாக்குகள் ஆகியவை என்பதின் மூலமாகவும் திராவிடர்களுக்குள் புகுத்தச் செய்யப்பட்ட சாத னங்கள்தான் புராணங்கள், இதிகாசங்கள் முதலியவைகளும், தேவார திருவாசகங்கள், பிரபந்தங்கள் ஆகியவைகளும் ஆகும் என்பது எமது கருத்து. இந்தக் கருத்துக்கு சான்றுகள் அவைகளி லேயே இருக்கின்றன.

விஷ்ணு அவதாரங்கள் அத்தனையும் ஆரியர்களின் எதிரி களை அதாவது, மனுதர்மத்திற்கு விரோதமாயும், ஆரிய ஆதிக் கத்தை ஒடுக்கவும், தடுக்கவும் முயற்சித்தவர்களைக் கொல்ல வும், அழிக்கவும், சதி செய்யவும் ஏற்பட்டவைக்ள். அதுபோ லவே சிவன் அவதாரமான சுப்ரமணியனும், மற்றவர்களும் அதுபோலவே ஆரியரின் எதிரிகளை அழிக்க ஏற்பட்டவைகள். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், சுரர், அசுரர், அரக்கர், இராக்ஷதர் என்கின்றவர்களைக் கொல்ல - அழிக்க வந்தவர்கள் என்றே சொல்லலாம்.

ஆரியர்களின் தனிக் கடவுள் உற்பத்திகளில் சிவன் முதற் கடவுள். அதாவது, முதலில் சிருஷ்டிக்கப்பட்ட கடவுளாகவும், ஸ்கந்தம் முதலில் உற்பத்தி செய்யப்பட்ட புராணம் ஆகவும் இருக்கவேண்டும். இவை விஷ்ணுவுக்கும், இராமாயணத்திற்கும் முந்தியதாகவும் இருக்கவேண்டும். இராமாயணம் சமீப காலத் தில் கந்த புராணத்தைப் பார்த்து சற்று திருந்திய காலத் திருத்தத்தோடு எழுதியதென்றே சொல்லலாம். பாரதம்கூட இராமாயணத்திற்கு முந்தியதாகவே இருக்கவேண்டும். எப்படி ஆயுதங்களில் கல், கவண், ஈட்டி (வேல்), வில், துப்பாக்கி, பீரங்கி, வெடிகுண்டு, விஷப்புகை ஆகியவை ஒன்றிற்குப் பின் ஒன்று வரிசைக் கிரமமோ அதுபோல்தான்.



முதலில் சிவன், கந்தபுராணம், பிறகு விஷ்ணு சம்பந்தமான புராணங்கள், பாரதம், இராமாயணம் ஆகியவை என்று சொல்ல வேண்டும். சுரர், அசுரர் என்பவை எல்லாம் ஆரியர் ஆரியர் அல்லாதவர் என்பதற்கு

முதலில் ஏற்படுத்திக் கொண்ட (இட்ட) பெயர்களாகவும், தேவர்கள் இராக்ஷதர்கள் என்பவை பின்னால் ஏற்படுத்திக் கொண்ட பெயர்களாகவும் தெரிகின்றன.

சிவன் முதற் கடவுள் என்பதற்கும், கந்த புராணம் முதல் புராணம் என்பதற்கும் உதாரணம் என்னவென்றால், சிவன் கற்பிதம் மிக்க பழமையான காட்டுமிராண்டி காலத்தியதாக இருக்கிறது. அதாவது தலை சடையாகவும், ஆடை மிருகத்தின் தோல் ஆகவும், அணி (நகை) பாம்புகள் - எலும்புகளாகவும், புஷ்பம் கொன்றை எருக்கம் பூக்களாகவும், பாத்திரம் மண்டை ஓடு, ஆகாரம் தேன், தினைமாவு, கொழுக்கட்டையாகவும், ஆயுதம் 1-வது மழு, 2-வது சூலம், இடம் மலை, விளையாடுவது சுடலை, பூசிக் கொள்ளுவது சாம்பல், ரூபம் (சாயல்) அகோரம், வாகனம் மாடு, குணம் வெளிப்படையான ஹிம்சை, நடனம் காட்டுமிராண்டி ஆட்டம், சங்கீதக் கருவி உடுக்கை; பெண் ஜாதி இதுபோன்றே கோரரூபமுள்ள காளி, அவள் வாகனம் சிங்கம், பிள்ளைகள் ஒன்றுக்கு ஆறுமுகம், மற்றொன்றுக்கு யானைத் தலை விகார ரூபம்.

இந்த மாதிரியாக காட்டுமிராண்டித்தன்மைக்கு ஏற்றபடியாகவும், காட்டுமிராண்டிக் காலத்திய எண்ணங்களின் படியாகவும் கற்பிக்கப்பட்டிருக்கிறபடியால், சிவன்தான் முதலாவதாக சித்தரிக்கப்பட்ட கடவுளாக இருக்கவேண்டும் என்பதும் விளங்கும்.

அதுபோலவே, கந்தபுராணம் என்பதும் வைணவ புராணங்களைவிட முந்தியதாகவே இருக்கவேண்டும். ஏனெனில், கந்தனின் உற்பத்தியை ஆபாசமான முறையில் கற்பிக்கப்பட்டிருக்கிறது. ஆயிர தேவ வருஷம் (அதாவது பல யுக காலம்) சிவன் புணர்ந்ததால் ஏற்பட்டான் என்றும், இந்திரியத்தை ஆற்றில் விட்டதால் ஏற்பட்டான் என்றும், அந்த மிஞ்சினி இந்திரியம் தான் என்றும், நெற்றிப் பொறியில் தோன்றினான் என்றும், மற்றும் பலவித ஆபாசமானதும் அசம்பாவிதமானதும், சிறிதும் அறிவற்றதுமான வழியில் உற்பத்தியானதாக சித்திரிக்கப்பட்டிருக்கிறது.



கந்த புராணத்தில் வரும் பாத்திரங்கள் அக்கினிமுகன், சிங்கமுகன், ஆட்டுமுகன் முதலியன இயற்கைக்கு மாறுபட்டவைகள் யுத்தமுறை இந்திரன் குயிலாக மாறினான்,

சுரன் சக்ரவாகப் புள் குருவியாக மாறினான், இந்திரன் மயிலாக வந்தான். சுரன், தீ, காற்று முதலிய உருவுடன் தோன்றினான்; வேலால் குத்துதல், சேவலாக ஆகிவிடுதல் முதலியவை எல்லாம் காட்டுமிராண்டிக் காலத்திய கற்பனையேயாகும்.

இந்திரனுடைய நிலைமையும், இராமாயணத்தில் காட்டப்பட் டிருக்கும் இந்திரனைவிட காட்டுமிராண்டித்தன்மை கொண்டதா கவும் சித்தரிக்கப்பட்டு இருக்கின்றது.

*(1.7.1944 "குடிஅரசு" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*

# 28. அறிஞர்களே, ஆராய்ந்து பாருங்கள்!

உலகத்தை எல்லாம் உண்டாக்கி, அதிலுள்ள எல்லாவற்றை யும் நடத்தும் சர்வ சக்தியுள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவரால்தான் (அவர் இஷ்டப்படி) உலகம் இயங்கு (நடை பெறு)கின்றது என்று சொல்லப்படுமானால், அவரை நடுநிலை மையுடையவனென்று சொல்லுவதைவிட பாரபட்சமுடையவ ரென்று சொல்லுவதற்கே மிகமிக இடமிருக்கின்றன. அவரை கருணை உடையவர் என்று சொல்லுவதைவிட கருணையற்ற வர் என்று சொல்லுவதற்கே ஏராளமான பிரத்தியட்ச உதாரணங் கள் இருக்கின்றன. அவரை நீதிவான் என்று சொல்லுவதைவிட அநீதிவான் என்று சொல்லுவதற்கே தாராளமான ஆதாரங்கள் அதிகமிருக்கின்றன.

அவரால் உலகுக்கு நன்மை ஏற்படுகிறது என்று சொல்லுவ தைவிட அவரால் அதிகத் தீமையே ஏற்படுகின்றது என்று சொல்லுவதற்குப் போதுமான ஆதாரமிருக்கின்றது.



அவர் அறிவாளி என்று சொல்லுவதை விட மூடர் என்று சொல்லுவதற்கே போது மான ருஜூ இருக்கின்றது. (அதுவே முடிந்த முடிவானால்) அப்படிப்பட்டவரை யோக்கி யர் என்று சொல்லுவதைவிட அயோக்கியர் என்று சொல்லுவதற்கே திருஷ்டாந்தங்கள் பல இருக்கின்றன.

அவர் ஜீவன்களுக்கு நன்மையே செய்கிறாரென்பதைவிட தீமையே செய்கின்றார் என்பதற்கு போதிய காரணங்கள் இருக்கின்றன. அவரால் நன்மை அடைந்தவர்களைவிட தீமைய டைந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்லத் தகுந்த அத்தாட்சிகள் மிதந்து கிடக்கின்றன. அவர் நாகரிகமுடையவர் என்று சொல்லுவதைவிட அவர் காட்டுமிராண்டி என்று சொல் லுவதற்கே அளவுக்கு மீறிய அனுபவங்கள் காணப்படுகின்றன. அவர் இருந்தால் நல்லது என்று சொல்லுவதைவிட அப்படிப் பட்டவர் ஒருவர் இல்லாமல் இருந்தால் நல்லது என்று ஆசைப்ப டுவதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன.

அப்படி ஒருவர் இருக்கிறார் என்று எண்ணிக்கொண்டு வாழ்க் கையை நடத்துவதைவிட, அப்படி ஒருவர் இல்லை என்று வாழ்க்கையை நடத்துவதே மனித சுதந்திரத்திற்கு அதிகமான நன்மை பயக்கத்தக்கது என்று கருதுவதற்கு வேண்டிய அவசி யங்கள் பல இருக்கின்றன.

அறிஞர்களே, ஆராய்ந்து பாருங்கள், சர்வ வல்லமையுள்ள கடவுள் ஒருவர் இருந்தால், மனிதனுடைய தேவைக்கும், ஆசைக்கும் தகுந்தபடி நடந்துகொண்டிருப்பார். அல்லது கடவு ளுக்கு இஷ்டமில்லாத விஷயங்களைப்பற்றி மனிதனுக்குத் தேவையில்லாமலாவது, ஆசையில்லாமலாவது அல்லது நினைப்புக்கே வராமலாவது செய்திருப்பார்.

உதாரணமாக, மனிதன் தனக்கு முகத்தில் மயிர் வேண்டியதில் லையென்று கருதித் தினம் தினம் சவரம் செய்துகொள்ளுவதைப் பார்க்கின்றோம். ஆனால், கடவுள் அனுக்கிரகத்தால் அது தினம் தவறாமல் முளைத்துக்கொண்டே வருவதையும் பார்க்கின்றோம்.

இது என்ன, கடவுளுடன் மனிதன் ஏறுக்குமாறாய் நடந்து போட்டி போடுகின்றானா? அல்லது மனிதனுடன் கடவுள் ஏறுக்குமாறாய் நடந்து போட்டி போடுகின் றாரா? அல்லது ஒருவருக்கொருவர் சம்பந்த மில்லாமல் அவரவர் காரியத்தை அவரவர் கள் பார்க்கின்றார்களா?



*(சித்திரபுத்திரன் எனும் புனை பெயரில் 6.12.1947 "குடிஅரசு" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*

# 29. நாம் விரும்பும் தன்மை

நம் கழகமும், நமது முயற்சியும், பிரச்சாரமும் எந்த ஒரு தனிப்பட்ட வகுப்பு நலத்துக்கோ, தனிப்பட்ட மனிதனின் சுயநலத்துக்கோ அல்ல என்பதை மக்கள் உணரவேண்டும். பொதுவாகவே நம் நாட்டு மனித சமுதாய முன்னேற்றத்தின் அவசியத்திற்காகவே பாடுபடுகிறோம்.

இன்று நாம் நம்மையும், மற்ற வெளிநாட்டு உலக மக்களை யும் நோக்கும்போது நமது நிலை எப்படி இருக்கிறது? மிக மிகத் தாழ்ந்த நிலையாக இல்லையா? நாமும் நம் நாடும் உலகில் மிகவும் பழமையானவர்களாவோம். மற்ற நாட்டவரைவிட நம் பெருமையும், வாழ்வும் மிக மிக உயர்ந்த தன்மையில் இருந்ததா கும். அப்படிப்பட்ட நிலையில் இருந்த நாம், நமது நாடு, இன்று பழிப்புக்கு இடமான தன்மையில் இருக்கிறோம். அதாவது, நாம் சமுதாயத்தில் கீழான மக்களாக்கப்பட்டு, வாழ்வில் அடிமைக ளாக இருக்கும்படி செய்யப்பட்டு விட்டோம்.

இன்றைய உலகம் மிகவும் முற்போக்கடைந்திருக்கிறது. மக் கள் அறிவு மிகவும் மேலோங்கி இருக்கிறது. மக்கள் வாழ்வும் எவ்வளவோ மேன்மை அடைந்திருக்கின்றது. ஆனால், நாம் மாத்திரம் காட்டுமிராண்டிகளாகவே இருந்து வருகிறோம். இதற் குக் காரணம் எதுவானாலும் நாம் சமுதாயத்தில் கீழ்ஜாதி மக்களாக இருந்து வருவதல்லாமல், நம்முடைய பழக்கம் வழக்கம் முதலிய காரியங்களும் அதற்கேற்றவண்ணம் உல கோர் பழிக்கும்படி இருக்கிறது. நம் பெண் மக்கள், தாய்மார்கள் இதை உணரவேண்டும். நாம் சூத்திரர்களாகவும், நம் பெண்கள் சூத்திரச்சிகளாகவும் இருக்கிறோம். நம்மில் 100-இல் 10 பேருக் குக்கூட கல்வி இல்லை. நாம் 100-க்கு 90 பேர் உடலுழைப்புப் பாட்டாளி மக்களாகக் கீழ்வாழ்வு வாழுகிறோம்.



இந்த நிலைக்குக் காரணம் என்ன? நம் இழிவையும், கஷ்டத்தையும்பற்றி நமக்கு ஏன் கவலை இல்லை? பாட்டாளி மக்களா கிய நாம் ஏன் தாழ்ந்த ஜாதிகளாகக் கருதப்ப டவேண்டும். அதுவும் இந்த விஞ்ஞான காலத்தில் என்று உங்களை நீங்களே கேட் டுப் பாருங்கள்.

நம்மிடத்தில் எந்த்விதமான இயற்கை இழிவோ, இயற்கைக் குறைபாடோ கிடையாது. நாம் சமுதாயத் துறையில் கவலைப்ப டுவதில்லை. நம் சமுதாய வாழ்வுக்கு ஆன காரியங்களைப்பற் றிச் சிந்திப்பதில்லை. நாம் தனித்தனியாக, தத்தம் நலம் பேணி, வெறும் சுயநலக்காரர்களாகி, பொதுவில் தலைதூக்க இடமில்லா மல் போய்விட்டது. நமது சமுதாய வாழ்வுக்கென்று இன்று நமக்கு எவ்விதத் திட்டமும் கிடையாது. நம் வாழ்வுக்கு, நமக்கு பொருத்தமில்லாதவைகளை மதம், கடவுள், தர்மம் என்று சொல்லிக்கொண்டு அவைகளுக்கு அடிமையாகி வாழ்வதுதான் நம்மைத் தலையெடுக்கவொட்டாமல் செய்துவிட்டது. நமக்கு நல்வழி காட்டவும், அறிவைப் பெருக்கவும், மனிதத் தன்மைய டையவும் நல்ல சாதனம் கிடையாது. நம் மதம், கடவுள், தர்மம் என்பவை நமக்குக் கேடானதாக இருந்து வருவதை நாம் உணரவில்லை.

நம் மதம் நம்மை என்றைக்குமே முன்னேற்றாததாக இருந்துவ ருகிறது. மதத்தின் பயனாகத்தான் நாம் சூத்திரர், சூத்திரச்சி, கடை ஜாதியாக இருக்கிறோம். நம் கடவுள்கள் நம்மை ஏய்ப்ப வைகளாக, நம்மைச் சுரண்டுபவைகளாக, நம்மை மடையர்க ளாக ஆகும்படியாக ஆக்கி வருகிறது. நமது தர்மங்கள் என்பவை நம்மை முயற்சி இல்லாதவர்களாக ஆக்கிவிட்டன. ஆகையால், நாம் இத்துறையில் எல்லாம் பெருத்த மாறுதல் களை அடையவேண்டும்.

நம் கடவுள் தன்மையில் இருந்துவரும் கேடு என்னவென் றால், கடவுளை ஒரு உருவமாகக் கற்பித்துக்கொண்டு, அதற் காக வீடு வாசல் (கோயில்), பெண்டு பிள்ளை, சொத்து சுகம், போக போக்கியம் ஆகியவை செய்துகொடுத்து அனுபவிக்கச் செய்கிறோம். அது மாத்திரமல்லாமல், நாம் கற்பனை செய்து, நாம் உண்டாக்கி, நாமே மேல்கண்டபடி வசதியும் செய்து கொடுத்துவிட்டு, அப்படிப்பட்ட கடவுள் நம்மை இழி ஜாதி



யாய்ச் சிருஷ்டித்தது என்று கூறிய எவனோ அயோக்கியன் பேச்சைக் கேட்டுக்கொண்டு, நம்மையும் நாமே இழிஜாதியாய்க் கருதிக் கொண்டு, அக்கடவுளைத் தொடவும், நெருங்கவும் செய்வது தோஷம் - கூடாது என்று நம்பி எட்டி நிற்கிறோம். இதனால் நம்மை நாமே கீழ்மைப்படுத்திக் கொண் டோம் என்று ஆகிறதா இல்லையா?

இப்படிப்பட்ட மடத்தனமும், மானமற்றதனமும் உலகில் வேறெங்காவது காண முடியுமா?

இன்றைய நம் கோயில்கள் எவ்வளவு பெரிய கட்டடங்கள்? எவ்வளவு அருமையான சிற்பங்கள்? அவைகளுக்கு எவ்வளவு கோடி ரூபாய் சொத்துக்கள்? அவைகளுக்கு எவ்வளவு பூசை உற்சவ போக போக்கியங்கள்? இவைகள் யாரால் ஏற்பட்டன? யாரால் கொடுக்கப்பட்டன? ஆனால், அவைகள்மூலம் பயன டைந்து, உயர்ந்த மக்களாக ஆகிறவர்கள் யார்? அவைகளுக் கெல்லாம் அழுதுவிட்டு, கிட்ட நெருங்கக் கூடாத மக்களாய், எட்டி நின்று இழிவும் நட்டமும் அடைகின்றவர்கள் யார்? நீங்கள் உண்மையாய்க் கருதிப் பாருங்கள்!

இந்த நாட்டில் உள்ள பல ஆயிரக்கணக்கான கோயில்களில் ஒரு கோயிலையாவது, மேல்ஜாதிக்காரர் என்று உரிமை கொண் டாடும் பார்ப்பனர்கள் கட்டியிருப்பார்களா? அவைகளுக்கு இன்று இருந்துவரும் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் பெறு மான சொத்துக்களில், ஒரு ரூபாய் பெறுமான சொத்தாவது பார்ப்பனர்களால் கொடுக்கப்பட்டிருக்குமா?

நாம் கோயில் கட்டி, நாம் பணம் கொடுத்து, பூசை உற்சவம் செய்வித்து, இதற்குப் பணம் கொடுத்த நாம் ஈன ஜாதி, இழிஜாதி, நாலாஞ் ஜாதி சூத்திர ஜாதி, அய்ந்தாம் ஜாதி, கடை ஜாதி என்பதாக ஆவானேன்? நம்மைப் பல வழியாலும் ஏய்த்துச் சுரண்டி அயோக்கியத்தனமாகக் கொள்ளை கொண்டு வாழும் பாடுபடாத சோம்பேறிப் பித்தலாட்டப் பார்ப்பனன் மேல்ஜாதியாக இருந்து வருவானேன்? இதைச் சிந்தித்தீர்களா? சிந்திக்க யாராவது இதுவரை நமக்கு புத்தி கூறி இருக்கிறார்களா?

நாம் ஈன ஜாதி, இழிமக்கள் என்று ஆக்கப்பட்டதற்குக் காரணம் இந்தக் கடவுள்கள்தான் என்பதையும், நாம் முட்டாள் கள், மடையர்கள் ஆனதற்குக் காரணம் இந்தக் கடவுள்களுக்குக் கட்டடம், சொத்து, போக போக்கியச் செலவு கொடுத்ததுதான் என்பதையும் இப் போதாவது உணருகின்றீர்களா, இல்லையா?



அதுபோலவேதான், நம் தலையில் சுமத் தப்பட்டிருக்கும் இந்து மதம் என்பது நம் மைச் சூத்திரனாகவும், நம்மை ஏய்த்துப் பிழைக்கும் பார்ப்பானை பிராமணனாகவும் ஆக்கியிருக்கிறதா, இல்லையா?

அதுபோலவேதான், நம் தர்மங்கள் என்று சொல்லப்படும் மனுதர்மம், புராணம், கீதை, இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களில் அல்லாமல் வேறு எதனாலாவது நம்மைச் சூத்திரன், சூத்திரச்சி, வேசிமகன், தாசிமகன், அடிமை, கீழ்ஜாதி என்று யாராவது சொல்ல இடமிருக்கிறதா? காரண காரியங்கள் இருக்கின்றனவா?

ஆகவே, நமது இழிவுக்கும், ஈனத்துக்கும் மேற்கண்ட நம் கடவுள், மதம், தர்ம சாஸ்திரங்கள் எனப்பட்டவைகள் அல்லாமல் வேறு ஒன்றும் காரணம் அல்ல என்பதை இப்போதாவது உணருகிறீர்களா?

நமது மேன்மைக்கு, நல்வாழ்வுக்கு, நமது இழிவு நீங்கி மனிதத்தன்மை வாழ்வு வாழ்வதற்கு, மனித சமுதாயமே பகுத்தறிவுடன் உயர்ந்த ஜீவப்பிராணி என்பதைக் காட்டிக் கொள்வதற்கு, நமது இன்றைய நிலையில் இருக்கும் கடவுள், மதம், தர்மம், நீதி முதலியவை பெரிய மாற்றமடைந்தாகவேண்டும்.

நமது கடவுள்கள், காட்டுமிராண்டி காலத்தில் கற்பிக்கப்பட்டவைகள் அல்லது கண்டுபிடிக்கப்பட்டவைகள், அல்லது நமக்குத் தெரிய வந்தவைகள், நமது மதமும், மனிதனுக்கு நாகரிகமும், பகுத்தறிவுத் தெளிவு இல்லாமல் மிருகப் பிராயத்தில் இருந்தபோது, அப்போதுள்ள அநாகரிக மக்களால் உண்டாக்கப்பட்டதாகும். நமது ஒழுக்கம், நீதி என்பவைகளும் அக்காலத்துக்கு ஏற்ப, அக்காலத்தில் உள்ள அறிவுக்கேற்ப ஏற்பட்டவைகளாகும்.

இன்று காலம் மாறிவிட்டது. இயற்கைகூட மாறிவிட்டது. அறிவின் தன்மை, அனுபவத்தன்மை மாறிவிட்டது. மனிதனுடைய மனோதர்மம், ஆசாபாசம், ஆற்றல் மாறிவிட்டது. இப்படிப்பட்ட இக்காலத்துக்கு, 20 ஆம் நூற்றாண்டுக்கு 4000, 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கடவுள், மதம், தர்மம், நீதி செல்லுபடியாக முடியுமா? ஆகவே, இன்றைக்கு ஏற்றபடியாக இவைகள் மாற்றப்பட்டாகவேண்டும்.



இன்று எந்த ஒரு ஒழுக்கத்தை, நீதியை நாம் விரும்புகிறோமோ, மற்றவர்களிடம் எதிர்பார்க்கின்றோமோ, அப்படிப்பட்ட நீதியும், ஒழுக்கமும் கொண்ட கடவுள், மதம் வேண்டும். எப்படிப்பட்ட அறிவை, முன்னேற்றத்தை விரும்புகிறோமோ, அப்படிப்பட்ட கடவுள், மதம், நீதி, தர்மம் கொண்ட

கடவுள், மதம் வேண்டும். இன்று அப்படிப்பட்ட கடவுள், மதம் நமக்குண்டா? நம் கடவுள்களிடம் இல்லாத அயோக்கியத் தனங்கள் இன்று உலகில் எந்த அயோக்கியனிடமாவது உண்டா? நம் மதத்தில் இல்லாத காட்டுமிராண்டித்தனங்கள், மூட நம்பிக்கைகள் எந்த மடையனிடமாவது, குடுக்கைத் தலையனிடமாவது உண்டா? நான் மதத்தின்மீது, கடவுள்மீது குற்றம் சொல்லவில்லை. ஆனால், அப்படிப்பட்ட காலத்தில், அப்படிப்பட்ட அறிவுள்ளவர்களால் அவை சிருஷ்டிக்கப்பட்ட வைகளாகும்; காட்டிக் கொடுக்கப்பட்டவைகளாகும்.

இந்த மதத்தை - கடவுள் தன்மைகளை ஏற்படுத்தின - உண்டாக்கிய - காட்டின பெரியோர்கள் தெய்வப் பிறவிகள் - தெய்வீகத்தன்மை உடையவர்கள் என்கிறதான அந்த மகான் களே இன்று இருப்பார்களேயானால், உடனே மாற்றிவிட்டு வேறு வேலை பார்ப்பார்கள், அல்லது வெளியே வர வெட்கப் படுவார்கள்.

உதாரணமாக, இவைகளை நீங்கள் சரி என்கிறீர்களா? அதாவது, மூன்று பெரிய கடவுள்கள்; அவைகளுக்கு ஈட்டி, மழு முதலிய ஆயுதங்கள்; மாடு, பருந்து முதலிய வாகனங்கள்; பெண்டாட்டி பிள்ளை குட்டிகள்; போதாதற்கு வைப்பாட்டிகள்; மேலும் பல குடும்பப் பெண்களை விரும்பி, கட்டிய கணவனுக் குத் தெரியாமல் வேஷம் போட்டு உருமாறி விபச்சாரம் செய்வதில் அம்மூவரும் ஒருவரை ஒருவர் போட்டி போடுவதில் சாமர்த்தியம் நிறைந்தவர்கள்.

இம்மூவரையும் தலைவராகக் கொண்ட மதத்தில் நாலைந்து ஜாதிகள், முதல் ஜாதி பார்ப்பன ஜாதி. இந்த ஜாதி பாடுபடாமல் மற்றவர்கள் உழைப்பை சுரண்டியே வாழ்ந்து வரவேண்டும். இவர்களுக்குத்தான் எங்கும் முதலிடம்! மற்றவர்கள் எல்லாம் இவர்களுக்குக் குற்றேவல் செய்து, வாயையும், வயிற்றையும் கட்டி அடங்கி ஒடுங்கி வாழவேண்டும்!



இந்த மதத்தில் உள்ள மக்களுக்குச் சொல லப்பட்டிருக்கும் நீதி - ஒழுக்கம் ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு மாதிரி. பார்ப்பான் திருடினால் அவன் தலையைச் சிரைத்து மொட்டை அடிப்பதே போதுமான தண் டனை. அதே திருட்டை ஒரு அய்ந்தாவது ஜாதிக்காரன் செய்தால், அவனுடைய கையை வெட்டி விடுவது அதற்கேற்ற தண் டனை என்று சொல்லுகிற மனுநீதி. அந்த

மனுநீதியில் சொல்லப்பட்டிருக்கும் நீதிகள் எல்லாம் இந்த அடிப்படையில்தான் வகுக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே, அக்காலத்திய கடவுள், மத தர்மங்களை, இக்காலத்துக்கு ஏற்றபடி அமைத்துக் கொள்ளுங்கள் என்பதற்காகவே இதைக் குறிப்பிடுகிறேன்.

பெரிய அறிவாளிகள்கூட எண்ணெய் விளக்கை இன்று அறவே நீக்கிவிட்டு எலெக்ட்ரிக் விளக்கு போட்டுக் கொள்ளவில்லையா? கட்டைவண்டிப் பிரயாணத்தை நீங்கள் தள்ளி விட்டு ஏராப்ளேன், ஆகாயக்கப்பல் பிரயாணத்தை நீங்கள் விரும்பவில்லையா?

ஆகையால், ஆதிகாலம் என்கின்ற காலத்தில், ஆதிகால மனிதர்கள், மகான்கள் என்பவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆதி காலத் தன்மையிலிருந்து மாறுபட்டு, இக்கால நிலைக்கு ஏற்றது போல் நடந்துகொள்ளுங்கள்.

'காலத்தோடு கலந்து செல்லாதவன்
ஞாலத்துள் பயன்படமாட்டான்.'

*(15.1.1949 "குடிஅரசு" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*

# 30. கடவுளை மறுக்கத் துணியவேண்டும்

என்னை நாஸ்கதின் என்று சொல்லுகின்றவர்கள் நாஸ்திகன் என்பதற்கு என்ன அர்த்தம் கொண்டு சொல்லுகிறார்களோ அந்த அர்த்தத்தில் நான் நாஸ்திகன்தான் என்பதை வலியுறுத்திச் சொல்லுகின்றேன். நாஸ்திகத்திற்கு பயந்தவனானால் ஒரு காரியமும் செய்ய முடியாது. அதிலும், சமதர்மக் கொள்கையை பரப்பவேண்டுமானால் நாஸ்திகத்தினால்தான் முடியும். நாஸ்திகம் என்பதே 'சமதர்மம் என்று பெயர். அதனால் ரஷ்யாவையும் நாஸ்திக ஆட்சி என்கிறாரகள். பவுத்தரையும் நாஸ்திகம் என்றதற்குக் காரணம் அவர் சமதர்மக் கொள்கையை பரப்ப முயற்சித்ததால்தான்.



நாஸ்திகம் என்பது சமதர்மக். கொள்கை மாத்திரமல்ல; சீர்திருத்தம் அதாவது ஏதாவது ஒரு பழைய கொள்கைகளை மாற்றவேண்டுமானால் அந்த மாற்றத்தையும், ஏன், எவ்வித

சீர்திருத்தத்தையுமே நாஸ்திகம் என்றுதான் யதாப்பிரியர்கள் சொல்லித் திரிவார்கள். எங்கு எங்கு அறிவுக்கு மரியாதை இல்லையோ, சமத்துவத்திற்கு இடமில்லையோ அங்கு எல்லாம் இருந்துதான் நாஸ்திகம் முளைக்கின்றன. கிறிஸ்துவையும், முகமது நபியையும்கூட நாஸ்திகர்கள் என்று யூதர்கள் சொன்ன தற்கும் அவர்களது சமதர்மும், சீர்திருத்தமும்தான் காரணமாகும்.

துருக்கியில் பாட்சாவும், ஆப்கானிஸ்தான் அமீரும் நாஸ்திகர் கள் என்று அழைக்கப்பட்டதற்கும் அவர்களது சீர்திருத்தந்தான் காரணம். ஏனென்றால், இப்போது வழக்கத்தில் இருக்கும் கொள்கைகளும், பழக்கங்களும் எல்லாம் கடவுள் செய்ததென் றும், கடவுள் கட்டளை என்றும், கடவுளால் சொல்லப்பட்ட வேதங்கள், சாஸ்திரங்கள் ஆகியவைகளின் கட்டளையென்று மேதான் யதாப்பிரியர்கள் சொல்லுகின்றார்கள்.

ஆகவே, நாம் இப்போது எதை எதை மாற்றவேண்டுமென்று கிறாமோ அவைகள் எல்லாம் கடவுள் செய்ததாகவும் அல்லது கடவுள் செய்ததாகவும் அல்லது கடவுள் தனது அவதாரங்க ளையோ, தனது தூதர்களையோ செய்யச் சொன்னதாகவுமே சொல்லப்படுவதால், அவைகளைத் திருத்தவோ, அழிக்கவோ புறப்படுவது கடவுள் கட்டளையை மீறின அல்லது கடவுள் கட்டளையை மறுத்ததேயாகும்.

உதாரணமாக, மக்களில் நான்கு ஜாதி கடவுளால் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொல்லப்படுகையில், மேற்படி ஜாதி ஒழியவேண்டுமென்றால், அவன் கண்டிப்பாக கடவுளை மறுத்தோ அலட்சியம் செய்தோதான் ஆகவேண்டும். எல்லா மதங்களும், மதக் கொள்கைகளும் கடவுளாலோ, அவதாரங்க ளாலோ, கடவுள் தன்மையாலோ ஏற்பட்டது என்று சொல்லப்ப டுகையில், அம்மத வித்தியாசங்கள் ஒழியவேண்டும் என்றும், மதக் கொள்கைகள் மாற்றப்படவேண்டும் என்றும் சொல்லும் போது, அப்படிச் சொல்லுபவன் அந்தந்தக் கடவுள்களை, கடவுள்களால் அனுப்பப்பட்ட தெய்வீகத்தன்மை பொருந்தின வர்களை அலட்சியம் செய்தவனேயாகின் றான். அதனால்தான் கிறிஸ்தவர் அல்லாதவர் அஞ்ஞானி என்றும், மகமதியரல்லாதார் காபீர் என்றும், இந்து அல்லாதார் மிலேச்சர் என்றும் சொல்லப்படுகின்றனர்.



அன்றியும், கேவலம் புளுகும் ஆபாசமும் நிறைந்த புராணங்களை மறுப்பதே இந்தும தக் கொள்கைப்படி நாஸ்திகம் என்று சொல்

லப்படும்போது, ஜாதியையும், கர்மத்தையும் மறுப்பதை ஏன் நாஸ்திகம் என்று சொல்லமாட்டார்கள்?

ஜாதி உயர்வு தாழ்வு, செல்வம் தரித்திரம், எஜமான் அடிமை ஆகியவைகளுக்குக் கடவுள்களும் கர்மமும்தான் காரணம் என்று சொல்வதானால், பிறகு மக்களுக்கு விடுதலையும், முன்னேற்றமும் எங்கே இருக்கின்றது? கடவுளையும், கர்மத்தையும் ஒழித்தாலொழிய அதற்காக மனிதன் எப்படிப் பாடுபட முடியும்?

மேடும் பள்ளமும் கடவுள் செயலானால், மேட்டை வெட்டி பள்ளத்தில் போட்டு சமன் செய்வது கடவுள் செயலுக்கு விரோதமான காரியமேயாகும். மனிதனுக்கு முகத்தில், தலையில் மயிர் முளைப்பது கடவுள் செயலானால், க்ஷவரம் செய்து கொள்வது கடவுள் செயலுக்கு எதிராகவே செய்யும், அதாவது ஓரளவுக்கு நாஸ்திகமான காரியமேயாகும். அதிலும், க்ஷவரம் செய்யச் செய்ய மறுபடியும் மறுபடியும் மயிர் முளைப்பதைப் பார்த்ததும் மேலும் க்ஷவரம் செய்வது வடிகட்டின நாஸ்திகமே யாகும். பிச்சைக்காரனுக்குச் சோறு போடுவதும் நாஸ்திகமேயா கும். ஏனெனில், கடவுள் பார்த்து ஒருவனை அவனது "கர்மத் திற்காக" பட்டினி போட்டிருக்கும்போது, நாம் அவனுக்குச் சோறு போடுவது கடவுளுக்கு விரோதமான காரியமேயாகும். அதாவது, கடவுளை நம்பாத - கடவுளுக்கு செயலை லட்சியம் செய்யாத தன்மையேயாகும். இப்படியே பார்த்துக்கொண்டு போனால் உலகத்தில் ஆஸ்திகன் ஒருவனும் இருக்க முடியாது. ஆதலால், நம்மைப் பொறுத்தவரை நாம் பல மாறுதல் ஏற்பட விரும்புவதால் அவை கடைசியாய் நாஸ்திகமேயாகும். நாஸ்திக மும் சாஸ்திர விரோதமும், தர்மத்திற்கு விரோதமும் செய்யாமல் யாரும் ஒரு சிறிதும் உண்மையான சீர்திருத்தம் செய்யவே முடியாது.

நமது நாட்டினர்களே ஏழைகளை வஞ்சித்துக் கொள்ளை அடிக்கிறார்கள்; பாமர மக்கள் கடவுள் செயல் என்று கருதிக் கொள்வதால் தினமும் ஏய்த்துக்கொண்டே வருகின்றார்கள். அப்படிப்பட்ட பாமர மக்களை விழிக்கச் செய்து, நீங்கள் ஏழைகளாய், தரித்திரர்களாய் இருப்பதற்கு கடவுள் செயல் காரணமல்ல; உங்கள் முட்டாள்தனம்தான் காரணம்; ஆதலால், நீங்கள் கடவுள் செயலை லட்சியம் செய்யாதீர்கள் என்று சொன்னால் தான் செல்வந்தர்களின் அக்கிரமங்களைப் பாமர மக்கள் அறியக்



கூடும். அப்பொழுது கடவுள் செயலையும், அதிக மூடர்களிடம் கடவுளையும் மறுத்துத்தான் ஆகவேண்டும்.

இந்த நாட்டில் ஒருபுறம் ஏழைகள் பட்டினி கிடக்க, ஒருபுறம் சிலர் கோடீஸ்வரராய்க் கொண்டு தலைகொழுத்து டம்பாச்சாரி யாய்த் திரிவது கடவுள் செயல் என்றால், இந்த நாட்டு செல்வத்தை வெளியான் சுரண்டிக் கொண்டு போவதும், அவன் இங்கு ஆடம்பரமாய் வாழ்வதும் கடவுள் செயல் என்றுதான் சொல்லவேண்டும். ஆகையால், கடவுள் செயல்கள் ஒரு காரியத்திற்கும், மற்றொரு காரியத்திற்கும் மாறுபடுவது போலவே, தர்மமும் நீதியும்கூட ஒரு சமயத்திற்கும் மற்றொரு சமயத்திற்கும் மாறுபடவேண்டியதேயாகும்.

ஒரு காலத்தில் அரசர்கள் விஷ்ணு அம்சமாய் இருந்தார்கள். ஆனால், இப்போது அரசர்கள் கொள்ளைக்காரர்கள் என்று சொல்லப்படுகின்றார்கள். அதுபோலவே செல்வவான்கள் இந் தக் காலத்தில் "லஷ்மி புத்திரர்களாய் இருக்கின்றார்கள். "இன் னொரு காலத்தில் அவர்கள் பெருத்த வஞ்சகப் பகற்கொள்ளைக் காரர்கள் என்று அழைக்கப்பட்டு, பலாத்காரத்தில் அவர்களிடமி ருக்கும் செல்வங்களைப் பிடுங்கிக் கொள்ளப்பட வேண்டியவர் கள் ஆவார்கள்.

உதாரணமாக, மனுதர்ம சாஸ்திரத்தில் "சூத்திரன் பொருள் சேர்த்து வைத்திருந்தால், பார்ப்பனன் அதை பலாத்காரத்தினால் பிடுங்கிக் கொள்ளலாம்" என்று இருக்கின்றதை இன்றும் பார்க் கின்றோம். கொஞ்ச காலத்திற்கு முன் இது அமுலிலும் இருந்தி ருக்கிறதாம். இனி கொஞ்ச நாள் போனால், பார்ப்பான் பணம் வைத்திருந்தால் பார்ப்பனரல்லாதார் பலாத்காரமாய் பிடுங்கிக் கொள்ளலாம் என்று தர்மம் ஏற்பட்டாலும் ஏற்படும். அப்படி ஏற்படுவது முன்னைய வழக்கத்திற்கு விரோதம் என்பதாக யாரும் சொல்ல முடியாது.

காலம் போகப் போக, நேரில் உழுது பயிர் செய்ய முடியாதவனுக்கு பூமி இருக்கவேண்டியதில்லை என்றும், அப் படி இருந்தாலும் சர்க்காருக்கு வரி கொடுப்ப துபோல் ஒரு சிறு அளவுதான் பாத்தியமுண் டேயொழிய, இப்போது இருப்பதுபோல், உழுகின்றவன் தன் வயிற்றுக்கு மாத்திரம் எடுத்துக்கொண்டு, ஏன், சில சமயங்களில் அதற்கும் போதாமலும் இருக்க, பூமிக்கு உடையவனுக்கு பெரும் பாகம் கொடுப்பது என்கின்ற வழக்கம் அடிபட்டாலும் அடிபட லாம்.



அதுபோலவே, இன்று கோயில் கட்டுவது தர்மமாக இருக்கின்றது. ஆனால், பிற்காலத்தில் கோயிலை இடித்து விக்கிரங்களை உடைத்து, பள்ளிக் கூடங்களும், தொழிற்சாலைகளும் ஏற்படுத்துவது தர்மம் என்றானாலும் ஆகலாம். இதுபோலவே, அநேக விஷயங்களில் இன்றைய தர்மம் நாளைக்கு அதர்மமாகி தலைகீழாக மாறக்கூடும்.

அப்பேர்பட்ட நிலைமை வரும்போது இன்றைய நிலைமையெல்லாம் கடவுள் கட்டளை என்றால், அதை மாற்றமுற்படுகின்றவன் கடவுள் கட்டளையை மறுக்க, ஏன், கடவுளையே மறுக்கத் துணிந்தாகவேண்டும். கடவுளை மறுக்கத் துணிந்தவனே தர்மத்தின் பேரால் உள்ள இன்றைய கொடுமைகளை ஒழிக்க முடியும். அப்படிக்கில்லாமல், கடவுளுக்கும், மோட்சத்திற்கும் பயந்து கொண்டிருப்பவனால் ஒரு காரியமுமே செய்ய முடியாது என்பது உறுதி.

ஏனெனில், அரசியல், சமுக இயல், பொருளாதார இயல் ஆகியவைகளில் உள்ள இன்றைய கொடுமையான நிலையும், முட்டாள்தனமான நிலையும், அயோக்கியத்தனமான நிலையும் எல்லாம் கடவுள் கட்டளையாலும் மோட்ச சாதனங்களாலும், சாஸ்திர தர்மங்களாலுமே ஏற்பட்டவைகளாகும். ஆகையால் தான் அவ்விஷயங்களில் நான் அவ்வளவு உறுதியாய் இருக்கிறேன்.

*(21.5.1949 "குடிஅரசு" இதழில் "நாஸ்திகமும் சமதர்மமும்" என்ற தலைப்பில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*

# 31. எது நாஸ்திகம்?

"மக்களில் பலருக்கு ஆராய்ச்சி முயற்சியும், பகுத்தறிவும் இல்லாத காரணத்தால் கடவுள் என்னும் விஷயத்தில் பகுத்தறிவோடு யோசனை செய்து பார்ப்பதை விட்டுவிட்டு, தனக்கே புரியாதபடி ஒன்றை நினைத்துக்கொண்டு 'கடவுள் உண்டா, இல்லையா?' என்று கேட்கப்படுகிறது."



உலகத்திலேயே நாஸ்திகம் என்று சொல்லப்படுகின்ற வார்த்தையானது அநேகமாய் பெரும்பான்மையான மக்களால் வெறுக்கப் படக் கூடியதாய் இருந்து வருகின்றது. காரணம் என்னவென்று பார்ப்போமானால், அவ்வார்த்தையில் கடவுள் என்பது இல்லை என்கின்ற பொருள் அடங்கியிருப்பதாகக்

கொள்வதேயாகும். மக்கள் கடவுள் இல்லை என்று சொல்லப்படுவதைப்பற்றி மாத்திரமே ஆத்திரப்படவும், வெறுப்புக்கொள்ளவும், புரோகிதர்கள், பாதிரிகள், மவுல்விகள், பண்டிதர்கள் என்பவர்களால் கற்பிக்கப்பட்டு விட்டார்களே தவிர, கடவுள் என்பதைப்பற்றிய விளக்கம் யாவருக்கும் தெளிவாக்கப்படாமல் இருப்பதோடு, அது (கடவுள் என்பது) மனதிற்கும் சக்திக்கும் எட்டாதது என்பதாகவும், அப்படிப்பட்ட ஒன்றை நம்பித்தானாக வேண்டும் என்றும் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு விட்டது. இப்படி இருந்தபோதிலும், என்றைய தினம் கடவுள் என்கிற ஒரு வஸ்து உண்டு என்று கற்பிக்கப்பட்டதோ, அன்று முதலே கடவுள் இல்லை என்கின்ற வாதம் ஏற்பட்டு வெகுகாலமாகவே இவ்வாதப் பிரதிவாதம் நடந்து வருவதோடு, நாளது வரை முடிவு பெற முடியாமலே இருந்து வருகின்றது.

உதாரணமாக, கடவுள் இல்லை என்று சொல்லும்படியான பல மதங்களும்கூட, அதாவது சூனிய மதம், நிரீஸ்வர மதம், உலகாயத மதம், நாஸ்திக மதம் என்பது போன்ற பல உண்டு. என்றாலும், கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்கின்ற ஒரு கிளர்ச்சி வலுத்து அதை அமுலுக்குக் கொண்டு வந்து, மற்றும் உலகமெங்கும் அக்கொள்கையைப் பரப்ப பிரச்சாரம் செய்ய ஏற்பாடுகள் சாதாரணமாக இந்த இருபதாவது நூற்றாண்டில்தான் தைரியமாகவும், பலமாகவும் செய்ய முடிகின்றதென்பதாகவும் தெரிய வருகின்றது.

ஏனெனில், இதுவரையில் உலகத்தில் எந்த நாடும் பெரிதும் புரோகிதக் கூட்டத்தாரின் ஆதிக்கத்திலும், கடவுள் பிரச்சாரத்தின் பேரால் கவுரவமும், வயிற்றுப் பிழைப்பும் நடத்தி வந்தவர்களின் ஆதிக்கத்திலும் இருந்து வந்ததாலும், உலகத்திலுள்ள அரசாங்கங்களும் மதத்துடனும், கடவுளுடனும் பிணைக்கப்பட்டே இருந்ததாலும் கடவுளை மறுக்கும் அபிப்பிராயத்திற்கோ, கூட்டத்திற்கோ நாட்டில் ஆதரவு இல்லாமல் போனதோடு, அவர்கள்மீது தோஷமும் கற்பிக்கப்பட்டு அந்த அபிப்பிராயம் வலுக்க முடியாமலும் பரவ முடியாமலும் போய்விட்டது.



ஆனால், இந்த நூற்றாண்டில் கடவுள் மறுப்பு என்பது பாமர மக்களுக்குள் ஒருவித வெறுப்பும், அதிருப்தியும் தரக் கூடியதாயிருந்தாலும், மற்றும் கடவுள் பேரால், அல்லது கடவுள் சம்பந்தமான மோட்சம்,

சாஸ்திரம், கதை, புராணம், பிரச்சாரம் ஆகியவைகளின் பேரால் வாழ்வை ஏற்படுத்திக் கொண்டவர்களுக்கு மிகுதியும் ஆத்திரத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தாலும், நடுநிலையுள்ள அறிஞர்களால் இவ்விஷயம் ஆராய்ச்சி செய்யத் தொடங்கி ஆலோசிக்கப்பட்டு வருவதும், அவ்வித அபிப்பிராயக்காரர்களைப் பெரிதும் அறிவாளிகள் என்றும், ஞானவான்கள் என்றும் சொல்லுவதும், மதிப்பதுமாய் இருந்து வருகின்றன.

மேல்நாட்டு அறிவாளிகள் என்று சொல்லப்படுபவர்களுக்குள் இன்றும் அநேகர் நாஸ்திகர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். அது மாத்திரமல்லாமல், இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, ருசியா, சைனா முதலாகிய இடங்களின் முக்கிய பட்டணங்களில் கடவுளை நிலைப்படுத்தும் மதங்களை எதிர்க்கவும், நாஸ்திகத்தைப் பரப்பவும் என்றே பல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றிற்காக பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் முதலியவைகள் வெளியிடப்பட்டும் வருகின்றன.

குறிப்பாக அமெரிக்காவில் நியூயார்க் பட்டணத்தில் நாஸ்திகத்தை உலகமெங்கும் வியாபிக்கச் செய்வதற்கான சங்கம் என்னும் பெயரால் ஒரு ஸ்தாபனத்தை ஏற்பாடு செய்து அதன்மூலம் பல ஆண்டுகளாக நல்ல வேலைகள் மும்முரமாய் செய்யப்பட்டு வருகின்றன. அங்கிருந்து நமக்கு அனுப்பப்பட்டிருக்கும் அறிக்கையின்படி அச்சங்கமானது பிரச்சாரத்திற்காகவும், துண்டுப் பிரசுர விநியோகத்திற்காகவும் வருஷம் ஒன்றுக்கு இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேலாகவே செலவு செய்து வந்திருக்கிறது.

இப்போது இந்த வருஷத்தில் 'கிறிஸ்துவ மதம் வெடிப்புக் கண்டுவிட்டது' என்கின்ற பேராலும், 'மதம் என்றால் என்ன?', 'கடவுள் என்றால் என்ன?', 'கடவுள் இல்லாத முற்போக்கு' ஆகிய இவை போன்ற தலைப்புகளில் பல இலட்சக்கணக்கான



துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியாக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறது. சங்க அங்கத்தினர்கள் வருஷத்திற்கு வருஷம் 100-க்கு 50 வீதம் உயர்ந்துகொண்டு வருவதுடன், பல இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட்டு வெளிநாடுகளிலும்கூட பிரச்சாரங்கள் செய்யப்பட்டு வருவதாய்க் காணப்படுகிறது. வேறு பாஷைகள் மூலமும் சைனா

முதலிய இடங்களுக்கு ஆட்களை அனுப்பி இதுபோன்ற பிரச்சாரமும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதலும் நடைபெற்று வந்திருப்பதாகவும் காணப்படுவதோடு, ஒவ்வொரு கனவான் ஒவ்வொரு வேலையை ஏற்றுக்கொண்டு, திருப்திதரத் தக்க அளவு பிரச்சாரம் செய்திருப்பதாயும் காணப்படுகின்றது.

இப்படியே லண்டன், பாரீஸ் முதலிய பட்டணங்களில் சில ஸ்தாபனங்கள், அதாவது, 'தாராள நினைப்புக்காரர்கள் சங்கம்' என்றும், 'அறிவாளிகள் சங்கம்' என்றும், 'உண்மை நாடுவோர் சங்கம்' என்றும் பல சங்கங்கள் ஏற்படுத்தி அதுபோலவே பிரச்சாரமும் செய்யப்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் சிலதுக்கு வயது 40, 50-க்குமேல் ஆகியிருந்தபோதிலும் அவைகள் இப்போதுதான் மிக்க பிரபலமாயும், செல்வாக்காயும் நடைபெற்று வருகின்றன என்பதை தெரிவிக்கவே இவற்றை மேற்கொள்களாகக் குறிப்பிட்டோம்.

இனி அதனால் ஏற்படும் கெடுதல் என்ன? நன்மை என்ன? என்பவைகளைப்பற்றி யோசிப்போம். சாதாரணமாக மனிதன் நாஸ்திகனாயிருந்தால் அதாவது கடவுள் நம்பிக்கையில்லாதவனாயிருந்தால் ஒரு கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்கமாட்டான் என்றும், திருட்டு, பொய், மோசம், ஒருவன் சொத்தை ஒருவன் அபகரித்தல், முறை தவறி கலத்தல், மக்களை இம்சித்தல் முதலாகிய காரியங்கள் செய்ய பயப்படமாட்டான் என்றும் சொல்லப்படுகின்றது. இதைப்பற்றி கவனிக்கும் முன்பு, உண்மையான கருத்தில் இந்த கடவுள் நம்பிக்கையுள்ள மனிதன் எவனாவது உலகில் இருக்கின்றானா என்பதை முதலில் யோசிப்போம்.

சாதாரணமாக கடவுள் என்கின்ற பதத்திற்கு மக்களில் பெரும்பான்மையோர்கள் கருதிக் கொண்டிருக்கும் கருத்து என்னவெனில், சர்வ சக்தியும், அதாவது உலகம், உலகிலுள்ள ஜீவராசிகள், புல் பூண்டு, தாவரங்கள் முதலிய யாவும் தனது இச்சையால் உண்டாக்கப்பட்டு தனது சக்தியால் இயங்கச் செய்யப்படுகின்றதானதும், எங்கும் வியாபித்திருப்பதானதும், எல்லாவற்றையும் சமமாய் பார்ப்பதானதும், சுருக்கமாய்ச் சொல்வதானால் அவனன்றி



(அக்கடவுள் சித்தம் அன்றி) ஒரு அணுவும் அசையாததான சக்தியுடையதானது என்பதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

இக்கருத்து சரியா தப்பா என்று யோசிப்பதற்கு முன்னும், இப்படி ஒரு வஸ்து இருக்கின்றதா இல்லையா என்று முடிவு செய்வதற்கு முன்னும், இப்படி மக்கள் எண்ணிக் கொண்டிருப்ப தானது உலகத்திற்கு நன்மையா, தீமையா என்று முடிவு செய்வதற்கு முன்னும் இந்தப்படி உலகத்தில் எந்த மனிதனா வது உண்மையில் நம்பி இருக்கின்றானா? அந்தப்படி நம்பி இருப்பதற்குத் தகுந்தபடி அவனது மனம், மெய், மொழி ஆகியவைகளால் ஏற்படும் நடவடிக்கைகள் காணப்படுகின்ற னவா? அதாவது எந்த மனிதனுடைய நடவடிக்கையில் இருந்தா வது மேற்கண்ட சக்தியும், குணமும் கொண்ட ஒரு வஸ்துவை நம்பி நடக்கின்ற ஒரு மனிதனின் நடவடிக்கைகள் இவை என்று கருதும்படியாக இருக்கின்றனவா? என்பதை யோசிப்போமா னால், இதுவரை ஒரு மனிதனையாவது அம்மாதிரி நம்பிக்கை யின்மீது நடக்கின்றான் என்பதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை யென்றும், அந்தப்படி ஒரு கடவுள் இருப்பதாக ஒரு மனிதன் கூட தனது வாழ்க்கையில் எண்ணி இருக்க முடியவில்லை என்றும்தான் சொல்லவேண்டி இருக்கின்றதே தவிர வேறில்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

இது, அதாவது, இப்படிச் சொல்லுவதானது, சாதாரண மக்களிடையே மாத்திரமல்லாமல் கடவுள் பிரச்சாரம் செய்பவர்க ளிலாவது, கடவுளைக் கண்டவர்களாக சொல்லப்பட்டவர்களி லாவது, கடவுளுக்குச் சமமாகக் கருதும் சமயாச்சாரிகள், மதத் தைக் காப்பாற்றும் ஸ்தாபனத் தலைவர்கள் முதலாகியவர்களுக் குள்ளாவது, நாஸ்திகத்தைக் கண்டு பயந்து நடுநடுங்கித் துயரப் பட்டுக் கண்ணீர் வடிக்கும் ஆஸ்திகப் பண்டிதர்கள், சாஸ்திரி கள், வைதீகர்கள் முதலாகியவர்களுக்குள்ளா வது மற்றும் மகாத்மாக்கள், வேதாந்திகள், பெரியோர்கள் முதலியவர்களுக்குள்ளாவது இதுவரை ஒருவராவது இருந்ததாகவோ இருப்பதாகவே சொல்லுவதற்கில்லையே.



ஒவ்வொரு மனிதனும் தன்னை ஒரு தனி மனிதனென்றும், தனக்காக தான் செய்ய வேண்டிய காரியம் பல உண்டு என்றும்,

அவற்றை தினமும் செய்வதாகவும், அவனவன் இஷ்டப்பட்ட படி செய்துகொண்டும், அதனதன் பலனை அடைந்துகொண் டும், அதுபோலவே மற்றவர்களையும் செய்யும்படியும் தூண் டிக் கொண்டும், மற்றவர்கள் செய்வதில் குணதோஷம் கற்பித் துச் சொல்லிக்கொண்டும், அதற்காக விருப்பு வெறுப்பு காட்டிக் கொண்டும், மகிழ்ச்சி துக்கமடைந்து கொண்டும்தான் இருக்கின் றானே ஒழிய, கடவுளின் சர்வ சக்தியைப் பற்றியோ, சர்வ வியாபகத்தைப்பற்றியோ, சர்வ தயாபரத்தைப்பற்றியோ, சர்வ சமத்துவத்தைப்பற்றியோ நம்பி இருப்பவன் ஒருவனும் இல் லையென்றுதான் சொல்லவேண்டும்.

ஆகவே, இதிலிருந்து அப்படிப்பட்ட ஒரு வஸ்து இல்லை என்றும், இருப்பதாகவும் யாரும் நம்பி இருக்கவில்லை என்றும் தான் முடிவு கட்டவேண்டியிருக்கின்றதென்பது ஒரு பக்கம் இருந்தாலும், அப்படி ஒன்று இருப்பதாகக் கற்பித்து நம்பச் செய்வதினாலாகிலும் காரியத்தில் ஏதாவது - அதாவது கடவுள் நம்பிக்கையினால் ஏற்படுக் கூடும் என்று கருதுகின்ற, முன் சொன்ன காரியங்களாவது நடக்கின்றதா என்று பார்த்தால், திருடாதவன், பொய் சொல்லாதவன், பிறர் பொருளை வஞ்சிக் காதவன், முறை தவறி கலவி செய்யாதவன், பிறருக்கு இம்சை கொடுக்காதவன் முதலான காரியங்கள் செய்யாதவன் என்பவன் ஒருவனைக்கூட காண முடிவதில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. அன்றியும், திருட்டு, வஞ்சகம், பொய், முறை தவறி கலத்தல் முதலாகிய காரியங்கள் எவை என்று தீர்மானிப்பதே கஷ்டமான காரியங்களாக இருக்கின்றன. என்றா லும், மக்கள் எதை மேற்கண்ட மாதிரி குணங்கள் என்று கருதுகிறார்களோ அதைச் செய்யாமல் இருக்க இந்த எண்ணத் தையும், நம்பிக்கையையும் உண்டாக்குவதாலோ, நிலை நிறுத்து வதாலோ முடிகின்றதா என்பதுதான் இங்கு யோசிக்கத்தக்கதாகும்.



இது ஒருபுறமிருக்க, மேற்கண்ட - அதா வது கடவுள் என்பதற்குக் கற்பிக்கப்பட்ட குணங்கள் உடையதான ஒரு கடவுள் என் பது இல்லை என்றும், அல்லது இருக்க முடியாது என்றும் கருதுகின்றவர்களிடத்தி லாவது முன் சொல்லப்பட்ட திருட்டு,

பொய், வஞ்சகம், பிறரை இம்சிப்பது முதலிய குணங்கள், கடவுள் நம்பிக்கைக்காரர்களைவிட (ஆஸ்திகர்களைவிட) அதிகமாய் இருப்பதாகவாவது அல்லது பிற மக்களுக்கு ஆஸ்திகர்களைப் போன்ற நன்மை செய்யவில்லை என்றாவது சொல்ல முடியுமா என்று பார்த்தால், அதுவும் முடியாத காரியமாகத்தான் காணப்படுகின்றதே ஒழிய வேறில்லை.

மக்களில் பலருக்கு ஆராய்ச்சி முயற்சியும், பகுத்தறிவும் இல்லாத காரணத்தால் கடவுள் என்னும் விஷயத்தில் மேற்கண்ட விதமான காரியங்களைப் பற்றியெல்லாம் யோசனை செய்து பார்ப்பதைவிட்டு விட்டு, தனக்கே புரியாதபடி ஒன்றை நினைத்துக்கொண்டு, "கடவுள் உண்டா இல்லையா?" என்று கேட்பதும், "கடவுளை ஒப்புக்கொள்ளுகின்றாயா இல்லையா?" என்று கேட்பதும், "கடவுள் இல்லாமலிருந்தால் மக்களில் ஒருவருக்கொருவர் ஏன் வித்தியாசமாய் இருக்கவேண்டும்?", "ஒருவன் பணக்காரனாகவும், ஒருவன் ஏழையாகவும் ஏன் இருக்கவேண்டும்?", "ஒருவன் கூன், குருடு, நொண்டி, குஷ்டரோகி முதலியவை உடையவனாகவும், ஒருவன் நல்ல திடசரீரியாகவும் ஏன் இருக்கவேண்டும்?", "ஒருவனுக்கு ஏன் பத்து பிள்ளை, ஒருவனுக்கு ஏன் பிள்ளை இல்லை?" என்றும், "இருவர் ஒரே காலத்தில் தனித்தனியாக வியாபாரம் ஆரம்பித்தால், ஒருவர் நட்டமும், ஒருவர் லாபமும் ஏன் அடையவேண்டும்?" என்பதுபோன்ற கேள்விகள் கேட்டு, அதன்மூலம் மேற்கண்ட குணங்கள் கொண்ட கடவுள் என்பதாக ஒன்று உண்டு என்று மெய்ப்பிக்க முயற்சி செய்கிறார்கள். இம்மாதிரி கேள்விக்காரர்களை பகுத்தறிவு இல்லாதவர்கள், ஆராய்ச்சி சக்தி இல்லாதவர்கள் என்றுதான் சொல்லவேண்டுமே தவிர, வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

இப்படிப்பட்ட கேள்வி கேட்பவர்களை ஒரே ஒரு பதிலில் வாயடைக்கவேண்டுமானால், இம்மாதிரியாக தோற்றங்களில்



ஒன்றுக்கொன்று வித்தியாசங்கள் காணப்படுவதாலேயே (மேற்கண்ட குணமுடைய) கடவுள் என்பதாக ஒன்று இல்லையென்று சொல்லிவிடலாம்.

எப்படியெனில், சர்வ சக்தியுடைய கடவுள் ஒருவர் இருந்து சர்வத்திலும் புகுந்து சர்வத்தையும் ஒன்றுபோலப் பார்ப்பவராயிருந்தால், சர்வத்தையும் ஒன்றுபோலவே

சிருஷ்டித்திருக்கலாம் அல்லவா? வேறு வேறாகக் காணப்படுவதாலேயே, சர்வ சக்தியும் சர்வ வியாபகமும், சமத்துவமும் கொண்ட கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்பதுதான் பதிலாகும்.

ஏனெனில், நொண்டிக்கும், முடவனுக்கும், நல்லவனுக்கும், கஷ்டப்படுபவனுக்கும், கஷ்டப்படுத்துகிறவனுக்கும் "கடவுளே" காரணஸ்தனாயிருந்தால், கடவுளை சர்வ தயாபரத்துவமுடையவன் என்றும், பாரபட்சமில்லாத சர்வ சமத்துவ குணமுடையவன் என்றும் எப்படிச் சொல்ல முடியும்? இந்தப்படி பகுத்தறிவைக் கொண்டு சொல்லக்கூடிய சமாதானங்கள் ஒருபுறமாயிருக்க, ஆராய்ச்சியைக் கொண்டு அறியக்கூடிய சமாதானங்களைப்பற்றி சற்று கவனிப்போம். ஒரே கையால் அரிசியை கை நிறைய அள்ளி அள்ளி வேறாய் வைத்து, ஒவ்வொரு தடவை அள்ளிய அரிசியைத் தனித்தனியாய் எண்ணிப் பார்த்தால், அவற்றுள் ஒன்றுக்கொன்று எண்ணிக்கை வித்தியாசமிருப்பானேன்? அந்த மனிதன் அதே கையால் அதே நிமிஷத்தில் அதே குவியலிலிருந்து அள்ளினவைகள் ஏன் வித்தியாசப்படுகின்றன?

ஒரே பூமியில் ஒரே வினாடியில் விதைக்கும் ஒரே மாதிரி விதைகள் சில முளைத்தும், சில முளைக்காமலும், முளைத்தவைகளில் சில வளராமல் கூழையாகவும், சில அதிக உயரமாகவும், சில அதிகமான மணிகள் கொண்ட கதிராகவும், சில முளைத்து நன்றாய்த் தழைத்தும் ஒரு மணிகூட இல்லாத வெறும் கதிராகவும் இருக்கக் காரணம் என்ன?

ஒரு வினாடியில் ஒரு பூமியில் நட்ட செடிகள் ஒன்று பல கிளைகளுடனும், ஒன்று சொற்ப கிளைகளுடனும் வளருவதும், ஒன்று பதினாயிரக்கணக்காகக் காய்ப்பதும், ஒன்று நூற்றுக்கணக்காகக் காய்ப்பதும், ஒன்று பூ விட்டு எல்லாம் கருகி உதிர்ந்து விடுவதும், ஒன்று பூ விடாமலும், பிஞ்சு விடாமலும் வரடாயிருப்பதும் என்ன காரணம்? கடவுள் ஒருவர் இருந்தால் இவைகள் எல்லாம் அதனதன் இனத்தில் ஏன் ஒன்று போல் இருக்கக் கூடாது?



ஒரு சமயம் கடவுளே இந்தப்படி செய்திருப்பார் என்று சொல்லுவதானால், அம்மரம், செடி, தானியம் முதலியவைகள்

இப்படி பலன் அடைவதற்குக் காரணம் என்ன என்பது போன்ற கேள்விகளுக்கு என்ன சமாதானமோ அதுதான் மனிதர்கள் சம்பந்தமான கேள்விகளுக்கும், சமாதானம் என்பது தானாகவே புலப்படும்.

*(30.7.1950 "விடுதலை" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*

# 32. ஆத்மா நம்பிக்கை ஒழிந்தால் கடவுள் நம்பிக்கை ஒழியும்

இயற்கையெய்தல் என்கின்றதின் தத்துவம் அதாவது மனிதனின் அவயங்கள் தத்தமது வேலைகளைச் செய்யும் சக்தியை இழப்பதோடு, மனிதனின் காற்றை உள்ளே வாங்கி வெளியே விடக்கூடிய காற்று வாங்கிப் பொறியின் இயக்கம் நின்று போய்விடுகிறபோதுதான் மனிதன் இயற்கையெய்தினான் அல்லது முடிவெய்தினான், செத்துப் போய்விட்டான் என்று சொல்லப்படுகின்றது.

இது மனிதனுக்கு மட்டுமல்லாமல், மிருகங்கள் முதல் புழு, பூச்சி, கிருமி, புல் பூண்டு, தாவரங்கள் முதலியனவின் தன்மையும் இந்தப்படியேதான் இருக்கின்றன. என்னவெனில், இயற்கையெய்துதல் என்பதில் பொது விதியாக இருக்கின்றது. இயற்கையெய்துதல் என்பதன் பொருள் என்னவென்றால், காணப்படும் பொருள், ஜீவன் உள்பட எல்லாமே தோன்றுதலும், தோன்றியவை யாவும் மறைவதுமான குணத்தை இயற்கையாகக் கொண்டவை ஆனதால் மாற்றமடைந்ததையும், மறைந்ததையும் இயற்கை எய்திற்று என்கின்றோம்.


"மனிதன் இயற்கையெய்திய பின்னர் அவனுடைய ஆத்மா இங்கேயே உலவி வருகிறது அல்லது அவரவர்கள் செய்த வினைப்பயனின்படி பரலோகத்தில் அவையவைகள் பெறக்கூடிய இடங்களைப்பெற்று, அதாவது மோட்ச நரகங்களை அடைந்து விடுகின்றன அல்லது பிதுர்லோகத்தில் இருக்கின்றது அல்லது மறுஜன்மம் அடைந்துவிட்டது அல்லது பிசாசாக ஆகிவிட்டது" என்பதெல்லாம் அசல் முட்டாள்தனமாகும்.



உலகத்தில் ஏறக்குறைய எல்லா மதத்தார்களும் ஆஸ்திகர்களும், ஆத்மா என்கின்ற ஒரு வஸ்து உண்டு என்றும், அது சூட்சும தன்மை, அதாவது கண்களுக்குத் தென்படாதது என்றும், மனிதன் செத்த பிறகு, மனிதன் ஆத்மாவோடு இருந்த காலத்தில் அந்த சரீரத்தால் செய்யப்பட்ட காரியங்களின் பலாபலன்களை அது அனுபவிக்கிறது என்றும் கருதுகிறார்கள். உலகத்திலே ஆத்மா என்கிறதைப்பற்றி நம்பிக்கையில்லாதவர்கள் பவுத்தர்கள்தான். அவர்கள் மதத்தில்தான் 'ஆத்மா' என்கிற ஒன்று இல்லை. மனிதன் இறந்தால் அத்தோடு அந்த மனித சம்பந்தமான யாவும் தீர்ந்தது என்றே கருத்து இருந்து வருகிறது. இந்த பவுத்தர்கள் இன்று உலகில் 60, 70 கோடிப் பேர்கள் இருக்கிறார்கள்.

ஒரு கடிகாரத்திற்கு அதன் சாவியின் அதாவது விசைத் தகட்டின் வளைவு சக்தி இருக்கும்வரையிலே கடிகாரம் இயங்குகிறது. மணி காட்டுகிறது. அந்த சாவியின் சக்தி நின்றவுடனே கடிகாரமும் நின்றுவிடுகிறது. அப்போது அந்த கடிகாரத்தின் 'ஆத்மா' மேலே போயிற்றென்றா சொல்ல முடியும்? முடியாதே. கடிகாரத்தின் விசை தீர்ந்து அசைவு நின்றுவிட்டது என்பதுதானே உண்மை. அதுபோலத்தானே மனிதர்களின் அசைவு சக்தி, இயற்க சக்தி அற்றுப் போனால், செத்துப் போனால் வெறும் பிணம் ஆகிவிட்டான் என்கிறோம்.

இந்து மதத்தில் மனிதரின் சாவைப்பற்றியும், ஆத்மாவின் தன்மையைப்பற்றியும் ஏராளமான புளுகு மூட்டை உண்டு. இவையெல்லாம் ஒரு கூட்டத்தார் நோகாமல் பாடுபடாமல் வாழ்வதற்காக, நம்முடைய முட்டாள்தனத்தையே கைமுதலாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட சங்கதிகளாகும். அதை கொஞ்சங்கூட சிந்தித்துப் பார்க்காமல், பகுத்தறிவு கொண்டு யோசித்துப் பார்க்காமல் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றி வருகிறார்கள். ஆத்மா, மோட்சம், நரகம் என்கின்ற சொற்கள் தமிழ் சொற்களே அல்ல. தமிழிலும் அவைகளுக்கு ஏற்ற சொற்களே கிடையாது.



சாதாரணமாக இந்து மதத்திலே ஆத்மாவைப்பற்றி பலவித கருத்துக்கள் கூறப்படுகின்றன. அவற்றில் ஒன்று என்னவென்றால், "ஒரு ஆத்மாவானது இன்னொரு உடலில் போய் ஒட்டிக்கொண்ட பிறகுதான் ஒரு உடலை விடுகிறது" என்பது ஆகும்.

அப்படி இருக்கும்போது, இறந்தவர்களுக்கு ஆக நாம் செய்யும் திதி, திவசம், சடங்கு எதற்கு ஆகும் என்று யோசித்துப் பாருங்கள். இரண்டாவதாக, ''இறந்த பின் உடனேயே அவரவர் களின் வினைப் பயனுக்கேற்ற மாதிரியில் மறுபிறவி எடுத்து விடுகிறார்கள்'' என்று கூறப்படுகிறது.

அப்படிப் பார்த்தாலும் உடனே பிறவி எடுத்து இந்த லோகத்துக்கு வந்துவிடுகின்ற ''ஆத்மாவுக்கு'' நம்முடைய திதியைக் கொண்டு என்ன பலன் ஏற்படப் போகிறது? மற்றொரு கொள்கை என்னவென்றால், செத்தவன் ஆத்மா உடனே மோட்சத்திற்கோ, நரகத்திற்கோ போய் விடுகிறது என்று சொல்லப்படுகிறது. அந்தப்படி நரகத்துக்கோ, மோட்சத்திற்கோ போய்விட்ட ஆத்மாவுக்கு நாம் செய்வது, கொடுப்பது எப்படி பயன்படும்?

பார்ப்பானுக்குச் சலிக்காமல் கொடுப்பதுமாகிய காரியத்தைச் செய்தால், மேலுலகத்தில் இருக்கும், இங்கிருந்து போன உயிர்க்கு நல்ல கதி கிடைக்கும் என்றால், இங்கே இருக்கிற எல்லோரும் செய்கிற அயோக்கியத்தனங்களையெல்லாம் பித்தலாட்டங்களையெல்லாம் செய்துவிட்டு, தான் இறந்தபின் தனக்காக தானம் முதலியவைகள் ஏராளமாக பார்ப்பானுக்குக் கொடுக்கச் சொல்லிவிட்டு அயோக்கியத்தனங்களை கொஞ்சங்கூட அஞ்சாமல் செய்யக்கூடும் அல்லவா? அப்படியானால், ''கடவுள்'' ஒரு ஏமாந்த முட்டாளா?

நாம் இங்கே பார்ப்பானுக்கு கொட்டியழுதால் நம்முடைய ''பிதிர்கள்'' நலமுறை முடியுமா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

''ஆத்மா'' என்கிற நம்பிக்கை இருப்பதனால்தான் கடவுள், மோட்ச நரகம், பேய், பிசாசு முதலிய நம்பிக்கைகள் இருக்கின்றன.



போகிற உலகிற்கு புண்ணியம் கொண்டு செல்லவேண்டும் என்பதற்குத்தான் மனிதன் கடவுளை வணங்குகிறான். 'ஆத்மா' என்கிற நம்பிக்கை இருப்பதினால்தான் அந்த 'ஆத்மா' செய்திருக்கிற காரியங்களுக்கு ஏற்ற முறையில் அவைகள் வாழ இரு லோகங்கள் கற்பிக்கப்பட்டும், அந்தந்த ஆத்மாக்களுக்கு 'தீர்ப்பு' கூறும் கடவுள்களும் படைக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆத்மா என்கிற நம்பிக்கை இல்லாவிட்டால், சாதாரணமாகவே கடவுள் நம்பிக்கை எடுபட்டுப் போய்விடும்; மன்னிப்பு பெற லாம் என்கின்ற நம்பிக்கையும் போய்விடும். மனிதர்கள் யாவ ரும் யோக்கியமாய் நடப்பார்கள். எவரும் பணம் சேர்க்கமாட் டார்கள்.

*(6.9.1950 அன்று சென்னை பெத்துநாய்க்கன்பேட்டையில் நடைபெற்ற நீத்தார் நினைவு நாள் நிகழ்ச்சியில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி - ''விடுதலை'' 7.9.50)*

# 33. வேதமும், தெய்வங்களும்

நான் இன்று கடவுளையோ, மதங்களையோ ஒழிக்கப் பாடுபடுகிறேன் என்று சொல்லப்படுவது சரியல்ல. பொதுவாக எல்லா மதங்களையும், கடவுளையும் ஒழிப்பதை நான் பாமர மக்களிடையில் செய்யும் தொண்டாகக் கொள்ளவில்லை. அது பெருத்த அறிவாளிகளிடம், தர்க்கவாதிகளிடம் செய்யவேண் டிய தொண்டு ஆகும்.

ஆனால், இப்போது நான் ஒழிக்கப்படவேண்டும் என்று சொல்லுவது வேதமதம் அல்லது தேவமதம் ஆகும். வேதமதம் அல்லது தேவமதம் என்பதுதான் இப்பொழுது பெரும்பாலான திராவிட மக்களிடம் இருக்கும் மதம் ஆகும். வேதமதம் என்றால் வேதத்தை ஒப்புக்கொண்டு வேத விதிப்படி மக்கள் நடத்தப்பட வேண்டும் என்பது ஆகும். தேவமதம் என்பது, சர்வ வல்லமை யுள்ள கடவுள் என்பதாக ஒன்று இல்லை; தேவர்கள் என்பதாக பல தெய்வங்கள் உண்டு; அவைகளை மக்கள் வணங்கும்படி யாகச் செய்யவேண்டும் என்பது.

தெய்வம் என்பதே தேவ் என்ற அடிப்படைச் சொல்லிலி ருந்து ஏற்பட்டதுதான். இந்தக் கருத்து வேதத்தில் இருக்கிறது. 'தேவ்' என்ற பதத்துக்கு 'பிரகாசமான' என்பது அதன் தத்துவப் பெயர். அதன் ஆகுபெயர் 'வானம்' என்பது ஆகும். இது அய்ரோப்பிய பல மொழிகளிலும் உள்ள கருத்தாகும். ஆரியர்களும் மற்றும் பல அய்ரோப்பிய நாட்டு பழங்கால மக்களும் வானத்தையும், ஜோதியையும் முக்கிய தத்து வமாய்க் கொண்டு அநேக தேவர்களை உற்பத்தி செய்து அவைகளை ஒவ்வொரு



காரியத்திற்கு ஒவ்வொரு கர்த்தா என்ற கருத்தில் கொண்டாடி வந்தார்கள். அப்படிப்பட்ட தேவர்கள் பலரில் வருணன் - மித்திரன் - சூரியன் - விஷ்ணு - உஷன் - உஷை - அஸ்வினி - தேவர் இவர்கள் ஆகாயத்துக்கும் மேலே இருக்கிறவர்கள்; இவர்களைத்தான் மேல்லோக தேவர்கள் என்று சொல்லுவது.

பிறகு ஆகாயத் தேவர்கள் வாயு - இந்திரன் - ருத்திரன், மின்னல் தேவதைகள் - பார்ஜனியன் - மாருதர் முதலியவர்கள் ஆவார்கள். இவை தவிர பூமியில் உள்ள தேவர்கள் என்பதாக சில தேவர்கள்; அவர்கள் அக்னி - சோமன் - யமன் - பிருத்வி (பூமி); இவர்கள் பூமியில் உள்ள தேவர்கள் ஆவார்கள். பிறகு காமன், சரசுவதி, பிரகஸ்பதி, பிரஜாபதி, வாக்கு விசுவாசம், கோபம் என்பதாக சில தேவர்கள் குணவியக்த தேவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.

இவை தவிர, விசுவகர்மன், காந்தருவர், அப்சரஸ், குதிரை, பசு, சர்ப்பம், விருட்சங்களில் சில, பலிக்கு உரிய சில உபகரணங்கள் ஆகியவைகளும் கடைசியாக பிதிர்க்களும் தேவர்களாகக் கருதப்பட்டு பூஜித்தும் வந்திருக்கிறார்கள். இன்று நமக்கு கடவுள்களாக இருந்து வருபவை இந்த ஆரியர்களால் தேவர்கள் என்று கருதப்பட்ட மேற்கண்டவைகள்தான். நமக்கு வேதம் என்று சொல்லப்படுவதும் இந்த மேற்கண்ட தேவர்களுடைய ஸ்தோத்திரமும் ஆரியர்களுடைய தனி இன, சுயநல ஸ்தோத்திரங்களும்தான்.

ஆகவே, இந்த இரண்டையும் அதாவது மேற்கண்ட தேவர்களான கடவுள்கள் என்பவர்களையும் மேற்கண்டவர்களின் ஸ்தோத்திரம் என்பவைகளான வேதங்கள் என்பதையுந்தான் நான் கண்டிக்கிறேன். இது நமக்கிடையில் சுமார் 2000 வருடங்களின்போது ஆரியர்களால் புகுத்தப்பட்டவைகளே தவிர, திராவிட மக்களுக்கு ஆரியர்களுக்கு முந்தின பூர்வ காலத்தில் இருந்தவை அல்ல.



இவற்றை நான் மாத்திரம் கண்டிக்கவில்லை. 2000 ஆண்டுகளுக்கு முன்னாலேயே புத்தர் கண்டித்திருக்கிறார்; வள்ளுவர் கண்டித்திருக்கிறார்; சமணர்கள் பெரும் அளவுக்குக் கண்டித்திருக்கிறார்கள்; அதற்குப் பிறகு சித்தர்கள், ஞானிகள் என்னும் பேரால் ஏராளமான திராவிட மக்கள் கண்டித்திருக்கி

றார்கள். இவை மாத்திரமல்லாமல், ஆரியர்களுடைய வேத புராண இதிகாசங்களில் ராட்சதர்கள், அரக்கர்கள், அசுரர்கள், சுரர்கள் என்று காணப்படுகிற அநேக அரசர்கள் மற்றும் பல பிரபலஸ்தர்களும் எதிர்த்திருப்பதாகவும், அவர்களை ஒழிக்கவே இந்த தேவர்கள் அவதாரம் எடுத்தும் தெய்வீக சக்தியோடு தோன்றியும் மனிதனாக வந்து ஒழித்திருப்பதாகவும் சொல்லப்படுவதிலிருந்து நன்றாகக் காணக் கிடக்கின்றன. ஆகவே, நான் ஒழிக்கப்பட வேண்டும் என்று சொல்லுகின்ற மேற்படி வேதங்களும், தேவர்களும் ஒழிக்கப்பட வேண்டுமென்ற முயற்சி இன்று மாத்திரம் தோன்றியது அல்ல என்பதோடு, ஒழிக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறவனும் நான் மாத்திரம் அல்ல என்பதும் விளங்கும்.

உலக மக்கள் யாவருடைய நலனுக்கும் ஒன்றுபோல் பொருத்தமான ஒரு கடவுள் விஷயம் வேறு; அதுபோலவே உலக மக்கள் யாவருக்கும் பொருத்தமான ஒரு நீதி நூல் அல்லது வேதம் என்பது வேறு. ஆனால், இப்போது நான் கூறுவது தனிப்பட்ட ஒரு மிகச் சிறிய இனத்தாருடைய வாழ்வுக்கும், அதன் வழிகாட்டுதலுக்கும் ஆக மாத்திரம் இருக்கின்ற தேவர்கள், வேத சாஸ்திரங்கள் என்பவைகளைப்பற்றித்தான் நான் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறேன் என்பதை திரும்பவும் எடுத்துக்காட்டுகிறேன்.

வேதம் என்பது எப்போது, யாரால் சொல்லப்பட்டது என்பதை மறைப்பதற்கு ஆகவே அது அனாதியென்றும், மனிதனால் சொல்லப்படாத 'அபௌருஷம்' என்றும் சொல்லப்படுகிறது. வேதம் ஒரு பாஷையை - மொழியை அடிப்படையாகக் கொண்டது. பாஷையும் மொழியும் அனாதியாக இருக்கக் கூடுமா? அப்படியானால் சமஸ்கிருத பாஷையும் மொழியும் அனாதியென்று தானே கொள்ளப்பட வேண்டும். சமஸ்கிருத பாஷைக்கு ஆயுள் இருக்கும்போது, காலம் இருக்கும்போது, அந்தப் பாஷையில் சொல்லப்பட்ட மொழிகளுக்கு, கவிகளுக்கு எப்படி காலம் இல்லாமல் போக முடியும்; அதாவது அனாதியாய் இருக்க முடியும்?



அன்றியும் வேதம் சொற்களால் புனையப்பட்டிருக்கும்போது அது எப்படி மனிதனால் சொல்லப்படாத அசரீரியாய் இருக்க முடியும்? கடவுள் சொன்னார் என்று

சொல்லுவது முட்டாள்தனம் அல்லது அயோக்கியத்தனமாகத் தானே இருக்க முடியும்? கடவுளுக்கு உருவம் இல்லை என்றல்லவா முடிவு செய்கிறோம். ஆதலால் வேதம் ஏதோ ஒரு காலத்தில் பல காலத்தில் யாரோ ஒருவரால் அல்லது பல பேர்களால் சொல்லப்பட்டவைகளாகத்தான் இருக்க வேண்டும்.

எப்படிப்பட்டதானாலும், ஆராய்ச்சிக்கும் அனுகூலமான பயனுக்கும் உரியதாக இருந்தால்தானே மதிக்கப்படத்தக்கதாக இருக்க முடியும். அப்படிப் பார்த்தாலும் வேதத்திலுள்ள விஷயங்கள் ஆராய்ச்சி அறிவுக்கு ஏற்றதாக இருக்கின்றதா? அல்லது அதன் கருத்துகள் மக்களுக்குப் பொதுவாக நன்மையளிக்கக்கூடியதாக இருக்கிறதா?

மற்றும், இந்த வேதம் என்பதை நம் மனித சமுதாயத்தில் மிகச் சிறு கூட்டத்தினரான பார்ப்பனர்கள் தங்கள் சாதியாரைத் தவிர வேறு எவரும் படிக்கக் கூடாது. காதினால் கேட்கக்கூடாது. அதனைக் கண்ணினாலும் பார்க்கக்கூடாது. எந்தக் காரணத்தாலும் வேறொருவன் மனதிலும் அந்தக் காரியம் இருக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள்.

முதலாவது வேதம் எழுத்தில் இல்லாமலே இருக்கும்படி செய்யப்பட்டு விட்டது. பிறகு வேறு எவனும் தெரிந்து கொள்ள முடியாமலேயே செய்யப்பட்டு விட்டது. காரணம் என்ன? அதிலுள்ள ஆபாசங்கள் மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது என்பதும், காலத்திற்கு ஏற்றபடி அவ்வப்போது கருத்துகளை சேர்த்துக் கொள்ளலாம், விலக்கிக் கொள்ளலாம் என்பதும்தானே! மற்றும் அப்படிப்பட்ட வேதமும் ஒரே பொருள் கொண்டதாக இன்று இல்லை. பார்ப்பனர்களே அதை பல பொருள் கொண்டதாக மொழி பெயர்த்து விட்டார்கள்.

உதாரணமாக, சங்கராச்சாரி மொழிபெயர்த்ததுதான் ''ஸ்மார்த்த'' சமயமாக இருக்கிறது; ராமானுஜ ஆச்சாரி மொழி பெயர்த்ததுதான் வைணவ சமயமாக இருக்கிறது; மாத்துவாச்சாரி மொழி பெயர்த்தது தான் ''மாத்துவ'' மதமாக இருக்கிறது; சிவானந்த சரசுவதி மொழி பெயர்த்ததுதான் 'ஆரிய சமாஜ்' சமயமாக இருக்கிறது. இப்படியாக இன்னும் பல இருக்கலாம்.



வேதத்தின் நிலைமை இப்படியிருக்க இனி தேவர்கள் நிலைமையை எடுத்துக் கொண்

டால் சிவன், விஷ்ணு, காளி, சூரியன், அக்கினி, இந்திரன், வருணன் முதலிய ஏராளமான தேவர்கள் இன்று நமக்கு கடவுள்களாக ஆக்கப்பட்டு விட்டன. இவர்களில் எந்த தேவர்களால், யாருக்கு என்ன நன்மை என்று சொல்லுவதற்கு ஒரு ஆதாரமும் இல்லை. சூரியனையோ, அக்னியையோ, வருணனையோ, விஷ்ணுவையோ, சிவனையோ இன்னும் யாரையோ எதற்காக நாம் வணங்க வேண்டும்? எதற்காக இவர்களுக்கு கோயில் பூஜை உற்சவம் முதலியவைகள் நடத்தப்பட வேண்டும்? இந்த தேவர்களையெல்லாம் ஏன் மனித ரூபமாய்க் கொள்ள வேண்டும்?

மனித ரூபமாகக் கொள்ளுவது ஒருபுறம் இருந்தாலும் இவர்களுக்கு படையல் அதாவது உணவுப் பண்டம், போக போக்கிய பண்டம் முதலியவைகளை வைத்து எதற்காக படைக்க வேண்டும்? வேதாந்திகள் என்பவர்களும் ஞானிகள் என்பவர்களும் சித்தர்கள் என்பவர்களும் இவைகளில் எதையாவது ஒப்புக் கொள்கிறார்களா? மனிதன் எப்படி உடை உடுத்திக் கொள்ளுவது, எப்படி உணவு அருந்துவது, எப்படி வீடு கட்டிக் கொள்ளுவது என்பவைகளைப் போலவே எப்படி கடவுள் தன்மையை வைத்துக் கொள்ளுவது என்கிற மாதிரியில் ஒரு தன் இஷ்டமான பாவிப்பாகத்தான் இருக்கிறதே தவிர மற்றபடி இவைகளுக்கு தனி மரியாதை, அவசியம் என்ன இருக்கிறது?

இதனால் நன்மை ஒன்றும் இல்லையென்றாலும் மனிதனுடைய அறிவுக்கும் பொருளுக்கும் ஆக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் எவ்வளவு கேடுகள் இருந்து வருகின்றன? கேடுகள் ஒருபுறம் இருந்தாலும் இவற்றால் மனிதர்கள் எவ்வளவு அயோக்கியர்களாக ஆக நேரிடுகிறது என்பதானவைகளை ஆறறிவு படைத்த மனிதன் சிந்திக்க வேண்டாமா? மற்றும் வேதகாலத்தையும் இன்றைய காலத்தையும் பார்த்தால் வேதகாலமாகிய 2000, 3000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமை இன்று எவ்வளவு மற்றாம் அடைந்து இருக்கின்றது. அதையாவது மனிதன் சிந்திக்க வேண்டாமா?



(8.3.1953 "விடுதலை" நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது)

# 34. பிள்ளையார் உடைப்பு

தமிழ்நாட்டில் சூத்திரர்கள் என்று சொல்லப்படுபவர்களாகிய நாம் 100-க்கு 72 பேர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கை உடையவர்களாக இருக்கிறோம். பாக்கி 28 பேர்களில் பஞ்சமர்கள் 15 பேர்களும், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் 10 பேர்களும், பார்ப்பனர் 3 பேர்களும் ஆக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

பஞ்சமர்களில் 15 விகிதத்துக்கு ஏற்ப அவர்களுக்கு கல்வி, உத்தியோகம் முதலியவை அளிக்கப்பட வேண்டும் என்று அரசியல் சட்டத்திலேயே நிபந்தனை ஏற்பட்டு அந்தப்படி அளிக்க சர்க்கார் முன்வந்து வேண்டிய உதவிகளும் செய்து வரப்படுகிறது. அதுபோலவே முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் அளிக்க அரசியல் சட்டத்தில் நிபந்தனை இல்லாவிட்டாலும் அவர்கள் தக்க அளவுக்கும் விகித அளவுக்கு மேலும் கல்வியும் உத்தியோகமும் அடைந்து வருகிறார்கள்.

அடுத்த குறைந்த எண்ணிக்கை விகிதக்காரரான பார்ப்பனர்கள் 100-க்கு 3 பேர்களையும்விட குறைந்த விகிதக்காரர்களானாலும் அவர்களுக்கு எந்த விகிதாசாரமும் இல்லாமல் 100-க்கு 100 வீதம் கல்வியும், 100-க்கு 100 வீதம் உத்தியோகம் பதவி சுகவாழ்வு வசதியும் வாய்ப்பும் பெற்று சகல துறைகளிலும் மேன் மக்களாகவும் தலைவர்களாகவும் எஜமானர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

ஆனால், மேலே குறிப்பிட்ட சூத்திரர்கள் என்பவர்களாகிய நாம் 100-க்கு 72 வீதம் பெருத்த எண்ணிக்கை விகிதம் உள்ளவர்களாக இருந்தும், கல்வியில் 100-க்கு 10 வீதமும், உத்தியோகம் பதவிகளில் 100-க்கு34 வீதமேதான் அனுபவித்து வருகிறோம். ஏன் எனில் நம்மில் கற்றவர்களே 100-க்கு 10 இருக்கும்போது அதில் 4ல் 1, 8-ல் 1 பேருக்குத்தான் உத்தியோகம் கிடைக்க முடியும். அதுவும் பார்ப்பனர் எடுத்துக் கொண்டதுபோக மீதி. ஆதலால் நாம் கல்வியிலும், அரசாங்கம் முதல் மற்ற உத்தியோக பதவிகளிலும் நமக்கு மற்றவர்களைப் போன்ற விகதம் ஏன் அடையவில்லை என்பதுபற்றிய கிளர்ச்சிதான் இன்று தமிழ்நாட்டில் திராவிடர் கழகம் செய்துவரும் கிளர்ச்சியின் முக்கியத்துவமாகும்.



இந்தக் கிளர்ச்சியானது இன்று இந்த நாட்டில் தன்னை தமிழன், திராவிடனுக்கு - தமிழனுக்குப் பிறந்த தமிழன் என்று கருதிக் கொண்டிருக்கும் எல்லா சூத்திரன் என்பவர்களுக்கும் உரிமையான கிளர்ச்சியாகும். இந்தக் கிளர்ச்சியை ஒழிப்பதற்காக பார்ப்பனர்கள், சூத்திரர்களில் சிலரை எப்படியோ தங்கள் வசப்படுத்திக் கொண்டு அவர்களையே விட்டு எதிர்க்கச் செய்கிறார்கள்; அடக்கப் பார்க்கிறார்கள்.

பார்ப்பனர்களில் எந்தப் பார்ப்பனன் படித்தவனானாலும், வக்கீல், டாக்டர், வாத்தியார் முதலிய பதவிகளில் இருப்பவனானாலும், பூமி, வியாபாரம், யந்திரசாலை வைத்து நடத்தல் முதலிய காரியம் செய்பவனாக இருந்தாலும், உத்தியோகத்தில் இருந்தாலும், தன் ஜாதியை முன்னுக்குக் கொண்டு வரும் வேலையிலும், திராவிடர் கழகத்தை ஒழிக்கும் வேலையிலும் மிகவும் முன்னணியில் இருந்து கொண்டு மதக் கட்டளைபோல் வேலை செய்து முன்னேறி வருகிறார்கள்.

ஆனால், தமிழனோ, சூத்திரனோ என்றால், அவன்வன் நலத்தை மாத்திரம் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்பது மாத்திரமல்லாமல், கழக முயற்சிக்கே - தமிழர் வாழ்வுக்கே கேடு செய்பவர்களாகவும் இருந்து வருகிறார்கள். தமிழ்ப் புலவர்கள் முதல் தமிழ் கோடீஸ்வரர்கள், தமிழ் மந்திரி, சட்டசபை மெம்பர்கள், கலெக்டர்கள், ஜட்ஜுகள் ஈறாக உள்ளவர்களோ எவரும் தங்கள் சுயநலத்திற்குப் போட்டி போட்டுக் கொண்டு பார்ப்பனர்கள் காலில் விழுந்து எதை விட்டுக் கொடுத்தாவது பயன் பெறப் பார்க்கிறார்கள்.

இந்த நிலையில் திராவிடர் கழகம் சூத்திரத் தன்மையை ஒழிக்கவும், சூத்திரர்களை மனிதத் தன்மை அடையச் செய்யவும் செய்ய வேண்டிய வேலை என்ன என்று சிந்தித்தால், சட்டசபை மூலம், பதவி பெறுவதன் மூலம், பணக்காரன் விளம்பரக்காரன் ஆவதன் மூலம் முடியாது என்று தெரிந்துகொண்ட நாம், சூத்திரத் தன்மைக்கு ஆதாரமாயிருக்கிற ஆதாரங்களை - ஆதரவுகளை அழித்து ஒழிக்க வேண்டிய வேலையையாவது செய்ய வேண்டுடாமா என்று கேட்கிறேன்.



சூத்திரத் தன்மை நமக்கு இருந்து வருவதற்கும், அது நாளொரு மேனியும் பொழு

பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருவதற்கும், மதம் காப்பாற்றப்படுவதற்கும் வேத சாஸ்திர புராணங்களும், நமது எதிரிகளான பார்ப்பனர்கள் பிராமணர்களாகவும், ஆதிக்கக்காரர் களாகவும் வாழ்வதற்கும் கடவுள்களும் கோயில்களுமல்லவா காரணம் என்று கேட்கிறேன். ஆம் என்றால் இவைகள் அனைத்தையும் ஒழித்துக்கட்ட வேண்டாமா என்று தமிழர்களை - சூத்திரர்களை கேட்கிறேன்.

நான் இதுதான் சரியான வழி; சூத்திரத் தன்மை ஒழிவதற்கும், நம் பாமர, ஏழை, தாழ்ந்த சாதி என்னும் பாமர மக்கள் தங்கள் இழிவு நீங்கி விகிதப்படி கல்வி, பதவி பெற்று முன்னேறுவதற் கும் இதுதான், அதாவது இந்த இந்துமதம், இந்து வேத சாஸ்திர புராண இதிகாசங்களுடன் இந்துக் கடவுள்கள் என்னும் உருவ வழிபாடுகள், கோயில், பூசை, உற்சவம் முதலியவை ஒழிக்கப் பட வேண்டியதுதான் என்று கருதுகிறேன். திராவிடர் கழகமும் அப்படியே கருதுகிறது. திராவிடர்களில் பலரும் அவர்கள் எந்தக் கட்சியிலிருந்தாலும் அவர்களில் அநேகர் அப்படியே கருதுகிறார்கள்.

நமக்கு இவைகளை ஒழிக்க தமிழர் - திராவிடர் மதம் என்பது திராவிடர்களில் . சித்தர், முத்தர், தெய்வீகத்தன்மை பெற்ற பெரியார்கள் பலரின் கருத்தும் ஆதாரமும் ஆதரவாய் வழிகாட்டி யாய் இருக்கின்றன. வள்ளுவர் குறள் இருக்கிறது; புத்த தர்மம் இருக்கிறது; இந்து மதத்தின் பாற்பட்டதாகக் கூறப்படும் உள் சமயமான உலகாயத மதம், மாயாவாதி மதம், சங்கரர் மதம் என்னும் அத்வைத மதம், வேதாந்த ஞானம் முதலியவைகள் கல்லு போன்ற ஆதாரங்களாக, வழிகாட்டிகளாக இருக்கின்றன.

ஆகவே, எழுங்கள் தமிழர்களே!

எழுங்கள் மெய்ஞான சமயவாதிகளே!!

27-ந் தேதி வரும் புத்தர் ஜயந்தி நாள் அன்று இதற்கு துவக்க விழா செய்வதுபோல், சிறிதும் ஆதாரமும் அறிவும் அற்ற ஆபாச கற்பனை உருவா மூர்த்தமான கணபதி உருவை உடைத்துத் தூளாக்கி மண்ணில் கலக்கிவிடுங்கள்.



இது மூடர்களுக்கு அல்லாமல், சுயநல சூழ்ச்சிக்காரர்களுக்கு அல்லாமல் மற்ற எவ ருக்கும் குற்றமாகத் தோன்றாது. கண்டிப் பாக இதில் யாதொரு தவறும் இல்லை.

ஆகவே, ஒவ்வொரு தமிழரும் முன்வர வேண்டுகிறேன்.

***

## கடவுள்கள் தொழில் கொலைத் தொழில்தான்

பிள்ளையார் முதல் கிருஷ்ணன் வரையில் உள்ள எல்லா ''கடவுள்''களும், அசுரரை- அரக்கரை, இராட்சதரைக் கொல்ல ஒழிக்க ''அவதாரம்'' கொண்டவைகளேயாகும்.

சூத்திரர்களும் பஞ்சமரும்தான் அசுரர், இராட்சதர் எனப்பட்டவர்கள். எப்படி எனில், வேதங்களை, வருணாசிரம தர்மங்களை ஏற்காதவர்களும், யாகம், ஓமம் முதலிய கிரியைகளை வெறுத்து எதிர்த்தவர்களும்தான் அசுரர், இராட்சதர்கள் என்று மனுஸ்மிருதி சொல்கிறது.

சூரபதுமன், இரணியன், இராவணன், சமணர், புத்தர் முதலியவர்கள் இதில் சேர்ந்தவர்களேயாவார்கள் என்றும் புராணங்களும், ஆழ்வார், நாயன்மார் பாடல்களும், பெரிய புராணமும், இராமாயண, பாரதமும் கூறுகின்றன.

*(11.5.1953 ''விடுதலை'' நாளிதழில், ''வாருங்கள் தோழர்களே 27-ந்தேதி கணபதி உருவம் நாசமாக்க'' என்ற தலைப்பில் தந்தை பெரியார் அவர்கள் வெளியிட்ட அறிக்கை)*

# 35. ஒழுக்கமில்லாக் கடவுள்கள்

எங்களைப் பார்த்து முன்பு எல்லோரும் தேசத் துரோகிகள், நசகாலர்கள் என்று சொன்னார்கள். இப்பொழுது எதுவும் சொல்ல முடியாது. அவ்வளவு சேவை செய்திருக்கிறோம். இப்பொழுது நாங்கள் கேட்கிறோம்; பறையனுக்கும், சக்கிலிக்கும் எங்கிருக்கிறது சுயராஜ்யம்? ஆகவே முதலில் சாதி ஒழிய வேண்டும் என்று கூறி, சாதியை ஒழிக்கும் வேலையில் ஈடுபடும் பொழுதுதான், எங்களை நாத்திகர் என்று கூறுகிறார்கள். இந்த வேலையை இப்பொழுது மந்திரிகள், நீதிபதிகள், பார்ப்பனப் பத்திரிகைகள் அனைவரும் செய்து வருகின்றனர்; இதைப்பற்றிய கவலை எங்களுக்கில்லை. சாதியைக் காப்பாற்ற கடவுள் எதற்கு?



நாங்கள் கடவுள் இல்லையென்று சொல்லுபவர்கள் அல்ல; கடவுளை நம்ப வேண்டாம் என்று சொல்லவும் இல்லை. மேலும் எங்களுக்கு கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பது வேறு சங்கதி. கடவுள் என்பது என்ன? கிறிஸ்துவர்களுக்கும் கூட கடவுள் இருக்கிறார். அதை ஏன் நீ கடவுள் என்று ஒப்புக் கொள்ளக்கூடாது? அவர்கள் கடவுளுக்கு இறப்புமில்லை, பிறப்புமில்லை, கண்ணுக்குத் தெரியாதது என்று கூறுகிறார்கள். ஏன் ஒப்புக்கொள்ளக் கூடாது? அன்பான கடவுள், கருணை யுள்ள கடவுள், ஒழுக்கமுள்ள கடவுளை நான் வேண்டா மென்று சொல்லவில்லை. ஒரு கடவுள் என்று சொல்லிய பிறகு இத்தனை கடவுள்கள் எங்கிருந்து வந்தன? உருவமில்லாத கடவுளுக்கு இத்தனை உருவங்கள் எப்படி வந்தன? ஒன்றுமில் லாத கடவுளுக்கு மனைவி ஏன்? கல்யாணம், கருமாந்தரமேன்?

ஒரு மனைவி இருந்தால்கூட பரவாயில்லையே! எந்தக் கடவுளுக்கு இரண்டுக்குக் குறைந்து இருக்கிறது? எந்தக் கடவுள் தேவடியாள் வீட்டுக்குப் போகாமல் இருக்கிறது? மலத்தைத் தின்றால்தான் கடவுளை நம்புகிறவன் என்று ஒருவன் சொன் னால், நீ மலத்தைத் தின்றுகாட்ட வேண்டுமா? கடவுள் அன்பு, கருணை வடிவானவர் என்று கூறுகிறாயே; நீ கும்பிடும் கடவுளுக்கு வேல், சூலம், அரிவாள், கத்தி எதற்கு? நீ வணங்கும் கடவுள்களில் கொலை செய்யாத கடவுள் எது? பிறகு எப்படி அன்பு, கருணை என்று கூறுகிறாய்? ஒழுக்க முள்ள கடவுள் என்கிறாய்; பிறர் மனைவியைக் கைப்பிடித்து இழுக்காத கடவுள் எது? இருந்தால் ஒரு கடவுளைக் காட்டேன். இதைச் சொன்னால், ராமசாமி நாயக்கர் கடவுளைத் திட்டுகிறார், கடவுள் இல்லையென்று சொல்கிறார் என்று பத்திரிகையில் எழுதிவிடுகிறார்கள். கடவுள் இப்படிச் செய்கிறார் என்று நானா சொல்கிறேன்? பார்ப்பனர் எழுதி வைத்திருப்பதைப் பார்த்துப் படித்துவிட்டுச் சொல்கிறேன்.



ஏழைப் பிள்ளைகளை படிக்கவைக்க பண மில்லை என்று கூறுகிறார்கள். கோயில்களில் ஆயிரக்கணக்கில் நிலங்களும் நகைகளும் இருக்கின்றனவே; அதை யார் வயிற்றில் வைத்து அழுவது? இந்த நாட்டு மக்களின் கல்வியைப்பற்றிக் கவலையில்லாமல் சாதி யைக் காப்பாற்ற கோயில் கட்ட வேண்டும் என்றும், கோயில்களை 'ரிப்பேர்' செய்ய

வேண்டுமென்றும் கூறுகிறாய். நேற்றுகூட பழனியாண்டவர் கோயிலுக்கு லட்சக்கணக்கில் செலவு செய்யப் போவதாகச் சொன்னார்கள்! இந்தப் பணத்திற்கு எத்தனை கல்லூரிகள் கட்டலாம்? கள் குடித்தால், சூதாடினால், தேவடியாள் வீட்டுக் குப் போனால் மக்கள் பணம் பாழாகிவிடுகிறது. ஆனால், கோயிலுக்குப் போனால் மட்டும் வரும்படியா வருகிறது? வருடத்திற்கு கோயில்கள்மூலம் 45 லட்ச ரூபாய் வருகிறதே, எப்படி வருகிறது? 1956ஆம் வருடத்திலும் இந்த அக்கிரமமா?

இராமன் பட எரிப்புக் கிளர்ச்சி செய்தால் மக்களுக்கு இதனால் சோறு வருமா என்று கேட்கிறார்கள். கேட்கிறவர்கள் சோற்றுக் காக என்ன பாடுபட்டார்கள்? இதை அழித்தால், இன உணர்ச்சி வந்தால், சாதி அழிந்தால், தானாகச் சோறு கிடைக்கிறது. அவனே தெரிந்து கொள்கிறான். இந்த நாட்டைப் போல வேறு எந்த நாட்டில் ஆண்டவன் பெயரால் கோடிக்கணக்கில் பணம் பாழாகிறது? ஆகவேதான் இந்த இழி தன்மையைப் போக்கப் பாடுபடுகிறோம். யாராவது சொல்லட்டுமே, எனக்குக் கடவுள் பக்தி இருக்கிறதென்று, நான் கடவுள் யோக்கியதையைப் பார்த்துக் கொண்டுதானே வருகிறேன். நானும் கடவுள் பெய ரைச் சொல்லி பல செயல்களைச் செய்தவன் தான்; புராண காலட்சேபம் செய்து யார் ஒழுக்கமாக வாழ்கிறார்கள்? சங்கராச் சாரி வாழ்கிறாரா? சந்நிதானங்கள் யாராவது வாழ்கிறார்களா?

கடவுள் பக்தி வேண்டும் என்றும், ஆத்மா இருக்கிறதென்றும் நீதிபதி முதல் மந்திரிகள் வரையில் பிரச்சாரம் செய்கிறார்கள். இந்த நாட்டில் பக்தி இல்லையா? எவராவது பக்தி இல்லை யென்று சொல்ல முடியுமா? தமிழ்நாட்டில் ஏறக்குறைய இருபதி னாயிரம் கைதிகளுக்குமேல் இருப்பார்கள். அவர்கள் காலையில் எழுந்த உடனே பட்டை பட்டையாக அடித்துக் கொள்வார்கள். ஏண்டா என்றால், சீக்கிரம் விடுதலையாக வேண்டும் சாமி என்று கூறுவான் - யாராவது ராசா, மந்திரி சாகமாட்டானா, நான் விடுதலையாக மாட்டேனா என்று வேண் டிக் கொள்வான்.



இப்பொழுது திருடாமல், பொய் பேசாமல் யார் இருக்கிறார்கள்? இனி மேலாவது மக் கள் ஒழுக்கத்தை அனுசரிக்க வேண்டும்; அன்பைக் கடைப்பிடிக்கவேண்டும். இப்ப டியே எல்லோரையும் ஏய்த்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தால் மிருகமாவது தவிர

வேறு என்ன? யார் கடவுள் இருக்கிறார் என்று வாசற்படியைத் திறந்து வைத்துக் கொண்டு தூங்குகிறார்கள்? பெட்டியில் எண்ணி வைத்த பணத்தை திரும்பி எண்ணிப் பார்க்காதவர்கள் யார்? யார் பணப்பெட்டியைத் திறந்து வைத்துக் கொண்டு இருக்கிறார்கள்?

பக்தியோடு இருக்கிறவன் சாமியிடத்தில் வந்து கும்பிட்டு விட்டு, சாமிமேல் இருக்கும் ஆபரணங்களையும், பெண் சாமியை நிர்வாணமாக்கி விட்டு சேலையையும் எடுத்துக் கொண்டு ஓடிவிடுகிறான். இதைப்பற்றி சாமியாவது மற்றவர்கள் யாராவது கவலைப்படுகிறார்களா? உயர்தர நீதிமன்றத்தில் இருக்கும் நீதிபதி எத்தனைக் கொலைகாரர்களை பார்க்கிறார்; எவ்வளவு திருடர்களைப் பார்க்கிறார். அவருக்குத் தெரியாதா, பக்தியில்லாமல் திருடுகிறானா, பக்தியிலிருந்து கொலை செய்கிறானா என்று? அவர்களைப் பார்த்துவிட்ட பிறகு, மக்களிடம் பக்தியிருந்தும் ஒழுக்கமில்லை என்றல்லவா சொல்லவேண்டும்? ஆகவே, மக்களை ஒழுக்கத்தின் பக்கம் திருப்பவேண்டும். இன்னும் ஒழுங்கீனமாக நடக்கக் கூடாது. எவ்வளவு ஒழுங்கீனமாக நடந்து கொள்ள முடியுமோ அவ்வளவும் நடந்துவிட்டோம். ஆகவே, கோயில் கட்டுவதனாலும், உற்சவம் கொண்டாடுவதனாலும் பயனில்லை; இலாபமில்லை;

லட்சக்கணக்கான மக்கள் மாமாங்கத்திற்காகக் கூடினார்கள். அது முட்டாள்தனத்தைக் காட்டுவதைத் தவிர வேறு என்ன? அங்கு போய் அழுக்குத் தண்ணீரில் தானே குளிக்கிறார்கள். குளத்தில் இருக்கும் மேல் தண்ணீரை இறைத்து விடுகிறார்கள். அழுக்குத் தண்ணீர் இருக்கிறது. எல்லோரும் இறங்கினால் தண்ணீர் உயரம் அதிகமாகிறது. யாரும் இல்லாதபொழுது கணுக்காலில் இருக்கும் தண்ணீர், எல்லோரும் இறங்கிய பிறகு கழுத்தளவுவரை வருவதில் ஆச்சரியமென்ன? குளத்தில் இறங்கி விட்ட பிறகு சிறுநீர் வந்தால் எங்கே போவது? அதைக்



குளத்திலேயே ஒவ்வொருவரும் விட்டால் நுரை பொங்குகிறது. இதைப் பார்த்து நம் பைத்தியக்கார மக்கள் 'பார் சிவன் தண்ணீர் விடுகிறான், நுரை பொங்குகிறது பார்'' என்று சொல்லுகிறார்கள். சொல்லுவதோடு மட்டுமல்லாமல் அந்தத் தண்ணீரைத் தலையில் தடவிக் கொள்கிறார்கள்.

வடநாட்டில் கும்பமேளா நடந்தது. சுமார் எண்ணூறு சாமியார்கள் நிர்வாணமாக அங்கு வந்தார்களாம். அவர்களைப் பார்க்கப் போய் ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்தார்கள். புண்ணிய க்ஷேத்திரத்திற்கு நிர்வாணமாகத்தான் போக வேண்டுமா? இதை வெளிநாட்டான் கேள்விப்பட்டால் என்ன நினைப்பான்? இன்னும் நீ இப்படியே நுழை பொங்குகிறதென்று சொல்லிக்கொண்டிருக்கப் போகிறாயா? எந்தப் பார்ப்பானாவது காவடி எடுத்து ஆடியிருப்பதைப் பார்த்திருக்கிறாயா? எந்தப் பார்ப்பனத்தியாவது திருப்பதி வெங்கடேசா, கோவிந்தா என்று தெருவில் புரண்டு பிச்சையெடுப்பதைப் பார்த்திருக்கிறாயா? இதைக் கண்ட பிறகாவது திருந்த வேண்டாமா நம் மக்கள்?

*(26.8.1956-ல் ஆம்பூரில் (வடஆற்காடு) நடைபெற்ற திராவிடர் கழக பொதுக்கூட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி "விடுதலை" 10.9.1956)*

# 36. கடவுள்கள் யோக்கியதை

கடவுள் என்றால் மூடநம்பிக்கைக்கு ஆளாகக்கூடாது; சாணி கடவுள், அரசமரம், வில்வமரம், கல், படம், பொம்மை எல்லாம் நம் கடவுள்கள் என்றால் என்ன நியாயம்? ஆறறிவு உள்ள மனிதனா இவ்வளவு காட்டுமிராண்டியாயிருப்பது?

கடவுள் வேண்டுமானால் இப்படி வைத்துக் கொள்ளுங்களேன். அந்தக் கடவுளுக்கு உருவம் கிடையாது, எங்கும் இருப்பார், பேர் இல்லாதவர் என்று வைத்துக் கொள்ளுங்கள். மகமதியரும் கிறிஸ்துவரும் அப்படித்தானே வைத்திருக்கிறார்கள்? ஒரு கடவுள் என்றுதானே எல்லோரும் பேசியிருக்கிறார்கள்? நம்மவர்களும் பேசியிருக்கிறார்கள். இருந்தும் எப்படி இவ்வளவு கடவுள் உண்டாயின?

சுயமரியாதை இயக்கம் தோன்றியிராவிட்டால் இதுவரை மைல்கல், ஃபர்லாங்குக்கல் எல்லாம் சாமியாகியிருக்குமே! அவற்றிற்கு நாமம் போட்டு பொட்டு வைத்து மைலீசுவரர், ஃபர்லாங்கீசுவரர் என்றெல்லாம் சொல்லியிருப்பானே!



இந்தச் சாமிகளுக்குப் பன்றிமுகம், பாம்பு முகம் எல்லாம் எப்படி வந்தன? தோற்றமெல்லாம் குத்துகிற மாதிரி, வெட்டுகிற மாதிரி உள்ளதே; எதற்காக இந்தப் போக்கி

ரித்தனமான வேடம்? கடவுளுக்குப் பெண்டாட்டி எதற்காக? போதாது என்று வைப்பாட்டி, பள்ளி அறைத் திருவிழா, ஊர்வலம் வருவது, இவையெல்லாம் எதற்கு? இவற்றையெல் லாம் வெளி நாட்டிலே போய்ச் சொல்லிப் பாரேன். உன்னை காட்டுமிராண்டி என்பான்!

ஒருவன் சொல்கிறான்; கிருஷ்ணன் தங்கை அண்ணனிடம் சென்று ''உலகத்திலிருக்கிற பெண்கள் எல்லாம் உன்னை அனுபவிக்கிறார்கள்; நான் அப்படிச் செய்ய முடியவில்லையே '' என்கிறாள். அவனும் ஜெகநாதத்திற்கு வா என்கிறான். இதுதானே இன்றைக்கும் ஜெகநாதத்தில் இருக்கிறது? துரோ பதை முதலியவர்கள் எல்லாம் அவன் தங்கைகள் என்று இன்னொருவன் சொல்லுகிறான்! துரோபதை யோக்கியதை எப்படி? சினிமாவிலே வேண்டுமானால் இப்படியெல்லாம் செய்யேன்!

ஆண் பிள்ளை சாமி பெண் பிள்ளை சாமி எல்லாவற்றிற்கும் கையிலே சூலாயுதம் வேலாயுதம் சக்தி - இவை எதற்கு? இப்படிச் சாமிகளே யோக்கியதையாக நடக்கவில்லையென்றால் மனிதன் எப்படி யோக்கியதையாயிருப்பான்? காசு பிடுங்கினா லும் பரவாயில்லை, நம்மை மடையனாக்கி விட்டானே. 1957-லே எப்படி நடந்து கொள்வது என்று வேண்டாமா? நமக்குச் சரித்திரம் இல்லை; பார்ப்பான் வருவதற்கு முன் நம்ம சங்கதியைக் காட்டுவதற்குச் சரித்திரம் இல்லையே! பார்ப்பான் வருவதற்கு முன்னாலே கடவுள் இருந்ததாகக் கதைகூட இல் லையே! பார்ப்பான் வந்த பிறகுதானே கடவுள் வந்தது? யாராவது மறுத்துச் சொல்லட்டுமே பார்க்கலாம்.

பாரதம் பாகவதம் போன்ற இவற்றிலே வருவதுதானே இன்றைக்குக் கடவுள்? என்ன யோக்கியதை? பெண்டாட்டி, வைப்பாட்டி, ஆணும் கூடி பிள்ளை பெறுவது போன்றவை!



என்ன அநியாயம்? இவற்றையெல்லாம் இன்னொரு நாட்டானிடம் போய்ச் சொன் னால் நம்மை மதிப்பானா? ஒழுக்கமுள்ள சாமி என்று ஒரு சாமியை யாராவது சொல் லட்டுமே! இராமாயணத்திலே வருகிற இரா மன், அவன் மனைவி, வேலைக்கார அனு மான் எல்லாம் கடவுள்! இராமன் கடவுள் என்கிறதற்கு ஆதாரம் வேண்டாமா? எதிலே யோக்கியதையாக நாணயமாக நடந்தான்

என்று யாருக்கும் தெரியாது. 1957-லேயா இராமாயணத்தைக் கடவுள் சம்பந்தமானது என்று நினைப்பது? பாரதத்திலோ எல்லாம் அயோக்கியர்களே! இன்றைக்கு எல்லோரையும் தெய்வீகத் தன்மையுள்ளவர்களாகச் செய்து வைத்திருக்கிறான்! பாரதத்தை ஒரு விபச்சாரிக் கதை என்றே சொல்லலாம். ஒருவனாவது அதிலே அவன் அப்பனுக்குப் பிறக்கவில்லையே! கண்டவர்களுக்குப் பிறந்தவர்கள் பங்கு கேட்டார்கள்; கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டதாகக் கதை!

கதை நடந்தது என்று சொல்லவில்லை; குப்பைக் கதையை எழுதிவிட்டு அய்ந்தாவது வேதம், அப்படி இப்படி என்று சொல்லி நம்மை மட்டம் தட்டி வைத்திருக்கிறான் பார்ப்பான்.

இராமன் ஏன் காட்டுக்குப் போனான்? ஏன் அவன் தாயார் காட்டுக்குப் போகச் சொல்கிறாள்? கதைப்படி இராமனுக்கும் அவனப்பனுக்கும் சொத்தில் உரிமையில்லை. பரதனின் அம்மாவைக் கல்யாணம் பண்ணும்போதே இராச்சியத்தை அவளுக்குக் கொடுத்துவிட்டான். தசரதன் மரியாதையாக அவளுக்கே நாட்டைக் கொடுத்திருக்கவேண்டும். துரோகத்திற்குச் சம்மதித்தாலே "காட்டுக்குப் போ" என்று சொன்னாள் அப்பன் சொன்னதுக்காகப் போனான் என்று திரித்துச் சொல்லுகிறான் பார்ப்பான் இன்றைக்கு!

இராமனும் அவனப்பனும் காட்டுக்குப் போகாமலிருப்பதற்கு என்னென்ன தந்திரம் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்தார்கள்! இராமனே சொல்கிறான், பரதனிடம்: "உன் அம்மாவுக்கே இராச்சியம் சொந்தம்" என்று. சோமசுந்தர பாரதியார் "தசரதன் குறையும் கைகேயி நிறையும்" என்று ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார். அதைப் படித்தால் தெரியும். இராமாயண ஊழல்பற்றிப் பேச ஒருநாள் போதாதே!

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இப்படியெல்லாம் வெட்கம் இல்லாமலே எழுதியிருக்கிறானே என்றுதான் சொல்கிறேன்.



வால்மீகி எழுதியபடி சீதையே இராவணன் பின்னாலே போயிருக்கிறாள்! அவன் வந்தது தெரிந்தே இலட்சுமணனைப் போகச் சொல்லி வேலையிடுகிறாள். இராமாயணத்தில் வர்ணித்து எழுதியிருக்கிறான். "படுக்கையெல்லாம் சிதறிக் கிடந்தது. சின்னா பின்னப்

பட்டிருந்தது" என்று வால்மீகிப்படி இராவணன் சீதையை அவள் இஷ்டமில்லாமல் தொட்டிருக்க முடியாதே? இரண்டு சாபங்கள் இருக்கின்றன. வால்மீகி சாடை காட்டுகிறான். சாபம் ஞாபகத்துக்கு வந்து அவள் கூந்தலையும், தொடையையும் பிடித்துத் தூக்கினான் என்று! வால்மீகி ஒன்றையும் மறைக்காமலே எழுதியிருக்கிறான். நாங்கள் சொல்வதிலே பொய்யிருந்தால் பார்ப்பான் விட்டுவிடுவானா? உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனத்தி மாதிரி விழித்துக் கொண்டே நம்மை ஒழித்துக்கட்டப் பார்க்கிறானே? இராமன் ஒடித்த வில் முன்னாலேயே ஒடிக்கப்பட்ட வில் என்கிறதற்கு அபிதான சிந்தாமணியில் 5 இடங்களிலே ஆதாரங்கள் இருக்கின்றன.

*(5.7.1957 அன்று பெரம்பலூரில் நடைபெற்ற விழாவில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி - "விடுதலை" 14.7.1957)*

## 37. கடவுளை ஒழிக்கவேண்டுமானால் பார்ப்பானை ஒழிக்க வேண்டும்

பேய் என்றெல்லாம் வேறொன்றும் இல்லை; இல்லாததை இருக்கிறதாக நினைத்துக் கொண்டு முட்டாள்தனமாகத் தொல்லைப்பட்டுக் கொண்டு இருப்பதுதான். சாதாரணமாக நம் பெண்களிடத்தில் பார்த்தால் தெரியும்; பேய் பிடித்துவிட்டது அதை விரட்டுகிறோம்' என்பார்கள்! பேயைப் போலவே இல்லாததை இருப்பதாக நம்புவது, கடவுள், மதமும் சாதியும், ஜனநாயகம் - இந்த மூன்று பேய்களும் நாட்டைவிட்டே விரட்டப்பட வேண்டும். அப்போதுதான் நம் மக்கள் காட்டுமிராண்டித்தனத்திலிருந்து விடுபட முடியும். கடவுள் என்ற ஒன்று கிடையாது. பேய்போல அது ஒரு கற்பனைதான். உங்களிலேயே பலர் பக்தி நிறைந்தவர்களாக இருக்கலாம். ஆத்திரப்படாமல் கேட்டு சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிந்திப்பதற்கு முன், இதைச் சொல்லுகிற நான் யார் என்று யோசனை செய்து பார்க்கவேண்டும்.



'எங்கள் குடும்பம் ஈரோட்டிலேயே பெரிய கடவுள் பக்திக் குடும்பம். அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவன் நான். ஊரில்

உள்ள பாகவதர்களெல்லாம் எங்கள் வீட்டில்தான்சதா சாப்பிடு வார்கள். எங்கள் வீட்டில் எந்த சாமானைப் பார்த்தாலும் அதில் நாமம் போட்டுத்தான் இருக்கும். நானும் பெரிய பதவிகள் வகித்து இருந்திருக்கிறேன். ஈரோடு தேவஸ்தான கமிட்டிக்கு பிரசிடெண்டாக இருந்திருக்கிறேன். சில பாடல் பெற்ற ஸ்தலங் கள் எல்லாம்கூட என்னுடைய ஆதிக்கத்தின்கீழ் இருந்திருக்கின் றன. அதையெல்லாம் நிர்வாகம் செய்து முதன் முதலாக ஆதிதிராவிடனை கோயில் உள்ளே நுழைய வைத்து கோர்ட் வரையிலே சென்றிருக்கிறேன். அப்படிப்பட்ட நான் ஏன் இப்படிச் சொல்ல வேண்டும் என்று சிந்தித்துப் பார்க்க வேண் டும்.

கடவுள் என்பதை நம்பாததற்குத்தான் நிறைய அறிவு வேண் டும். கடவுளை நம்ப முட்டாள்களாக இருக்க வேண்டும். கடவுள் இல்லையென்று சொல்ல வேண்டுமானால் அதற்கு இயற்கையைக் கட்டி ஆள வேண்டும்; ஒவ்வொன்றுக்கும் சரியான சமாதானம் சொல்ல வேண்டும்.

நீங்கள் கடவுள் இல்லை என்றுசொல்ல வேண்டும், நினைக்க வேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை. இருக்கிறதாகவே வைத்துக் கொண்டால், அது எப்படி இருக்க வேண்டும். இதுதான் எங்கள் கேள்வி! உலக மக்கள் தொகையாகிய 230 கோடியில் இந்தியா என்ற இந்த நாட்டில் உள்ள 30 கோடியைத் தனியாக வைத்து விட்டு மற்றதைப் பார்த்தால் 100 கோடி மக்களுக்குமேல் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களாக இருக்கி றார்கள். அதாவது, உலகத்தில் சரிபகுதி மக்களுக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. சைனா, ஜப்பான், சயாம், பர்மா, சிலோன், கொரியா ஆகிய நாடுகளில் உள்ள பவுத்தர்களுக்கு மோட்சம், நரகம் ஆகியவைகளால் ரஷ்யாவில் உள்ள 30 கோடி மக்கள் ஒரு குன்றுக்குக்கூட கடவுள் நம்பிக்கை இல்லை. ஒன்றிரண்டு கிழடுகளுக்குத்தான் சில கோயில்கள் இருக்கின்றன. அதுவும் எல்லாக் கிழடுகளும் அப்படியிருப்ப தில்லை. மற்ற பெரிய பெரிய ஆலயங்க ளெல்லாம் கண்காட்சி சாலையாகத்தான் அங்கு இருக்கிறது.



நாம் 30 கோடி மக்களும் காட்டுமிராண்டிக ளாக இருக்கிறோம். கடவுள் பேய் பிடித்து ஆட்டுபவர்களாக இருக்கிறோம். ஏன் மற்ற மதத்துக்காரர்கள் இருக்கிறார்களே,

அவர்களைப் போலலாவது கடவுளைப்பற்றி நினைக்கிறோமா? கடவுளால் சாதிக்க இயலாததை எல்லாம் வெள்ளைக்காரன் தற்போது சாதித்துக் காட்டுகிறானே, சக்கிமுக்கிக்கல் காலத்தில் கடவுள் இருந்திருந்தால் ஏன் அவன் நமக்கு எலக்டிரித் தர வில்லை? கட்டை வண்டிக் காலத்தில் கடவுள் இருந்திருந்தால் ஏன் நமக்கு அவன் ஆகாய விமானம் தரவில்லை? அவ்வளவு தான் கடவுள் சக்தி. கிறிஸ்துவனாக உள்ள வெள்ளைக்காரன் இதுமாதிரி பற்பல அதிசயங்களைச் செய்கிறான்.

கடவுளால் ஆகாததை செய்துகாட்டி கடவுள் சக்தி இவ்வளவு தான் காட்டுகிறான் என்றாலும் அவன் ஒரு கடவுளைக் கும்பிடுகிறான் என்றால் அது சடங்கு சம்பிரதாயத்திற்கே தவிர வேறில்லை. அவன் கடவுளைத் தொழுகிறான்; அவனுக்கு ஒரே கடவுள்தான் உண்டு. அதற்கு உருவமில்லை, மகா யோக்கியர் அந்தக் கடவுள் என்கிறான். கருணாநிதி என்கிறான்; ஒழுக்கமுள் ளவர் என்று வருணிக்கிறான். அந்தக் கடவுளுக்கு ஒன்றும் தேவையில்லை. இதுதானய்யா கிறிஸ்துவனும், முஸ்லிமும் சொல்லும் கடவுள்! ஆனால், உனக்குத் தெரியாதே உன் கடவுள் எப்படிப்பட்டதென்று. உனக்கு எத்தனை கடவுள் என்றால் உனக்கே தெரியாதே! நாட்டில் இருக்கிற அத்தனையும் கடவுள்கள்!

ஏதோ நாங்கள் வந்ததனாலே இப்போது இந்த நாட்டிலே கடவுள்கள் குறைந்து இருக்கின்றன. ஒன்றா இரண்டா இங்கே உன் கடவுள்? மாடு, பன்றி, குரங்கு, மீன், நாய், கழுதை, குதிரை எல்லாம் உன் கடவுள்! 600-700 ரூபாய் செலவு செய்து கல்லில் குதிரை செய்து வைக்கிறானே; மாட்டுச் சாணியைக் கடவுளாக்கி வைத்திருக்கிறானே. நல்ல வேளையாக மனுஷன் சாணியை கடவுளாக்கவில்லை. ஏனென்றால், பார்ப்பானுக்குத் தெரியும், அப்படி ஆக்கினால் பின்னால் அவனுக்கே கஷ்டம் என்று அதனால்தான் விட்டு விட்டான். மதுரை வீரன் என்



றொரு கோயிலுக்குப் போனால், அங்கு இரண்டு நாய்கள் இருக்கும். ஒரு கடவுளுக் குப் பதில் இத்தனை கடவுள்கள் எப்படி ஆயிற்று இந்நாட்டில்?

ஒரு கடவுளைப்பற்றிச் சொல்லுகிறான். அவனது அரை ஞாண் கயிறு படாத பெண் பிள்ளையே உலகத்தில் இல்லை என்று சொல்லுகிறான்! கிருஷ்ணனைப் பார்த்து நார

தர் இப்படிச் சொன்னார் என்று எழுதி வைத்திருக்கிறான். கடவுள் யோக்கியதை இப்படியா இருக்கவேண்டும்? பெரும்பாலான கடவுள்கள் ஒண்ணாம் நம்பர் கொலைக்காரக் கடவுள்களாக இருக்கின்றன. கடவுள் தொகையைப் பெருக்குவதில் சைஃபர் சேர்ப்பதற்கு பஞ்சம் வந்தால்தான் அதோடு நிறுத்துகிறான்.

கருணாநிதியான கடவுள் மற்றவனைக் கடித்துத் தின்னும்; இரணியனைப் பிய்த்து எறிந்து கடித்தது என்றல்லவா எழுதி வைத்திருக்கிறான். நாய்கூட மனிதனைக் கடிக்கிறதே தவிர கடித்துத் தின்னுவதில்லை. ஆனால், கடவுள் மனிதனைக் கடித்ததோடு இல்லாமல் தின்னவும் செய்திருக்கிறது. நடராசன் என்று ஒரு கடவுள் மனுஷனை அதுவும் நம்மவனைப் போட்டு மிதித்து வைத்துக் கொண்டு நடனம் ஆடுகிறதாம். காளி என்ற இன்னொரு கடவுள் கழுத்தெல்லாம் மனிதத் தலையாகவே இருக்கும்! அவ்வளவு கருணை வெள்ளம்! கடவுள் உருவம் செய்தவனுக்காகவது புத்தி இருந்திருக்க வேண்டாமா? அன்பு வடிவமான கடவுள் என்று சொல்லப்படுவதற்கு வேலாயுதம் ஏன்? சூலாயுதம் எதற்கு? கொழுவும் மழுவும் வைக்கலாமா என்று யோசிக்க வேண்டாமா? இதையெல்லாம் வைத்திருந்தால் அவை கொலை பண்ணாமல் இருக்க முடியுமா? இப்படி நாம் அந்த காட்டுமிராண்டிகளாகத்தானே வாழ்கிறோம்?

படியளக்கும் கடவுள் என்று சொல்லப்படுவதற்கு நாம்தானே படியளக்க வேண்டியிருக்கிறது? ஆவுடையார் கோயிலில் 3 மூட்டை அரிசி தினசரி செலவாகிறது என்றால் எதற்கு? சாமி பேரைச் சொல்லி பார்ப்பான் விழுங்குகின்றான். மிகுந்ததைப் பிறகு மார்க்கெட்டிலும் விற்கிறான், பார்ப்பான். தினசரிப் பத்திரிகைகளைப் பார்த்தால் கஞ்சியில்லாமல் செத்தார்கள் என்று போட்டிருக்கின்றன. இன்னொரு பக்கத்தில் கோயில் விழாக்கள், வடை, பாயசம், புளியோதரை, பொங்கல் இவற்றிற்கு குறைச்சல் உண்டா? இவ்வளவும் கடவுளுக்கு ஜீரணமாகுமா? என்று யாரும் யோசிப்பதில்லையே. இவ்வளவும் செய்த நாம் கோயிலில் ஏன் கடவுளுக்கு கக்கூஸ் கட்டி வைக்கவில்லை என்று யோசிப்பது இல்லையே? ஸ்ரீரங்கம் கோயிலில் டின் டின்னாக நெய்யை ஊற்றிச் செய்கிறானே, அதையெல்லாம் யார் வயிற்றிலே அறுத்து



வைப்பதற்கு? கொட்டாப்புளி மாதிரி இருக்கிற பார்ப்பான்களுக் குத்தானே அவ்வளவும்.

ஸ்ரீரங்கம் கோயிலிலே சாமிக்குத் தேங்காய் உடைப்பது இல்லை. திருகுவதற்கு ஒரு பெரிய க்ருவியை வைத்திருக்கி றான். எவ்வளவு பெரிய தேங்காயானாலும் நொடியில் திருகிவி டும். ஏண்டா என்றால், உடைக்கிற சப்தத்தைக் கேட்டு விழித்துக் கொள்ளுவார் என்று சொல்கிறார்கள். எப்போது படுத்தார், எப்போது எழுந்திருப்பார் என்று ஒரு பயலுக்கும் தெரியாது.

அப்படி எழுந்திருக்காமல் தூங்கிக் கொண்டேயிருக்கும் சாமிக்கு எதற்கு இத்தனைப் பண்டங்கள், ஆறுகால பூஜைகள்? ஒருத்தனும் ஏன் என்றே கேட்டதில்லையே. ஒருவனுக்கும் இந்த 1958-ல்கூட புத்தி இல்லையே. இன்னும் நாங்கள் இல்லை என்று சொன்னால் ஒவ்வொருவரும் கட்டாயம் ஸ்ரீரங்கம் வரவேண்டும் என்று சொல்லி உதைப்பானே?

இந்த சாமிகளுக்கு எத்தனை பெண்டாட்டிகள், கருமாதிகள், கல்யாணங்கள் போன வருடம் பண்ணின கல்யாணம் என்ன ஆயிற்று, இந்த வருடம் சாமிக்குக் கல்யாணம் பண்ணி வைக்கி றார்களே என்று ஒருத்தனும் யோசிப்பது இல்லையே. காளை மாடு கன்று போட்டது என்றால் உடனே சொம்பு எடுத்துக் கொண்டு போய் பால் கற என்று சொல்லுபவன் புத்தி மாதிரிதான் இருக்கிறது இவர்கள் நிலை, சாமி எதற்காக தேவடி யாள் வீட்டிற்குப் போவது? மனுஷன் பிறகு இந்த இடத்திற் கெல்லாம் தாராளமாகப் போக மாட்டானா? கடுகளவு புத்தியி ருந்தால் ஸ்ரீரங்கத்திலிருந்து உறையூருக்கு தேவடியாள் வீட்டிற் காக சாமியைத் தூக்கிக்கொண்டு வருவானா? வெளியார்கள் பார்த்தால் காரித்துப்ப மாட்டார்களா? நாம் இதற்கெல்லாம் வெட்கப்பட வேண்டாமா?



பக்தி என்றால் ஒழுக்கம், நாணயம் இவை வேண்டாமா? பன்னிராயிரம் கோபிகாஸ்திரீ களோடு கொஞ்சினார், அத்தனை பேரும் கடவுளுடைய பெண்டாட்டிகள் என்று எழுதி வைத்திருக்கின்றானே. நாரதர் தனக் கொரு பெண்டாட்டி வேண்டுமென்று கேட் டாராம். கிருஷ்ணன், நான் எந்த வீட்டில் இல்லையோ அந்த வீட்டிற்கு நீ போ

என்றானாம். நாரதர் எந்த வீட்டிற்குப் போனாலும் அங்கே கிருஷ்ணன் இருந்தானாம். நாரதர் திரும்பி வந்து இதைச் சொன்னாராம். பிறகு நாரதரும், கிருஷ்ணனும் சேர்ந்து பிள்ளை பெற்றார்களாம். அப்படிப் பிறந்த 60 குழந்தைகள்தான் பிரபவ, சுக்கில மற்றும் தமிழ் வருடங்கள் எனப்படுபவை எங்கேயாவது ஆணும் ஆணும் சேர்ந்து பிள்ளை பெற முடியுமா? இது எவ்வளவு ஆபாசமும் அறிவு அடிப்படையும் இல்லாத கதையாகும்.

இவ்வளவு ஒழுக்க ஈனமாக, அநாகரிகமாகவா நமது கடவுள் தன்மை இருக்க வேண்டும்? மனிதத் தன்மைகளே இல்லை இவைகளிடத்தில், இந்த மாதிரியான அயோக்கிக் கடவுள்கள் இருக்கலாமா? விஷ்ணு, சிவன், பிள்ளையார் கொழுக்கட்டைராயன் மாதிரி இந்தக் கடவுள்கள் என்ன சாதித்திருக்கின்றன? அல்லது அவைகளால் நாம்தான் என்ன சாதித்துக் கொண்டோம்? இல்லாத குறை ஒன்றைப் போக்க இத்தனை இழிவுகளா? எனவேதான் இந்தப் பேயை ஒழிக்க வேண்டுமானால், கடவுளை ஒழிக்க வேண்டுமானால் பார்ப்பானை ஒழிக்க வேண்டும்; பார்ப்பானை ஒழிக்க வேண்டுமானால் அரசாங்கத்தை ஒழிக்க வேண்டும் என்கிறோம்.

உலகத்தில் அனுபவிப்பதற்கென்றே பார்ப்பான் இருக்கிறான். நாம் என்ன பலனைக் கண்டோம்? அவன் அனுபவிப்பதைக் கண்டு நாம் என்ன பயன் பெறுகிறோம்?

*(14.10.1958 அன்று மதுரை மாவட்டம் மஞ்சநாயக்கன்பட்டியல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி - "விடுதலை" 19.10.1958)*

# 38. அறிவுக்கு ஒவ்வாத கடவுள் ஏன்?



எதையும் சிந்திக்கும் குணம் மக்களுக்கு இருக்க வேண்டியது அவசியம். அக்குணம் நமக்கு இல்லாததால்தான் மற்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் நம் நாட்டில் ஏற்படவில்லை. யார் எதை சொன்னாலும் காதுகொடுத்துக் கேட்க வேண்டும். நமது பெரியார் வள்ளுவர் சொல்லியிருக்கிறார்;

''எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு''

என்று ஆகவே, சிந்தித்து உண்மையைக் கண்டுபிடிப்பது தான் அறிவுடைமைக்கு அடையாளம். மற்றுமோர் குறளில்,

''எப்பொருள் எத்தன்மைத்தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு''
என்று எழுதியுள்ளார்.

சிந்தித்தால் பாவம், நினைப்பதும் பாவம் என்று அடக்கி வைத்து இருக்கிறார்கள் சில கூட்டத்தார்! எந்தத் தன்மையுடைய தனாலும் சரி ஆராய வேண்டும். ஆனால் சில விஷயங்களில் அதாவது கடவுள், சாஸ்திரம், புராணம், இதிகாசம் முதலிய வற்றை ஆராய்வதில் நம் அறிவு பயன்படுத்தப்படுவதில்லை. இது எப்படிப்பட்ட அடக்குமுறை? சொந்த அறிவை உபயோ கித்தால் உபயோகிப்பவன் ''நாஸ்திகன்'', அவன் பாவி, அவன் வெளியேற்றப்பட வேண்டும் என்பது நீதியா? ஆகவேதான் நான் சொல்லுகிறேன், கடவுள் துறையிலே நாம் காட்டுமிராண்டி களாகிவிட்டோம். இந்த முறை பழங்காலத்தில் இருந்தது என்றா லுங்கூட இப்போதுள்ள ஜனநாயக ஆட்சியிலுங்கூட காட்டுமி ராண்டிகளாகவே வாழ வேண்டுமா?

எங்களைத் தவிர இதைக் கேட்பதற்கு யார் இருக்கிறார்கள்? புத்தரும் வள்ளுவரும்தான் அறிவுக்கு ஏற்றதை எடுத்துக் கொண்டு மற்றதைத் தள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்கள்! பெரிய பெரிய ரிஷிகள் மகாத்மாக்கள் யாருமே சிந்திக்கச் சொன்னது கிடையாதே. வேண்டுமானால் அவர்கள் சொன்ன தையெல்லாம் நம்ப வேண்டும் என்றுதான் சொல்லியிருப்பார் கள். நமக்குத் தெரிய இரண்டு பேர்தான் சொல்லியிருக்கிறார்கள்.

''சாஸ்திரம் சொல்லியிருந்தாலும் சரி, தெய்வ சக்தியுள்ளவன் சொல்லியிருந்தாலும் சரி உன் அறிவினால் ஆராய்ந்து பார்'' என்றார் புத்தர்!



நமது கொள்கைகளில் முக்கியமானது அறி வைக் கொண்டு சிந்திப்பதேயாகும். உதார ணமாக நாம் ஒரு ஜவுளிக் கடைக்குத் துணி வாங்கப் போவோமானால் நாம் வாங்கப் போகும் துணியின் நீள அகலமென்ன, எந்த நெம்பர் நூலில் நெய்தது, சாயம் நிற்குமா என்றெல்லாம் அறிந்து கொண்டுதானே

விலைக்கு வாங்குகிறோம். ஆனால், ''பஞ்சகவ்யம்'' என்ற பேரால் பார்ப்பான் சாணியைக் கரைத்துக் கொடுத்தால் பேசாமல் வாங்கிக் குடிக்கிறோமே!

எனவேதான், அறிவு சம்பந்தப்பட்டவகையில் நாம் இன்னும் காட்டுமிராண்டிகளாகவே ஆகிவிட்டோம்.

சக்தி முக்கிக் கல்லால் தீயுண்டாக்கிய காலத்திலிருந்து லட்சம் கேண்டில் பவர் விளக்கு எரிகிற அளவுக்கு விஞ்ஞானத்தில் அறிவுத்துறையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. கட்டை வண்டி காலத்திலிருந்து ஏரோப்ளேன் வரையில் வாகனங்களில் மாறுதல் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் நாம் பண்பாட்டில் என்ன மாறுதல் அடைந்திருக்கிறோம்?

திராவிடர்களாகிய நாம் கடவுள் துறையில் முட்டாள்களாகவே இருக்கிறோம். மற்ற நாடுகளிலும் மதம், கடவுள், சாஸ்திரம் இல்லாமலில்லை. ஆனால், மற்ற நாட்டுக் கடவுள்களைவிட நம் நாட்டுக் கடவுள்கள் கூடுதலான காட்டுமிராண்டித்தனமா னவை. உலக மக்கள் தொகையில் கணிசமான அளவு நாஸ்திகர் கள்! மற்றவர்களில் கிறிஸ்துவர்களும், முஸ்லீம்களும் தமக்கென ஒரே கடவுளைக் கொண்டவர்கள்! கிறிஸ்துவருடைய கடவுளும் முஸ்லீமுடைய கடவுளும் உருவமில்லாதது, ஒன்றும் வேண்டா தது! ஆனால், நமது கடவுள்களுக்கு இதில் எந்தத் தன்மையா வது இருக்கிறதா? 1958-லுமா நாம் இப்படி இருக்க வேண்டும்?

பார்ப்பான் நினைத்தபடியெல்லாம் கடவுள்கள் தோன்றியபடி இருக்கின்றனவே! மனிதக் கடவுள், மாட்டுக் கடவுள், குரங்குக் கடவுள், பட்சிக் கடவுள், பல தலைகளுள்ள கடவுள்! ஏன் இவைகள்? எல்லாம் வல்ல எங்கும் நிறைந்தவையுமான கடவுள் என்கிறபோது ஏன் இத்தனைக் கடவுள்கள்? பிறப்பு இறப்பு இல்லாதவன் கடவுள் என்ற பிறகு தாய் வயிற்றில் பிறந்தவன் கடவுள் ஆக முடியுமா? இராமன் யார்? தாய் வயிற்றில் பிறந்தவன்தானே? கிருஷ்ணன் யார்? அவனும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவன்தானே? சுப்பிரமணியன் - அவனுக்கும் தாய் தகப்பனார் இல்லையா? இந்தக் கடவுள்களுக்கெல்லாம் எத்தனை கோயில்கள்? எத்தனை வேளை பூசைகள்? எத்தனை கல்யாணங்கள்? எத்தனை தேவடியாள்மார்? இதெல்லாம் போதாதென்று தாசி வீட்டுக்கு வேறு தூக்கிக் கொண்டு போகிறானே!



இந்த நிலைமைகளெல்லாம் நாம் காட்டுமிராண்டிகளாக இருப்பதால்தானே இன்னும் இருந்து கொண்டிருக்கிறது? சென்ற ஆண்டு செய்த கல்யாணம் என்ன ஆயிற்று என்று யாராவது கேட்கிறார்களா? நாம் எல்லாம் முட்டாள்கள் என்பதால்தான் இவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு விட்டோம். சந்திரனுக்கு பறக்கின்ற இந்தக் காலத்தில் கடவுள் என்ற ஒன்று எங்காவது இருக்குமானால் கண்டுபிடித்துவிட மாட்டார்களா? நம்மைவிடக் காட்டுமிராண்டிகளாக இருந்தவர்களெல்லாம் முன்னேறி விட்டார்கள். இந்த காலத்தில் நாம் சாமிக்குக் கல்யாணம் செய்து கொண்டிருப்பதா? எங்களூரிலுள்ள ஒரு சாமிக்கு ஒன்றரை மூட்டை அரிசியைப் போட்டு ஒரு வேளைக்கு சமைத்துப் படைக்கிறார்கள். சாமியா தின்கிறது? பார்ப்பான் தின்கிறான். மற்றவனை தேவடியாள் மகன் என்று கூறுகிறான்.

கிருஷ்ணனுக்கு எத்தனை மனைவிமார்? கொல்லுவது, சம்ஹாரம் செய்வது தானே கிருஷ்ணனின் வேலை? இராமன் அயோக்கியன் ஒரு பெண்ணின் மூக்கையும் முலையையும் அறுக்குமளவுக்கு அவள் என்ன அவ்வளவு பெரிய தவறு செய்து விட்டாள்? கடவுள்களுக்கு கொலை ஆயுதங்கள் ஏன்? 1958-ல்கூட உன் கடவுள் இப்படியா? இராமாயணத்தைப் புண்ணிய சரித்திரம் என்கிறாய்! கிருஷ்ண பரமாத்மா பூமிபாரம் தீர்த்தவன் என்கிறாய்! சர்வ வல்லமையுள்ள உன் கடவுள் வேறொருவன் தன் மனைவியைத் தூக்கிக் கொண்டு போய்விட்டதற்காக ஒப்பாரி வைத்து அழுகிறானே, இப்படியும் கடவுள் கதை எழுதுவதா?

ஆண்கள்தான் அந்த சாமியைக் கும்பிடப் போகிறார்கள் என்றால் பெண்களை அவமானப்படுத்திய அதை எதற்காகப் பெண்கள் கும்பிடப் போக வேண்டும்? வெட்கப்பட வேண்டாமா? ஆகவே நாம் கடவுள் மதம் சாஸ்திரம் சம்பந்தமாக அறிவே இல்லாத முட்டாள்களாகவே இருக்கிறோம்.



எந்த நாட்டிலாவது சூத்திரன், பறையன் இருக்கிறானா? மிகமிகப் பிற்போக்காயிருந்த நீக்ரோக்காரன் படித்திருக்கிறானே. நம்மில் படித்தவர் எத்தனை பேர்? பார்ப்பான் இந்த நாட்டில் பிழைக்க வந்தவன். நான் சொல்லவில்லை; ஜவஹர்லால் நேருவே தன் வாழ்க்கைச் சரித்திரத்தில் ''பிழைக்க வந்தவர்கள் தாம்'' என்றே எழுதியிருக்கிறார். இன்றுகூட ''நான் ஏன் சூத்திரன்? என்று கேட்க ஆளில்

லையே. இதே பார்ப்பான் சீமையிலே இருந்துகொண்டு நீ நீசன், இழிமகன், கீழ்ஜாதி என்று சொன்னால் இவனை விட்டு வைத்திருப்பானா? நாம்தான் அப்படிச் சொல்லுகிறவன் காலி லேயே விழுகிறோம்.

இங்குதாம் நாமும் அவனும் வாழ்கிறோம். வேறு நாட்டில் வாழ முடியுமா? பணம் கொடுக்காதவன், பாடுபடாதவன் 100-க்கு 100 பேர் படித்திருக்கிறான்! பணம் கொடுக்கிறவன், பாடுபடுகிறவன் 100-க்கு 12 பேர் படித்தவன் எனில் எவ்வளவு அநியாயம்? இவனுக்கு பியூன் வேலை, மலம் அள்ளுகிற வேலை, கூட்டுகிற வேலை, கல்லுடைப்பது, மாடுமேய்ப்பது, ஏர் உழுவது போன்ற வேலைகள், பாட்டாளி மகனுக்கு ஏன் இந்த கதி? நாம்தான் உழுகிறோம், உணவுப் பண்டங்களை உண்டாக்குகிறோம், வெளுப்பது முதலான எல்லா வேலைக ளையும் செய்கிறோம். அவன் ஏர் உழுவதே பாவம் என்கிறான். ஏன் இதை மாற்றக்கூடாதா? கடவுள் அப்படித்தான் பிறப்பித் தார் என்றால் அத்தகைய பட்சபாதகமான கடவுள் நமக்கு ஏன்? யார் கேட்டார்கள்? நாம் காட்டுமிராண்டித் தன்மையிலேயே வாழ்வதா? இந்த முறையை மாற்ற முடியவில்லையென்றால் சாகவேண்டியதுதான்.

சாதியைக் காப்பாற்றுவது மதமாகட்டும், கடவுளாகட்டும், சாஸ்திரமாகட்டும், அரசாங்கமாகட்டும் எதுவானாலும் சரி அது ஒழிக்கப்பட வேண்டியதுதான்.

*(20.11.1958-ல் பெங்களூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி - 'விடுதலை' 13.12.1958).*

# 39. கடவுளை நம்ப முட்டாளே போதும்



என்னைப்பற்றிச் சொல்ல வேண்டுமா னால் கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்றோ, இல்லையென்றோ சொல்ல முன் வரவில்லை. அதுபோலவே நீங்கள் அனை வரும் என் பேச்சைக் கேட்டுத்தான் ஆக வேண்டுமென்று கூறவில்லை. இன்னொன் றும் சொல்கிறேன், கடவுள் இருக்கிறார் என்று சொல்லிக் கொள்ள அறிவாளி தேவை

யில்லை. சாதாரணமாக ஒரு முட்டாள்கூட சொல்லிவிடலாம். ஆனால், கடவுள் இல்லையென்று மறுத்துக்கூற ஒரு அறிவாளி யால்தான் முடியும். மறுப்பதற்கான பல ஆதாரங்களைச் சொல்ல வேண்டும்; சிந்தித்து அதற்கான காரணங்களைக் கூற வேண்டும்.

உலகில் இன்று கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் சுமார் 100 கோடி மக்கள் இருப்பார்கள். கடவுள் நம்பிக்கை இருப்பவர் கள் சற்றுக் கூடுதலாக இருப்பார்கள். நாம் எல்லோரும் கடவுள் நம்பிக்கை உடையவர்களா? அப்படியானால் முகம்மதியர், கிறித்துவர் இவர்கள் நிலை என்ன? கிறித்துவர், முகம்மதியர்க ளுக்கு கடவுள் ஒன்று தானே! கிறித்துவர், முகம்மதியர்களை, உங்கள் கடவுள் எப்படியிருக்கிறார் என்று கேட்டால், யோக்கி யமான கடவுள் என்கிறான்; அதற்கு உருவம் கிடையாது என்று சொல்லுகிறான். ஒழுக்கமே உருவானவர், கருணையை உடை யவர், அவருக்கு ஒன்றும் தேவையில்லை என்று வேறு சொல்லுகிறான். ஏன் அப்படிப்பட்ட கடவுள் உங்களுக்கு இருக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

அவனுக்கு ஒரே ஒரு கடவுள் என்றால் நமக்கு எத்தனை ஆயிரம் கடவுள்கள்? அவர்களின் பெயர்களை எழுத வேண்டு மென்று ஆரம்பித்தால் மைதான் தீர்ந்துவிடுமே தவிர பெயர்கள் முடிவடையாதே! அதற்கெல்லாம் என்ன ஆதாரம்? யாராவது ஒரு பார்ப்பானைக் கேளுங்கள் எப்படி அந்தக் கடவுள்கள் ஏற்பட்டன, எப்போது, எங்கே என்று கோடிக்கணக்கிலா நமக்குக் கடவுள்கள் இருப்பது? நாங்கள் தலையெடுத்து இதையெல்லாம் கேட்காமல் விட்டிருந்தால் மைல் கற்கள், பர்லாங்குக் கற்கள் எல்லாம் கடவுள்களாகி இருக்குமே. படுத்தி ருக்கிற அம்மிக்கல்லை எடுத்து நிறுத்திவைத்து குங்குமம் மஞ்சள் பூசி விட்டுவிட்டால் அதுவும் ஒரு கடவுள். இதையெல் லாம் யார் கேட்கிறார்கள். இதைப்பற்றி நீங்கள் சிறிதளவாவது சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?



யானை, பன்றி, மீன், காக்கை, எருமை, பாம்பு இந்த உருவமுள்ளது எல்லாம் நமக் குக் கடவுள்கள், இவைகள் எல்லாம் எதற் காக? புற்றைக் கண்டால் பால் ஊற்றுகிறான்; கழுகு ஆகாயத்தில் பறந்தால் கன்னத்தில் அடித்துக் கொள்கிறான்; மாட்டைப் பார்த் தால் கும்பிடுகிறான். ஒரு கடவுளுக்கு

யானை முகம், மூன்று முகம் 5 முகம், 10 முகம், பானை வயிறு; இன்னொரு கடவுள் ஆயிரம் தலையுடையாள், இரண்டாயிரம் கையுடையாள். இந்த கடவுள்களுக்கெல்லாம் என்ன வேலை?

எதற்காக கடவள் அம்சங்களைக் குறைவாக அவமானமாக நம்மிடையே புகுத்த வேண்டும்? இதைப்பற்றி யார் சிந்தித்தார்கள்? 1500 வருடங்களுக்கு முன்பு புத்தர்தான் கேட்டார். முதலில் அறிவுக்கு வேலை கொடு, சுதந்திரமாக இருக்கவிடு, எதையும் ஏன்? எப்பொழுது? எப்படி? என்று கேள் என்றார்; மகான் சொன்னார்; ரிஷி சொன்னார், கடவுள் சொன்னாரென்று எதையும் நம்பிவிடாதே என்றார். அவர் பேச்சை யார் கேட்டார்கள்? புத்தர்களை நாட்டை விட்டே ஓட்டினார்கள். அவர்கள் பெண்களை கற்பழித்தார்கள். வீடுகளைக் கொளுத்திப் போட்டார்கள். கொன்று விடுவேன் என்று அவரது சீடர்களைப் பயமுறுத்தினார்கள். ஏன் புத்தர் பிறந்த இடத்தில் அவர் கொள்கைகள் இல்லை? வெளிநாடுகளில் எப்படி பரவியது? பரவியதற்குக் காரணம் என்ன?

அதற்குப் பிறகு வள்ளுவர் சொன்னார், எதிலும் உன் அறிவுக்கு வேலை கொடு என்று. அவர் சொன்னது எங்கே போயிற்று? எல்லாவற்றையும் குப்பைத் தொட்டியில் போட்டார்கள். பரம முட்டாள்தனமான மனுதர்மம், பகவத்கீதை, இராமாயணம், பாரதம் இவைகளைத்தானே மக்கள் கையாண்டார்கள்? எத்தனை பேருக்குத் தெரியும் குறளைப்பற்றி? பழைய தமிழ் நூல்களைப்பற்றி யாருக்குத் தெரியும்? இப்படித் தானே மகான் சொன்னார். ரிஷி சொன்னார், அவர் சொன்னார், இவர் சொன்னார், வெங்காயம் சொன்னார் என்று நம் எல்லோரையும் படுகுழியில் தள்ளிவிட்டார்கள். அமெரிக்கா, துருக்கியில் இராமாயணக் கதையைச் சொன்னால் அங்கிருப்பவர்கள் எல்லாம் சிரிக்க மாட்டார்களா?



சங்கராச்சாரியார் ஒரு மாத காலமாகச் சுற்றினார். அவரைப்பற்றி நம்மவனே அருள்வாக்கு என்று எழுதுகிறான். சங்கராச்சாரியாருக்கு அத்வைத மதம், இரண்டு கடவுள் கிடையாது. ஒரே ஒரு கடவுள் அதுவும் நான்தான் என்பார். உண்மையிலேயே சங்கராச்சாரியாருக்கு கடவுள் கிடையாது. வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள். அவர்

கடைப்பிடிப்பது மாயாவாதம், பூசுவது திருநீறு, பூசை செய்வது ஒரு பெண் கடவுள். இதுபோல்தான் தவிர வேறு என்ன?

கடவுளுக்கு பிறப்பேது இறப்பேது? நம் கடவுள்களை எடுத்துக் கொள்ளுங்களேன். இராமன் நவமியில் பிறந்திருக்கிறான். சுப்ரமணியன் சஷ்டியில் பிறந்திருக்கிறான். கிருஷ்ணன் அஷ்டமியில் பிறந்தான் என்கிறான். இறப்பு பிறப்பு கொண்டவர்கள் எல்லாம் கடவுள்களா? இதையெல்லாம் இந்த 1958ஆம் வருடத்திலேகூட ஏன், எதற்கு என்று கேட்க ஆள் இல்லையே இதற்கெல்லாம் நாம்தானே பணம் கொடுக்கிறோம். எதற்காக கடவுளுக்குப் பூசை போட வேண்டும், உணவைப் படைக்க வேண்டும்? நம்முடைய ஆள் பணம் கொடுத்தால் பார்ப்பான் கடவுள் சிலையை சிங்காரிக்கிறானே தவிர அந்தப் பார்ப்பான் ஒரு நாளைக்காவது கடவுளை சிங்காரித்ததுண்டா? இவ்வளவு செய்தும் நாம் எல்லோரும் தாசிமகன், வேசிமகன், சூத்திரன் தானே?

கடவுளுக்கு எதற்காக மனைவி? அப்படித்தான் ஒரு பெண்டாட்டியோடு விடுகிறாயா? பூதேவி ஒருத்தி, சீதேவி ஒருத்தி இரண்டு பெண்டாட்டி பற்றாமல் தாசி வீட்டுக்கு வேறு தூக்கிக் கொண்டு ஓடுகிறான். எதற்காக கடவுளை துலுக்க நாச்சியார் என்கிற தாசி வீட்டுக்குத் தூக்கிக் கொண்டு ஓட வேண்டும்? இங்கிருக்கின்ற முகமதியர்கள் மைனாரிட்டிகள் மெஜாரிட்டியாக இருந்திருந்தால், எங்கள் சாதிப் பெண் உங்கள் கடவுளுக்குத் தாசியா என்று உதைப்பான், ஒரு தடவை தான் திருமணம் கடவுளுக்கு செய்கிறாயே, பிறகு வருடா வருடம் வேறு எதற்கு? முன் வருடம் செய்த மனைவியை யார் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள்? செய்து வைத்த திருமணம் ரத்தாகி விட்டதா? அப்படியானால் எந்தக் கோர்ட்டில் தீர்ப்பு நடந்தது? இம்மாதிரி காரியங்களையெல்லாம் செய்து நீங்கள் சாதித்தது என்ன?



கிறிஸ்துவரையும் முகமதியரையும் உங்கள் கடவுள் எப்படிப்பட்டவர் என்று கேட்டுப் பாருங்கள். அன்பாலும் அருளாலும் ஆனவன் ஆண்டவன் என்று கூறுவார்கள். நம் கடவுள்களைப் பாருங்கள்; ஒரு கடவுளிடம் கோடரி இருக்கும், மற்றொரு கடவுளிடம் வில், அம்பு இருக்கும். இப்படித்தானே சூலாயுதம், மழு, அரிவாள், சக்கரம் என்று

கசாப்புக் கடையில் இருப்பது போல இருக்கிறது? எதற்காக இந்தக் கருவிகள்? அன்பே உருவான கடவுளுக்கு - கருணையே வடிவான கடவுளுக்கு எதற்கு இதெல்லாம்? ஆச்சாரியார், ஒரே கடவுள்தான் நம்மையெல்லாம் படைத்தார்; நடுவில் யாரோ இப்படிச் செய்துவிட்டார்கள். அதற்கு நாங்கள் என்ன செய்வது? என்று சொல்லுகிறார். அப்படியானால் அவர்கள் செய்துவிட்டுப் போய்விட்டால் உனக்கு எங்கே போய்விட்டது புத்தி? ஏன் இதையெல்லாம் சீர்திருத்தக்கூடாது?

அன்புமிக்க தோழர்களே! இதுமாதிரியான கேடான காரியங்களைப்பற்றி எனக்குமேல் நிறைய அநேகருக்குத் தெரியும். ரொம்பப் பேர் படித்திருக்கிறார்கள். ஆனால் என் போல் வெளியே சொல்ல முடியவில்லை. எங்கே தங்கள் வயிற்றில் மண்விழுந்து விடுமோ என்று பயப்படுகிறார்கள். ஏன் ஒவ்வொருவனும் எதற்கெடுத்தாலும் கடவுள் கடவுள் என்கிறான்? சதிரானால், பாட்டுப்பாடினால் எல்லாக் காரியங்களுக்கும் கடவுள் பெயராலேயே செய்கிறார்கள்.

இது மாதிரியான கொடுமைகளை நீக்க நாட்டில் ஆள் இல்லையே, 1000, 2000 வருடமாக சூத்திரன், வேசிமகன் என்று இருக்கும் பட்டத்தை நீக்க இந்த நாட்டில் இருக்கிற கட்சிகள் என்ன பரிகாரம் செய்தன? மனிதர்களுள் பிரிக்கும் சக்தியை எதிர்த்து எந்த கட்சி என்ன செய்தது?

***(14.2.1958 அன்று கோவையில் நடைபெற்ற மாபெரும் வரவேற்பு விழாவில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி "விடுதலை" - 25.12.1958)***

# 40. கடவுள், மதம், சாதி - இவை சம்பந்தமான ஆதாரம்



தென்னாட்டில் வாழும் திராவிட மக்களாகிய - தமிழர்களாகிய நமக்கு கடவுள் இல்லை, மதம் இல்லை, ஜாதி இல்லை, இவை சம்பந்தமான ஆதாரம் இல்லை. ஆனால், கடவுள் விஷயத்தில் "அன்பே கடவுள்" என்று 'ஏ'காரம் கொடுத்துக் கூறுகிறோம். மத விஷயத்தில் சைவம்-சைணவம் ஆகிய இரண்டு மதங்களைக் கூறிக் கொள்ளுகிறோம். இம்மதங்களுக்கு மூலக்கருத்து

சிவன், விஷ்ணு என்கிற இரண்டு கடவுள்களைக் குறிப்பாய் வைத்து இம்மதங்களைக் கருதிக் கொண்டு இருக்கிறோம்.

நமக்கு பிறவியினால் ஜாதிப் பிரிவு, ஜாதி பேதம் இல்லை என்கின்றோம். ஆனால், நாம் ஒவ்வொருவரும் ஜாதியில் பட்டவர்களாகவே இருக்கிறோம். நமக்கு உண்மையில் கடவுள், மதம், ஜாதி, சம்பந்தமான ஆதாரங்கள் எதுவும் இல்லை. ஆனால், தேவாரம், திருவாசகம், நாலாயிர பிரபந்தம் முதலிய வைகளை ஆதாரமாக - தமிழர்களின் வேதங்களாக - மறைகளாகக் கொள்ளுகிறோம். இந்த ஆதாரங்கள் சிவனையம் விஷ்ணுவையும் கடவுள்களாகக் கற்பித்த புராணங்களில் உள்ள வெறும் புளுகு, மூடநம்பிக்கை, அதாவது அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும், அனுபவதத்திற்கும் ஒத்துவர முடியாத, கண்மூடித்தனமாக நம்பியே தீர வேண்டியதான, குழந்தைகளுக்கு பாட்டிமார் சொல்லும் பூச்சாண்டிக் கதைகள் போன்ற கற்பனைகளை நம்பி ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

நம்மில் பாமர மக்கள் மாத்திரம் அல்லாமல், விஞ்ஞானப் பயிற்சிபெற்ற புலவர்கள், ஆராய்ச்சி அறிவுபெற்ற புலவர்கள், இலக்கிய அறிவு பெற்ற புலவர்கள், பொதுவாகக் கல்வி அறிவு, உலக ஞான அறிவு பெற்ற புலவர்கள் வரையிலுங்கூட இந்த தரம் உள்ள ''அறிஞர்''களாகவே இருக்கிறார்கள். கடவுளை ஒப்புக்கொண்டால் மதத்தை ஒப்புக் கொண்டாக வேண்டும்; மதத்தை ஒப்புக்கொண்டால் ஜாதியை ஒப்புக் கொண்டாக வேண்டும்; இவைகளை ஒப்புக்கொண்டால் இவைகளுக்கு ஏற்ற ஆதாரங்களை ஒப்புக்கொண்டாக வேண்டும். என்கிற நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்ட நிலையில் இருக்கிறோம்.

''பொல்லாத வாய்ப்பின் மேல் வாய்ப்பு ஏற்பட்டது''போல நமக்கு ஏற்பட்ட ஆட்சி முறையும் இவைகளைப் பாதுகாத்து வலியுறுத்தி நம் பிடரியின்மேல் ஏற்றும் தன்மையதாகவே இருந்து வருகிறது. இதற்கு ஏற்றவண்ணமே நம் நாட்டில் இருக்கிற ஏற்படுகிற சமய, சமுதாய, அரசியல் துறை பொதுநலத் தொண்டர்கள்'' என்பவர்களும் இவைகளை எதிர்க்கவோ, விலக்கவோகூடத் துணிவற்று வாழ வேண்டியவர்களாகவே இருக்க வேண்டியவர்களாகிவிட்டார்கள்.



திராவிடர் கழகத்தார்கள் இத்துறைகளில் எதிர்ப்புக் காட்டியும், விளக்கம் சொல்லியும்

தொண்டு ஆற்றி வருகிறார்கள் என்றாலும், அவர்களுக்குப் போதிய ஆதரவளிக்க நாட்டில் மக்கள் தகுதி பெறவில்லை என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது. திராவிடர் கழகக் கொள்கைகளை ஆதரிக்க பாமர மக்கள் ஏராளமாக இருந்தபோதிலும் அவர்களது ஆதரவு முருங்கைமரம் போன்றதாகவே பயன்படும் தன்மையதாக இருந்து வருகின்றது. பாமர மக்கள் நம்பமுடியாதவர்கள். அவர்கள் உள்ளத்தில் நம் கொள்கைகளைப் புகுத்த மாத்திரம் நாம் முயற்சிப்பது பொருத்தமாகுமே தவிர, அவர்களுடைய ஆதரவைப் பெறுவது என்பது அசாத்தியமான காரியம் என்றே கருத வேண்டியிருக்கிறது.

உதாரணம் சொல்ல வேண்டுமானால், சாதாரணமாக நம் பிறவி எதிரி பார்ப்பனர் பத்திரிகைகள் இந்த நாட்டில் நடமாடுகிற அளவில் 10-ல் ஒரு பாகமாவது அந்த பாமர மக்களுக்கும், படித்த மக்களுக்குமாக பெரும் கஷ்ட நஷ்டத்தோடு நடந்து வரும் பத்திரிகை மக்களிடத்தில் பரவ வேண்டாமோ, இல்லையோ! அதன் காரணம் என்னவென்றால் பாமரமக்களின் தன்மை அவ்வளவுதான் என்பதேயாகும். படித்தவர்கள் என்றால் பாமரமக்கள் அல்லாதவர்கள் என்பது அல்ல அதன் கருத்து. படித்தும் அறிவில்லாத பாமரர் என்றுதான் கருத்து.

நாம் ''படித்தவர்கள்தான்''; ''படித்தவர்கள் எல்லோரும் அறிவாளிகள்'' என்று கருதிவிட்டால் அந்தக் கருத்து, படியாத மக்கள் என்பவர்களுக்கு பெரும் கேடு செய்ததாகவே முடிந்து விடும். நம் மக்கள் பெரிதும் அறிவு, இன நலம்பெற முடியாமல் செய்யப்பட்ட பரம்பரையாக ஆனவர்கள் ஆனதால் இன்றைய நிலைக்கு இனியும் இரண்டொரு தலைமுறை ஆகித் தீர வேண்டிய நிலையில் பெரிதும் இருக்கிறார்கள். அதனால்தான் நம் படித்த மக்கள் என்பவர்களுக்கும் முக்கியமாய் இருக்க வேண்டிய அறிவு இல்லாமல் அவர்களையும் பாமர மக்கள் குறிப்பிலேயே சேர்க்க வேண்டி இருக்கிறது. (ஏனென்றால், இவர்களது தாய் தந்தையர்களைக் கவனித்தால் சிறிது விளங்கும்).



எனக்கு ''முன் ஜென்மம், முற்பிறப்பு, அவற்றின் விதி''என்பனவற்றில் சிறிதும் நம்பிக்கை இல்லை; ஆனால், பரம்பரையில் - அதற்கேற்ற உடல் - உள் உறுப்பு - இவற்றின் தன்மை ஆகியவற்றின் அமைப்பில் நல்ல நம்பிக்கை இருக்கிறது. என்

தகப்பனாரின் குணம் என்னிடம் இருக்கக் காண்கின்றேன். என் தகப்பனாரின் அங்க அடையாளம் ஒன்று இரண்டு என்னிடம் இருக்கக் காண்கின்றேன். இந்தப்படி பலரிடம் காண்கின்றேன். ஏன், ஆடு, மாடு நாய் முதலியவற்றிடமும் காண்கின்றேன்.

மாம்பழக்கொட்டை போட்டால் மாமரம் முளைக்கிறது மாத்தி ரமல்லாமல் அதன் புளிப்பு இனிப்பு நிறம்கூட மூலமரத்தின் தன்மையை ஒத்தே இருக்கின்றன. இரண்டு தலைமுறைக்கு முந்திய பெற்றோர் குணமும் உருவச் சாயலும் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் தொடர்கின்றன. ஆதலால் பரம்பரை மறைந்து விடுவது எளிதில் முடியாது. வள்ளுவர் ''ஊழ் முந்துறும்'' என்று சொன்ன ஊழின் கருத்து இதுவேதான். ஆதலால் நமக்கு ஊழ்மறை பெரும்பாலோருக்கு 2,3 தலைமுறைகளாவது தேவை இருக்கிறது.

மற்றும், அறிவில்லாதவர்களுக்கு அவர்கள் எவ்வளவு படித் தாலும், எவ்வளவு செல்வம் இருந்தாலும் அவர்களுக்கு சுயந லமே முந்துறும், பிறநலம், இனநலம் என்பவற்றை சுயநலமா கக் கருதும் தன்மை உள்ளவர்களைத்தான் அறிவாளிகள் என்றும், நல்வழி கண்டுபிடித்தவர்கள் என்றும் சொல்லத்தகும். ஆதலால் தான் நமக்கு கற்றவர்கள், செல்வர்கள், செல்வாக்குள் ளவர்கள் ஆதரவு இல்லை என்பது மாத்திரமல்லாமல் கல்லாத பாமரமக்கள் ஆதரவும் இல்லை என்றாலும் நம் கருத்து, முயற்சி வெற்றி பெறவில்லை என்று சொல்லிவிட முடியாது. அதற்கு உதாரணம் நாம், நம் கழகம், நம் பத்திரிகைப் பிரசுரங்கள் ஆகியவைகள் இன்னும் உயிரோடிருப்பதேயாகும். இவற் றோடு நமது முயற்சிகள் சிறிதும் தளராதிருப்பதேயாகும்.

மற்றும், நமது சமுதாய வாழ்வில் சுற்றுச் சார்பில் கல்வியில் இனநலமோ பிறநலமோ பெறத்தக்க வாய்ப்பு இல்லை. நமக் குள் இனப்பிரிவு வெட்கப்படத்தக்க தன்மையில் இருந்தாலும்



அதன் பேராலும் சுயநலமடையும் அள வுக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளுகி றோம். இதற்கு இப்படிப்பட்ட மக்கள்மீதே குற்றம் சொல்ல முடியாதபடி இன உணர்ச்சி நம்மில் இருப்பதால் மக்கள் இந்த இன உணர்ச்சிக்கு ஆளாக நேரிடுகிறது என்றும் சொல்லலாம். நிற்க; எடுத்துக்கொண்ட விஷ யமாகிய கடவுள், மதம், ஜாதி ஆதாரம் ஆகிய விஷயங்களுக்குச் செல்லுகிறேன்.

''கடவுள் என்றாலே அறிவை பயன்படுத்தக்கூடாதது'' என்றுதான் பொருள். ஆனால், கடவுள் நம்பிக்கைக்காரர்கள் இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ''கடவுள் என்றாலே காரணகாரியம், ஆதி அந்தம், இறப்பு பிறப்பு கூற முடியாதது மாத்திரமல்லாமல், கேட்கவே முடியாதது என்று தத்துவமுடையது. ஆதலால் கடவுளுக்கு இவற்றை கேட்பது நாத்திகமாகும்'' என்று சொல்லிவிடுவார்கள்.

ஆனால், கடவுளைக் கற்பிப்பவர்கள் ''உலகத் தோற்றத்திற்கு காரணகாரியம் வேண்டாமா? அதுதான், உலகுக்கு காரண காரியமாய் இருப்பது கடவுள்'' என்று சொல்கிறார்கள். எது எப்படியோ போகட்டும் என்றாலும், தமிழர்களாகிய நமக்கு கடவுள் உண்டா? கடவுள் ''இலட்சண''த்திற்கு உட்பட்ட கடவுளையாவது நாம் கொண்டு இருக்கிறோமா?

சிவனும் - விஷ்ணுவும் கடவுள் ஆனவர்களாவது கடவுள் தன்மை அல்லது கடவுள் இலட்சணம் கொண்டவர்களா என்பதைக்கூட 'இயற்கையை வணங்கினார்'' என்கின்ற தமிழன் சிந்திப்பதில்லை என்றால் தமிழன் இன்னமும் பகுத்தறிவு பெற்ற மனிதப் பரம்பரைக்கு வரவில்லை என்றுதானே அர்த்தம்? சிவனையும், விஷ்ணுவையும் உருவகப்படுத்தி இருக்கும் தன்மை கடுகளவாவது மனிதத் தன்மைக்கு ஏற்றதா என்று தமிழர்களில் யார் சிந்திக்கிறார்கள்?

அதுபோலவே மத விஷயத்திலும் எதற்கு ஆக மதம் என்பதை தமிழர்களில் தெரிந்து கொண்டவர்கள் யாரும் எனக்குத் தென்படவில்லை. உலகில் மதங்கள் பல இருந்தாலும் அவைகள் அந்தந்த மத மக்களை ஈடேற்றவும் ஒழுங்குபடுத்தவும், ஒற்றுமை கட்டுப்பாடு, சகோதர உணர்ச்சி ஏற்படவும் பயன்படுத்தப்படுகிறது. அதற்காகவே இருந்தும் வருகிறது. இக்கருத்துக்களில் சிறதாவது வெற்றி பெற்றிருக்கின்றன. ஆனால், நம் மதம்?

*(2.2.1959 'விடுதலை' நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)*



# 41. சிவன், பிரம்மா, விஷ்ணு யோக்கியதை

உழைப்பது நாம்; உழைக்கும் மக்களாகிய நாம் சூத்திரன், பஞ்சமன், வைப்பாட்டி மக்கள், நம் தாய்மார்கள் பார்ப்பானுடைய வைப்பாட்டிகள் என்று மனுவில் கூறுகிறான். கடவுள் சங்கதியோ கேட்க வேண்டாம். ராமன் ஒரு கடவுள். அவன் யோக்கியதை என்ன? இவற்றையெல்லாம் நாம் வைத்திருக்கலாமா? அடுத்தபடியாக இந்த கடவுள், மதம், சாஸ்திரம், புராணங்கள், அரசாங்கம் எல்லாம் புரட்டுப் பித்தலாட்டம், புராணங்கள் இருப்பது மானங்கெட்டதனம். இவற்றையெல்லாம் உடைத்து நொறுக்க வேண்டும் தீயிட்டுப் பொசுக்க வேண்டும். அப்போதுதான் நமக்கு மானம் இருக்கிறது என்று அர்த்தம். நம் இழிவு ஒழிய வேண்டுமானால் இவற்றையெல்லாம் ஒழித்துக் கட்ட வேண்டும். முதலில் அதற்கு துணிந்து மக்கள் முன்வரவேண்டும்.

மதத்தை ஒப்புக் கொண்டால் அதில் நாம் இழிவுபடுத்தப்பட்டிருக்கிறாமே. நான் தான் உன்னை கீழ்ஜாதியாகவும், பார்ப்பானை மேல் ஜாதியாகவும், உன்னை உழைப்பவனாகவும், அவனை உழைக்காமல் உண்டு களிப்பவனாகவும், உன்னை பஞ்சமன், பறையனாக, தீண்டப்படாதவனாக, 4ஆம் ஜாதி 5ஆம் ஜாதியாகவும், பார்ப்பானை மேல் குலத்தவனாகவும் படைத்தேன் என்கின்ற கடவுளை நாம் கும்பிடலாமா?

மதத்தை ஒப்புக் கொண்டால் நாம் பொறுக்கி என்ற நிலைதான் ஏற்படும் மனுதர்மத்தில் சூத்திரனானால் அவனுக்கு கெட்டுப்போன எச்சில் இலைதான்; உழுத்துப் போனதைத்தான் சாப்பிட வேண்டும்; கிழிந்த வேட்டிதான் கட்ட வேண்டும்;



சூத்திரன் பொருளீட்டக் கூடாது; காதில் விழும் போதே அருவருப்பான பெயர்தான் வைக்க வேண்டும்; மந்திரியாக இருக்கக் கூடாது என்ற எழுதி வைத்திருக்கிறான். நாங்கள் தோன்றித்தானே இதிலே சிறிது மாற்றம் ஏற்பட்டது. நெற்றியிலே விபூதி பூசுவது, நான் சூத்திரன் என்று ஒத்துக் கொண்டதாகத்தான் அர்த்தம். இப்போது

உடனடியாக என்ன செய்யச் சொல்கிறீர்கள், என்று லக்னோ சென்றிருந்தபோது என்னை கூட்டத்தில் கேட்டார்கள்.

நீங்கள் கோயிலுக்குப் போகக்கூடாது. நெற்றியில் மதச் சின்னங்கள் அணிந்து கொள்ளக்கூடாது, உங்கள் வீட்டுக் காரியங்களுக்கு பார்ப்பனர்களை அழைக்கக் கூடாது, பார்ப் பான் சமைத்த உணவை சாப்பிடக்கூடாது, உச்சிக்குடுமி வைத்துக் கொள்ளக்கூடாது என்பதாகத்தான் கூறினேன்.

இப்படி நான் பேசிக் கொண்டிருந்தபோதே சிலர் தலையில் தொட்டுப் பார்த்தனர். உச்சிக்குடுமி இருந்தது. உடனே கத்திரிக் கோல் வாங்கி வரச் செய்து முதலில் ஒருவன் வெட்டினான். இப்படி அங்கேயே 10, 15 பேர்கள் வெட்டிக் கொண்டார்கள். மற்றும் இந்த ஜாதி, மதம், சாஸ்திரம், புராணங்கள் இவற்றை யெல்லாம் ஒழிக்க வேண்டும் என்றும், நம்மைப் பிடித்துள்ள பேய்கள் ஜாதி, ஜனநாயகம், கடவுள் மத புராணங்கள் என்னும் மூன்று என்றும், நமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக உள்ள நோய்கள் அரசியல் கட்சிகள், தேர்தல், பார்ப்பான், பத்திரிகை, சினிமா ஆகிய இந்த அய்ந்தும் என்று கூறினேன்.

உலகோரெல்லாம் நவீன நாகரிகங்களுடன் முன்னேறி வர, நீ மட்டும் இவ்வளவு காட்டுமிராண்டியாக இருக்கிறாயே, நீ எப்போதுதான் திருந்துவது? உன் இழிவு ஒழிய வேண்டாமா? மனித சமுதாயத்தில் நீ மனிதனாக வாழ வேண்டாமா? என்று கேட்டால், எது வேண்டுமானாலும் சொல்லு செய்கிறோம். ஆனால், இது முன்னோர்கள் சொன்னது, அதிலே மட்டும் கை வைக்காதே என்றால் என்ன அர்த்தம்?

முன்னோர்கள் என்றால் யார்? ரிஷிகள்தானே உன் முன் னோர்கள்? இந்த ரிஷிகள் எல்லாம் எதற்குப் பிறந்தவர்கள்? இவர்களுடைய யோக்கியதை என்ன? குடத்திற்கு, பன்றிக்கு, கழுதைக்கு, குதிரைக்கு என்றுதானே பிறந்தார்கள்? ஒருவராவது மனிதனுக்குப் பிறந்திருப்பார்களா? ஆபாசம் இருக்கிறது என்று தெரிந்தும் அதை விட மாட்டேன் என்றால் என்ன பிடிவாதம்? நாரதர் யார்? அவனது வயது என்ன? யாருக்காவது தெரியுமா? எல்லா யுகங்களி லும் இருந்திருக்கின்றான்! கலியுகத்தில் மட் டும் தான் இல்லை. அதுவும் நான் இல்லாதி ருந்தால் வந்திருப்பான். ஒருவன் 40, 50



லட்சம் வருஷம் என்று இருக்க முடியுமா? ஒன்றரை கோடி வருடம் வாழ முடியுமா? இப்படி ஒரு மனிதன் இதே மாதிரி அயோக்கியத்தனங்களைக் கொண்டிருக்கிறான்.

மதத்தை எடுத்துக் கொண்டால் சைவமதத்தினர் உயர்ந்தவர்கள் நாங்கள் என்கிறார்கள். கசாப்புக்கடை மாதிரி வைத்திருக்கிறான் இவன் மதத்தை வைஷ்ணவன் என்று ஒருவன். எல்லாம் அயோக்கியத்தனம் பித்தலாட்டம் பெண்டாட்டியைக் கூட்டிக் கொடுத்தால் மோட்சம் தரும் கடவுள்! நீ அப்படியிருக்க சம்மதிப்பாயா? உன் பெண்டாட்டியை வாடகைக்குக் கேட்டால் நீ என்ன செய்வாய்? சம்மதிப்பாயா? உதைக்க மாட்டாயா? கடவுள் கதை என்ன? பெண்டாட்டியை வாடகைக்கு வாங்கியதும், அடுத்தவன் மனைவிமேல் ஆசைப்பட்டு உதை வாங்கிய கடவுளும்தானே இருக்கிறது? பிள்ளையார் யோக்கியதை என்ன? சுப்பிரமணியனுடைய யோக்கியதையை பெரிய புராணத்திலே எழுதியிருக்கிறானே - பிள்ளையைக் கொல்லுதல் பக்தியா? சிவன் அவனைக் கொன்றான். இவனை வாயில் விழுங்கினான் என்று இருக்கிறது.

ஒழுக்கமானதாக ஏதாவது இருக்கிறதா? அன்பான சிவன் என்கிறாய். எது அன்பானது? கையிலே சூலாயுதம், இடுப்பிலே புலித்தோல், கழுத்தில் பாம்பு, மண்டை ஓடு, பல பேரைக் கொன்றிருக்கிறது; எப்படி அது அன்பான சிவம் ஆக இருக்க முடியும்? கடவுளைக் கும்பிட வேண்டாம் என்று கூறவில்லை. ஏதாவது ஒரு கடவுளை கிறிஸ்துவன், முஸ்லீம் மாதிரி கும்பிடு, தொலையட்டும் பரவாயில்லை. இப்படி ஒரு காட்டுமிராண்டித்தனமான கடவுளை வைத்துக் கொண்டு அதற்காகப் பல சடங்குகளை, பூசைகளை இந்த 1959-லேயும் செய்தாயானால் என்ன அர்த்தம்? நான் சுசீந்திரம் என்ற ஊருக்குப் போயிருந்தேன். அங்கு ஒரு பெரிய உற்சவம் நடந்தது.பெரிய கூட்டம், நிறைய போலீஸ், என்னவென்று விசாரித்தேன்.



ஒரு நாள் சிவன் பெண்டாட்டியிடம் நாரதர் இரும்புத் துண்டுகளைக் கொடுத்து இதை கடலையாக வறுத்துக் கொடு என்றானாம். இரும்பை எப்படி கடலையாக வறுக்க முடியும் என்று அவள் கூறிவிட்டாளாம்.

பிறகு விஷ்ணு பெண்டாட்டியிடமும், பின் பிரம்மாவின் பெண்டாட்டியிடமும்

அதுபோலவே அந்த இரும்பைக் கொடுத்து வறுத்துத் தரும்படி கூறினான். இரும்பையாவது வறுப்பதாவது, இது எப்படி முடியும் என்று கூறிவிட்டார்கள். அதற்கு நாரதர், நான் வறுத்து வருகிறேன்; பார் என்று கூறிவிட்டு பூலோகத்திலுள்ள அனுசுயா என்ற பத்தினியிடம் கொடுத்து வறுத்துக் கொடு என்று கூற, அவள் அது என்னவென்று கூடப் பார்க்காமல் சட்டியில் போட்டு வறுத்தாளாம்.

அது கடலையாகப் பொரிந்து வந்தராம். அதை நாரதர் சிவன், விஷ்ணு, பிரம்மா முதலியோருடைய பெண்டாட்டிகளிடம் போய், பார் பார் நான் இரும்பை கடலையாக வறுத்து வந்துவிட்டேன் என்றானாம். அதற்கு அவர்கள் ஆச்சரியப் பட்டு அது எப்படி முடிந்தது என்று கேட்க, அதற்கு நாரதர், அந்தம்மாள் பதிவிரதை - அதனால் வறுக்க முடிந்தது என்றா னாம். உடனே அவள் பதி விரதையானால் எங்கள் சங்கதி என்ன என்று கோபம் வந்து விட்டதாம் அவர்களுக்கு, பிரம்மா, சிவன், விஷ்ணு மூன்று பேர்களுடைய பெண்டாட்டிகளும் விசனப்பட்டார்களாம்.

இதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்று அவர்கள் புருஷன் கள் வந்ததும் "நீ கடவுள்! கடவுள் பெண்டாட்டி நாங்கள். எவனோ காட்டில் இருக்கிற ஒரு ரிஷியின் மனைவி பெரிய பதிவிரதையாம்; இரும்பை வறுத்துவிட்டாள். அவள் பதிவிரதை யானால் எங்கள் சங்கதி என்ன?" என்று கேட்டார்களாம்.

சரி இப்போ என்ன பண்ணச் சொல்லுகிறீர்கள் என்று கடவுள்கள் கேட்க, "நீங்கள் போய் அவளையும் அபசாரியாக ஆக்கி விட்டு வா" என்றார்களாம், "பதிவிரதைத் தன்மையை போக்கி விட்டு வா" என்றார்களாம். இந்த மூன்று பேரும் (சிவன், விஷ்ணு, பிரம்மா) சாமியார் வேடம் போட்டுக்கொண்டு அந்த ரிஷிபத்தினியிடம் போய், அம்மா பசிக்குது சோறு போடு என்று கேட்டார்கள். அவளும் இவர்களை உட்கார வைத்து இலை போட்டு உணவு பரிமாறினாள். இவர்கள், "சாப்பிடுகிறோம்; ஆனால் சாப்பிடுவதற்கு முன் ஒரு பூசை செய்வது வழக்கம். அது செய்துவிட்டுத் தான் சாப்பிடுவோம்" என்று கூறினார்கள். அந்தம்மாள் "அப்படியா, அதற்கு என்ன வேணும்? தேங்காய், பழம், சூடம் என்ன தேவை கூறுங்கள்" என்று கேட்டாள்.



அதற்கு இவர்கள் "அதெல்லாம் ஒன்றும் வேண்டாம; நீ உன் சேலையை அவிழ்த்துவிட்டு விட்டு நிற்கணும்; நாங்கள் அதைப் பார்த்துவிட்டு சாப்பிடுவோம்" என்றார்கள்.

இவன்கள் சொன்னதுதான் தாமதம், அவள் சிறிதும் தயங்க வில்லையாம். உடனே சேலையை அவிழ்க்க ஆரம்பித்து விட்டாள். அவள் அவிழ்க்க அவிழ்க்க இந்த கடவுள்கள் மூவரும் குழந்தைகளாக மாறிவிட்டார்களாம். அவளுடைய பதிவிரதாத்தன்மை அப்படியே அழிவில்லாமல் இருந்து விட்ட தாம். உடனே அந்தக் குழந்தைகளை எடுத்துப் பால் கொடுத்து தொட்டிலில் போட்டு ஆட்டினாள். அவளுடைய புருஷன் வந்தான், பார்த்தான் குழந்தையை. "நான் போகும் போது சும்மாயிருந்தாய்; வருவதற்குள் ஏது குழந்தை? எப்படி பெற்றெ டுத்தாய்?" என்று ஆச்சரியப்பட்டுக் கேட்டான். அவள், "மூன்று பேர் வந்து பிச்சை கேட்டார்கள்; போட்டேன். நான் அம்மணமாக நிற்கணும் என்றார்கள். அப்படியே செய்தேன். அவர்கள் குழந்தைகளாக மாறிவிட்டார்கள்" என்று நடந்ததைக் கூறினாள். அவன் ரிஷியாயிற்றே, உடனே ஞானக்கண்ணால் பார்த்து விஷயம் தெரிந்துகொண்டானாம். "நல்ல வேலை செய்தாள். இவர்கள் யார் தெரியுமா? சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகும். உன்னைக் கெடுக்க வேண்டுமென்று வந்திருக்கிறார்கள்! நீ நல்ல வேலைதான் செய்தாய்" என்று கூறி அப்படியே இருக்கட்டும் என்று கூறிவிட்டான்.

இப்படி உலகத்தில் காத்தல், அழித்தல், பிறத்தல் வேலை பார்க்கிற கடவுள்கள் இவள் வீட்டு தொட்டியில் குவா குவா கொட்டிக் கொண்டிருந்தது. உலகத்தில் வேலைகள் எல்லாம் நின்று போயிற்றாம். மக்கள் தேவர்கள் எல்லாம் திண்டாடுகிறார் கள். ஒன்றும் புரியவில்லை. எங்கே போனார்கள் என்றும் தெரியவில்லை. அப்புறம் விஷயம் தெரிந்தது. ரிஷியிடம் ஓடிவந்து "உலகத்தில் எல்லா வேலையும் நின்று போச்சு, நாங்கள் திண்டாடுகிறோம். மூன்று தேவர்க ளையும் விட்டு விடுங்கள்" என்று கேட்டார் கள். "அதற்கு என்னை என்ன பண்ணச் சொல்கிறீர்கள்! அவளைப் போய்க் கேளுங் கள்" என்று கூறினார். அந்த ரிஷிபத்தினியி டம் போய், "புத்தி வந்தது, தேவர்களைவிடு " என்று கெஞ்ச அவளும் சரி என்று தேவர்களாக பழைய உருவாக்கி அனுப்பி



விட்டாளாம். இதைத்தான் அன்று அங்கு உற்சவ தினமாகக் கொண்டாடினார்கள். கொஞ்சமாக அறிவுக்கு இடமிருக்கிறதா இதில்? இந்தக் கதையின் பேரால் ஒரு பண்டிகையா? உற்சவம் கொண்டாடுவதா? வெட்கமாக இல்லை?

கடவுள் இல்லை என்று சொல்ல வரவில்லை. யோக்கியமான ஒரு கடவுளைக் கும்பிடுங்கள்; வேண்டாம் என்று கூறவில்லை. முஸ்லீமும் கிறிஸ்தவனும் சாமி இருக்கு என்கிறான். அவன் எப்படி கூறுகிறான்? ஒரே கடவுள், அவர் அன்பானவர், அருளானவர், யோக்கியமானவர், அவர் ஒன்றும் கேட்க மாட்டார், பிறப்பு இறப்பு இல்லாதவர், உருவமில்லாதவர் என்கிறான்! நீ என்னடா என்றால் பல ஆயிரக்கணக்கான கடவுள்கள் என்கிறாய். அவர் பல ஆயிரக்கணக்கானவர்களை கொன்றார் என்கிறாய். எல்லாம் பித்தலாட்டமான கடவுள், அடுத்தவன் பெண்டாட்டிமீது ஆசைப்பட்ட கடவுள், பல பெண்டாட்டிகளையும், சோற்றுப் பூசையும் கேட்கும் கடவுள்!

கடவுள் பிறப்பு இறப்பு உடையவர், அவருக்கு பல உருவங்கள் உண்டு என்கிறாய். என்ன அர்த்தம்? நம்மைவிட காட்டுமிராண்டியாக இருந்த முஸ்லீம், கிறிஸ்துவன்கள் எவ்வளவோ முன்னேறி விட்டார்கள். வெள்ளைக்காரன் மடையனாக இருந்தான். அக்காள் தங்கையைக் கட்டிக் கொண்டு திரிந்தான். பச்சை மாமிசம் தின்று வந்தான். அவன் இன்று முன்னேற்றமடைந்து கடவுளிடம் போட்டி போடுகிற அளவுக்கு ஆகாய விமானம், கப்பல், எலக்டரிக்லைட், சந்திர மண்டலம் வரை போக ஆரம்பித்து விட்டான்.

இன்னும் நாம் காட்டுமிராண்டியாக இருந்தால் என்ன அர்த்தம்? இவ்வளவு உற்சவம் பூசை விழா செய்து வந்தால் நாம் சூத்திரன் என்பதை ஒத்துக் கொள்வதாகத்தான் அர்த்தம். இதையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். லக்னோவில் நான் இதையெல்லாம் கூறும்போது அங்கு யாரும் இது தப்பு என்ன மறுத்துக் கூறவில்லை. நீங்கள் உங்கள் பகுத்தறிவைச் செலுத்தி அறிவு பெற வேண்டும்.

*(24.5.1959-ல் சேத்தியாதோப்பு வரவேற்பு பாராட்டுக் கூட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி - "விடுதலை" 4.6.1959)*



# 42. கடவுளை மறுக்க அறிவு ஆராய்ச்சி தேவை

சென்ற மாதம் 30-ஆம் தேதி நான் கும்பகோணம் நிதி அளிப்புக் கூட்டத்தில் பேசுகையில் நான் ஒரு கடவுள் உண்டு என்றும், அதனை கும்பிடும்படிக் கூறினேன் என்றும் எல்லா பத்திரிகைக்கார அயோக்கியர்களும் பத்திரிகையில் முக்கியத்து வம் கொடுத்து வெளியிட்டுள்ளார்கள். 'மெயில்' போன்ற பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகள்கூட இந்த அயோக்கியத்தன மான வேலையைச் செய்து உள்ளது. 'ஆனந்த விகடன்' காட்டூன் போட்டு உள்ளான். "கண்ணீர்த்துளி" (கண்ணீர்த் துளி என்றால், தி.மு.க.வைக் குறிப்பிடுகிறது.) பத்திரிகை ஒன்று, 'அண்ணா பாதையில் பெரியார்" வந்து விட்டார் என்று ஈனத்தனமான முறையில் சேதி வெளியிட்டுள்ளது. "கண்ணீர்த் துளிகள்" அதுவரை ஒரு கடவுள் உண்டு என்று கூறினார்க ளாம்! நான் இல்லை என்று மறுத்து வந்தேனாம்! இன்றுதான் தவறை உணர்ந்து ஒரு கடவுள் என்ற அவர்களின் வழிக்கு நான் வந்திருக்கின்றேனாம்! பத்திரிகைகாரன்களில் எவனும் யோக்கியன் கிடையாது. எல்லோரும் இப்படிப்பட்ட அயோக்கி யனாகத்தான் ஆகிவிடுகின்றான்.

நானும் மானங்கெடத்தான் இவர்களைப்பற்றிப் பேசுகின் றேன். ஒருவனுக்காவது மான ஈனத்தைப்பற்றிய கவலையே இல்லையே. நான் கும்பகோணத்தில் என்ன பேசினேன். நான் இங்கு குறிப்பிட்டது போலத்தான் அங்கும் கடவுள், மதம் இவை பற்றிப் பேசினேன்.

நம் மக்கள் கடவுள், மதம் இவை பற்றிய முட்டாள்தனங் களை எல்லாம் விட்டொழிக்க வேண்டும். உங்களுக்கு கடவுள் இருந்தாக வேண்டுமென்று எண்ணுவீர்களே யானால் வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு கடவுள் நம்பிக்கை கிடையாது. எனது இயக் கத்தைச் சார்ந்த எங்கள் தோழர்களுக்கெல்லா மும் கடவுள் நம்பிக்கை கிடையாது.



அதுபோலவே நீங்கள் இருந்தாக வேண் டும் என்று நான் என்றும் கட்டாயப்படுத்த வரவில்லை. கடவுள் இல்லையென்றுகூற,

அதன்படி நடக்க ரொம்ப அறிவு வேண்டும், தெளிவுவேண்டும். எப்படி இல்லை? என்று எந்தவிதக் கேள்விகள் கேட்டாலும் தெளிவுபடுத்தக்கூடிய முறையில் அறிவாற்றல், ஆராய்ச்சி வன்மை வேண்டும்.

இவையெல்லாம் நம் மக்கள் எல்லோரிடமும் இருக்கின்ற தென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. கடவுள் இருக்கின்றது என்று கூற அறிவு தேவையில்லை. சுத்தமடையன், அடிமுட் டாள்கூட கடவுள் நம்பிக்கை உள்ளவனாக இருக்கலாம். அறிவுக்கு வேலையே இல்லை, அப்படி கடவுள் இருந்தாக வேண்டும் என்று நம்புகின்ற நீங்கள் அறிவோடு நடந்து கொள்ளுங்கள்; உலகத்தில் முஸ்லீம், கிறிஸ்துவர்கள் கடவுள் நம்பிக்கையை வைத்து இருப்பது போலாவது நடந்து கொள் ளுங்கள் என்றுதான் விளக்கம் சொன்னேன்.

இன்று உலகில் 250 கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்களில் 100 கோடி மக்களுக்குக் கடவுள் கிடையாது. ரஷ்யாக்காரர்கள் 20 கோடிப் பேர்கள். அவர்கள் கம்யூனிஸ்டுகள்; அவர்களுக்குக் கடவுள் இல்லை. பைபிளைக் கையில் எடுத்துக் கொண்டு வீதியில் நடப்பதுகூட குற்றம். சீனாக்காரன் 40 கோடிப் பேர். அவர்களுக்குக் கடவுள் இல்லை. ஜப்பானியர் 8 கோடி, சயாமில் ஒன்றரை கோடி, பர்மாவில் இரண்டு, இரண்டரை கோடி மற்றும் திபேத், சிலோன் ஆகிய நாட்டில் வாழும் மக்களுக்கெல்லாம் கடவுள் இல்லை. இவர்கள் எல்லாம் பவுத்தர் கள், அவர்களுக்கு கடவுள் கிடையாது. மற்றபடி அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் எல்லாம் ஏராளமான அறிவாளி கள், நாஸ்திகக் கருத்து உடையவர்களாக இருக்கின்றார்கள். இப்படி கடவுள் இல்லை என்பவர்கள் உலகத்தில் ஏறக்குறை 100 கோடிக்குக் கம்மியில்லாமல் உள்ளார்கள்.

அதுபோலவே கடவுள் நம்பிக்கை உடையவர்கள் ஏறக்கு றைய 120 கோடிக்குமேல் உள்ளார்கள். கிறிஸ்துவர்கள் எல்லாம் கடவுள் நம்பிக்கை உடையவர்கள். அவர்கள் உலகத்தில் 60, 65 கோடிக்குமேல் உள்ளார்கள். அதுபோ லவே முஸ்லீம் மக்கள் 40, 45 கோடிக்கு மேல் உள்ளார்கள். இதையல்லாமல் இந்துக் கள் என்று கூறப்படுகின்ற நம் காட்டுமிராண் டிகள் இந்த நாட்டில் ஏறக்குறைய 25 கோடிக்குமேல் உள்ளோம். இவர்களை



நான் கடவுள் நம்பிக்கைக்காரர்கள் என்ற கணக்கில் சேர்க்க வில்லை. இவர்கள் கிறிஸ்துவர், முஸ்லீம்கள் தங்கள் கடவு ளுக்கு இலக்கணம் வகுத்து வரையறைப்படுத்தி இருப்பது போல் இல்லாதவர்கள்; தெளிவில்லாக் காட்டுமிராண்டிக் காலத் துக் கடவுள் கொள்கையையே கைக் கொண்டு ஒழுகுபவர்கள்.

எனவே, உலகத்தில் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களை விட கடவுள் நம்பிக்கை உடையவர்களே அதிகமாக உள்ளார் கள். உங்களுக்கு ஒரு கடவுள் வேண்டுமானால் இப்படி பெரும் பகுதியான மக்கள் கொண்டுள்ள மாதிரியாவது வைத்துக் கொண்டு தொலையுங்களேன்.

முஸ்லீமும், கிறிஸ்துவனும் கடவுளை எப்படி வைத்துள் ளான்? கடவுளுக்கு என்ன இலக்கணம் வகுத்துள்ளான்? ஒரே கடவுள், அவர் உருவமற்றவர், பிறப்பு இறப்பு இல்லாதவர், விருப்பு வெறுப்பற்றவர், மக்களிடம் எதையும் எதிர்பார்க்கத வர், ஒன்றும் வேண்டாதவர், அருளானவர், அன்பானவர். அவரை வணங்க ஒரு காசும் செலவு செய்ய வேண்டியதில்லை. இப்படித் தானே கிறிஸ்துவனும் முஸ்லீமும் தம் கடவுளின் இலக்கணத்தை வகுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஆனால், நீ வணங்கும் கடவுள் இப்படி கிறிஸ்துவனும் முஸ்லீமும் சொல்லுகின்ற மாதிரி எந்த ஓர் இலக்கணத்தையாவது கொண்டி ருக்கின்றதா? கிறிஸ்துவனும் முஸ்லீமும் ஒரே கடவுள் என்கி றான். அப்படிக் கூறத்தக்க முறையில் உன்னிடம் கடவுள் உள்ளதா?

சிவன், விஷ்ணு, பிரம்மா, பிள்ளையார், சுப்ரமணியன், அவர்கள் பெண்டாட்டிகள், பிள்ளை குட்டிகள், வைப்பாட்டி கள்; இது மட்டுமா! மாடு, கழுகு, காக்கை, குரங்கு, பாம்பு, வேப்பமரம், அரசமரம் இதெல்லாம் கடவுள்கள்! குப்புறக்கிடக் கும் கல்லை நிமிர்த்தி வைத்தால் அதெல்லாம் கடவுள்கள்!



எங்களது பிரச்சாரம் இல்லாவிட்டால் ரோட் டில் உள்ள மைல்கற்கள், பர்லாங்குக் கற்கள் எல்லாவற்றையும்கூட இந்தப் பார்ப்பனர் கள் கடவுளாக்கி இருப்பார்கள். எழுத்துக் களை அழித்துவிட்டு அதற்கு நாமத்தையோ பட்டையையோ போட்டுவிட்டு இது மைல் ஈஸ்வரர், இது பர்லாங்கு ஈஸ்வரர், விழுந்து கும்பிடுங்கள் என்றால் மூடமக்கள்

கும்பிடாமலா இருப்பார்கள்? அதற்கு மூன்று மூன்று காசு வைத்து விழுந்துதானே கும்பிடுவார்கள்?

கிறிஸ்துவனும் முஸ்லீமும் கடவுள் உருவம் அற்றவர் என்கின்றனர். உன் கடவுளுக்கு எத்தனை உருவம்? மீன் உருவம், கழுகு உருவம், குரங்கு உருவம், பன்றி உருவம், காக்கை உருவம், உடல் மனிதன் மாதிரி தலை யானையாகவும், தலை மனிதன் மாதிரி உடல் மாடாகவும், மீனாகவும், புலியாகவும், பைத்தியக்காரனுக்குக் கள் ஊற்றிய மாதிரி இப்படி கணக்கற்ற வகைகளில் தான்தோன்றித்தனமாகவே எல்லாம் உள்ளது!

துணி கட்டத் தெரியாத சின்ன குழந்தைகள் மண்ணில் மூத்திரத்தைவிட்டுப் பிசைந்து அதை கொட்டாங்குச்சியில் போட்டு அடித்து எடுத்து இது இட்டிலி, இது தோசை, இது வடை, இது பெண்ணு, இது மாப்பிள்ளை என்று விளையாடும் விவரம் அறியாத குழந்தைகளுக்கும், இப்படி கடவுள் விளையாட்டு விளையாடும் வேட்டி புடவை கட்டிய வயதுவந்தவர்களுக்கும் என்ன வித்தியாசம் காண முடியும்?

கிறிஸ்துவனும் முஸ்லிம் கடவுள் பிறக்காதவர், சாகாதவர் என்கின்றனர். இப்படிக் கூறுகின்ற முறையில் உன்னிடத்தில் எந்தக் கடவுளாவது இருக்கிறதா? விரலை விடுங்களேன் பார்ப்போம்!

உன்னுடைய கடவுள்கள் அத்தனையும் பிறந்தவைகள்; தாய் தந்தையர்களுக்குப் பிறந்தது மட்டுமல்லாமல், இயற்கைக்கு மாறாகவெல்லாம் பிறந்து இருக்கின்றன! முக்கிய கடவுள்கள் என்று கூறப்படும் சிவன், விஷ்ணு, பிரம்மா, சுப்பன், பிள்ளையார் இவர்கள் யார் யாருக்கு பிறந்தவர்கள் என்பது பெரிய சர்ச்சைக்குரிய விஷயமாக உள்ளது. ஒரு புராணத்தில் சிவன், விஷ்ணுவைப் பெற்றான் என்றும், இன்னொரு புராணத்தில், விஷ்ணு, சிவனைப் பெற்றான் என்றும், இந்த விஷ்ணு, சிவன் இருவரையும் பிரம்மா பெற்றான் என்றும், சிவனும், விஷ்ணுவும் பிரம்மாவைப் பெற்றனர் என்றும் இப்படி தகராறாகவே உள்ளது.



கடவுளுக்கு ஜாதகங்கள் வேறல்லவா ஏற்படுத்தியுள்ளனர்! ராமன் நவமியில் பிறந்தான், கிருஷ்ணன் அஷ்டமியில் பிறந்தான், சுப்ரமணியன் சஷ்டியில் பிறந்தான், சிவன் திருவாதிரையில் (ஆருத்திராவில்) பிறந்தான்,

பிள்ளையார் சதுர்த்தியில் பிறந்தான் என்று ஜாதகங்கள் வேறு வைத்திருக்கின்றீர்கள். உற்சவம் வேறு அது அதற்குக் கொண்டாடுகின்றீர்கள்!

இப்படி பிறந்த உங்கள் கடவுள் எல்லாம் செத்தும் இருக்கின்றனவே. கிருஷ்ணன் காட்டிலே யாரோ ஓர் வேடன் எறிந்த அம்பு காலில் பட்டு புண்ணாகி புழுபுழுத்துச் செத்திருக்கின்றான். ராமன் தன் அந்நிய காலத்தில் சரயூ நதியில் விழுந்து இறந்திருக்கின்றான்! இல்லையென்று எவரும் சொல்ல முடியாதே - கிருஷ்ணன் செத்ததை பாகவதத்திலும், ராமன் செத்ததை ராமாயணத்திலும் பார்த்தாலே தெரியம்!

மற்றவன் கடவுள் எல்லாம் வல்லவர் என்கின்றான். ஆனால், உன் கடவுள் அப்படியா? ஒரு கடவுள் இன்னொரு கடவுளை நோக்கித் தவம் பண்ணி இருக்கின்றது. ஒரு அவதாரம் இன்னொரு அவதாரத்துடன் சண்டையிட்டு இருக்கின்றது. உதை வாங்கி இருக்கின்றது, சாபம் பெற்று இருக்கின்றது. கண்டவன் மனைவியைப் பிடித்திழுத்து உதை தின்னு இருக்கின்றது. இதுவா சர்வ வல்லமை படைத்த கடவுளின் லட்சணம்?

*(விவாசர்பாடி, தர்மபுரி, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் 1959-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரைகளில் ஒரு பகுதி - "விடுதலை" - 24, 25.11.1959)*

# 43. நமது கடவுள்கள் இறக்குமதி சரக்கே

நானும், எனது கழகமும் யார் என்றால் சமுதாயத் தொண்டு செய்து வருபவர்களே. எனக்கு வயது 82 ஆகின்றது. நான் அறிய இந்த நாட்டில் சமுதாயத் தொண்டு நடைபெறவில்லை. ஏதோ அரசியல் என்று பெயரை வைத்துக் கொண்டு பிழைப்புக்கு இடமாக்கிக் கொண்டவர்கள்தான் இருக்கின்றனர்.



அதற்கு முன் ஏதோ மதத்தொண்டு, பக்தித் தொண்டு என்ற பேரால் நம்மை மடமையில் ஆழ்த்தும் தொண்டுதான் நடைபெற்று வந்து இருக்கின்றன. அதற்கு முன் புராண காலத்தில் ஒருவரை ஒருவர் அடக்கி ஆதிக்கம்

செலுத்தும்படியான தொண்டுதான் நடைபெற்று இருக்கின்றது. நமக்கு மக்கள் தொண்டு, சமுதாயத் தொண்டு அவசியம் என்ற எண்ணமே இல்லாமல் நடைபெற்று வந்து இருக்கிறது. நமக்கு எதையும் சிந்தித்து ஏற்றுக்கொள்ள உரிமை இல்லாத நிலைமையில்தான் இருந்து இருக்கின்றோம். மனித சமுதாயத்துக்கு தொண்டு செய்ய வரவொட்டாமல் கடவுள், மதம், சாஸ்திரத்தால் கட்டுப்படுத்தப்பட்டு சிந்திக்க வகையற்றவனாகவே ஆக்கப்பட்டு இருக்கின்றான்.

நமது கடவுள் அமைப்பு 4000, 5000 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது. இந்தக் கடவுள் காட்டுமிராண்டிக் காலத்தில் ஏற்பட்டதாகையால் காட்டுமிராண்டி குணங்களே கற்பிக்கப்பட்டுள்ளன. அதுபோன்றே நமது மதமும் ஆகும். அதுபற்றி எவனும் சிந்திப்பதே இல்லை. ஏதோ வெறியில் உளறுவான்கள். ஆனால், நமது மதம் என்ன, அது எப்போது ஏற்பட்டது. யார் ஏற்படுத்தியது என்று எவனுக்கும் தெரியாது. அதுபோலவே கடவுளைப்பற்றி எவனுக்காவது தெரியுமோ? சும்மா காட்டுமிராண்டி காலக் கடவுள் தன்மையை உளறுவானே ஒழிய கடவுள் என்றால் என்ன, அது எப்போது ஏற்பட்டது, அதனால் நாம் அடைந்த நன்மைகள் என்ன? என்று எவனும் சிந்திக்கவே இல்லை.

நாடகக்காரன் ராஜா வேஷம் போட்டுக்கொண்டு நடிப்பது போல இந்த மடையன்களும் சாம்பல் அடித்துக்கொள்கின்றான்; கொட்டை கட்டிக்கொண்டு பக்தன்போல வேஷம் போடுகின்றான். தோழர்களே! நான் சராசரி வயதுக்குமேல் இரண்டு பங்காக வாழ்ந்துவிட்டேன். ஏதோ பூமிக்குப் பாரமாக இருக்கும் வரை நம்மால் ஆன சமுதாயத் தொண்டை செய்வோம் என்று நினைத்துத் தொண்டாற்றுகின்றேன். எங்கள் தொண்டு எதிர்நீச்சல் போன்றது. மலைமீது குண்டு ஏற்றுவது போன்றது. எங்கள் தொண்டு தோற்றால் எங்களுக்கு நஷ்டம்தான் என்ன? நாங்கள் மனித சமுதாயத்தில் பிரதிபலன் எதுவும் பார்க்கவில்லை; வயிறு வளர்ப்பவர்களும் அல்ல. நாங்கள் சொல்லுகின்றோம்; மக்களுக்கு புத்தி வந்தால் வரட்டும்; இல்லாமல் போனால் போகட்டும். இன்று இல்லாவிட்டாலும் இன்னும் கொஞ்ச நாள் கழித்தாவது புத்தி வராதா என்ற நிலையில்தான் தொண்டு செய்கின்றோம்.



மனிதன் உயிர் ஒன்றும் கொழுக்கட்டையல்லவே; அவன் சிந்திக்கும் தன்மை உடையவனாயிற்றே? இன்று நமது நாட்டில் உள்ள கடவுள்கள் எல்லாம் காட்டுமிராண்டிக் காலத்தில் ஏற்பட்ட கற்பனைகள், மனிதத் தன்மைக்கு மாறானவை. அதுபோலத்தான் நம் முன்னோர்கள் என்பவர்களும்; 1800-ல் இருந்தவனுக்கும், 1900-த்தில் இருப்பவனுக்குமே வித்தியாசம் பல பார்க்கின்றோம். 1800-ல் இருந்தவன் ரயிலைக் கண்டானா? இந்த விஞ்ஞான அதிசய அற்புதங்களைக் கண்டானா? சக்கிமுக்கிக் கற்கள் காலத்தில் வாழ்ந்தவன்தானே? 2000, 3000 ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் எப்படி இருப்பான்? சுத்தக் காட்டுமிராண்டியாகத்தானே இருந்து இருக்க முடியும்?

நாம் வாழ்வது 20-ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றாற்போல் வேண்டுமானால் கடவுளையும், மதத்தையும், சாஸ்திரங்களையும் அமைத்துக் கொள்ளவேண்டும். இன்றைய சமுதாய தொண்டு என்பது இந்த நாட்டில் இருந்துவரும் காட்டுமிராண்டிக் கடவுள்களையும், மதங்களையும், சாஸ்திரங்களையும் ஒழித்து, மனிதன் மனிதத் தன்மை அடையும்படியான செயலில் ஈடுபட்டு உழைக்கவேண்டும் என்பதாகும்.

நம் கடவுள் எதை எடுத்துக்கொண்டாலும் எப்போது ஏற்பட்டது தெரியுமோ? மனிதன் மிருகப் பிராயத்தில் இருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. அதுமுதல் இன்று வரைக்கும் இப்படி காட்டுமிராண்டி நிலையிலேயே இருக்கின்றது.

எந்தக் கடவுளை வேண்டுமானால் மனதில் நினைத்துக் கொள்ளுங்கள். அவைகளின் யோக்கியதை என்ன? மனிதனுக்கு ஒழுக்கம் எது, எது ஒழுக்கமில்லாதது என்று தெரியாத காலத்தில் ஏற்பட்டது. மனிதனுக்கு அன்பு எது, கருணை எது என்று தெரியாது மனிதனை மனிதன் கொன்று தின்ற காலத்தில் ஏற்பட்டதன் காரணமாக இந்தக் கடவுள்களுக்கு ஒழுக்கமோ,



நாணயமோ, அன்போ, கருணையோ வைக்கப்படவில்லை. ஏன்? இவைகள் இல்லாத காலத்தில் ஏற்பட்டது. இன்று நாம் நினைக்கின்றோம், மனிதனுக்கு மனிதன் அன்பாக, ஒழுக்கமாக, நாணயமாக இருக்கவேண்டுமென்று; பெயரளவில் வேண்டுமானாலும் கூறுகின்றோம். இந்தக் காலத்தில் கடவுள் ஏற்படுத்துவதாக இருந்தால் கடவுளை

ஒழுக்கம் உடையதாக, நாணயம் உடையதாக, அன்பும், கருணையும் உடையதாகச் செய்வோம்.

மேலும், இன்றைக்கு இருக்கும் இந்தக் கடவுள்கள் ஏற்பட்ட காலத்தில் தாய், தங்கை, மகள் என்று கருதாமல் கட்டிக்கொண்டு வாழ்ந்தவர்கள். இவர்களின் கற்பனையில் உதித்த கடவுள் ஆனதனால் இந்தக் கடவுள்களும் தாய், தங்கையை, மகளை கட்டிக்கொண்டதாக கற்பனை பண்ணிக் கதையும் எழுதியிருக் கின்றான்.

எவ்வளவுக்கு எவ்வளவு பழைய கடவுள் என்கின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு காட்டுமிராண்டிக் கடவுள் ஆகும். சிவன் பழைய கடவுள் என்று கூறுவார்கள். இந்த சிவன் ஒழுக்கம் கெட்டவனாக எத்தனை பேர்களைக் கெடுத்து இருக் கின்றான். எத்தனை பேர்களின் புருஷன்மார்களால் இதற்காக சாபம் பெற்று இருக்கின்றான் என்பதைப் பார்க்கலாம். நேற்று சரஸ்வதி பூசை கொண்டாடினீர்கள். அந்த சரஸ்வதி யார்? பிரம்மா உண்டாக்கினான். பிரம்மாவினுடைய மகள். அவள் அழகைக் கண்டு கட்டிப்பிடிக்க முயன்றான். அவள், அப்ப னுக்கு உடன்படுவதா என்று ஓடினாள். அவனும் பின் தொடர்ந்தான். அவள் மானாக உருவெடுத்து வேகமாக ஓடி சிவனிடம் அடைக்கலம் புகுந்தாள். சிவனிடம், தன் தந்தையே தன்னைக் கட்டி அணைய நினைக்கின்றான் என்றாள். சிவன், ஏனடா இப்படி என்று கேட்டான். அதற்கு பிரம்மா, நான் என்ன பண்ணுவது; அவள் அழகாக இருக்கின்றாள்; நான் அவளை எப்படி அடையாமல் இருப்பது என்றான். சிவன் மத்தியஸ்தம் பண்ணி இருவரையும் கணவன் - மனைவியாக இருக்க அனுமதித்தான். அதுபோலவே, அப்பனும், மகளுமே புருஷன், பெண்டாட்டியாக இருந்து வருகின்றனர்.

சில கடவுள்கள் அம்மாளைக் கட்டிக் கொண்டு இருக்கின்றன. சில கடவுள்கள் தங்கையை கட்டிக் கொண்டு இருக்கின்றன. இந்த 10,000 வரு ஷமாக நமது கடவுளோ, மதமோ, சாஸ்தி ரமோ மாறுதல் அடையவில்லை; திருத்தம் அடையவே இல்லை. இவைகளுக்கு நாமும் கட்டுப்பட்டு இருப்பதனால் நாமும் மாறுதல் அடையவில்லை.



நமது சாஸ்திரத்தில் உலகம் பாராட்டத்தக்க பதி விரதையாக 5 பேரைக் குறிப்பிட்டுள்ளது. இவர்கள் சீதை, அகல்யை, தாரை, துரோபதை, அருந்ததி. இவர்களை நினைத்தால் பண்ணிய பாவம் எல்லாம் போய்விடும் என்று எழுதப்பட்டுள்ளது. இவர்கள் எல்லாம் முதல் நம்பர் விபசாரிகள். இவர்கள் மட்டும் அல்ல; அந்தக் காலத்து ரிஷிகள், தேவர்கள் என்பவர்களும் இவர்கள் போன்ற விபச்சாரத்தில் ஈடுபட்ட அயோக்கியர்கள் தான்.

அகல்யை என்பவளும் இந்திரனும் திருட்டுத்தனமாகக் கலவி செய்ததை புருஷன் கண்டு இருவருக்கும் சாபம் கொடுத்து இருக்கின்றான். அவள் பத்தினியாகிவிட்டாள்; அவன் தேவர்களுக்குத் தலைவன் ஆகிவிட்டான்.

அடுத்து தாரை. இவள் தன் புருஷனிடம் படிக்க வந்தவனிடம் சோரத்தனம் பண்ணி பிள்ளையும் பெற்றுவிட்டாள். பிள்ளையைக் கண்டு புருஷன் தன்னடையது என்றான். சந்திரன், நான்தானே கொடுத்தேன், எனக்குத்தான் சொந்தம் என்று ரகளை பண்ணினான். புருஷன், நீ கொடுத்தாலும் என் நிலத்தில் விளைந்தது ஆகையால், எனக்கே சொந்தம் என்றான். இந்திரன் பஞ்சாயத்து பண்ணினான். பிள்ளை சந்திரனுடையது என்று அவனிடம் ஒப்படைக்கத் தீர்ப்பு செய்துவிட்டான்.

அடுத்து துரோபதை. இவள் 5 பேருக்கு மனைவியாக இருந்தவள், கோவாப்ரேட்டிவ் பாங்கு மாதிரி. அதுவும் பற்றாமல் 6 ஆம் பேர்வழிமீதும் ஆசைப்பட்டாள் என்று கூறப்படுகின்றது.

அடுத்து சீதை. இவள் இராவணனுக்கு கர்ப்பமானவள். காட்டில் வசிக்கும்போது வேண்டுமென்றே இராவணனுடன் போனவள். இராவணன் தன்னை விரும்பாத பெண்ணைத் தொட்டால் தலை வெடிக்கும் என்று சாபம் இருந்தது. ஆனால்,



அவளைத் தூக்கித் தொடைமீது வைத்துப் போகும்போது அவன் தலை வெடிக்காததினால், அவள் விரும்பியே அவன்பின் போய் இருக்கிறாள். பிறகு இராவணனைக் கொன்று இவளை மீட்டுக்கொண்டு வந்த பின் இவள் 4 மாத கர்ப்பம் என்று தெரிந்து இவள் கணவன் ராமன் இவளை காட்டுக்கு விரட்டி இருக்கின்றான். அங்கு போய்

அவள் பிள்ளை பெற்றதும் அல்லாமல், மேற்கொண்டும் ஓர் பிள்ளை பெற்றுக்கொண்டு இரண்டு பிள்ளையோடு வந்திருக் கின்றாள்.

இப்படிப்பட்ட விபசாரிகள் எல்லாம் நமது பதிவிரதைகளாக - கடவுள்களாக ஆக்கப்பட்டு இருக்கின்றனர். காரணம், இவை களை ஏற்படுத்திய காலம் காட்டுமிராண்டிக் காலமாதலால் அந்தக் கால மக்கள் ஒழுக்கத்தினையே பதிவிரதைகளுக்கும் ஏற்படுத்தினார்கள்.

தோழர்களே! இன்று நாம் கும்பிடும் கடவுள்கள் எல்லாம் நம் நாட்டில் ஏற்பட்டதும் அல்ல; நம் நாட்டுக்காரன் மூளையில் முதலில் உதித்ததும் அல்ல. இவை எல்லாம் மேல்நாட்டில் அய்ரோப்பா தேசத்தில் மலைப் பிரதேசங்களில் உண்டாக்கப் பட்ட கடவுள்கள். அவைகளைத்தான் ஆரியர்கள் நம் நாட்டில் கொண்டு வந்து நமது தலையில் கட்டிவிட்டனர். இன்று சிவன் மாட்டு மேலே இருக்கும் கடவுள் என்று கூறி வழிபடுகின் றோமே; இந்தக் கடவுள் இந்த நாட்டுக் கடவுள் அல்ல. கிரீஸ், பாபிலோனியா, எகிப்து, சிரியா முதலிய நாடுகளில் அவர்கள் காட்டுமிராண்டிகளாக இருந்த காலத்தில் வணங்கப்பட்டு வந்த வைகள் ஆகும். அவர்கள் சிவனை Father God அதாவது தந்தைக் கடவுள் என்று அழைத்தார்கள். இந்தக் கடவுள் மாட்டுமேல் நின்று கொண்டு இருப்பதாகவும், கையில் சூலம், மழு, வில் போன்றவைகள் வைத்திருப்பதாகவும் சித்தரித்து இருக்கின்றனர்.

நாம் இன்று சிவனுடைய மனைவி காளி என்கின்றோம். இந்தக் கடவுள் அங்கு Mother God அதாவது தாய்க் கடவுள் என்று அழைக்கப்பட்டு வந்திருக்கின்றது. நாம் காளி சிங்கத்தின் மீது இருப்பதாக ஏற்பாடு செய்து இருக்கின்றோம். அவனும் அந்த நாட்டில் இந்தத் தாய்க் கடவுள் சிங்கத்தின்மேல் இருப்பதா கவே வைத்திருக்கின்றான். இந்த கடவுள் எல்லாம் மேல்நாட்டில் இருந்து இங்கு இறக் குமதி செய்யப்பட்டவைகளேயாகும். அவன் தாய்க் கடவுள், தந்தைக் கடவுள் என்று கூறுவதைத்தான் நமது சிவன், காளியை சைவன் அம்மையே அப்பனே என்று கூறிக் கும்பிடுகின்றான்.



தோழர்களே! நாங்கள் வாயாலே புளுகிவிட்டுப் போகின்றவர்கள் அல்ல. எது கூறினாலும் ஆதாரத்தோடுதான் கூறுவோம். இதுபற்றி வெள்ளைக்காரர்களும், நம் நாட்டு சரித்திரக்காரர்களும் எழுதி இருக்கின்றார்கள். மற்றபடி எமன், அக்னி, சூரியன், வருணன், வாயு, சரஸ்வதி, பிள்ளையார், சுப்ரமணியன் போன்றவர்களும் அங்கு இருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்களே. அவைகளை இங்கு கொண்டு வந்து புக வைத்து பெயர்களை மாற்றிக் கொடுத்து இருக்கின்றான்.

மனு தர்மத்தை எழுதியவன் மனு என்பவன். இவனும் கடவுள். இவனது அம்மாவை கட்டிக்கொண்டவன் இவன். மேல்நாட்டில் அம்மாவைக் கட்டிக்கொண்ட கடவுளைப் பார்த்து ஏற்படுத்தப்பட்டவன். வாயில் மட்டும்தான் அன்புக் கடவுள், அருள் கடவுள் என்கிறான். இப்படி கூறவேண்டிய அவசியம் அவன் கொண்டு வந்து புகுத்திய காலத்தில் இந்த நாட்டு மக்கள் அன்பும், அருளும் உடையவர்களாக இருந்ததினால் கடவுளுக்கும் கூறவேண்டியதாயிற்று.

மேல்நாட்டவன் தோற்றுவித்த தங்கள் காட்டுமிராண்டிக் கடவுள்களையும், மதத்தையும், சாஸ்திரங்களையும் இப்போது ஒழித்துவிட்டு புதிதாகக் கட்வுளையும், மதத்தையும் உண்டாக்கிக் கொண்டான். அதுதான் கிருஸ்தவன் கூறும் கடவுள், கிருஸ்தவ மதம்; அவனது ஒரே கடவுள், அது பிறப்பு இறப்பு இல்லாதது, எதுவும் வேண்டாதது, அதற்கு உருவம் இல்லை, அருளானது, அன்பானது என்று ஆக்கிக் கொண்டான். அதன் காரணமாக அறிவு பெற்றான். தாராளமாக தன் அறிவைச் செலுத்தி முன்னேறுகின்றான்.

அடுத்த நாட்டுக்காரன் முஸ்லிம். அவர்களும் காட்டுமிராண்டிகளாக கல்லைக் கட்டிக்கொண்டு அழுதவர்களாக இருந்தவர்கள்



தான். முகமது நபி தோன்றி அவற்றையெல்லாம் ஒழித்து ஒரே கடவுளையும், அது பிறப்பு இறப்பு இல்லாததாகவும், ஒன்றும் வேண்டாததாகவும், அருளானதாகவும், அன்பானதாகவும் ஆக்கிக்கொண்டான். அதன் காரணமாகவே முன்னேறுகின்றான்.

நம் நாட்டில் இந்த காட்டுமிராண்டிக் கடவுளையும், மதத்தையும் ஒழிக்க எவனும்

முன்வரவில்லையே. அதன் காரணமாகத்தானே நமக்கு இந்த இழிநிலை.

தோழர்களே! இப்படி ஒரே கடவுள், உருவம் அற்ற கடவுள் உடையவர்களும், ஜாதி இல்லாதவர்களாக, உயர்வு - தாழ்வு அற்றவர்களாக உள்ள முஸ்லிமும், வெள்ளைக்காரனும் இந்த நாட்டை ஆண்ட காலத்தில்கூட நம்மைத் திருத்த முடியவில்லையே; தங்களைப்போல் நம்மையும் ஆக்க முடியவில்லையே. பார்ப்பானுடைய எதிர்ப்புக்கண்டு இவன்களும் நமக்கு ஏன் வம்பு என்று பார்ப்பானை பார்ப்பானாகவும் பறையனை பறையனாகவும் தானே வைத்துவிட்டுப் போனார்கள்.

இந்த நாட்டுக்கு சுதந்திரம் வந்து 13 ஆண்டுகள் ஆகியும் இந்த நாட்டில் இன்னமும் பார்ப்பான் இருக்கின்றானே. இந்த நாட்டு 636 ராஜாக்களையும் ஜமீன்தாரர்களையும், மிட்டாதார்களையும் ஒழித்து அவர்களை எல்லாம் இஸ்பேட்டு ராஜாவாக்கி சம்பளக்காரனாக தன் ஆட்சியில் வைத்துள்ளவர்கள் இந்தப் பார்ப்பானை மட்டும் ஏன் ஒழித்து இருக்கக் கூடாது? சுதந்திரம் வந்த நாட்டில் பார்ப்பான் ஏன்? ராஜாக்களை முடியைக் கழற்றி வைக்கச் சொன்னவர்கள் இந்த பார்ப்பானை ஏன் பூணூலையும், உச்சிக் குடுமியையும் கத்தரித்து எடுத்துவிட்டு மற்றவர்கள் போல் மண்வெட்டி எடுக்கவும், கல்லுடைக்கவும், மலம் எடுக்கவும் ஏன் கூறக்கூடாது? எதற்காக நமக்கு கோயில்? எதற்காக இந்த கடவுள்? இந்த மதம்? இந்த கடவுளையும் கோயிலையும் உடைத்தெறிய வேண்டாமா? கிருஸ்தவ மதத்தை உண்டாக்கிய ஏசு கூறினார், கோயில் எல்லாம் திருட்டுப் பசங்கள் வாசம் பண்ணக்கூடிய குகை என்றார்.

காந்தியார் ஆயிரம் புரட்டு பித்தலாட்டம் பேசி இருந்தாலும், ஏதோ தவறி ஓர் இடத்தில் உண்மையையும் கூறி இருக்கின்றார்; ''இந்தக் கோயில்கள் எல்லாம் விபச்சார விடுதி'' என்றார். பார்ப்பான் திட்டினான். உன் கோயில் மட்டும் அல்ல, உன் கடவுளும் விபச்சாரம் செய்யக் கூடியதுதான் என்று கூறியுள்ளார்.



எதற்காக அய்யா மனிதனுக்கு இத்தனை ஆயிரம் கடவுள்கள்? பகுத்தறிவு படைத்த மனிதனுக்கு ஏன் அய்யா கடவுள்? வேண்டு

மானால் கழுதைக்கு வேண்டும், மாட்டுக்கு வேண்டும், ஆட்டுக்கு வேண்டும்; இவைகள் எல்லாம் வாயில்லாப் பூச்சிகள். கழுதை முதுகில் பாரத்தை ஏற்றி வைத்து மனிதன் அடிக்கின்றான்; ஆட்டை வெட்டி மனிதன் தின்கின்றான்; மாட்டுக் கழுத்தில் நுகத்தடியை வைத்து அடிக்கின்றான். இவற்றைக் கேட்க அவற்றிற்கு வாய் இல்லை. எனவே, இவற்றிற்கு கடவுள் இருக்கவேண்டும். அதைவிட்டு ஆறு அறிவு படைத்த மனிதனுக்கு ஏன் அய்யா கடவுள்? அதிலும் இத்தனை ஏன்? நம்மை முட்டாளாகவும், மடையர்களாகவும், காட்டுமிராண்டிகளாகவும் ஆக்கி இருக்கும் காரணம் இந்த கடவுள் நம்பிக்கைகளேயாகும்.

நம்மைவிட காட்டுமிராண்டியாக இருந்த கிருஸ்தவனும், முஸ்லிமும் இன்று உயர்ந்த நிலையில் இருக்கின்றான். 1960 ஆண்டுகளுக்கு முன் கிருஸ்து தோன்றி கிருஸ்துவர்களின் காட்டுமிராண்டிதனத்தை எல்லாம் ஒழித்து ஒரு கடவுள் உண்டு பண்ணினார். 1400 ஆண்டுகளுக்கு முன் முகமது நபி தோன்றி அவர்களின் முடத்தனமான செய்கைகளையும், கடவுள்களையும் ஒழித்து ஒரு கடவுளை உண்டாக்கினார். உனக்கு அப்படியே உன் கடவுள் எப்போது ஏற்பட்டது? 10,000 ஆண்டு கணக்காக ஆகின்றது என்கிறாய். 10,000 ஆண்டுக்கு முன் என்றால் என்ன? காட்டுமிராண்டிக் காலம் குரங்காக இருந்த காலம் அல்லவா? இந்தக் காலத்து மனிதன் புத்தியில் ஏற்பட்ட கடவுள் இந்த விஞ்ஞான அதிசய அற்புதக் காலத்துக்கு ஏற்றதாகுமா?

நமக்கு மதம் என்ன அழுகின்றது? எவனாவது சொல்லட்டுமே. தெருவில் போகும் பார்ப்பான் நாம் இந்து மதம் என்றால் நாம் ஏற்றுக்கொள்வதா? இதன் காரணமாகத்தானே நீ காட்டுமிராண்டி.

கிருஸ்துவனுக்கு கிருஸ்து மார்க்கம் இருக்கின்றது; முஸ்லிமுக்கு முகமதிய மதம் இருக்கின்றது. ஆதாரம் என்ன என்றால், கிருஸ்துவனுடைய மதத்தை ஏற்படுத்தியது, ஏசு ஏற்பட்டு 1960 ஆண்டாகின்றது. இதற்கு ஆதாரம் என்ன என்றால், பைபிள் என்கின்றான்.



முஸ்லிமைக் கேட்டால் முகமது ஏற்படுத்தினார். 1400 வருஷமாகின்றது, ஆதாரம் குரான் என்கின்றான்.

உன் மதம் யாரால் ஏற்பட்டது? எப்போது ஏற்பட்டது? அதற்கு ஆதாரம் என்ன? எவனாவது கூற முடியுமா?

முட்டாளாகி நீதான் இந்து மதம் என்கின்றாய். சங்கராச்சாரி கூறுகின்றார், இந்த மதத்தை இந்து மதம் என்று கூறுவது தவறு; இதனை வைதீக மதம் அல்லது பிராமண மதம் என்றுதான் கூறவேண்டும் என்கின்றார். நம்மவன் எவனாவது இதுபற்றி சிந்திக்கின்றானா? இல்லையே!

நமது இழிநிலையும், காட்டுமிராண்டித்தனமும் ஒழியவேண்டு மானால் இவைகளுக்குக் காரணமான இந்த கடவுளும், மதமும், சாஸ்திரமும் ஒழியவேண்டும். இவற்றை வைத்துக்கொண்டு ஒருநாளும் சாதியை ஒழிக்க முடியாது; நமது காட்டுமிராண்டித்த னம் ஒழியாது.

*(12, 13, 14.10.1960 ஆகிய நாட்களில் வள்ளியூர், மருங்கூர், மயிலாடி, நாகர்கோவில் ஆகிய இடங்களில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி - "விடுதலை" 30.10.1960)*

# 44. சாதியை ஒழிக்க கடவுளை ஒழி!

நான் என்ன சொல்லுகிறேன் என்றால், "நம் கடவுள் நம்பிக்கை என்பதே கடைந்தெடுத்த முட்டாளின் அறிகுறி"யாக ஆகிவிட்டது. காரணம் என்னவென்றால், "கடவுள் என்றால் ஆராய்ச்சியே செய்யக் கூடாது", "நம்பவேண்டும்", "அப்ப டியே ஒப்புக்கொள்ளவேண்டும்" என்பதாகிவிட்டது.

அது மாத்திரமல்ல; அப்படிப்பட்ட கடவுளைப்பற்றி, "கட வுள் என்றால் என்ன? அவர் எப்படி இருப்பார்? எதற்காக இருக்கிறார்? ஏன் இருக்கிறார்? எதுமுதல் இருக்கிறார்? அவர் சக்தி எவ்வளவு? நம் சக்தி எவ்வளவு? அவரால் ஏற்பட்டது எது? நம்மால் ஏற்பட் டது எது? எது எதை அவருக்கு விட்டுவிட லாம்? எது எது நாம் செய்யவேண்டியது? அவரில்லாமல் ஏதாவது காரியம் நடக்குமா? எதையாவது செய்யக் கருதலாமா?" என்ப துபோன்ற (இப்படிப்பட்ட) நூற்றுக்கணக் கான விஷயங்களில் ஒரு விஷயத்தைக்கூட



தெளிவாகத் தெரிந்துகொண்டவன் எவனும் கடவுள் நம்பிக் கைக்காரர்களில் இல்லை. இல்லை என்றால் அறவே இல்லை என்று சவால்விட்டுக் கூறுவேன்.

நான் இதை 60-70 ஆண்டாகச் சிந்தித்து சிந்தித்து அறிவில், ஆராய்ச்சி அனுபவத்தில் கண்டுகொண்ட உறுதியினால் கூறுகி றேன். இவ்விஷயங்களில் மக்களுக்கு விஷயம் தெரியாது என்று சொல்லுவதற்கு இல்லாமல் தெரிந்துகொண்டிருப்பது குழப்பமானதும், இரட்டை மனப்பான்மை கொண்டதுமாக இருப்பதால், மனிதனுக்கு இவ்விஷயத்தில் அறிவு பெற இஷ்ட மில்லாமலே போய்விட்டது.

தோழர்களே! நான் சொல்லுகிறேன், கடவுள் நம்பிக்கைக்கா ரன் ஒருவன் "நான் சாதியை ஒழிக்கப் பாடுபடுகிறேன்" என்றால், அதில் அறிவுடைமையோ, உண்மையோ இருக்க முடியுமா? கடவுள் இல்லாமல் எப்படி சாதி வந்தது? மத நம்பிக்கைக்காரன் ஒருவன் "நான் சாதியை ஒழிக்கப் பாடுபடுகி றேன்" என்று சொல்ல முடியுமா? மதமில்லாமல் எப்படி சாதி வந்தது? சாஸ்திர நம்பிக்கைக்காரன் ஒருவன் "நான் சாதியை ஒழிக்கப் பாடுபடுகிறேன்" என்று சொல்ல முடியுமா? சாஸ்திரம் இல்லாமல் எப்படி சாதி வந்தது?

ஆகவே, இந்த சாதி ஒழிப்புக் காரியத்தில் கடவுள், மத, சாஸ்திர நம்பிக்கைக்காரர்கள் இருந்தால், அவர்கள் மரியாதை யாய் வெளியேறி விடுவது நாணயமாகும். இதனாலேதான் "சாதி கெடுதி, சாதி கூடாது" என்று சொல்லத்தான் சில "பெரியவர்கள்" முன் வந்தார்களே ஒழிய, அதை ஒழிக்கப் பாடுபட இன்றுவரை எவரும் முன்வரவில்லை.

ஆகவே, தோழர்களே! உங்களுக்கு நான் சொல்லுகிறேன், வணக்கமாகச் சொல்லுகிறேன். நீங்கள் சாதியை ஒழிக்கப் பிரியப்பட்டீர்களேயானால் இந்த இடத்திலேயே உங்கள் கடவு ளையும், மதத்தையும், சாஸ்திரத்தையும் ஒழித்துக் கட்டுங்கள்! ஒழித்துவிட்டோம் என்று சங்கநாதம் செய்யுங்கள்! கடவுள், மதம், சாஸ்திரம் ஆகிய மூன்றும் ஒழிந்த இடத்தில்தான் சாதி மறையும், சாதி ஒழியும். மற்ற இடம் எப்படிப்பட்டதானாலும் அங்கு சாதி சாகாது.



ஆகவே, சாதி ஒழியவேண்டும் என்பவர்கள் முதலில் நாத்திகன் ஆகுங்கள். நாத்திகம் என்பது அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் கொண்டு தெளிவடைவதுதான். இத்தெளிவு அடைந்த இடத்தில் இம்மூன்றும் (கடவுள், மதம், சாஸ்திரம்) தலைகாட்டாது.

ஆகையால், இப்படிப்பட்ட நீங்கள் நாத்திகர் என்று சொல்லிக் கொண்டாலும் ஒன்றுதான், பகுத்தறிவுவாதி என்று சொல்லிக் கொண்டாலும் ஒன்றுதான். தோழர்களே! சாதி ஒழிப்புக்காரர்கள் வீட்டில் உருவச் சின்னங்களோ, மதக் குறியோ, சாஸ்திர சம்பிரதாய நடப்போ இருக்கக் கூடாது; கண்டிப்பாய் இருக்கக் கூடாது.

*(12.8.1962 அன்று பாண்டிச்சேரியில் நடைபெற்ற சாதி ஒழிப்பு மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி - "விடுதலை" - 17.8.1962)*

# 45. கடவுள் குழப்பம்

கடவுள் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொண்ட மனிதன் கடவுள் நம்பிக்கைக்காரர்களில் ஒருவருமே இல்லை. ஒரு வஸ்து இருந்தால்தானே அது இன்னது என்று புரிந்துகொள்ள முடியும். அது இல்லாததனாலேயே கடவுள் நம்பிக்கைக்காரர்கள் ஆளுக்கு ஒருவிதமாய் கடவுளைப்பற்றி உளறிக்கொட்ட வேண்டியிருக்கிறது.

அதற்கு பெயரும் பலப்பல சொல்லவேண்டியிருக்கிறது. அதன் எண்ணிக்கையும் பலப்பல சொல்லவேண்டியிருக்கிறது.

அதன் உருவமும் பலப்பல சொல்லவேண்டியிருக்கிறது.

அதன் குணமும் பலப்பல சொல்லவேண்டியிருக்கிறது.

அதன் செய்கையும் பலப்பல சொல்லவேண்டியிருக்கிறது.



இந்த இலட்சணத்தில் கடவுளைப்பற்றிப் பேசும் பெரிய அறிவாளிகள் பெயரில்லான் - உருவமில்லான் - குணமில்லான் என்பதாக உண்மையிலேயே இல்லானை இல்லான் - இல்லான் - இல்லான் என்றே அடுக்கிக் கொண்டே போகிறார்கள்.

இப்படி அடுக்கிக் கொண்டே போகிறவர்களே பல பெயர், பல உருவம், பல குணம், பல் எண்ணிக்கை முதலியவைகளைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். இவற்றையெல்லாம்விட கடவுள் நம்பிக்கைக்காரர்களிடம் இருக்கும் ஒரு அதிசய குணம் என்னவென்றால், எந்த கடவுளைக் கும்பிடுகிறவருக்கும் கடவுள்கள் யார்? தேவர்கள் யார்? இவர்களுக்கு ஒருவருக்கொருவருள்ள வித்தியாசம் என்ன என்பதில் ஒரு சிறு அறிவும் கிடையாது.

மற்றும் ஒரு அதிசயம் - கடவுள் என்பதற்கு ஒரு சொல் வடமொழியிலும் கிடையாது, தமிழிலும் கிடையாது. தமிழில் சொல்லப்படும் கடவுள் என்கின்ற சொல்லுக்கு உண்டான கருத்துக்கு தமிழிலும் ஒரு சொல் காணப்படுவதற்கு இல்லை. அதுபோலவே அதற்கு (கடவுள் என்பதற்கு) வடமொழியிலும் சொல் காணப்படுவதற்கு இல்லை. ஆரியர் (பார்ப்பனர்) தேவர்கள் என்ற சொல்லை வேத காலத்தில் உற்பத்தி செய்து கொண்டு அதுவும் மேல் நாட்டில் அய்ரோப்பாவிலும், மத்திய ஆசியாவிலும் இருந்த பழங்கால மக்கள் கற்பித்துக்கொண்ட பல தெய்வங்களை தேவர்களாக ஆக்கி வேதத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எகிப்தியர்கள், கிரேக்கர்கள், காக்கேசிய மல்லச்சாரலில் இருந்தவர்கள் முதலியவர்கள் வணங்கி வந்த தெய்வங்களே வேதத்தில் காணப்படும் அத்தனை தேவர்களுமாவார்கள்.

அதாவது,

| | |
|---|---|
| சிவன், இந்திரன் ஆகிய இருவருக்கும் | - ஜூபிடர் |
| பிரம்மாவுக்கு | - சாட்டர்னஸ் |
| யமனுக்கு | - மைனாஸ் |
| வருணனுக்கு | - நெப்டியூன் |
| சூரியனுக்கு | - சோல் |
| சந்திரனுக்கு | - லூனஸ் |
| வாயுவுக்கு | - சயோனஸ் |
| விஸ்வகர்மாவுக்கு | - காண்டார்போல்வரஸ் |
| கணபதிக்கு | - ஜூனெஸ் |
| குபேரனுக்கு | - புளூட்டர்ஸ் |



| | |
|---|---|
| கிருஷ்ணனுக்கு | - அப்போலா |
| நாரதனுக்கு | - மெர்குரியன் |
| ராமனுக்கு | - பர்கஸ் |
| கந்தனுக்கு | - மார்ஸ் |
| துர்க்கைக்கு | - ஜூனோ |
| சரஸ்வதிக்கு | - மினர்வா |
| ரம்பைக்கு | - வீனஸ் |
| உஷாவுக்கு | - அரோரா |
| பிருதிவிக்கு | - சைபெல்வி |
| ஸ்ரீக்கு | - சிரஸ் |

என்கின்ற பெயருடன் இவை மேல்நாட்டிலிருந்த தெய்வங்களாகும்.

மற்றும் இவர்கள் நடத்தை முதலியவைகளை 'புரட்டு இமாலயப் புரட்டு' என்கின்ற புத்தகத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

சாதாரணமாக தமிழனுக்கு தொல்காப்பியத்திற்கு முந்திய இலக்கிய நூலோ இலக்கண நூலோ கிடையாது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஏதேதோ இருந்ததாகச் சொல்லி அவை மறைந்துவிட்டன என்கிறார்கள். இது இன்றைய சைவ - பெரியபுராணம், வைணவ இராமாயணம் போன்ற புளுகுகளில் சேர்க்கப்பட வேண்டியவைகளே தவிர காரியத்திற்குப் பயன்படக்கூடியவை அல்ல.

இந்த கடவுள் என்னும் சொல்லும் தமிழனுக்கு ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டில் கற்பிக்கப்பட்ட சொல்லே அல்லாமல் பழங்காலச் சொல்லென்று சொல்ல முடியாது. தமிழனது இலக்கியங்களும் தொல்காப்பியத்திற்கும் பிற்பட்டவைகளேயாகும். தொல்காப்பியனையும் ஆரியன் என்றுதான் சொல்லவேண்டும். தொல்காப்பியமும் ஆரியன் வருகைக்குப் பிற்பட்டதேயாகும்.



இன்றைய நம் கடவுள்கள் அத்தனையும் பிர்மா, விஷ்ணு, சிவன், அவனது மனைவி பிள்ளைக்குட்டிகள் யாவும் ஆரியக் கற்பனை, ஆரிய வேத சாஸ்திரங்களில் கூறப்பட்டவை என்பதல்லாமல் தமிழர்க்குரியதாக ஒன்றுகூட சொல்ல முடியவில்லை. சிவனும், மாலும் (விஷ்ணுவும்) தமிழன் கடவுள்கள் என்கிறார்கள் சிலர்.

இந்த சிவன், விஷ்ணுக்களை இன்று வணங்கும் சைவ, வைணவர்கள் கோயில்களில் அவைகளுக்குக் கொடுத்திருக்கும் குணங்கள், செய்கைகள், உருவங்கள், சரித்திரங்கள் ஆகியவைகளில் எது, எந்தக் கடவுள், எந்தக் கோயில் தமிழுக்கு, தமிழனுக்கு உரியது என்று எந்த சைவ, வைணவராவது சொல்ல முடியுமா? சிவன் - தமிழன் என்றாலும் விஷ்ணு-தமிழனென்றாலும், சைவம்-வைஷ்ணவம் என்னும் சொற்களும் அதன் இலக்கணங்களும் வடமொழி முறைகளேயாகும். லிங்கம், சதாசிவம் முதலிய சொற்கள், அதன் கருத்துகள் ஆரிய மொழிகளேயாகும். நமது கோயில்களிலே உள்ள கடவுள், அவற்றின் சரித்திரங்கள் புராணங்கள் எல்லாமுமே வடமொழி ஆரியக் கருத்துக்களேயாகும். இன்றும் வடமொழிப் புராணங்கள் இல்லாவிட்டால் சைவனுக்கோ வைணவனுக்கோ கடவுள், மத இலக்கியங்கள் ஆதாரங்கள் ஏதாவது இருக்கின்றனவா? ஒன்றும் காணமுடியவில்லையே? ஆரியம் இல்லையானால் சைவ, வைணவர்களுக்கு கடவுளும் இல்லை, சமயமும் இல்லை என்றுதானே சொல்ல வேண்டி இருக்கிறது.

இன்றும் நம்மில் 100-க்கு 99 பேர்களுக்கும் ராமனும் கிருஷ்ணனும் சுப்ரமணியனும் விக்னேஸ்வரனும்தானே பிரார்த்தனைக் கடவுள்களாக இருக்கிறார்கள்? எந்த சைவ, வைணவ க்ஷேத்திரங்களை எடுத்துக் கொண்டாலும் காசி முதல் கன்னியாகுமரி வரை ஆரியக் கடவுள்கள் கோயில்களையும் தீர்த்தங்களையும் கொண்டவைகளாகத்தானே காண்கிறோம்? தமிழனுக்கு கோயில் ஏது? தீர்த்தங்கள் ஏது?



ஆகவே தமிழனுக்கு கடவுள்கள் இல்லை, கோயில்கள் இல்லை, தீர்த்தங்கள் இல்லை, திருப்பதிகள் இல்லை.

இருப்பதாக காணப்படும், சொல்லப்படும் அத்தனையும் பார்ப்பான் பிழைக்கவும், அவன் ஆதிக்கத்திற்கும் நம்மை இழி மக

னாக்கவும் மடையனாக்கவும் ஏற்படுத்தப்பட்டவைகளேயாகும் என்பதை உணர்ந்து மக்கள் ஒழுக்கத்துடனும் நாணயத்துடனும் நன்றி அறிதலுடனும் வாழ்வதையே நெறியாகக் கொண்டு வாழ வேண்டுமென்பதாக திராவிடர் கழகத் தோழர்கள் கடவுள் மறுப்புப் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

*(7.10.1962 'விடுதலை' நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*

# 46. நம் கடவுள் - மதம் எதற்கு?

## நமக்கு கடவுள் நம்பிக்கை வேண்டுமானால்

1. பல கடவுள்களை நம்பித் தீர வேண்டும்.

2. அவைகளுக்கு பல உருவங்களை ஒப்புக்கொள்ளவேண்டும்.

3. அவ்வுருவங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட விக்கிரகங்களை வணங்க வேண்டும்.

4. அக்கடவுள்களின் அவதாரங்களையும் அவற்றின் நடவடிக்கைகளையும் தேவைகளையும் நம்ப வேண்டும்.

## நமக்கு மத நம்பிக்கை வேண்டுமானால்

1. சாதிப்பிரிவை ஒப்புக்கொள்ளவேண்டும்.

2. மதச் சின்னங்களை (டிரேட் மார்க்கை) ஒப்புக் கொள்ள வேண்டும்.

3. ஆத்மாவை ஒப்புக்கொள்ளவேண்டும்.

4. மேல் கீழ் உலகங்களை ஒப்புக்கொள்ளவேண்டும்.

5. மறுபிறப்பை ஒப்புக் கொள்ள வேண்டும் என்பவற்றை விளக்கிக் காட்டி மக்களிடம் கடவுள் - மத மறுப்பு பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பதற்கு ஆகவே இக்கட்டுரை எழுதுகிறேன்.



இன்றைய சைவர்களுடைய சைவப் பிரச்சாரம் பெரிதும் பெரிய புராணம் ஒன்றிலேயே அடங்கிவிட்டது. அது அஸ்திவாரம் இல்லாத ஆகாயக்கோட்டை.

அது வடநாட்டில் ஏற்படுத்தப்பட்ட பக்த விஜயம், பக்த லீலாமிர்தம் என்னும் வைணவ புராணங்களுக்குப் போட்டியாக (அதைப்போல்) ஏற்படுத்தப்பட்டதாகும். அதன் காலம் இராமாயண-பாரதத்திற்குப் பிந்தியதேயாகும்.

அநேகமாக வைணவ பக்தர்கள், ஆழ்வார்கள் ஆகியவர்களின் கதைகள் போலவே, ''சரித்திரங்கள்'' போலவே சைவ் சமய நாயன்மார்கள், பக்தர்கள் கதைகளும் ''சரித்திரங்களும்'' இருக்கும்.

இரண்டிலும் உள்ள முக்கிய விஷயங்கள், அற்புதங்கள் எல்லாம் விஷ்ணு, சிவன் கடவுள்கள் கழுகுமீதும், மாடுமீதும் நேரில் வந்து வைகுண்டமும் கைலாயமும் ஆகிய பதவிகளுக்கு பக்தர்களை அழைத்துப் போனதாகவே பெரிதும் முடியும். அவற்றின் கருத்தும், பக்தி செய்தால் அதுவும் பக்தியின் பேரால் எவ்வளவு முட்டாள்தனமும் ஒழுக்கக் கேடும் இழிதன்மையுமான காரியமும் செய்தாலும் பக்தி காரணமாக வைகுண்டம், கைலாயம் பெறலாம் என்பதை வலியுறுத்துவதேயாகும்.

இப்படிப்பட்ட பக்திப் பிரச்சாரங்களேதான் மனித சமுதாயத்தில் பெரிதும் ஒழுக்கக்கேட்டையும் நாணயக் கேட்டையும் உண்டாக்கிற்று என்று சொல்லப்படுமானால் அது மிகையாகாது.

காலத்திற்கு ஏற்றபடி கடவுள்கள் சமயங்கள் சீர்திருத்தப்பட வேண்டியது அவசியமாகும். கிறிஸ்து, இஸ்லாம் கடவுள், சமயங்கள் சீர்திருத்தப்பட்ட கடவுள், சமயங்களேயாகும்.

பெரிய புராணக் கதையும் பக்த விஜயக் கதையும் காட்டுமிராண்டித்தனமான காலத்தில், கருத்தில் ஏற்படுத்தப்பட்டவைகளேயாகும்.

அவைகளில் ஒவ்வொன்றாக காலப் போக்கில் குறிப்பிட இருக்கிறேன். சமயத் தலைவர்கள் சீர்திருந்துவதற்கு ஏன் பயப்பட வேண்டும்?



பார்ப்பனர்கள் சிலர் சீர்திருத்தத்திற்குப் பயப்படுகிறார்கள் என்றால் அவர்கள் இன்றைய சீர்கேடான கீழ்த்தரமான கடவுள், சமயக் கொள்கைகளால் உயிர் வாழுகின்றார்கள். உயர்வு பெறுகிறார்கள். அது போய்விடுமே என்று அவர்கள் அலறுகின்றார்கள். குறுக்கே படுக்கின்றார்கள்.

நாம் இன்றைய சீர்கேடான நிலைமையினால் நாச முறுகிறோம். தலையெடுக்காமல் சேற்றில் அழுந்திக் கிடக்கிறவர்கள் போல் சிக்குண்டு கிடக்கின்றோம். ஆகவே, பார்ப்பானைப் போல் நாம் எதற்காக பிடிவாதக்காரர்களாக இருக்க வேண்டும்?

நம் கடவுள்களும் கோயில்களும் ஆகம முறைகளும் நம்மை காட்டுமிராண்டியாக ஆக்கி நம் அறிவையும் மானத்தையும் கொள்ளை கொள்ளுவதல்லாமல் நம் பொருள்களை எவ்வளவு நாசப்படுத்தி வருகிறது?

கிறிஸ்துவ, இஸ்லாம் மத பிரச்சாரம் படிப்பு - படிப்பு- படிப்பு என்பதிலேயே இருக்கிறது. அவர்கள் இந்த நாட்டில் பார்ப்பனர்களைப் போலவே மைனாரிட்டி சமுதாயங்களாக இருந்தாலும், பார்ப்பனர்களைப் போலவே நம்நாட்டில் மண்வெட்டி மண் கூடை எடுக்காமல் நல்வாழ்வு வாழ்கிறார்கள். அரசியலில் நம்மைவிட நல்ல உயர்பங்கும். அரசியலில் நம்மைவிட நல்ல உயர் பங்கும், சமுதாயத்தில் நல்ல பாதுகாப்பும் பெற்று வாழ்கிறார்கள். இதற்கு அவர்களுக்கு உதவியது அவர்கள் சமயம்தான். நம் கடவுளையும், சமயத்தையும் ஏற்ற மக்கள் தான் 100-க்கு 100 மலமெடுக்கிறார்கள், கசுமாலக் குழியில் இறங்கி சேறு எடுக்கிறார்கள். 100-க்கு 75 பேர் மண்வெட்டியையும் நம் பெண்கள் மண் சுமக்கும் கூடையையும் சொத்தாக வைத்து வாழ்கிறார்கள்.

படிப்பிலும் கிறிஸ்துவர்களும், இஸ்லாமியர்களும் நம்மை விட இரண்டு பங்கு மூன்று பங்கு வீதம் அதிகமானவர்கள் படித்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும் நம் மதவாதிகள், மதத் தலைவர்கள், மதப் பிரச்சாரகர்கள் நம் மக்கள் குறைகளையும், இழிநிலையையும், அறியாமையையும் மாற்றுவதற்கு என்ன செய்தார்கள்? செய்கிறார்கள்? செய்யப் போகிறார்கள்? ''திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாதாரும்'' என்றும், ''திருப்பதி மதியாப் பாதம்'', ''சிவனடி வணங்காச் சென்னி'' என்றும் பாடினால் போதுமா? கூழில்லாமல் கும்பி பாழாவதைப்பற்றிச் சிறிதுகூட சிந்தியாமல், ''நீறு இல்லாத நெற்றி பாழ்'' என்றும் பிரச்சாரம் செய்தால் போதுமா?



நம் நாட்டையும், நம் மனித சமுதாயதையும் தலையெடுக்கவொட்டாமல் பாழாக்கிய பார்ப்பனர்களைப் போலவே நம் சமயவாதி

கள் சிவ, விஷ்ணு சமயாச்சாரியார்கள் என்று சொல்லப்படுமானால் அதற்கு யார்தான் மறுப்புக் கூற முடியும்? இன்று தமிழ்நாட்டிலே கோயிலுக்கு அழுது நாட்டை நாசமாக்கியவர்களான நாட்டுக்கோட்டை செட்டிமார்களில் பலர் துணிந்து மனந்திரும்பி கல்வி அளிக்கும் வள்ளல்களாக இருக்கிறார்கள். அண்ணாமலை கல்லூரியே ஏற்படாமலிருந்தால் நம்மவர்களில் உயர் படிப்பு படித்தவர்கள் ஆயிரக்கணக்கில் இவ்வளவு பேர் இருக்க முடியுமா? முடியாது, முடியாது, முடியவே முடியாது என்று சொல்லுவேன். மற்றும் அழகப்பா கல்லூரி, தியாகராஜர் கல்லூரி ஆகியவைகளால் நம் பிள்ளைகள் எவ்வளவு பேர் படித்தவர்களாக ஆகி இருக்கிறார்கள், ஆகி வருகிறார்கள் என்பதைப் பார்த்தும் நம் சமயாச்சாரியார்களுக்கு நல்லறிவு வரவில்லையானால் அது நம் நாட்டைப் பிடித்த நோய் என்றுதானே சொல்லவேண்டியதாகும்.

திருச்சியில் கிறிஸ்துவ கல்லூரி கிறிஸ்துவருக்கும், பார்ப்பனருக்கும் தான் பெரிதும் பயன்படுகிறது. பார்ப்பனர் கல்லூரிகள் பார்ப்பனர்களுக்கே பயன்படுகிறது.

இஸ்லாம் கல்லூரியில் இஸ்லாமியர்கள் போக மீதிதான் நமக்குக் கிடைக்கலாம். அப்படியெல்லாம் செய்வதில் அவர்கள் மீது குற்றமென்ன? இவ்வளவு பெரிய பழமையான தமிழன் நகரத்திலே தமிழனுணர்ச்சி உள்ள தமிழர் இருந்தும் தமிழனுக்குக் கல்லூரி இல்லை. சீரங்கமும், திருவானைக்காவலும், தாயுமானசாமி மலையும், சமயபுரமும் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை இலட்ச ரூபாய்களை நாசமாக்குகிறது, எவ்வளவு பேரை முட்டாளாக்குகிறது?

இந்தக் கோயில்களை இடித்து அல்லது இந்தக் கோயில்களுக்கு வருபவர்களுக்கு ஆளுக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் வீதம் "கேட்"டில் வரி வசூல் செய்து தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவசக் கல்லூரி படிப்பு கொடுத்தால் எந்த சாமி கோபித்துக் கொள்ளும்? எந்த பக்தன் நாசமாய்ப் போய் விடுவான்?



தருமபுரம் திருவாவடுதுறை, திருப்பனந்தாள் முதலிய நூற்றுக்கணக்கான சைவ மடாதிபதிகளின், ஆண்டொன்றுக்கு சுமார் அய்ம்பது இலட்சத்துக்குக் குறையாது

கோடி ரூபாய்வரை வரும்படியும், தஞ்சை மாவட்டத்தில் சுமார் ஆண்டொன்றுக்கு அய்ம்பது இலட்சத்துக்குக் குறையாத வரும் படி உள்ள கோயில்களின் வரும்படியும், தமிழ்நாட்டில் மற்றும் லட்சம் லட்சமாக வரும்படி வரக்கூடிய கோயில்களின் வரும்ப டியும் கல்விக்கு செலவழித்தால் தமிழ்நாட்டில் பி.ஏ., படிக்காத ஆணையோ, பெண்ணையோ காண முடியுமா? மற்றும் சர்க்கார் கொடுக்கும் பஸ், லாரி பர்மிட்களும், பண்டங்களுக்குக் கொடுக்கும் பர்மிட்களும் ஏன் ஒரு யோக்கியமான அதாவது சுயநலத்துக்குப் பயன்படுத்தாத தன்மையில் ஒரு கல்வி ஸ்தாப னம் ஏற்படுத்தி அதற்குக் கொடுத்து அவர்களிடம் கல்வி நிர்வாகம் கொடுத்து சர்க்கார் மேற்பார்வையில் அதன் வரும்படி யைக் கொண்டு நடத்தச் செய்யக் கூடாது?

மதமும், கடவுளும் மக்களுக்கு தொண்டு செய்யவா? அல்லது மக்கள் மதத்திற்கும், கடவுளுக்கும் தொண்டு செய்யவா? பலியாகவா? என்று கேட்டு முடிக்கின்றேன்.

குறிப்பு: இதை நம் கழகத் தோழர்கள் நல்ல வண்ணம் படித்து மக்களுக்குப் பிரச்சாரம் செய்யவேண்டுகிறேன்.

*(8.10.1962 "விடுதலை" நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது)*

# 47. கடவுளும் கடவுள் தன்மையும்

1. கடவுளைக் கற்பித்தவன் அறிவிலி.

2. அதற்கு குணம் கற்பித்தவன் அயோக்கியன்.

3. அதைப் பின்பற்றுகிறவர்கள் மேற்கண்ட இரு தன்மையி னையும் சேர்ந்தவர்கள்.

1. கடவுளைக் கற்பித்தவன் அறிவிலி என்று ஏன் சொல்ல வேண்டி வந்தது என்றால்,



மனிதன் உலகத் தோற்றத்திற்கும், அதன் இருப்புக்கும் நடப்புக்கும், மறைவுக்கும் கார ணம் என்ன என்று தேடும்போது பிரத்யட் சத்தில் நடைபெறும் இந்தக் காரணங்கள் ஒரு மனிதனால் நடைபெறுகின்றது என்பதை எப்படிக் கண்டானோ அதை ஆதாரமாய்க் கொண்டே, தனக்கு விளங்கிக்கொள்ள

முடியாமல் இருந்து வருகிற தோற்றம், இருப்பு, நடப்பு, மறைவு (அழிவு) காரியங்களுக்கும் யாரோ ஒரு நபர் இருந்துதான் அவரால் இக்காரியங்கள் நடைபெறுகிறது என்று ஊகித்து திருப்தி அடைந்துகொண்டான்.

அதனாலேயேதான் இன்றும் சாதாரணமாகப் பேசும் மூன்றாம் தரஅறிவாளியும் ''கடவுள் இல்லை என்றால் நீ எப்படி பிறந்தாய்?'', ''வீடுதான் மனிதன் கட்டுகிறான். மலை, சமுத்திரம், ஆறு, மலையில் மரம் செடி ஆகியவைகள் எப்படி உண்டாயிற்று? இவைகட்கு ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா?'' என்று கூறி கடவுளை மெய்ப்பிக்க வருகிறான்.

ஆகவே, சமாதானம், காரண காரியம் சொல்ல முடியாதவைகளுக்கு ''கடவுள் செயலை'ச் சொல்லிவிடுகிறான். ஆகவே, கடவுள் அறிவுத் தெளிவு இல்லாத இடத்திலிருந்தே தோற்றுவிக்கப்படுகிற ஒரு யுகப் பொருளாகவே (அதாவது முடிந்த முடிவாய் இல்லாமல், நினைத்துக்கொள்ளுகிற பொருளாகவே) கண்டு பிடித்தவன் ஆகிறான். இதனாலேயே எந்த மனிதனும் தனது சாதாரண அறிவுக்கு காரணம் தெரியமுடியாத விஷயங்களும் மேற்கொண்டு ஆராய்ச்சி அறிவைப் பயன்படுத்த அவசியமில்லாதவனாகி, சவுகரியமான முடிவுக்கு வர வசதி கிடைத்துவிட்டபடியால் மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு ஆராய்ச்சி முயற்சிக்கு அவசியமல்லாமல் போய் மனிதருள் பெரும்பாலானவர்களின் அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சி முயற்சியும் தடைப்பட்டு விட்டது.

இதனால்தான் கடவுள் நம்பிக்கைக்காரர் எவரையும் பகுத்தறிவில்லாதவர்கள் என்று முடிவு செய்ய வேண்டியதாயிற்று. மனித அறிவுக்கு எவ்வளவு சக்தி இருந்தாலும் அது பயன்படுத்தும் அளவுக்குத்தான் சக்தி காணமுடியும்.

உதாரணமாக, எனது 70-75 ஆண்டுகளுக்கு முந்தி நான் கண்ட அனுபவம் ஒன்றைச் சொல்லுகிறேன்.



அப்பொழுதே ஈரோடு முனிசிபல் நகரம். அங்கு முனிசிபல் ஆஸ்பத்திரி ஒன்று இருந்தது. நாட்டு வைத்தியர்கள் 2,3 பேர்களும் கிறிஸ்துவ உபதேசியார் ஒரு வைத்தியரும் இருந்தார்கள். வருடம் தவறாமல் ஈரோட்டிற்கு 2 தரம் காலரா (விஷ பேதி) நோய்

வரும். ஈரோடு ஜனத்தொகை அன்று சுமார் 15,000-க்குள் இருந்தாலும் அந்தக் காலரா வியாதியால் ஆண்டொன்றுக்கு 300 பேருக்குக் குறையாமல் சில ஆண்டுகளில் 500 பேர்களும் சாவார்கள். காலரா நோய் என்பது ''ஓங்காளியம்மன் (ஓம்காளி அம்மன்) என்னும் ஒரு துஷ்ட தேவதையின் விளையாட்டு'' என்றே அக்கால மக்கள் கருதி காலரா வந்தவர்களுக்கு வைத்தி யமே செய்யமாட்டார்கள். ''வைத்தியம் செய்தால் 'ஆத்தாள்' (ஓங்காளியம்மன்) கோபித்துக்கொள்ளுவாள்'' என்று கருதி, வைத்தியம் செய்தாலும் கோபித்துக்கொள்வார்கள்.

நோய் வந்த ஒரு மாதம் ஒன்றரை மாதம் ஆகி அது தானாகவே குறைந்து தினம் இரண்டு ஒன்று சாவு திட்டத்திற்கு வந்துபிறகு ஓங்காளியம்மனுக்கு பொங்கல் வைத்து விழாக் கொண்டாடி அந்தப்படி விழாக் கொண்டாடியதால் அம்மன் மகிழ்ச்சி அடைந்து விலகிவிட்டாள் என்பார்கள். இதற்குள் ஊரில் சில பெண்கள்மீதும், சில ஆண்கள் மீதும் ''அம்மன்'' வந்து மக்களை மிரட்டுவாள். ''என்ன இப்போது நீங்கள் சட்டை செய்வதில்லை. நான் விளையாடினால் பொங்கல் வைக்கிறீர்கள். இல்லாவிட்டால் மறந்துவிடுகிறீர்கள். உங்களை ஒழித்துக்கட்டி விடுகிறேன்'' என்று சொல்லுவாள். குடிமக்கள் பயந்ததுபோல நடித்து அம்மனுக்கு உடனே பொங்கல் விழா கொண்டாடுவதாக வாக்குக் கொடுப்பார்கள். பிறகு ஒரு வாரத் தில் காலரா நின்றுவிடும்.

இதன் மத்தியில் முனிசிபாலிட்டியார், வாய்க்கால் தண்ணீரைக் குடிக்காதீர்கள், எந்த தண்ணீரையும் காய்ச்சி வெந்நீராக்கி குடியுங்கள், பழையது சாப்பிடாதீர்கள். தெருக்கடைகளில் புட்டு (இட்லி) பலகாரம் வாங்கி சாப்பிடாதீர்கள் என்று தண்டோரா போட்டு வாய்க்காலில் காலரா வந்த பாய், துணிகள் துவைக்காமல் காவல் போடுவார்கள். இதன் மத்தியில் சில பெண்கள்மீது ஆத்தாள் வந்து ''நான் இரண்டு குடம் பேதி எண்ணெய் கொண்டு வந்தேன். ஒன்றை ரைக் குடம்தான் செலவு செய்தேன். மீதியை நீங்களே எடுத்துகொண்டுபோய், அடுத்த கிராமத்தில் வைத்துவிடுங்கள், நான் போகி றேன், போகிறேன்'' என்று சொல்லிவிட்டு சாமி விலகிவிடும்.



பிறகு பொங்கல் வைப்பது, வேல் எடுத்து ஊர் சுற்றி வருவது, ஒரு இரவில் ஊரில்

உள்ள பழைய பாய், சட்டி பானை, கந்தல்துணி ஆகியவை களை பலர் எடுத்துக்கொண்டு போய் அடுத்த கிராமம் எல்லை தாண்டி வைத்துவிட்டு வந்துவிடுவார்கள். இதனாலேயே பெண் கள், ''யாரையாவது வசை கூறுவதானால் ''உனக்கு ஓங்காளி ஒரு கரண்டி எண்ணெய் கொடுக்கமாட்டாளா?'' என்றுதான் வைவார்கள். ஏன் எண்ணெய் என்கிறார்கள் என்றால், எண் ணெய் சாப்பிட்டால் பேதி ஆவது பிரத்தியட்சம் ஆனதால் எண்ணெயைச் சொல்வார்கள். இந்த பேதி (காலரா) நோயினால் சில கிராமங்களில் 100-க்கு 75 மக்கள் இறந்துவிடுவார்கள். வைத்தியமே செய்ய மாட்டார்கள். நோய்க்கான காரணம் அறியத் தொடங்கமாட்டார்கள்.

இந்த மாதிரி நோய் வரக்காரணம் அந்த மாதங்கள் உற்சவகா லம் - பல ஊர்க்காரர்கள் வந்த ஒரு ஊரில் கூடுவது, உற்சவ அறிகுறி, கண்டபடி சாப்பிடுவது, கண்ட இடத்தில் அசிங்கம் செய்வது, வாய்க்கால் ஓரத்தில் இருக்கும் ஊர்களின் ஜலதாரைக் கசுமாலத் தண்ணீர் வாய்க்காலில் விழுவது, அந்தத் தண்ணீரைக் குடிப்பது, தூக்கம் கெடுவது, ஆடு, கோழி, பன்றி மாமிசங்களை சரிவர வேக வைக்காமல் தின்பது போன்ற காரியங்களும், மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களில் மாரியின் பண்டிகை; சீரங்கம், ஏகாதசி, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம் ஆகியவைகளிலும், பழனி உற்சவம் முதலியவைகளி லும் பெரிதும் சாதாரண பாமர மக்கள் அதிகம் போக்குவரத்து காரணமாய் ஆங்காங்கு நோய்பற்றியும், அம்மக்கள் வழிப் பயணத்தில் அடைந்த பலவீனம், அசவுகரியம் காரணமாய் தங்கும் இடங்களில் நோய்க் கிருமிகள் பரவி பல வழிகளில் மக்களைப் பற்றும்படி ஆகிவிடுகிறது.

இதை 70, 75 ஆண்டுகளுக்கு முற்பட்ட பாமர மக்கள் உணர முடியாமல் போய் இதற்கு கடவுள் காரணம் என்று கருத வேண்டியதாய்விட்டது. 70-75 ஆண்டுகளுக்கு முன்னைய



நிலையே இப்படி இருந்திருக்குமானால், 100, 200, 500, 1000 ஆண்டுகளுக்கு முன்னுள்ள கடவுள் உணர்ச்சிகளால் மக்கள் மடையர்களாக, ஆலோசனை அற்றவர்க ளாக ஆகி இருப்பது என்பது தவறாக இருக்க முடியுமா?

எனவே, காலரா - பேதி விஷயத்தில் இருந்த கடவுள் நம்பிக்கை மாறி வைத்தியம்

செய்து காப்பாற்ற முடிகிறது என்பதோடு, காலராவின் காரணம் கண்டுபிடித்து ஆங்காங்கு வாய்க்கால் தண்ணீர், குளத்துத் தண்ணீர், கிணற்றுத் தண்ணீர் என்ற தன்மைகளை மாற்றி குழாய்த் தண்ணீர், வடிகட்டிய தண்ணீர் என்கின்ற தன்மைகளையும், மக்களுக்கு சுகாதார அறிவுத் தன்மைகளையும் ஊட்டி, அரசாங்கமும் சுகாதார முயற்சிகளைக் கையாண்டு வருவதால் 70 ஆண்டுகளுக்கு முன்பு 16,000 பேர் உள்ள நகரத்தில் (ஈரோட்டில்) காலராவால் ஆண்டு ஒன்றுக்கு 250-300 பேர் செத்து வந்த ஒரு நிலைமாறி, இன்று 70,000 (எழுபது ஆயிரம் பேர்) உள்ள (ஈரோடு) நகரில் ஆண்டு ஒன்றுக்கு 20-30 பேர்கூட காலராவால் சாவதில்லை என்கிற நிலை ஏற்பட்டு வருகிறது.

ஆகவே, கடவுள் நம்பிக்கை மக்களிடம் மாறவில்லை என்றாலும் கடவுள் செயல் தன்மை வெகுதூரம் மாறிவிட்டது.

இதிலிருந்தே கடவுள் நம்பிக்கையை கடவுள் செயலில் நம்பிக்கையும் மக்களை எவ்வளவு தூரம் மடையர்களாக அறிவியலியாக ஆக்கி வந்தது என்பதை கடவுள் நம்பிக்கையிலும், கடவுள் செயல்தம்மை நம்பிக்கையிலும் ஏற்பட்ட மாறுதல் காரணமாய், அறிவுத் தெளிவு ஏற்பட்டதன் காரணமாய் மனித சமுதாய வாழ்வில் எவ்வளவு நலம் ஏற்பட்டதோடு, அறிவுத் தெளிவு எவ்வளவு வளர்ந்து வருகிறது என்பதை உணரலாம். மேல் நாட்டவர்கள் கடவுளை "நம்புகிறார்களே" ஒழிய கடவுள் செயலை நம்புவது குறைந்துகொண்டே வருகிறது.

அதாவது, "கடவுள் நம்பிக்கை மக்களிடம் மாறவில்லை என்றாலும் கடவுள் செயல் தன்மை வெகுதூரம் மாறிவிட்டது.

இதிலிருந்தே கடவுள் நம்பிக்கையும் கடவுள் செயலில் நம்பிக்கையும் மக்களை எவ்வளவு தூரம் மடையவர்களாக அறிவிலியாக ஆக்கி வந்தது என்பதை கடவுள் நம்பிக்கையிலும் கடவுள் செயல் தன்மை நம்பிக்கையிலும் ஏற்பட்ட மாறுதல் காரணமாய், அறிவுத் தெளிவு ஏற்பட்டதன் காரணமாய் மனித சமுதாய வாழ்வில் எவ்வளவு நலம் ஏற்பட்டதோடு, அறிவுத் தெளிவு எவ்வளவு வளர்ந்து வருகிறது என்பதை உணரலாம். மேல்நாட்டவர்கள் கடவுளை



''நம்புகிறார்களே'' ஒழிய கடவுள் செயலை நம்புவது குறைந்து கொண்டே வருகிறது.

அதாவது, ''கடவுளை நம்பு; பணப்பெட்டியைப் பூட்டி வை'' - இது கிருஸ்துவர் கடவுள் நம்பிக்கை.

''கடவுளை நம்பு; குதிரையைக் கட்டி வை'' -இது முகமதியர்கள் கடவுள் நம்பிக்கை.

ஆகவே, இவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்வது அறிவாளிக்கு கடவுள் நம்பிக்கை - சும்மா அதாவது மனிதன் சுற்றுச் சார்பு பார்த்து வேஷ்டி கட்டிக் கொள்வது போன்றதே ஒழிய, உணவு உட்கொள்வது போன்றதல்ல என்பதேயாகும். ஆனால், இதற்கு விரோதமாக உண்மையாகவே யாருக்காவது கடவுள் நம்பிக்கை இருக்குமானால், அவன் மரக்கட்டையாகத் தான் இருக்க முடியும். மற்றும் அப்படிப்பட்டவர் நம்மைப் பார்த்து, ''கடவுள் ஒருவர் இருக்கிறான்; அதை நம்பு'' என்றுகூடச் சொல்ல வரமாட்டார். அதை நிரூபிக்கக்கூட நினைக்கமாட்டார். அதையும் கடவுளுக்கே, கடவுள் சக்திக்கே விட்டுவிடுவார் என்பதுதான். ஆகவே, கடவுள் கற்பனை அறிவிலியிடம் இருந்துதான் தோன்றியது என்றேன்.

மற்றும்,

2. அதற்கு (கடவுளுக்கு) உருவம், குணம் கற்பித்தவன் அயோக்கியன், அதாவது அயோக்கியதனம் என்று சொன்னேன். ஏன்? கடவுளுக்கு இலக்கணம் சொன்னவன். கடவுள் உருவமற்றவர் - குணமற்றவர் - எங்குமிருப்பவர் - எல்லாமாயிருப்பவர் - அன்பு மயமானவர் - கருணை வடிவானவர் என்று இப்படியாக அடுக்கிக்கொண்டே போகிறார்கள். இவர்களை நாம் அறிவிலிகள் என்று சொல்ல முடியுமா? அறிவிலி என்பது சில காரணம் தெரிந்துகொள்ள முடியாததனால் திருப்தி அடைவதற்காகச் சொன்னது ஆகும். இவன் அதற்கு இலக்கணம்



சொல்ல வந்தவன் வேண்டுமென்றே மக்களை ஏய்க்க வந்தவன்.

கடவுள் உண்டு என்று ஒரு பைத்தியக்காரன் சொன்னால் இவன் கடவுளைப் பார்த்ததுபோல், ஆமாம் நான் அவரைப் பார்த்தேன். அடையாளம் என்ன என்றால், அவருக்கு (கடவுளுக்கு உருவமில்லை என்கிறான். உருவமில்லாததை எப்படிப் பார்க்க

முடிந்தது? உருவமில்லாமலேயே உண்டு என்று உணர்ந்து கொள்ளக்கூடிய வஸ்துக்கள் சில இருக்கின்றன. ஆனால், அவை மனிதனுடைய பஞ்சேந்திரியங்களில் (அய்ந்து உறுப்பு களில் அதாவது மெய் (உடல்), வாய், கண், மூக்கு, செவி (காது) ஆகிய அய்ந்து உறுப்புகளில்) ஏதாவது ஒரு உறுப்புக் காவது உணர்த்தப்படக் கூடியதாக இருக்கும்.

உதாரணமாக காற்று நம் கண்களுக்குத் தெரியாது என்றாலும், உடலில் படும்போது, சாமான்களை அசைக்கச் செய்யும்போது, முறையே உடலுக்கும் கண்களுக்கும் தெரிகிறது. மின்சாரம் (எலெக்ட்ரிசிடி) என்பதாக ஒரு வஸ்து இருக்கிறது. அது கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால், அது செயல்படும்போது அநேக காரியங்களை உடல்மூலம் அறிகிறோம். காற்றுபோ லவே மின்சாரம் உடலில் பட்டால் அது படுவதை பல வழிகளில் உணர்கிறோம். நம் இஷ்டப்படி அதை தொழில் படுத்துகிறோம். ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் தட்டுவது மூலம் பல காரியங்களைச் செய்யச் செய்கிறோம். அதை அளவுப்படுத்துகிறோம். இதுபோல் குணங்களை அறிகி றோம்.

ஆகவே, உருவமில்லாமல், குணமில்லாமல் ஒரு வஸ்து இருக்கிறது என்றால், அதைவிட யோக்கியமற்ற காரியம் வேறு என்ன இருக்க முடியும்? இந்த யோக்கியமற்ற காரியத்தை ஒருவன் செய்கிறான் என்றால் அதை அயோக்கியம் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்லமுடியும்? இப்படிப்பட்ட காரியம் செய்வதன் கருத்தெல்லாம் மற்றொரு மனிதனை நம்பச் செய்வதற்காகச் செய்யும் ஏமாற்றும் உணர்ச்சியில்லாமல் இதில் வேறு என்ன யோக்கியமிருக்க முடியும்? நம்புகிற மனிதன் மடையனாக்கப்படுவதுடன், இதுபோல அநேக பித்தலாட்டங்க ளையும், அயோக்கியத்தனங்களையும் நம்பும்படியான ஏமாளி யாக ஆகிவிடுகிறான்.

இது எவ்வளவு பெரிய புரட்டு! உருவ மில்லை. குணம் இல்லை என்பது மாத்திர மல்லாமல், அந்த வஸ்து (கடவுள்) எங்கும் இருக்கிறார் என்கின்ற மற்றொரு இமயம லைப் புரட்டு என்றால், இந்தத் துணிவுக்கு என்ன பெயர் இடுவது?



"அது (கடவுள்) எப்படிப்பட்ட மனத்திற்கும் எட்டாதது, எப்படிப்பட்ட அறிவுக்கும் அறியக்கூடாது. ஆதலால் உனக்குப் புரியவும் புரியாது; உன் மனதிற்கு எட்டவும் எட்டாது? நீ அதனை அறியவும் முடியாது. அதனால்தான் கடவுள் உருவமற்றவர், குணமற்றவர், யார் மனதுக்கும் புரியாதவர், எப்படிப்பட்ட அறிவாளியின் அறிவுக்கும் எட்டாதவர் என்று சொல்லப்படுகிறது" என்றால், இது கட்டுப்பாடான அயோக்கியத்தனம் அல்லவா?

இப்படி புரியாதவர், எட்டாதவர், அறியப்படாதவர் உனக்கு மாத்திரம் எப்படி புரிய, எட்ட, அறிய, தெரிய முடிந்தது?

தோழர்களே! இந்தக் கேள்வியை நீங்களே கடவுள் நம்பிக்கைக்காரர்கள் இடமும் அதை அறிந்தவர்கள் இடமும் கேட்டு தெளிவு கொள்ளுங்கள். அப்படி தெளிவு கொள்ளாவிட்டால் நீங்கள் மேற்கண்ட 3 ஆவது வகுப்பில் சேர்ந்தவர்களாகத்தான் ஆவீர்கள்.

*(20.10.1962 "விடுதலை" நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)*

# 48. எல்லாம் கடவுள் செயலா?

திராவிடர் கழகத்தின் தொண்டுபற்றி உங்களிடையே சிறிது சொல்ல ஆசைப்படுகின்றேன். திராவிடர் கழகமானது பகுத்தறிவினை அடிப்படையாகக் கொண்டது. எறும்பு முதல் யானை வரையில் உள்ள ஜீவராசிகளுக்கு இல்லாத உன்னதமான அறிவான பகுத்தறிவு மனிதனுக்குத்தான் உள்ளது. மற்ற பிராணிகளுக்கும், மரம் செடிகளுக்கும் வெறும் உணர்ச்சி அறிவுதான் உண்டு. இவைகள் எல்லாம் சாப்பிடுகின்றன. காற்றையும் சுவாசிக்கின்றன, வளர்கின்றன, இனத்தையும் பெருக்குகின்றன. இப்படிப்பட்ட மற்ற ஜீவராசிகளுக்கு எல்லாம் இல்லாத பகுத்தறிவு என்பது நமக்குத்தான் உள்ளது; எது நல்லது கெட்டது என்று சிந்தித்து நடக்கும்படியான அறிவு மனிதனுக்குத்தான் உள்ளது. 1000 ஆண்டுகளுக்குமுன் யானை, குதிரை, மாடு என்ன தின்றதோ, எப்படி வாழ்ந்ததோ அதுபோலத்தான் இன்றும் தின்கின்றன, வாழ்கின்றன.



மனிதன் அப்படி அல்ல. காலத்துக்குக் காலம் வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொண்டு, வளர்த்துக்கொண்டே வருகின்றான். இப்படிப்பட்ட பகுத்தறிவு மற்ற நாட்டு மக்களிடையே எவ்வளவு தூரம் வளர்ந்துள்ளது, எவ்வளவு மேலே போயிருக்கிறார்கள்! நமது நாட்டைப் பொறுத்தவரையில் ஏன் வளர்ச்சி அடையவே இல்லை, ஏன் இன்னும் கீழ்நிலையிலேயே இருக்கின்றோம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது பகுத்தறிவினை சரியான முறையில் பயன்படுத்தச் செய்யவிடவே இல்லை.

தோழர்களே! எங்கள் இயக்கம் இந்த நாட்டில் தலையெடுக்கா விட்டால் கிராம மக்களின் கதிதான் என்ன? உழுவது, விதைப்பது, அறுப்பது தின்பது, சாவது என்பதைத் தவிர வேறு என்ன இருந்தது?

தோழர்களே! மாடு உழைக்கின்றது என்றால் அதற்கு அறிவில்லை. அதனைக் கட்டிவைத்து அடித்து வேலை வாங்குகின்றான். அறிவு படைத்த மனிதன் எதற்காக உழைக்க வேண்டும்? உழைத்து மற்றவனுக்குப் போட்டுவிட்டு சோற்றுக்கு மட்டும் கணக்காக வாங்கி வயிறு வளர்க்க வேண்டும் என்ற நிலை ஏன்? உங்களை கீழ்சாதியாக வைத்து இருக்கவே இந்த நிலை.

தோழர்களே! பார்ப்பான் உழைக்காவிட்டாலும் அரிசிச் சோறு காயோடு, பருப்போடு, நெய்யோடு, குழம்பு, ரசம், மோர் ஆகியவற்றுடன் சாப்பிடவும், உழைப்பவன் அரை வயிறு பட்டினி கிடக்கவும்படியான நிலை ஏன்?

பார்ப்பானை எடுத்துக்கொண்டால் ஆண் பெண் அத்தனை பேரும் 50 வருஷத்துக்கு முன்பு இருந்தே 100-க்கு 100 படித்தவர்களாக இருக்கின்றார்கள்! உழைக்கின்ற நம் இனத்தில் தானே 100-க்கு 80, 90 பேர்கள் தற்குறி?

உழைக்கின்ற குடியானவன் தன் சோற்றுக்கு எடுத்துக் கொண்டு மற்றதை எல்லாம் மற்றவனுக்குத் தானே பயன்படும்படி அளிக்கின்றான். இப்படிப்பட்ட மனிதன் கீழ்சாதியாக, அரை வயிற்றுக் கஞ்சிக்கும் கஷ்டப்படுகின்றவனாக ஏன் இருக்க வேண்டும்?



இதற்குக் காரணம் கடவுள் செயல் என்று முட்டாள்தனமாக மற்றவன் சொல்லுவான். நாங்கள், மக்களுக்கு அறிவு சரியானபடி

ஏற்படவில்லை என்றுதான் கூறுவோம். 2000 ஆண்டாக இந்த சிந்தனை நமக்கு ஏற்படாது செய்து, என்ன இழிவு கொடுமை ஏற்பட்டாலும் எல்லாம் கடவுள் செயல் என்று நினைக்கும்படி செய்துவிட்டார்கள்.

தோழர்களே! கடவுள் இல்லை, மதம் ஒழிய வேண்டும், சாஸ்திரம் ஒழிய வேண்டும் என்று கூறுபவர்கள் நாங்கள்! எங்களை எதிர்க்க துணிவில்லாத ராஜாஜி, காமராசரிடம் போய் முட்டிக் கொள்கிறார். காமராசர் எங்களுக்குச் சிநேகமாக இருக்கின்றாராம். அதன் காரணமாக இந்த ஆட்சி நாத்திக அரசாங்கமாக ஆகிவிட்டது; ராமசாமி சொல்லுகின்றபடிதான் ஆளுகின்றார் என்று கூறி காமராசரை மிரட்டுகின்றார்.

எங்கள் பக்கத்தில் ஒரு கதை சொல்லுவார்கள். எங்கள் பகுதியில் வேட்டுவக் கவுண்டர் என்று ஒரு சாதி, வேளாளக் கவுண்டர் என்று ஒரு சாதி உண்டு. வேட்டுவக் கவுண்டர் சற்று முரட்டு சுபாவமுள்ளவர்கள். வேளாளக் கவுண்டர் கொஞ்சம் சாந்தமானவர்கள்.

வேட்டுவக் கவுண்டன் ஒருநாள் வேளாளக் கவுண்டன் பிள்ளையார் முன்பு படுத்துக்கொண்டு காலை பிள்ளையார்மீது படும்படி நீட்டிக்கொண்டு இருந்தான். அது கண்டு பிள்ளையார் வேட்டுவக் கவுண்டனை ஒன்றும் கேட்கத் தைரியம் இல்லாமல் வேளாளக் கவுண்டனைப் பார்த்து, கவுண்டா! கவுண்டா! வேட்டுவக் கவுண்டனை காலை எடுக்கச் சொல்கின்றாயா, இல்லையானால், உன் கண்ணை குத்தட்டுமா? என்று கேட்டதாம்! வேளாளக் கவுண்டனோ எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுப் பார்த்தும் அவன் காலை எடுத்தப்பாடு இல்லை.

கடவுளுக்குத் தைரியம் இருந்தால் வேட்டுவக் கவுண்டனை, காலை எடுக்கின்றாயா, இல்லையானால், உன் கண்ணைக் குத்திப்போடுவேன் என்று கேட்க வேண்டாமா?



ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பதுபோல வேளாளக் கவுண்டனையா மிரட்டுவது?

அதுபோலத்தான், நாஸ்திகப் பிரச்சாரம் செய்வது நாங்கள். எங்களை எதிர்க்கத் தைரியம் இல்லாமல் காமராசரை ஏன் எதிர்க்க வேண்டும்? அவரிடம் ஏன் முட்டிக் கொள்ள வேண்டும்? நான் முன்பு குறிப்பிட்

டதுபோல நாம் அறிவையே ஆதாரமாகக் கொண்டு காரியம் ஆற்றுகின்றதனால் எவரும் நம்மை ஒன்றும் செய்ய முடிய வில்லை.

*(30.4.1963 அன்று பெரம்பலூர் வட்டம் அந்தூரில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்கூட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி - 'விடுதலை' 10.5.95)*

# 49. பக்தி!

இராஜாஜியும், சங்கராச்சாரியாரும் மக்களிடையே பக்திப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். எப்போதையும்விட இப்போது அதிகமாகச் செய்து வருகிறார்கள். பேச்சு பேசும்போதும் ''மக்களுக்கு இப்போது வரவர கடவுள் பக்தி குறைந்து வருகிறது'' என்று பேசி வருகிறார்கள். அதன் கருத்து என்ன என்று சிந்திப்போமானால், மக்களிடம் வரவர காலப் போக்கில் மூட நம்பிக்கைகள் குறைந்து விலகி வருகிறது என்பதுதான் பொருளாகும்.

ஏன் என்றால் அந்தச் சொல்லை உண்டாக்கினவர்களே மக்களிடம் ஒரு முட்டாள்தனமான நம்பிக்கை ஏற்படவேண்டும் என்கின்ற கருத்தில்தான் உண்டாக்கினார்கள் என்று சொல்ல வேண்டும். ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால் அந்தச் சொல், அதாவது பக்தி என்கிற சொல் ஒரு அர்த்தமற்ற-பொருளற்ற சொல்லேயாகும்.

விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் முதலாவது பக்தி என்ற சொல் தமிழ்ச்சொல் அல்ல; வடமொழிச் சொல் ஆகும். அதற்கு சரியான ஒரு தமிழ்ச் சொல்லே இல்லை. பக்தி என்னும் சொல்லுக்கு தமிழில் அகராதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் சொற்கள் அன்பு - வழிபாடு - நம்பிக்கை என்ற சொற்கள்தாம்.



சாதாரணமாக ஒரு மனிதன் ''பக்திமானாய் இருக்கிறான்'', ''அவன் தெய்வநம்பிக்கை உடையவன்'' என்றால் அதற்கு அடையா ளம் என்ன?

1. பட்டை நாமம்
2. விபூதிப்பட்டை
3. கழுத்தில் கொட்டை

4. வாயில் ராமா-ராமா, சிவா-சிவா என்பது.

5. எதற்கெடுத்தாலும் ஆண்டவன் செயல், பகவான் செயல் என்பது

6. கோயில்களுக்குப் போவது

7. அங்கு போய் கண்ணை மூடிக்கொண்டு கையைக் கூப்பி நிற்பது.

8. அப்போது வாயால் எதையாவது முணுமுணுப்பது

9. நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து கும்பிடுவது

10. மனதில் எதையாவது விரும்புவது

11. கோயில் பார்ப்பான் எதையாவது கொடுத்தால் அதை வாங்கி தலையில் கொட்டுவதும், வாயில் கொஞ்சம் போட்டுக் கொண்டு மீதியை உடலில் கொஞ்சம் தடவிக்கொள்வது.

12. பிறகு சாமி அறையைச் சுற்றுவது.

13. தேவாரம், பிரபந்தம், இராமாயணம், பாரதம் முதலிய நூல்களைச் சத்தமாய் படிப்பது.

14. வீட்டில் பூசை அறை வைத்து பூசை செய்வது

15. உற்சவங்களுக்குப் போவது

16. ஸ்தல யாத்திரை செய்வது

17. இவை முதலியவை மாத்திரமல்லாமல் பார்ப்பனர்களை சாமி என்று கூறி கண்டவுடன் கும்பிடுவது; அவனுக்குக் கண்டபடி அள்ளிக் கொடுப்பதுவரை செய்யும் காரியங்கள்தான் இன்று பக்தியாய் இருக்கின்றதே ஒழிய மற்றபடி மனிதனின் நல்ல எண்ணம், நாணயம், ஒழுக்கம், நேர்மை, இரக்கம், ஈவு முதலிய நல்லவைகளைக் கொண்டிருப்பதோ, மோசடி, துரோகம், பித்தலாட்டம், திருட்டு, புரட்டு, பொய், ஏமாற்றுதல் முதலிய தீர குணங்கள் இல்லாமல் இருப்பதோ ஒருநாளும் ஒருவரிடமும் பக்தியாய், தெய்வ நம்பிக்கையாய் இருப்பவர்களிடம் காண முடிவதில்லை. எனது 87 ஆண்டு வாழ்வில் மனிதர் என்பவர் எவரிடமும் காண முடியவே இல்லை. அது மாத்திரமல்லாமல், அவை இருக்கவேண்டும் என்கிற கட்டாயமும் அவர்களுக்கு இல்லை.



இவைகளுக்கும், பக்திக்கும் சம்பந்தமும் இல்லை என்றுதான் முடிவு செய்யவேண்டும்.

இப்படிப்பட்ட பக்தி மனிதனுக்கு எதற்காக வேண்டும் என்றால், மனிதனை மடையனாக்கவும், அயோக்கியர்கள் எளிதில் அனைச் சுரண்டவும் பயன்படுவதால் "மனிதனுக்கு பக்தி அவசியமானது" என்று பிரச்சாரம் செய்யவேண்டி ஏற்பட்டு விட்டது. ஒரு யோக்கியன் பக்தி செய்யவில்லையானால், கடவுளை நம்பவில்லையானால் அவனுக்குத்தான் என்ன கேடு வரும்? மற்றவர்களுக்குத்தான் என்ன கேடு சம்பவிக்கும்? பொதுவாக மக்களுக்கு பக்தி இல்லாவிட்டால் பார்ப்பானுக்கும், அயோக்கியர்களுக்கும் பிழைப்பு, வாழ்க்கை நடவாது.

பொதுவாக நாட்டில் பக்தி கொண்ட முட்டாள்களால்தான் இவ்விரு கூட்டம் வாழ்வதுடன், எல்லாவித கெட்ட குணங்களும் மக்களைப் பீடிக்க வசதி ஏற்படுகிறது. இதனால்தான் சங்கராச்சாரி, ராஜகோபாலாச்சாரி, கதாகாலட்சேப ஆச்சாரிகள் முதல் எந்தப் பார்ப்பனரும் எந்த சமயநூல் புராணங்களும் "பக்தியினால் அல்லாமல் வேறு எந்தக் காரணத்தாலும் மனிதன் மோட்சமடைய முடியாது" என்று தினமும் பேச்சுக்குப் பேச்சு மற்ற மக்களுக்கு உபதேசம் செய்து வருகிறார்கள்.

மற்றும் பக்தியினால் பாவம் தீரும் என்கின்ற சொல்லே மிக அயோக்கியத்தனமும் பித்தலாட்டமும் பெரும் கேடும் நிறைந்த சொல்லாகும். மற்றும் பக்தியும் வழிபாடும் பூசையும் வணக்கமும் பிரார்த்தனையும் "மனிதன் செய்த எப்படிப்பட்ட பாவத்தையும் தீர்க்குமே" என்று கூறப்படுகிறதே ஒழிய, இவை பாவம் செய்யாமலிருக்கச் செய்யும் சக்தி, தன்மை அற்றதாகவே இருந்து வருகின்றன. நாட்டில் "மக்களுக்கு கடவுள் நம்பிக்கை ஏற்பட வேண்டும்" என்ற கருத்தைச் சொல்லிக் கொண்டு செய்த எந்தக் காரியத்தாலும், எந்தக் கோயிலினாலும், எந்தக் குளம் தீர்த்தங்களாலும் மனிதனை "பாவ" காரியங்கள் செய்யாமல் தடுக்கவே முடியவில்லையே!



ஆகையால் பக்தி, கடவுள் நம்பிக்கை என்பவை எல்லாம் பார்ப்பனர்களுடையவும், அயோக்கியர்களுடையவும் வஜ்ராயுதங்களேயாகும்.

*(29.12.1965 'விடுதலை' நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*

# 50. இது காட்டுமிராண்டிகளின் கடவுள்கள்

இந்துக்கள் என்னும் காட்டுமிராண்டிகளுக்கு கடவுள்கள்.

கந்தபுராணத்தில் வரும் கந்தன், விநாயக புராணத்தில் வரும் கணபதி, பாகவதத்திலும், பாரதத்திலும் வரும் கிருஷ்ணன்.

இவற்றுள் இராமனும், கிருஷ்ணனும் அவர்களின் கதைகளின் படி இந்த உலகத்திலிருந்தே அதுவும் இந்தியாவில் அயோத்தியி லிருந்தும், துவாரகையிலிருந்தும் செத்தே போய்விட்டார்கள்!

ஒருவன் ஆற்றில் விழுந்து செத்தான்! மற்றொருவன் ஒரு வேடனால் வில்லாலடிக்கப்பட்டுச் செத்தான்!

இவர்கள் தவிர பிர்மா, விஷ்ணு, சிவன் என்பவர்கள். இவர்கள் மூவரும் அனாமதேயங்கள். இவர்கள் பிறப்பைப்பற்றி புராணங் களில் சண்டை அதாவது யாருக்கு யார் பிறந்தார்கள்? யாரை யார் உண்டாக்கினார்கள்? யார் பெரியவர்? யார் சிறியவர்? மக்கள் குற்றத்தை மன்னிக்கவும், மக்களுக்கு மோட்சத்தைக் கொடுக்கவும் யாருக்கு அதிகாரம் உண்டு? என்கிறது போன்ற விஷயத்தில் இவர்கள் பக்தர்களுக்குள்ளாகவே பெரும் போராட் டம் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

இவ்வளவுதானா! இவர்களின் கர்வத்தை அடக்க ஒருவருக் கொருவர் முயற்சி செய்திருக்கிறார்கள்!

இவை தவிர,

புராணங்களுக்கு மேலான வேதம் என்பதில் இவர்கள் அனாம தேயங்களாக அதாவது, "இந்திரனுக்குக் கீழ்ப்பட்ட தேவர்களாக" எடுபிடி ஆட்களாக இருந்திருக்கிறார்கள். அது வும் முப்பத்து முக்கோடி தேவர்களில் ஒருவ ராக இருந்திருக்கிறார்கள்.



இவை தவிர,

நெருப்பு ஒரு கடவுள், அதாவது திருவண் ணாமலையில், காற்று ஒரு. கடவுள், அதா வது திருக்காஞ்சியில் தண்ணீர் ஒரு கடவுள், அதாவது திருவானைக்காவலில். மண் ஒரு கடவுள், அதாவது காளாஸ்தியில்! ஒன்றுமே

கிடையாது வெறும் சூனியம்தான ஒரு கடவுள், அதாவது சிதம்பரத்தில் திரைக்குள்!

திரையை நீக்கினால் ஒன்றும் இல்லை (ஜோதிதான்) என்ப தாக; அப்புறம் தானாகத் தோன்றினவர் ''தாந்தோணிப் பெரு மாள்'' என்பதாக ஒரு கடவுள். இதிலிருந்தே மற்ற கடவுள்கள் மனிதனால் தோற்றுவிக்கப்பட்டவை என்பதாகப் பொருள் விளங்குகிறது.

இனி ஆறுகள் (நதிகள்) கடவுள்கள் பல; மலைகள், மலைக் கடவுகள்கள் பல.

நிற்க,

கடவுள்கள் விஷயத்தில் மனிதன் வேதத்தை நம்புவதா? புராணங்களை நம்புவதா? இதிகாசங்களை நம்புவதா? மற்ற ஸ்தல புராணங்களை நம்புவதா?

மற்றும் இந்த கடவுள்கள்,

தபசு (தவம்) செய்தன,

வரம் பெற்றன,

சாபும் பெற்றன,

அடிபட்டன என்பன போன்ற செய்திகள் ஏராளம். இவை யாரைக் கடவுளாகக் கொண்டு தபசு செய்தன? யார் இவர்க ளுக்கு வரம் கொடுத்தார்கள்?

பிறகு, இந்த கடவுள்களுக்கு குடும்பம், இராஜ்ய பாரம், மனைவி மக்கள், காதலிகள், மற்றவர்கள் மனைவிகளிடம் ஒவ்வாக் காதல்கள், அதற்காக சாபம் ஏற்றல் இன்னும் என் னென்னமோ, எத்தனையெத்தனையோ கேடான இழிவான தன்மைகளைக் கொண்ட கடவுள்களை - சோம்பேறிகளும் அயோக்கியர்களும் பிழைப்பதற்காகவே ஏற்படுத்திக் கொண்டி ருப்பவைகளை இந்துக்கள் என்னும் பெயர் கொண்ட சமயத்தவர்களாகிய நாம் கடவுள்க ளாக வணங்குகிறோம்!



இதனால் நம்மை காட்டுமிராண்டிகளாக மற்றவர்கள் கருதுவதில் தவறு என்ன என்று கேட்கிறேன்.

ஆதலால் காங்கிரஸ் - தி.மு.க. - தி.க.வைச் சேர்ந்த தோழர்கள் ஒவ்வொருவரும் இதை

சிந்தித்துப் பார்த்து தங்கள் தங்களைப் பற்றி முடிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

குறிப்பு: 40 ஆண்டுகள் பாடுபட்டும் இன்னும் நம் மக்கள் இந்த நிலையில் இருந்தால் நமக்கு எப்போதுதான் அறிவு விடுதலை, அறிவுச் சுதந்திரம் ஏற்படுவது? மனிதன் இலட்சியமே சோறும் பதவியும்தானா?

*(21.5.1967 ''விடுதலை'' நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*

# 51. இறப்பும் - பிறப்பும் மனிதர் செயலா? கடவுள் செயலா?

''உலகில் மனிதர் பிறப்பதும் சாவதும் ''கடவுள் செயலா?'' மனிதர் செயலா?'' என்பதைப்பற்றி விளக்குவதுதான் இக்கட்டுரையின் தத்துவமாகும்.

மக்களுக்கு ஆராய்ச்சி அறிவின் தன்மை இல்லாததால் மனித இறப்பு பிறப்புப்பற்றிய விஷயத்தில் சிறிதும் அறிவில்லாமல் ''எல்லா்ம் கடவுள் செயல்'' என்ற கருத்தில் உழன்று வருகிறார்கள். இன்றைக்கு ஆயிரம் - இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் காட்டுமிராண்டித்தனமான முடநம்பிக்கைக்கு ஆட்பட்டவர்களாய் இருந்ததால் இறப்பு - பிறப்பு பற்றிய அறிவே இல்லாதவர்களாக, அதைப்பற்றிய கவலையற்றவர்களாக இருந்து வந்தார்கள்.

மேல்நாட்டாரின் சம்மந்தம் நமக்கு ஏற்பட்டதற்குப் பிறகே பிறப்புப்பற்றியும், சாவு பற்றியும் நம் மனிதர்கள் சிந்தித்து அது சம்பந்தமான அறிவு பெற வேண்டியவர்களானார்கள்.



சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு கிறிஸ்து பிறந்து அவர் செத்த காலத்தில் இந்த உலக ஜனத்தொகையே சுமார் 20 கோடி மக்களைக் கொண்டதாகத்தான் இருந்தது.

பிறகு, 1500 (ஆயிரத்து அய்நூறு) வருடம் கழித்த பிறகு உலக ஜனந்தொகை (கி.பி. 1500-ல் 45 (நாற்பத்து அய்ந்து) கோடி மக்களைத்தான் கொண்டிருந்தது.

பிறகு, சுமார் 300 வருஷம் கழித்து கி.பி. 1800-ல் 70 (எழுபது) கோடி மக்களைக் கொண்டதாகத்தான் இருந்தது.

பிறகு 115 வருஷம் கழித்து 1915-ல் இந்த உலகம் 165 (நூற்று அறுபத்தைந்து) கோடி மக்களைக் கொண்டதாக இருந்தது.

அன்று மக்களுடைய ஆயுள் சராசரி 25 வருஷமாக இருந்தது.

பிறகு கி.பி. 1954-ம் வருஷத்தில் உலக ஜனத்தொகை 326 கோடி மக்களாக ஆகி அவர்களுடைய ஆயுளும் சராசரி 60-65 வருஷங்களாகவும், நம் நாட்டில் 37 வருஷங்களாகவும் ஆகி இருந்தது.

இன்று 1964-ல் உலக ஜனத்தொகை சுமார் 350 கோடி என்பது மாத்திரமல்லாமல் மக்களின் ஆயுள்காலம் சராசரி மற்ற நாடுகளில் 60-க்கு 70 என்பதாகவும், நம் நாட்டில் சராசரி 50 வருஷமென்றும் ஆகி இருக்கிறது. அது மாத்திரமல்லாமல் இறப்பும் - பிறப்பும் பெருமளவிற்கு குறைந்து இருக்கிறது.

மனிதநூல் ஆதாரப்படி மக்களுக்கு ஆயுள் 100 வருஷம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், மக்கள் சராசரி ஆயுள் 20 முதல் இன்று 50 வயது; மேல் நாடுகளில் 60-70 வயதாகவும் இருந்து வருகிறது. இதற்குக் காரணம் கடவுள் செயலா, மக்களின் அறிவு வளர்ச்சியும், வைத்திய வளர்ச்சியுமா என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இங்கிலாந்து நாட்டு சரித்திரத்தைப் பார்த்தால் 2000 ஆண்டுகளுக்கு முன்பு வைத்தியர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்! காரணம், "கடவுளால் உண்டாக்கப்பட்ட நோயை மனிதன் கடவுளுக்கு விரோதமாக மருந்து கொடுத்து சவுக்கியம் செய்வதா?" என்ற கடவுள் பக்தி காரணத்தால் கொல்லப்பட்டார்கள்.

நமது நாட்டிலும் காலராவுக்கும், அம்மைக்கும் 1900-ம் வருஷம் வரை மருந்தே இல்லாமலிருந்தது. அப்போது காலரா 100 பேருக்கு வந்தால் 90 பேர் செத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது 100-க்கு 10 பேர்களைக்கூட டாக்டர்கள் சாகவிடுவதில்லை.



அம்மைக்கு மேல் நாட்டார் அம்மை குத்தி அம்மை வராமல் தடுப்பது மாத்திரமல்லாமல், மேல் நாட்டில் வந்த பிறகு

சவுக்கியம் செய்ய மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது.

அது மாத்திரமல்லாமல், மக்கள் அதிகமாக பிள்ளை பெறாமல் இருப்பதற்கு மருந்து, இரண சிகிச்சை (Operation) முதலிய காரியங்கள் செய்யப்பட்டு பெருமளவிற்கு பிறப்பும் குறைக்கப் பட்டு விட்டது.

எனவே, கடவுள் நம்பிக்கைக்கார ஆத்திகர்களே! பக்தர்களே! இப்போது சொல்லுங்கள், மக்கள் பிறப்புக்கும் இறப்புக்கும் யார் காரணமென்று.

மற்றும் மீன் பண்ணை வைத்து மீன்களை உற்பத்தி செய்கி றான் மனிதன். கோழிப் பண்ணை வைத்து முட்டைகளைப் பெருக்கி கோழிகளை உற்பத்தி செய்கிறான் மனிதன். இவற்றை தினம் கோடிக்கணக்கில் கொன்று தின்கிறார்கள் மனிதர்கள்.

இந்த ஜீவன்கள் பிறப்புக்கும் இறப்புக்கும் யார் காரணம் என்பதை சிந்தியுங்கள்.

தோட்டம் வைத்து காய்கறி, உணவுப் பொருள் உற்பத்தி யாக்கி அறுவடை செய்து உண்பதற்கும் இதற்கும் என்ன பேதம்? சிந்தியுங்கள்! எனவே, கடவுள் நம்பிக்கை எவ்வளவு முட்டாள்தனமானது, ஆபத்தானது, வளர்ச்சியைத் தடுப்பது என்பதை உணருங்கள்.

*(21.5.1967 "விடுதலை" நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை)*

# 52. பகுத்தறிவின் முதல் எதிரி கடவுள்

பலர் பிரச்சாரப் பயிற்சி பெறுவதற்காக பல ஊர்களிலிருந்து வந்திருக்கிறீர்கள். பகுத்தறிவுப் பிரச்சாரப் பயிற்சி என்பது நம்



நாட்டிற்கு தற்போது மிகமிகத் தேவையான தாக இருக்கிறது. நம் மக்கள் பகுத்தறிவற்ற காரணத்தினால்தான் மிருகத்திலும் கீழான இழிநிலையில் இருந்து வருகின்றனர். நாம் பெரும்பாலும் அறிவுக்கு மாறாக நடந்து வருபவர்கள்.

மனித சமுதாயத்திற்கு மற்ற ஜீவராசிகளுக் குக் கிடைத்திராத பகுத்தறிவு கிடைத்திருக்கி

றது. இருந்தும் மனிதன் அதனால் அடைய வேண்டியதை அடையவில்லை. பகுத்தறிவின் மூலம் நாம் அடைய வேண்டியது நிறைய இருக்கிறது. நம் நாட்டில் பகுத்தறிவுவாதிகளின் சரித்திரமே கிடையாது.

மேல்நாடுகளில் பல பகுத்தறிவுவாதிகளின் சரித்திரம் உண்டு. சுமார் 2500 ஆண்டுகளுக்குமுன் தோன்றி பகுத்தறிவு தொண்டாற்றிய புத்தரைப்பற்றிய சரித்திரத்தைத் தவிர அதற்குப்பின் வேறு எந்தப் பகுத்தறிவுவாதியும் இருந்ததாக சரித்திரமில்லை.

நமது இயக்கம்தான் பகுத்தறிவை அடிப்படையாக வைத்து மக்களிடம் நிறைந்திருக்கும் அறியாமை - மடமை - முட்டாள்தனம் இவைகளை ஒழிக்கப் பாடுபட்டு வருகிறது. இதுவரை நடைபெற்ற பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெற்றவர்கள் பயிற்சிபெற்று சென்றதும் பலர் தங்கள் வரையில் பகுத்தறிவுவாதிகளாக நடந்து கொண்டார்களே தவிர அவர்கள் பிறருக்குப் பயன்படக்கூடிய வகையில் தொண்டாற்றவில்லை. அதுபோலில்லாமல் இங்கு வந்திருக்கும் நீங்கள் பயிற்சி முடிந்து சென்றதும் உங்களால் முடிந்த அளவு மற்றவர்களை பகுத்தறிவாளர்களாக்க முற்பட வேண்டும், பலரை பகுத்தறிவாதிகளாக மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிற்சி வகுப்பு நடத்த இத்தோட்டத்தை சிறந்த முறையில் அமைத்துக் கொடுத்து இங்கு வந்திருக்கும் எல்லோருக்கும் சிறந்த உணவு அளித்து பல வசதிகளும் செய்து கொடுத்த பெரியவர் உயர்திரு நாய்னா அப்புசாமி நாயுடு அவர்களுக்கு எனது மனப்பூர்த்தியான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்தப் பயிற்சிப்பள்ளி ஒரு வாரத்திற்கு கம்மியில்லாமல் 10, 15 நாட்களுக்கு நடத்தப்படும். பல கருத்துகளைப்பற்றி விளக்கம் செய்யப்படும். இங்கு தெரிந்து கொள்வதாலேயே எல்லா பகுத்தறிவும் வந்துவிடாது. கணக்குப் போடுவதற்கு ஒரு வழியாக வாய்ப்பாடு என்பது எப்படி கணக்கிற்குப் பயன்படுகிறதோ அப்படி இரு ஒரு வழி. வாய்ப்பாட்டின் முடிவே கணக்கிற்கு ஒத்தது என்றாலும் அதை ஒரு வழியாகத்தான் பின்பற்றுகிறோமே தவிர கணக்கும் வாய்ப்பாடும் ஒன்று என்ற தன்மையில் பயன்படுத்துவதில்லை. கணக்கில்



கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் எல்லாம் சேர்ந்து இருக்கும். அதைச் செய்ய ஒரு வழிதான் வாய்ப்பாடு. அது போல் பகுத்தறிவு பெற இப்பயிற்சி ஒரு வழியாகும்.

முதலாவது, கடவுளைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். பூராவையும் தெரிந்து கொள்ளுவது என்பது முடியாது. என்றாலும் அந்த வழியைத் தெரிந்து கொள்ள வேண்டும். பகுத்தறிவின் முதல் எதிரி கடவுள். ஏன்? நான் முன்பே சொன்னேன், மற்ற ஜீவன்களுக்கில்லாத பகுத்தறிவு மனிதனுக்கு மட்டும்தான் இருக்கிறது என்று. இந்தப் பகுத்தறிவு பயன்படாமல் போனதற்குக் காரணம் கடவுள்தான். எல்லாம் கடவுளால்தான் ஆகும். கடவுள்தான் எல்லாவற்றையும் உண்டாக்கியவர், எல்லாவற்றையும் இயங்க வைப்பவர் கடவுள்தான் என்று மனிதன் தனது பகுத்தறிவைப் பயன்படுத்த முடியாத வகையில் எல்லாவற்றிற்கும் காரணகர்த்தா கடவுள் என்று கற்பித்துவிட்டான்.

கடவுள்தான் அறிவிற்கு மேம்பட்டவன் என்று கருதியதாலே மனிதனின் ஒழுக்கம் குறைந்துவிட்டது. அறிவு குறைந்து விட்டது, மற்றவர்களிடம் நடந்து கொள்ளும் பண்பு கெட்டு விட்டது என்பதோடு, மனிதன் பகுத்தறிவு இருந்தும் அதைப் பயன்படுத்த முடியாத முட்டாளாக காட்டுமிராண்டியாக ஆகி விட்டான். அதன் காரணமாகவே அவன் இழிபிறவியும் ஆக்கப் பட்டான்.

பொதுவாக கடவுள் நம்பிக்கைக்காரன் என்பவன் கடவுள் உண்டு என்பதை நிலைநிறுத்தப் பயன்படுத்துவது என்னவென்றால், நீ எப்படி பிறந்தாய்? இந்த மரம் எப்படி உண்டாயிற்று? உன் தகப்பனில்லாமல் நீ எப்படி வந்தாய்? என்பன போன்ற முட்டாள்தனமான கேள்விகளேயாகும்.

சாதாரணமாக இரண்டணாவை வைத்து அதன்மேல் ஒரு ரூபாயை வைத்தால் இரண்டணாவை அது மறைத்துவிடும். அதனாலேயே இரண்டணா இல்லை என்று சொல்ல முடியுமா? அதேபோல ஒரு ரூபாய் மேல் இரண்டணாவை வைத்தால் இரண்டணா ரூபாயை மறைப்பதில்லை. உனது தகப்பனை உனக்குத் தெரியும், அவருடைய தகப்பனைத் தெரியும், அவருடைய தகப்பனையும் தெரியும். அந்த தகப்பனுடைய தகப்பனைத் தெரியுமா என்பான்.



தெரியாது; தெரிந்திருக்க நியாயமில்லை. தெரியாது என்றால், அதுபோலத்தான் கடவுளும், அதை உன்னால் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால், அவர் உண்டு என்பான்.

சக்தி இருக்கிறது, செடி வளர்கிறது. அதற்காக நல்ல பெண்டாட்டியைக் கொடு, நல்வாழ்வைக் கொடு, சுகத்தைக் கொடு, பணத்தைக் கொடு என்று அதன் காலிலா போய்விழவேண்டும்?

சாதாரணமாக நமது அறிவுக்கு என்ன எல்லை உண்டோ அந்த அளவிற்கு உணர்ச்சி பெறுகிறோம். எத்தனையோ காலமாக இருந்து வருகிறது உலகம். அதைப்பற்றி நாம் இப்போது தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் என்ன இருக்கிறது? அது எப்படி உண்டாகி இருந்தால்தான் நமக்கு என்ன? ஒரு சக்தி இருக்கிறது என்றால், இருந்துவிட்டுப் போகட்டுமே!

எல்லாம் அவனால்தான் நடக்கிறது, எல்லாம் அவன் செயல், எல்லாம் அவன், அவன் என்று விவகாரம் பேசுவானே தவிர, அதுவும் வாயால் பேசுவானே தவிர, அவன் தன் செயல்கள் எல்லாவற்றையும் தானேதான் செய்து கொள்ளுகிறான். அவற்றை அவன் கடவுளிடம் விடுவதில்லை. சாப்பிடுவது முதல் குழந்தை உற்பத்தி செய்வதுவரை, தனக்கு ஏற்படும் வியாதியைக் குணப்படுத்திக் கொள்வதுவரை அவன் கடவுளை நம்பி விட்டுவிடுவது கிடையாது. கடவுளை நம்பி கடவுள் நம்பிக்கையோடு வாழ்கிறான் என்றால், கடவுள் நம்பிக்கை இல்லாதவன் செய்கிற காரியம், முயற்சி இவைகளில் அவன் எந்த அளவிற்கு மாற்றம் உள்ளவனாக இருக்கிறான் என்றால் எதிலும் மாற்றம் உள்ளவனாக இருக்கிறான் என்றால் எதிலும் மாற்றம் உள்ளவனாக இல்லை. அவன் செய்கிற காரியங்களையும் முயற்சிகளையும்தான் இவனும் செய்கிறான்.

இந்தக் கடவுள் என்ற கற்பனையானது பச்சை முட்டாளாலே ஏற்பட்டது; பச்சை முட்டாளாலே பின்பற்றப்படுகிறது. சாதாரணமாக ரஷ்யாவில் அனைத்து மக்களும், சைனாவில் உள்ள 40 கோடி மக்கள், இவர்களும் மற்றும் புத்த மதத்தைச் சார்ந்தவர்கள் இப்படி உலக மக்கள் தொகையில் 100 கோடிப் பேருக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது. அவர்கள் என்ன கெட்டு விட்டார்கள்? கடவுள்



நம்பிக்கை இருப்பதாகக் காட்டிக் கொள்ளுவது ஒரு பெருமை என்றே கருதுகிறான். சத்தே இல்லாத சங்கதிதான் கடவுள் உண்டு என்று கூறுவது ஆகும்.

கடவுள் என்றால் என்னவென்று எந்த ஆத்திகன் புரிந்து கொண்டிருக்கிறான்? எவனைக் கேட்டாலும் 'நீ புரிந்து கொள்ள முடியாது' என்பானே தவிர, அவன் என்ன புரிந்து கொண்டிருக் கிறான் என்றால் சைபர்தான்.

லாகூரில் ஒரு ரீடிங்ரூமில் நானும் அண்ணாதுரையும் போன போது ஒரு பிரசங்கம் செய்யச் சொன்னார்கள். நானும் ஒப்புக் கொண்டு பேசினேன். என்ன பேசினேன் என்றால், நாம் அறிவிற்கு மதிப்புக் கொடுக்காததால், சிந்திக்காததால் இழி மக்களாக ஆகிவிட்டோம். இதற்குக் காரணம் நமக்கிருக்கும் கடவுள் நம்பிக்கை மத நம்பிக்கை, புராண நம்பிக்கை இவை களே ஆகும். நம் இழிவு நீங்க வேண்டுமானால் இந்த கடவுள், மதம், சாஸ்திரம், தர்மம், புராணம் இவைகள் யாவும் ஒழிக்கப் பட வேண்டுமென்று பேசிக் கொண்டிருக்கும்போது ஒருவர் குறுக்கே எழுந்து, "உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா? இல்லையா?" என்று கேட்டார்.

உடனே நான் பேப்பர், பேனாவை எடுத்தேன். "நீங்கள் கேட்டது ரொம்ப சரி. எனக்குப் புரியவில்லை. கடவுள் என்றால் என்ன? அதன் குணம் என்ன? அது எப்படிப்பட்டது? என்பதைத் தெளிவாக எழுதிக் கொடுங்கள். அதன்பின் நான் ஒவ்வொன்றாக விளக்கம் கொடுக்கிறேன். அதிலிருந்து நீங்கள் புரிந்து கொள்ளலாம்" என்றேன். கேள்வி கேட்டவர் எதுவும் செய்யாமல் விழித்துக் கொண்டு நின்றார். தலைவர், அவரைப் பார்த்து, "நீயாகப் போய்த் தானே மாட்டிக் கொண்டாய், இப்போது அவர் கேட்கிறாரே எழுதிக் கொடு" என்றார். அதற்கு அவர், "இவர்கள் நமது எதிரிகளின் கையாள்கள்; அதனால்தான் அவர் இப்படிப் பேசுகிறார்" என்று சொன்னார். பிறகு



தலைவர், அவரை உட்காரச் செய்து, அவர் சொன்னார், இப்போது கேள்வி கேட்டத னால் கேட்டவருடைய அறிவை வெளிப்ப டுத்தி விட்டார் என்று சொல்லி என்னை மேலே பேச அனுமதித்தார். கேள்வி கேட்ட வர் ஒரு அய்.சி.எஸ்.காரரின் சகோதரர். அவர் அறிவே இப்படி என்றால் மற்ற பாமர மக்கள் அறிவு எப்படி இருக்கும்?

மக்களுக்கு கடவுள் என்கின்ற நம்பிக்கையானது காட்டுமிராண்டி காலத்தில் இருந்து பலமாக மனதில் வேரூன்றி விட்டது! அதை அகற்றுவது கடினம்தான். என்றாலும் அதை அகற்ற வேண்டுவது மனித வாழ்விற்கு மிக அவசியமானதாகும். கடவுள் என்றால் நம்புவதுதானே தவிர வேறில்லை. கடவுள் நம்பிக்கைக்காரருக்கு ஆங்கிலத்தில் பிலீவர் (Believer) என்றுதான் பெயர். அதாவது நம்பிக்கைகாரர் என்பதுதான். கடவுளை நம்பாதவர் (Non-believer அதாவது நம்பிக்கை இல்லாதவர் என்றுதான் பெயரே தவிர வேறில்லை.

''கடவுளை நம்ப வேண்டும் - கடவுள் புரியாதது - கடவுளைப் புரிந்து கொள்ள முடியாது - அவன் மனத்திற்கு எட்டாதவன் - கண்ணிற்கு எட்டாதவன் - புத்திக்கு எட்டாதவன் - இந்திரியங்களுக்கு எட்டாதவன்'' - இப்படி எல்லாவற்றிற்கும் புரியாதவன், எட்டாதவன் என்றே உருவகப்படுத்தி விட்டு பின் அதை மனிதனைப் போல செய்து வைத்து, இது கடவுள் என்கிறார்களே! ''அரியானை அந்தணர்தம் சிந்தனையானை அனுவை பார்க்கும் தெரியானை'' இப்படியாக அரியானை தெரியானை என்று அடுக்கிக் கொண்டே போகிறான்! ஒரு பண்டம் இல்லை என்று சொல்லுவதற்கு என்னென்ன குணங்கள் உண்டோ அவ்வளவையும் சொல்லி அதுதான் கடவுள் என்கிறான்.

சொல்லுகிறபோது உருவம் இல்லாதவன், பற்று இல்லாதவன், பாசம் இல்லாதவன் என்கிறான்! ஆனால், அதற்கு உருவம், பெண்டாட்டி, பிள்ளை, சோறு, பூசை, நைவேத்தியம் என்று செய்து கொண்டிருக்கிறான்! மக்களிடத்தில் கடவுள் நம்பிக்கை உண்டாகச் செய்ய மனித உருவத்தில் தான் காட்டினான்! உருவம் இல்லாதவனாகக் காட்டிய முஸ்லீமும் மற்றவனும் மனிதனுக்கு உள்ள குணத்தைத்தான் அவனுக்குச் சொன்னான். அவனை அழிக்கிறது - துன்பம் கொடுப்பது - இன்பம் கொடுப்பது அதுதான். இந்த இந்த காரியங்களைச் செய்தால் நரகம் போக வேண்டும்; அவனைக் கும்பிட்டால், வழிபட்டால் உனக்கு சொர்க்கம் உண்டு; இல்லாவிட்டால் இந்த இந்த துன்பம் உன்னை வந்து சேரும் என்கின்றான்.



கடவுளுக்கு உருவம் இல்லை, அது இல்லை, இது இல்லை என்கிறாயே, ஏண்டா

மனிதனாட்டம் உருவம் வைத்திருக்கிறாய் என்றால், முட்டாள்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டாக இப்படிச் செய்தோம் என்கிறான். இன்னொரு பக்கத்தில் சூத்திரனுக்காக கீழ் சாதிக்காரனுக்காக - பாமர மக்களுக்காக - அறிவு இல்லாத மக்களுக்காக மனிதன் மாதிரி உருவம் செய்து வணங்கச் செய்தோம் .- கடவுள் பக்தியை புகுத்தினோம் என்கின்றான். அதற்கு ஏண்டா சோறு. பெண்டாட்டி என்றால், மக்களை கவர்ச்சி செய்வதற்காக அப்படிச் சொன்னோமே தவிர அவை எல்லாம் உண்மை அல்ல என்கிறான்.

மனிதன் உண்மையை அறிந்து கொள்ள முடியாமல் செய்வதற்காகத் தோன்றியவைதான் புராணம், கடவுள், அவதாரம் என்பவைகள் ஆகும்.

புத்தனால் ஏற்பட்ட மாறுதலை ஒழிக்கத்தான் கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டன. புத்த கொள்கையை ஏற்பதே இப்போது ஒரு மதமாகப் போய் விட்டது. அதில் விளைந்தது என்னவென்றால் புராணம்- இதிகாசம் - கோயில் -அவதாரம் - அவதாரக் கதைகள் யாவுமாகும். 2500 வருடங்களுக்குப் பின்தான் இவைகள் யாவும்; ஒருசில அதற்கு முன்னும் தோன்றியிருக்கலாம். புத்தனுக்கு முன் கடவுளுக்கு உருவமே கிடையாது. உருவங்கள் யாவும் அதற்குப்பின் தோற்றுவிக்கப் பட்டவைகளே ஆகும்.

போதுமான அளவிற்கு நாடெங்கும் புத்தக் கொள்கைகள் பரவி விட்டன. அக்கொள்கைகளை சில அரசர்களும் ஆதரித்தார்கள். அவதாரங்கள் ஒன்பதும் புத்தனால் ஏற்பட்ட மாறுபாட்டை ஒழிக்க எழுதப்பட்டவைகளே ஆகும். அந்தக் கொள்கையை வெறுக்க வேண்டும் என்பதற்காக கற்பிக்கப்பட்டவைகளே, பரப்பப்பட்டவைகளே அவதாரக் கதைகள்.

*மச்சாவதாரம்:* வேதத்தை ஒரு ராட்சதன் எடுத்துக் கொண்டு போய் கடலில் ஒளிந்து கொண்டான். அதை மீட்டுக் கொண்டு வர கடவுள் மீனாக அவதாரம் எடுத்தார் என்பது கதை. இதன் உட்பொருள் என்னவென்றால் புத்தக் கொள்கையால் மக்கள் வேதத்தை பகிஷ்கரித்துவிட்டனர்; மீண்டும் அதை மக்களிடையில் புகுத்த செய்யப்பட்ட முயற்சி என்பதே ஆகும்.



நம் மதத்திற்கு வேத மதம் என்றுதான் பெயர். எல்லாம் வேதம், வேத முறைதான். ஹிந்துமதம் என்று ஒரு மதம் இல்லை; அதற்கான முறைகளும் கிடையாது.

1967-ல் இந்த புத்தி இருக்கிறபோது கிறிஸ்து, அந்த மாதிரி எண்ணங்கள் ஞானிகளுக்குத்தான் ஏற்றது, அவர்களுக்கு கடவுள் இல்லை, அவர்கள் அந்த முறையில் நடந்து கொள்ளுவார்கள், அஞ்ஞானிகளுக்குத்தான் கடவுள் என்கிறான்.

இப்படியாக, இந்த எண்ணம் வெகுநாளாக வந்துவிட்டது; நம் மக்களிடம் ஊறிவிட்டது. இதைத் திருத்த வேண்டுமென்றாலும் எதிரிகள் அதை எப்படி எல்லாமோ தடுத்து மக்களை அறிவுபெற முடியாமல் செய்து வருகின்றனர்.

புத்தியைக் கொண்டுதான் சிந்திக்க வேண்டும் - புத்திக்குப் பட்டதைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் - புத்திப்படிதான் நடக்க வேண்டும் - அவர் சொன்னார் - அதில் இப்படி இருக்கிறது இதில் இப்படிக் கூறப்பட்டிருக்கிறது என்று எதையும் ஆராயாமல் செய்யக் கூடாது. புத்தன் என்று சொன்னாலே புத்தி என்றுதான் பொருள். புத்தியைக் கொண்டு சிந்திக்கிறவன் - புத்தியைக் கொண்டு நடப்பவன் ஆனதனால்தான் புத்தன் என்று ஆனான். அவன் உண்மைப் பெயர் சித்தார்த்தன் என்பதாகும். புத்தி என்பது வடமொழிச் சொல், புத்தன் வடமொழி. புத்தியை அடைபவன் என்பதுதான் அதன் பொருள்.

இந்தியா பூராவையும் எடுத்துக் கொண்டால் நாம் தான் இந்த வேலை செய்து வருகிறோம். நாம்தான் பிடிவாதமாக இருக்கிறோம், உழன்று கொண்டிருக்கிறோம், கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோம், மக்களை ஓரளவு பகுத்தறிவாளர்களாக செய்து கொண்டிருக்கிறோம். இந்தச் சிறு பகுத்தறிவும் மாற வேண்டும் என்கின்ற அடிப்படையில்தான் மற்றவர் எல்லாம் தொண்டாற்றிக் கொண்டு வருகின்றனர்.



நமக்கு இருக்கும் இழிவை - முட்டாள்தனத்தை - மூட நம்பிக்கையை ஒழிக்க வேண்டும் என்று சொல்கிற நமக்கு சமாதானம் சொல்கிறானே தவிர, இவைகள் ஒழிய எவனும் பாடுபடுவது கிடையாது என்பதோடு, இவைகளை மீண்டும் நிலை நிறுத்த என்னென்ன செய்ய வேண்டுமோ

அவைகளைத்தான் செய்து கொண்டிருக்கிறான். இவைகளை மாற்ற வேண்டும், மாறியவர்கள் இன்னொருவருக்கு எடுத்துச் சொல்லி அவர்களையும் மாற்ற வேண்டும்.

கடவுள் சொல்கிறார், மதம் சொல்கிறது, சாஸ்திரம் சொல்கிறது என்பதை எல்லாம் குப்பையில் போட்டுவிட்டு நம் அறிவைக் கொண்டு சிந்திக்க வேண்டும். நமது புத்திக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய தன்மையில் உள்ளதை ஏற்றுக் கொள்ள வேண்டும். பெரியவர்கள், ரிஷிகள், முன்னோர்கள் சொன்னார்கள் என்பதற்காக நாம் எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. நம் அறிவு என்ன சொல்கிறது என்று பார்க்க வேண்டும். அறிவுக்கு பூத்துக் கொள்ளவில்லை என்றால் தள்ளிவிட வேண்டும்.

கடவுள் சொன்னார் அக்கறையில்லை, மதம் சொல்கிறது அக்கறையில்லை, சாஸ்திரம் சொல்கிறது அக்கறையில்லை, முன்னோர், பெரியோர் சொன்னது அக்கறையில்லை, தெய்வத் தன்மை உடையவர் சொன்னது அக்கறையில்லை, வெகுபேர் உன்னைத் தவிர மற்ற எல்லோருமே நடக்கிறார்களே, எனக்கு அக்கறையில்லை, வெகுநாட்களாக நடைபெற்று வருகிறது அக்கறையில்லை.

என் அறிவு எது சொல்கிறதோ அதையே நான் ஏற்றுக் கொள்வேன் என்கிற துணிவு ஒவ்வொருவருக்கும் வர வேண்டும்.

புத்தர் என்ன சொன்னார் என்பதையும் நாம் சிந்தித்தே நம் அறிவுக்கும் அது சரி என்று தோன்றிய பின்தான் ஏற்க வேண்டும்.

டில்லியில் என்று நினைக்கிறேன். டாக்டர் அம்பேத்கர் அவர்கள் சமாதியில் நடைபெற்ற கூட்டத்திற்குப் போயிருந்தேன். நான் அங்கு பேசும்போது குறிப்பிட்டேன், நீங்கள் மக்களிடமிருந்து எதை எதை ஒழிக்க வேண்டுமென்று நினைத்



தீர்களோ, புத்தர் எது கூடாது என்று விரும்பினாரோ அதையேதான் செய்து கொண்டு வருகிறீர்கள். உருவ வழிபாடு கூடாது என்று சொல்கிற நீங்களே புத்தனுக்குச் சிலை செய்து கோயில் கட்டி அதற்கு பூ, பழம், ஊதுவத்தி வைத்து புத்தனையே கடவுளாக்கி விட்டீர்கள். இவைகள் யாவும் உங்களிடமிருந்து ஒழிய வேண்டும். புத்தர் உன்

புத்தியைக் கொண்டு சிந்திக்கச் சொன்னாரே ஒழிய, அவரையே கடவுளாக்கச் சொல்லவில்லை என்றேன். இப்படி எதையும் நம் அறிவைக் கொண்டு சிந்திக்க வேண்டும். அப்போதுதான் உண்மையை உணர முடியும்.

*(24.5.1967 அன்று தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டத்தைச் சார்ந்த விடயபுரம் - பூங்குடில் பூங்காவில் தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை பகுத்தறிவு பிரச்சார பயிற்சிப் பள்ளி துவக்க விழாவில் வழங்கிய முழுக் கருத்துரை - "விடுதலை" - 30.5.1967)*

# 53. கடவுள் நம்பிக்கை உண்டாக்கப்பட்ட விதம்

பகுத்தறிவினுடைய குறைவில்தான், அதை நல்லபடி சிந்திக்காததால்தான், நல்ல வண்ணம் பயன்படுத்தாததால்தான் இந்த 1967-லும் நாம் காட்டுமிராண்டிகளாக இருக்கிறோம். அதைப் பயன்படுத்தியவர்கள் விஞ்ஞானத் துறையில் முன்னேறியுள்ளனர். மனிதனுக்கு மனிதன் உள்ள பேதம் என்னவென்று நல்ல வண்ணம் பரிசோதித்துச் சொல்லுவோமானால் அறிவில்தான். பணம், செல்வாக்கு, வலிமை எல்லாம் அதற்கு அடுத்தபடிதான். மனிதனுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் உள்ள பெரிய பேதம் என்னவென்றால் பகுத்தறிவுதான். மற்ற ஜீவன்கள் மனிதனை விட வலிமைமிக்கதாக இருக்கலாம், பெரியனவாக இருக்கலாம்; மனிதன் செய்ய முடியாத அநேக காரியங்களை சாதாரண ஜீவன்கள்கூட செய்கின்றன. அப்படி இருந்தாலுங்கூட, மனிதன் சகல துறைகளிலும் தனக்கு வேண்டிய வசதிகளை தேவைக்கு ஏற்ப செய்து கொள்கிறான், மாற்றிக் கொள்கிறான். மற்ற ஜீவன்கள் அப்படிச் செய்வதில்லை. 1000 வருடங்களுக்குமுன் எப்படி இருந்ததோ அப்படியேதான் இன்றும் இருக்கின்றன.



ஆனால், மனிதனுக்கு நல்ல பகுத்தறிவு இருந்தும் அதனுடைய பலனை, அதற்குரிய சக்திகளை மனிதன் இன்னும் அடையவில்லை. இவற்றை அடைய முடியாமைக்குக் காரணம் அறிவின் பேதமல்ல. பின் என்னவென்றால் அறிவைத் தடை செய்யும்படியான வாய்ப்புகள்தான். அதில் முதலாவது கடவுள்தான். கடவுள், கடவுளைச்

சார்ந்து எழுதப்பட்ட கதைகள், கடவுள், மதம் இரண்டையும் சம்பந்தப்படுத்தி எழுதப்பட்ட ஆதாரங்கள் இவை எல்லாம் சேர்ந்து நாம் பகுத்தறிவைப் பயன்படுத்தி அதனால் ஏற்படும் பயன், சக்திகளை அடைய முடியாமல் தடை செய்துவிட்டன.

முதலாவது கடவுள் என்று ஏன் சொன்னேன் என்றால் கடவுள் என்பது பகுத்தறிவைக் கொண்டு பார்க்கக் கூடாது, அது அறிவிற்கு எட்டாதது, அறிவைக் கொண்டு சிந்திக்காமல் ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்படியே அறிவையே பயன்படுத்தாமல் நம்ப வேண்டுமென்று சொல்வதே பகுத்தறிவைப் பயன்படுத்துவதைத் தடுப்பதாக இல்லையா?

அறிவைக் கொண்டு சிந்திக்க முடியாத நம்பிக்கை மக்களிடையே நிலைபெறச்செய்ய வேண்டுமென்பதற்காக மேலும் வலியுறுத்த வேண்டுமென்று கடவுளோடு நிற்காமல் ஆத்மா, மேல் கீழ் உலகங்கள், வேதசாஸ்திர சம்பிரதாயங்கள், அவைகளுக்காக வேண்டி அதை நிலை நிறுத்த மனிதத் தன்மைக்கு மீறிய சக்திகளை உடைய அதாவது பகுத்தறிவுக்கு எட்டாத மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்திகளை உடைய பாத்திரங்கள், அதற்கும் மேல் இயற்கைக்கும் பகுத்தறிவுக்கும் அனுபவத்திற்கும் சம்பந்தமில்லாத, ஒத்துக் கொள்ள முடியாத நிகழ்ச்சிகள், அதாவது ஆகாயத்தில் ஒரு கோட்டையை கற்பனை செய்து, அதற்கு சுவர் இத்தனை அடி நீளம், அகலம், அதற்கு வாசல் இந்தப் பக்கம், ஜன்னல் இப்படி இருக்கும் என்று அடுக்கிக் கொண்டே போவான். முதலில் ஆகாயத்தில் கோட்டை எப்படி இருக்க முடியும் என்று சிந்திக்க முடியாமல் மேலே அடுக்கிக் கொண்டே போக ஆரம்பித்து விட்டான்.

ஆகாயத்திலிருந்து வழுக்கியவன் எப்படி எந்த பிடியும் இன்றி பாதாளத்திற்கு வருகிறானோ அந்த அளவிற்கு நம் அறிவை சிந்திக்கவிடாமல் ஆக்கிவிட்டான். அதனால்தான் பகுத்தறிவில் பாதாளத்தில் இருக்கிறோம்.



சாதாரணமாக ஒன்று சொல்கிறேன். 4ம் 4ம் எட்டு என்பது கணக்கு. விரலை விட்டுக் கூட்டினால் எட்டுதான் வருகிறது. ஆனால் 4ம் 4ம் 12 என்கிறான். எப்படி என்றால் நான் சொல்லுவதுதான சரி, அதை நம்ப வேண்டும். எப்படி, ஏன் என்று எல்லாம் கேட்கக் கூடாது; 4ம் 4ம் 12, அதை

ஆளுக்கு இரண்டு வீதம் 25 பேருக்கு பிரித்துக் கொடுத்தேன் என்கிறான். 4-ம் 4-ம் 12 என்கிறாய்; அதை 25 பேருக்கு ஆளுக்கு இரண்டு வீதம் பிரித்துக்கொடுத்தேன் என்கிறாயே, ஆளுக்கு இரண்டுவீதம் கொடுத்தால் அய்ம்பது வருமே, நீ எப்படி 12அய் ஆளுக்கு 2 வீதம் 25 பேருக்குக் கொடுப்பாய்? என்றால், உனக்குத் தெரியாது. புரிந்து கொள்ள முடியாது, நம்ப வேண்டும். நம்பினால்தான் முடியும் என்கிறான். இப்படித் தான் கடவுளும், கடவுள் கதைகளும் நம்ப வேண்டும், காரண காரியங்களைப்பற்றிக் கேட்கக் கூடாது.

நம்பிக்கையைத்தான் அடிப்படையாகக் கொள்ள வேண்டுமே தவிர அறிவை அடிப்படையாக வைத்து ஆராயக் கூடாது என்று அவன் தன் மனதிற்குப்பட்டவாறு புளுகித்தள்ளி இருக்கி றான். உலகில் உள்ளவைகள் தோன்றுவதற்கு ஒரு சக்தி இருந்துதானே ஆக வேண்டும் என்று சொன்னான். பின் ஒரு சக்தி இருக்க வேண்டும் என்று சொன்னதை ஒரு மனிதன் இருக்க வேண்டும் என்று ஆக்கிக் கொண்டான். அந்த மனித னும் அப்படிச் செய்தான், இப்படிச் செய்தான், அவனுக்கு பலம் மலையைத் தூக்கும் அளவிற்கு இருந்தது. கடலைத் தாண்டினான் என்று மனித சக்திக்கும் அனுபவத்திற்கும் பொருத்தமற்ற - அனுபவ சாத்தியமற்ற பலவற்றை அதன் மேல் போட்டு நம்பு என்கிறான்.

கடவுளை உண்டாக்கியவன் முட்டாள் அதை வலியுறுத்த கடவுள் ஆத்மா என்ற ஒன்றை உண்டாக்கி இருக்கிறார் என்றான். அந்த ஆத்மாவிற்கு சொன்ன லட்சணமும் கடவுளுக் குச் சொல்லப்பட்ட லட்சணங்கள்தான்! அது கண்ணிற்குத் தெரியாது. சூட்சுமம் என்றான். முதலில் கடவுள் ஒவ்வொரு ஜீவனுக்கும் என்று ஆரம்பித்தான்; பிறகு மனிதனுக்கு மட்டும் தான் என்று சொல்லி விட்டான். கடவுளை, ஆத்மாவை எப்படி உண்டாக்கினானோ அப்படி அந்த ஆத்மாக்கள் அனுபவிக்கும் பலாபலன்களுக்கு ஒரு மேல் உலகத்தை உண்டாக்கிக் கொண்டான். அந்த உலகத் திற்கு பூகோளம், சரித்திரம் கிடையாது. எப்படி என்றால் எல்லாவற்றையும் நம்பு, நம்பு என்று சொல்லி நம்ப வைத்துவிட் டான். அதுவும் இதைக் கடவுள் சொன்னார், ரிஷிகள் சொன்னார்கள், வேதம் சொல்கிறது, சாஸ்திரத்தில் இருக்கிறது, ஆகவே நீ நம்பித் தான் ஆக வேண்டுமென்கிறான்.



ஒரு மனிதன் தன் அறிவைக் கொண்டு தன்னிஷ்டப்படி சிந்தித்தாலே பாவம் தண்டனை வரும் என்று அநேக ஆதாரங்கள் இருக்கின்றன. அதே மாதிரி சிந்திப்பதே பாவம் - சிந்தித்தால் நரகம் கிடைக்கும் என்று சொல்லி விட்டான். அறிவின் தத்துவத்தைச் சொல்லி எவன் வாதாடுகிறானோ அவன் நரகத்திற்குப் போவான் என்று சொல்லிவிட்டான். இப்படி மனிதனை பயப்படுத்தி பயப்படுத்தி இல்லாத ஒன்றை நம்பும்படியாகச் செய்து விட்டான்.

கடவுளை உண்டாக்கியவன் என்னமோ ஒன்று இருக்கும் என்று கடவுளைக் கற்பித்தான். அதன்பின் வந்தவன் மனிதனைப் பயன்படுத்த வேண்டுமென தெரிந்தே ஒரு ஆத்மாவைக் கற்பித்தான். கடவுள் கற்பனைக்கு இன்னொரு சரியான கற்பனை பிசாசுதான்.

பகுத்தறிவுக்கு என்ன தன்மை இருக்கிறதென்றால் ஒரு மனிதன் ஒரு பொருளை நிச்சயம் செய்ய வேண்டுமானால் அதற்கு ஒரு ஃபார்முலா-மூலவழி இருக்க வேண்டும். அந்த ஃபார்முலாவிற்கு ஏற்ற தன்மையில் இருந்தால் அப்பொருளை ஏற்றுக் கொள்ள முடியும். கடவுள் என்று பொருள் ஃபார்முலாவிற்கு எப்படியும் ஒத்து வரவில்லை.

இரும்பு, பித்தளை, தங்கம் இவை மூன்றும் உலோகங்கள் தான். பித்தளையையும், தங்கத்தையும் மெருகு கொடுத்து வைத்தால் இரண்டும் பார்வைக்கு ஒன்றுபோல் தோற்றமளிக்கக் கூடியது ஆகும். எது தங்கம், எது பித்தளை என்று சொல் என்றால் பார்வையால் சொல்வது சற்று சிரமமாயிருக்கும். ஆனால், அதைக் கையில் எடுத்துப் பார்த்ததும் அதன் கனம், பளபளப்பு, மற்ற குணங்களைக் கொண்டு உரசிப் பார்த்து இது தங்கம், இது பித்தளை என்று சொல்லி விடுகிறோம். ஒவ்வொரு வஸ்துவையும் நிர்ணயம் செய்ய வழிமுறைகள் இருக்கின்றன.



கடவுள், ஆத்மா, பிசாசு இவை ஒரு வஸ்துவை நிர்ணயிக்கக் கூடிய தன்மைக்கு ஏற்றதல்ல. சிறிதும் பொருத்தமற்ற வகையில் சொல்லப்படுவதே ஆகும். பகுத்தறிவினால் எப்படி ஒரு பொருளின் தன்மையை - சக்தியை - குணத்தை நிர்ணயிக்க முடியுமோ அதுபோல் இவை நிர்ணயிக்க முடியாத தன்மையில் இருக்கின்றன. இது மரம்

என்றால் இது என்ன மரம்? இது தண்ணீர் என்றால் என்ன தண்ணீர்? என்கிறோம். இப்படி ஒவ்வொரு காரியத்தையும் சிந்தித்து சிந்தித்து ஒரு பொருளை மனிதன் நிர்ணயிக்கிறான். ஆனால், இந்தக் கடவுள், ஆத்மா, பிசாசுகளைப்பற்றி மனிதன் சிந்திப்பதே கிடையாது!

இப்படி பகுத்தறிவைப் பாழாக்கியதன் பயன் மனிதனுடைய ஒழுக்கம், நாணயம், கடமைகளைக் கெடுத்து மனிதனை ஒரு காரியத்திற்கும் பயனற்ற கொழுக்கட்டையாக்கி விட்டது. அதன் காரணமாக மனிதனாகிய நாம் அடையவேண்டியதை அடையா ததோடு பகுத்தறிவின் பயனால் பெறவேண்டிய, அனுபவிக்க வேண்டிய பல வசதிகளைப் பெறாமல், அனுபவிக்காமல் இருக்கின்றோம்.

நல்ல பகுத்தறிவுவாதிகளாக நாம் இருந்தால் நமக்கு துக்கமும் இருக்காது, சந்தோஷம் இருக்காது. இவைகள் பழக்கத்தால் வருவதாகும். அதற்கு என்ன சொல்வார்கள் என்றால் ஞானிகள் மெய்ஞானிகள், இவர்களுக்கு சுகம் துக்கம் கிடையாது என்கி றான். அவர்கள் இரண்டையும் ஒன்றுபோல் கருதக்கூடியவர் கள் என்பான். அவனுக்கு வசவும் ஒன்றுதான், புகழும் ஒன்றுதான். பகுத்தறிவை உடையவன் ஆராயும்போது அவ னும் அப்படித்தான் கருதுகின்றான். ஞானி என்பதே அறிவுடை யவன் என்பதுதான். பகுத்தறிவின் எல்லைக்குப் போகும் வாய்ப்பு நமக்கு இருக்குமானால் நமக்கு சுகதுக்கம் இருக்காது. அந்த வாய்ப்பு நமக்கு இல்லாமல் நமது சமுதாய அமைப்பு தடுத்துவிட்டது.

நாம் எந்த அளவிற்கு பகுத்தறிவைப்பற்றி பேசுகிறோம் என்றால் சமுதாயத் துறையில் - வாழ்க்கைத் துறையில் - கடவுள் மத சாஸ்திர துறையில் எந்த அளவிற்கு மடையர்களாக இருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டவே பயன் படுத்துகிறோம்.

ஜாதி காரணமாகவும், பிறப்பு காரணமாக வும், மதம் சாஸ்திர தர்மம் காரணமாகவும், நாம் எவ்வளவு இழி மக்களாக இருக்கிறோம் - எந்தெந்தத் துறைகளில் பிற்படுத்தப்பட்டி ருக்கிறோம் என்பவைகளை அறிந்து. அதன் காரணங்களைத் தெரிந்து அதைப் போக்கத் தான் நாம் நம் பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.



உலக மக்கள் பூராவிற்கும் பகுத்தறிவைக் கொண்டு செல்லக் கூடிய வாய்ப்பும் வசதியும் கிடைத்திருக்கிறது என்றாலும் நம் நாட்டிற்கு அது கிடைக்கவில்லை; அது கிடைக்க எவரும் பாடுபடவுமில்லை.

பகுத்தறிவை உலக வாழ்க்கையில் மக்களோடு மக்களாக இருக்கும்படியாய் அமைத்துக் கொள்ள வேண்டும். நம் தந்தை யோடு பிறந்தவர்கள் இருவர். ஒருவர் ஆண், மற்றொருவர் பெண், அந்தப் பெண் நமக்கு அத்தையாகிறாள். அவள் மகளைக் கட்டிக் கொள்ள உரிமை உண்டு. ஆனால், தந்தை யோடு பிறந்த ஆண் நமக்கு சிறிய தந்தையாகிறார். அவர் பெண்ணைக் கட்ட உரிமை கிடையாது. அவள் சகோதரி முறையாகிறாள். இது இந்நாட்டு வழக்கு. நான் பகுத்தறிவுவாதி. பெண் என்றால் எல்லா பெண்ணும் ஒன்றுதான். நான் சிற்றப் பன் மகளைக் கட்டிக் கொள்கிறேன் என்றால் அது அறிவுப்படி சரி; ஆனால் வழக்கப்படி அது குற்றமாகக் கருதப்படுகிறது. எனவேதான் பகுத்தறிவுவாதி உலகத்தோடு ஒட்டியும் பழக வேண்டும். எல்லோரும் வேட்டி கட்டிக் கொண்டிருக்கும்போது நாம் மட்டும் பகுத்தறிவுவாதி என்று எதையும் அணியாமல் இருக்க முடியுமா? நாட்டு மக்களோடு ஒட்டிப் பழக வேண்டும்.

எது எது தவறு என்று கருதுகிறோமோ, எது எது நம் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறதோ, எது எது நம் அறிவைப் பாழ்படுத்துவதாக இருக்கிறதோ, எது எது நம் சிந்தனைக்கு, அறிவிற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறதோ அவற்றை எல்லாம் நாம் துணிந்து எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பகுத்தறிவிற்கு மாறாக கேடாக வளர்ந்தன எல்லாம் 2500 ஆண்டுகளுக்கு முன் இருந்துதான். அதற்குமுன் புத்தர் மக்களிடையே பகுத்தறிவை வளர்த்திருந்தார். எந்தக் காரியத்தைச் செய்வதானாலும் ஏன்? எதற்காக? எப்படி? என்ற வினாக்களைப் போட்டு சிந்தித்துச் செய் என்று மக்களைத் தன் அறிவைக் கொண்டு சிந்திக்கச் செய்திருந்தார். பிறகுதான் பார்ப்பனர்கள் அதை ஒழித்து மனிதன் சிந்திப்பது பாவம் என்பதாகச் சொல்லி மக்களை மடையர்கள், காட்டுமி ராண்டிகள் ஆக்கிவிட்டான்.



அதன்பின் இன்று நாம்தான் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்து வருகின்றோம். பகுத்தறிவு என்பது இரு பக்கமும் முனை உள்ள

ஆயுதம் போன்றதாகும். அதை எந்தப் பக்கம் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். ஆனால், நேர்மையாகப் பயன்படுத்த வேண்டும். நமது பகுத்தறிவு இயக்கத்தினால் ஒன்றுமே நடைபெறவில்லை என்று எவரும் சொல்ல முடியாது. நாம் நினைத்த அளவு காரியங்கள் நடைபெறவில்லை என்பது உண்மைதான்.

மற்ற நாடுகளில் எல்லாம் பகுத்தறிவு நாளுக்குநாள் வளர்ந்து கொண்டு போகிறதென்றால் அவனெல்லாம் நம்மைப்போல் எதற்கெடுத்தாலும் கடவுளைக் கட்டிக் கொண்டு மாரடிப்பதில்லை. அவன் சம்பிரதாயத்திற்காக சடங்கிற்காகத்தான் கடவுளை வைத்துக் கொண்டிருக்கிறானே தவிர, கடவுளைத் தொழுகிறானே தவிர, நம்மைப்போல் மனித வாழ்க்கையோடு கடவுள் பின்னிப் பிணைந்தது என்று கருதவில்லை. நம்மைப் போல் மனித வாழ்க்கையில் கடவுள் குறுக்கிடுவதில்லை. இந்த 50 ஆண்டுகளாக கடவுள் இல்லை என்கின்ற பிரச்சாரமானது எல்லா நாடுகளிலும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. பல நாடுகளின் ஆட்சியும் அந்த அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன.

நமது அரசாங்கத்தின் திட்டம், கொள்கை சமதர்மம், இதைக் கொண்டு வரும்போது அது கடவுள் இல்லை என்ற கொள்கைக்காக கொண்டுவரப்படவில்லை என்றாலும், சமதர்மம் என்பது அந்த (கடவுள் இல்லை என்ற) அடிப்படையில் அமைந்துவிட்டது. பேதத்தை ஏற்படுத்தியதே கடவுள் என்று கருதுகின்ற நாம், அந்த பேதத்தை ஒழித்து சமதர்மம் கொண்டு வர வேண்டுமென்று முற்பட்டால் அது கடவுளை ஒழிப்பதாகத்தானே முடியும் - அர்த்தமாகும்.

மனிதனிடமிருக்கின்ற பேதங்களை நிலைநிறுத்தக்கூடிய மதம், கடவுள், ஜாதி, சாஸ்திரம், தர்மம், புராணம், இதிகாசம் இவை எல்லாம் ஒத்துக்கொண்டால் சமதர்மத்தைக் கொண்டு வர முடியாதே! இவற்றையெல்லாம் ஒழித்துக் கட்டினால்தானே உண்மையான சமதர்மத்தைக் கொண்டுவர முடியும். இந்த சமதர்மக் கொள்கையைக் கொண்டுவர முயன்றதால்தானே இதற்கு முன் இருந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டது! அந்த ஆட்சி கவிழ்வதற்கு வேறு என்ன காரணம்?



இனியும் மனிதனின் அறிவை அடக்கிவிட முடியும் என்று கருதுவது முட்டாள்தனமே

ஆகும். இனி மனிதன் அறிவை அடக்க எவராலும் முடியாது. பகுத்தறிவு வளர்ந்து கொண்டே போகிறது; அதற்கு எல்லையோ முடிவோ கிடையாது. அது வளர வேண்டும் என்பதற்காகத்தான் நாம் பணியாற்றுகிறோம். எதிரிகளைவிட நமக்கு இருக்கிற பெரிய இழப்பு (கேடு) என்னவென்றால் அவன் எப்படிப்பட்ட அயோக்கியத்தனமும் செய்யலாம்; எவ்வளவு பெரிய பொய்களையும் சாதாரணமாகப் பயன்படுத்தலாம்; ஒழுக்கம், நாணயம் இவற்றைபற்றி இலட்சியம் செய்ய வேண்டியதில்லை.

ஆனால், நாம் - பகுத்தறிவாளர்கள், பிரசாரகர்கள் நேர்மையானவர்களாக, ஒழுக்கமானவர்களாக, நாணயமுள்ளவர்களாக இருப்பதோடு, உண்மைகளையே எடுத்துச் சொல்பவர்களாகவும் இருக்க வேண்டும். அதோடு சுயநல உணர்ச்சி என்பது சிறிதும் இல்லாதவர்களாகவும் இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு சிறிது சுயநல உணர்ச்சி இருந்தாலும் நம்மை மக்கள் மதிக்க மாட்டார்கள். எந்த உணர்வும் இல்லாமல் நாம் உண்மையை எடுத்து பிரச்சாரம் செய்து வருவதால்தான் மக்கள் நம்மை மதிக்கிறார்கள். நம் பேச்சுக்கு செவி சாய்க்கிறார்கள். நமது நாட்டிலுள்ள மற்ற இயக்கங்கள், கட்சிகள்பற்றி பொது மேடைகளில் குற்றம் குறைகள் கூறி வெளுத்து வாங்குகிறார்களல்லவா! சுயமரியாதை இயக்கத்தையாவது யாராவது குற்றம் சொல்லி இருக்கிறார்களா? என்னைக் குறை கூறி இருக்கலாம் - நம் கழகத்திலுள்ள மற்றவர்களைப்பற்றி குற்றம் கூறி இருக்கலாம். ஆனால், நம் இயக்கத்தையோ, அதன் கொள்கையையோ தவறு என்று எவரும் சொல்ல முடியாது. இந்த இயக்கத்தை வைத்துக் கொண்டு நாம் சுயநலத்தை அனுபவிப்பது கிடையாது. பகுத்தறிவு இயக்கத்தார் என்று சொன்னால் மக்கள் மதிக்கத் தக்கவகையில் நடந்து கொள்பவர்களாக இருக்க வேண்டும்.



பகுத்தறிவின் பயனைப்பற்றி நான் உங்களுக்கு அதிகம் விளக்க வேண்டிய தேவையில்லை. தினசரி அதன் அதிசய அற்புதங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மேல்நாட்டார்கள் அதன் துணையால்தான் சந்திர மண்டலத்திற்குப் போகும் அளவிற்கு வந்திருக்கின்றனர். இப்படிப்பட்ட சிறப்பும் அதிசய அற்புதமும் கொடுக்கின்ற பகுத்தறிவை நம் மக்கள் பயன்படுத்த முன் வர வேண்டு

மென்பதுதான் நமது ஆசை. அதற்காகவே நாம் பாடுபடுகிறோம். நீங்களும் மக்களை பகுத்தறிவுவாதிகளாக்கப் பாடுபட வேண்டும். அதற்காக அமைக்கப்பட்டதுதான் இந்த பயிற்சி.

*(30.5.1967 அன்று விடயபுரம் பயிற்சிப் பள்ளியில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரை - 'விடுதலை' - 7.6.1967)*

# 54. மனிதனே சிந்தித்துப் பார்!

கடவுள் இருக்கிறதோ இல்லையோ என்பது ஒரு புறமிருந்தாலும், கடவுளை உருவாக்கிக் கொண்ட மக்களும், தோத்திரம் செய்யும் மக்களும் காட்டுமிராண்டிகளாய் இருக்கிறார்களா இல்லையா என்பதை அறிவுள்ள மக்கள் சிந்திக்க வேண்டுமென்றே விரும்புகின்றேன்.

இதில் வெறும் கோபத்தைக் காட்டுவதில் பயனில்லை. மனிதன் காட்டுமிராண்டி பருவத்திலிருந்து மாற்றமடைந்து அவனுக்குள்ள அறிவுத் திறனுக்கேற்ற மனிதத் தன்மையுடையவனாக ஆக வேண்டும்.

உலகமோ, அதிலுள்ள தாவரங்களோ, ஜீவஜந்துக்களோ, மனிதனோ தோன்றிய காலம் நமக்குத் தெரியாது. உத்தேசத்தால் ஏதோ சொல்லுகிறோம். அது எப்படியிருந்தாலும் நமக்குக் கவலையில்லை. ஆனால், மனிதன் தன் அறிவுத் திறனுக்கு ஏற்றபடி வாழ்வில் வளர்ச்சி பெற்றிருக்கிறானா என்பதுதான் மனிதன் சிந்திக்கத் தக்கதாகும்.

கல்லாயுத காலத்திலிருந்து இரும்பாயுத காலத்திற்கு வந்ததும்,

சக்கிமுக்கிக்கல் நெருப்புக் காலத்திலிருந்து மின்சார நெருப்புக் காலத்திற்கு வந்திருப்பதும்,

கட்டைவண்டிப் பிரயாண காலத்திலிருந்து ஆகாய விமான பிரயாண காலத்திற்கு வந்திருப்பது முதலான எத்தனையோ விஷயங்களில் மாறுதலும், தெளிவும் அடைந்திருப்பதை எந்த மனிதனும் மறுக்க முடியாது.



பிறக்கும் மக்களில் 100-க்கு 75 பேர், 90 பேர் செத்துக் கொண்டிருந்த மக்கள் இன்று பிறந்த மக்களில் 100-க்கு 75 பேர் சாகாமல் இந்த 500 வருஷத்தில் ஒன்றுக்கு இரண்டாக

உலகில் மக்கள் எண்ணிக்கை பெருகும்படி சாவு அளவையே மட்டுப்படுத்தியிருப்பதும் அறிவினால் என்றே அறிகிறோம்.

கடவுள் நம்பிக்கைக்காரர்கள் இவற்றிற்கெல்லாம் என்ன சமாதானம் சொல்ல முடியும்?

இந்த மாறுதல்கள் கடவுளினாலா? மனிதனுடைய அறிவாற்றலினாலா என்பதை கடவுள் நம்பிக்கைக்காரர்கள் சிந்திக்க வேண்டும்.

1. முதலாவதாக கடவுள் எப்படி வந்தது?

2. கடவுளுக்கு உருவம் எப்படி வந்தது?

3. அதுவும் மனித உருவமாக இருக்க அவசியம் என்ன?

4. பல கடவுள்கள் எப்படி ஏற்பட்டன?

5. அந்த பல கடவுள்களுக்கும் பெண்டுபிள்ளைகள், காதலிகள் எப்படி ஏற்பட்டன?

6. பிறகு பெண்டு பிள்ளை, காதலிகளும் எப்படி கடவுள்கள் ஆனார்கள்?

7. இவற்றிற்கெல்லாம் வீடு, நகை, துணிமணி, சாப்பாடு முதலியவை எப்படி ஏற்பட்டன?

8. இவை மனிதர்களுடன், மற்ற ஜீவன்களுடன் யுத்தம் செய்ய வேண்டிய அவசியமும் அவர்களைக் கொலை செய்ய வேண்டிய அவசியமும் எப்படி வந்தது?

9. இக்கடவுள்களில் ஒன்றுக்கொன்று அதிக முக்கியத்துவம் உடையவைகளாக எப்படி ஆயிற்று?

10. இவை ஒருபுறம் இருக்க கிணறு, குட்டை, குளம், ஆறு முதலியவைகளுக்கு கடவுள் சக்தி எப்படி வந்தது?

11. இக்கிணறு, குட்டை, குளம், ஆறு முதலியவைகளிலும் கடவுள் சக்தியும் அவற்றுள் உயர்வு - தாழ்வும் எப்படி ஏற்பட்டன?



12. இவற்றிற்காக மனிதன் செலவு செய்யும் நேரம், பணம், முயற்சி ஆகியவை எவ்வளவு?

13. உலகில் துணி இல்லாமல், காய்கறி, ஜந்துக்கள் ஆகியவற்றை பச்சையாக சாப்பிட்டுக் கொண்டு, சேர்க்கையில் தாய்,

மகள், அக்காள், தங்கச்சி என்ற பேதம் பாராமல் வாழ்ந்து வந்த ஆரியர்களையும் உன்னையும் பார்! இன்று அவர்கள் அறிவில் அடைந்திருக்கும் முன்னேற்றம் எவ்வளவு? உன் நிலைமை எப்படி இருக்கிறது?

மனிதனே சிந்தித்துப் பார்!

*(10.10.1967 "விடுதலை" நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)*

# 55. கடவுள் நெறி

கடவுள் பைத்தியம் (கடவுள் உண்டு என்ற அறியாமை) நீங்கினால் ஒழிய மனித சமுதாயம் அடைய வேண்டிய முன்னேற்றத்தை அடைய முடியாது.

கடவுள் என்பதாக ஒன்று இல்லை. யாவும் மனிதனாலும் இயற்கை நியதியாலும் ஆக்கப்படுவதும், ஆனவையும் தானே யொழிய கடவுளால் ஆவது, ஆனது என்பதாக எதுவுமே இல்லை.

மழை ஏன் வருகிறது? வெள்ளம் ஏன் வருகிறது? இடி ஏன் இடிக்கிறது? காற்று, புயல் ஏன் அடிக்கிறது? பூகம்பம் ஏன் ஏற்படுகிறது? எரிமலை ஏன் எரிந்து நெருப்புக்கூழ் வழிகிறது? திடீரென்று ஏன் மலைகள் தோன்றுகின்றன? திடீரென்று ஏன் தீவுகள் தோன்றுகின்றன? கப்பல் ஏன் கவிழுகிறது? ஆகாயக் கப்பல் ஏன் ஓடாமல் கீழே விழுந்து நாசமாகிறது? இரயில்கள் ஏன் கவிழ்கின்றன? பஸ்கள் ஏன் மோதிக் கொள்கின்றன? பிரயாணம் செய்யும் வாகனங்கள் ஏன் அபாயத்திற்குள்ளாகின் றன? அதனால் ஏன் மக்கள் சாகின்றார்கள்? கொடிய விஷ நோய்கள் ஏன் ஏற்படுகின்றன? மக்கள் ஏன் 100 வயதுக்குமுன் சாகிறார்கள்?



மக்கள் ஏன் பிறக்கிறார்கள்? நம் நாட்டில் மக்கள் 60, 70, 75 வயது ஏன் வாழ்கிறார் கள்? ஒரு நாட்டில் மக்கள் 23 ஆண்டு 32 ஆண்டு 47 ஆண்டு ஏன் வாழ்கிறார்கள்? ஒரு காலத்தில் 23 ஆண்டு வாழ்ந்த மக்கள் மற்றொரு காலத்தில் 50 ஆண்டு ஏன் வாழ்கி றார்கள்? நாட்டு வைத்தியம் உள்ள காலத் தில் அதாவது ஆங்கில (இங்கிலீஷ்)

வைத்தியம் இல்லாத காலத்தில் சராசரி 15 வயது வீதம் வாழ்ந்த மக்கள் ஆங்கில மேல்நாட்டு வைத்தியம் ஏற்பட்ட பிறகு மனிதர்கள் சராசரி 70 வயது 75 வயது எப்படி வாழ்கிறார்கள்?

கடவுள் நம்பிக்கை, பிரார்த்தனை, சாந்தி, மந்திரம், நீர் மந்திரித்தல், விபூதி மந்திரித்தல், அர்ச்சனை முதலியவைகளில் மாத்திரமே நம்பிக்கை இருந்த காலத்தில் - கி.பி. முதல் நூற்றாண்டில் - சராசரி 10 வயதே வாழ்ந்து வந்த மனிதன் இன்று அவற்றையே நம்பாமல் மேல்நாட்டு வைத்தியம் செய்து கொள்ளுபவன் 75 வயது வரை எப்படி வாழ்கிறான்?

பிள்ளை பெறும் வாய் சின்னதாக இருப்பதாலும், வயிற்றில் உள்ள குழந்தைகள் குறுக்கே வளர்ந்துவிட்டதாலும், பிறப்ப தடைப்பட்டு செத்துப் போன தாயும், பிள்ளையும் அதிகமிருந் தது. ஆனால், தற்போது பிள்ளை பெறும் துவாரத்தைக் கிழித்துப் பெரிதாக்கியும் வயிற்றைக் கிழித்தும் எடுத்த பிள்ளை கள் உயிரோடு பிறந்து நன்றாய் எப்படி வளர்கிறது? இவற்றிற் கெல்லாம் விஞ்ஞான முறையில் (அறிவு சிந்தனை முறையில்) காரணங்கள் இருக்கின்றனவா, இல்லையா?

இந்த விவரங்களை சரிவர அறியாத மக்கள்தானே கடவுள் இருக்கிறது என்று கருதுகிறார்கள்!

கடவுள் நம்பிக்கைக்காரர்கள் கடவுளுக்கு என்று என்ன வேலை கொடுக்கிறார்கள்? எல்லா மக்களும் தங்களுக்கு மறைக் கப்பட வேண்டிய அவயவம் (உறுப்பு) இருக்கிறது என்று அறிந்தே ஆடை அணிந்து மறைத்துக் கொண்டு நடக்கிறார் களே, அது போலவே கடவுள் இல்லை, கடவுளால் தங்களுக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை, எதுவும் இல்லை என்று அறிந்தும்கூட பழக்கம் காரணமாக நம்புவதாகக் காட்டிக் கொண்டு எல்லாக் காரியத்தையும் தானே செய்து கொள்ள வேண்டியது என்று உறுதியாய்க் கருதியே நடந்து கொள்கிறார்கள்.



இதன் பயனாய் வளர்ச்சியைக் கெடுத்துக் கொள்கிறான்.

கடவுளுக்கு உருவம் கற்பித்தவனும், கட வுளை மனிதன் போல சிருஷ்டித்தவனும், கடவுளுக்கு பிறப்பு, இறப்பு, மனிதன் போன்ற குணம், பெண்டு, பிள்ளை, சோறு, துணி, வசிக்க வீடு என்று கற்பித்தவன்

எவனும் தன்னைக் கடவுள் நம்பிக்கைகாரன் என்றுதான் நினைத்துக் கொள்கிறானேயொழிய, இவை கடவுள் நம்பிக்கைக்கு மாறான செய்கையென்று அவன் கருதுவதில்லை.

தனக்கோ தன் பிள்ளைகுட்டி, தாய் தந்தைக்கோ சிறுநோய் வந்தாலும் உடனே டாக்டரை அணுகுகிறவன் எவனும் தனக்கு கடவுள் நம்பிக்கை இல்லையென்றும் கருதுவதில்லை. ''அது வேறு விஷயம், இது வேறு விஷயம்'' என்றே நினைக்கிறான்; அல்லது டாக்டரையும் நம்புகிறான், மருந்தையும் நம்புகிறான், கடவுளையும் நம்புகிறான்; அதுவும் பல கடவுள்களில் தனக்கு வேண்டிய கடவுளையே நம்புகிறான்!

மற்றும் கடவுள் நம்பிக்கைக்காரன் கோயில்களை நம்புகிறான். அவற்றிலும் ஒரே கடவுள் உள்ள கோயில்களில் ஒரு ஊர் கோயிலை பெரிதாகவும், மற்ற ஊர் கோயிலை சிறிதாகவும் மதிக்கிறான். அதுபோலவே ஒரு ஊர் குளத்தைப் பெரிதாகவும் ஒரு ஊர் குளத்தை மட்டமாகவும் மதிக்கிறான். இந்த பேதம் சமுத்திரத்தில்கூட காட்டுகிறான். ஒரு ஊர் சமுத்திரம் பெரிதாகவும் (விசேஷமாகவும்) மற்ற ஊர் சமுத்திரம் சாதாரணமானதாகவும் மதிக்கிறான்.

150 கோடி மக்களால் மதிக்கப்படும் ஏசுகிறிஸ்து, ''கோயில்கள் எல்லாம் கள்ளர் குகை; திருட்டுப் பசங்கள் வசிக்கும் இடம்'' என்று சொன்னார்! அது மாத்திரமல்ல, சுமார் 40 கோடி மக்களால் மகாத்மா என்று கருதப்படும் காந்தி, ''கோயில்கள் விபசாரிகள் விடுதி, குச்சுக் ்ரிகள் வீடு'' என்று சொன்னார்! கடவுள் நம்பிக்கைக்காரர்கல் ல் யார் இதை நம்புகிறார்கள். அனுசரிக்கிறார்கள்?

கக்கூசு எடுப்பவர்களுக்கும் ஜலதாரை அள்ளிக் கொட்டுகிறவர்களுக்கும் எப்படி நாற்றம் தெரியாதோ அதுபோல கடவுள் நம்பிக்கைக்காரர்களுக்கு அறிவு விளக்கமே இருக்க முடியாது என்றுதான் சொல்ல வேண்டியதாய் இருக்கிறது.



இதனால் 300 கோடி மக்கள் வாழும் உலகம் வளர்ச்சி கெட்டு எவ்வளவு காட்டுமிராண்டித்தனமாய் இருக்கிறது?

50 கோடி மக்கள் வாழும் நமது ''இந்தியா'''வை எடுத்துக் கொள்ளுங்கள். எத்தனை சாமி, எத்தனை கோயில், எத்தனை தீர்த்தம்,

எத்தனை சொத்து, எத்தனை சாமியார், எத்தனை எத்தனை பக்தர் முட்டாள்கள்!

எவ்வளவு சொத்து பணவிரயம் - நேர விரயம் - முயற்சி விரயம்?

படித்தவர்களில் எத்தனை அறிவிலிகள்! புலவர்களில் எத்தனை முட்டாள்கள்! இலக்கியங்களில் எத்தனை அழுக்கு ஆபாசம் இருந்து வருகின்றன!

இதற்கு பரிகாரம் புலவர்கள் எல்லாம் ஒன்றுகூடி ஒரேயடியாக "கடவுள் இருக்கிறது என்பது முட்டாள்தனம்; இனிமேல் புலவர்கள் எல்லாம் பகுத்தறிவுவாதிகள் ("நாத்திகர்கள்") என்று பிள்ளைகளுக்கு பிரச்சாரங்களில், காலட்சேபங்களில் பகுத்தறிவு பற்றியே பேசுவது; பகுத்தறிவுக்கு ஒவ்வாத இலக்கியங்களை இகழ்வது" என்று உறுதி செய்து கொண்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். எவ்வளவு பகுத்தறிவுவாதிகளாய், நாத்திகர்களாய் இருந்தாலும் பார்ப்பானை உள்ளே விடக்கூடாது, சேர்க்கக்கூடாது.

இப்படிச் செய்யாவிட்டால் இனி எந்தப் புலவருக்கும் மதிப்பு இருக்காது! கண்டிப்பாய் மதிப்பு இருக்காது!! இலக்கியங்கள் கொளுத்தப்படும்!!!

*(20.10.1967 "விடுதலை" நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)*

# 56. கடவுள் என்பது ஒரு பொருளா?

அறிஞர்களே, நீங்களும் நாங்களும் இன்று 1968 ஆம் ஆண்டில் பகுத்தறிவு விஞ்ஞான காலத்தில் வசிக்கிறோம். அதன் பயனாய் நான் கடவுள் இல்லை என்றும், அது அறிவில்லாத காலத்து முட்டாள் மனிதனது கற்பனை என்றும் சொல்லுகின்றேன். இந்தப்படி நான் 50, 60 வருஷங்களாக சொல்லி வருகின்றேன்.



நான் சொல்வது ஒருபுறம் இருந்தாலும், கடவுளைப்பற்றி மக்கள் அறிய நேர்ந்தது சுமார் "3000 ஆண்டு"க்கு மேல் "5000 ஆண்டுக்குள்" இருக்கலாம் என்று நான்

கருதுகிறேன். நீங்களும் இதில் ஒரு 1000 அல்லது 500 ஆண்டுகள் வித்தியாசமாய் காணலாம். எப்படி ஆனாலும் அந்த 3000 ஆண்டுக்கு மேற்பட்ட காலம் பொதுவாக மக்கள் பக்குவப்படாத (காட்டுமிராண்டி) காலம் என்பதை நீங்கள் மறுக்க முடியாது.

அந்தக் காலத்தில் மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட, நடந்து கொண்டு வந்த, பயன்படுத்திக்கொண்டு வந்த, எண்ணிக் கொண்டு, நம்பிக்கொண்டு வந்தவைகளில் இன்று மனிதன் (உணவு, உறக்கம், கலவி என்பதைத் தவிர, கடவுள் என்பதைத் தவிர) வேறு எதைப் பின்பற்றி வருகின்றான்? பயன்படுத்தி அனுபவித்துக்கொண்டு வருகின்றான்? என்று சிந்திப்போமேயானால் அவையெல்லாம் மாற்றப்பட வேண்டிய - கைவிடப்பட வேண்டிய - மறுக்கப்பட வேண்டிய காரியங்களாகவே இருந்து வருகின்றன.

சாதாரணமாக மனதனுக்கு உடை, உணவு, உறையுள், ஊர்தி ஆகிய இன்றியமையாத இந்நான்கில் காலத்துக்குக் காலம் மாறுதல் அடைந்துகொண்டே வருகிறோம். இவற்றுள் எதற்கும் நம்மை யாரும் கட்டாயப்படுத்தாமலே நாமே மாற்றிக்கொண்டு வருகின்றோம். இந்த மாற்றமும் இதோடு நிற்கப் போவதில்லை. மேலும் நாளுக்கு நாள், ஆண்டுகளுக்கு ஆண்டு மாறிக் கொண்டே போக வேண்டியவைகளாகவும் இருந்து வருகின்றன.

இந்த நிலையில் மனிதன் கடவுளைப்பற்றிய கருத்தில் மாத்திரம் சிந்தனை அற்ற மூடனாக, முழு மூடனாகவே இருந்து வருகின்றான் என்றால் காரணம் என்ன?

ஒரு மருந்து வியாபாரி ஒரு மருந்தை ஒரு டாக்டரிடம் (வைத்தியனிடம்) கொடுத்து இது ‘‘இன்ன வியாதியைக் குணப்படுத்தும், வாங்கிப் பயன்படுத்துங்கள்’’ என்றால் அந்த டாக்டர் வியாபாரி பேச்சைக் கேட்டு உடனே வாங்கி நோயாளிகளுக்குக் கொடுப்பாரா? எந்த டாக்டருமே கொடுக்கமாட்டார். மருந்தை வாங்கினவுடன், இதில் என்ன என்ன வஸ்து எவ்வளவு எவ்வளவு சேர்ந்திருக்குகிறது என்றுதான் கேட்பார். அதற்கு வியாபாரி, டாக்டரைப் பார்த்து ‘‘அதெல்லாம் கேட்கக்கூடாது; அதைப் புரிந்துகொள்ள உனக்கு



சக்தியும் கிடையாது; அந்த மருந்தும் அதைப்பற்றி எவனும் புரிந்துகொள்ள முடியாத தன்மையுடையது; ஆதலால் (நான் சொல்லுவதை) நம்பி வாங்கி காயலாக்காரனுக்குக் கொடு'' என்றால், உலகில் எந்த டாக்டர் அந்த மருந்தை வாங்கி காயலாக்காரனுக்குக் கொடுப்பார்?

ஒரு மருந்து என்றால், அதற்கு ஒரு முறை இருக்க வேண்டும்; அதில் சேர்க்கப்பட்ட பண்டங்களுக்கு தெளிவு வேண்டும்; அப்பண்டங்களின் தன்மைக்கும் ஆதாரம் வேண்டும். இதை ஆங்கிலத்தில் ஃபார்முலா (Formula) என்று சொல்லுவார்கள்.

அதாவது எந்த வஸ்துவானாலும் வஸ்து என்று சொல்லப்பட்டால் அதற்கு மேற்கண்டபடியான ஒரு (செய்)முறை (Formula) கூட்டுமுறை வேண்டும்; அது இயற்கைப் பொருளானாலும் செயற்கைப் பொருளானாலும் அதற்கு முறை இருந்தே தீரும்.

ஆகையால் கடவுள் என்பது ஒரு பொருள் அல்லது சக்தி என்று சொல்லப்பட்டாலும் அது பெயர்ச் சொல்லே ஒழிய வினைச்சொல் அல்ல. பெயர்ச் சொல்லான பொருளுக்கு - வஸ்துவுக்கு - வஸ்து நிச்சயத்திற்கு கண்டிப்பாக செய்முறை கூட்டுப்பொருள் தன்மை ''ஃபார்முலா'' இருந்தே ஆகவேண்டும். அது இல்லாதது வஸ்துவே ஆகமாட்டாது. ஆதலால் கடவுளைப்பற்றிப் பேசுபவர்கள் முட்டாள்களானால், அவர்களிடம் இந்த விளக்கம் செல்லாது; அறிவுள்ளவனானால் இந்த விளக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டியவனாகத்தானே இருக்க முடியும்?

இங்ஙனமிருக்க, ''கடவுள் என்றால் விளக்கம் கேட்க வேண்டாம்''

''கடவுள் என்றால் ஆராய்ச்சி செய்ய வேண்டாம்'',
''அது உனக்குப் புரியக்கூடியதல்ல'',
''அது எவனாலும் அறிந்துகொள்ள முடியாது'',



'அது மனோ வாக்கு காயங்களுக்கு எட்டாத பொருள்'',
''கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று நம்பிக்கொள்ள வேண்டியதுதான் கடவுள் என்பதற்கு விளக்கம்''

என்று சொல்லப்படுவதானால் இந்த முறைப்படி (ஃபார்முலாப்படி) கடவுளை நம்புகிறவன் அவன் எவ்வளவு அறிவு

மேதாவி ஆனாலும் அவன் மனிதக்கூட்டில் சேர்க்கப்பட வேண்டியவனாவானா?

அன்றியும் எதற்காக சர்வசக்தி, சர்வவியாகபம், சர்வக்ஞம் ஆன ஒரு பொருளுக்கு இந்த மாதிரியான நிபந்தனை இருக்க வேண்டும்? அதுவும் சுமார் 5000, 3000 ஆண்டுகளுக்கு முந்திய காலமான காட்டுமிராண்டி (மனிதப் பக்குவமற்ற) காலமில்லாத இந்த இன்றைய காலங்களில் யாராலாவது இப்படிப்பட்ட ஒரு வஸ்துவைக் கண்டுபிடிக்க முடியுமா என்று கேட்கிறேன்.

''கடவுளை நம்பவேண்டும்'' என்பதற்கும், ''மந்திரம் ஜெபித்தால் நோய் நீங்கும்'' என்பதற்கும், ''பிரார்த்தனை செய்தால் தேவையான காரியம் கைகூடும்'' என்பதற்கும் என்ன வித்தியாசம் கூற முடியும்?''

''சர்வசக்தி உள்ள ஒரு பொருள் என்பது பகுத்தறிவுள்ள ஒரு மனிதனால் புரிந்துகொள்ள முடியாததாய் இருக்க வேண்டிய அவசியமென்ன?'' என்பதைப்பற்றி மனிதன் சிந்திக்க வேண்டாமா? சர்வ சக்தி உள்ள ஒரு கடவுள் இருந்தால், கடவுள் இல்லை என்று கருதி இருப்பவர்களும், கடவுளைப் புரிந்து கொள்ள முடியாதவர்களுமான ஆறறிவு படைக்கப்பட்ட மனிதர்கள் உலகத்தில் எப்படி இருக்க முடியும்?

அன்றியும் மனித வாழ்வில் மனிதனுக்கு கடவுள் எந்த வகையில் என்ன காரியத்திற்கு பயன்படுத்துகிறார்?

ஒரு சர்வ சக்தி உள்ள கடவுள் படைப்பில் ஜீவராசிகளுக்கு பிறப்பு இறப்பு எதற்காக இருக்கவேண்டும்? நன்மை, தீமை, இன்ப, துன்பம் எதற்காக இருக்கவேண்டும்? திருப்தி கவலை எதற்காக இருக்கவேண்டும்? இம்சை சுகம் எதற்காக இருக்க வேண்டும்? இவற்றால் உலகில் யாருக்கு என்ன நம்மை? அல்லது இவற்றிற்கு என்ன தேவை?

இவையெல்லாம் சர்வமும் மடத்தனம், முட்டாள்தனம், அயோக்கியத்தனம், காட்டுமிராண்டித்தனம் என்பதல்லாமல் வேறு என்ன என்பதை சிந்தித்துத் தெளியுங்கள்.

*(13.6.1968 ''விடுதலை'' நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)*



# 57. இன்றைய கடவுள் பட பிரச்சினை நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு

கடவுள் சம்பந்தமான சர்ச்சை (விவகாரம்) அரசியலில் கிளம்பி விட்டது. இதுபொது நன்மைக்கு நலம் தரும் காரியம் என்றே நான் கருதுகிறேன்.

இதன்மீது சத்தியாக்கிரகம் - பட்டினி - மறியல் - போராட்டம் - கிளர்ச்சி - வாக்குவாதம் முதலியவை தீவிரத்தன்மையில் நடைபெற வேண்டும் என்றே ஆசைப்படுகிறேன். அப்போது தான் மக்கள் தெருக்களில் கடவுள் பொம்மை (உருவத்தையும், படங்களையும், கடவுள் பிரச்சார (சம்பந்தமான) புராண இதிகாசக் கதை முதலியவைகளையும் தெருவில் போட்டு உடைக்கவும் கிழித்தெறியவும் தீயிட்டுக் கொளுத்துவுமான காரியங்களை குஷாலாக உற்சாகமாகச் செய்ய முன்வரக் கூடும்.

ஏன் என்றால் நம் நாட்டில் யாருக்குமே கடவுள் என்றால் என்ன என்பது தெரியவே தெரியாது. பார்ப்பானுக்கு மாத்திரம் தான் நன்றாகத் தெரியும். அதாவது தங்கள் ஜாதியார் அல்லாத மக்களை மடையர்களாக்கவும் (அவர்களது) "இழிவின்" பயனாகவும் உழைப்பின் பயனாகவும் தாங்கள் (பார்ப்பனர்கள்) மேல்ஜாதிக்காரராகவும் பாடுபடாமல் உயர்பதவிகள் பெற்று "மேன்மக்களாக" வாழ்வு நடத்தவுமான ஒரு சாதனம் கடவுளை உண்டாக்கி பரப்பி மக்களை வணங்கச் செய்யத் தக்கதுதான் என்பது பார்ப்பனக் குஞ்சு குருத்து முதல் எல்லோருக்கும் தெரியும். அதனால், ஏமாந்துபோய் முட்டாள்களாக - "இழிபிறவி" மக்களாக ஆக்கப்பட்டிருப்பவர்கள் வெட்கப் பட்டு விஷயம் உணர்ந்து சிறிதாவது திருத்தமடைய மேற்கண்ட கிளர்ச்சிகள் பயன்படும் என்றே கருதி வரவேற்கிறோம்.



தமிழன் - திராவிடன் என்றாலே மானம் ஈனம் அற்ற பிண்டம் என்பது இன்று உலகம் எங்கும் கருதப்பட்டு வருகிறது. இந்த நிலை இப்படிப்பட்ட கிளர்ச்சிகளாலாவது "தமிழர்களுக்கு இப்போதுதான் மான உணர்ச்சி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது" என்று தோன்றக்கூடும். அதிலும் இம்மாதிரி கிளர்ச்சிகளால் மக்கள் ஜெயிலுக்குப்

போகும்படியான நிலை ஏற்படுமானால் பொதுமக்களுக்கு எளிதில் அவர்களுடைய மான உணர்ச்சியைத் தூண்டக் கூடிய வாய்ப்பு ஏற்படலாம் என்றும் கருதுகிறேன்.

மக்களுக்குப் போதிய அறிவும் பிரச்சாரமும் இல்லாத காரணம் தானே கடவுள் சித்திரம் கொண்ட படத்தை அப்புறப்படுத்துவது கூட இன்று இவ்வளவு சர்ச்சைக்கு இடமான காரியமாக ஆக்கப்படுகிறது. தக்க பிரச்சாரம் நடந்தால் அரசாங்க பொதுக் காரியாலயங்களில் உள்ள படங்கள் மாத்திரமல்லாமல் தனிப் பட்ட மக்கள் தங்கள் வீடுகளில் மாட்டியிருக்கும் படங்களை யும் தங்கள் முட்டாள்தனத்தையும் உணர்ந்து அவற்றையும் தூக்கி வீசி குப்பைத் தொட்டியில் போடுவார்கள். அதற்கு ஒரு நல்ல வாய்ப்பு இப்படிப்பட்ட கிளர்ச்சிகளால்தான் முடியும்.

இதை நாமே துவக்கி இருக்க வேண்டியது அறிவுடைமையா கும். அதில்லாததினால் பார்ப்பனர்கள் துவக்கி இருக்கிறார்கள். இது நமக்கு ஒரு நல்ல வாய்ப்பே ஆகும்.

இனி இந்தப் பிரச்சினை தமிழர் சமுதாய இயல் பிரச்சார பிரச்சினையில் ஒரு முக்கிய பிரச்சினையாக உருவம், உருவப்ப டம், பிரச்சார நூல்கள் ஆகியவைகளை அழிப்பதும் எரிப்பதும் அப்புறப்படுத்துவதுமான காரியத்தை வலியுறுத்தும் பிரச்சாரத் தையும் சேர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

கடவுள் படத்தை சுவரில் தொங்கவிடுவது பக்திக்கு ஆகவா, பிரச்சாரத்திற்கு ஆகவா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

***(31.7.1968 ''விடுதலை'' நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)***

# 58. இந்து மதத்திற்கு கடவுள் உண்டா?



''இந்து மதம் என்பது வேத மதமேயாகும்'' என்கிறார் சங்கராச்சாரியார். வேதத்தில் கடவுள் இல்லை என்கிறார் சங்கராச்சாரியார். நான் சொல்கிறேன், தமிழனுக்கு (திராவிட னுக்கு) கடவுள் இல்லை, இல்லவே இல்லை. எப்படி என்றால் நமக்கு தமிழ்ப் பெயர் கொண்ட கடவுள் ஒன்றுகூட கிடை

யாது. இருப்பவை எல்லாம் வடமொழியில் உள்ள கடவுள் பெயர்களை தமிழில் மொழி பெயர்த்துக் கொண்டிருக்கலாம் என்றாலும் அப்படிப்பட்ட பெயர்களை பார்ப்பனர் ஏற்றுக் கொள்வதில்லை.

*உதாரணம்,*

கந்தனுக்கு முருகன் என்றும், ஆறுமுகன் என்றும் தமிழ்ப் பெயர்கள் உண்டு. இந்தத் தமிழ்ப் பெயர்களை எந்த பார்ப்பன ரும் தங்களுக்குப் பெயர்களாக வைத்துக்கொள்ளுவதில்லை; வடநாட்டான்களும் வைத்துக் கொள்ளுவதில்லை.

ஆகவே, தமிழர்களுக்கு - திராவிடர்களுக்கு கடவுள் கிடை யவே கிடையாது. திராவிடர்கள் - தமிழர்கள் வணங்கும் கடவுள்கள் அவ்வளவும் ஆரியர்கள் கடவுள்களே ஆவார்கள்.

வேதாரண்யம் என்பது தமிழனுடையதல்ல. அதை மறைக் காடு என்று தமிழன் பெயர் வைத்துக்கொண்டான். வேதம் என்பதும் தமிழனுக்கு சம்பந்தப்பட்டதல்ல. அதை மறை என்று தமிழ்ப்படுத்திக் கொண்டானே ஒழிய வேதத்தை தமிழன் ஏற்றுக்கொள்ளவில்லை. நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடல்க ளில் வரும் மறை, வேதம் என்ற சொற்களுக்கு பொருள் வடமொழி வேதம் என்பதை எந்த சைவனும் வைணவனும் ஒப்புக் கொள்ளுவதில்லை. ஆனால், அவர்கள் தங்கள் மறைமு றையே தேவாரம் - பிரபந்தம் என்று சொல்லிக் கொள்ளுகிறார் கள். அந்தப்படியே தமிழர்கள் மாநாட்டில் கா.சு. - மறைமலை அடிகளும் தீர்மானம் போட்டு நிறைவேற்றி இருக்கிறார்கள். ஆகவே கடவுள், மத விஷயங்களில் தமிழர்கள் - திராவிடர்கள் ஒரு அனாமதேய - மலைவாசிகளாகத்தான் தங்களை ஆக்கிக் கொண்டார்கள். தமிழப் புலவர்கள் இதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

சூரியன், சந்திரன், கிரகங்கள் என்பவை பஞ்ச பூதங்களைப் போன்றவைகளேயாகும். அதாவது உயிரற் றவை, உணர்வற்றவை; ஆனால், குணம் உடையவைகளாகும். ஆதாலால், அவற்றை வணங்குவதும், பிரார்த்திப்பதும் தெய்வங்க ளாகக் கொள்ளுவதும் அஞ்ஞானமேயாகும் - மடமையாகும்.



சிவன், விஷ்ணு, பிர்மா, பேய் - நான்கும் இல்லாதவை

சூரியன், சந்திரன், நட்சத்திரம் - மூன்றும் உணர்வில்லாத ஒளியுடையவை.

பூமி, நீர் - நான்கும் உயிரற்றவை, உணர்வற்றவை என்றாலும்,

நெருப்பு, காற்று - தன்மை (குணம்) உடையவை

எப்படியானாலும் இவற்றுள் எதுவும் பக்திக்கோ, பிரார்த்தனைக்கோ, வணக்கத்திற்கோ உரியவை அல்ல.

இப்போது பார்ப்பனரால் கிளப்பிவிடப்படும். ''கடவுள்கள் படம்'' முதலியன என்பவை முழுவதும் இவற்றிற்பட்ட உருவப்படங்களே ஒழிய, உயிரோ, உணர்வோ, எவ்வித சக்தியோ உள்ளவை அல்ல என்பது அறியத்தக்கது.

*(1.8.1968 ''விடுதலை'' நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது)*

# 59. மனிதன் எதற்காக கடவுளை வணங்குகிறான், பக்தி செலுத்துகிறான்?

உலகில் மனிதனுக்குக் கடவுள் நம்பிக்கையும் கடவுள வணக்கமும் கடவுள் பக்தியும் கடவுள் தொண்டும் எப்படி ஏற்படுகிறது? ஏன் செய்ய வேண்டியதாகிறது?

இவற்றை இவற்றில்பட்ட ஒவ்வொரு மனிதனும் சிந்திக்க வேண்டியது பகுத்தறிவு உள்ள மனிதனின் கடமையாகும்.

முதலாவதாக மனிதனுக்கு கடவுள் நம்பிக்கை எப்படி உண்டாகிறது? தானாவே ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுள் நம்பிக்கை அவன் பிறந்தபோதே உண்டாகிறதா? கடவுள் நம்பிக்கையுடனேயே பிறக்கிறானா? அல்லது மனிதனுக்கு குழந்தைப் பருவத்திலேயே கடவுள் நம்பிக்கை புகுத்தப்பட்டதால் ஏற்படுகிறதா? என்பதை சிந்திக்கவேண்டும்.



உலகிலுள்ள கோடானுகோடியான மனிதன் முதல் கிருமி ஈறாக உள்ள ஜீவராசிகளில்

மனிதனைத் தவிர அதுவும் மனிதரிலும் பல பேர்களைத் தவிர, மற்ற எந்த ஜீவராசிக்கும் கோடிக்கணக்கான மனித ஜீவனுக்கும் கடவுள் நம்பிக்கை என்பது அறவே இல்லை. மனிதரிலும் உலகில் பகுதிப்பட்ட மனிதருக்கும் கடவுள் நம்பிக்கை புகுத்தப் படுகிறது, கற்பிக்கப்படுகிறது என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் கடவுள் நம்பிக்கை உள்ள எல்லோருமே ஒரே மாதிரியான கடவுளிடம் நம்பிக்கைகொண்டவர்கள் அல்ல. எப்படியெனில் கடவுள் நம்பிக்கைக்காரர்கள் ஒரே மாதிரியான, ஒரே பெயருள்ள, ஒரு மாதிரியான எண்ணிக்கைக் கொண்ட ஒரே மாதிரி உருவம் கொண்ட கடவுள் நம்பிக்கை கொண்டவர் கள் அல்ல; ஒரே மாதிரி குணம் கொண்ட கடவுள் நம்பிக்கைக்கா ரர்களும் அல்ல; ஒரே மாதிரியான கடவுள் தன்மை, ஒரே மாதிரியான கடவுள் சக்தி, ஒரே மாதிரியான கடவுள் செயல் என்ற நம்பிக்கை கொண்டவர்களும் அல்ல.

இதற்குக் காரணம் என்ன? கடவுள் நம்பிக்கையும் அதன் மேல் சொல்லப்பட்ட பலவாறான தன்மைகளும் மனிதனுக்கு இயற்கையாய் தானாகத் தோன்றாமல் மற்றவர்கள் கற்பிப்பதா லும், கற்பிக்க நேருவதாலும், சூழ்நிலையாலும், தான் அனுசரிக் கும், தான் கட்டுப்பட்ட மதத்தாலும் மத ஆதாரங்களாலும், மதக் கற்பனை, மதக் கட்டுப்பாடு என்பவைகளாலுமே ஏற்படு வதால் இவை விஷயங்களில் ஒன்றுபோல் நம்பிக்கைகொள்ள முடிவதில்லை.

மேற்கண்ட கருத்துகள் சாதாரணமாக கிருஸ்துவ மதக்கார னுக்கு ஒருவிதம். இஸ்லாம் மதக்காரனுக்கு ஒருவிதம், இந்து மதத்திலேயே சைவனுக்கு ஒருவிதம், வைஷ்ணவனுக்கு ஒருவி தம், சைவ, வைணவத்திற்குள்ளாகவே பல பிரிவுகள்; அப்பிரிவு கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவிதம். மற்றும் பல காரணங்க ளால் பலருக்கு பல மாதிரி நம்பிக்கை ஏற்படுகிறது. இவற்றிலும் ''கீழ்நிலை'' அறிவில் இருப்பவர்களுக்கு ஒருவிதமாகவும், ''மேல்நிலை'' அறிவில் இருப்பவர்களுக்கு ஒருவிதமாகவும், தோன்றப்படுகிறது. இவற் றிற்கெல்லாம் காரணம் வாய்ப்பு, கற்பிப்பு, சூழ்நிலை, தேவை (சுயநலம்) என்பதல்லா மல் வேறு எதைச் சொல்ல முடியும்?



கடவுளைப்பற்றி, கற்பித்தவர்கள் யாரா னாலும், தாய் தந்தையார், குரு, சமயங்கள், நூல்கள் எதுவானாலும் கடவுளை வணங்கி

னால் நலம்பெறலாம் என்கின்ற ஒரு இலட்சியத்தை அடிப்படையாக வைத்தே புகுத்தி இருக்கிறார்கள் என்பதோடு, தாங்களும், மற்றவர்களுக்கு புகுத்தியோரும் கடவுளை நம்பினால், வழிபட்டால், பிரார்த்தித்தால் தங்களுக்கு வேண்டிய நலன்கள் கிடைக்கும். கிடைக்கலாம் என்ற நம்பிக்கையுடனே இருக்கிறவர்களாவார்கள். மற்றும் தங்கள் தவறு மன்னிக்கப்படும். தங்கள் தகுதிக்குமேல் பலன் அடையலாம் என்பவையான எண்ணங்களே, ஆசைகளே, பேராசைகளே நம்பிக்கைக்கும் வழிபாட்டிற்கும், தொண்டிற்கும் காரணமாக இருக்கின்றன. உண்மையான பொது உடமை மதக்கார (கொள்கைக்காரன்)னுக்கும் சமதர்மக் கொள்கைக்காரனுக்கும் பவுத்தனுக்கும் பகுத்தறிவுவாதி (நாத்திகர்)களுக்கும் இந்த எண்ணங்கள் அதாவது சுயநலத்திற்காக கடவுளை நம்புதல், கடவுளை வணங்குதல், பிரார்த்தித்தல் முதலிய குணங்கள் தோன்றுவதில்லை என்பதோடு, தோன்றப்பட்டவர்களையும் முட்டாள்கள் என்றும் பேராசைக்காரர்கள், மற்ற மக்களை ஏய்ப்பவர்கள் என்றுமே கருதுகிறார்கள்!

கடவுள் என்ற சொல்லும் கருத்தும் உண்மை அற்றதும், பொருளற்றதுமாய் இருப்பதால் அவற்றைப்பற்றி ஒரு பொருள் ஒரு தன்மை இல்லாமல் பல ஆயிரக்கணக்கான கருத்துக்கள் ஏற்பட்டுவிட்டன!

எந்த ஜீவனுக்கும் அதுவும் அறிவற்ற சிந்தனையற்ற எந்த ஜீவனுக்கும் தேவையில்லாத கடவுள், பகுத்தறிவுள்ள - சிந்தனையுள்ள - சுதந்திரமுள்ள தனக்கு வேண்டியதையும், தன்னையும் தேடி காப்பாற்றிக்கொள்ள தனது நல்வாழ்வை - வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக்கொள்ள - தனக்கு வரும் கேடுகளை தவிர்த்துக்கொள்ள சக்தி உள்ள மனிதனுக்கு கடவுள், கடவுள் செயல், கடவுள் அருள் எதற்காக தேவை என்று கேட்கிறேன்.

கடவுளே அப்படிப்பட்ட எண்ணத்தை ஏற்படுத்தினார் என்றால் கடவுள் மேற்கண்ட வசதி அற்ற மற்ற ஜீவராசிகளுக்கு ஏன் ஏற்படுத்தவில்லை என்பதற்கு கடவுள் நம்பிக்கைக்காரர்கள் கடவுள் அருள் தேடுகிறவர்கள் என்ன பதில் சமாதானம் சொல்ல முடியும்.



மேற்கண்ட கடவுள் தன்மைகள் எல்லாம் மனிதனுக்கு பாஷைகளைப்போல், நாடுகளைப்போல், மதங்களைப்போல் பிறந்த, வளர்ந்த, பழகின இடங்களுக்கு ஏற்ப ஏற்படும் தன்மையே தவிர இயற்கையானது, ஜீவ உரிமையானது என்று எந்தக் காரணத்தைக் கொண்டும் சொல்ல முடியாதே!

தேசப்பற்று என்றும், மொழிப்பற்று என்றும் வயிற்றுப் பிழைப்புக்காரர்களும் முட்டாள்களும் கற்பித்துக்கொண்டு பல னடையப் பார்ப்பது எப்படியோ, அப்படியே சுயநலக்காரர்க ளும் முட்டாள்களும் கடவுள் அருள், கடவுள் பக்தி, கடவுள் பற்று, கடவுள் தன்மை, கடவுள்கள் எண்ணிக்கை, கடவுள்கள் உருவம் என்பனவற்றையெல்லாம் கற்பித்துக்கொண்டு மக் களை ஏய்க்கவும், மடையர்களாக்கவும் கங்கணம் கட்டிக் கொண்டு மனித சமுதாய வளர்ச்சியைப் பாழாக்குகிறார்கள் என்பதல்லாமல் இவற்றில் எந்தவித உண்மையும், நாணயமும் இல்லை.

கடவுள் பணிக்காக பாதிரிகள், முல்லாக்கள், சங்கராச்சாரிகள், ஜீயர்கள், பண்டா சன்னதிகள், குருக்கள், பூசாரிகள் முதலிய இந்தக் கூட்டங்கள் மனிதனுக்கு எதற்காக தேவை?

இவற்றால் இந்தக் கூட்டங்கள்தான் கவலையற்று, உழைப் பற்று சுகபோக வாழ்வு வாழ்கிறார்களே ஒழிய, இவர்களால் யாருக்கு, எந்த ஜீவனுக்கு என்ன பயன்?

மற்றும் கடவுளை ஏற்படுத்தி, மதத்தை ஏற்படுத்தி, கடவுள் பெயரால் மதத்தின் பெயரால் பல நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி மக்களை இயற்கைக்கும் நேர்மைக்கும் சுதந்திரத்திற்கும் கேடாக நடக்கும்படி நடக்க வேண்டியதாய் பல கருத்துக்களை கற் பனை செய்து மக்களை வஞ்சிக்கிறார்கள்.

உலகிலாகட்டும், நம் நாட்டிலாகட்டும் கடவுள், மதம், சாஸ்தி ரம், தர்மம் என்பவைகள் கற்பிக்கப்பட்டிராவிட்டால் உலகில்



ஏழை ஏது? பணக்காரன் ஏது? பாட்டாளி மகன் ஏது? (பிராமணன்) ஏது? பட்டினி கிடப்பவன் ஏது? வயிறு புடைக்க உண்டு புரளுபவன் ஏது?

இவ்வளவு கொடுமைகளை - பேதங் களை சமுதாயத்தில் வைத்துக்கொண்டு பரி தாபம் பச்சாதாபம் இல்லாமல் முட்டாள்தன மாக - பித்தலாட்டத்தனமாக - மோசமாக

''கடவுளை நம்பு, கடவுளை வணங்கு, கடவுள் சொன்னபடி நட, உனக்கு தரித்திரம் நீங்கும்'' என்றால், இப்படிப்பட்ட இவர்கள் அறிவும் பரிதாபமும்கொண்ட மனித ஜீவன் ஆவார் களா?

ஆகவே, கடவுள் என்பதும், பிரார்த்தனை என்பதும், கடவுள் அருள் என்பதும் கைதேர்ந்த பித்தலாட்டக்காரர்களின் மோசடி, தந்திரம் என்றுதான் சொல்ல வேண்டும். நாம் சமதர்மம் அடைய ஆசைப்பட்டு இறங்கிவிட்டோம். இனி இப்புரட்டுக்கும் முட் டாள்தனத்திற்கும் இடம் கொடுக்கக்கூடாது என வேண்டிக் கொள்ளுகிறேன்.

*(7.10.1968 ''விடுதலை'' நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)*

# 60. கடவுளும், அரசனும், ஜனநாயகமும், சர்வாதிகாரமும்!

மக்கள் மடையர்களாக, மூடநம்பிக்கைக்காரர்களாக, சிந்தனா சக்தி இல்லாதவர்களாக உள்ளவரைதான் கடவுளுக்கும் அரச னுக்கும் மதிப்பு இருக்க முடியும்; அவர்களிடத்தில் மக்களுக்கு பயம் இருக்க முடியும்.

ஏனெனில் இவர்களுக்கு இயற்கையான சக்தி கிடையாது. இவர்களது ''சக்தி'' செயற்கை சக்திதான். அதாவது புருஷனுக்கு பெண்டாட்டி பயப்படுவதுபோல ஒரு கட்டுப்பாட்டினால் தேவையைப் பொறுத்து ஏற்படும், ஏற்படுத்திக்கொள்ளும் சக்திதான்.

உதாரணமாக கடவுள் பயம் மக்களுக்கு நாளுக்கு நாள் குறைந்து வந்து இன்று சம்பிரதாயத்துக்காக அல்லாமல் மற்ற படி எவருக்குமே இன்று கடவுள் பயமோ - நம்பிக்கையோ அடியோடு இல்லாமல் போய்விட்டதுடன் இன்று மடையர்களிட மும் அயோக்கியர்களிடமுமே தேவையைப் பொறுத்து இருந்து வருவதையே பார்க்கி றோம். அதாவது ஒரு பூசாரிக்கு அர்ச்சக னுக்கு இருந்து வருகிற நம்பிக்கைப்படி.



அதுபோலவேதான் - அரசன் நிலைமையும் இன்று அடியோடு மறைந்துவிட்டது. உலகில் இன்று எங்குமே உண்மையான அரசன் இல்லை; உலகில் எங்குமே இன்று அரசனை மதிக்கும் மக்களும் இல்லை.

அரசர்களை ஒழிப்பதற்கென்று பல நாளாக கிளர்ச்சிகள் குடிமக்களாலேயே செய்யப்பட்டு சில அரசரைக் கொன்றும் சிலரை விரட்டியும் விட்டு அரசனல்லாத ஆட்சியையே உலகில் பெரும் பாகத்தில் மக்கள் ஏற்படுத்திவிட்டார்கள் என்றாலும் அதாவது அரசன் ஒழிக்கப்பட்டு விட்டான் என்றாலும் அரசன் செய்து வந்ததுபோல் மக்களை அடக்கி ஆளும் ஆட்சி என்பதாக ஒன்று இன்று மக்களுக்கு அவசியம் வேண்டியதாகவே இருக்கிறது.

இப்படி தேவையிருக்கும் ஒரு ஆட்சிக்கு "அரசன் என்பதாக ஒருவன் தேவை இல்லை. மக்களாகிய நாமே ஆட்சித் தலைவனாக இருந்து கொண்டு ஆட்சி நடத்திக் கொள்ளலாம்" என்று மக்கள் கருதியது அல்லது யாரோ சிலர் கருதியது என்பது மாபெரும் முட்டாள்தனம் அல்லது அயோக்கியத்தனமேயாகும். இதன் பயன் என்னமாய் முடியுமென்றால் மக்களுக்கு ஏற்கனவே இருந்து வரும் கெட்ட குணங்கள், கூடாத குணங்கள் என்று சொல்லப்படுபவைகளான பொய், புரட்டு, பித்தலாட்டம், ஏமாற்றுதல், வஞ்சித்தல், கொலை, கொள்ளை, பலாத்காரகாலித்தனம், அமைதி இன்மை, குழப்பம் முதலிய சமுதாய வாழ்வுக்குக் கூடாததான காரியங்கள் நடைபெறவும், நாளுக்குநாள் மக்கள் இவற்றில் ஈடுபடவுமான மக்களின் சமூக வாழ்வுமுறை கெடவுமான நிலை ஏற்பட்டுத் தாண்டவமாடுவதுதான் விளைவாக இருக்கும், இருந்தும் வருகிறது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் கடவுள் நம்பிக்கை எவ்வளவு முட்டாள்தனமானதோ அவ்வளவு முட்டாள்தனமான கருத்தும் காரியமுமேயாகும் ஜனநாயகம் என்பதும், ஆனால், சில அயோக்கியர்களுக்கும், கீழ்த்தர மக்களுக்கும் இதில் பயன், சுயநலம் இருப்பதாக இவர்களால் எளிதில் மக்களை ஏமாற்றிப் பயன்பெற முடிகிறது.



இன்று உலகில் எந்த நாட்டில் ஜனநாயகம் ஒழுங்காக யோக்கியமாக நடைபெறுகிறது என்று சொல்ல முடியும்?

அரசன் நாயகன், அரசன் ஆட்சி என்று சொல்லப்படுவதற்கு சக்தி இருப்பதற்குக் காரணம்,

1. அரசன் என்கின்ற மதிப்பு

2. அரசன் நடுநிலை உள்ளவன் என்கின்ற நம்பிக்கை

3. அரசனது அதிகார பலம், இவற்றோடு

4. பரம்பரையாக யார் தயவுமில்லாமல் பதவிக்கு வரும் இயற்கை உரிமை.

இந்த காரணங்களால் அரசனது ஆட்சியை குடிகள் யாரும் எதிர்க்கவும் குறை கூறவும் முடியாமல் இருக்க முடிந்தது.

ஜனநாயக ஆட்சியாளருக்கு இவ்வித தகுதி ஏதாவது உண்டோ? மக்களுக்காவது இதற்கேற்ற பண்பாடு ஏதாவது உண்டோ?

கடவுளுக்கு சோறு போட்டு கல்யாணம் செய்து வைத்து கடவுள் பெண்டாட்டியின் தலையையும், சேலையையும் திருட்டுக் கொடுத்துவிட்டு வந்த ஒருவன் மற்றவனைப் பார்த்து, "அடே, கடவுள் கெடுத்து விடுவாரடா" என்று சொல்லி மிரட்டுகிறதைப் போல்தானே இருக்கிறது நமது ஜனநாயக அமைப்பு!


1. காசு கொடுத்து ஓட்டு பெறுகிறான்.

2. காசு பெற்றுக் கொண்டு ஓட்டு போடுகிறான்.

3. பொய்யும் புரட்டும் கூறி மக்களை ஏமாற்றி ஓட்டு பெறுகிறான்.

4. ஓட்டின் பலன் என்ன, அதை எப்படி, எதற்கு பயன்படுத்துவது என்ற அறிவே இல்லாமல் ஓட்டுப் போடுகிறான்.

இவ்வளவுதானா?



ஜாதிப் பெயர் சொல்லி ஓட்டுக் கேட்கிறான்; (தன்) ஜாதியான் என்பதற்காக ஓட்டுப் போடுகிறான். இவை ஜனநாயக பிரதிநிதித்துவ நிலைமை என்றால் நாட்டின் நிலைமையோ மக்கள் ஒருவனை ஒருவன் தொட முடியாத நான்கு ஜாதி, ஒருவருக்கொருவர் உண்ணல் கொடுக்கல் வாங்கல் இல்லாத 400 உட்பிரிவு, ஒருவருக்கொருவர் வெறுப்

புக் கொண்ட பல மதம், பல கடவுள்கள், பல வேதங்கள், பல தர்மங்கள், இவற்றுள் பல ஜாதித் தொழில்கள், அவற்றின் படி ஒருவரை ஒருவர் அடக்கி ஆள பல இலட்சியங்கள், சூழ்ச்சிகள் இவைகள் மாத்திரமேயல்லாமல் பெரிதும் கொள் கையே இல்லாத பல பதவி வேட்டைக் கட்சிகள்; இவற்றிற்கு ஏற்ற பத்திரிகைகள்; சாக்கடை கழுவுகிறவன் முதல் அய்க் கோர்ட் ஜட்ஜ், சீப் செகரட்டரி வரை ஜாதி உணர்ச்சி, ஜாதி அகம்பாவம், மற்ற ஜாதியை அடக்கி தலையெடுக்கவொட்டா மல் அழுத்தி தன் ஜாதியே ஆள வேண்டுமென்கிற உணர்ச் சியை மூச்சாகக் கொண்ட சிப்பந்திகள், பதவியாளர்கள், பதவி யையும் சம்பளத்தையும் வருவாயையுமே முக்கிய இலட்சியமா கக் கொண்ட மந்திரிகள், பிரசிடெண்டுகள், சட்டசபை, பார்லி மெண்ட் மெம்பர்கள்.

இந்த நிலையில் ஜனநாயகம் என்றால் இதற்குப் பொருள் கடவுள் என்பதற்கு உண்டான பொருள் அல்லாமல் ஜனநாய கத்தை நம்புகிறவர்கள் கடவுளை நம்புவது போன்றவர்கள் என்பது அல்லாமல் வேறு என்ன? ஆகவே ஜனநாயகம் ஒழிந்து கொடுமையான சர்வாதிகாரம் ஏற்பட்டாலும் குடிமக்க ளுக்கு ஒருவனுடைய தொல்லைதான், ஒருவனுடைய நலத் திற்கு ஏற்ற கேடுதான் இருக்கலாமே ஒழிய ஜனநாயகப்படியான முள்ளுப் பீப்பாயில் போட்டு உருட்டுவது போன்ற தொல்லை கள் குடிமக்களுக்கு இருக்க முடியாது1

*(3.11.1968 "விடுதலை" நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது)*

# 61. "கடவுள் நம்பிக்கைக்காரர்கள்" பற்றிய என் கருத்து



ஒரு தேவதாசியை விபச்சாரி என்று சொன் னதற்காக அவள் கோபித்துக் கொள்ளுவது போலவும், ஒரு வக்கீலை அவர் காசுக்குப் பேசுகிறவரே ஒழிய நேர்மைக்காகப் பேசுகி றவர் அல்ல என்று சொன்னால் அவர் கோபித்துக் கொள்வது போலவும், ஒரு வியாபாரியை பொய் பேசுகிறவர் என்று சொன்னால் அவர் கோபித்துக் கொள்வது

போலவும், கடவுள் நம்பிக்கைக்காரர்களை முட்டாள், அயோக்கி யன், காட்டுமிராண்டி என்று சொன்னால் அவர்கள் கோபித்துக் கொள்கிறார்கள்!

இதற்குக் காரணம் பெருவாரியான மக்கள் இந்த நிலைக்கு ஆளாகி இருப்பது தானாகும்.

இன்றைக்கும் நான் கடவுள் நம்பிக்கைக்காரர்களை கேட்கி றேன் - ரூபாய் பதினாயிரம் பந்தயம் கட்டி கேட்கிறேன்; அதாவது,

''சர்வ வல்லமையுள்ள கடவுள் என்பதாக ஒன்று இருக்கிறது; அது சர்வசக்தி, சர்வ வல்லமையுடையது என்பதை நான் என் மனம், மொழி, செய்கையால் நம்புகிறேன்; அதற்கேற்பவே நடந்து கொள்கிறேன்.''

என்று யாராவது ஒருவர் சொல்லட்டும்; சொல்ல முன் வந்து தன் நடத்தையைக் கொண்டு மெய்ப்பிக்கட்டுமே பார்க்கிறேன்; யாரிடம் வேண்டுமானாலும் கொடுத்து வைக்கிறேன் என்று கூறுகிறேன். யார் வருகிறீர்கள்? யார் வருகிறார்கள்? எந்தப் பத்திரிகைக்காரர் பக்கத்தில் வரத் தயாராயிருக்கிறார்? எந்தப் பார்ப்பனர் வரத் தயாராயிருக்கிறார்? எந்த ம.பொ.சி.யோ வேறு எந்த சியோ வரத் தயாராய் இருக்கிறார்களா?

வேறு யோக்கியமானவர்கள் யார் வேண்டுமானாலும் வரட் டும் என்று சவால் விடுகிறேன்.

இவ்விஷயத்தில் மக்கள் பெருவாரியாக முட்டாள்கள் என் கின்ற காரணத்தால், நினைத்த அனாமதேயமெல்லாம் இவ்விஷ யத்தில் வாயை வைத்துக் கண்டபடி உளறினால், கண்டபடி எழுதினால் கடவுள் நம்பிக்கைக்காரர்கள் என்பவர்கள் யோக்கி யர்களாக, அறிவாளிகளாக ஆகிவிடுவார்களா?



சில காரியங்களில் மக்கள் பொய்ச் சொல் லியாக வேண்டும், சில காரியங்களில் மக்கள் அயோக்கியர்களாக ஆகித் தீர வேண்டும். சில காரியங்களில் மக்கள் முட்டாள்களாக ஆகித் தீர வேண்டும். இது எனது 70, 75 வருஷத்திய அனுபவம், கொள்கை, பேசி யும் எழுதியும் வருவதுமான விஷயமாகும். இது மாத்திரமா?

உலகில் கடவுள் சம்பந்தமான சர்ச்சைகள் 2, 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடந்து வருகின்றன.

கடவுளைப்பற்றி பிரச்சாரம் செய்ய பார்ப்பனர், இவர்களால் நடத்தப்படும் பத்திரிகைகள், கிருஸ்துவர், முஸ்லீம் ஆகியவர்கள் ஸ்தாபனம் வைத்து பிரச்சாரம் செய்து வருகிறார்கள். கோயில், சர்ச், மசூதிகள் மூலமும் பண்டிகைகள் மூலமும் செய்கையில், பரப்பி வருகின்றார்கள். பார்ப்பனர் முதல் பலர் கடவுளாலேயே, கடவுள் பிரச்சாரத்தாலேயே வாழ்ந்து வருகின்றார்கள்; வயிறு வளர்க்கின்றார்கள். இதற்காக பல கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்கள், வரும்படிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பல செல்வர்கள் உதவி வருகின்றார்கள். பாதிரி, முல்லா, சங்கராச்சாரி, குருமார், பண்டார சன்னதி முதலிய பலர் பிரச்சாரம் செய்கிறார்கள். ஏராளமான புத்தகங்கள் - வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், இலக்கியம் என்பதாக அநேக புத்தகங்கள் இருக்கின்றன. இவற்றின் பலனால் முட்டாள்கள், அயோக்கியர்கள், காட்டுமிராண்டிகள் இருப்பது மாத்திரமல்லாமல், உற்பத்தியாகிக் கொண்டும் வருகின்றார்கள்.

அறிவாளிகளாக, யோக்கியர்களாக இருப்பவர்கள் தங்கள் சுயநல காரியத்தைப் பார்த்துக் கொண்டு இந்த முட்டாள்தனங்களைப்பற்றி சிந்திக்காமல் கவலையற்றிருக்கின்றார்கள். கடவுள் பிரச்சாரகர்கள் அயோக்கியர்களும், மடையர்களுமானதால் காலித்தனமான - பலாத்காரமான காரியங்களிலும் ஈடுபட்டு பல கொடுமையான - கொலை பாதகமான காரியங்களிலும் ஈடுபட்டு மக்களைக் கொன்று குவித்து இருக்கின்றார்கள்.

இதற்கு உதாரணம் ஆழ்வார்கள், நாயன்மார்கள் என்கின்ற பல அயோக்கியர்களும், இவர்களால் சமணர்களை, பவுத்தர்களை கழுவேற்றியும் கொன்று குவித்ததுமான அயோக்கிய கொலை பாதகச் செயல்களும், தேவாரம், பிரபந்தம் முதலாகிய நூல்களுமே போதிய சான்றாகும்.



தொண்டரடிப் பொடியாழ்வார் என்கின்ற ஒரு வைணவப் பார்ப்பன அயோக்கியன், சமணர்களும், பவுத்தர்களும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் ஆனதால் அவர்களது தலையை அறுப்பதே (வெட்டுவதே) அவசியமாகும் என்று பாடியிருக்கின்றான்.

அந்தப்படி ஏராளமான பவுத்தர்களின் தலையை வெட்டியும் இருக்கின்றார்கள். இவை இன்று காஞ்சி, செய்யாறு முதலிய இடங்களில் கற்சிலையாகவுமிருக்கின்றன.

இதுபோலவே சம்பந்தன் என்னும் ஒரு அயோக்கிய சைவ பார்ப்பான் "சமணர்-பவுத்தர்களின் பெண்களைக் கற்பழிக்க வேண்டும்" என்றும், பல அயோக்கியத்தனமாகவும் கொலை பாதகமாகவும் பாடியிருக்கிறான்.

இன்றும் சீர்காழி, மதுரை முதலிய இடங்களில் சமணரைக் கழுவேற்றும் நிகழ்ச்சி பண்டிகையாக, உற்சவமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இப்பாடல்கள் இன்றும் வைணவர்களாலும் சைவர்களாலும் பக்திப் பாடல்களாகப் பாடப்பட்டு வருகின்றன. மற்றும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களை மிக இழிவுபடுத்திப் பாடப்பட்ட பாடல்கள் அநேகம் பாடப்பட்டு வருகின்றன; நூல்களும் விற்கப்படுகின்றன.

இந்த நிலையில் கடவுள் நம்பிக்கைக்காரர்களைப்பற்றி சொல்லப்படும் கருத்துகள் - அதுவும் உண்மையான கருத்துகள் எப்படி தவறானவைகளாகக் கருதப்பட முடியும் என்று கேட்கின்றேன்.

*(11.10.1969 "விடுதலை" நாளிதழில்*
*தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)*

# 62. கடவுள்களின் நாச வேலைகள்

பெரும் மழையினால் பயிர்களுக்குக் கேடு, நாசம் என்பது ஒரு புறமிருந்தாலும், மற்றும் ஜீவப்பிராணிகள், கால்நடைகளுக்கும், வீடுகளுக்கும் பெருஞ் சேதங்கள் ஏற்படுகின்றன. இதுபோலவே பூகம்பங்களாலும் மக்கள் உட்பட ஜீவப் பிராணிகளும் மாள்வதோடு ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்தும், மறைந்தும் நாசமாகிப் போகின்றன. அதுபோலவே இடி-பேரிடி விழுவதாலும் மக்களுக்கும், ஜீவன்களுக்கும் வீடுகளுக்கும் பெரும் சேதங்கள் உண்டாகி விடுகின்றன.



போதாத குறைக்கு பெரும் புயல் காற்றுகள் ஏற்பட்டு இவை போன்ற பெருங்கேடுகளும், சேதங்களும், நாசங்களும் ஏற்பட்டு விடுகின்றன.

இதில் சிந்திக்கும்படியான விஷயம் என்னவென்றால் மேற்கண்ட கேடுகளில், தேசங்களில், நாசங்களில், ஜீவ அழிவுகளில் எந்த ஒரு சிறு அளவுக்கும் ஆறு அறிவு படைத்த மனிதவர்க்கத்தால் எந்தவிதமான பாதுகாப்பும் செய்து கொள்ள முடியாத நிலையில் அனுபவித்தே தீர வேண்டியதாகவும், பலவற்றைப் பற்றி, நிகழும்வரை தெரிந்துகொள்ளவே முடியாததாகவே இருப்பதேயாகும்.

இந்த நிலைக்கு காரணம் என்ன? கடவுள் சித்தம் என்பது தானே? அது உண்மையாய் இருக்குமானால் இதிலிருந்து கடவுளையோ, கடவுள் சக்தியையோ எவ்வளவு அயோக்கியத்தனமானவன் என்று கருத வேண்டியிருக்கிறது. இந்நிலையில் கடவுள் இருப்பானேயானால் அவன் உலகத்தைப் படைத்ததே முட்டாள்தனம் அல்லது அயோக்கியத்தனம் என்றுதானே சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனெனில் இந்த மாபெரும் உலகத்தைப் படைத்து, அதில் ஏராளமான ஜீவன்களைப் படைத்து அவை திருப்தியாய் வாழ்வதற்கில்லாமல் பசி, பட்டினி, நோய், துன்பம், தொல்லை, வேதனைகள் உண்டாக்கி நாசமடையச் செய்வது என்றால் இதில் அறிவுடைமையோ, கருணை உடைமையோ, நேர்மை - ஒழுக்கம் உடைமையோ என்ன இருக்கிறது?

இப்படிப்பட்ட கடவுளால், இப்படிப்பட்ட நாச வேலைகள் ஏற்படுவதல்லாமல் நல் காரியங்கள் என்று சொல்லப்படுபவைகளில் எது செய்யப்படுகிறது?

இதை ஏன் எடுத்துக்காட்டுகிறேன் என்றால், இந்த நிலையில் உள்ள ஒரு (இல்லாத) கடவுளுக்காக என்று ஆறு அறிவு (பகுத்தறிவு) உடைய மனிதனால் எவ்வளவு பொருள், நேரம், ஊக்கம், முயற்சிகள் செலவழிக்கப்படுகின்றன? கடவுள் பெயரைச் சொல்லி எத்தனை மக்கள் முட்டாள்களாக்கப்பட்டு ஏய்க்கப்படுகின்றனர்? இவைகள் எல்லாம் முட்டாள்கள் என்பதாக அல்லாமல் B.A., M.A., Dr., விஞ்ஞான மேதாவி, தத்துவஞானி மேதாவி, புலவர், வித்வான்



முதலிய படித்தவர்கள், ஆராய்ச்சியாளர்கள், மகான்கள், மகா மேதாவிகள் என்பவர்களால் செய்யப்படுகின்றன, சொல்லப்ப டுகின்னற, பிரச்சாரம் செய்யப்படுகின்றன என்றால் இவர்களை யெல்லாம் எப்படி அறிவாளிகள், யோக்கியர்கள், உண்மையா னவர்கள் என்று கூற முடியும்? கருத முடியும்? நம்ப முடியும்?

ஆறறிவுடைய மக்கள் நாட்டில், மனித சமுதாயத்தில் ஒரு கடவுள், அதற்கு வீடு, சோறு, பெண்டாட்டி, பிள்ளை, சேலை, நகை, வைப்பாட்டி விபச்சாரம் செய்தல், கோபம், தாபம், பழிவாங்குதல், கொல்லுதல், போர் செய்தல், போரில் அடிபடு தல், மூர்ச்சை ஆதல் மற்றும் எத்தனையோ கீழ்த்தர மக்கள் தன்மைகளையெல்லாம் பொருத்தி அந்தப்படி பொருத்தப்பட்ட கடவுளுக்கும் தேசப் பொருளை, செல்வத்தை கோடி கோடியாக செலவழித்து பாழாக்கப்படுவதென்றால் கடுகளவு சிந்தனை அறிவுள்ள யார்தான் இதை யோக்கியமான காரியம் என்றோ, உண்மையான நம்பிக்கையுடைய, காரியமென்றோ கருத முடியும்?

இந்த நாட்டில் இன்று கல்வி என்னும் பெயரால் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து பல்கலைக் கழகம், கல்லூரி, உயர்தரப்பள்ளி என்பதாக பல ஆயிரக்கணக் கான பள்ளிகளை வைத்து 'கல்வி கற்பிப்பதைவிட பகுத்தறிவுப் பள்ளிகள் என்னும் பேரால் ஒரு சில பள்ளிகளை மாத்திரம் வைத்து ''நிர்வாணமான'' சிந்தனா சக்தி தரும் படிப்பைக் கொடுத்து மக்களை எதைப்பற்றியும், எந்தப் பற்றும் அற்ற வகையில், சொல்லும்வரை, சிந்தித்து முடிவுக்கு வர கற்பிப்போ மானால், நாட்டினில் இன்றைய வீணாகும் செல்வம், அறிவு, ஊக்கம், நேரம் முதலியவை பெரும் அளவுக்கு மீதமாகி, மக்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்த ஒழுக்கம், நேர்மை, நல்லெண்ணம், மனிதாபிமானம் அன்பு, பரஸ்பர உதவி முதலியவை தானாக வளர்ந்து, இவைகளுக்குக் கேடான தன்மைகள் மறைங்கு. எல்லா மக்களும் ''குறைவற்ற செல்வத்துட னும்'', நிறைவுற்ற ஆயுளுடனும்'' வாழ்வார் கள் என்பது உறுதி.

*(16.12.1969 ''விடுதலை'' நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)*



# 63. ஒன்றை மனத்தில் வையுங்கள்

இந்துமத மூல ஆதாரங்களில் கடவுள் எங்கே என்பதே இல்லை.

மூல ஆதாரமான வேதத்தில் தேவர்கள என்ற சொல்தான் காணப்படுகின்றது. அதில் விசேஷமாகக் கூறப்பட்ட தேவர்கள் 33 பேர்கள். இவர்களில் 11 பேர் வானத்திலும், 11 பேர் ஆகாசத்திலும், 11 பேர் பூமியிலும் வசிக்கின்றனர் என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

I. வானலோகத்திலுள்ள தேவர்கள் 11: 1. தையவுஸ, 2. வருணன், 3. மித்திரன், 4. சூரியன், 5. சாவித்திரி, 6. புஷன், 7. விஷ்ணு 8. அஸ்வினி தேவர்கள், 9. வாயு, 10. இந்திரன், 11. ருத்திரன் (அல்லது சிவன்). இவர்களில் ருத்திரன் மிகக் கீழான தேவன். இவர்களுக்கு மனைவி, பிள்ளை குட்டிகளும் உண்டு.

II. ஆகாசத்தில் உள்ள (கீழ்த்தர) தேவர்கள் 11: 1. விஸ்வகர் மன், 2. கந்தர்வர், 3. அப்சரர், 4. தெய்வீகத்தன்மை கொண்ட விருட்சங்கள், வஸ்துக்கள், 5. குதிரை, 6. பசு, 7. சர்ப்பம், 8. விருட்சம், செடி, கொடிகள், 9. பலிக்கு உரிய உபகரணங் கள், 10. ஆயுதங்கள், 11. பிதுர்க்கள்.

III. . பூமியிலுள்ள பூதேவர்கள் 11: 1. அக்கினி, 2. சோமன், 3. யமன், 4. பிருதிவி (பூமி), 5. கோபம், 6. விஸ்வாசம், 7. காமன், 8. சரஸ்வதி (சரஸ்வதி நதி), 9. வாக்கு, 10. பிரகஸ்பதி, 11. பிரஜாபதி.

இப்படியாக 33 தேவர்கள் வேதத்தில் சொல்லப்பட்டு இருக் கின்றனர்.



இந்தப்படியாக 33 தேவர்களில் இருந்து தான் இன்று நாம் வணங்கும் கடவுள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் தாம் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரும், சரஸ்வதி, பூமிதேவி, சாவித்திரி ஆகிய மேற் கண்டவர்களின் மனைவிமார்களும் ஆவார் கள்.

மற்றும், இவர்களைவிட முக்கியத்துவம் வாய்ந்த இந்திரன், சூரியன் முதலிய தேவர்

கள் இன்று இரண்டாம் தர, மூன்றாம் தரக் "கடவுள்"களாகத் தாம் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

எனவே, இன்று நம்மால் முக்கிய கடவுள்களாகவும், அவர்களது மனைவிகளாகவும் வணங்கப்பட்டு வரும் பிரம்மா, அவன் மனைவி சரஸ்வதி, விஷ்ணு, அவன் மனைவி பூமிதேவி; சிவன், அவன் மனைவி சாவித்திரி (உமை) ஆகியோர்கள் தேவர்களே யாவார்கள். ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபிறகுதான் இவர்கள் கடவுள்களாக ஆக்கப்பட்டார்கள். எனவே நமக்கு வேதகாலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் கடவுள் கிடையாது.

சர்வசக்தியுள்ள கடவுள், மனோ வாக்கு காயங்களுக்கு எட்டாத கடவுள் என்கின்ற புரட்டு, பித்தலாட்டங்கள் எல்லாம் வேதகாலத்திலோ அதற்கு முந்தின காலத்திலோ இருந்ததாக எந்த ஆதாரமும் இல்லை.

இந்த மேற்சொல்லப்பட்ட தேவர்களையும் ஆரியர்கள் நம்மை கடவுள்களாக வணங்கச் செய்தார்களே ஒழிய அவர்களுக்குக் கடவுள் தன்மையை ஊட்டவில்லை; அளிக்கவில்லை. சற்றேறக்குறைய வேத தேவர்களான முக்கியஸ்தர்கள் பெரும்பாலோருக்கு ஆரியர்களே யோக்கியதைகள் கற்பித்துப் புராணங்களை எழுதியிருக்கிறார்கள். அவற்றின்படி எல்லாக் கடவுள்களையும் (தேவர்களையும்) அயோக்கியர்களாகவே, கீழ்த்தர யோக்கியதை உள்ள கீழ்மக்களாகவே கற்பித்துவிட்டார்கள். உதாரணம் கூறுகின்றேன்.

பிரம்மா: பிரம்மாவையும், சரஸ்வதியையும் தகப்பன், மகளாக ஆக்கி பிறகு இருவரையும் கணவன் மனைவியாக ஆக்கிவிட்டார்கள்.

அதாவது பிரம்மா தான் உற்பத்தி செய்த மகளை காம விகாரத்தால் கலவிக்குக் கட்டிப் பிடித்ததாகவும் அதற்கு இணங்காமல் (தகப்பனுடன் கலவி செய்ய இணங்காமல்) ஓடியதாகவும், பிரம்மா அவள் பின்னால் ஓடிப்பிடிக்கப் போனதாகவும், சரஸ்வதி, சிவனிடம் போய் சிவனை அபயம் கொண்டு, "என் தகப்பன் என்னைப் புணர பலவந்தப்படுத்துகின்றான். நீ தான் காப்பாற்ற வேண்டும்" என்று கெஞ்சியதாகவும், அது கேட்டு சிவன் பிரம்மாவைக் கண்டித்து, "நீ உன் மகளைக் காதலிக்கலாமா?" என்று கேட்டதாகவும்,



அதற்கு பிரம்மா ''காதலுக்கு மகள் என்ன, தந்தை என்ன, முறை ஒன்றும் கிடையாது'' என்று சொன்னதாகவும், அதன் மீது சிவன் அவர்களிருவரையம் கணவன் மனைவியாகும்படி தீர்ப்பு கூறியதாகவும், அது முதல் தகப்பனும் மகளும் கணவன் மனைவியாக வாழ்வதாகவும் ஆதாரங்கள் கூறுகின்றன.

**விஷ்ணு:** ஜலந்தராசுரன் மனைவி பிருந்தையை இச்சித்து அவள் இணங்காததால் ஜலந்தராசுரனைக் கொல்லச் செய்து அவன் இறந்தபிறகு அவனைப்போல் உருவம் கொண்டு பிருந்தையைப் புணர்ந்ததாகவும், பிருந்தை எப்படியோ இவன் தன் கணவன் அல்ல என்று அறிந்து அவனுக்கு சாபம் கொடுத்து ''விஷ்ணு''வின் மனைவியை கற்பு கெட்டவளாக ஆக்கியதாக வும் புராணங்கள் மற்றும் ஆதாரங்கள் கூறுகின்றன.

**சிவன்:** சிவன் தாருகாவனத்து ரிஷி பத்தினிகளைக் கெடுத்து சாபம், துன்பம் அனுபவித்ததாகவும் ஆதாரங்கள் கூறுகின்றன.

**சிவன் மனைவி:** சிவன் மனைவி, இராவணனுடன் சில நாள் வசித்ததாகவும், மற்றும் பிரம்மா இவளை இச்சித்ததாகவும் பல குற்றங்கள் புராணங்களில் கூறப்படுகின்றன.

**விஷ்ணவின் மனைவி:** விஷ்ணுவின் மனைவியான பூமிதேவி (இலக்குமி) ஒரு குதிரைமீது ஆசைப்பட்டு குதிரை உருவமெடுத்து குதிரையைப் புணர்ந்து ஒரு குழந்தை பெற்றதாக ஆதாரங்கள் கூறுகின்றன. வராக அவதாரத்தில் பூமிதேவி வராகம் (பன்றி) மீது ஆசைப்பட்டு பன்றியோடு புணர்ந்து நரகாசுரன் என்கின்ற ஒரு பிள்ளையைப் பெற்றதாகவும், இராமாவதாரத்தில் இராவணனால் சூலாக்கப்பட்டு கணவனால் காட்டுக்கு விரட்டப்பட்டு அங்குலவ, குச என்னும் இரண்டு குழந்தைகளைப் பெற்றதாகவும் அவதாரக் கதைகள் கூறுகின்றன.

**இந்திரன்:** இந்திரனின் ஒழுக்கமற்ற நடப்புக்கள் ஏராளமாகும். அவன் எப்படித்தான் தேவர்களுக்கெல்லாம் அரசனாக இருந்தானோ! அது மிகவும் அதிசயப்படத்தக்கதாகும். இதிலிருந்தே தேவர்களின் யோக்கியதையையும் தெரிந்து கொள்ளலாம்.



இவனும் விஷ்ணுவைப்போலவே பரிஷதன் என்னும் அசுரன் மனைவிமீது ஆசை கொண்டு எவ்வளவோ முயற்சித்தும் ஆசை

நிறைவேற வசதியில்லாமல் போகவே, பரிக்ஷதன் அஸ்வமேதா யகம் செய்கையில் யாக முறைப்படி யாகத்தில் குதிரையைக் கொன்றபோது அந்தக் குதிரையின் உடலுக்குள் புகுந்து குதிரையின் ஆண்குறியை யாக கர்த்தாவின் மனைவியாகிய விபுஷ்டையின் பெண் குறியில் வைக்கும்போது சமயம் பார்த்து இந்திரன் குதிரையின் ஆண் குறியாக ஆகித் தனது எண்ணத்தை முடித்துக் கொண்டான் என்று புராணத்தில் இருக்கிறது.

மற்றொரு சமயம் கவுதம ரிஷி மனைவியாகிய அகலிகை மேல் ஆசைப்பட்டு அவர் இல்லாதபோது அவர் வீட்டிற்குள் நுழைந்து அகலியையை வஞ்சித்து இணங்கச் செய்து புணர்ந்து திரும்பிய சமயத்தில் புருஷன்வர, அவன் இந்திரனைக் கண்டு இந்திரனுக்கு உடலெல்லாம் பெண் குறியாகச் சாபம் கொடுத்து அகலிகையையும் கல்லாக சபித்துவிட்டான்.

இந்திரன் விஷயத்தில் இந்தப்படி இன்னும் பல நடத்தைகள் உண்டு. இனி சூரியன், சந்திரன், யமன் முதலிய தேவர்கள்பற்றியும், இராமன், கிருஷ்ணன், கந்தன் முதலியவர்களது ஒழுக்கங்கள் பற்றியும் ஏராளமான ஒழுக்கக் கேடான செயல்கள் உண்டு.

*(14.1.1970 "உண்மை" இதழில் தந்தை பெரியார் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை)*

# 64. பகுத்தறிவுவாதியின் கொள்கை

பேய் இருக்கிறது என்பது எவ்வளவு பொய் சங்கதியோ அவ்வளவு பொய் சங்கதி கடவுள் இருக்கிறது என்பதும். தேவர்கள் என்பதும் பெரும் பொய்யேயாகும்.

மேல் உலகம் என்பதும் மகா மகா பொய்யேயாகும். ஏனெனில் இந்த உலகத்தில் இருந்து ஆகாய மார்க்கத்தில் சுமார் மூன்று கோடி மைல் தூரத்தில் சூரியன் இருக்கிறது. அதுவரை தூரதிருஷ்டிக் கண்ணாடியால் ஆகாயம் பார்க்கப்பட்டாகி விட்டது. எங்கேயும் உஷ்ணம் தவிர எந்த உலகமும் தென்படவில்லை. இது வான சாஸ்திரிகள் கண்டுபிடித்த செய்தி.



இராட்சதர் என்பதும் சுத்தப் பொய். ஏனென்றால் இராட்சதர், அசுரர் என்பவர்கள் எல்லாம் இந்த பூமியில் இருந்ததாகத்

தான் சொல்லப்படுகிறது. இதற்கு பாட்டி கதைகளை, புராணங்களைத் தவிர எந்த ஆதாரமும் இன்னமும் இல்லை.

இவர்கள் கடவுள்களுக்கு எதிரிகளாக இருந்து கொல்லப்பட்டார்கள் என்றால் 'கடவுளுக்கு' எதிரி இருக்க முடியுமா?

ஜோசியம் என்பதும் பெரும் பொய், வெறும் ஏமாற்றுதலே ஆகும்.

இராகு காலம், குளிகை, எமகண்டம், நல்ல நேரம், கெட்ட நேரம் எல்லாம் பொய், பட்சி சாஸ்திரமும் பச்சைப் பொய்; நட்சத்திரப்பலன், கிரகப் பலன், வாரப் பலன், மாதப்பலன், வருடப்பலன் என்பவை யாவும் பொய்.

பல்லி விழும் பலன், கனவு காணும் பலன், தும்மல் பலன் எல்லாம் பொய், கழுதை கத்துதல், ஆந்தை அலறுதல், காக்கை கரைதல், நாய் ஊளையிடுதல் ஆகியவற்றிற்கு பலன் என்பதெல்லாம் பொய்.

மந்திரம், மந்திரத்தால் அற்புதம் செய்தல் முதலிய எல்லாம் கத்த பித்தலாட்டம் பொய்.

"தெரியாத புரியாத கடவுளை மனிதன் நம்பித்தான் ஆக வேண்டும்" என்பதான கட்டாயம் ஏற்பட்டு, மனிதன் ஆரம்பித்ததின் பலனே இவ்வளவு பொய்களையும் மன... நம்ப வேண்டியவனாகி விட்டான்.

நம்பினதின் பலனாக பலன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கவலைப்படாமல் அவற்றிற்குத் தன்னை சரிப்படுத்திக் கொள்ளுகிறான்.

பஞ்சேந்திரியங்களுக்குத் தட்டுப்படாத விஷயம், பொருள், நடப்பு எதுவானாலும் அது பொய். இதுதான் பகுத்தறிவுவாதியின் கொள்கை.

*(9.2.1970 "விடுதலை" நாளிதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கம்)*



---


**"கடவுள்" என்ற தலைப்பில் தந்தை பெரியார் அவர்களின் கருத்துக்கள் இரண்டாவது தொகுதியாகவும் வெளிவந்துள்ளது.**

---



# பெரியார் களஞ்சியம்





பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு